உ

சிவமயம்.

சவுடநாயகிதுணை.

பழனி-மாம்பழக்கவிச்சிங்கநாவலர்

இயற்றிய

தேவாங்கபுராணம்.

கோயமுத்தூர் காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

R. சபாபதிபிள்ளையவர்களால்

உரைசெய்யப்பட்டு

தேவாங்ககுலகுருவாகிய

கோயமுத்தூர் - சதாசிவ ஐயரவர்களால்

ஸமுஸ்கிருதத்திற் கிணங்க

பார்வையிடப்பட்டு

ஷை ஊர்-சவுளிவியாபாரம்

வெ - வெரிவாட செட்டியாரவர்கள்

முதலிய

தேவாங்கதுலதிலகாது

விருப்பத்தின்படி,

கோயமுத்தூர் - புஸ்தகவியாபாரம்

இ. ஒன்னையகவுடரவர்களால்

சென்னை :

ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

உ

சிவமயம்.

பதிப்புரை.

ஸ்ரீ சவுடாம்பாளது கிருபாகடாட்சம் பெற்றவர்களாகிய தேவாங்க குல திலகாது சரித்திர முறைப்பதான வித் தேவாங்கபுராணம் மதுரைக்குச்சமீபமாயுள்ள போடிநாயக்கனூர் ஜமீன்தாராகிய திருவங்காரு திருமலைப்போடி காமராசய பாண்டியநாயக்கத் துரையவர்கள் சமுகத்தில், அங்குவசிக்குந் தேவாங்ககுலத்தவர்கள் சமுஸ்கிருதத்திலுள்ள தங்குலநூலாகிய தேவாங்கபுராணத்தைத் தமிழில்மொழிபெயர்ப்பு செய்தருளவேண்டுமென்று விண்ணப்பிக்க, அவரங்ஙனமே இயற்றுவிப்பதாக உறுதிவார்த்தைகூறி, கோயமுத்தூரிலுள்ள ஸ்ரீ@ஸ்ரீ, சதாசிவசுவாமிகளவர்களையும், கலப்பதி ஸ்ரீ@ஸ்ரீ - தொட்டயதேசிகரவர்களையுஞ் சமுஸ்கிருதத்திலுள்ள தேவாங்கபுராணத்தைத் தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்த்துத் தர வேண்டுமென்றுகேட்டுக்கொள்ள, அவர்களவ்வாறேமொழிபெயர்ப்புச் செய்தளிக்க, அதனைப் பழனிப்பதியில்வசித்த வித்வசிகாமணியாகிய மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்களைக்கொண்டு, முத்தமிழ்ப் பாகுபாட்டினை யுணர்ந்த வித்வசிரோமணிகளெல்லாம் அமிர்தெனக் கொள்ளும்பொருட்டு இனிய இயற்றமிழில் செய்யுள்ரூபமாகச் செய்வித்து அவ்வூரிலுள்ள ஸ்ரீ சவுடேஸ்வரியினது திருச்சந்நிதியில் அரங்கேற்றுவித்தனரென்று இப்புராணத்தின் கடைசியிலுள்ள அக்காலத்துக்கொடுக்கப்பட்ட சாற்றுக்கவியால் நன்கு விளங்குகின்றது.

அங்ஙனஞ் செய்யப்பெற்றுள்ள இப்புராணமானது இதுகாறும் அச்சிடாமலும் பெரும்பாலும் அத்தேவாங்க குலத்தினருக்கே தெரியாமலுங் "குடத்திலிட்ட விளக்கைப்போல்" பிரகாசமின்றி மறைந்துகிடந்தது. மகாவித்துவானாகிய இந்நாவலர்பெருமானியற்றிய பாடல்களைச் சேகரஞ்செய்ய விரும்பிய எனக்கு இத்தேவாங்கபுராணம் அவரால் செய்யப்பட்டுள்ளதென்று சிலரால் கேள்வியுற்று அதனைத் தேட முயற்சிசெய்ததில், கோயமுத்தூரில்வசிக்கும் ம-ா-ா-ஸ்ரீ, சித்தூர் - நல்லமலைசெட்டியாரவர்கள் ஓர் பிரதியும், உடுமலைப்பேட்டை-ம-ா-ா-ஸ்ரீ, பெ - இராமசாமிசெட்டியாரவர்கள் ஓர் பிரதியும் உபகரித்தார்கள்; அப்பிரதிகள் மூலபாடமாயிருக்கக்கண்டு கல்வியில் வல்லோரேயன்றி எல்லாருக்கும் பயன்படும்பொருட்டு, கோயமுத்தூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ, R. சபாபதிபிள்ளையவர்களைக்கொண்டு உரையியற்றுவித்துப் புராணஞ்செய்ய முதல்நூல் காட்டியவருளொருவராகிய ஷை சதாசிவசுவாமிகளவர்களுடைய ஜேஷ்டபுத்திரரும், தேவாங்ககுலகுருவுமாகிய சதாசிவஐயரவர்களைக் கொண்டு அம்முதநூலோடு ஒத்திட்டுப்பார்த்ததில் சில விஷயம் முரண்பட அம்முரண்பட்ட விஷயங்களுக்கெல்லாம் ம-ா-ா-ஸ்ரீ

ஷை சபாபதிபிள்ளையவர்களைக்கொண்டே சிலசெய்யுளை நீக்கியும் வேண்டுமிடங்கட்குப் பொருந்த வேறுசில செய்யுள்களைக்கூட்டியும், திருத்தியும், புதுக்கிக் கோயமுத்தூர்ஜவுளிவியாபாரஞ்செய்யும் மகாகனம பொருந்திய வெரிவாடசெட்டியாரவர்கள், கிரியசெட்டியார் அவர்கள் முதலிய தேவாங்ககுல திலகர்களதுவிருப்பத்தின்படி அவர்களது திரவியசகாயத்தைக்கொண்டு அச்சிட்டு முடித்து இன்றுஎல்லாருங்காண வெளிப்படுத்தினேன். இப்புராணம் பேரிலக்கண வமைதியோடு அநேகசங்கச்செய்யுள்களில் காண்டற்குரிய இலக்கியப்பிரயோகங்களைமிகுதியாகப் பெற்று பெருநடையோடு அமைந்திருத்தலால் இருவகைச் செல்வங்களும் அமையப்பெற்ற தேவாங்ககுலத்தினரோயன்றி கல்விகேள்விகளில் முதிர்ச்சிபெற வேண்டிய மற்றையோரும் கைக்கொண் டொழுகின் அவர்களுக்கு பேருபகாரம் புரியுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்நூல் அச்சிட்டு நிலவவேண்டி திரவியசகாயஞ் செய்தவர்களாகிய அடியிற்கண்ட கனவான்களனைவருக்கும் நன்றியறிதலுள்ள வந்தனம் எந்நாளுஞ் செய்கின்றேன்.

இந்நூல் அச்சிடுவித்தற்குப் பொருளுதவிசெய்த
கனவான்களின் பெயர்.

கோயமுத்தூர்.

மா-ா-ஸ்ரீ, வெ-வெரிவாடசெட்டியார் அவர்கள்.
,, ஜே-தா-இராமசாமிசெட்டியார் அவர்கள்.
,, அ-இராமசாமிசெட்டியார் அவர்கள்.
,, வெ-வெள்ளியங்கிரிசெட்டியார் அவர்கள்.
,, ந-கிரியசெட்டியார் அவர்கள்.
,, சாமிராவுத்து அவர்கள்.

உடுமலைப்பேட்டை.

,, பெ-இராமசாமிசெட்டியார் அவர்கள்,

சேலம் ஜில்லா.

,, கொ-ர-தம்மணசெட்டியார் அவர்கள்,
முனிசிபல்கவுன்சிலர்.

செவ்வாய்ப்பேட்டை.

,, சேலம்-டி-மு-கோ. வக்கீல் - கதிரிசெட்டியாரவர்கள்,
,, வைத்தியலிங்கசெட்டியார் அவர்கள்.

திருப்பூர்.

,, சவுண்டப்பசெட்டியார் அவர்கள்.
,, M-சுப்பிரமணியசெட்டியார் அவர்கள்.

இப்படிக்கு:
விஜய ஹு ஆனிமீ 28உ. } ☞ இ. ஒன்னையகவுண்டர்,
புஸ்தகவியாபாரி, கோயமுத்தூர்.

சாத்துகவி.

உடுமலைப்பேட்டை - வித்வான்

பு. ப. அ. முத்துசாமிசெட்டியார் இயற்றியது.

வேண்டிக்கொண்ட விற்பன்னர்.

மதிதவழ்சீர்மலர்ப்பொழிலின்மகரந்தப்பொடிசிந்தவந்ததென்றற்
கெதிர்தவழ்மாமுத்தமிழுமிசைத்தாங்குசெண்டுகெழுங்கெறியுமாதர்
மிதிதவழ்செம்பஞ்சினொடுமிகத்தவழ்ந்துமணிமாடமிசைக்குலாவி
நிதிதவழ்பூநெறிகாக்குநெல்வேலிவட்டமெலாநிறைந்தபேரான். (௧)

தருமலைவெய்திடத்தமிழ்க்குத்தருதருமக்கருதருமைச்சாமன்சென்று
பொருமலைவெல்புயவீமன்மேடிநாமன்புரியாள்பூமன்சோமன்
செருமலையும்பரிநடனநகுலகுதூகுலசதுரன்றிருவங்காரு
திருமலைபோடயகாமராசயபாண்டியநயசத்தியவான்வேண்ட. (௨)

அங்கீகரித்தகாரணம்.

பூவாங்கவாவணத்திற்புகுசகிமார்மனையளவும்போர்வேள்வந்து
மாவாங்கமலமயிலைத்தரப்பெறுவார்குழன்மேகம்வருடப்பாயன்
மேவாங்கபடமனநாரியரேனுமவர்மானம்வீதிதோன்றா
தேவாங்கவர்க்கருளுந்தேவாங்கர்துகிற்பெருமைசிறந்ததென்றே. (௩)

இருவாணம்பரியவிடமிருங்கபடமுறைந்தவிழியேழைமாணா
மருவாணம்பிறப்பார்தங்குலம்பொருட்சீரறம்புகழ்நூல்வரம்புநோக்கி
யுருவாணம்பிழைப்பெனனவுயிர்நீப்பர்துறப்பரல்லாலுலகுநாப்பண்
திருவாணம்பெறவிடுகிலாதுதேவாங்கர்துகில்நிசந்தானென்றே. (௪)

மச்சுக்கட்டுவர்துகிலுக்குணவுக்காம்வழிமலிந்தான்மகிழ்பூலோகம்
அச்சுக்கட்டழியுமெனக்கச்சுக்கட்டுவர்மூலைக்கங்கதுபோதாமல்
வச்சுக்கட்டுவர்வல்லவாட்டுமனைகேட்டோர்பிச்சைவாங்குவாரும்
பிச்சுக்குட்பட்டொருகோவணம்பிடிக்குங்குணந்தவறார்பேசிலென்றே. (௫)

அங்கீகாரஞ்செய்த பெற்றியாளன் வெற்றியூர்பேர்.

ஒப்பினனொப்புதலுந்தன்கீர்த்திநிலைநாட்டுமுள்ளத்துக்கே
செப்பினன்செப்புதலும்புராணநிறைவேறியதுதெய்வாதீனத்
துப்பினனென்னுரைத்துப்பினன்கவிச்சிமமாச்சுட்டும்பட்டந்
தப்பினன்றமிழ்ச்சக்ரவர்த்தியிலேவிர்த்தியவதாரதீரன். (௬)

அனகசிவகிரியமகவந்தாதியரும்பதிகமனந்தமேஸ்த்ரீ
ஜனகனசிங்காரரசமஞ்சரிகீதாமிர்தசாரங்கேட்டோர்
மனதின்வண்ணம்வகுத்தபலசிலேடையிதழகல்பாமேல்மாலைமாற்று
யினவகையாதியயாவும்பாக்கியொன்றுமில்லையெனவிசைக்கும்வல்லான். (௭)

இருகைகட்டிநாவடங்கிவாயிதழுமூடியடியெடுத்துவைத்தே
வருகையலதொலிக்குறிப்புமாறுமலுணர்ந்துணைக்கும்வணப்பீதென்னே
பெருகுமகாகவனமகாகவனமிதுபிரபஞ்சம்பேசொணாதா
லருகுநின்றேமதற்குமென்றேவதிஷ்டமுற்றே மெனப்பலருமார்க்கவந்தான்.

மிளிர்வேளைப்பதிசேதுபதிகண்மேலொற்றுசந்த்ரவிசாலஞ்சொற்றான்
குளிர்சோலைப்பழனிநகர்புரிதவத்தால்வருவிஸ்வகுலமாணிக்கம்
தளிர்மேனித்தையலார்மையல்விளைவாற்றொடருஞ்சரசப்பாட [பான்.
லொளிர்கேலிவிளக்கியொன்றுபதுக்கியொன்றுபுதுக்கினன்றுயுணாக்குஞ்சால்

வடித்தெடுத்ததமிழ்மதுரம்மனம்வழியவழியவொருமணிவாயாரப்
படித்தெடுத்தவிரித்தகவியொன்றினுக்கேயிரவுபகல்பலவாண்டாக
முடித்தெடுத்தமறுகவிக்கோமுகுந்தனளாவியவுலகமுழுதீந்தாலுங்
குடித்தெடுத்தகோடியிலங்கோடியகற்பனைகளுக்குங்கொடையென்னென்றே.

பாடினனரங்கேற்றம்பண்ணிவைத்தானெல்வேலிப்பதியார்சூழத்
தேடினன்சங்கதுங்கசிங்கமெனத்திகழ்புகழ்மேற்றோர்ந்தபோ
நாடினன்சொன்னதன்னேர்கன்னமமாம்பழம்போனவும்பாவுங்
கூடினன்றிசைகீண்டுஞ்சூடினன்நண்டவர்கைகூப்புமாப்பூண்.

மொழிபெயர்த்துத்தந்த முதூக்குறையாளன் செய்யுள்.

தகைமிகையதேவாங்கர்குலகுருவாஞ்சதாசிவப்பேர்ச்சாதுரேர்நேர்
வகைவகையாய்வடமொழியைத்தென்கிளவிமயப்படுத்திவரனுங்கேட்டு
முகையவிழ்ந்தபரிமளஞ்சான்முதிர்தமிழ்ப்பாவிளிப்பனைத்தமூட்டிமூட்டித்
தொகைதருமாயிரத்தின்மிசைத்தொடுத்தகவிவிருத்தமெனச்சொல்வரம்மா.

உரைசெய்த [illegible]த்தன் ஊராதிய.

இணையகலமிணங்குயர்தேவாங்கபுராணத்துளவையெவருந்தேர்வான்
சினையமர்ந்தசிசுப்பிறந்துதவழ்ந்துகொஞ்சிமடியேறிச்சிரித்தாற்போலுந்
தனையுணர்ந்தகன்னிமகிழ்தருணசுகம்போலும்விரிசகத்துக்கேற்கப்
புனையுரைசெய்தளித்தனனற்புதகுடந்தையிடஞ்சனித்தபுனிதன்றானே.

தூயமுத்தூரலேத்தடஞ்சூழ்கோயமுத்தூர்க்காலீஜிற்சொல்விக்குஞ்சீர்
நேயமிக்கநெறித்தமிழ்வாத்திமைத்தொழிலான்சுவேதவண்ணநிருபர்சம்ப்ர
தாயனிவனெனமதிக்குஞ்சபாபதியர்திருநாமச்சரதன்சில்லா
மேயபுகழாளனென்னோர்தோழனென்றுஞ்சொலகிலவும்விவேகன்மாதோ.

பொருளுபகாரி.

அ[illegible]வாடுன்னுமைவெங்மேற்றீட்டிவயனெல்லறுக்குமந்தக்கோய
புரிவாடும்வாட்டமொன்றுமில்லையெனவிருந்துநிதம்புரிந்துமாந்தர்
சரிவாடுமாட்டமறத்தாங்குதபாற்பரிநடவுஞ்சமர்த்தனெங்கள்
வெரிவாடுசெட்டியாரிப்புராணத்தையச்சால்வெளியிலேற்ற.

உருளுதவிசகடமற்றுலோடுவதேதிகழமுதமுவக்குமாதர்
மருளுதவியிலேயேற்பின்மணமேதுமணந்தானும்வாய்மையாளர்
அருளுதவியின்றிநிறைவேறிடுங்கொலிகபரத்துக்கன்புகாட்டும்
பொருளுதவிவிஷயமெண்ணிப்புரியாரேற்புகழ்பொலியாபொலியாவென்று.

அச்சேற்றிப் பிரயாசையுற்ற வுற்சாகன்.

மனம்பிறந்தால்வழிபிறக்கும்வலியுரைக்கும்வெரிவாடுமகியன்செய்த
தினம்பிறந்ததிடஞ்சிறந்ததோபொதுவுக்கடஞ்சிறந்தசெயலோபார்க்கு
முனம்பிறந்தவிடையுபயசம்மதத்துளனமவெனினுமுறையோவென்பான்
கனம்பிறந்தகாரியமங்களசுபகல்யாணகுணகருணானந்தன். (௧௭)

பலநாடுஞ்சுற்றிவரும்பத்திரிகைதொறும்பொதுவாப்பாடுற்றோங்கி
நலநாடுஞ்சற்குணரஞ்சிதவுசிதன்கோயபுரிநாப்பண்வந்த
குலநாமமொக்கிலியர்கூட்டமெனத்திகழ்குமுணன்கொள்வார்க்கெல்லாந்
தலைனூர்யசகசவிலைசாற்றியபுத்தகந்தருவர்த்தகச்சிரானன். (௧௮)

அரிபஜனையனவரதநடவுரங்கேந்திரன்மகிழுமருஞ்சேய்பொய்விட்
டுரியநிசமுரைப்பாரையுறவுபிணித்திடும்விரதனூக்கயிக்கான்
விரிமனத்துவிவகாரிவருபுலவர்க்குபகாரிவேந்தர்பாந்தஞ்
சரிசரியாப்பெற்றிருக்குந்தன்னிகரிலொன்னையனுஞ்சரதமாலே. (௧௯)

உ

சிவமயம்.

சவுடேஸ்வரிசகாயம்.

தேவாங்கபுராணம்,

மூலமும் - உரையும்.

முதலாவது

வரந்தருகடவுள் வாழ்த்துச்சருக்கம்.

விநாயகர் காப்பு.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புகழ்வளர் மதிதோய் பொலங்குவட் டிமவான்
பொருப்பிடைப் பிறந்தணி பொருந்தித்
திகழ்தரு கயிலைப் பவளநன் னிறத்துத்
திறற்பெருங் களிற்றினைச் சேர்ந்து
தகரமென் கூந்தற் பசும்பிடி யீன்ற
தடங்காத் தருண்மதத் தனிக்கோட்
டகல்செவிச் சிறுகட் குஞ்சரக் கன்றி
னடிமலர் முடிமிசை யணிவாம்.

(இதன் பதப்பொருள்.)

புகழ் வளர்=கீர்த்தி மிகுந்த, மதிதோய்=சந்திர னுறையும், பொலம் குவடு இமவான்=பொன் பொடிகளையுடைய சிகரங்களுள்ள இமயமாகிய பெரிய, பொருப்பு இடை பிறந்து-மலையின்கண் அவதரித்து, அணிபொருந்தி-அழகுவாய்ந்து, திகழ் தரு கயிலை=விளங்குகின்ற கயிலைமலையினிடத்தெழுந் தருளிய, பவளம் நல் நிறத்து=பவளம்போலும் நல்லவண்ணத்தை யுடைய, திறல் பெரும்=வலிமையும் பெருமையுமுடைய, களிறு இன் ஐ சேர்ந்து=ஆண் யானையாகிய சிவபெருமானைக்கூடி, தகரம் மெல் கூந்தல்=மயிர்ச்சாந் தை யணிந்த மென்மையாகிய கூந்தலையுடைய, பசும் பிடி யீன்ற=பசுமை நிறத்தை யுடைய பெண் யானையாகிய பார்ப்பதிதேவியார் பெற்றருளிய

தடம் கரத்து=விசாலமாகிய துதிக்கையும், அருள் மதம்=கிருபையாகியமதமும், தனி கோடு=ஒற்றைக் கொம்பும், அகல் செவி=பெரிய காதுகளும், சிறுகண்=சிறிய கண்களும் (உடைய), குஞ்சரம் கன்றின்=யானைக் கன்றாகிய விநாயகக் கடவுளுடைய, மலர் அடி=தாமரை மலர்போலுந் திருவடிகளை, முடிமிசை அணிவாம்=எமது சிரசின்மீது (ஆபரணமாக) முடித்துக்கொள்வோம், என்றவாறு.

இப்புராணிகர், தம்போன்ற புலவரையும் படிப்போரையு முள்ளிட்டு "அணிவாம்" என உளப்பாட்டுத் தன்மைப் பன்மையாற் கூறினர். "அடிமலர்" என்பதனை, மலர் அடி என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. "இமவானது பொருப்பு" எனக் கோடலுமொன்று. களிறு, பிடி இவை உவமவாகுபெயர்கள். ஏனைய உறுப்புகள் மாறுகவிருப்பினும், ஐந்திந்திரியங்களையும் ஒருங்கேயுடைய வுத்தம வுறுப்பாகிய தலையை முதன்மையாகக்கொண்டு, "குஞ்சரக்கன்றின்" எனக் கூறினர். இஃது ஏகதேசவுருவகவணி. இமயமலையிற் பிறந்து கயிலைமலையில் வசிக்கின்ற பவளநிறக் களிற்றைச்சேர்ந்து, கூந்தற் பசும்பிடியீன்ற குஞ்சரக்கன்றின் எனவே விநாயகனென்பது பெறப்பட்டது. அந்து இரண்டும், இன்னும் சாரியைகள். பொன் என்னுஞ் சொல், தொல்காப்பியம் புள்ளிமயங்கியலில், "பொன்னென் கிளவி யீறுகெட முறையின் முன்னர்த் தோன்றும் லகார மகாரஞ் செய்யுண் மருங்கிற் றொடரியலான" எனக்கூறிய சூ-ம் சூத்திரவிதிப்படி பொலம் என வந்தது. இதனைப் பிற்காலத்தார் பொன்னின் பரியாயநாமங்களுள் ஒன்றாகக்கொண்டனர். அன்றியும் பொலன் எனவும் வரும். வளர், தோய், தரு, அகல் இவை வினைத்தொகைகள். குவடு, கோடு இவை "நெடிலோ டுயிர்த்தொடர்" என்னும் நன்னூல் உயிரீற்றுப்புணரியல், ௬௩-வது சூத்திர விதிப்படி டகர மிரட்டியது.

விநாயகர் யானைமுகமுடையவர் என்பதற்குப் பிரமாணம்.

கந்தபுராணம் கயமுக னுற்பத்திப்படலம்.

"என்னவே முகமனா லெம்பிரா னம்பிகை
தன்னொடே மொழியவத் தந்தியும் பிடியுமாய்த்
துன்னியே புணர்வுறுந் தூயசெய் தொழில்விடா
முன்னமே போன்றதான் முடிவிலாக் குடிலையே.

அக்கணத் தாயிடை யைங்கரத் தவனருண்
முக்கணால் வாயினான் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனு மாமுகத் தவன்மதிச்
செக்கர்வார் சடையனோர் சிறுவன்வந் தருளினான்."

என்று கூறியசெய்யுட்களா லறிக.

ஒற்றைக்கொம்பை யுடையோன் என்பதற்குப் பிரமாணம்.

கந்தபுராணம் கயமுக னுற்பத்திப்படலம்.

"நின்றவன் றன்னை நோக்கி நெடியபல் படைக ளேவிற்
சென்றிவன் றன்னைக் கொல்லா சிவனருள் வரத்தின் சீரா
லின்றினிச் செய்வதென்னென் றிறைவனை யுன்னி யெந்தை
தன்றிருக் கோட்டி லொன்று தடக்கையின் முரித்துக் கொண்டான."

எனக் கூறிய செய்யுளாலறிக. அகல், செவ், சிறுகண் இவை முரண்டொடை.

பரசிவ வணக்கம்.

கொச்சகப்பா.

ஆதிநடு வந்தமின்றி யலர்தலைப்பற் பலபுவன
மீதினுமல் குயிர்தொறும்பூ விரைமணிவா ளுறைபொருள்போன்
றோதியமா மறைத்தொகைக்கு முணர்வரிதா யுறைந்தபரஞ்
சோதிதிரு வருளையுன்னித் தொடர்மனத்தி னிடர்தவிர்ப்பாம்.

(இ - ள்.) ஆதி நடு அந்தம் இன்றி = முதலிடை யீறில்லாமல், அலர் தலை = விரிந்த இடத்தையுடைய, பல் பல = பலபலவாகிய, புவனம் மீதினும் = உலகங்களெவ்விடத்தும், மல்கு உயிர் தொறும் = நிறைந்த ஆன்மாக்களெவற்றின் கண்ணும், பூவிரை மணிவாள் உறைபொருள் போன்று = மலரின் மணமும் மணியினொளியும் சொற்களினருத்தமும் (ஆகியவிக்குணங்கள் அவ்வப் பொருள்களினின்று நீங்காமையை) யொத்து, ஓதிய மாமறை தொகைக்கு உம் = (தமது திருவருளால்) சொல்லியருளிய பெருமையினையுடைய நான்கு வேதங்களுக்கும், உணர்வு அரிது ஆய் = அறிதல் முடியாதாகி, உறைந்த = (அறிவாக) எழுந்தருளிய, பரம்சோதி = மேன்மையாகியசிவபெருமானுடைய, திரு அருளை உன்னி = மங்கலமாகிய கிருபையைத் தியானித்து, தொடர் மனத்தின் = (ஐம்பொறிகளின் வழியாகப் புலன்களைப்) பற்றுகின்ற மனத்தின்கண்ணுள்ள, இடர் தவிர்ப்பாம் = (அஞ்ஞானமாகிய) துன்பத்தை யொழிப்போம்.

"ஆதிநடு வந்தமின்றி" யென்றதனால், ஏனைய தேவர்கள்போற் பிறப்பிறப்பில னென்பதும், "உயிர்தொறும் பூவிரை மணிவாள் உறைபொருள் போன்று" என்றதனாற் பரிபூரணனென்பதும், "மறைத்தொகைக்கு முணர்வரிதா" யென்றதனால் எவ்வகைக்கடவுளருக்குமரியவனென்பதும், "திருவருளை யுன்னித் தொடர்மனத்தி னிடர்தவிர்ப்பாம்" என்றதனால் அடியார்க்கெளியவனென்பதும் பெறப்பட்டன. வேதம்நான்காவன - இருக்கு, தைத்திரீயம், சாமம், அதர்வணம் என்பவைகளாம். தொறும் என்னு மிடைச்சொல் இடப்பன்மைப் பொருளில் வந்தது. போன்று உவமவுருபிடைச் சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம். போன்று என்னும் செய்தெனெச்சத்தைப் போலவெனச் செயவெனெச்சமாகத்திரித்து ஒப்பவெனப் பொருள் கோடலுமாம்.

தக்ஷணாமூர்த்தி வணக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வருபிறவி நெடுங்கேதக் கொடுங்கோடை யொடுங்காம
வடவைத் தீயு
மொருவவிரு வடநிழலின் மூவாத நால்வர்தம
துளத்தி னூடு
பொருவரிய மெய்ஞ்ஞானப் பயிரொழுந்தா னந்தசிவ
போகம் வாய்ப்பக்
கருணைமழை பொழிமவுனக் கயிலைமுகி லிணையடிப்பொற்
கமலஞ் சேர்வாம்.

(இ - ள்.) வருபிறவி = (படைப்புக்காலந் தொடங்கி ஆன்மாவை விடாதுபற்றி) வருகின்ற பிறவியாகிய, நெடு கேதம் = பெரிய துன்பமாகிய, கொடுங்கோடை ஒடும் = தீய வேனிலுடனே, காமம் வடவை தீ உம் = காம நோயாகிய வடவாமுகாக்கினியும், ஒருவ = நீங்க, இரு வடம் நிழல் இன் = பெரிய கல்லாலமரத்தி னிழலின்கண் (எழுந்தருளிய), மூவாத நால்வர் தமது உளத்தின் ஊடு = கெடாத (சனகர்முதலாகிய) நால்வர் தங்களுடைய மனத்தின்கண், பொருவு அரிய = ஒப்பில்லாத, மெய் ஞானம் பயிர் எழுந்து = உண்மைஞானமாகிய பயிரானது முளைத்து, ஆனந்தம் சிவம் போகம் வாய்ப்ப = பேரின்பமென்னுஞ் சிவதத்துவமாகிய வனுபவம் சித்திக்கும்படி, கருணை மழை பொழி = கிருபையாகிய ஞானமழையைப்பெய்த, மவுனம் கயிலை முகில் = ஞானத்தை யுடைய கயிலைமலையின்கணெழுந்தருளிய மேகம் போன்ற (ஞானதேசிகராகிய) தக்ஷணாமூர்த்திகளுடைய, இணை அடி பொன் கமலம் சேர்வாம் = அழகினையுடைய தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளையும் (எமது பிறவித்துன்பம் நீங்குமாறு வழிபட) அடைவோம். எ - று.

கோடையும் தீயும் நீங்க மழை பெய்தல்போல பிறவிக் கோடையும் காமத்தீயுங் கெட ஞானோபதேசமென்னும் மழையைப் பெய்தலால் 'முகில்' என்றார். இது தொழிலுவமையணி. முகில் உவமையாகுபெயர். அரிய இது இன்மை புணர்த்தி நின்றது.

ஞானோபதேசஞ் செய்ததற்குப் பிரமாணம்.

கந்தபுராணம் மேருப்படலம்.

"இருவரு முணரா வண்ண லெண்ணெவ் ளெயிறி யாமை
சிரநிரை யனந்த கோடி திளைத்திடு முரத்திற் சீர்கொள்
காதல மொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
யொருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய் வாரி னுற்றான்.

இனையதோர் தன்மை காட்டி யெம்பிரா னுணர்த்தக் கண்டு
சனகனே முதலா வுள்ளோர் தவலரு ஞான போதம்
பனுவலி னளவன் றென்னும் பான்மையைத் தெரிந்து முக்கட்
புனிதனை தருளாற் றத்தம் புந்தியி னொடுக்கம் பெற்றார்."

என்னுஞ் செய்யுளா லறிக.

சனகர் முதலிய நால்வராவார்,—சனகர், சனுக்கதர், சனந்தனர், சனற்குமாரர். (ரு)

சிவகாமவல்லியம்மை வணக்கம்.

திவளமலை நெடுந்தரங்கத் தெய்வநதி மதிகுலவு செக்கர் வேணி
துவளமலை வரியபதஞ் சலியுமொரு புலியுமெதிர் தொழுது நிற்பத்
தவளமலை யில்லியெனுந் தொல்லையருட் டில்லைமணிச் சபையி லாடும்
பவளமலை யிடத்துவளர் பசுங்கிளிப்பொற் பதநளினம் பணிதல் செய்வாம்.

(இ - ள்.) திவள் அமலை = விளங்கு மொலியுள்ள, நெடுதரங்கம் தெய்வம் நதி = பெரிய அலைகளும் தெய்வத்தன்மையும் உள்ளகங்கையும், மதி = சந்திரனும், குலவு செக்கர் வேணி துவள = பொருந்திய சிவந்தசடையானது அசையும்படி, மலைவு அரிய = மயக்கமில்லாத, பதஞ்சலியும் = பதஞ்சலி முனிவரும், ஒருபுலியும் = ஒப்பில்லாத வியாக்கிரபாதரும், எதிர் தொழுது நிற்ப = திருவோலக்கத்தினிடத்து வணங்கி நிற்க, தவளம் மலை இல்லி எனும் = வெள்ளிய கயிலைமலையை வசிக்கும்வீடாகவுடையவனென்றுஅறிவுடையவர்சொல்லுகின்ற, தொல்லை அருள் தில்லை மணி சபையில் ஆடும் = பழமையாகிய கிருபைக்கிடமான சிதம்பர மென்னுந் திவ்யதலத்தி லிரத்தின மன்றின்கண் ஆனந்தத் திருநிருத்தஞ்செய்கின்ற, பவளம் மலை இடத்தில் வளர் = பவளமலை போலுந் திருமேனியையுடைய ஸ்ரீநடராசப்பெருமானது வாமபாகத்தி லெழுந்தருளிய, பசும் கிளி = பசுமை நிறமுள்ள கிளிபோன்ற சிவகாமவல்லியம்மையாரது, பொன் பதம் நளினம் பணிதல் செய்வாம் = அழகிய பாததாமரைகளை வணங்குவோம். எ - று.

மலை, கிளி இவை உவமையாகுபெயர்கள். மலைவு மாறுபாடெனினுமாம். (சு)

சித்திவிநாயகர் வணக்கம்.

கோச்சகம்.

எத்திக்குஞ் சராதி மற்றெவையு மீன்றெடுத்த
சத்திக்குஞ் சரவிதழி வேணியற்கு மோர்தனயன்
முத்திக்குஞ் சரம்பெருவித் தெனவாகி முளைத்தெழுந்த
சித்திக்குஞ் சரமுகனை நாடோறுந் துதிசெய்வாம்.

(இ - ள்.) எத்திக்கும் = எந்தத்திசைகளையும், சரம் ஆதி மற்று எவையும் = சரவுயிர் முதலாக அசரவுயி ரிறுதியாகிய வெப்பொருள்களையும், ஈன்று

எடுத்த=பெற்றருளிய, சத்திக்கும் = பார்வதிதேவியாருக்கும், இதழி சரம் வேணியற்கும்=கொன்றைப்பூமாலையை யணிந்த சடையையுடைய சிவபெருமானுக்கும், ஓர்தனயன் = ஒரு குமாரனும், முத்திக்கும் = (தம்மையடைந்தோர் பெறும்) வீட்டிற்கும், சரம் பெரு வித்து என ஆகி=மணிமாலைபோல பெரிய விதையென்னும் விதமாகி, முளைத்து எழுந்த=திருவவதாரஞ் செய்து விளங்குகின்ற, சித்தி குஞ்சரம் முகனை=யானைமுகத்தையுடைய சித்திவிநாயகனை, நாள் தோறும்=ஒவ்வொரு நாளும், துதி செய்வாம் = தோத்திரஞ் செய்வோம். எ - று.

"சரவிதழி" மொழிமாற்றி யுரைக்கப்பட்டது. இதழி பொருளாகு பெயர். சரம் அம்புபோலெனினுமாம். முத்திக்கும் என்னும் உம்மை ஏனைய வின்பங்களுக்கும் வித்தாலன்றி யெனும் பொருள்தருதலின் இறந்தது தழீஇய வெச்சவும்மை. எவையுமீன்றெடுத்த சத்திக்கும், இதழிவேணியற்கும் தனயன் என்றதனால் எப்பொருட்கு மிறைவனென்பதும் பிரணவசொரூபி யென்பது முணர்த்தியது. சத்திக்கும் வேணியற்கும் இவ்வும்மை எண். மற்று பிறிது பொருளில் வந்தது. (ரு)

முருகக்கடவுள் வணக்கம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பனிப்பவனி யுறப்படரு மவுணரெனு மிருளறக்கோ
 பதியைச் சூழ்ந்த
துனிப்பனியு மருட்குளிரு மொளிப்பவினை மாயைமுக
 சோமன் மட்கக்
கனிப்பவள விதழ்ச்சசிதன் னிதயபங்கே ருகமலரக்
 கதிர்வாய் செவ்வேற்
றனிப்பருதி யனுப்புமின்பத் தடங்கடல்சார் தெமதுபவத்
 தாகந் தீர்வாம்.

(இ-ள்.) அவனி பனிப்பு உற=பூமியிலுள்ள மக்கள் (உடல்) நடுக்கமடைய, படரும்=அவர்மேற் செல்லாநின்ற, அவுணர் எனும் இருள் அற= அசுரரென்கின்ற விருளானது நீங்கவும், கோபதியை சூழ்ந்த = இந்திரனைச் சுற்றிய, துனிபனியும்= துன்பமாகிய வச்சமும்,மருள் குளிரும்=மயக்கமாகிய கூதலும்,ஒளிப்ப=மறையவும், வினை மாயை முகம் சோமன் மட்க=போரையும் வஞ்சத்தையும் தன்கணுள்ள கிரவுஞ்சமலையானது ஒளிகெடவும், கனி பவளம் இதழ் சசிதன் = கொவ்வைக்கனிபோலும் பவளம்போலு மிதழையுடைய இந்திராணியினது, இதயம் பங்கேருகம் மலர=மணமாகிய தாமரை மலரவும், கதிர்வாய் செவ்வேல்=ஒளிபொருந்திய சிவந்த வேலாகிய, தனி பருதி அனுப்பும்=ஒப்பில்லாத சூரியனைவிட்டருளிய, இன்பம் தடம் கடல்=

இன்பத்தையும் விசாலத்தையுமுடைய அருட்கடலாகிய முருகக்கடவுளது திருவடிகளை, சார்ந்து=அடைந்து, எமது பவம் தாகம் தீர்வாம்=எம்முடைய (பிறவியாகிய) விடாயை யொழிவாம். எ - று.

இரவி தோன்றுங்கால் இருணீங்குதலும், பனிகுளிரொழிதலும், சந்திரனொளிகெடுதலும், தாமரைமலர்தலும் இயல்பாதலால், குமாரக்கடவுளால் விடுத்த வேலாயுதத்தால் அசுரராகிய இருணீங்குதலும், இந்திரனைச்சூழ்ந்த அச்சமுங் கூதலு மொழிதலும்,கிரவுஞ்சமலையி னூக்கங்கெடுதலும், இந்திராணியின் மனத்தாமரை மலர்தலும் உண்மையால் அவ்வேலாயுதத்தை யிரவியாகக் கூறினர்.

அவுணரை யிருளாகவும், இந்திரனை யிமயமலையாகவும் அவனது துன்பத்தையும் அச்சத்தையும் பனியும் கூதலுமாகவும்,கிரவுஞ்சமலையைச் சந்திரனாகவும், அதனழிவைச் சந்திரனொளி கெடுதலாகவும், இந்திராணியின் மனமகிழ்ச்சியை தாமரை மலர்தலாகவும், வேலாயுதத்தைச் சூரியனாகவும்,குமாரக்கடவுளை யருட்கடலாகவும் உருவகம் செய்தமையால் உருவகவணியும், கோபதி என்பதற்கு இமயம் எனவும் இந்திரன் எனவும், சோமன் என்பதற்கு கிரவுஞ்சம் எனவும் சந்திரனெனவும் பொருள் படுதலால் பல்பொருட்சொற்றொடரணியுமாம்.

தாகவிடாய் உடையோர் குளத்தை யடைந்து அவ்விடாயை நீக்குதல்போல பிறவியாகிய தாகவிடாயைக் குமாரக்கடவுளாகிய அருட்கடலை யடைந்து நீங்குவோமெனக் கூறினர்.

அவனி இடவாகுபெயர். கிரவுஞ்சமாவது சிங்கமுகாசுரன் தம்பியாகிய தாரகனுடைய மாயாபுரிநகரில் வசித்த கிரவுஞ்சன் என்னு மசுரன், அகத்தியமுனிவர் வரும்வழியில் மலையுருவங்கொண்டிருந்து அவரை மருட்டியஅதனால் அம்முனிவர் கோபங்கொண்டு சபிக்க அவ்வாறே நின்று பின்னர் முருகக்கடவுளது வேலாயுதத்தால் அழிக்கப்பட்ட மலை. இதனை,

கந்தபுராணம் கிரவுஞ்சப்படலம்.

"அத்தகு தகுவர் கோமா னடற்கிர வுஞ்ச னென்போன்
மெய்த்தமிழ் முனிவன் செல்லும் வியனெறி விந்த மேபோற்
கொத்துயர் குவடு மல்கிக் குன்றுருக் கொண்டு தன்பா
லுய்த்திடு மாறு போக்கி யுறுதலுங் குறியோன் கண்டான்.

மாற்படு நமது பாணி வலிகெழு தண்டா லுன்றன்
பாற்படு புழைகள் யாவும் பற்பல மாயைக் கெல்லா
மேற்புடை யிருக்கை யாக வெம்பிரா னுதவுஞ் செவ்வேள்
வேற்படை தன்னிற் பின்னாள் விளிகுதி வினாவி னென்றான்."

கந்தபுராணம் தாரகன்வதைப்படலம்.

"தாரகன் மார்ப மென்னுந் தடம்பெரு வரையைக் கீண்டு
சீரிய கிரவுஞ் சத்திற் சேர்ந்துபட் டுருவிச் சென்று
வீரமும் புகழுங் கொண்டு விளங்கிய தென்ன வங்கட்
சோரியுந் துகளு மாடித் துண்ணென மீண்ட தன்றே."

என்னு மிச் செய்யுள்சான்றா லறிக. (சு)

கலைமகள் வணக்கம்.

முதிர்பொறுமைக் கரைசிறந்து கருணைநறும் புனல்பருகி
முழுமெய்ஞ் ஞானப்
புதியமலர் விரிந்தடக்க மெனுங்கமடங் குடியிருந்து
புகழ்கொண் டோங்கு
மதிவலவர் தமதிதய வாவிதொறும் விளையாடி
வளர்பே ரின்பத்
ததிமதுர குணநயவெள் ளனப்பேடு தனைப்பாடி
யருள்பெற் றுய்வாம்.

(இ-ள்.) முதிர் பொறுமை கரை சிறந்து=தேறியபொறுமையென்னு மெல்லையாற் சிறப்படைந்து, கருணை நறு புனல் பருகி=கிருபையாகிய நல்ல நீரையருந்தி, முழுமெய்ஞ்ஞானம்=நிறைந்த வுண்மைஞானமாகிய, புதியமலர் விரிந்து=புதிதாகிய பூக்கள்மலரப்பட்டு, அடக்கம் எனும் கமடம் குடியிருந்து =(ஐம்புல) வடக்க மென்கின்ற வாமைகள் குடியிருக்கப்பட்டு, புகழ்கொண்டு ஓங்கும்=கீர்த்தி பெற்றுயர்ந்த, மதிவலவர் தமது=அறிவில் வல்லோராகிய பெரியோருடைய, இதயம் வாவி தொறும்=மனமாகிய குளங்க ளெவ்விடத்தும், விளையாடி வளர்=விளையாடி வளருகின்ற, பேர்இன்பத்து அதிமதுரம்= பெரிய வின்பத்தையும்மிக்கவினிமையையும், குணம் நயம்=சீர்மையும் நன்மையுமுடைய,வெள்அன்ம் பேடுதனை=வெள்ளிய பெண்ணன்னம்போல்பவ ளாகிய கலைமகளை, பாடி அருள் பெற்று உய்வாம்=(புகழ்ந்து) பாடி (அப்பெருமாட்டியினுடைய) கிருபையையடைந்து (நாம்) ஈடேறுவோம். எ-று.

பொறுமையும், கிருபைப்பேறும், மெய்ஞ்ஞானமும், ஐம்புலவடக்கமும் உள்ள சான்றோரதுமனத்தை நீங்காமல் வசித்தலால் அவரதுமனத்தைத் தடாகமாகவும் கலைமகளைப் பெண்ணன்னமாகவும் உவமைகூறினர். வெள் அன்னமென்றார் கருப்பன்ன முண்மையால். (எ)

நந்தியடிகள் வணக்கம்.

படருமிருட் கொடும்பிறவிப் பாவவனந் தனைச்சிதைத்துப்
பந்த பாசத்
தொடாதனை யறுத்துவினைத் தறிமுரித்து மனப்பாகைச்
சுளித்து ஞானத்

திடமருவி நெடுங்கயிலைத் தடங்கிரிவாழ் பரஞ்சுடரின்
திருமுன் னோங்கு
மடல்குலவு நந்தியெனுங் கடவிகட களிற்றிணைத்தாட்
கன்பு செய்வாம்.

(இ - ள்.) படரும் இருள் கொடு பிறவி = பரவிய மயக்கமாகிய கொடிய பிறவியென்னும், பாவம் வனம் தனை சிதைத்து = பாவமாகிய காட்டை யழித்து, பந்த பாசம் தொடர் அதனை = (அழிதற்பாலனவாகிய பொருள்களில்) கட்டுண்டிருக்கின்ற ஆசையாகிய விலங்கை, அறுத்து = அறுத்துவிட்டு, வினை தறி முரித்து = வஞ்சகமாகிய கட்டுத்தறியை யொடித்து, மனம் பாகை சினத்து = மனமாகிய பாகனை கோபித்து, ஞானம் திடம் மருவி = அறிவாகிய வலிமை யடைந்து, நெடு கயிலை தடம் கிரி = பெரிய கயிலையாகிய விசாலமுள்ள மலையின்கண், வாழ் பரஞ்சுடர் இன் திரு முன் = எழுந்தருளிய சிவபெருமானது சந்நிதானத்தில், ஓங்கும் அடல் குலவு = உயர்ந்த வலிமையுடனே விளங்குகின்ற, நந்தி எனும் = நந்தீசர் என்னுந் திருநாமத்தையுடைய, கடம் விகடம் களிறு = மதத்தையும் அழகையும் உடைய யானையினது, இணை தாள் கு அன்பு செய்வாம் = இரண்டு திருவடிகளுக்கும் (வணங்கும்) ஆசை கொள்வோம். எ - று.

வனத்தை யழித்தலும், சங்கிலியையறுத்தலும், தறியை யொடித்தலும், பாகனைக் கோபித்தலும் யானைக்கியல்பாதலின்; யானை யென்பதற் கேற்ப அதன் வினையையேற்றிக் கூறினர். பிறவியை வனமாகவும், ஆசையை விலங்காகவும், வஞ்சத்தைக் கட்டுத்தறியாகவும், மனத்தைப் பாகனாகவும் கூறினதால், இது உருவகவணி. களிறு உவமையாகுபெயர், தொடராது அது பகுதிப் பொருள் விகுதி. (அ)

சவுடநாயகியம்மை வணக்கம்.

உந்துதிரை நெடுங்கடல்போ லொலித்தடர்ந்த வரக்கர்வெங்கிட்
டோடி வீழ
முந்துபரம் பொருளிதாம் பரத்துதித்த தேவலனை
முழுதுங் காக்கக்
கந்துபொரு கடகளிறு கலங்குறுகண் டிரவவா
கன நடாத்தி
வந்துதிரு வருள்புரிந்த சவுடநா யகிதிருத்தாள்
வழுத்தல் செய்வாம்.

(இ-ள்.) உந்து திரை நெடு கடல் போல் = மோதுகின்ற அலைகளையுடைய பெரிய சமுத்திரம் போல, ஒலித்து அடர்ந்த அரக்கர் = ஆரவாரஞ்செய்து நெருங்கிய அசுரர்கள், வெங்கிட்டு ஓடி வீழ = புறங்கொடுத்து ஓடி இறக்

கும்படி, முந்து பரம் பொருள்=(எத்தேவர்களுக்கும்) முற்பட்ட சிவபெருமானுடைய, இதயம் அம்பரத்து=மனக்கடலினிடத்து, உதித்த தேவலனை=திருவவதாரஞ் செய்த தேவாங்கமுனிவனை, முழுதும் காக்க=எப்பொழுதும் புரக்கும்பொருட்டு, கந்து பொரு கடம் களிறு=கட்டுத்தறியைத் தாக்குகின்ற மதத்தையுடைய யானைகளானவை, கலங்கு உறு=அஞ்சுதல் பொருந்திய, கண்டீரவம் வாகனம் நடாத்தி=சிங்கவாகனத்தைச் செலுத்திக்கொண்டு, வந்து திரு அருள் புரிந்த=எழுந்தருளி வந்து அழகிய அருள் செய்த, சவுடநாயகி திரு தாள் வழுத்தல் செய்வாம்=சவுடநாயகியம்மையினது அழகிய பாதங்களை தோத்திரஞ் செய்வோம். எ-று.

முந்து-முற்காலத்தெனினுமாம். தேவாங்கமுனிவனுக்கு அருள் செய்தது இப்புராணத்தினுள் கண்டுகொள்க. இதயாம்பரம் தீர்க்கசந்தி. சமுஸ்கிருதத்தில் சூடாம்பிகை என்பது சவுடநாயகி யெனத் தமிழில் தற்பவமாயிற்று. இதற்கு அசுரர்கள்தம்பிக்குமாறு பிரகாசிக்கின்றமுடியையுடைய தலைவி யென்பது பொருள். (கூ)

சக்காலதேவியம்மை வணக்கம்.

பார்வளரும் புகழ்வளமை படைத்தசெங்கோன் மன்னர் மன்னன்
பனிமா முல்லைத்
தார்வளரும் புயவங்கார் திருமலைப்போ டயதுரைசந்
ததமும் போற்றுங்
கார்வளரு மலர்க்கூந்தற் களபகும்ப முலைக்கருணைக்
கயற்கட் செவ்வாய்ச்
சீர்வளருஞ் சக்கால தேவிபத மினிதுதுதி
செய்து வாழ்வாம்.

(இ-ள்.) பார் வளரும் புகழ் வளமை படைத்த=பூமியில் (நாளுக்குநாள்) பெருகுகின்ற கீர்த்தியையும் கொடையையும் பெற்ற, செங்கோல் மன்னர் மன்னன்=நீதியையுடைய அரசர்களுக்கு அரசனாகிய, பனி மா முல்லை தார்=குளிர்ச்சியும் பெருமையுமுள்ள முல்லைமலர்மாலையானது, வளரும் புயம்-பெருகுகின்றபுயங்களையுடைய, வங்கார் திருமலைப்போடயதுரை=வங்காரு திருமலைப்போடயன் (என்னும்) அரசனானவன், சந்ததமும் போற்றும்=எந்நாளும் வணங்குகின்ற, கார்வளரும் மலர் கூந்தல்=கருமை மிகுந்த பூவையணிந்த கூந்தலையும், களபம் கும்பம் முலை=கலவைச்சாந்தை யணிந்த குடம்போன்ற முலைகளையும், கருணை கயல் கண்=கிருபை (தங்கிய) (சேல்) மீன்போன்ற கண்களையும், செவ்வாய்=சிவப்பாகிய வாயையும் உடைய, சீர் வளரும்=சிறப்பானது வளருகின்ற, சக்காலதேவி பதம்=சக்காலதேவியினுடைய திருவடிகளை, இனிது துதி செய்து வாழ்வாம்=நன்றாகத் தோத்திரஞ் செய்து வாழ்வோம். எ-று.

வங்காரு திருமலைப்போடயன் என்பவர், பாண்டித் திருநாட்டின்கணுள்ள தேன்காசை என்னும் பதியையாண்ட ஜமீன்தாரர். இவர் இப்புராணம் வடமொழியினின்றுந் தமிழில் மொழிபெயர்க்கும்படி கேட்டுக்கொண்டவர்களுள் முக்கியமானவர். இதுகருதியே இந்நாட்டையும் நகரையும் அலங்கரித்துப் பின்னர்க்கூறுகின்றனர். தேன்காசை என்பது மதுரைக்குச் சமீபத்திலுள்ள போடிநாயகனூருக்கு ஓர் பெயரொன்றறிக. (கo)

பெரியாண்டவர் வணக்கம்.

திரியாண்டந் தணந்துமயங் கமரரிடர் தவிர்ந்திடமுன்
செகத்திற் றோன்றி
யரியாண்ட மருமணிப்பீ டிகையேறி மகுடமணிந்
தயோத்தி யென்னும்
புரியாண்ட புனிதன்வங்கார் திருமலைப்போ டயசுமுகன்
புகழ்ந்து போற்றும்
பெரியாண்ட வனைத்தினமு நினைத்தினிய தனைத்துமிகப்
பெற்று வாழ்வாம்.

(இ-ள்.) திரி அண்டம் தணந்து= (அசுரரால் வருந் துன்பத்தி னிமித்தம்) மூன்றுலகங்களையும் (விட்டு) நீங்கி, மயங்கு அமரர் இடர் தவிர்ந்திட= மனமயங்குகின்ற தேவர்களுடைய துன்பமானது நீங்கும்படி, முன் செகம் அத்து இல் தோன்றி=முற்காலத்தில் உலகத்தினிடத்துத் தோன்றி, அரி ஆண்ட மணி மரு பீடிகை ஏறி=சிங்கங்களை சுமக்கும்படி பெற்ற மணிகள் பொருந்திய ஆசனத்தில் ஏறி, மகுடமணிந்து=கிரீடந்தரித்து, அயோத்தியென்னும் புரியாண்ட=அயோத்தி என்கின்ற பட்டினத்தைக் காத்த, புனிதன் வங்கார்திருமலைப்போடய சுமுகன்=பரிசுத்தனாகிய வங்காருதிருமலைப்போடயன் (என்னும்) நல்ல வதனத்தையுடைய அரசனானவன், புகழ்ந்து போற்றும்=தோத்திரஞ்செய்து வணங்குகின்ற, பெரியாண்டவனை தினமும் நினைத்து= பெரியாண்டவனை யெந்நாளும் தியானஞ்செய்து, இனியது அனைத்தும் பெற்று வாழ்வாம்=மேன்மைகள் யாவும் அடைந்து வாழ்வோம். எ - று.

அயோத்தி யென்னும் புரியாண்ட பெரியாண்டவனை, சுமுகன் புகழ்ந்து போற்றும் பெரியாண்டவனை என வினை முடிபுசெய்க. அண்டம் என்பது செய்யுள் விகாரத்தால் (ஆண்டம்) என நீண்டு வந்தது. திரியாண்டம் உலாவுகின்ற அண்டம் எனினும் ஆம். தன்னை யடைந்தோர்க் கினியமுகங்காட்டியருளுதலால் சுமுகன் என்று கூறினர். அசுரர்களைக்கொன்று தேவர்களைக் காத்தலால் அமரரிடர் தவிர்ந்திட என்றார். (கக)

பாதாள வரதராஜர் வணக்கம்.

தருவுமிரு நிதியுமெனத் தருமுபய பதுமகர
　　தலகெம் பீரன்
பருவமதி நயவதன ராசயரா சேந்திரனருள்
　　பாலன் சீல
மருவுசுக வசனவங்கார் திருமலைப்போ டயநிருபன்
　　மகிழ்ந்து போற்றுந்
திருவளரும் பாதாள ராயவர தனைத்தினமுஞ்
　　சிந்தை செய்வாம்.

(இ-ள்.) தருவும் இரு நிதியும் என=(கற்பகமுதலிய) ஐந்து தருக்களையும் இரண்டு நிதிகளையும் போல, தரும்=(தன்னையடைந் திரப்பவர்களுக்கு மாறாது) கொடுக்கின்ற, பதுமம் உபயம் கரதலம் கெம்பீரன்=தாமரைமலர் போன்ற இரண்டு கரங்களையும் வீரத்தையுடையவனும், பருவம் மதி நயம் வதனம்=பூரணச் சந்திரன்போலும் இன்பமுள்ள முகத்தையுடைய, ராசயரா சேந்திரன் அருள் பாலன்=இராசயபோடயன் என்னும் அரசர்க் கரசன் பெற்றருளிய புத்திரனும் (ஆகிய), சீலம் மருவு சுகம் வசனம்=நல்லொழுக்கம் பொருந்திய இன்பமாகிய சொல்லையு முடைய, வங்கார் திருமலைப்போடய நிருபன்=வங்காருதிருமலைப்போடய னென்னு மரசன், மகிழ்ந்து போற்றும்=சந்தோஷித்துத் தோத்திரஞ் செய்கின்ற, திரு வளரும் பாதாளராயவரதனை=தெய்வீகமிருந்த பாதாளராஜவரதனை, தினமும் சிந்தை செய்வாம்=நாள் தோறும் மனனம் செய்வோம். எ - று.

கற்பகமுதலிய ஐந்து தருக்களாவன,—சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம். இரண்டுநிதிகளாவன—சங்கநிதி, பதுமநிதி. (கஉ)

~~~~~~~~

சென்னராஜவரதர் வணக்கம்.

துன்காசை யணிந்தெழுந்த சுடர்முலைச்செந் திருமடந்தை
　　துலங்கு மார்பு
மென்காசை மலரனைய மேனியுந்தண் ணருள்சுரந்த
　　விழியுந் தோன்ற
நன்காசை யதிபன்வங்கார் திருமலைப்போ டயசுமுக
　　னயந்து போற்றுந்
தென்காசை மருவுசென்ன ராயவர தனைப்பணிதல்
　　செய்து வாழ்வாம்.

(இ-ள்.) துன் காசு ஐ அணிந்து எழுந்த=நெருங்கிய மணிகளாலாகிய பூண்களைப்பூண்டு உயர்ந்த, சுடர் முலை செம் திருமடந்தை=ஒளியுள்ள தன
~~~~~~~~

ங்களையுடைய சிவந்த இலக்குமிதேவி யானவள், துலங்கு மார்பும்=விளங்குகின்ற மார்பும், மென் காசை மலர் அனைய மேனிஉம்= மென்மையாகிய காயாமலரை யொத்த திருமேனியும், தண் அருள் சுரந்த விழி உம் தோன்ற=குளிர்ச்சி பொருந்திய கிருபையானது பெருகுகின்ற கண்களும் தோன்றும்படி, நன்கு ஆசைஅதிபன்=நல்ல திசைக்கு தலைவனாகிய இந்திரனையொத்த, வங்கார் திருமலைப்போடய சுமுகன் = வங்காருதிருமலைப்போடய னென்னும் இனிய முகத்தையுடையோன், நயந்து போற்றும் = விரும்பித் துதிக்கின்ற, தென்காசை மருவு=அழகிய காசை யென்னும் திருப்பதியில் எழுந்தருளிய, சென்னராயவரதனை = சென்னராஜவரதனை, பணிதல் செய்து வாழ்வாம்= வணங்குதல் செய்து வாழ்வோம். எ - று. (கரு)

அவை யடக்கம்.

கலிநிலைத்துறை.

சலதரங்கடற் புனல்கவர்ந் துவரினைத் தள்ளி
யுலக மின்புறப் பொழிதல்போ லெளியனே னுரையிற்
சிலகொ டும்பிழை யிருப்பினு மவையெலாந் திருத்திக்
கலைவி ரும்பினர்க் கோதுதல் சான்றவர் கடனே.

(இ-ள்.) சலதரம்=மேகமானது, கடல் புனல் கவர்ந்து = சமுத்திரத்தின் நீரை யருந்தி, உவரினைத்தள்ளி=உப்பையொழித்து, உலகம் இன்பு உற=உலகத்தின்கண்ணுள்ள உயிர்க ளின்பம்பெறும்படி, பொழிதல்போல் =பெய்தலைப்போல, எளியனேன் உரையில்=எளிமையை யுடையேனாகிய எனது பாடலில், சில கொடு பிழை=சில கொடிய குற்றங்கள், இருப்பினும்= இருந்தாலும், சான்றவர்=அறிவானிறைந்தோர்கள், கலைவிரும்பினர்க்கு=கல்வியை விரும்பின மாணுக்கருக்கு, அவையெலாம் திருத்தி=அக்குற்றங்களையெல்லாம் போக்கி (நல்லபாடமாகச்செய்து), ஓதுதல் கடன்=போதித்தல் முறையாம். எ - று.

ஏ- அசை. உலகம் இடவாகுபெயர். உரை பாடலுக் கானமையின் சொல்லாகுபெயர். (கசு)

வரந்தருகடவுள் வாழ்த்துச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

தேவாங்ககுல தேவி சவுடாம்பிகை பாதமே துணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

இரண்டாவது

நலன்றிகழ் பாண்டிநன் னாட்டுச் சருக்கம்.

கலிவிருத்தம்.

உலக மெங்கணு மோங்கு நெடும்புக
ழிலக வின்ப மெவர்க்கு மளித்தெழில்
பலவு நன்குறு பாண்டிநன் னாட்டணி
சிலதெ ரிந்துரை செய்குது நாமரோ.

(இ-ள்.) உலகம் எங்கணும் = எவ்வுலகங்களினும், ஓங்கு நெடு புகழ் = உயர்ந்த பெரிய கீர்த்தியானது, இலக எவர்க்கும் இன்பம் அளித்து = விளங்கும்படி யாவர்க்கும் இன்பத்தைத்தந்து, எழில் பலவும் நன்கு உறு = அழகுகள் பலவற்றையும் குறைவறப்பெற்ற, நல் பாண்டி நாட்டு அணி = நல்ல பாண்டி நாட்டினது அழகினுள், சில = சிலவற்றை, நாம் தெரிந்து உரை செய்குதும் = நாம் ஆராய்ந்து சொல்வோம். எ - று.

அரோ அசை. ஓங்கு நெடு ஒருபொருட்பன்மொழி. உலகம் எனப் பொதுப்படக் கூறினமையால் விண்ணுலக முதலியவு மடங்கின. தேவர்கட்கு விழா யாகமுதலியன செய்யப்படுதலினாலும், எந்நாட்டினு மிக்காடு கல்விசெல்வ மிகுதியுமுடைத்தாயிருத்தலினாலும் நன்னாடென்றார். (க)

காம பால னிறம்பெறு கந்தரந்
தாம மார்விண் டலத்திற் படர்ந்துவா
னாம வேலை நளிர்புன லுண்டுபின்
வாம மால்வடி வங்கொடு மீண்டவே.

(இ-ள்.) காமபாலன் நிறம் பெறு கந்தரம் = பலதேவனுடைய (உடல்) வண்ணத்தைப்போலும் வெண்மை நிறம்பெற்ற மேகங்களானவை, தாமம் ஆர் விண் தலத்தில் படர்ந்து = ஒளி நிறைந்த ஆகாயத்திற பரவிச்சென்று, வான் நாமம் வேலை = பெரிய கீர்த்தியினையுடைய கடலின்கணுள்ள, நளிர் புனல் உண்டு = குளிர்ந்த நீரையருந்தி, பின் = அதன்பின், வாமம் மால் வடிவம் கொடு மீண்ட = அழகினையுடைய திருமாலது (கரிய) வண்ணத்தைப்பெற்றுத் திரும்பின. எ - று.

ஏ அசை. நாமம் வாமம் கடைக்குறை. கொண்டு இடைக்குறை. (உ)

கதிர்த்த நாரங் கடுந்திரை யாலெறிந்
ததிர்த்த வேலை யருந்திய மேகவேந்
தெதிர்த்த கோடை யெனும்பகை வெங்கிட
விதிர்த்த வாளென மின்ன லெழுந்ததே.

(இ-ள்.) கதித்த நாரம் கடு திரையால் எறிந்து=மிகுந்த நீரை வேகமாக அலைகளாகிய கைகளால்வீசி=அதிர்த்தவேலை=ஆரவாரித்தகடலின்கணுள்ள நீரை, அருந்திய மேகம் வேந்து=குடித்த மேகமாகிய அரசனானவன், எதிர்த்த கோடை எனும் பகை வெங்கிட=(தன்னொடு) மாறுபட்ட வேனிற்காலமாகிய பகைவன் புறங்கொடுத்தோடும் விதம், விதிர்த்த வாள் என=அசைத்த வாள்போல,மின்னல் எழுந்தது=மின்னலானதுகிளம்பியது.எ-று.

பலராமன் உடல் வண்ணம் வெண்மை யென்பதற்குப் பிரமாணம். "நிலவொளியாற், சோமனுக்கு நிகரானோன்" எனக்கூறிய பாரதம் சல்லிய பருவம் பதினெட்டாம்போர்ச்சருக்கம். ௧௫௨-ம் செய்யுளாலுணர்க. (௩)

மருவுஞ் சோலை வளம்பெறு காசைவாழ்
திருவங் காரு திருமலைப் போடய
நிருபன் காமர் நிறைமணி முன்றின்மும்
முரசம் போல முழங்கிய கொண்டலே.

(இ-ள்.) சோலை மருவும் வளம் பெறு காசை வாழ்=சோலைகள் சூழ்ந்த செல்வம் பெற்ற காசையென்னும் பதியில் வாழ்கின்ற, திருவங்காரு திருமலைப்போடய நிருபன்=அழகிய வங்காருதிருமலைப்போடயனென்னு மரசனது, காமர் நிறை மணி முன்றில்=பேரழகினையுடைய மணிகளாற் செய்யப்பட்ட முற்றத்தின்கண் முழங்குகின்ற, மும்முரசம்போல கொண்டல் முழங்கிய=மூவகை வாத்தியங்கள்போல மேகங்க ளாரவாரித்தன. எ-று.

மூவகைமுரசமாவன—கொடைமுரசு, ஜெயமுரசு, மணமுரசு எனவிவை. முழங்கிய என்பதில் இன் இடைநிலை கடைகுறைந்துவந்தது. இதனால் வங்காருதிருமலைப்போடயனென்னு மரசனது பெருக்கங்கூறினர். (௪)

திரைநெ டுங்கட லென்னச் சிறந்தபல்
லுரைபெ றுங்கலை யோர்ந்த புலவர்தா
நிரைத ருங்கவி நேர வராகமால்
வரைசெ றிந்து மழைகள் பொழிந்தவே.

(இ-ள்) திரை நெடு கடல் என்ன=அலைகளையுடைய பெரிய சமுத்திரம்போல, சிறந்த பல் உரை பெறும் கலை=சிறப்பினையுடைய பல விலக்கணங்கள் வாய்ந்த நூல்களை, ஓர்ந்த = கற்றுணர்ந்த, புலவர்தாம்=கவிஞர்களானவர், நிரை தரு கவி நேர=(மாறில்லாமல்) ஒழுங்காக (உலகத்தாருக்

குப் பாடிக்) கொடுத்த (நான்குவகைப்) பாடல்களை யொப்பாக, மால் வராக் வனை செறிந்து=பெரிய வராகமலையிற் சேர்ந்து, மழைதாள் பொழிந்த=(மேக ங்கள்) மழைகளைச் சொரிந்தன. எ-று.

நான்குவகைக் கவிகளாவன—ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என் பனவாம். புலவர்கள் மாறுபடுதலின்றிக் கவிகளைக்கொடுத்தல்போலக் காலங்க ளில் மாறுபாடின்றி மழைபெய்தல் கூறப்பட்டதனால் உவமையணி. உலக த்தாருக்குப் பாடியென்ப தெச்சம். உளா காரணவாகுபெயர். (ரு)

கருவி மாமுகில் பெய்து கலித்தவெள்
ளருவி நீதி யறிந்து மனக்களங்
கொருவி வாய்மை யுயர்முடி வேந்தர்தம்
பொருவி லாத புகழிற் பொலிந்தவே.

(இ-ள்.) கருவி மா முகில் = உலகத்திற்குத் துணைக்காரணமாகிய பெருமையுள்ள மேகத்தால், பெய்து கலித்த வெள் அருவி = பெய்யப்பட்டு முழங்கிய வெள்ளிய அருவிகளானவை,நீதிஅறிந்து=செங்கோன்முறையைத் தெரிந்து,மனம் களங்கு ஒருவி=மனக்குற்றம் நீங்கி, வாய்மை உயர்முடி வேந் தர்தம் = உண்மையா லுயர்ந்த முடியை யணிந்த அரசர்களுடைய, பொரு இலாத புகழில் பொலிந்த=ஒப்பில்லாத கீர்த்தியைப்போல (வெண்மையாக) விளங்கின. எ-று.

ஏ அசை. இல் என்னும் ஐந்தனுருபு ஒப்புப்பொருளில் வந்தது. பெய் தென்னுஞ் செய்தெனெச்சம் பெய்யப்பட்டெனச் செயப்பாட்டு வினையெச் சப்பொருளில் வந்தது. புகழின் நிறம் வெண்மை யாதலா லிவ்வாறு கூறினர். உபமானத்திற்குக் குறைவுதோன்றச் சொல்லுதலால் எதிர்நிலையணி. (சு)

மால மேல மலயசம் வேங்கைத
மால மேல மரும்பணை காரகில்
சால மாலந் தரநிமிர் தேக்கொடு
சால மாலந் தருபுனல் சாய்த்ததே.

(இ-ள்.) மாலம் ஏலம் மலயசம் = குங்குமமரம் முதிரைமரம் சந்தன மரம்,வேங்கை தமாலம்=வேங்கைமரம் பச்சிலைமரம், ஏல் அம் அரும்பு அணை கார் அகில்=ஏற்ற அழகிய அரும்புகளையுடைய நெருங்கிய கரிய அகிலும், சா லம் ஆல்=ஆச்சாமரம் ஆலமரம், அந்தரம் நிமிர் தேக்கு ஒடு=ஆகாயமளாவு முயர்ந்த தேக்குமரம் ஆகிய இம்மரங்களுடனே, சாலம்=கடம்புமரத்தையும், மால் அம் தரு புனல் சாய்த்தது=பெருமையுள்ள அழகிய தகுதியாகிய அவ்வ ருவியானது அசைத்துத் தள்ளிக்கொண்டு சென்றது. எ-று.

அரும்பணை யெனப் பதம்பிரித்துப் பெரியகிளையெனக் கோடலுமாம்.

தூல மேயுஞ் சுடர்மருப் பும்பல்சார்த்
தூல மேயுஞ் சுழல்விழிக் கோளரி
கோல மாருமென் குன்றவர் தானைதக்
கோல மாருமென் குங்கொடு சென்றதே.

(இ-ள்.) தூலம் ஏயும் சுடர் மருப்பு உம்பல்=பருமை பொருந்திய வொளியுள்ள கொம்புகளையுடைய யானைகளையும், சார்த்தூலம்=புலிகளையும், ஏயும் சுழல்விழி கோள் அரி=பொருந்திய சுழலுகின்ற கண்களையும் வலிமையுமுடைய சிங்கங்களையும், கோலம் ஆரும் மென் குன்றவர் தானை = அழகினையுடைய மெல்லிய குறவர்களுடைய ஆடைகளையும், தக்கோலம் ஆரும் = தக்கோலமென்னும் வாசனைக்கொடியையும் ஆத்திமரங்களையும், மென் குங்கு ஒடு சென்றது=மெல்லிய குங்கியமரத்துடனே (வாரிக்கொண்டு அவ்வருவியானது) அகன்றது. எ-று.

ஏ - அசை. தக்கோலம் வால்மிளகுக்கொடி எனினுமாம். (௮)

வாட ரும்பல மாமணி காந்தடேன்
வாட ரும்பல மற்றுங் கொடுமருட்
கோட ணிந்த குமரனைப் போற்றிநீள்
கோட ணிந்த குறிஞ்சி கடந்ததே.

(இ-ள்.) வாள் தரும் பல மா மணி=ஒளியைக் கொடுக்கின்ற பலவகைப்பட்ட சிறந்த மணிகளையும், காந்தள் தேன்=காந்தண்மலரையும் தேனையும், வாடு அரும்பலம்=குறைவில்லாத கனிகளையும், மற்றும் கொடு=ஏனைய பொருள்களையும் (வாரிக்) கொண்டு, மருள் கோடு அணிந்த குமரனை போற்றி =(அசுரர்முதலிய பகைவர்) மயங்கும்படி சங்காயுதத்தை யணிந்த முருகக்கடவுளை வணங்கி, நீள் கோடு அணிந்த = பெரிய மலைகளா லலங்கரிக்கப்பட்ட, குறிஞ்சி கடந்தது=குறிஞ்சிநிலத்தினின்றும் (அவ்வருவியானது) நீங்கியது.

மருள்கோடு அணிந்த (காண்போரறியப்படாமையால்) மயங்குகின்ற மலைகளை அழகுசெய்யப்பட்ட எனினுமாம். இவ்வாறு பொருள்கொள்ளுங்கால், நீள்கோடு அணிந்த வென்பதற்கு நீண்ட மிருகங்களின் கொம்புகளை ஆபரணமாகப்பூண்ட வெனப் பொருள்கொள்க. பல மற்றுங்கொடு என்பதற்குப் பலவாகிய ஏனைய பொருள்களையுங் கொண் டெனினுமாம். முருகக்கடவுள் அசுரர் முதலிய பகைவரை வெல்லும்போது பன்னிரண்டு கைகளினுங் கொண்ட வாயுதங்களுள் சங்கமு மொன்றாதலால் 'கோட ணிந்த குமரனை' என்றார்.

ஏ அசை. காந்தள் முதலாகுபெயர். கோடு சினையாகுபெயர். மற்று பிறிதுபொருளில் வந்தது. மணி முத்து முதலிய வொன்பதுவகை மணி. அணியப்பட்டவென்பது செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் படு விகுதி குன்றி அணிந்தவெனச் செய்வினைப்பொருளில் வந்தது. (௯)

சோக மாரஞ் சுகம்பசுந் தோகைய
சோக மாரஞ் சுமந்து நடந்தவ்
வேக மாசுர வேடர் செறிந்துறை
வேக மாசுர மெய்ததவ் வெள்ளமே.

(இ-ள்.) சோகம் ஆர் அம் சுகம்=தொடைபொருந்திய அழகிய கிளிகளையும், பசு தோகை = பசிய மயில்களையும், அசோகம் ஆரம் சுமந்து = வாழையும் கடம்பையும் ஆகிய விலைகளை வாரிக்கொண்டு, அவிவேகம் மாசு உரம்வேடர்=அறிவில்லாத குற்றத்தையும் வலிமையுமுடைய வேட்டுவர்கள், செறிந்து உறை = மிகுந்து வசிக்கின்ற, சுரம்=பாலைநிலத்தில், அ வெள்ளம் வேகமா எய்தது=அந்த அருவியானது விரைவாகச் சென்றது. எ - று.

ஏ அசை. தொடை பறவைகளின் களவரி. அவிவேகம் அதன்மம் என்றாற்போல அ எதிர்மறைப்பொருளில் வந்தது. (௧௦)

தமரங் கோடத் தடம்புனல் வேடுவர்
தமரங் கோட்த் தழைந்து செழுங்குவி
கமருந் தீரக் கணைசிலை வாரிவெங்
கமருந் தீரக் கலந்து சிறந்ததே.

(இ-ள்.) தமரம் கோடு அ தடம் புனல் = ஒலியையும் சங்குகளையுமுடைய அந்த மிக்க அருவியானது, வேடுவர் தமர் அங்கு ஓட தழைந்து= வேடர்கள் சுற்றத்துடனே யங்கு நின்று மோடும்படிப் பெருகி, செழு குலிகம் மரு=செழுமையும் சிவப்பும்பொருந்திய, தீரம் கணை சிலை வாரி=வலிய அம்புகளையும் வில்லுகளையும் வாரிக்கொண்டு, வெம் கமரும் தீர=வெம்மையுள்ள (சில)வெடிப்புகளிலுஞ் செல்லும்படி, கலந்து சிறந்தது=சேர்ந்துமேம்பட்டது.

ஏ அசை. எந்நாளுங் கொல்லுந்தொழி லுண்மையா வீரத்தந் தோய்ந் திருத்தலின் குலிகந்தீரக்கணை யென்றார். கோடு சுழியுமாம். (௧௧)

கொக்க ரித்துக் குலாவு கவுசிகங்
கொக்க ரித்துக் குறிய புருவைமோ
திக்க லைத்துச் செறிபா லோங்குமத்
திக்க லைத்துச் செழுமை புரிந்ததே.

(இ-ள்.) கொக்கரித்து குலாவு கவுசிகம்=கூவியுலாவுகின்ற கோட்டானைத்து, கொக்கு அரித்து=கொக்குகளைக்கொன்று, குறிய புருவை மோதி கலைத்து=சிறிய புருக்களை யடித்தோட்டி, செறி பரல் ஓங்கும்=நெருங்கிய பருக்கைக்கற்களா னிறைந்த, அ திக்கு அலைத்து=அந்தத் திசைகளி லலையும்படி, செழுமை புரிந்தது=இவ்வளப்பஞ் செய்தது. எ - று.

ஏ அசை. அலைத்து சலனப்படுத்தி யெனினுமாம். (௧௨)

வந்த வாரிலை ய ம்பிரஞ் சாய்த்துரா
யந்த வாரியை தாள்ப ணிந் தார்த்துசி
வந்த வாரி வனமகன் றாழிபோல்
வந்த வாரி வளர்புற வுற்றதே.

(இ-ள்.) சிவந்த வாரி வனம் = பெருகிய வெள்ள நீரால், ஆழிபோல் அகன்று = கடல்போல விசாலித்து, வந்த வாரி = வந்தஅருவியானது, அந்தம் வார் இலை ஆம்பிரம் சாய்த்து உராய் = அழகும் நீட்சியும் பொருந்திய மாமரங் களைத் தள்ளித் தேய்த்து, அந்த ஆரியை தாள் பணிந்து = அந்தப் (பாலைநிலத் திற்குரிய) துர்க்கையினுடைய பாதங்களை வணங்கி, ஆர்த்து = ஆரவாரஞ் செய்து, வளர் புறவு உற்றது = உயர்ந்த முல்லைநிலத்தை யடைந்தது. எ - று.

மான கந்தரு மாநிழற் கொன்றைதேன்
மான கந்தரு வம்பயில் வேய்ங்குழ
லான மைந்த வணிகவர்ந் தண்டர்க
ளான மைந்த ரதிர விரைந்ததே.

(இ-ள்.) மால் நகம் தரு மா = பெரிய மலைகள் கொடுத்த விலங்குகளை யும், நிழல் கொன்றை = குளிர்ச்சியுள்ள கொன்றைமரங்களையும், தேன்மான = தேனையொப்ப, கந்தருவம் பயில் = இசைப்பாட்டைச் செய்கின்ற, வேய்ங் குழல் = மூங்கிலாற்செய்யப்பட்ட புல்லாங்குழலையும், ஆன் அமைந்த அணி கவர்ந்து = பசுக்களையும் (தொழில்)முற்றிய ஆபரணங்களையும் வாரிக்கொண்டு, அண்டர்கள் ஆனமைந்தர் = இடையர்களாகிய ஆண்மக்கள், அதிரவிரைந்தது = (உடல்) நடுங்குமாறு முடுகிச்சென்றது அவ்வருவியானது. எ - று. (௧௪)

அம்ப ரம்பணி யம்பக வாய்ச்சிய
ரம்ப ரம்பணி யாடு தொடுத்திடுந்
தும்ப ருந்தயிர் தோற்ற வமுதுத
தும்ப ருந்தயிர் சூறை புரிந்ததே.

(இ-ள்.) அம்பு அரம் பணி அம்பகம் = கணைகளும் அரமும் வணங்கு கின்ற கண்களையுடைய, ஆய்ச்சியர் = இடைச்சியர்களது, அம்பரம் பணி = ஆடைகளையும் ஆபரணங்களையும், ஆடு தொடுத்திடும் தும்பர் = ஆடுகளையும் அவைகளைக் கட்டப்பட்ட தும்புகளையும், உந்து அயிர் தோற்று அ அமுது = உயர்ச்சியாகிய சருக்கரையும் தோன்றிய அந்தப்பாலும், ததும்பு அரு தயிர் = சிந்துகின்ற அரிய தயிரையும், சூறை புரிந்தது = கொள்ளைகொண்டுசென்றது. அவ்வருவியானது. எ - று.

ஏ - அசை. தும்பர் அர் இறுதிப்போலி. (௧௫)

தீதி கழ்ந்த செழுந்தவர் தோய்நதி
தீதி கழ்ந்த திகிரியற் போற்றுபு
மாதி ருந்த வளர்முல்லை தீர்ந்துபொ ன
மாதி ருந்த மருதம் புகுந்ததே.

(இ-ள்.) தீது இகழ்ந்த=குற்றங்களை நிந்தித்து நீங்கிய, செழு தவர்=மாட்சிமையுள்ள மேலோர்கள், தோய்ந்த=முழுகுகின்ற அந்த நதியானது, தீ திகழ்ந்த=நெருப்புப்போலும் விளங்குகின்ற, திகிரியன்போற்றுபு = சக்கராயுதத்தையுடைய திருமாலை வணங்கி, திருந்த வளர் மா முல்லை தீர்ந்து=நன்றாகவளர்ந்த சிறப்பினையுடைய முல்லைநிலத்தினின்று நீங்கி, பொன்மாது இருந்த மருதம் புகுந்தது=திருமகள் வீற்றிருந்த மருதநிலத்திற்சென்றது. எ-று.

ஏ - அசை. செழுமையென்னும் பண்பு தவசிகளுயர்வை விசேடித்து நின்றது. (கசு)

தேங்க ரும்பு திகழ்மகிழ் வாழைமாத்
தேங்க ரும்பு சிறந்த கமுகுதேன்
வாங்க ரும்பல வஞ்சி மருதரி
வாங்க ரும்பல வோங்க மலிந்ததே.

(இ-ள்.) தேங்கு அரும்பு திகழ் மகிழ்=நிறைந்த அரும்புகளால் விளங்குகின்ற மகிழமரமும், வாழை மா=வாழைமரமும் மாமரமும், தேம் கரும்பு=மதுரமுள்ள கரும்பும், சிறந்த கமுகு=நல்ல பாக்குமரங்களும், தேன் வாங்கு அரும் பல வஞ்சி=வண்டுகள் சுற்றிய அரிய பல வஞ்சிக்கொடிகளும், மருது அரி=மருதமரங்களும் நெற்பயிர்களும், வாம் கரும் பல=விண்ணுலகத்தை யளாவிய கரிய பலாமரங்களும், ஓங்க மலிந்தது=மிகுமாறு நிறைந்தது அவ்வருவியானது. எ-று.

வாவும் என்னும் பெயரெச்சம் வாம் என இடை உயிர்மெய் தொகுக்கப்பட்டது. (கஎ)

காவி யப்புறக் கஞ்சங் குவளைமங்
காவி யப்புறக் கானல ரோங்கிட
வாவி முற்று வராஅல்செறி கால்பணை
வாவி முற்று மலிந்ததவ் வாரியே.

(இ-ள்.) காவி அப்பு உறு அ கஞ்சம்=கருங்குவளையும் நீரின்கணுண்டாகிய அந்தத்தாமரைகளும், குவளை=செங்குவளையும், மங்கா வியப்பு உற=கண்டோர் மிக்க வதிசயமடையும்படி, கான் அலர் ஓங்கிட=மணமுள்ளமலர்கள் மிகவும், வாவி=தாவி, முற்று வரால்=முதிர்ந்த வரால்மீன்கள், செறி=நெருங்கிய, கால் பணை வாவி முற்றும்=வாய்க்கால்கள் வயல்கள் குளங்கள் முழுதும், அ வாரி மலிந்தது=அந்த நதியானது நிறைந்தது. எ-று.

உறு மிகுதியுமாம். கான் காடும் ஆம். ஏ அசை. (கஅ)

கலிநிலைத்துறை.

இராக மாமணி குங்குமஞ் சாந்தகி லிலங்கு
மராக மாசறு மைவனந் தேன்றினை யளைபால்
பராக மார்தரு மலர்பல கொடுபடர்ந் திடுமவ்
வராக மார்நதிப் பெருமையா ரிசைத்திட வல்லார்.

(இ-ள்.) இராகம் மா மணி=செம்மைநிறமுள்ள பெரிய மணிகளையும், குங்குமம் சாந்து அகில் = குங்குமமரம் சந்தனமரம் அகில்மரம் ஆகிய இவைகளையும், இலங்கும் அராகம் = விளங்குகின்ற பொன்னையும், ஆசு அறும் ஐவனம்=குற்றமற்ற மலைநெல்லையும், தேன் தினை=தேனையும் தினையையும், அளை பால்=தயிரையும் பாலையும், பராகம் ஆர்தரு=மகரந்தப்பொடி நிறைந்த, பல மலர்கொடு=பலவாகிய மலர்களையும் (வாரிக்) கொண்டு, படர்ந்திடும் = செல்கின்ற, அ வராக மா நதி=அந்தப் பெரிய வராகநதியினுடைய, பெருமை யார் இசைத்திட வல்லார்=மேன்மையைச் சொல்லுதற்கு வல்லவர் யாவர். ஒருவராலு முடியாதென்றபடி. எ - று.

வராகநதி பாண்டிநாட்டி லுள்ள வராகமலையில் உற்பத்தியாகி வருகின்றநதி.— கொண்டு என்பது கொடு என இடைகுறைந்து நின்றது. (௧௯)

எழுதி ரைப்புன லோதையுந் தடம்பணை யெங்கு
முழுதி றத்தினர் துழனியு முயர்குல தெய்வந்
தொழுது வித்துனர் சும்மையுங் குரவையின் றொனியும்
பழுத றத்திக ழெழுபெருங் கடலையும் பழிக்கும்.

(இ-ள்.) திரை எழு புனல் ஓதையும்=அலைக ளுண்டாகின்ற நீரினோசையும், தடம் பணை எங்கும்=விசாலமாகிய வயல்களி னெவ்விடங்களினும், உழு திறத்தினர் துழனியும்=உழுகின்ற திறமையையுடையவரது சத்தமும், உயர்குலம் தெய்வம்=உயர்ந்த குலதேவதையை,தொழுது வித்துனர் சும்மையும்=வணங்கி (விதையை) விதைக்கின்றவர்களுடைய சத்தமும், குரவையின் தொனியும்= (உழத்தியர்பாடுகின்ற) குரவைப்பாட்டினோசையும்,பழுது அற=குற்றமில்லாமல், திகழ் = பிரகாசிக்கின்ற, எழு பெரு கடலையும்=எழுகின்ற பெரிய சமுத்திரத்தையும், பழிக்கும் = நிந்திக்கும். எ - று.

குரவை யாவது உழத்தியர் மருதநிலத்தெய்வத்தை வாழ்த்தும் பாட்டு. எழுகடல் என்பது ஏழு கடலெனக் கோடலுமாம். (௨௦)

கன்னி வாழைமென் கனியுகு தேறலுங் கரும்பு
தன்னில் வார்தரு மதுவுமாப் பலவுமிழ் சாறுந்
துன்னி யேகமழ் மலர்பல பொழிசுவி கையுஞ்சீர்
மன்னி நீள்பணை தொறுந்தொறு நிறைந்துநெல் வளர்க்கும்.

(இ-ள்.) கன்னி வாழை மெல் கனி உகு தேறலும் = இளமையுள்ள வாழையினது மென்மையாகிய பழங்களிலிருந்து சிந்திய தேனும், கரும்புதன்னில் வார்தரு மதுவும்=கரும்பிலிருந்து சிந்திய தேனும், மா பல உமிழ் சாறும் =மாவும் பலாவும் சொரிகின்ற தேனும், துன்னி கமழ் மலர் பல=மிகுதியும் மணம்வீசுகின்ற பலவாகிய மலர்கள்,பொழி சுவிகையும்=சொரிகின்றதேனும், சீர் மன்னி=சிறப்படைந்து, நீள் பணை தொறும்தொறும்=பெரிய வயல்களி

னெவ்விடங்களிலும், நிறைந்து=பெருகி, நெல் வளர்க்கும் = நெற்பயிர்களை வளர்க்காநிற்கும். எ - று.

தொறுந்தொறுமென்னு மடுக்கு மிகுதிப்பொருளை யுணர்த்திநின்றது.

மிகத்த டம்பணை மிடைந்துநன் னடவுசெய் மின்னார்
முகத்தி னங்கெழு சேதகத் துளிபல மொய்த்தல்
மகத்து வந்தரு மருச்செழுங் கமலமென் மலரிற்
சுகச்சு ரும்பினந் தொடர்ந்துசூழ்ந் திருந்தெனத் தோன்றும்.

(இ-ள்.) தடம் பணை மிக மிடைந்து=விசாலமாகிய வயல்களில் மிகவும் நெருங்கி, நல் நடவுசெய் மின்னார்=நல்ல (நாற்றை) நடுகின்ற உழத்தியர்களுடைய, முகத்தின் = வதனங்களில், அங்கு எழு=அவ்விடத்துச் சிதறுகின்ற, சேதகம் துளி பலமொய்த்தல்=சேற்றுத்துளிகள் மொய்த்தலானது, மகத்துவம் தரு=மேன்மையைக் கொடுக்கின்ற, மரு செழு கமலம் மெல் மலரில்=மணமும் கொழுமையுமுள்ள மெல்லிய தாமரைமலரினிடத்து, சுகம் சுரும்பு இனம்=இனிய வண்டுக்கூட்டங்கள், தொடர்ந்து சூழ்ந்து=தொடர்ந்து சுற்றி, இருந்து என தோன்றும்=இருந்தாற்போலக் காணப்படும். எ று.

இருந்தாலென்னும் செயினெச்சம் இருந்தெனச் செய்தெனெச்சமாகத் திரிந்துநின்றது. (உஉ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திரள்புய சயில வங்கார் திருமலைப் போட யேந்திர
புரவலன் றமிழ்வல் லோர்க்குப் பொருந்துற நிதிய நல்குங்
கரதல மெனவி ரிந்த கமலமென் முகம லர்ந்து
வரவரச் சுரும்பர் கட்கு மாறுது மதுவ ழங்கும்.

(இ-ள்.) திரள் சயிலம் புயம் = திரண்ட மலைபோலும் புயங்களையுடைய, வங்கார் திருமலைப்போடய இந்திர புரவலன் = வங்காருதிருமலைப்போடயனுகிய (செலவத்தில்) தேவராசனைப்போன்ற அரசனுனவன், தமிழ் வல்லோர்க்கு=தமிழில் வல்ல புலவர்களுக்கு, பொருந்துற=நிரம்புமாறு, நிதியம் நல்கும் கரதலம் என=பொருளைக்கொடுக்கின்ற கையைப்போல, விரிந்த கமலம்=மலர்ந்த தாமரைகளானவை, மென் முகம் மலர்ந்து = மென்மையாகிய முகம் விரிந்து, சுரும்பர்கட்கு=வண்டுகளுக்கு, வரவர = வரும்போதெல்லாம், மாறுது=தவிராமல், மது வழங்கும்=தேனைக்கொடுக்கும் எ - று.

வரவர இவ்வடுக்கு இடைவிடாமைப் பொருளது. (உ௩)

வியன்றிகழ் பழனந் தோறும் விளைந்துள பருவ நாடிக்
குயங்களாற் கொய்து சும்மை குவடென வனேகம் வேய்ந்து
செயம்புனை கரும்ப கட்டாற் றெழித்துவை நீத்தெல் லோரு
நயம்புரி வளவு தோறு நன்னரிற் றுகுப்ப ரன்றே.

(இ-ள்.) திகழ் வியன் பழனந்தோறும்=விளங்குகின்ற விசாலமாகிய வயல்களெவற்றினும், விளைந்து உள—ளவும் நாடி—தானியமுதிர்ந்துள்ள காலமறிந்து, குயங்களால் கொய்து=அரிவாள்களாலறுத்து, சும்மை = நெற்போரை, அனேகம் குவடு என வேய்ந்து = அளவில்லாத மலை யென்னும்படி போட்டு, செயம் புனை கரு பகட்டால்—வெற்றியுடைய கரிய எருமைக்கடாக்களால், தெழித்து= துவைப்பித்து, வை நீத்து=வைக்கோலை நீக்கி, எல்லோரும் =(அந்நாட்டிலுள்ள) யாவரும், நயம் புரி=(அடைந்தவர்களுக்கு) உபசாரஞ் செய்கின்ற, வளவு தோறும்=(தங்கள்) வீடுகளிலெல்லாம், நன்னாளில் தொகுப்பர்=நல்லகாலத்தில் (கொண்டு) சேர்ப்பார்கள். எ - று.

அன்று ஏ - அசைகள். தோறும் இடப்பன்மை. [தெழித்துறு பலால நீத்த — பயன்கெழு விரீகி பல்லோர் பண்டியிற் றொகுப்ப ரன்றே] எனவும் பாடம். (இதன்பொருள்.) தெழித்து உறு பலாலம் நீத்த= துவைப்பித்து மிக்கவைக்கோலை நீக்கிய, பயன் கெழு=பயனுள்ள, விரீகி=நெல்லை, பண்டியில்=வண்டிகளிலேற்றி, பல்லோர்=பலரும், தொகுப்பர்=(வீட்டிற்கொண்டு போய்)ச் சேர்ப்பார்கள். (௨௪)

தடந்தொறு மெகினங் கஞ்சத் தவிசில்வீற் றிருக்குங் காவி
னிடந்தொறுங் குயில்வில் வேளை யிசையினு லினித ழைக்கு
மடந்தொறும் பலவ றங்கள் வழங்குறு மாதர் தெண்ணீர்க்
குடந்தொறும் வளைகள் சென்று கொழுமணி யுயிர்க்கு மாதோ.

(இ-ள்.) தடம் தொறும்=தடாகங்களினெவ்விடங்களினும், எகினம்—அன்னப்பறவைகள், கஞ்சம் தவிசில்= தாமரையாசனத்தில், வீற்று இருக்கும் =அமர்ந்திருக்கும், காவின் இடம்தொறும்=சோலைகளி னெவ்விடங்களினும், குயில்=குயில்களானவை, வில் வேளை=(கரும்பு) வில்லையுடைய மன்மதனை, இசையினுல்=பாட்டின் கீதத்தினலே, இனிது அழைக்கும்=களிப்புடனே கூப்பிடும், மடம் தொறும்=சத்திரங்களிலெவ்விடத்தும், பல அறங்கள் = (அன்னமிடுதல் முதலிய) பல தர்மங்களானவை, வழங்குறும் = கொடுக்கப்படும், மாதர்=பெண்களெடுத்துப் போகின்ற, தெள் நீர்குடம் தொறும் = தெளிவாகிய நீர்க்குடங்களிலெல்லாம், வளைகள்=சங்குகளானவை, சென்று =அந்நீரோடு சென்று, கொழு மணி=செழுமையாகிய முத்துகளை, உயிர்க்கும்=பெறும். எ - று.

மாது ஓ - அசைகள். (௨௫)

விளரிமென் சுரும்பர் காவின் மிடைந்தபன் மலர்க ளூடோறு
முளரி தரு மகரந் தங்க ளூற்றவங் கிலமனைத்துந்
தளமலி கற்ப கப்பூந் தாமவா சித்தர் வாழு
நளமுறு கிரணப் பைம்பொன் னாட்டினு நலம்பெற் றோங்கும்.

(இ-ள்.) விளரிமென் சுரும்பர் = செய்தநிலைப் பண்ணைப்பாடுகின்ற மென்மையாகிய வண்டுகளானவை, காவின்=சோலைகளில், மிடைந்த=நெரு

ங்கிய, பல் மலர்கள் தோறும் = பலவாகிய பூக்களிலெல்லாம், உளர் தரு = கிண்டிய, மகரந்தங்கள் = பூந்தாதுகள், உற்ற = சிந்திய, அ நிலம் அனைத்தும் = அந்தப் பூமியெல்லாம், தளம் மலி = இதழ்கணிறைந்த, கற்பகம் பூ தாமம் = கற்பகப் பூமாலையையணிந்த, ஆதித்தர் வாழும் = தேவர்கள் வாழ்கின்ற, நளம் உறு = சிற்ப நூல் வழியமைந்த, கிரணம் = ஒளியுள்ள, பை பொன்னுட்டினும் - பசுமையாகிய பொன்னுலகத்தினு மதிகமாக, நலம் பெற்று = வளங்கொண்டு, ஓங்கும் = உயர்ந்திருக்கும். எ - று.

சுரும்பர் இறுதிப்போலி. (உசு)

நாடெலாஞ் செந்நெல் காவி னடுவெலாங் கமல வாவி
மாடெலாந் துகிர்வா யன்னம் வரம்பெலாம் விளைந்த சொன்னங்
காடெலா மயிலி னட்டங் கரும்பெலா மணியி னீட்டம்
வீடெலாந் திருமென் கோதை வெளியெலா முரச வோதை.

(இ-ள்.) நாடு எலாம் = ஊர்களிலெல்லாம், செம் நெல் = செம்மை நிறமுள்ள நெற்பயிர்களின் மிகுதி, காவின் நடு எலாம் = சோலைகளின் நடுவிடங்களிலெல்லாம், கமலம் வாவி = தாமரைத்தடாகங்களின் மிகுதி, மாடு எலாம் = பக்க விடங்களி லெல்லாம், துகிர்வாய் அன்னம் = பவளம்போலும் வாயினையுடைய அன்னப்பறவைகளின் மிகுதி, வரம்பு எலாம் = வழிகளிலெல்லாம், விளைந்த சொன்னம் = விளைந்த பொன் மிகுதி, காடு எலாம் = வனங்களெவ்விடத்தும், மயிலின் ஆட்டம் = மயிற் பறவைகளினுடைய ஆட்டமிகுதி, கரும்பு எலாம் = கரும்புகளிலெல்லாம், மணியின் ஈட்டம் = முத்துகளின் மிகுதி, வீடுஎலாம் = மனைகளி னெவ்விடங்களிலும், திருமென் கோதை = இலக்குமியாகிய மென்மை பொருந்திய பூமாலையை யணிந்த பெண்களின் மிகுதி, வெளி எலாம் = புற விடங்களிலெல்லாம், முரசம் ஓதை = பேரிகைகளின் முழக்கமிகுதி. எ - று.

ஈட்டம் என்பது முன்னும் பின்னும் சென்று பொருள் படுதலினால் இது இடைநிலைவிளக்கணி. (உஎ)

மாவெலாங் குயில்கள் பாடும் வயலெலா மதுவா றோடுங்
காவெலாங் கவிகள் பாயுங் கரையெலாம் வளைகண் மேயும்
பூவெலாஞ் சுரும்பர் மன்னும் புறமெலாங் கமுகு துன்னும்
பாவெலா மிரதந் தேங்கும் பரம்பெலாங் குவளை யோங்கும்.

(இ-ள்.) மா எலாம் = மாமரங்களிலெல்லாம், குயில்கள் பாடும் = குயிற்பறவைகள் பாடிக்கொண்டிருக்கும், வயல் எலாம் = வயல்களிலெல்லாம், மது ஆறு ஓடும் = தேனருவி (பெருகி)ச் செல்லும், கா எலாம் = சோலைகளிலெல்லாம், கவிகள் பாயும் = குரங்குகள் பாயும், கரைஎலாம் = வரம்புகளிலெல்லாம், வளைகள் மேயும் = சங்கங்கள்மேயும், பூ எலாம் = பூக்களிலெல்லாம், சுரும்பர் மன்னும் = வண்டுகள் மொய்த்துக்கொண்டிருக்கும், புறம் எலாம் = வெளிப்ப

க்கமெல்லாம், கமுகு துன்னும்=பாக்குமரங்க ணிறைந்திருக்கும், பா எலாம் =(புலவர்கள் பாடுகின்ற) பாடல்களிலெல்லாம், இரதம் தேங்கும்=(எழுத்து முதலிய விலக்கண) இனிமை நிறைந்திருக்கும், பரம்பு எலாம்=வயல்களெல்லாவிடத்தும், குவளை ஓங்கும்=நீலோற்பலமலர்க ணிறைந்திருக்கும். எ-று.

பணிமுடி மிசைப்பொ றுத்த பவளவாய்க் கரிய கூந்தற்
றிணிவரைக் களபக் கொங்கைச் சிலைநுதற் புவிம டந்தைக்
கணிபுனை பாண்டி நாடோ ராரமா மதின் வயங்கு
மணியென வளர்தென் காசை மாநகர் வளமை சொல்வாம்.

(இ-ள்.) பணி=ஆதிசேடனானவன், முடிமிசை பொறுத்த=தன்னுடைய தலையில் சுமந்த, பவளம் வாய்=பவளம்போலும்வாயினையும், கரிய கூந்தல் = கருமையாகிய கூந்தலையும், திணி வரை = வலிய மலைபோலும், களபம் கொங்கை=கலவைச்சாந்தை யணிந்த முலைகளையும், சிலை நுதல்=வில்லைப்போன்ற புருவங்களையும் உடைய, புவிமடந்தைக்கு=பூமிதேவிக்கு, அணி புனை பாண்டிநாடு=அழகுபொருந்தியபாண்டிநாடானது,ஓர் ஆரம் ஆம்=ஒரு ஆரமாகும், அதின் வயங்கும்=அவ்வாரத்தில் விளங்குகின்ற, மணி என=இரத்தினம்போல, வளர் தென்காசை=(செல்வம்) பெருகுந் தென்காசையென்னும், மாநகர்=பெரிய பட்டினத்தினுடைய, வளமை சொல்வாம்=வளப்பத்தைச் சொல்லுவோம். எ-று. (உசு)

நலன்றிகழ்பாண்டிநன் னாட்டுச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் உ-க்கு பாடல் சஉ.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை துணைத்தா ணே.

சிவமயம்.

சவுடேஸ்வரிசகாயம்.

மூன்றாவது

வளர்தென்காசை வளம்பதிச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

திருவ யங்கிய செழுமலர் செறிந்தநீ ரகழும்
பொருவி கந்தபொற் புரிசையும் பொலிதரு தோற்றங்
கருது வெண்டிரை யெழுந்ததிர் பெரும்புறக் கடலு
முருந லங்கெழு திகிரிமால் வரையுமொத் துளதால்.

(இ-ள்.) திரு வயங்கிய=இலக்குமி விளங்கிய, செழு மலர்=செழுமையாகிய தாமரைமலர்கள், செறிந்த=மிகுந்த, நீர் அகழும்=நீரையுடைய அகழும், பொருவு இகந்த=ஒப்பில்லாத, பொன் புரிசையும்=அழகியமதிலும், பொலிதரு தோற்றம்=விளங்குகின்ற காட்சியானது, கருது வெண் திரை=எண்ணுகின்ற வெள்ளிய அலைகளானவை, எழுந்து அதிர்=எழுந்து முழங்குகின்ற,பெரும்புறக்கடலும்-பெரும்புறக்கடலையும்,உரு நலம் கெழு - வடிவுநன்மைபொருந்திய, மால் திகிரி வரையும்=பெரிய சக்கரவாளமலையையும், ஒத்து உளது=நிகர்த்தது. எ - று.

ஆல் - அசை. திருவயங்கிய அழகுவிளங்கிய எனவும், பொற்புரிசை பொன்னாற் செய்யப்பட்ட மதில் எனவும் பொருள்கோடல் பொருந்தும். பெரும்புறக்கடல் என்பது எழு சமுத்திரங்களுக்கும் வெளிப்பக்கத்துள்ளது.

ஆம்ப லம்புயங் குவளையவ் வகழ்செறி காட்சி
தேம்ப யின்றசொற் காசைமங் கையர்செழுஞ் செவ்வாய்
மேம்ப டுங்கதிர் மாமுகம் விழிக்கெதிர் வெள்கித்
தாம்ப டர்ந்தநீர் புகுந்தன வாமெனத் தகுமால்.

(இ-ள்.) ஆம்பல் அம்புயம் குவளை=செவ்வல்லியும் செந்தாமரையும் கருங்குவளையும், அ அகழ் செறி காட்சி = (மேற்கூறிய) அந்த அகழியில் நெருங்கிய தோற்றமானது,தேம் பயின்ற சொல்=தேன்போலும் இனிமையாக வசனிக்கப்பட்டமொழிகளையுடைய,காசைமங்கையர்-தென்காசையென்னும் பதியில்வாழ்கின்ற பெண்களுடைய, செழு செவ்வாய்=அழகிய சிவந்தவாயும், மேம்படு கதிர் மா முகம் - மேன்மையுண்டாகிய வொளியுள்ள சிறந்த முகமும், விழி=கண்களும் (ஆகிய) இவைகளுக்கு,எதிர் வெள்கி=எதிரேயிருக்க வெட்க

மடைந்து, தாம்=அம்மலர்களானவை, படர்ந்த நீர்=பரவிய நீரினுள், புகுந்தன ஆம் என தகும்=புகுந்துகொண்டனவென்று சொல்லப்படும். எ - று.

செவ்வல்லி முதலியன நீரிலிருப்ப தியற்கையாக, செவ்வாய் முதலிய உறுப்புகளவை நீரிற்புகக் காரணமாகக் கூறினமையால் இது ஏதுத்தற்குறிப் பணி. (உ)

ஆர்ப்ப ருதநீ ளகழ்செறி நன்னக ரணிக்கு
நீர்ப்ப யோதர வாகனன் வளம்பதி நிகரோ
பார்ப்ப மினி யென்றுவிண் புகுந்துள படிபோற்
சீர்ப்பன் மாமணிக் கனககோ புரநிரை திகழும்.

(இ-ள்.) ஆர்ப்பு அறுத=ஒலி நீங்காத, நீள் அகழ் செறி=பெரிய அகழானது சூழ்ந்த, நல் நகர்=நல்ல நகரானது, அணிக்கு=(தன்) அழகினுக்கு, நீர் பயோதரம் வாகனன்=நீரைப்பெய்கின்ற மேகவாகனத்தையுடைய இந்திரனது, வளம் பதி=வளப்பத்தையுடைய அமராவதிப்பட்டணமானது, நிகரோ=(நமக்குச்) சமானமாகுமோ, நாம் பார்ப்பம் இனி என்று=நாம் பார்ப்போமினியென்று, விண் புகுந்துள படிபோல்=ஆகாயத்தில் சென்ற தன்மைபோல, சீர் பல் மா மணி=சிறந்த பலவாகிய பெரிய இரத்தினங்களாலும், கனகம்=பொன்னாலுமியற்றப்பட்ட, கோபுரம் நிரை திகழும்=கோபுரவரிசைகள் விளங்கும். எ - று. (ங)

திங்க ளங்கதிர் நிகர்தரு வெண்சுதை தீற்றி
பொங்கு பன்மணிப் பூரண கும்பமேற் பொருந்தி
மங்கு லின்புரந் தைவரு விலோதன மலிந்து
துங்க நன்குயர் மாடமெங் கணுமிகச் சூழும்.

(இ-ள்.) திங்கள் அம் கதிர் நிகர்தரு=சந்திரனுடைய அழகிய காந்தியையொத்த, வெண் சுதை தீற்றி=வெண்மையாகிய சுண்ணச்சாந்தைப் பூசி, பொங்கு பல் மணி=விளங்குகின்ற பலமணிகளாற்செய்யப்பட்ட, பூரணகும்பம்=நிறைகுடங்கள், மேல் பொருந்தி =மேலேவைக்கப்பட்டு, மங்குலின் புரம் தைவரு=மேகங்களினுடம்பைத் தடவுகின்ற, விலோதனம் மலிந்து=துகிற்கொடிகள் நிறுத்தப்பட்டு, துங்கம் நன்கு உயர்= மேன்மையுநன்மையுமிகுந்த, மாடம்=மண்டபங்கள், எங்கணும் மிக சூழும் = எவ்விடங்களினுமிகவுஞ் சூழ்ந்து விளங்கும். எ - று. (ச)

மாடம் மாளிகை எனினுமாம்.

முல்லை மென்முகை யனையவெண் ணூல்பா யசம்பால்
சொல்ல ருந்துவை கருனைமுப் பழந்ததி சுகிர்தம்
பல்வி தம்பெறு பூபமு மினிதுபா லிக்கும்
கல்வ றம்புனை சாலைக ளெண்ணில நகுமால்.

(இ-ள்.) முல்லை மெல் முகை அனைய=முல்லையினது மென்மையாகிய அரும்புகளையொத்த, வெண் மூரல்=வெள்ளிய சோறும், பாயசம்=பாற்சோறும், பால்=பாலும், சொல் அரு துவை=சொல்லற் கருமையாகிய புளிக்கறியும், கருனை=பொரியலும், முப்பழம் ததி சுகிர்தம்=மூன்றுவகைக் கனிகளும் தயிரும் நெய்யும், பல்விதம் பெறு பூபமும்=பலவகைப்பட்ட பணியாரங்களும், இனிது ஈவிக்கும்=மகிழ்ச்சியுடன் கொடுக்கின்ற, நல் அறம் புனை=நல்ல தருமத்தை யுடைய, சாலைகள்=தருமசத்திரங்கள், எண் இல நகும்=அளவில்லன விளங்கும். எ - று.

மூவகைக்கனிகளாவன,—வாழைக்கனி மாங்கனி பலாக்கனி. (ரு)

மதகயந்துர கதமணிச் சிவிகைவான் கவிகை
கதழ்செ ழுங்கதிர்க் கனகவா பரணநற் கலிங்க
முதல னந்தமேற் பவர்மனம் விருப்புற முறையின்
நிதநி தந்தரு சாலைக ளெண்ணில நெருங்கும்.

(இ-ள்.) மதம் கயம்=மூன்றுமதங்களையுடைய யானைகளும், துரகதம்=குதிரைகளும், மணி சிவிகை=மணிகளாற்செய்யப்பட்ட பல்லக்குகளும், வான் கவிகை=பெரியகுடைகளும், கதழ் செழு கதிர்=மிகுதியாகிய செழித்த கிரணங்களையுடைய, கனகம் ஆபரணம்=பொன்னணிகளும், நல் கலிங்கம்=நல்ல ஆடைகளும், முதல் அனந்தம்=(ஆகிய இவை) முதலாக அளவில்லாத பொருள்களை, ஏற்பவர் மனம் விருப்பு உற=இரப்பவருடைய மனமகிழும்படி, முறையின்=முறைமையாக, நிதம்நிதம்=எந்நாளும், தரு=கொடுக்கின்ற, சாலைகள் எண் இல=தருமசத்திரம் அளவில்லாதன, நெருங்கும்=மிகுந்திருக்கும். எ - று.

நிதம் நிதம் இவ்வடுக்கு நீங்காமைப் பொருளது. மும்மத மாவன,—கன்னமதம் கபோலமதம் கோசமதம். (சு)

பிணைவு றும்பல பேதொரீஇப் பெருங்கழை மதவேள்
கணையு மங்கையர் கணையுமூ தறிவினாற் கடிந்து
பணைத டந்தனக் கவுரியோர் பாதிய பாதத்
துணைவி ரும்பினர் தூய்மட மெண்ணில சூழும்.

(இ-ள்.) பிணை உறும்=(விடயங்களில்) பற்றுகின்ற, பல பேது ஒரீஇ=பலவாகிய மதிமயக்கத்தை நீக்கி, பெரு கழை மதவேள்=பெரிய கரும்பு வில்லையுடைய மன்மதனது, கணையும் (ஐந்து) மலரம்புகளையும், மங்கையர் கணையும்=பெண்களுடைய விழிகளால்வருந் துன்பங்களையும், மூது அறிவினால் கடிந்து=பேரறிவினால் விலக்கி, பணை தடம் தனம்=பெருத்தவிசாலமாகிய முலைகளையுடைய, கவுரி ஓர் பாதியன்=பார்ப்பதிதேவியாரை ஒருபாகத்தில் உடையவராகிய சிவபெருமானுடைய, துணை பாதம்=இரண்டுதிருவடிகளையும், விரும்பினர்=விரும்பி யொழுகுகின்ற பெரியோர்கள் (வசிக்கின்ற,

தூய் மடம்=பரிசுத்தமாகிய மடங்கள், எண் இல சூழும்=அளவில்லன சூழ்ந்திருக்கும். எ - று.

கணையும் தொகுத்தல்விகாரம். (எ)

ஓம சாலையும் யாகசா லையுமுணர்ந் துயர்ந்தோர்
நேம சாலையு நடனசா லையுநிறை கல்வி
வாம சாலையும் படைபயில் சாலையு மதனக்
காம சாலையுங் கனகசா லையுங்கதித் திலங்கும்.

(இ-ள்.) ஓமசாலையும்=(நித்தியம்)வோமஞ்செய்கின்ற மண்டபங்களும், யாகம் சாலையும்=வேள்விகள்செய்கின்ற மண்டபங்களும், உணர்ந்து உயர்ந்தோர்=(நூல்களைக்) கற்று மேம்பட்ட பெரியோர்கள், நேமம் சாலையும்=யோகஞ் செய்கின்ற மண்டபங்களும், நடன சாலையும்=(விலை) மாதர்கள் நிருத்தஞ்செய்கின்ற மண்டபங்களும், நிறைகல்வி=நிறைந்த கல்விபயில்கின்ற, வாமம் சாலையும்=அழகிய மண்டபங்களும், படை பயில் சாலையும்=(ஆடவர்கள்) ஆயுதப்பயிற்சி செய்கின்ற மண்டபங்களும், மதன் அ காமசாலையும் = மன்மதனுடைய அந்தக் காமநூலைப்பயில்கின்ற மண்டபங்களும், கனகம்சாலையும்=(இரப்போருக்குப்) பொன்னைக்கொடுக்கின்ற மண்டபங்களும், கதித்து இலங்கும்=மிகுந்து விளங்கும். எ - று. (அ)

திருகு வெஞ்சினக் கயம்பல செறிந்தபந் திகளும்
வருக டுங்கதிக் கலினவாய்த் துரங்கமந் திரமு
மருவி கொண்டவெற் பெனத்துகிற் கொடிகொடே ரணியும்
பொருவ ருஞ்சின கரங்களு மெண்ணில பொலியும்.

(இ-ள்.) திருகு வெம்சினம்—வஞ்சனையும்,கடுமையாகிய கோபத்தையுமுடைய, கயம் பல செறிந்த= யானைகள் பல நெருங்கிய, பந்திகளும் = சாலைகளும், வரு கடும் கதி=(தாவி) வருகின்ற வேகமாகிய (ஐங்) கதிகளையுமுடைய, கலினம் வாய்=கடிவாளத்தை வாயிலணியப்பட்ட, துரங்கம் மந்திரமும் = குதிரைச்சாலைகளும், அருவி கொண்ட வெற்பு என் = அருவிகளையுடைய மலைகள்போல, துகில் கொடி கொள்=சீலைக்கொடிகளைக் கொண்ட, தேர் அணியும்=தேர் வரிசைகளும், பொருவு அரு=ஒப்பில்லாத, சினகரங்களும் = (தேவர்) ஆலயங்களும், எண் இல பொலியும்=அளவில்லாதவை விளங்கும். எ - று.

ஐங்கதியாவன,—மல்லகதி மயூரகதி வானரகதி சரகதி முயல்கதி. (௯)

கொம்மை வாண்மணி மாடமீ தாடிய கொடிகள்
வெம்மை கூர்தரு முலோபிகள் பாற்செல வேண்டா
செம்மை நூல்பல தேர்ந்துளீ ரெம்மிறை திருமுன்
வம்மி னீவிரென் றழைத்தென நிரைநிரை வயங்கும்.

(இ-ள்.) கொம்மை வாள் மணி=திரண்ட வொளியுள்ள மணிகளாற் செய்யப்பட்ட,மாடம் மீது=மாளிகைகளின்மேல், ஆடிய கொடிகள்=அசைந்த கொடிகளானவை, வெம்மை கூர்தரும்=வெப்பமிகுந்த, உலோபிகள்பால்=ஈயாமைக்குணமுடையோரிடத்து, செல வேண்டா-போகவேண்டுவதில்லை, செம்மை நூல் பல=செம்மையாகிய பல கலைகளையும், தேர்ந்துளீர்=ஆராய்ந்தறிந்த புலவர்களே,எம் இறை=எங்களுடைய (வங்காருதிருமலைப்போடய னென்னும்) அரசனுடைய, திருமுன்=சமுகத்துக்கு, வம்மின் நீவிர் என்று=வாருங்கள் நீங்களென்று, அழைத்தென = அழைத்தாற்போல, நிரை நிரை வயங்கும்=வரிசைவரிசையாக விளங்கும். எ-று.

நிரைநிரை இவ் வடுக்கு மிகுதிப்பொருள். துகிற்கொடிகளசைதலைப் புலவரை யழைப்பதாகக்கூறினமையால் இது தற்குறிப்பணி. (௧௦)

வாணி லாமணி மேனிலை தொறுமட மாதர்
பூணி னீள்செழும் பூங்குழற் கூட்டகிற் புகையைச்
சேணி லார்கரும் புயலென மதித்துவான் சிலம்பிற்
பேணி வாழ்பசுந் தோகைமென் மயினடம் பெயரும்.

(இ-ள்.) வாள் நிலாமணி—ஒளியுள்ள சந்திரகாந்தக்கற்களாற்செய்த, மேல் நிலை தொறும்=மேல்வீடுகளி னெவ்விடங்களிலும், மடம் மாதர்=இளமையுள்ள பெண்களானவர்,பூணின்=ஆபரணங்களையும், செழு பூ=செழுமையுள்ள பூக்களையும் அணிந்த, நீள் குழற்கு=நீண்டகூந்தலுக்கு, ஊட்டு அகில் புகையை=புலரும்படி யுண்பிக்கின்ற அகில்புகையை, சேணில் ஆர்=ஆகாயத்தில் நிறைந்த, கரு புயல் என=கரியமேகமென்று, மதித்து=நினைத்து, வான் சிலம்பில்=பெரிய மலைகளில், பேணி வாழ்=விரும்பி வாழ்கின்ற, பசு தோகை மெல்மயில் = பசுமையாகிய இறகுகளையுடைய மென்மையானமயிற்பறவைகளானவை, நடம் பெயரும்=நடனஞ்செய்யும். எ-று.

புகையை மேகமென மயங்கினமையால், இது மயக்கவணி. (௧௧)

இந்து காந்தவெண் டகட்டினு லிழைத்தசெய் குன்றிற்
பந்து வாரிளம் பயோதர வனிதையர் பயில
வந்து சேர்தொறு மவர்முக மதியென மதித்துச்
சிந்து நீர்கரும் பரம்பைசூழ் பொழிற்கெலாஞ் செலுமால்.

(இ-ள்.) இந்து காந்தம்=சந்திரகாந்தச்சிலைகளாலும், வெள் தகட்டினுல்=வெண்மையாகிய தகடுகளாலும், இழைத்த செய்குன்றில்=அமைக்கப்பட்ட செய்கைமலையின்கண், வார் இளம் பயோதரம் வனிதையர்=இரவுக்கையையணிந்த இளமுலைகளையுடைய பெண்களானவர், பந்து பயில=பந்து விளையாட, வந்து சேர் தொறும்=வந்துகூடும்போதெல்லாம், அவர் முகம் = அப்பெண்களுடைய வதனங்களை, மதி என மதித்து=சந்திரனென்றெண்ணி, சிந்து நீர்=பொழிகின்ற சலமானது, கரும்பு அரம்பை=கரும்பிற்கும் வாழைக்

கும், சூழ்பொழிற்கு = சுற்றிய சோலைகளுக்கும், எலாம் = ஆகிய எல்லாவற்றிற்கும், செலும் = சென்று வளர்க்கா நிற்கும். எ - று. (௧௨)

வார்க்கு லம்புரி முரசமெம் மறுகினு மலிதல்
கார்க்கு லங்களை நோக்கியிந் நகருளார் கரத்தின்
சீர்க்கு மின்னனார் குழற்குநீர் சிறிதுமொவ் வீரென்
றார்க்கு மோதைபோ னிருந்தன தினந்தொறு மன்றே.

(இ-ள்.) வார் குலம் புரி = தோல்வார்களாற் கட்டப்பட்ட, முரசம் = பேரிகைகளின் முழக்கமானவை, எ மறுகினும் மலிதல் = எந்த வீதிகளிலுமிகுதலானது, கார் குலங்களை நோக்கி = மேககூட்டங்களைப்பார்த்து, இ நகர் உளார் இந்தப்பட்டணத்திலுள்ளவர்களுடைய, கரத்தின் சீர்க்கும் = கைகளினீகைச் சிறப்பினுக்கும், மின் அனார் = மின்னலையொத்த பெண்களுடைய, குழற்கும் - கூந்தற்கருமைக்கும், நீர் = நீங்கள், சிறிதும் ஒவ்வீர் என்று = அற்பமாயினும் ஒப்பாகமாட்டீர்களென்று, ஆர்க்கும் ஓதை போன்று = சப்திக்கின்ற ஓசையையொத்து, தினந்தோறும் இருந்தன = நாடோறுமிருந்தன. எ - று.

அன்று, ஏ அசைகள். உபமான தருமத்தால் உபமேயங்களுக்கு ஈகையும், கருமையும் வருவிக்கப்பட்டன. (௧௩)

தரள பந்தர்க டழைந்துமா மணிநிரை தயங்கிக்
கிரண தந்தமென் சாந்தகில் குங்குமங் கெழுமிக்
குரவை யுஞ்சரி யலவென வொலிகுடி கொண்டு
திரள்வ ளம்பல சிறந்தவா வணம்பல செறியும்.

(இ-ள்.) தரளம் பந்தர்கள் = முத்துக்களா லலங்கரிக்கப்பட்ட பந்தல்கள், தழைந்து = செழித்து, மா மணி நிரை தயங்கி = சிறந்த இரத்தினங்களினிராசிகள் விளங்கி, கிரணம் தந்தம் = காந்தியுள்ள (விலங்குகளின்) கொம்புகளும், மெல் சாந்து = மென்மையாகிய சந்தனமரமும், அகில் குங்குமம் கெழுமி = அகிலும் குங்குமமும் பொருந்தி, குரவையும் சரி அல என = சமுத்திரமும் ஒப்பல்லவென்னும்படி, ஒலி குடி கொண்டு = ஓசையானது மிகுந்து, திரள் வளம் பல சிறந்த = மிகுந்த வளப்பங்கள் பலவற்றானு மேம்பட்ட, ஆவணம் அணி செறியும் = கடைவீதிகளானது அழகுமிகும். எ - று.

தரளப்பந்தர் இது செய்யுள் விகாரத்தாற் பகரமெய் தொகுக்கப்பட்டது. (௧௪)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மலைதரு பொருளுங் கானில் வருதிர வியமு நாட்டி
னிலைபெறு பொருளு மின்ப நிறைநகர்ப் பொருளு நீடு
மலைகடற் பொருளும் யாவு மமைந்தவா வணங்க ணீங்காச்
சிலையுடைத் திரடோண் மாயன் றிருவயி றொக்கு மன்றே.

(இ-ள்.) மலை தரு பொருளும் = மலையினிடத்துண்டாகிய பொருள்களும், கானில்வரு திரவியமும் = காட்டின்கணுண்டாகிய பொருள்களும், நாட்

டின் நிலைபெறு பொருளும்=நாடுகளில் தங்கப்பட்ட பொருள்களும், இன்பம் நிறை நகர்பொருளும்=இனிமைநிறைந்த நகரின்கணுண்டாகிய பொருள்களும், நீடும் அலைகடல் பொருளும்=பெரிய அலைகளையுடைய சமுத்திரத்திலுண்டாகிய பொருள்களும், யாவும் அமைந்த=இவையெல்லாநிறைந்த, ஆவணங்கள்=கடைவீதிகளானவை, நீங்கா சிலை உடை=நீங்காதவில்லையுடைய, திரள் தோள் மாயன்=திரண்ட தோள்களையுடைய திருமாலின, திருவயிறு ஒக்கும்=அழகிய வயிற்றை யொத்திருக்கும். எ - று.

மலைபடுபொருள்களாவன,—மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமம். **காடுபடுபொருள்க**ளாவன,—அரக்கு, கருந்தினை, தேன், நாவி, மயிற்பீலி. **நாடுபடுபொருள்க**ளாவன,— கரும்பு, சிறுபயிறு, செந்நெல், செவ்விளநீர், வாழை. **நகர்படுபொருள்க**ளாவன,— அரசன், கண்ணாடி, பித்தன், மந்தி, யானை. **கடல்படுபொருள்க**ளாவன,—அக்கு, உப்பு, சங்கு, பவளம், முத்து.

எவ்வுலகமுந் திருமாலுந்தியி லுள்ளனவென்பது நூற்றுணிபாதலால் கடைவீதியில் எவ்வுலகப் பொருள்களு முள்ள தென்பார் மாயன் திருவயிறொக்குமென்றார். அன்று, ஏ - அசைகள். (௩௫)

வழாதவின் னிசைவி பஞ்சி வாரிதுந் துபித டாரி
முழாமணி முரசு தக்கை முதிர்வளை யாம்பலின்ன
குழாமுகி லெனமு ழங்கக் கோதுறுர் நடத்துந் தெய்வ
விழாவணி மறுகு தோறும் விளங்குமென் றென்று மன்னே.

(இ-ள்.) வழாத இன் இசை=குற்றமில்லாத இனிய இசைப்பாட்டையுடைய, விபஞ்சி=வீணையும், வாரி=இசைக்குழலும், துந்துபி=துந்துமியும், தடாரி=மத்தளமும், முழா=மேளமும், மணி முரசு=அழகிய பேரிகையும், தக்கை=பம்பையும், முதிர் வளை=முதிர்ந்த சங்கமும், ஆம்பல்=ஊதுகொம்பும், இன்ன குழாம்—இவைபோல்வனவாகிய வாத்திய கூட்டங்களெல்லாம், முகில் என முழங்க=மேகமுழக்கம்போல சத்திக்க, கோது உறுர்=குற்றமில்லாத அந்நாட்டோர்கள், நடத்தும்=செய்கின்ற, தெய்வம் விழா=தெய்வத்தன்மையுள்ள திருவிழாக்களானவை, அணி மறுகு தோறும்=அழகினையுடைய வீதிகளி னெவ்விடங்களிலும், என்றும் என்றும் விளங்கும்=எவ்வெக் காலங்களிலும் விளங்கும். எ - று.

என்றும் என்றும் இவ்வடுக்கு ஒழியாமைப்பொருள து. மணிமுரசு - ஓசையுள்ள முரசு எனினுமாம். (௩௬)

வளர்தென்காசை வளம்பதிச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆ_ சருக்கம் ௩ - க்கு பாடல் ௱௬.

ஸ்ரீதேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை சரணே துணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

நான்காவது

தவமுயர் தேவலன் சம்பவச் சருக்கம்.

கலிநிலைத்துறை.

அருமறை முடிவினி லமரு மெம்பிரான்
பொருவறு காரணப் புகழெ லாந்திரண்
டொருவடி வெடுத்தென வுயர்ந்தி லங்குமாற்
கருந்திய கதிதரு கயிலை மால்வரை.

(இ-ள்.) அருமையாகிய வேதங்களின் முடிபாயுள்ள உபநிடதத்தில் எழுந்தருளியிருக்கும் எம்முடைய சிவபெருமானது ஒப்பில்லாத (எப்பொருட்கும்) பிரதானமாகிய கீர்த்திகள் யாவும் (ஒன்றாகச்) சேர்ந்து ஒருருவம் பெற்றாற்போல, (அடியார்கள்) எண்ணிய மோட்ச பதவியைக் கொடுக்கின்ற கயிலாசமாகிய பெரிய மலையானது உயர்ந்து விளங்கும். எ - று.

புகழினிறம் வெண்மையாதலின் "பொருவறு காரணப் புகழெ லாந் திரண் டொருவடி வெடுத்தென வுயர்ந்தி லங்கும்" என்றார். உபநிடதம்- வேதசாரசாத்திரம். எடுத்தால் என்பது எடுத்தெனத்திரிந்துநின்றது. ஆல் அசை.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அனகநெடுங் கதிரிரவி யனந்தமொரு புடைதிரண்டாங்
கணிகொண் டோங்கும்
கனகமணிச் சினகரத்துட் கவினுறுசிங் காதனமேற்
கருணை கூர்ந்து
பனகமணி பவளநெடுஞ் சடிலமின்ன வுமையினொடு
பரமன் ஞானச்
சனகமுனி முதலரிய தவர்தொழவீற் றிருப்பதந்தச்
சயில மாதோ.

(இ-ள்.) மாசில்லாத மிக்கவொளியுள்ள அனேக சூரியர்கள் ஒருபக்கத்திற்கூடினாற்போல, அழகுபெற்றுயர்ந்த பொன்னாலும் மணிகளாலும் அமைந்த விமானத்தில், அழகு பொருந்திய சிங்காசனத்தில், சர்ப்பத்தையணிந்த பவளம்போலும் நீண்ட சடைகள் பிரகாசிக்க பார்ப்பதிதேவியாருடனே சிவபெருமானவர், கிருபைமிகுந்து, ஞானத்தையுடைய சனகமுனிமுதலாகிய அருந்தவத்தை யுடைய பெரியோர்கள் வணங்கும்படி யெழுந்தருளியிருக்கப் பெற்றது அந்தக் கயிலாசமலை. எ - று.

பணகமணிசடிலம் என்பது, "திருமுடியிற் கண்ணியுமாலையும் பாம்பு" என்பதனால் விளங்கும். மாது, ஓ அசைகள். (௨)

சுரர்தயித்தியர் காந்தருவர் விஞ்சையர்கின் னரரியக்கர்
தூய மோன
ருரகர்சித்தர் கிம்புருட ரமரர்மற்றோர் பலருமன
முவந்தென் ஞான்றும்
பரமமுத்தி பெறவிரும்பிப் பனிவரையீன் றெடுத்த பசும்
பாவை பாகன்
சரணிணைப்பொற் கமலமலர் தலைக்கணிந்து துதிக்குமிசை
தன்மலைக்கு மாதோ.

(இ-ள்.) தேவரும், அசுரரும், கந்தருவரும், வித்தியாதரரும், கின்னரரும், இயக்கரும், பரிசுத்தமாகிய முனிவர்களும், நாகலோகத்தாரும், சித்திகளைப்பெற்றவர்களும், கிம்புருடரும், அமரரும் இவர்களொழிந்த மற்றையோரும் மனமகிழ்ந்து, எக்காலத்தினும் மேலாகிய மோட்சத்தையடைய விச்சித்து, இமயமலையரசன் பெற்றெடுத்த பசுமை நிறத்தை யுடைய பார்ப்பதிதேவியாரை வாமபாகத்திற் கொண்ட சிவபெருமானுடைய அழகிய தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளைச் சிரசிற்சூடித் தோத்திரஞ்செய்கின்ற வோசையானது அக்கயிலைமலையினிடத்துப் பெருகும். எ - று.

மாது, ஓ அசைகள். மற்று பிறிதுபொருளில் வந்தது. (௩)

கொடியசினக் கனலவித்துக் குலவுமனந் தனைத்திருத்திக்
கொதிக்குங் காமக்
கடியவினை யிருடுறந்து புலன்களைந்துங் களைந்துமற்றோர்
கருத்து மின்றி
நெடியபரம் பொருளையுன்னி நாசிநுனி தனிற்பார்வை
நிறுவி நாளு
முடிவரிய முடிவரையின் புடைகடொறு முனிவர்தவ
முயல்வ ரன்றே.

(இ-ள்.) தீய கோபாக்கினியை யழித்து, (விடயங்களில்) பற்றுகின்ற மனத்தை நேர்செய்து, சுடுகின்ற காமமென்னுங் கொடிய செயலாகிய விருளை நீக்கி, ஐம்புலன்களையும் விலக்கி, வேறு நினைவில்லாமல் பெரிய சிவபெருமானைத் தியானித்து, நாசியின் முனையில் பார்வையை நிறுத்தி, எப்பொழுதும் அழிவில்லாத சிகரங்களையுடைய அக்கயிலையின் பக்கங்களெவ்விடத்தும் முனிவர்கள் தவஞ்செய்வார்கள். எ - று.

அன்று, ஏ அசைகள். (௪)

புடைகடோறுங் கிரணநவ மணிகொழித்துக் கனகமெங்கும்
பொலியச் சிந்தி
யடருமலை குமுறவரா வாபரண மணிபரம
னருள்போ லோங்கிப்
படருமனத் தன்பினொடு படியுமுனி வரரிமையோர்
பவங்க டீர்த்துத்
தொடர்சிவசா யுச்சியபதந் தோற்றுவிக்கு மருவிபல
நுவன்றிச் சூழும்.

(இ-ள்.) எந்தப் பக்கங்களிலும் ஒளியுள்ள வொன்பதுவகை இரத்தினங்களை வீசி, பொன்பொடிகளை யெவ்விடங்களிலும் பிரகாசிக்கும்படி நிறைத்து, மிக்கஅலைகளானவை யொலிக்கப் பாம்பையணிந்த சிவபெருமானுடைய திருவைபோற் பெருகி, விடயங்களிற் பரவிய மனத்தில் விருப்பத்துடனே முழுகுகின்ற தவத்தோரும் தேவர்களும் ஆகிய விவர்கள் பாவங்களைப்போக்கிப் (பெரியோர்கள்) பற்றுகின்ற, சிவபெருமானுடைய மோட்சபதவியை யுண்டாகச்செய்யும் அருவிகள் பல நெருங்கிச் சூழும். எ-று. (ரு)

விளரிவரிச் சுரும்பருண்டு மிழற்றவமு தனையசுவை
வேரி தூற்று
முளரிசெழுங் கருங்குவளை கல்லாரங் குமுதமெழு
முருகா ராம்பல்
வளமைகெழு மலர்பலவு மலிந்துகதி ருமிழ்கனக
மணலுற் றோங்கித்
தளர்வரிது தெய்வநெடுந் தடஞ்சுனையெண் ணிலவுளவச்
சயில மீதே.

(இ-ள்.) விளரி என்னும் நெய்தனிலப்பண்ணை இரேகைகளையுடைய வண்டுகளானவை, உண்டு பாடும்படி அமிர்தம்போலு மதுரமுள்ள தேனைத் துளிக்கின்ற செந்தாமரைகளும், கொழுமையாகிய நீலோற்பலங்களும், செங்குவளைகளும், செவ்வாம்பல்களும், மணம் வீசுகின்ற வல்லிகளும், வளப்பம் பொருந்திய வேறு பல மலர்களு நிறையப்பெற்று, காந்தியைக் கக்குகின்ற பொன்மணலையுடைத்தாய்ப் பெருகிக் குறைவில்லாத தெய்வத்தன்மையுள்ள பெரிய சுனைகள் அளவில்லாதன அக்கயிலைமலையின்க ணுள்ளன. எ-று.

ஏ அசை. நெடு தட ஒருபொருட்பன்மொழி. (சு)

இனையநெடுந் தடஞ்சுனைக ளெவற்றினுமிக் குயர்ந்து சித்த
ரிமையோர் போற்றத்
தனையடைந்து படிந்திடினுந் துதித்திடினுங் கருதினுமத்
தவத்தோர் பாவ

வினைகடிந்தன் னவர்மனத்துள் விரும்பினவெ லாமெளிதில்
விரைவி னல்கும்
புனைபெருபுட் கரதீர்த்த மெனவொருதண் சுனைநடுவட்
பொலிந்து தோன்றும்.

(இ-ள்.) இவ்வகையான பெரிய சுனைகளவையுள்ளு மிக வுயர்ந்து, சித்தர்களும் தேவர்களும் புகழ, தன்னை யடைந்து முழுகினாலும், தோத்திரஞ் செய்தாலும், தியானித்தாலும் அத் தவத்தினருடைய பாவங்களை நீக்கி, அவர்கள் மனத்தில் இச்சித்த பொருள்கள் யாவையும் எளிதாகச் சீக்கிரத்தில் அருளுகின்ற அழகிய புஷ்கரதீர்த்தமென ஒரு குளிர்ச்சிபொருந்திய பெரிய சுனையானது அவைகளின் நடுவில் விளங்கும். எ - று.

விரும்பின பலவின்பால் முற்றுப்பெயர். (எ)

படிபுகழத் தடமடுவிற் படியவொரு பருவமதிற்
பவங்க டீர்க்கு
முடிகுலவு கயிலைவரைப் புடைதொறுமா தவம்புரியு
முனிவோர் தாமும்
வடிவுமரு வியநைமி சாரணிய விருடிகளு
மகிழ்வு கூர்ந்து
சடிலமகு டம்பொலியத் தண்டுகமண் டலமேந்திச்
சார்ந்தார் மன்னே.

(இ-ள்.) எவ்வுலகத்தாரும் புகழ்கின்ற அவ்விசாலமாகிய சுனையில் முழுகும்படி, ஒரு பருவகாலத்தில் (நினைத்தவருடைய) பாவங்களைப் போக்குகின்ற சிகரங்களையுடைய கயிலாசமலையின் பக்கமெல்லாம் மகத்தாகிய தவஞ் செய்கின்ற முனிவர்களும், அழகுபொருந்திய நைமிசாரணிய முனிவர்களும் களிப்புமிகுந்து சடைமுடி விளங்கத் தண்டமுங் கமண்டலமுந் தாங்கிக் கொண்டு அந்தப் புஷ்கரதீர்த்தக்கரையை யடைந்தார்கள். எ - று.

மன், ஓ அசைகள். படி இடவாகுபெயர். (அ)

மருவியந்த மலர்வாவி தனின்மூழ்கி மௌனமுனி
வரர்கள் யாரும்
பொருவருந்தம் பெருநியம முதலமுடித் தமலனடி
புகழ்ந்து போற்றித்
திருவயங்கு மொருதலத்திற் சிறந்திருந்த பின்னரன்பு
திகழ்பே ரின்பக்
கருணைதங்கு நேமிவனத் துறவினர்கூ தனைத்தொழுது
கழற லுற்றார்.

(இ-ள்.) மோனஞானத்தையுடைய முனிவர்கள்யாவரும், அந்த மலர்களையுடைய புஷ்கரதீர்த்தத்தையடைந்து ஸ்நானஞ்செய்து,ஒப்பில்லாத தங்கள் பெரிய நித்தியகருமங்களை முடித்து, பரமசிவனுடைய திருவடிகளைத் தோத்திரஞ்செய்து நமஸ்கரித்து, அழகால் விளங்குகின்றவோரிடத்தி லெழுந்தருளி யிருந்தபின், ஆசையினாலே விளங்குகின்ற பெரியமகிழ்ச்சியுங் கிருபையுமுள்ள நைமிசாரணியத்தில் வசிக்கின்ற முனிவர்கள், சூதபுராணிகரை வணங்கி, சொல்லத்தொடங்கினார்கள். எ-று.

முதல்—பலவின்குறிப்பு வினைப்பெயர். (௯)

உலகுபுகழ் வியாசமுனி யுரைத்தபல கலையுமொருங்
குணர்ந்த தூயோ
யிலகுமுன தருள தனு லீரொன்பான் புராணமுமற்
றெவையுந் தேர்ந்தேம்
புலவர்மன விருளகலப் பொலிந்தசெழும் பிரமாண்ட
புராணந் தன்னி
னலமிகுபுண் ணியசீலன் காதைதனை முன்றொகையா
நவின்று யன்றோ.

(இ-ள்.) எவ்வுலகத்தாரும் புகழ்கின்ற வியாசமுனிவராற் சொல்லியருளிய பல நூல்களையெல்லா முற்றுமறிந்த பரிசுத்தமான சூதபுராணிகரே! விளங்குகின்ற வும்முடைய வனுக்கிரகத்தால் பதினெண் புராணங்களையும், மற்றசாஸ்திரங்களையும் தெளிவாகக் கேட்டுணர்ந்தோம். அறிஞர் மனவிருணீங்கும்படி விளங்கிய செழித்த பிரமாண்டபுராணத்திற் கூறிய, நன்மைமிகுந்த புண்ணியத்தையும் நல்லொழுக்கத்தையும்உடைய தேவாங்கமுனிவனது கதையை முற்காலத்துச் சுருக்கமாகத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளினீர்கள்.

அன்று, ஓ அசைகள். அன்றோ=அல்லவா எனினுமாம். (௧௦)

அச்சரிதந் தனைவிரிவி னடியமுணர் வகையினிதி
னருடி யென்றே
யிச்சகவஞ் சகவினைதீ ரின்பவிரு டிகடுதிசெய்
தியம்ப லோடு
மெச்சுசெழுங் கலைக்கடலாய் விளங்கியவச் சூதமுனி
விமல வேதத்
துச்சியரும் பொருளையுன்னி யுடல்பொடிப்ப விருந்துபின்ன
ருரைப்ப தானன்.

(இ-ள்.) அந்தக்கதையை விரிவாக அடியேங்க ளறிந்துகொள்ளும்படி நன்றாகச் சொல்லக்கடவீரென்று, இவ்வுலக மாயாகாரியங்களினின்று நீங்கிய, இன்பத்தை யுடைய முனிவர்கள் தோத்திரஞ் செய்து சொன்னவுடனே,

யாவருங் கொண்டாடப்பட்ட செழித்த சாஸ்திர சமுத்திரமாக விளங்கும் அந்தச் சூதமுனிவரானவர், பரிசுத்தமாகிய வேதமுடிவில் விளங்குகின்ற அரிய பரமசிவத்தைத் தியானஞ்செய்து சரீரம் புளகாங்கிதங் கொள்ள விருந்து பின்சொல்லத்தொடங்கினர். எ - று. (கக)

வேறு.

தன்மகனுசான் மைந்தன் நராபதி தனது செல்வன்
பொன்மிகத் தருவோ னென்றும் புகழ்பெரு வழிபா டுள்ளோன்
வன்மைசா லுரைகோ ளாளன் மற்றிவர் தமக்குத் தக்க
நன்மைநா லெவையுங் கற்றோர் நவில்வது கடமை யன்றே.

(இ-ள்.) தன்னுடைய புதல்வனும், குருவின் புதல்வனும், அரசனது புதல்வனும், மிகவும் பொருள்கொடுப்பவனும், எக்காலத்தும் புகழ்கின்ற மிகுந்த வணக்கமுடையவனும், வலிமை மிக்க கல்விகளைக் கேட்குந் திறமுடையவனும் ஆகிய விவர்களுக்குத் தகுதியாகிய நல்ல நூல்கள் பலவற்றையும் கற்ற புலவர்கள்சொல்வது முறைமையாமெனச் சூதபுராணிகர் தெளிவடைந்து. ()

மாதவ முனிவீர் நீவிர் வழிபடன் மதியான் மிக்கீ
ராதவி னுலகம் போற்று மரியபுண் ணியசீ லன்ற
னீதமு முயர்வுஞ் சீரு நிலைகெழு புகழும் வாய்ந்த
காதையை யுண்மை யானு மறிந்தவை கழறு கின்றாம்.

(இ-ள்) பெரிய தவத்தையுடைய முனிவர்களே! நீங்கள் (எம்மை) வணங்குகின்ற அறிவான்மிக்கவர்களாதலால், உலகத்தார்பாராட்டுகின்ற புண்ணியசொரூபியாகிய நல்லொழுக்கத்தையுடைய தேவாங்கமுனிவனது நீதியும் மேன்மையும் சிறப்பும், நிலைமையாகிய கீர்த்தியும்பொருந்திய சரித்திரத்தில், நாம் மெய்ம்மையாக அறிந்தவைகளைச் சொல்லுகின்றோம் (கேளுங்கள் என்றார் சூதபுராணிகர்). எ - று.

காதையை வேற்றுமை மயக்கம். (கங)

திருந்திய கயிலை நாதன் சீர்கெழு சாயுச் சியத்தில்
பொருந்துபுண் ணியசீ லன்றன் புகழினை வினவி னோர்க்கு
வருந்தொரு துயர மின்றான் மனத்திலன் னவர் நினைத்த
வருந்திறன் ஞான மாதி யனைத்துஞ்சித் திக்கு மன்றே.

(இ-ள்.) திருத்தமாகிய கயிலைமலையின்கண் எழுந்தருளி யிருக்கின்ற பரமசிவனது சிறந்த மோட்சபதவியை யடைந்த புண்ணியசொரூபியும், நல்லொழுக்க முடையவனுமாகிய தேவாங்கமுனிவனது புகழைக்கேட்டவர்களுக்கு, வருத்துகின்ற துன்பம் ஒன்றுமில்லை. அவர்கள் மனத்தில்நினைத்த அரிய வலிய ஞானமுதலாகிய நன்மைகள் யாவும் கைகூடும். எ - று. (கச)

பகர்மறைப் பொருளாய் மோனப் பரஞ்சுட ருருவா யொன்று
சுகவருட் கடலா யின்ப சுத்தசை தன்னிய வீடாய்ச் [ய்ச்
சகலமுந் தானாய் நின்ற தனிப்பர சிவன்றன் னுளிற்
செகமெலாம் படைப்ப தற்குச் சிந்தனை சிறிது செய்தான்.

(இ-ள்.) சொல்லுகின்ற வேதங்களின் பொருளாகியும், ஞானமாகிய மேன்மையுள்ள சோதியாகியும், ஒன்றாகியும், இனிய கிருபாசமுத்திரமாகியும், இன்பமும், பரிசுத்தமுமாகிய விரண்டில்லாத மோட்சமாகியும், எல்லாந் தானாகியும், எழுந்தருளிய வொப்பில்லாத சிவபெருமானானவர், முற்காலத்தில் உலகங்களெல்லா முண்டாக்குவதற்குச் சற்று நினைந்தார். எ - று. (௧௫)

அன்னதோர் காலை தன்னி லமலபூ ரணமெய்ஞ் ஞான
முன்னவன் முன்னே சோதி முதிர்சுட ருருவந் தாங்கி
மன்னிய பொருளாய மூன்று வகைக்குணத் தொடுவ யங்கித்
தன்னிக ரான வாதி சத்திவந் துதித்து நின்றாள்.

(இ-ள்.) அக்காலத்தில் மலரகிதராகிய வுண்மைஞானத்தையுடைய பரமசிவனது சந்நிதானத்தில் பிரகாசமிகுந்த விளக்கின்வடிவம்பெற்று, நிலைபெற்ற பொருளாகி மூவித குணத்துடனே விளங்கித் தனக்குத்தானே சமமாகிய (எவற்றிற்கும்) மூலமாகிய பார்ப்பதிதேவியானவள் வந்து தோன்றி நின்றாள். எ - று.

மூவித குணங்களாவன:—இராசதம், சாத்துவிகம், தாமதம். (௧௬)

அருளுரு வான மூர்த்தி யவடனை நோக்க லோடுந்
தெருளுறு மிராச தத்திற் செழுநறுங் கமலத் தேவு
மருவுசாத் துவகு ணத்தின் மாயனுந் தாம தத்திற்
பொருமுருத் திரனுந் தோன்றிப் பொலிந்தனர் புவனம் போற்ற.

(இ-ள்.) அருளே திருமேனியாகக் கொண்ட சிவபெருமானானவர், அந்தச் சத்தியைப் பார்த்தவுடனே, தெளிவாகிய இராசதகுணத்தில் கொழுமையாகிய மணமுள்ள தாமரைமலரில் வசிக்கின்ற பிரமதேவனும், பொருந்திய சாத்துவிகுணத்தில் விட்டுணுமூர்த்தியும், தாமதகுணத்தில் அழிக்கின்ற உருத்திரமூர்த்தியும் உண்டாகி யெவ்வுலகமும் துதிக்கும்படி விளங்கினார்கள்.

வயங்குமூ வரையு நோக்கி மவுனபே ரின்ப மூர்த்தி
பயங்கெழு மலர்வே தற்குப் பகர்சிருட் டியும்பொற் பாவை
முயங்குமச் சுதற்குக் காக்கு முறைமையு முருத்தி ரற்குச்
செயங்குல வியசம் மாரச் செயலுந்தந் தினைய செப்பும்.

(இ-ள்.) இவ்வாறுவிளங்கிய மூவரையும் பார்த்து, ஞானமும் பேரின்பமுமுடைய பரமசிவனானவர், நீரிலுண்டாகிய தாமரைமலரில் வசிக்கின்ற பிரம

தேவனுக்குச் சொல்லுகின்ற படைப்புத்தொழிலும், திருமகள் தழுவுகின்ற திருமாலுக்குக் காத்தற்றொழிலும், உருத்திரனுக்கு வெற்றிபொருந்திய அழித்தற்றொழிலும் கொடுத்து, இவ்வகையாகிய சொற்களைச் சொல்லுவார், எ-று.

இந்தமுத் தொழிலு நுங்கட் கீந்தன மினிமே னீவிர்
தந்தம தியல்வ றாமற் சகலமும் படைத்துக் காத்து
முந்துறத் துடைத்திவ் வாறு முறைமுறை புரிமி னென்ன
வந்தமூ வருநன் றென்றவ் வமலனைத் தொழுது சென்றார்.

(இ-ள்.) இந்தப் படைத்தல் காத்தல் அழித்தலாகிய மூன்று தொழில்களையும் உங்களுக்கு நாம் கொடுத்தோம், இனி நீங்கள் உங்களுடைய முறை தவறாமல், எப்பொருள்களையும் படைத்துக் காத்து அழித்து, முற்பட இவ்வகையாக முறையே செய்யக்கடவீர்களென்று சொல்ல, அந்தப் பிரமன்முதலாகிய மூவரும் நல்லதென்று அப்பரமசிவனை வணங்கிச் சென்றார்கள். எ-று.

இனிமேல் என்பது ஒருபொருட் பன்மொழி. (கக)

பராபர னருளாற் செய்ய பங்கயா சனத்தின் மேலோன்
புராதன வுலக மும்பல் புவனமும் புரிந்து பின்னர்
நிராதர மநுவைத் தந்து நினைவதன் முனமெண் ணில்லாச்
சராசர வகைகள் யாவுந் தான்படைத் தினிதி ருந்தான்.

(இ-ள்.) சிவபெருமானுடைய கிருபையால் செந்தாமரை யாசனத்தின்மேல் வசிக்கின்ற பிரமதேவர், பழமையாகிய உலகங்களையும், பல புவனங்களையும் படைத்து, பிறகு பற்றில்லாத மநு வென்பவனைப்படைத்து, நினைப்பதற்கு முன்னே அளவில்லாத விலங்கு, பறவை முதலாகிய இயங்கியற்பொருள்களும், மலை மரம் முதலாகிய நிலையியற்பொருள்களும் ஆகிய வேறுபாடெல்லா மியற்றி இனிதாக விருந்தார். எ-று. (உ௦)

இருந்தபின் மநுவெ ழுந்தே யிறைஞ்சிநின் றிருகை கூப்பிப்
பொருந்துற வெளியேன் செய்யும் பணியெவை புகறி யென்னப்
பெருந்திற லமரர் கட்கும் பின்னெவர் தமக்கு மாடை
தருந்தொழி லுனக்குத் தந்தா மென்றனன் சதுமு கத்தோன்.

(இ-ள்.) (பிரமதேவர், இவ்வாறு படைத்து) வீற்றிருந்தபின், மநுவென்பவன் எழுந்து தோத்திரஞ்செய்து நின்று இரண்டுகைகளையும் குவித்து உமது திருவுள்ளத்திற் கியைய ஏழையாகிய நான் செய்யுந் தொழில்யாவை கட்டளைசெய்வீரென்று கேட்க, அதற்கு நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவரானவர், மிக்க வலிமையுள்ள தேவர்களுக்கும் பின் மற்ற மனிதர் முதலாயினோருக்கும் ஆடைகள் கொடுக்குந்தொழிலை யுனக்குக் கொடுத்தோமென்று கூறினார். எ-று.

(உக)

அவ்வகை புரிவ னென்று வயனடி முடிமேற் சூடிக்
கௌவையில் விடைகொண் டேகிக் காம்பிலி நகரம் புக்குற்
றெவ்வனத் துகிலுந் தானே யியற்றிவிண் ணிமையோ ரேனோர்
செவ்வகக் குறிப்பிற் றந்து சிறந்துவீற் றிருந்தான் மன்னோ.

(இ-ள்.) (மநுவானவன்) அப்படியே செய்வேனென்று பிரமதேவருடைய பாதங்களைத் தலைமேற்றாங்கிக் கலக்கமில்லாத வுத்தரவுபெற்றுக்கொண்டு சென்று, காம்பிலிநகரிற் பிரவேசித்து, எவ்வித நிறமுள்ள ஆடைகளைத் தானொருவனே செய்து, ஆகாயத்தில்வசிக்கின்ற தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும்நல்ல மனக்குறிப்பை யறிந்து கொடுத்து சிறப்படைந்து எழுந்தருளியிருந்தான். எ - று.

வனம் தொகுத்தல்விகாரம். தேற்றேகாரந் தொகுக்கப்பட்டது. மன், ஓ அசைகள். (௨௨)

எண்ணிறை குணத்தான் மிக்க விவன்கத் திருளை நீத்துக்
கண்ணிய விடய மைந்துங் கடிந்தறு பகையுங் காய்ந்து
தண்ணிய வருணன் னீதி தவநிலை தழுவி யென்றும்
புண்ணிய சீல னென்றோர் புகழுயர் பெயரும் பெற்றான்.

(இ ள்.) யாவராலும் நினைக்கத்தக்க நிறைந்த குணங்களான் மிகுந்த இம் மநு வென்பவன் மன விருளை நீக்கி, கருதப்பட்ட ஐம்புல நுகர்ச்சிகளையும் விலக்கி, அறுவகைப் பகைகளையும் வெறுத்து, குளிர்ந்த கிருபையும், நல்லநீதியும், தவவேடமும் அநுசரித்து, (இதனால்) எப்பொழுதும் புண்ணிய சீல னென்று கீர்த்தியாலுயர்ந்த வொருபெயரையும் அடைந்தான். எ - று.

அறுவகைப் பகையாவன:— காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம். (௨௩)

புவனமோர் மூன்றும் போற்றும் புண்ணிய சீல னென்பான்
பவளவாய்க் கரிய கூந்தற் பூ_ர்வரி மதர்கெ டுங்கட்
டுவளிடை யுமையோர் பாகந் துலங்கவீற் றிருந்த வாதி
சிவனடிக் கன்பு செய்து செயல்வளர்ந் திருந்தான் சின்னாள்.

(இ-ள்.) மூன்றுலகமுந் துதிக்கப்பெற்ற புண்ணியசீல னென்பவன், பவளம்போன்ற வாயும், கரிய கூந்தலும், பரவிய இரேகை பொருந்திய செழித்த விசாலமாகிய கண்களும், துவள்கின்ற இடையும் பெற்ற பார்ப்பதிதேவியார் ஒரு பாகத்தில் விளங்குமாறு எழுந்தருளியிருந்த எப்பொருட்கு முதல்வனாகிய சிவபெருமானுடைய திருவடிகளுக்கு நேசஞ்செய்து நல்லொழுக்கமிகுந்து சிலகால மிருந்தான். எ - று.

மூன்றுலகமாவன :—விண், பூமி, பாதாளம். மன், ஓ அசைகள்.

கொச்சகம்.

பின்னரிவ னியல்புணர்ந்து பெரிதுதிரு வுளங்களித்து
வன்னமலர் வேதனுக்கு மறைபரவு மாதவற்கு
முன்னரிய பொருளாகி முளைத்துநின்ற முழுமுதல்வன்
றன்னுதிக வின்பமுற்ற சாயுச்சியந் தரப்பெற்றான்.

(இ-ள்.) செம்மைநிறமுள்ள தாமரைமலரி லெழுந்தருளிய பிரமதேவனுக்கும், வேதங்கள் போற்றுகின்ற திருமாலுக்கும், நினைக்கமுடியாத பொருளாகி முளைத்துநின்ற பூரணமுதல்வனாகிய சிவபெருமான், பிறகு இப்புண்ணிய சீலனுடைய நற்குணங்களைத் தெரிந்து, மிகவும் மனங்களித்து, தன்னுடைய பெரிய சுகமுள்ள மோட்சபதவியைக் கொடுக்கப்பெற்றான். எ - று. (உ௫)

சிலபகற்பின் கலையியற்றுந் திறலதிப னின்மையினாற்
பலபுவனத் துறைபவரும் பரிந்துமன மிகவருந்தி
யிலகுவனத் தழைசருமு மினியமர வுரிகளிவை
மலியவுடுத் துழன்றுதத்த மானங்காத் தினிதிருந்தார்.

(இ-ள்.) சிலநாட்பின்னர் ஆடைகள் செய்யும் வலிமையுள்ள புண்ணியசீலன் இல்லாமையால், எவ்வுலகத்தில் வசிக்கின்றவர்களும் மனவிரக்கத்துடன் மிகவும் வருந்திக் காட்டில்விளங்கும் இலைகளையும், (மிருகங்களின்) தோல்களையும், மிருதுவாகிய மரவுரிகளுமாகிய இவைகளை நிரம்பக் கட்டிக்கொண்டு சஞ்சரித்து, தங்கள் தங்களுடைய வெட்கத்தைக் காத்துக்கொண்டிருந்தார்கள். எ - று. (உ௬)

பலபகலிவ் வணமெவரும் படர்தலுமோர் பொழுதமரிற்
புலவன்முத லானசகல புங்கவருந் திரண்டெய்திச்
சலசமுறை பவனுபய சரணமிசைத் தாழ்ந்திறைஞ்சி
மலரனைய கரங்குவித்து வழுத்தியிவை புகறலுற்றார்.

(இ-ள்.) பலநாள் இவ்வகையாக யாவரும் நடக்கின்றகாலத்தில், ஒரு நாள் இந்திரன்முதலிய தேவர்களெல்லாங்கூடிச் சென்று தாமரைமலரில் வசிக்கின்ற பிரமதேவனுடைய இரண்டு திருவடிகளையும் பணிந்து, மலர்போன்ற கைகளைக் குவித்துத் தோத்திரஞ்செய்து, இவ்வாறு சொல்லத்தொடங்கினார்கள். எ - று. (உ௭)

புங்கவகே ளிதுவரையும் பொருவறுபுண் ணியசீலன்
மங்கரிய தொழிலாலெம் மானநிலைத் திருந்தனவால்
அங்கவனைக் காணகிலே மணிகலிங்க மிலரானே
மெங்கடிய ரகற்றியரு ளெனலுமல ரயனியம்பும்.

(இ-ள்.) பிரமதேவரே கேட்பீராக. இந்நாள்வரையிலும் ஒப்பில்லாத புண்ணியசீலனுடைய கெடுதலில்லாத தொழிலாலாகிய ஆடைகளால் எங்கள்

வெட்கங்கெடாதிருந்தன. (இப்பொழுது) அப் புண்ணியசீலனைக் காணேம். அணிகின்ற ஆடையிலராயினும் (ஆதலால்) எங்கள் துக்கத்தைப் போக்குவீ ரென வேண்டலும் பிரமதேவர் சொல்வாராயினர். எ - று.

ஆல், அங்கு - அசைகள். தொழில் ஆகுபெயர். (உஅ)

உயர்வுறுபுண் ணியசீல னெங்குபர சிவனருளான்
மயலறுசா யுச்சியபத மருவினனு னினிவேறோர்
அயர்வில்கருத் தனையவன்போ லளிப்பதெனக் கரிதான்பாற்
கயவிதனைப் பகருதுநாம் வம்மினெனக் கடிதெழுந்தான்.

(இ-ள்.) மேன்மையுள்ள புண்ணியசீலனானவன், உயர்ந்த சிவபெருமானது கிருபையால் மயக்கமில்லாத மோட்சபதவியை யடைந்தான். இனி வேறொரு சோர்வில்லாத கருத்தையுடைய அப் புண்ணியசீலனைப்போலச் சிருட்டிப்பது எனக்கு முடியாது (ஆதலால்) சிவபெருமானிடத்தில் பெருமை யுள்ள இக்காரியத்தை நாம் சொல்லுவோம் வாருங்களென்று விரைந்து பிரம தேவரானவர் தேவர்களோடு மெழுந்தார். எ - று.

ஆல் - அசை. (உகூ)

பங்கயனு மிமையோர்கள் பலருமுயர் கயிலைநண்ணி
யங்கணுறை தருநந்தி யடிகள்விடை கொடுசென்று
சிங்கமணி யாதனத்திற் சிவையொடுவீற் றிருந்ததனிச்
சங்கரனை வணங்கிமலர்த் தடங்கைமுடி தனிற்கூப்பி.

(இ-ள்.) பிரமதேவரும், தேவர்கள்யாவரும் பெரிய கயிலைமலையைச் சேர்ந்து, அவ்விடத்துவசிக்கின்ற நந்திகேசருடையவுத்தரவுபெற்றுச்சென்று, மணிகளாலமைத்த சிங்காதனத்தில் பார்ப்பதிதேவியாரோடும் எழுந்தருளி யிருக்கின்ற ஒப்பில்லாத பரமசிவனை நமஸ்கரித்து, மலர்போன்ற விசாலமா கிய கைகளைச் சிரமேற் குவித்துக்கொண்டு. எ - று.

இதுமுதல் ஐந்துசெய்யுள்வரையினும் ஒருதொடர். (௩௦)

திருவிடயப் பரம்பொருளே நிமலகுணச் செழுஞ்சுடரே
கருதுமனத் தன்பர்வினை களைகருணைப் பெருங்கடலே
மருவுபனித் தடஞ்சயில மகட்கிசைந்த மாமணியே
யொருவரையொப் பிடவரிதா யுறைந்ததனிச் சிவக்கொழுந்தே.

(இ-ள்.) விடயங்களொன்றினும் பற்றில்லாத மேன்மையான பொருளே! மலரகிதமாகிய குணமுள்ள செழித்தவிளக்கே! மனத்திற் சிந்திக் கின்ற அடியார்களுடைய தீவினைகளை நீக்குகின்ற பெருங்கருணைக்கடலே! குளிர்ச்சியுள்ள பெரிய இமயமலையரசன் புத்திரியாகிய பார்ப்பதிதேவியாருக் குத்தக்க பெரியஇரத்தினமே! யாரும் ஒப்புச்சொல்லவரிதாகி யெழுந்தருளிய பரமசிவமே!. எ - று.

எப்பொருளுந் தானேயாதலால் 'பொருளே' எனவும், அன்பர் மனத்தில் ஆனந்தம் பெருகச்செய்தலால் 'கருணைக்கடலே' எனவுங் கூறினர். (கக)

வரிச்சுரும்ப ரிசைமிழற்ற மதுவுமிழ்பொன் மலரிதழி
தரித்தசெழும் பவளநிறத் தடஞ்சடிலத் தொருமுதலே
யெரித்தமகத் தழலிடைநோன் பியற்றுநர்நெஞ் சிருளகல
விரித்தவருட் பெருங்கிரண வித்தகமா மணிவிளக்கே.

(இ-ள்.) புள்ளிகளையுடைய வண்டுகள் இசைப்பாடலைச் செய்யப் பரிசாகத் தேனைக்கொடுக்கின்ற பொன்போலுநிறமுள்ள கொன்றைமாலையை யணிந்த செழித்த பவளம்போலும் நிறமுள்ள சடையுடைய ஒப்பில்லாத முதற்கடவுளே! விளங்குகின்ற யாகாக்கினியில் தவஞ்செய்கின்றவர்கள் மனவிருள் கெடும்படி கிருபையாகிய பெரிய சோதியைப் பரப்பிய மேன்மையாகிய ஞானமணித் தீபமே!. எ-று. (கஉ)

தாளமலே தனிற்கொழிக்குந் தடங்கட லூ டெழுமிரவி
கிரணபண மணிபாவ கேயூர வாபரண
மரணபவ வினைதொடரா மந்திரநா தாந்தசிவ
பரமசுகா ரம்பதயா பாவின்பப் பழம்பொருளே.

(இ-ள்.) அலைகளால் முத்துகளை யொதுக்குகின்ற விசாலமாகிய சமுத்திரத்திற் றோன்றுகின்ற சூரியகிரணம்போலும் படமும் மணியுமுடைய சர்ப்பத்தைத் தோளணியாக வுடையவரோ! இறப்பும் பிறப்புமாகிய தீவினை பற்றாத (ஸ்ரீபஞ்சாக்கர) மந்திரமானவரோ! ஞானநெறியானவரோ! சிவமே! மேலாகிய இன்பங்களுக்கெல்லாம் மூலமானவரே! கிருபையுள்ள பரமே! மோக்ஷவின்பந்தரும் பழமையாகிய முதற்பொருளே!. எ-று. (கங)

பகாரிய முழுமவுனப் பழமறையின் முடிவினிசை
மிகநடன மிடுசரண விநோதகிரா மயவடிவே
சகலவுயிர் தொறுநிறைந்த தத்துவதற் பரவென்றே
யகமகிழ்வி னெடுகெழுமி யருந்துதிகள் புரிந்தனரால்,

(இ-ள்.) சொல்லுதற் கரிய நிறைந்த ஞானமுள்ள பழமையாகிய வேதங்களின் முடிவில் கீர்த்திமிகத் திருநிருத்தஞ்செய்கின்ற திருவடிகளையுடையவரோ! திருவிளையாடலையுடையவரோ! நோயின்மையாகிய சொரூபமானவரே! எவ்வுயிர்களினும் நிறைந்த தத்துவமானவரோ! கடவுளே என்று மனமகிழ்ச்சியுடனே நிறைந்து, அரிய தோத்திரங்கள் செய்தார்கள் (பிரமன் முதலிய தேவர்களெல்லாம்). எ-று. (கச)

கலிநிலைத்துறை.

பரவி நின்றவப் பண்ணவர் குழாத்தையெம் பரமன்
வரமி குந்திரு வருள்கொடு நோக்கிநீர் வந்த
தரமெ வன்றெரி தரமொழி கீரெனத் தாழ்ந்து
பிரம னன்பொடு தொழுதுகின் றினையன பேசும்.

(இ-ள்.) எங்களுடைய சிவபெருமான், (தம்முடைய) சந்நிதானத்தில் தோத்திரஞ்செய்து நின்ற அத்தேவர்கள் கூட்டத்தை அன்புமிகுந்த தமது திருவருளால் பார்த்து, நீங்கள் வந்த காரியம் யாது? தெரியச் சொல்லுங்க ளென்று கேட்க, பிரமதேவரானவர், அன்புடனே தாழ்ந்து வணங்கி நின்று இவைகளைச் சொல்லுவார். எ - று. (கரு)

ஆதி கேளுன தருளினுன் முனமைவ தரித்த
நீதி மாமநு வமரர்மற் றெவர்க்கும்பன் னிறத்துச்
சோதி யாடைகள் பற்பல வளித்துநா டோறுந்
தீதி லாதகாண் புரந்துவீற் றிருந்தனன் செகத்தில்.

(இ-ள்.) (எப்பொருட்கும்) முதல்வனே! கேட்பீராக. தேவரீருடைய கிருபையினாலே, முன்னமே தோன்றிய நீதியையுடைய பெரிய மநுவென்பவன், தேவர்களுக்கும் அவரொழிந்த மனிதர் முதலானோர்க்கும் எந்நாளும் பலவாகிய வண்ணமுள்ள காந்திபொருந்திய ஆடைகள் பலவற்றையும் (அமைத்துக்)கொடுத்து, உலகத்திற் குற்றமில்லாத வெட்கத்தைப் பாதுகாத்திருந்தான். எ - று. (கசு)

அனைய வன்பெருந் தவம்பொறை கருணைமூ தறிவு
சினம கன்றபற் பலகுணத் தெவரினுஞ் சிறந்துன்
மனமு வந்திட வழுத்தியர்ச் சித்ததான் மயக்க
வினைத விர்ந்தசா யுச்சியமாம் பதத்தின்மே வினனால்.

(இ-ள்.) அந்த மநுவென்பவன் மிகுந்த தவம், பொறுமை, கிருபை, முதிர்ந்தஅறிவு, கோபநீங்கிய பலவாகிய நற்குணங்களின் யாவரினு மேம்பட்டு, தேவரீருடைய திருவுள்ளங் களிக்கும்படி துதித்து, அருச்சனைசெய்த பலத்தினால் அஞ்ஞான விருணீங்கி மோட்சபதவியை யடைந்தான். எ - று. (கஎ)

மற்ற தற்பினீ வியந்தரு பவரிலா மையினு
லுற்ற பொற்பினி லுயரிமை யவருமற் றெவரு
நற்ற ருத்தழை மரவுரி துவக்கிவை நாளு
மற்ற மற்றதம் முடற்கணிந் துழன்றனர் தனரால்.

(இ-ள்.) அதன்பின்னே, ஆடைகொடுப்பவர்க ளில்லாமையினாலே, அழகு மிகவும் பொருந்திய தேவர்களும் மற்றையோரும் நல்லமரங்களினுண்டாகிய இலைகளும், மரநார்களும், மிருகங்களின் தோல்களும் ஆகிய இவைகளை யெப்பொழுதும் மறைவில்லாத தங்கள் தேகத்தில் தரித்து, வருந்தி யலைந்தார்கள். எ - று.

மற்று, ஆல் - அசைகள். (கஅ)

ஆன தாலுன தரும்பதம் புகலென வடைந்தேம்
ஞான நாயக வெனச்சது முகனவி லுதலும்
வான மேலவர் மருட்டுயர் விடுத்துள மகிழ
மோன மோடொரு கணப்பொழு துறைந்தனன் முதல்வன்.

(இ-ள்.) ஆதலினாலே, ஞானமே திருமேனியாகவுடைய முதல்வரே! தேவரீருடைய திருவடிகளையே யடைக்கலமென, இவ்விடத் தடைந்தோமென்று, நான்கு முகங்களையுடைய பிரமதேவர் சொன்னவுடனே, தேவர்கள் மயக்கமும் துன்பமும் நீங்கி மகிழ்ச்சியடையும்படி சிவபெருமான், ஒருகொடிப்பொழுது மௌனமாக விருந்தார். எ - று. (௩௯)

உறைந்த மாமுத விதயபங் கயத்தினின் றொருவன்
மறைந்த காரிரு ளகற்றிட வெழுமுழு மதிபோ
னிறைந்த பேரழ கொழுகவாண முகநில வெறிப்ப
வறைந்த வார்கழ லமரரேத் தெடுப்பவந் தணைந்தான்.

(இ-ள்.) (அவ்வாறு மௌனமாக) எழுந்தருளிய சிவபெருமானுடைய இதயதாமரை மலரிலிருந்து, (உலகத்தை) மூடிய கரிய இருளை நீக்கும்படி உதிக்கின்ற பூரணசந்திரனைப்போல, நிறைந்த பேரழகுசிந்துமாறு,ஒளிபொருந்திய முகமானது பிரகாசத்தைச்செய்ய (மேற்)சொல்லிய வீரக்கழலையணிந்த தேவர்கள் துதிக்க வொருவன் வந்து அவதரித்தான். எ - று.

மறைந்த - மெலித்தல் விகாரம். (௪௦)

பருத்த தோட்டுணை சிரஞ்சிர வணங்கர பதுமந்
திருத்து கந்தரந் தடவரை நிகர்திரு மார்பம்
பொருத்த மாமிவை முதலிய விடந்தொறும் புனித
வுருத்தி ராக்கமா மணியினாற் பலவணி யுடையோன்.

(இ-ள்.) (அவ்வாறு தோன்றினவன்) பெரிய விரண்டுதோள்களும், தலையும், செவிகளும், தாமரைமலர்போன்ற கைகளும், நல்லகண்டமும், விசாலமாகிய மலையையொத்தஅழகியமார்பும் (ஆகிய) இவைமுதலாகப்பொருந்திய வுறுப்புகளிலெல்லாம் உருத்திராக்கமாகிய மணிகளாற் செய்த பல ஆபரணங்களை யுடையவன். எ - று. (௪௧)

உருவ யங்குபொன் முப்புரி நூல்வயங் குரத்தான்
கருது தண்டொளிர் கமண்டல மேந்திய கரத்தான்
மருவு மும்பர்க ளெவரினுஞ் சிறந்ததொல் வரத்தான்
பொருவில் வெண்பொடி புனைந்தழ கியசெழும் புரத்தான்.

(இ-ள்.) வடிவுவிளங்குகின்ற பொன்னூலாகிய மூன்றுபுரியாகிய வுபவீதம் விளங்குகின்ற மார்பையுடையவன். எண்ணுகின்ற (யோக)தண்டமும், விளங்குகின்ற கெண்டிகையும், தாங்கிய கைகளையுடையவன். பொருந்திய தேவர்கள் யாவரினு மேம்பட்ட பழமையாகிய வரங்களையுடையவன். ஒப்பில்லாத வெள்ளிய திருநீறுபூசிய வழகுள்ள செழித்த சரீரத்தையுடையவன்.

பொன் - அழகு எனினும் ஆம். (௪௨)

குளிர்செ ழுங்குசைப் பவித்திர மணிந்தவங் குலியான்
றெளிப தந்தரு மயிணவா சனத்தினன் சிதையா
வளிவி ளங்கிய மனத்தினன் புலன்களோ ரைந்துங்
களிசி றந்தலை யாவகை கிறுவிய கருத்தான்.

(இ ள்.) குளிர்ந்த செழுமையுடைய தருப்பைப்புல்லாகிய பவுத்திரம் பூண்ட விரலையுடையவன். தெளிவாகப் பதனிட்ட மான்றோலாசனத்தை யுடையவன். கெடாத (இடமூக்கினும் வலமூக்கினும்) சஞ்சரிக்கின்ற வாயு விளங்கிய மனத்தையுடையவன். ஐந்துபுலன்களும் (தத்தம்இச்சைவழி) மகிழ்ச்சிகொண்டு திரியாதபடி ஒருவழிநிறுத்திய சித்தமுடையவன். எ று. (௪௩)

கடல்வ ளைந்தபார் ககனமோ ரெண்டிசை கலந்து
புடைதொ றும்புகுந் தழிவுறா திலங்கிய புகழான்
றிடமி குந்தபற் பல்விர தம்புரி திறத்தான்
சுடர்ந டுங்கிரி யெனப்பணைத் தெழுந்தபொற் றோளான்.

(இ ள்.) சமுத்திரஞ்சூழ்ந்த பூமியும், விண்ணுலகமும், எட்டுத்திக்கும் சேர்ந்து மற்றப் பக்கங்களிலும் பிரவேசித்துக் கெடாது விளங்கிய கீர்த்தியை யுடையவன். உறுதி மிகுந்த பல நோன்புகளைச்செய்யுந் தன்மையையுடையவன். ஒளியுள்ள பெரிய மலைபோலப் பருத்துயர்ந்த அழகிய தோள்களை யுடையவன். எ - று. (௪௪)

பொறுமை மாதவம் புண்ணியங் கருணைநற் போத
முறுதி நீதிபே ரின்பமெய் புகழறி வொழுக்க
மறுவில் சீலமிவ் வகையெலாந் திரண்டொரு வடிவாய்ச்
சிறுமை வானவர்க் ககற்றுவா னுதித்தெழில் சிறந்தோன்.

(இ ள்.) பொறுமை, பெரியதவம், புண்ணியம், கிருபை, நல்லஞானம், உறுதி, நீதி, மிக்கமகிழ்ச்சி, உண்மை, கீர்த்தி, அறிவு, உயர்ச்சி, குற்றமில்லாத வொழுக்கம் ஆகிய இந் நன்மைகளெல்லாங் கூடி யொருவடிவம் பெற்றுத் தேவர்களுக்குத் துன்பநீக்கும்பொருட்டு அவதரித்து, அழகினாலே விளங்குகின்றவன். எ - று. (௪௫)

தளர்வி லொன்னலர் மணிமுடி யுரிஞ்சுபொற் றுளா
னளவ ரும்பல கலைக்குமோர் பெருங்கட லனையான்
வளர்செ ழுங்கயி லாசமால் வரையுறை வாத
னுளம கிழ்ந்திட நிறைந்தொளிர் பத்தியி னுயர்ந்தோன்.

(இ-ள்.) தளர்தவில்லாத பகைவருடைய இரத்தின கிரீடங்களைத் தேய்க்கின்ற அழகிய பாதங்களையுடையவன். எண்ணுதற்கரிய பல சாஸ்திரங்களுக்கும் ஒரு சமுத்திரம்போன்றவன். வளர்கின்ற பெரிய செழிப்புள்ள கயிலைமலையில் வசிக்கின்ற சிவபெருமானுடைய மனங்களிக்குமாறு நிறைந்து விளங்கிய பத்தியினுயர்ந்தவன். எ - று. (௪௬)

இன்ன தன்மைய னினிதுவீற் றிருந்தவெம் மிறையோன்
பொன்ன டித்துணை பணிந்துசென் னியிற்கரம் பொருத்தி
முன்ன நின்றுள மகிழ்சிறந் தானந்த முதிருந்
தன்ன தன்பினோ டிசைந்துவாய் மலர்ந்திவை சாற்றும்.

(இ-ள்.) இப்படிப்பட்ட குணங்களையுடைய அவன், மகிழ்ச்சியுடனே யெழுந்தருளிய வெங்கள் பரமசிவத்தினுடைய அழகிய விரண்டுதிருவடிகளையும் வணங்கிச் சிரமேற் கைகளைச்சேர்த்து, சந்நிதானத்தினின்று, மனமகிழ்ச்சிகொண்டு ஆனந்தமிருந்த தன் அன்பினுடனே, பொருந்தி வாயைத்திறந்து இவைகளைச் சொல்லுவான். எ - று. (சுஎ)

பால லோசனு பழமறைக் கரியபொற் பாதா
சீல மாமுனி வராரி யயன்பல தேவர்
கோல மார்தரு சராசர மனைத்துமுன் கொடுத்த
மூல கார ண நிருவிகா ரத்தனி முதலே.

(இ-ள்.) நெற்றிக்கண்ணையுடையவரே! பழமையாகிய வேதங்களுங் காணமுடியாத அழகிய திருவடிகளை யுடையவரே! நல்லொழுக்க முள்ள பெரிய முனிவர்களையும், திருமாலையும், பிரமனையும், பலதேவர்களையும், அழகு பொருந்திய சரம் அசரம் (மனிதர் விலங்குமுதலிய இயங்கியற்பொருள்களும் மலை மர முதலிய நிலையியற் பொருள்களும்) ஆகிய வெவற்றையும் முன்னமே படைத்த ஆதிகாரணமானவரே! விகார மில்லாத வொப்பற்ற கடவுளே!. ()

பருவ மாமுகில் பொருகருங் குழலுமை பாகா
வொருவ ராயினு முணர்வதற் கரியபே ரொளியே
யிருளு றுவகை யெனையரு ளாலெடுத் தாண்ட
குருப ராவுயிர் தொறுநிறை குணப்பெருங் குன்றே.

(இ-ள்.) (மழைபெய்யும்) பருவமுள்ள கரியமேகத்தையொத்த கூந்தலையுடைய பார்ப்பதிதேவியாரை யொருபாகத்திலுடையவரே! ஒருவராயினும் அறிவதற்கருமையான பெரியசோதியானவரே! அஞ்ஞான விருளடையாத படி யென்னைத் தேவரீரது கிருபையால் எடுத்தாண்ட ஞானசிரியரே! ஆன்மாக்கடோறும் நிறைந்த குணமலையே. எ.- று. (சுகூ)

மனைமு தற்பல மயலிடைச் சுழன்றுழன் மாயை
வினையி ருட்கடல் படிந்தவர் தமக்கெதிர் மேவா
வுனைய டுத்துநின் னுளத்தொடு கலந்தினி துறையு
மெனைநி னைத்துவே றழைத்தகா ரணமெவ னெந்தாய்.

(இ-ள்.) எனது பிதாவானவரே! மனைவியர்முதலாகிய பலவாசைகளினிடத்து அகப்பட்டுச்சுற்றி, அற்பமாகிய வுலகமாயையும் தீவினையும் ஆகிய இருட்சமுத்திரத்தில் முழுகினவருக்கு முன்னேதோன்றாத தேவரீரைச்சேர்ந்து உமது திருவுளத்துடனே கலந்து சுகமாக வசித்திருந்த வென்னை வேறாக நினைத்து அழைத்தகாரணம் யாது? என்று கேட்டான். எ - று. (எ௦)

அடுத்த பஞ்சபூ தங்களாற் சமைந்தவிவ் வாக
மெடுத்த லைந்துழ றிவினைத் துறந்துபே ரின்பங்
தடுத்து கொந்திடர்க் கடற்படிந் திடமனஞ் சகியேன்
றொடுத்த செஞ்சுடர் மணியர வணிபுனை தூயோய்.

(இ-ள்.) செம்மையாகிய வொளிபற்றிய மணியை யுடைய சர்ப்பாபரணத்தை யணிந்த பரிசுத்தமானவரோ! கூடிய (பிரிதிவு முதலாகிய) ஐந்து பூதங்களாலாகிய இத்தேகத்தைப்பெற்றுத்திரிந்து முதிர்ந்தவுணர்வை யிழந்து மோட்சவின்பத்தை நீக்கி வருந்தி துன்பசாகரத்தில் முழுக மனம் பொறுக்க மாட்டேன். எ - று. (ருக)

என்று மாமுனி முகமல ரினிதுற நோக்கி
யன்று தேவல னெனும்பெய ரன்னவற் கருளி
மன்றல் கூர்மது வுண்டுவண் டிமிர்செழு மலர்ப்பூங்
கொன்றை வேணியன் கருணைசெய் தினையன கூறும்.

(இ-ள்.) மணமிகுந்த தேனையுண்டு வண்டுகள் இசையாகிய வொலி செய்கின்ற செழித்த கொன்றைப்பூமாலையை யணிந்த சடையையுடைய சிவபெருமான், இவ்வாறுசொல்லிய பெரிய முனிவனது மலர்போன்ற முகத்தைச் செவ்வையாகப் பார்த்து, அப்பொழுது தேவலன் என்னும் நாமத்தை யவனுக்குச் சூட்டி கிருபைசெய்து, இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுவார். எ - று.

தேவலன் - தெய்வத்தன்மையில் வல்லவன் என விரியும். (ருஉ)

நிலவு மெய்ப்புகழ் படைத்துயர் தேவல நின்னா
லுலகி னுக்கெலாஞ் செயுமுப காரமொன் றுளதா
லலைவின் மற்றதற் காகவின் றுனையினி தழைத்தாம்
பலவ கைப்பட நினைந்துவீண் பருவரல் கொள்ளேல்.

(இ-ள்.) பரம்பிய வுண்மையாகிய கீர்த்தியைப்பெற்றுயர்ந்த தேவல முனிவனே! உன்னாலே உலகங்களுக்கெல்லாம் செய்யுமுபகார மொன்றுள்ளது, அலைதலில்லாத அக்காரியத்துக்காக விப்பொழுது துன்னைக் களிப்புடன் அழைத்தோம், நீ பலவிதமாகவெண்ணி வீணாகிய துன்பமடையாதே என்று சிவபெருமான் அருளினார். எ - று. (ருங)

மூவி ரண்டவ தாரநீ புரிந்துசீர் முயங்கித்
தாவ ரும்புகழ் மருவியே ழாம்பவந் தன்னிற்
பூவ யன்திரு மால்பல விபுதரும் போற்ற
மேவு மின்பசா யுச்சியவீ டடைதியால் மேலோய்.

(இ-ள்.) மேன்மையுள்ள தேவலமுனிவனே! நீ ஆறுதடவை மனிதப்பிறப்படைந்து இன்பங்களை நுகர்ந்து கெடுதலில்லாத கீர்த்திபெற்று, ஏழாவது பிறப்பில், மலரில் வசிக்கின்ற பிரமனும், விட்டுணுவும், பல தேவர்களுந் துதிக்குமாறு, பொருந்திய சுகத்தையுடைய மோட்ச பதவியை யடைவாயென்று பின்னுஞ் சிவபெருமானருளினார். எ - று. (ருச)

சூலவு தண்கதிர் வெண்மணி துறைதொறுங் கொழிக்கு
மலைகெ டுந்திருப் பாற்கட லிடைப்பணி யதன்மேன்

மலர்ம டந்தைபூ வனிதையுஞ் சேவடி வருட
உலக மெண்டிசை யடங்கலும் புரக்குமா லுறங்கும்.

(இ-ள்.) விளங்குகின்ற குளிர்ந்த கிரணம்பொருந்திய வெள்ளிய முத்துகளை நீர்த்துறைகளி னெவ்விடங்களிலு மொதுக்குகின்ற அலைகளையுடைய பெரிய திருப்பாற்கடலி னடுவில், ஆதிசேடன்மேல் திருமாதும் பூமாதும் சிவந்த பாதங்களை தடவிப்பிடிக்கப் பல வுலகங்களையும் எட்டுத் திக்குகளையும் காக்கின்ற திருமாலானவன் அறிதுயில்கொள்வான். எ - று. (௫௫)

அனைய மாமணி நிறத்துமா விடத்துநீ யணுகிப்
புனையு நாபியங் கமல நூல் வாங்கியிப் பொழுதி
னெனைய தானையு மியற்றிவா னவர்முனோர்க் கீந்து
வினையு றாதவர் மானமோம் புதிதவ விறலோய்.

(இ-ள்.) தவ வல்லமையையுடைய தேவலமுனிவனே! அவ்வாறு நித்திரைசெய்கின்ற பெருமையாகிய நீலமணிபோலும் நிறத்தையுடைய விட்டுணுவின் பக்கல் நீசேர்ந்து, அழகிய (அவனுடைய) உந்தித்தாமரை நூலைவாங்கி, இப்பொழுதே அலங்கரிக்கின்ற எப்படிப்பட்ட ஆடைகளையுஞ் செய்து, தேவர் முதலானோர்களுக்குக் கொடுத்து, யாதொரு தீமையுஞ் சேராமல், அவர்கள் வெட்கத்தைக் காக்கக்கடவை யென்று சிவபெருமான் சொல்லியருளினர். ().

உம்பர் தங்கிய தேவர்பொன் னங்கனன் குறவே
யம்ப ரம்புரிந் தலங்கரித் திடுதலா லவனி
யிம்ப ரெங்கணும் பரவுதே வாங்கனென் றினிநீ
செம்பெ ரும்பெய ரும்புனை குவையுயர் சிறப்பால்.

(இ-ள்.) சுவர்க்கலோகத்தில் வசிக்கின்ற தேவர்களுடைய அழகிய சரீரம் நன்மையடையும்படி, ஆடைகள் செய்து, அலங்கரித்திடுதலினாலே, பூலோகமும், இவ்விடமும் மற்றெவ்விடத்திலும், பரவிய தேவாங்கனென்று நீ செவ்வையாகப் பெரிய பெயரையும் பின் மிக்கசிறப்புடன் பெறுவாயென்று சிவபெருமான் கூறினர். எ - று.

உம்பர் பண்பாகுபெயர். (௫௭)

வன்றி றற்கொடு முடித்தடங் கனகமால் வரைக்குத்
தென்றி சைத்தலைப் பாதகண் டத்தினிற் சிறந்து
நன்று பெற்றுடைச் சகரநாட் டலர்மக ளயப்பா
லொன்று பொற்பினு மோதமா நகரமொன் றுளதால்.

(இ-ள்.) வலிய சிகரங்களையுடைய பெரிய மேருமலைக்குத் தென்றிக்கில், முதன்மையாகிய பாதகண்டத்திலே சிறப்புற்று, நன்மைக ளெல்லாம் பொருந்திய சகரநாட்டிலே, திருமகளானவள், விருப்பத்துடனே கூடிய அழகினையுடைய பெருமைபொருந்திய ஆமோதநகரம் ஒன்றுள்ளது. எ - று. ()

தனத னன்புறு தனியள காபுரி தனினு
மனக வும்பர்கட் கிறையம ராவதி யதினுங்
கனவ ளம்புனைந் தலைகடற் கலையுடைக் கவின்பூ
வனிதை தன்றிரு வருண்முக மெனும்படி வயங்கும்.

(இ-ள்.) குபேரனால் விரும்பப்பட்ட ஒப்பில்லாத அளகாபுரி பட்டணத்தினும், பரிவமில்லாத தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனுடைய அமராவதிபட்டணத்தினும், மிகுந்த வளப்ப மடைந்து, அலைகளை யுடைய சமுத்திரமாகிய ஆடையையணிந்த பூமிதேவியினுடைய அழகியதிருவையுள்ள முகமென்று (கண்டோர்)சொல்லும்படி விளங்கும். (அந்த ஆமோதநகரம்). எ - று.

புகழு மந்நகர்க் கதிபதி யாய்முடி புனைந்து
சகல மன்னருந் திறைகொணர்ந் தடிமுறை தாழ
விகலி மொன்னலார் பகைகடந் தினியகோல் செலுத்தித்
திகழு நன்னலத் திருத்தியென் றரனருள் செய்தான்.

(இ-ள்.) (யாவராலும்) புகழப்பட்ட அந்த ஆமோத நகரத்துக்கு அரசனாகி கிரீட மணிந்து, எவ்வரசரும் கப்பங்கொண்டுவந்து (கொடுத்து) பாதங்களை முறையாக வணங்க, வலியுள்ள சத்துருக்களுடைய பகையைவென்று செங்கோல் செலுத்தி விளங்கும் நன்மையுடனே இருக்கக்கடவை யென்று சிவபெருமான் அநுக்கிரகஞ்செய்தார். எ - று. (௬0)

அருள்பு ரிந்தவெம் பிரானடி மலர்முடிக் கணிந்து
தருவெ னுங்கரங் குவித்தவன் விடைகொடு தவத்தால்
பொருவி கந்ததே வாங்கமா முனிநெடும் புகழ்மான்
மருவு தண்டிரைப் பாற்கடற் கேகுவான் மதித்தான்.

(இ-ள்.) ஒப்பில்லாத தவத்தின் மேம்பட்ட தேவாங்கமுனியானவன், இவ்வாறு கட்டளையிட்டருளிய எங்கள் சிவபெருமானுடைய மலர்போன்ற திருவடிகளைச் சிரமேற் சூடி, (கற்பகத்) தருவென்று (கண்டோர்) சொல்லும்படியாகிய கைகளைக்குவித்து கும்பிட்டு, அச் சிவபெருமானுடைய வுத்தரவு பெற்றுக்கொண்டு, பெரிய கீர்த்தியையுடைய திருமாலானவர், பொருந்தியிருக்கின்ற குளிர்ந்த அலைகளையுடைய திருப்பாற்கடலுக்குப் போகும்படி நினைத்தான். எ - று. (௬க)

தவழுயர்தேவலன் சம்பவச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் ௫ - க்கு பாடல் ௧௨0.

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை தண்டாமரைத்தா டுணை.

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

ஐந்தாவது

சவுடநாயகிவரந் தந்தசருக்கம்.

கலிநிலைத்துறை.

என்று சூதனங் கியம்பலு மிருகரங் கூப்பிக்
குன்று றுதமெய்த் தவத்தின ரரும்பெருங் குணத்தோய்
அன்று தேவலன் பயோததி யிடைத்துயி லரிபாற்
சென்று நூல்கொணர் திறமுநீ யருள்கெனச் செப்பும்.

(இ-ள்.) சூதபுராணிகர், (தேவாங்கமுனிவனுடைய பிறப்பின் வரலாறு இவ்வகை) என்று சொன்னவுடனே, குறையாத வுண்மைத் தவத்தையுடைய முனிவர்கள், இரண்டு கைகளையும் குவித்து, அரிய மேலான குணங்களையுடையவரே! முற்காலத்தில் தேவாங்கமுனியாென்வன், திருப்பாற்கடலினடுவில் அறிதுயில் செய்கின்ற திருமாலிடம்போய் நூல் கொண்டுவந்த மேன்மையை தேவரீர் சொல்லவேண்டுமென்று கேட்க, சூதபுராணிகர் சொல்வாராயினார். எ - று.

பய+உததி=பயோததி. இது குணசந்தி. அருள்க, என தொகுத்தல்விகாரம்.

முனம்ப ரம்பொரு ளருளிய தேவல முனிவன்
மனங்கொ ளன்பினே டெழுந்துநீள் வழிபல கடந்து
அனந்த னின்புறு சுதைப்பெருஞ் சலநிதி யணுகிக்
கனம்பொ ருந்திய கருடனச் சிரமமுன் கண்டான்.

(இ-ள்.) முன்னமே சிவபெருமானாற் சிருட்டிக்கப்பட்ட தேவல முனியானவன், மனத்தில் ஆசைகொண் டெழுந்து பலதூரவழியை நீங்கி, திருமால் விரும்பிய அமுதத்தையுடைய பெரிய பாற்கடலை யடைந்து, சீர்மையுள்ள கருடனுடைய பன்னசாலையை யெதிரே கண்டான். எ - று.

அனந்தன் சேடன் எனினுமாம். (௨)

தொடர்ந்து பானுவின் கதிர்சிறி தேனுமுட் டோன்றா
தடர்ந்து கோரகந் துணர்பசுந் தீவிளி யமுது
படர்ந்த பூங்கனி நிறைந்துகற் பகத்தையும் பழித்துக்
கடந்து வானளா யளப்பருந் தருத்திரள் கவினும்.

(இ-ள்.) அக் கருடனச்சிரமத்தில், சூரியனுடைய கிரணங்கள் சிறிதாயினும் உள்ளே பற்றித் தோன்றாதபடி நெருங்கி, அரும்புகளும், பூங்கொ

த்துகளும், பசிய காய்களும், சுவை பரவிய அழகிய கனிகளும் நிறைந்து கற்பகத்தருவையும் (வளமையால்) ஒப்பாகாமையாலே பழித்து வென்று ஆகாசம் வரையினும் வளர்ந்து, அளவில்லாத விருக்ஷகூட்டங்கள் அழகுசெய்யும்.

தடம்பெ றுங்கடற் பிறந்ததெள் ளமுதினுந் தழைத்துத்
திடம்பெ றுஞ்சுவைத் தேறலந் துளிமழை சிதறி
யிடங்கொ ளுந்திசை தொறும்பரி மளங்கொழித் தெழிற்பூ
மடந்தை யின்புற வலர்வகை யெண்ணில மலியும்.

(இ-ள்.) விசாலம் வாய்ந்த சமுத்திரத்தில் தோன்றிய தெளிந்த அமுதத்தினுஞ் செழித்து, உறுதிபெற்ற மதுரமான தேன்றுளி யாகிய அழகிய மழையைச்சிந்தி, அகன்ற திசைகள்தோறும் மணம்வீசி, அழகிய பூமிதேவி மகிழும்படி, அளவில்லாத பலவகைமலர்களும் நிறைந்திருக்கும். எ - று.

பூமடந்தை - திருமகள் எனினும் ஆம். (சு)

அறுப தப்பொறிச் சிறையளி யினமது வருந்தி
நறும லர்த்தொடை புனைந்தகந் தருவரு நாண
வெறிதி ரைப்பெருங் கடலெழு மமுதினு மினிதாய்
வெறிம னத்தொடு விளரிமா லுவப்புற மிழற்றும்.

(இ-ள்.) ஆறுகால்களையும், புள்ளியுள்ள சிறகுகளையும் உடைய வண்டுக்கூட்டங்களானவை, தேனையுண்டு, மணமுள்ள பூமாலையணிந்த கந்தருவர்களும் வெட்கும்படி, வீசுகின்ற அலைகளையுடைய பெரிய கடலின்கண் ணுண்டாகிய அமுதத்தினும் இனிய சுவையுடையதாகி, வெறி கொண்ட மனத்துடனே விளரி என்னும் செய்தநிலப்பண்ணை திருமால் மகிழும்படி பாடும். எ-று.

பலவ ளம்படைத் தனையவாச் சிரமமிப் பரிசாற்
குலவு கின்றது கண்டுதே வலன்மகிழ் கூர்ந்து
மலர்ம ணங்கமழ் தென்றலால் வழித்தகை மாறி
யலர்த டந்தருத் தண்ணிழ லிடையினி தமர்ந்தே.

(இ-ள்.) தேவலமுனியானவன், அப்படிப்பட்ட கருடனாச்சிரமமானது, இக்குணங்களையுடையதாகிப் பல வளப்பங்களைப்பெற்று விளங்குகின்றதைப்பார்த்து, களிப்புமிகுந்து,பூக்களின் வாசனைபொருந்திய தென்றற்காற்று வீசுதலினாலே வழிவந்த இளைப்புநீங்கி, விரிந்த பெரிய தருவினது குளிர்ந்த நிழலினிடத்து, சுகமாகச் (சிறிதுநேரம்) இருந்து. எ - று. (சு)

சந்த வெண்மணித் திரைப்பெருந் தடங்கட றன்னி
லந்த மில்லவ னிருப்பையா மறிகுவ தரிதா
விந்த நல்வனத் தருந்தவம் புரிகுவ மென்றே
சிந்தை யுன்னியத் திறன்முனி யின்னன செய்யும்.

(இ-ள்.) அழகாகிய வெள்ளிய முத்துகளைக் கொழிக்கின்ற அலைகளையுடைய மிக்க விசாலமாகிய திருப்பாற்கடலிலே முடிவில்லாத திருமாலிருக்

கும் இடத்தை நாம் காணுவது முடியாது ஆதலால், இந்த நல்ல சோலையிலிரு ந்து அரிய தவத்தைச் செய்வோமென்று மனத்தி லெண்ணி அந்த வல்லமை யையுடைய தேவலமுனிவனானவன் இக் காரியங்களைச் செய்வான். எ-று. ()

அரிய வைம்புல னலைவுறு வகையமைத் தடக்கித்
திரித ருங்கருத் தின்றிமேல் வழிமனஞ் சேர்த்துப்
பரிதி வெங்கதி ராழியம் பரமனைப் பரவிப்
புரிவ ரும்பெரு மாதவம் பலபகல் புரிந்தான்.

(இ-ள்.) தேவாங்கமுனியானவன், அடக்குவதற்கருமையாகிய ஐந்து புலன்களையும் (விடயங்களிற் சென்று) வருந்தாதபடி அடக்கி, எவ்விடங்களி லுஞ் செல்லுகின்ற எண்ணமில்லாமல், ஆக்ஞையின் மேற்பட்ட துவாதசா ந்தவழியில் மனத்தை நிறுத்தி, சூரியனைப்போலும் வெம்மையாகிய கிரணங் களையுடைய சக்கராயுதந்தரித்த அழகிய திருமாலைத் தோத்திரஞ்செய்து, யா வர்க்குஞ்செய்தற்கரிய பெரிய மகத்துவமுள்ள தவம் பலநாள் செய்தான். ()

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சகதலம் பணிதே வாங்கன் றவநிலை தனையு ணர்ந்து
திகழ்மணி மகுட வங்கார் திருமலைப் போட யேந்திரன்
புகழெனு நிறைந்த தண்பார் பொருதிரைப் பரவை நாப்பண்
ணகமகிழ் வொடுபொ லந்த வரியருள் புரிய வெண்ணி.

(இ-ள்.) விளங்குகின்ற இரத்தினமுடியையணிந்த வங்கார்திருமலைப் போடயன் என்னும் அரசனுடைய கீர்த்திபோல நிறைந்த பூவுலகின் மோது கின்ற அலைகளையுடைய திருப்பாற்கடலி னடுவில் மனமகிழ்ச்சியுடனேவிளங் கிய திருமாலானவர், பூதலத்தோர்கள் வணங்குகின்ற தேவாங்கமுனிவ னுடைய தவநிலைமையை யறிந்து, அநுக்கிரகஞ்செய்ய நினைந்து. எ-று. (சு)

தேவதுந் துபிமு ழங்கச் சித்தர்மா முனிவர் போற்ற
மேவுகந் தருவர் பாட விரைமலர் மாரி தூவ
மூவரும் பரிதி யேய்ப்ப முகிர்க்கிர் மகுட மின்னப்
பூவருந் திருமு யங்கும் புயவரை பொலிந்து தோன்ற.

(இ-ள்.) தெய்வவாத்தியங்கள் ஆரவாரிக்கவும், சித்தர்களும் பெரிய முனிவர்களும் துதிக்கவும்,பொருந்திய கந்தருவர்கள் பாடவும்,வாசனையுள்ள புட்பமழைகளைத் (தேவர்கள்) வருஷிக்கவும், கெடுதலில்லாத சூரியனுக்கொப் பாக மிகுந்த கிரணங்களையுடைய கிரீடமானது பிரகாசிக்கவும், (செந்தாம ரை) மலரில் வசிக்கின்ற திருமகள் தழுவுகின்ற மலைபோன்ற தோளானது பிரகாசித்துத் தோன்றவும். எ-று. (௪0)

தடவரை யெனவி ரிந்த தனிநெடு மருமந் தன்னில்
விடுகதிர் பரப்புஞ் செங்கேழ் வியன்கவுத் துவம்வாள் வீச
மடலவிழ் பங்க யச்செம் மலர்த்திரு வடிவ யங்க
வடல்கெழு வயின தேய னணியிட ர்தனிற் றோன்றி.

(இ-ள்.) விசாலமாகிய மலைபோல அகன்ற வொப்பில்லாத பெரியமார்பில் விடப்பட்ட கிரணத்தைப்பரவச்செய்கின்ற செம்மைநிறமுள்ள அழகிய கௌஸ்தவாபரணமானது பிரகாசத்தைவீசவும், இதழ்விரிந்த செந்தாமரைமலர் போன்ற திருவடிகள் விளங்கவும், வலிமைபொருந்திய கருடதேவனுடைய அழகிய முதுகின்மீது (ஆரோகணித்துக்) காணப்பட்டு. எ-று. (கக)

செக்கரம் பரிதி வாளாற் றினங்கரிந் துலர்ப யிர்க்கு
மிக்கதண் புனற்சூற் கொண்ட வியன்புய லெதிர்த்த தென்னப்
புக்கருந் தவத்தா லெய்த்துப் பொருந்துதே வலனே ராக
மைக்கருங் குவளை யொண்கண் மலர்மகள் கொழுநன் வந்தான்.

(இ-ள்.) அழகிய சிவந்த சூரியனுடைய கிரணங்களாலே நாடோறும் வாடிக் காய்கின்ற பயிர்களுக்கு மிகுந்த குளிர்ச்சியுள்ள நீரைச் சூலாகக்கொண்ட பெரியமேகமானது நேர்ந்தாற்போல, அடைதற்கரிய தவத்தினாலே பிழைத்துத் தன்னையடுத்த தேவாங்கமுனிவனுக் கெதிராக, மையெழுதப்பட்ட கரிய நீலோற்பலம்போலும் அழகிய கண்களையுடைய திருமகளுடைய நாயகனாகிய விட்டுணுமூர்த்தியானவர், வந்து தோன்றினார். எ-று. (கஉ)

பன்னக வயிரி மீது பழமறை தொழும்பொற் பாத
முன்னவ னெதிர்த லோடு முதிர்தவ முனிவர் கோமான்
றன்னக மகிழ்வு பொங்கித் தழைத்தெழத் தாழ்ந்து செங்கை
பொன்னவிர் சடைசூழ் சென்னி பொருத்தினன் புகழ லுற்றான்.

(இ-ள்.) பாம்புகளுக்குப் பகையாகிய கருடன்மேலே, பழையவேதங்களாற் றுதிக்கப்பெற்ற அழகிய திருவடிகளையுடைய திருமாலானவர் தரிசனமானவுடனே, மிகுந்த தவத்தையுடைய முனிவர்களுக்குத் தலைவனாகிய தேவாங்கமுனியானவன், தன்னுடைய மனத்தில் மகிழ்ச்சிமிகுந்து பெருகி வெளியேதோன்ற நமஸ்கரித்து, சிவந்தகைகளைப் பொன்போலும் விளங்குகின்ற சடைகள்சூழ்ந்த தலைமேற்குவித்துத் துதிக்கத்தொடங்கினான். எ-று.

பொருத்தினன் - முற்றெச்சம். (கங)

ஆரணு திபர்கொண் டாடு மமலவற் புதசொ ரூப
காரணு மவுண னந்தக் கருணையங் கடலாய் நின்ற
பூரணு புவிவா னாதிப் புவனமு மினிது போற்று
நாரணு தேவர் காளு நாடுபே ரின்ப வாழ்வே.

(இ-ள்.) இருக்குமுதலிய வேதங்களை யோதுதற்குரியவராகிய பிராமணர்கள், பாராட்டுகின்ற மலமற்றவரே! அதிசயமாகிய வடிவையுடையவரே! (எவற்றிற்கும்) மூலமானவரே! ஞானமும் ஆனந்தமும் கிருபையும் நிறைந்த சமுத்திரமாகி (யெங்கும் நிறைந்து) நின்ற பூரணமானவரே! பூமியும் ஆகாயமுமாகிய வுலகங்களெல்லாம் நன்று துதிக்கின்ற நாராயணனென்னுந் திருநாம

முடையவரோ! தேவர்களெப்பொழுதுந் தேடுகின்ற பேரின்பவாழ்வையுடைய வரோ!. எ - று.

புவி, வான், புவனம் ஆகுபெயர்கள். (௧௪)

வடங்கொடு சுணங்கு பூத்து வாரணிந் தெழுந்து விம்மி
யடர்ந்துகுங் குமப டீர மளைந்தமிர் தார்ந்த வின்பக்
குடம்பொரு மிளமு லைப்பூங் குழற்றிரு மடந்தை வாழு
மிடங்கொளு மார்பா போற்றி யென்றன னெவர்க்கு மிக்கான்.

(இ - ள்.) எவர்க்கும் மேலாகிய தேவாங்கமுனியானவன், முத்துமாலை யணியப்பட்டு, தேமல்படர்ந்து, கச்சணியப்பட்டு, மேலெழுந்து பூடைத்து, நெருங்கி, குங்குமஞ் சந்தனம் பூசப்பட்டு, அமுதுநிறைந்த நல்லகுடங்களை யொத்த இளமைபொருந்திய முலைகளையும், மலர்களையணிந்த கூந்தலையுமுடைய திருமகள்வாழ்கின்ற இடமாகக்கொண்ட மார்பையுடையவரோ நமஸ்காரம் என்று தோத்திரஞ்செய்தான். எ - று.

இடங்கொளும் - விசாலமாகக்கொண்ட எனினுமாம். (௧௫)

போற்றுமம் முனியை நோக்கிப் புனிதநீ புவியின் மீதிங்
காற்றுமோன் பிணமகிழ்ந்தா மாதலா லுனக்கு வேண்டுந்
தேற்றுறு வரம்யா தென்பாற் செப்புதி தருது மென்றான்
காற்றினுங் கடுமை வாய்ந்த கலுழனூர்ந் தெதிர்ந்த கண்ணன்.

(இ - ள்.) வாயுவினும் வேகத்தையுடைய கருடவாகனத்தை நடத்தி வந்த திருமாலானவர், (தம்மை) வணங்கிய அந்தத் தேவாங்கமுனிவனைப்பார்த்து, பரிசுத்தமானவனே! நீ யிவ்வுலகத்தில் இப்பொழுதுசெய்த தவத்துக்கு மனமுவந்தோம் ஆகையாலே, உனக்குவேண்டிய தெளிவாகிய வரம் யாது எம்மிடத்துக் கேட்கக்கடவாய் அதனைக் கொடுக்கின்றோமென்று சொன்னார்.

கிருஷ்ணன் என்பது கண்ணன் எனத் தமிழில் திரிந்துவந்தது. இது, திருக்கோவையாரில் - "கருங்கண்ணனை யறியாது நின்றோன்" என்னுங் கட்டளைக்கவித்துறைக்கு, பாரத்துவாசி நச்சினார்க்கினியா ரருளிச்செய்தவுரையா லுணர்க. (௧௬)

அப்பொழு தினிற்றே வாங்க னையகே ளரவு சூழ்ந்
துப்புறழ் சடில ஞானச் சுடாருட் படிவான் றன்னு
மெப்பெருஞ் சுரர்க்கு மியார்க்கு மேடக மினிதி யற்ற
மொப்பரு பனுவல் வேண்டு முளத்துறு விருப்ப மீதே.

(இ - ள்.) தேவாங்கமுனியானவன், திருமாலானவர் கேட்டகாலத்தில் ஐயனே, கேட்பீராக! பாம்புகள்சுற்றிய பவளம்போன்ற சடையையுடைய ஞானசூரியனாகிய சிவபெருமானது கட்டளைப்படி, (சுவர்க்கலோகத்தில்) வசிக்கின்ற எவ்வகைப்பட்ட தேவர்களுக்கும் மற்றுமுள்ள மனிதர் முதலானோர்களுக்கும் (அணியும்படி) ஆடைகளை நன்றாகச்செய்ய ஒப்பில்லாத நூல்வேண்டும். (ஆதலால்) என் மனத்திலுள்ள ஆசை யிதுதானென்றான். எ - று. ()

எனமகிழ் சிறந்து மாறன் னிலஞ்சியங் கமலத் துற்ற
பனுவறந் திதனு னீயப் பண்ணவ ரோனோர் யார்க்கும்
புனைபல் வம்ப ரங்கள் புரிந்துநாண் புரத்தி யென்றே
கனிவுறு கருணை செய்து கலுழனூர்ந் தினிது சென்றான்.

(இ - ள்.) இவ்வாறு தேவாங்கமுனிவன் சொல்ல, திருமாலானவர் மகிழ்ச்சியடைந்து, தம்முடைய அழகிய வுந்திக்கமலத்திலுள்ள நூலை யெடுத்துக்கொடுத்து, இந்நூலினாலே நீ அந்தத் தேவர்களுக்கும் மற்ற யாவர்களுக்கும், உடுத்தும்படி பல ஆடைகளைச் செய்து கொடுத்து வெட்கத்தைக் காப்பாயென்று, இரக்கத்துடனே கிருபைசெய்து, கருடனை நடத்திக்கொண்டு களிப்புடனே சென்றார். எ - று. (௧௯)

ஆயதற் பின்னர் ஞானத் தருந்தவ னங்க ணீங்கி
மேயபற் பலகா னோடு வேலைநால் கடந்து சம்புத்
தூயநற் றீவு நண்ணிச் சூழுவர்க் கடலின் ஞாங்கர்
மாயமிக் குறும ரக்கர் வஞ்சவாச் சிரமம் வந்தான்.

(இ - ள்.) ஞானத்தையும், அரியதவத்தையுமுடைய தேவாங்கமுனிவன், அதன்பின்னே அவ்விடத்திலிருந்து பிரயாணப்பட்டு, பொருந்திய பல காடுகளையும் நாலுசமுத்திரங்களையுந்தாண்டி, பரிசுத்தமாகிய நல்ல சம்புத்தீவையடைந்து, சுற்றிய வுவர்ச்சமுத்திரத்தின் பக்கத்தில், தந்திர மிகவுமுடைய இராக்கதர்கள் வசிக்கின்ற வஞ்சகமான இடத்தை யடைந்தான். ()

கலிவிருத்தம்.

மலையசம் பாடலம் வகுளங் கோங்ககில்
பலவுபுன் னாகமாப் பணைப ராய்வடம்
இலவுசெங் கோடுதேக் கிதழி யிக்குள
முலவைவயஞ் சணிதிமில் சோமை காஞ்சனம்.

(இ - ள்.) சந்தனம்-பாதிரி - மகிழ் - கோங்கு - அகில் - பலா - புன்னை பெரியஅரசு - பராய் - ஆல் - இலவு - சிவந்தகிளைகளையுடைய தேக்கு - கொன்றை - கடப்பம் - இலுப்பை - காயா - வேங்கை - மா - புன்கு ஆகிய இம் மரங்களும். எ - று. (௨௦)

அரிதகி கூவிள மாம்பி ரங்கவிர்
கருவிளை சீவனி கதலி யாசினி
முருகுசம் பகவுதேன் முதிர்ந்த பூகநீள்
மருதசோ கங்குமிள் மதுக நாகரி.

(இ - ள்.) கடுக்காய் - வில்வம் - புளிமா - முண்முருக்கு - காக்கணம் - பாலை - வாழை - ஈரப்பலா - எலுமிச்சை - சண்பகம் - தேன்மிகுந்த கமுகு - நீண்ட மருதம் - அசோகம் - குமிள் - இருப்பை - குருக்கத்தி ஆகிய இம் மரங்களும். எ - று. (௨௧)

சல்லகி கேதகை சாதி மாலதி
குல்லைமந் தாரைபூங் குராவ லம்புரி
யெல்லைதீர் தருத்திர ளினைய வெங்கணு
மல்லல்கூர்ந் தெழுந்துமேல் வான ளாவுமால்.

(இ-ள்.) ஆத்தி - தாழை - சாதி - சிறுசண்பகம் - வெட்சி - மந்தாரை - பூக்களையுடைய குரா - நந்தியாவர்த்தம் ஆகிய அளவில்லாதமரங்களின் கூட்டங்களாகிய விவைகள் எவ்விடங்களினும் வளப்பமிகுந்து ஓங்கி ஆகாயத்தை மூடியிருக்கும். எ - று. (உ௨)

இமிழ்திரைக் கடலயின் றிருந்த மாமுனி
தமிழொடு திளைத்துமென் றடம டுப்படிந்
துமிழ்மலர் நறைகவர்ந் தொளிருந் தாதுறத்
திமிர்தரும் தென்றலெத் திசையும் வீசுமால்.

(இ-ள்.) ஒலிக்கின்ற அலைகளை யுடைய சமுத்திரத்தை யருந்தி, (பொதியமலையில்) எழுந்தருளியிருந்த பெருமையுள்ள அகத்தியமுனிவருடைய தமிழுடனே கலந்து, மெல்லிய விசாலமாகிய சுனைகளிலே முழுகி, சொரிகின்ற மலர்மணங்களை வாரிக்கொண்டு, விளங்குகின்ற மகரந்தத்தை மிகவும் பூசிய நல்ல தென்றற்காற்றானது, எந்தத்திசையினும் வீசும். எ - று. (உ௩)

மண்ணிய பலவகை வளமுற் றோங்குமத்
தண்ணிய பொழிலிடைச் சார்ந்து தேவலன்
புண்ணிய ரெவர்தவம் புரிவ தோவிதென்
றெண்ணியுட் புறத்தினு மினிது சென்றரோ.

(இ-ள்.) தேவாங்கமுனியானவன், மாட்சிமைப்பட்ட பலவிதமாகிய வளப்பங்களை யடைந் துயர்ந்த அந்தக் குளிர்ச்சியுள்ள சோலையின்கண் சேர்ந்து, இச்சோலையானது, எந்தப்புண்ணியர்கள் தவஞ்செய்யுமிடமோ என்று கருதி அதனுள் நன்று சென்று. எ - று. (உ௪)

கவடநெஞ் சகத்தொரு கனநி சாசரன்
பவமகன் றவரெனப் பரம வேடமுற்
றுவகையன் பினர்பல ருவந்து சூழ்தரத்
தவமுயன் றிருந்தவச் சாலை மேவினன்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன், வஞ்சமுள்ள மனத்தையுடைய ஒரு பெரிய அசுரனானவன், பாவநீங்கிய முனிவர்போல மேலாகிய (தவ) வேடந்தரித்து, களிப்புள்ள வன்புடைய பலமாணுக்கர்கள், விரும்பித் தன்னைச்சூழத் தவஞ்செய்துகொண்டிருந்த அந்தப் பன்னசாலையைச் சேர்ந்தான். எ - று.

நிசாசரன் = இரவில் சஞ்சரிப்பவன். (உ௫)

முன்படர் தேவலன் முகத்தை நோக்கியே
யன்பநீ யார்பெயர் யாது மற்றிவண்
இன்புற வந்ததென் னியம்பு வாயெனத்
தன்படிற் றுயபொய்த் தவன்வி னவினன்.

(இ-ள்.) வஞ்சமாகிய பொய்த்தவத்தையுடைய அவ்வசுரனானவன், எதிரே வந்த தேவாங்கமுனிவனுடைய முகத்தைப் பார்த்து, அன்பனே நீ யார்? (உன்னுடைய) பெயரென்ன? இவ்விடத்து நன்றுவந்த காரணம் யாது? சொல்லக்கடவை யென்று கேட்டான். எ-று.

ஏ - அசை. தன், மற்று சாரியைகள். (உசு)

வினவலுந் தூயநான் மெய்ப்ப ரம்பொருண்
மனமதி லுதித்தவன் வழங்கு மென்பெயர்
புனைவுறு தேவலன் புலவ ரேனையோ
ரினைவுறா வகைப்பட மியற்ற வேண்டியே.

(இ-ள்.) (அவ்வசுரனானவன்) கேட்டவுடனே, (தேவாங்கமுனிவன்) பரிசுத்தமாகிய முனிவனே! நான் உண்மைப்பொருளாகிய சிவபெருமானுடைய இதயத்தி லுண்டானவன். சொல்லப்படும் எனது பெயர் அழகுபொருந்திய தேவலன். தேவர்களும் மற்றையோரும் துன்பமடையாதவிதம் ஆடைகளைச் செய்யவிரும்பி. எ-று. (உஎ)

பரனருட் படிநெடும் பாற்க டற்றுயில்
வரனிடத் தணுகினான் மகிழ்வி னன்னவன்
தரநயந் தேற்றுவந் தனனென் றோதலும்
விரதமற் றவனிது விளம்பு வானரோ.

(இ-ள்.) சிவபெருமானுடைய கட்டளையின்படி பெரிய பாற்கடலில் (யோக) நித்திரைசெய்கின்ற திருமாலிடஞ்சென்று, அத்திருமாலானவர், களிப்புடன் நூல்கொடுக்க விருப்புடன் வாங்கிவந்தேனென்று சொன்னவுடனே, நன்னேன்பு சிறிது மில்லாத அவ் வசுரனானவன் இவ்வாறு சொல்லுவான். ()

நிறைந்தபே ரறிவினோய் நீயின் றிவ்விடத்
துறைந்துபல் கனிநுகர்ந் தோங்கற் போக்கியே
சிறந்தவான் கதிர்வரச் சேறி யென்னலு
மறந்தரா மனத்தனன் றென்று வைகினன்.

(இ-ள்.) நிறைந்த பெரிய அறிவை யுடைய தேவலமுனிவனே! நீ இன்றிவ்விடத்தில் வசித்துப் பலவாகிய கனிகளை யருந்தி, மேலாகிய ஆகாயத்தி லுதிக்கின்ற சூரியனை அத்தமனமலையிற் போகச்செய்து, (காலை உதய பருவதம்) வருங்கால் செல்லக்கடவை யென்று சொன்னவுடனே, பாவமில்லாத மனத்தையுடைய தேவலமுனிவன், நல்லதென்று அவ்விடத்துத் தங்கினன். எ-று.

சூரியனை மலையிற்போகச்செய்து பின் உதயபருவதத்தில் சூரியன்வரச் சேறி எனவே இன்றிரவுதங்கிப் போகக்கடவை யென்றதாயிற்று. (உகூ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பரமன்னருட்டே வலனமது பகையா நிருதர் படையையின்ப
மருவு முமையான் முருக்கிநந்த மானம் புரக்க வந்தனனென்
றுரவ ரெனும்வா னவர்மகிழ வுரைப்பான் கடிதி னோடினன்போ
லிரவி தனது கதிர்சுருக்கி யிம்ம்மேற் கடல்சென் றினிதடைந்தான்.

(இ-ள்.) சூரியனானவன், பரமசிவனு லருளிய தேவாங்கமுனிவன், நம்முடைய பகைவராகிய அசுரர் சேனைகளை மகிழ்ச்சிபொருந்திய பார்ப்பதி தேவியாரால் நாசஞ்செய்து, நம்முடைய மானத்தைக் காக்கவந்தானென்று, அறிவுடையவரென்று சொல்லப்பட்ட தேவர்கள் மகிழும்படிச் சொல்லும் பொருட்டு விரைந்து ஓடினன்போலத் தன்னுடைய கிரணங்களைச் சுருக்கிக் கொண்டு சத்திக்கின்ற மேலைச்சமுத்திரத்தில் நன்றுசென்று முழுகினுன்.

சூரியன் அத்தமித்தலைத் தேவர்களுக்குச் சொல்லும்படிப் போனுன் என்று கவி கூறினமையால் இது தற்குறிப்பணி. (௩0)

தரும நினையார் பிறருபர்வு சகியார் சிறிதுந் தமிழ்வளமை
யருமை யுணரார் கிளைவறுமை யகற்றார் பெரியோர்க் கன்புசெயார்
குருவை யிகழ்வார் புகழாரக் கொடியர் மனத்துட் குடியிருந்த [றே.
பொருவி லிருள்போற் கங்குல்பெரும் புடவி முழுதும் பொலிந்த தன்

(இ-ள்.) அறத்தை நினையாதவர், அயலாருடைய மேன்மையைப் பொறுதவர், சிறிதாயினுந் தமிழினுடைய வளப்பமும் அருமையும் அறியாத வர், சுற்றத்தாருடைய தரித்திரத்தை நீக்காதவர், பெரியோர்களுக்குப் பத்தி செய்யாதவர், ஞானசாரியர்களை நிந்திப்பவர் அவர்களைப் புகழாதவர் ஆகிய அத்தீயோருடைய மனத்திற்றங்கியிருந்த ஒப்பில்லாத (அஞ்ஞான) இருளைப் போல, பெரிய பூமிமுழுமையும் இராவானது விளங்கியது. எ-று.

இதுவும் மேலையணி. அன்று, ஏ அசைகள். (௩க)

காலை யதனிற் றவம்புரிந்த கவட முனிவன் கருதுசெப
மாலை கரக முதல்வேட மறைத்துக் கணை வில் வாளேந்தி
வேலை யெழுகூன் பிறையெயிறு மிளிர்கா ருடலு மிகத்தோன்றப்
பாலை நிகரு மனநிருதப் படைக்கெ லாமோர் பதியானுன்.

(இ ள்.) பகற்காலத்தில் தவஞ் செய்துகொண்டிருந்த வஞ்சத்தை யுடைய அம்முனியானவன், (இரவில்) கருதுகின்ற செபமாலை கமண்டல முத லாகிய தவவேடத்தை மறைத்து, அம்புகளும், வில்லும், வாளும் (கையில்) தாங்கி, சமுத்திரத்தில் தோன்றுகின்ற வளைந்த பிறைச்சந்திரன்போல வக்கிர தந்தங்களும், விளங்குகின்ற கரிய தேகமும் மிகவுந் தோன்றுமாறு பாலை

நிலத்தையொத்த மனத்தை யுடைய இராக்கத சேனைகளுக்கெல்லாம் ஒரு தலைவ னானன். எ - று. (௬௨)

அடிய னெனச்சூ ழரக்கனொலா மனைய வேட மகன்றுதனுக்
கொடிய கதிரம் பரசுதண்டங் குடாரங் குளிரங் குசமுசலங்
கடிய திகிரி கணையமயில் கட்கம் பலவுங் கரத்தேந்திப்
படியு மதிர வரைதுளங்கப் படையா யெங்கும் பரந்தனரால்.

(இ-ள்.) (அவ்வரக்கனுடைய) மானைக்கொன்று சூழ்ந்திருந்த அசுரர்கள் யாவரும், அத்தவவேடம் நீங்கி, வில்லும், கொடிய கிரணங்களை யுடைய அழகிய மழுவும், தண்டாயுதமும், கோடாலியும், சூலமும், அங்குசமும், இருப்புலக்கையும், வேகத்தையுடைய சக்கரமும், அம்பும், வேலும், வாளும் ஆகிய பல ஆயுதங்களையும் கைகளிற் றாங்கிக்கொண்டு, பூமியு நடுங்க மலைக ளசைய சேனைகளாகி யெவ்விடங்களிலும் பரவினார்கள். எ - று.

படியும் - இவ்வும்மை ஏனைய வன்றி யெனப் பொருடருதலின் இறந்ததுதழீஇய எச்சவும்மை. ஆல் அசை. (௬௩)

உருமு நேர்வச் சிரப்லனென் றுரைக்கும் பதியு முலகிலெங்கும்
பொருவி லாத புகைமுகன்சூழ் புகைநேத் திரன்சித் திரசேனன்
செருவி னேரார் வெருவுபஞ்ச சேன னெனுஞ்சே னாதிபரு
மருவு தானை புடைமலிய வாமா முனியை வளைந்தடர்ந்தார்.

(இ-ள்.) இடியை யொத்த வச்சிரதந்தன் என்று சொல்லப்பட்ட தலைவனும், உலக மெவ்விடத்துஞ் சமானமில்லாத புகைமுகனும், புகைக்கண்ணனும், சித்திரசேனனும், போரில் பகைவர்கள் அஞ்சுகின்ற பஞ்சசேனனும் என்று சொல்லத்தக்க சேனாதிபதிகளும் பொருந்திய சேனைகள் பக்கத்தில் மிக, மேலாகிய தேவாங்கமுனிவனை வளைந்துகொண்டு நெருங்கினார்கள். எ-று.

வச்சிரதந்தன்=வச்சிரம்போலும்பற்களையுடையவன். புகைமுகன்=புகைபோலு முகத்தையுடையவன். புகைநேத்திரன்=புகைபோலுங் கண்களையுடையவன். சித்திரசேனன்=அழகியசிறப்பிலே சிலாக்கியமுடையவன். ()

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியச் சந்த விருத்தம்.

அடரு நெடும்படை வளைதலு மஞ்சிமு னரனரு ளும்பெரி யோ
னிடர்புரி கண்டக ரிவர்கொல வந்தன ரெனவதி ருந்திரை சூழ்
மிடல்கெழு சிந்துவில் விடமுமி ழும்பணி மிசைதுயி லுந்திரு மான்
மடலவிழ் பங்கய மலரடி யன்பக மலியநி னைந்தன னே.

(இ-ள்.) முன்னமே பரமசிவனா லருளப்பட்ட தேவலமுனிவன், நெருங்கிய பெரிய சேனைகளானவை தன்னை வளைந்துகொண்டவுடனே, பயந்து, துன்பத்தைச் செய்கின்ற தீயோராகிய விவ்வசுரர்கள் கொல்லவந்தார்களென்று ஒலிக்கின்ற அலைகள் சூழ்ந்த வலிமையுள்ள சமுத்திரத்தில் விஷத்தைக் கக்குகின்ற ஆதிசேஷன்மீது (யோக) நித்திரை செய்கின்ற திருமா

னுடைய இதழ்கள் விரிந்த தாமரைமலர்போன்ற திருவடிகளை யன்பானது முனத்தில் மிகும்படி தியானஞ்செய்தான். எ - று. (௧௫)

கருதிய மாமுனி துயர்கெட மீதெழு கருணையி னொடுமா
லருள்வனை நேர்தரு திகிரியை யேவலு மதுகடல் சூழ்புவி வான்
வெருவுற வேழ்முகில் வடவன லோடிட மிகுசுடர் வீசி யரு
விருளென நீளுட னிருதர் குழாமன மிடைதர மேவிய தே.

(இ-ள்.) (இவ்வாறு) நினைத்த பெருமையுள்ள தேவாங்கமுனிவனுடைய துன்ப நீங்கும்படி மிகுந்த கிருபையினால் பெரிய திருமாலானவர், சூரியனையொத்த சக்கராயுதத்தை (ச் செல்லும்படிக் கட்டளையிட்டு) விட்டவுடனே, அச் சக்கராயுதமானது, சமுத்திரஞ் சூழ்ந்த பூமியிலுள்ளவரும், சுவர்க்கத்திலுள்ளவரும் அஞ்சும்படியும், சப்த மேகங்களும் வடவாமுகாக்கினியும் ஓடும்படிக்கும், மிகுந்த காந்தியைவீசி நீங்காத இருள்போல நீண்ட சரீரத்தையுடைய இராக்கத கூட்டங்கள் மனங்கலங்கும்படி வந்தது. எ - று. (௧௬)

கலிவிருத்தம்.

வந்ததிற லாழிதனை மாமுனி மகிழ்ந்து
வெந்தழ லெனுங்கொடியர் மீதுவிட லும்போ
யந்தமி னெடும்படைய டங்கலு மருண்டு
சிந்தைவெரு வும்படி செகுத்தது சினந்தே.

(இ-ள்.) (அவ்வாறு தன்னிடத்து) வந்த வலிமையுள்ள சக்கராயுதத்தைப் பெருமையுள்ள தேவாங்கமுனிவன், மனமகிழ்ந்து, வெம்மையாகிய நெருப்பென்னத்தக்க கொடிய அசுரர்கள்மேல் விட்டவுடனே, (அச்சக்கரமானது) சென்று கோபங்கொண்டு, அளவில்லாத பெரிய சேனைகள் யாவும் மயங்கி மனமஞ்சும்படிக் கொன்றது. எ - று. (௧௭)

மாயவனுத வுந்திகிரி வந்தடர்த லோடுஞ்
சேயமகு டங்குல்வு சென்னிவிழி கன்னம்
பாயமரு மந்தொடைகள் பாணியிடை பாத
மாயவை யிழந்துபல ரப்பொழு திரிந்தார்.

(இ-ள்.) (தேவாங்கமுனிவனுக்கு) திருமால்கொடுத்த சக்கரமானது வந்து தாக்கினவுடனே, சிவந்த கிரணங்களையுடைய கிரீடங்கள் விளங்குகின்ற சிரங்களும், கண்களும், செவிகளும், விசாலமாகிய மார்புகளும், தொடைகளும், கைகளும், இடைகளும், கால்களும், ஆகிய வுறுப்புகளெல்லா மிழந்து பல அசுரர்கள் அப்பொழுது அஞ்சியோடினார்கள். எ - று. (௧௮)

அக்கிரண சக்கர மறுத்திட மடிந்தோர்
செக்கருதி ரத்துளி தெறித்ததலை தோறும்
வக்கிர மனத்தினர் வரம்பில ரெழுந்து
மிக்கமுனி யச்சுற வெகுண்டன ரெதிர்ந்தே.

(இ-ள்.) அந்தக்காந்தியுள்ள சக்கரமானது, அறுத்தலாலே இறந்த இராக்கதர்களுடைய சிவந்த இரத்தத்திவலைகள் சிந்திய இடங்களிலெல்லாம் கொடுமையுள்ள மனத்தினராகிய அசுரர்கள் அளவில்லாதவர் தோன்றி, தேவாங்கமுனிவன், மிகவும் அஞ்சும்படிக் கோபித்து, எதிர்த்தார்கள். எ-று.

கோடுற நெடுஞ்சிலை குனித்தளவில் கோடி
சூடுகொ ளகன்கணை தொடுத்தனர் விடுப்ப
வாடரிய மாமுனி மயங்கவவை வந்தே
நீடுதிசை விண்புவி நிறைந்தமழை யேபோல்.

(இ-ள்.) பெரிய வில்லுகளை வளையும்படி வளைத்து, எண்ணில்லாத கோடி வெம்மையுள்ள பெரிய அம்புகளைத்தொடுத்து விட்டவுடனே, குறைவில்லாத பெருமையுள்ள தேவலமுனிவன், மயங்குமாறு, அவ்வம்புகள் வந்து பெரிய திக்குகளும் ஆகாயமும், பூமியும், மழைபோல் நிறைந்தன. எ-று. ()

கோடிகதிர் போலொளிர் கொடுந்திகிரி பின்னு
மூடிய சரங்களை முடித்தமர் தொடங்கு
மாடல்புனை வச்சிரபல னம்பொருநர் நால்வ
ரோடமுடி யப்படைகள் யாவையு மொழிப்ப.

(இ-ள்.) கோடிசூரியர்கள்போல் விளங்குகின்ற கொடிய சக்கராயுதமானது, மறுபடியும் (தேவலமுனிவனை) மூடிய பாணங்களையெல்லாம்போக்கிப் போர்செய்கின்ற விளையாட்டினையுடைய வச்சிரதந்தனும், அழகிய போர்செய்பவராகிய புகைமுகன் முதலாகிய நான்குபேர்களும் ஓடவும், சேனைகளெல்லாம் இறக்குமாறு நாசஞ்செய்ய. எ - று. (சுக)

அங்கிலை முடிந்தவ ருருங்குருதி தன்னிற்
பின்னுமள வில்லவர் பிறந்தனர் நெருங்க
முன்னென வறுத்தது முளைத்தனர் மறித்துந்
தன்னிகரு மால்வளை சலித்தது திகைத்தே.

(இ-ள்.) அவ்வாறிறந்த அசுரர்களுடைய அரியஇரத்தத்தில், மறுபடியும் அளவில்லாத அசுரர்களுண்டாகி, (தேவலமுனிவனைச்) சூழ்ந்துகொள்ள முன்போல (ச் சக்கராயுதமானது) அவர்களை, அறுத்தது. பின்னுந் தோன்றினார்கள்; தனக்குத்தானே ஒப்பாகிய திருமாலுடைய சக்கரமானது பிரமித்து (இளைத்து) ஓய்ந்தது. எ - று (சுஉ)

ஆழியய ரப்படை யனைத்துமதிர் வேலை
யேழுமிக வொன்னவெதி ரெய்தமுனி மெய்யைச்
சூழுற வனற்கணை தொடுத்தன ர் கடுத்தே
வாழிமுகில் போலவரு டித்தனர்கண் மன்னே.

(இ-ள்.) சக்கராயுதமானது, அவ்வாறு சோர்வடைந்தவுடனே, அந்த அசுரசேனைகள் யாவும் ஒலிக்கின்ற ஏழு சமுத்திரங்களும் ஒப்பென்னுமாறு

தேவாங்கமுனிவனுடைய எதிரில்வந்து அவனுடலைச் சுற்றிக்கொள்ளும்படி நெருப்புப்போலும் பாணங்களை (வில்விற்)பூட்டிக்கோபித்து (பெய்யும்) வாழ் வினையுடைய மேகங்கள் மழைபொழிவதுபோலப் பொழிந்தார்கள்.

மன், ஓ அசைகள். வாழி இடைச்சொல்லுமாம். (சுந)

கோச்சகம்.

மறநிருதர் விடுத்தகணை மாரியினு லுடல்வெதும்பி
யறவுமன மதிமயங்கி யாழ்துயரா ழியின்மூழ்கி
நறவுகம ழிதழிபுனை நாதனரு ளாலுதித்த
அறவுமுனி கவுரிபதத் துணைபரவத் தொடங்கினனால்.

(இ-ள்.) மணம்வீசுகின்ற கொன்றைப்பூமாலையை யணிந்த சிவபெருமானுடைய கிருபையால் அவதரித்த துறவறத்தையுடைய தேவாங்கமுனிவன், கொலைத்தொழிலையுடைய இராக்கதர்கள் விட்ட அம்புமழையினாலே சரீரம்வெந்து, மிகவும் மனமும் அறிவும் மயங்கி, ஆழமாகிய துன்பக்கடலில் முழுகிப் (பின்) பார்ப்பதிதேவியாருடைய இரண்டுதிருவடிகளையும் தோத்திரஞ்செய்யத் தொடங்கினன். எ - று. (சுச)

அந்தரியா ரணிமதங்கி யமலைதிரி புரைபரம
சுந்தரிகா ரணிவாலை சூலிசுமங் கலைநீல
கந்தரிபூ ரணிவீரி கமலைபை ரவிகௌரி
நந்தரிதா கியமவுன ஞானகுண கல்யாணி.

(இ-ள்.) துர்க்கையே! வேதமுடிபானவளே! காளியே! பார்ப்பதியே! திரிபுரையே! மேன்மையாகிய அழகையுடையவளே! எவற்றிற்குமூலகாரணமானவளே! இளமையையுடையவளே! சூலாயுதத்தையுடையவளே! நல்ல மங்கிலியத்தையுடையவளே! நீலகண்டத்தையுடையவளே! எங்கு நிறைந்தவளே! வெற்றியையுடையவளே! இலக்குமியானவளே! பைரவியே! கவுரியே! கெடுதலில்லாத மோனஞானத்தையுடைய (நித்திய) கல்யாணியே!.

யாமளைசண் டிகைசடங்கி யமரிபக வதிசூரி
கோமளைசங் கரிசமரி குமரிபுரா தனிநடனி
தாமமணி கொந்தளகத் தருணிசரா சரமீன்ற
வாமதயா பரிகளின வதனிகய சர்வாணி.

(இ-ள்.) காளியே! சண்டிகையே! சடங்கியே! அமரியே! பகவதியே! சூரியே! இளமையுடையவளே! சங்கரியே! சமரியே! அழிவில்லாதவளே! பழமையானவளே! நடனத்தையுடையவளே! பூமாலையையணிந்த கூந்தலையுடைய இளம்பெண்ணே! சரம் அசரமாகிய பொருள்களைவற்றையும்பெற்ற அழகிய கிருபையையுடையவளே! செந்தாமரைமலர்போலு முகத்தையுடையவளே! இனிதாகிய சர்வாணியே!. எ - று. (சுரு)

கிருதகுல சம்மாரி நிமலபிர ணவமுடிவின்
மருவுதிரி யம்பிகைநின் வனசபத மலர்சரணங்
கருதலர்கள் படைமுரியக் கடிதினில்வக் தருணல்கத்
தருணமிது தருணமிது தயவுபுரி கெனத்துதித்தான்.

(இ-ள்.) அசுரர்குலத்தை நாசஞ்செய்பவளே! பரிசுத்தமாகிய பிரணவத்தின் முடிவிலே பொருந்திய முக்கண்ணியே! உன்னுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளே எனக்குப் புகலிடம். பகைவருடைய சேனைகள் கெடும்படி விரைவில்வந்து, கிருபைசெய்ய, இது சமையம் இதுசமையம் கிருபைசெய்யவேண்டுமென்று தேவாங்கமுனிவன், தோத்திரஞ்செய்தான். எ-று.

கலிவிருத்தம்.

ஓதி யன்ப னுருக வுணர்ந்தரி
மீதி னம்புய நாலு மிளிர்ந்திடச்
சோதி கொண்டசெங் கண்களுந் தோன்றவே
யாதி சண்டிகை யங்கெழுந் தாளரோ.

(இ-ள்.) இவ்வாறு தோத்திரஞ்செய்து, அன்பனாகிய தேவாங்கமுனிவன், மனங்கரைந்து நிற்க அதனை யறிந்து, முதல்வியாகிய துர்க்கையானவள், சிங்கவாகனத்தின்மேல் அழகிய நான்கு புயங்களும் விளங்க, ஒளிதங்கிய சிவந்த கண்களும் விளங்குமாறு, அவ்விடத்தி லெழுந்தருளினாள். எ-று. (சஅ)

தோன்று சண்டிகை தாண்முடி சூடிநின்
றான்ற கேள்விய னம்மை கொடுங்கனல்
கான்ற செய்யகட் கண்டகர்க் காய்ந்தெனை
யீன்ற சேயி னிரட்சிக்க வேண்டுமால்.

(இ-ள்.) நிறைந்த நூற்கேள்வியையுடையதேவாங்கமுனிவன், (தனக்கெதிரில்வந்து) தரிசனங்கொடுத்த துர்க்கையினுடைய திருவடிகளைச்சென்னிமேல் தரித்து, எதிரில் நின்று, தாயே! கொடிய நெருப்பைக் கக்கிய சிவந்த கண்களையுடைய அரக்கர்களைக் கொன்று, என்னைப் பெற்ற குழந்தைபோலக் காக்கவேண்டும் என்றான். எ-று.

சேயின் என்பது குமாரக்கடவுளைப்போல் எனினுமாம். இன் ஒப்புப் பொருளில் வந்த ஐந்தனுருபு. ஆல் அசை. (சகூ)

என்று போற்றலு மெம்பெரு மாட்டிநீ
யொன்று மெண்ணலை யொன்னலர் யாரையும்
பொன்ற வோர்முகூர்த் தத்திற் பொருதியுமிழ்
வென்றி மூவிலை வேல்கொடு வீசியே.

(இ-ள்.) (தேவாங்கமுனிவன்) இவ்வாறு சொல்லித் தோத்திரஞ் செய்தவுடனே, எங்கள் பெருமாட்டியாகிய பார்ப்பதிதேவியானவள், (தேவா

முனிவனை நோக்கி) நீ யாதும் நினைந்து வருந்தாதே. பகைவர்கள் யாவரையும் இறக்கும்படி ஒரு முகூர்த்தகாலத்துக்குள், நெருப்புப்பொறிகளைக் கக்குகின்ற வெற்றியுள்ள மூன்று தலையையுடைய சூலாயுதத்தைக்கொண்டு வீசி. எ - று.

சிந்து சோரி செழும்புவி தோய்வுறு
முந்து மூர்த்திக்கின் றூட்டுவன் காண்டியென்
றந்த வேலையி லாழி கழுக்கதை
முந்து வாளு முரண்கரத் தேந்தியே.

(இ-ள்.) அச்சமையத்தில் சிந்துகின்ற உதிரம் செழித்த பூமியில் விழாமல் (நான்) நடத்துகின்ற வாகனத்திற்கு இன்று உணவாக வூட்டுவிப் பேன் (நீ) காண்பாயாகவென்று, சக்கரமும், சூலமும், கதையும், முற்பட்ட வாளும் ஆகிய விவைகளை வலிமையுள்ள கைகளிலெடுத்து. எ - று. (௫௧)

செய்ய கண்ணுஞ் செழுங்கரு மேனியும்
வெய்ய வன்கதிர் வீசு மகுடமுந்
துய்ய திண்புய நாலுந் துலங்குறக்
கையர் நெஞ்சங் கலங்கிட நோக்கியே.

(இ-ள்.) சிவந்தகண்களும், செழித்த கருமையாகிய திருமேனியும், சூரியன்போலுங் கிரணங்களைவீசுகின்ற கிரீடமும், பரிசுத்தமாகிய வலிய நான்குபுயங்களும் விளங்க, கீழ்மக்களாகிய அசுரர்கள் மனம் நடுங்கும்படிப் பார்த்து. எ - று. (௫௨)

மலைபெ ரும்புவி வானுல கெண்டிசை
யுலைய வங்க ணுறையு முயிரொரா
நிலைம யங்க நெடுங்தொனி காட்டிமூ
விலைபெர் லிந்ததன் சூலத்தை யேவினள்.

(இ-ள்.) (பார்ப்பதிதேவி) மலைகளும், பெரியபூமியும், சுவர்க்கலோக மும், எட்டுத்திக்குகளும் வருந்த, அவ்விடங்களில் வசிக்கின்ற வுயிர்கள் யாவும் இடம்விட்டு மயங்க, பெரியசத்தஞ்செய்து, மூன்று சிகரங்களால் இலைபோ லும் விளங்கிய தனது சூலாயுதத்தை விட்டாள். எ - று. (௫௩)

ஏவு மேல்வை யிவளை வெல்வாமெனத்
தாவி னூர்பலர் சண்டிகை பொன்முடி
மேவு காந்தி விழிவின் மழுக்கின்
றோவி லன்னவ ளோசையின் மாழ்கினர்.

(இ-ள்.) (அவ்வாறு சூலாயுதத்தை) ஏவியபொழுது, இப்பெண்ணைப் போரில்வெல்வோமென்று, பல இராக்கதர்கள்வந்து பரவிச் சூழ்ந்துகொண் டார்கள், (அப்பொழுது) துர்க்கையினுடைய பொன்னினாலாகிய கிரீடத்தில் பொருந்திய பிரகாசமானது, அவர்கள் கண்களின் ஒளியைக்கெடுக்க நின்று ஒழிதலில்லாத அத்துர்க்கையினுடைய வொலியால் மனமயங்கினார்கள். எ - று.

அரக்கருடைய விழிகளி னொளி மழுங்கி மயங்குமாறு காந்தியுள்ள முடிசூடியிருத்தலால் சவுடநாயகி என்று திருநாம மாயிற்று. (கூச)

விட்ட மூவிலை வேல்சின மீறிநேர்ந்
தட்ட தாற்பதி னாயிரம் வீரரைப்
பட்ட சோரி படியி லுறாதனை
யிட்ட வூர்திதன் றூரைகொ டேந்தவே.

(இ - ள்.) (சவுடநாயகியால்) விடப்பட்ட சூலமானது, கோபமிகுந்து, எதிர்ந்து பதினாயிர மிராக்கதவீரர்களைக் கொன்றது, (அதனால்) உண்டாகிய இரத்தம் பூமியில்விழாதபடி தாயாகிய சவுடநாயகியினுடைய அன்புள்ள சிங்கவாகனமானது, தன்னுடைய நாவினால் பருகித் தாங்க. எ - று. (கூரு)

பலரி றந்தனர் பட்ட களேபரீ
மலையெ னும்படி யோங்கி மலிந்ததாற்
றலைவ னும்படர் நால்வருஞ் சாய்ந்தனர்
நிலம டந்தையு நீங்கினள் பாரமே.

(இ - ள்.) பல விராக்கதர்க ளிறந்துபோயினார்கள். இறந்தபிணங்கள் மலையென்று (கண்டோர்) சொல்லும்படி, உயர்ந்து நிறைந்தது. தலைவனாகிய வச்சிரதந்தனும், அவனைச்சூழ்ந்த (புகைமுகன் முதலாகிய) நால்வரும் இறந்தார்கள். பூமிதேவியும் பாரநீங்கினாள். எ - று. (கூசு)

வாமி வச்சிர பலன்புகை வார்கணன்
றாம வத்திரன் சூழ்பஞ்ச சேனனீள்
சேம சித்திர சேனனின் னோருடற்
றூமி ரத்தந் தனித்தனி வீழ்தர.

(இ - ள்.) அழகினையுடைய வச்சிரதந்தன், நீண்ட புகைக்கண்ணன், புகைமுகன், சூழ்ந்தபஞ்சசேனன், பெரியகாவலாகிய சித்திரசேனன் ஆகிய இவர்களுடைய வுடம்பின்கண் பரவிய விரத்தங்கள் வேறுவேறாகப் பூமியில் வீழ. எ - று.

தாவும் என்பது - தாம் என "செய்யுமெ னெச்சவீ றுயிர்மெய் சேறலும்" என்னும் நன்னூற்சூத்திர விதியால் இடையுயிர்மெய் கெட்டது. (கூஎ)

மற்றை யோருடல் வார்ந்தசெந் நீரெலாங்
கற்ற யோகர் கருத்துறை கன்னிதன்
கொற்ற வூர்தி யெனுங்கொடுங் கோளரி
யுற்ற தாரைகொ டுண்டு களித்ததே.

(இ - ள்.) மேற்கூறிய வச்சிரதந்தன் முதலிய ஐவருடைய சரீரத்தினின்று மொழுகிய விரத்தம் யாவும், (ஞானநூல்களை) உணர்ந்த முனிவர்களுடைய மனத்தில் வசிக்கின்ற சவுடநாயகியினுடைய வெற்றியுள்ள வாகன

மென்று சொல்லத்தக்க கொடுமையும் வலிமையுமுள்ள சிங்கமானது, பெய்கின்ற மழைபோலக் குடித்துச் செருக்கடைந்தது. எ - று. (௫அ)

மேய்ந்த கோளரி வீறுறு காதிடைத்
தோய்ந்த சோரித் துளிக ளிரண்டுபோர்
வாய்ந்த பூமியில் வீழ்தலு மற்றதி
லேய்ந்த வீர ரிருவர்வந் தாரரோ.

(இ-ள்.) (அவ்வாறு இரத்தத்தை) உண்ட வலிமையுள்ள சிங்கத்தினுடைய பெருமைபொருந்திய செவிகளி லுறைந்த விரண்டு இரத்தத்திவலைகள் போர்க்களத்தில் சிந்தினவுடனே அதினின்றும் பொருந்திய இராக்கத வீரர்கள் இருவர்வந்து தோன்றினார்கள். எ - று. (௫௯)

அவரை நோக்கி யமலை சினந்துயிர்
கவரு மூவிலைக் காள மெடுத்தலு
மிவரு மேனி யிராக்கத ரஞ்சிமா
தவம றாமுனி தாளடைந் தாரரோ.

(இ-ள்.) அவ்விராக்கதர்க ளிருவரையும் சவுடநாயகியம்மை பார்த்து, கோபங்கொண்டு, பகைவருடைய வுயிரை வாங்குகின்ற மூன்று தலைகளையுடைய இலைபோன்ற சூலாயுதத்தைக் கையி லெடுத்தவுடனே, பெரியசரீரத்தையுடைய அவ்விராக்கதர்கள், பயந்து தவம்நீங்காத பெருமை பொருந்திய தேவாங்கமுனிவனுடைய பாதங்களை (யடைக்கலமாக) அடைந்தார்கள். ()

வேறு.—கலிவிருத்தம்.

பவர்திருத் தேவலன் பதத்திற் புக்கலு
மவனுமை மகிழ்ந்தென தன்பற் சார்ந்ததாற்
கவலுற வுமதுயிர் களைகி லோமினி
யிவனுடை மக்களா யிருத்தி ரென்னவே.

(இ-ள்.) பாவிகளாகிய வசுரர்கள் அழகிய தேவாங்கமுனிவனுடைய பாதங்களில் அடைக்கலமாகப் புகுந்தவுடனே, அப்பொழுது சவுடநாயகியம்மை மனமகிழ்ந்து, என்னுடையஅன்பனாகிய தேவாங்கமுனிவனை நீங்கள் அடைக்கலமாக வடைந்தமையால், துன்பமடைய வுங்களுயிரைப்போக்கமாட்டோம் இனி இத்தேவலமுனிவனுடைய பிள்ளைகளாக விருங்களென்று சொல்லி. எ - று. (௬க)

அன்றுதொட் டமலைதன் னடிம லர்த்துணை
நன்றுறத் தொழுதரு ணயந்து நாடொறும்
வென்றிபெற் றுயரிரு வீற ரக்கரும்
வன்றிருத் தவற்குறு மைந்த ராகினர்.

(இ-ள்.) அன்றுமுதலாக சவுடதேவியினுடைய மலர்போன்ற விரண்டுபாதங்களையும் நன்றாகவணங்கி கிருபையை விரும்பி யெப்பொழுதும்

வெற்றியடைந்துயர்ந்த இரண்டு பெருமையுள்ள விராக்கதர்களும், அழகிய தவத்தையும், வலிமையையு முடைய தேவாங்கமுனிவனுக்குப் பொருந்திய பிள்ளைகளாயினார்கள். எ - று. (சுஉ)

அதிர்கொள்வச் சிரபல னாதி வீரர்த
முதிரமத் தலத்திலேர் துருக்கொ டுற்றதின்
மதிபுகழ் தவத்தன்மால் வழங்கு நூல்பகுத்
தெதிர்நனைத் தந்திற மிட்டிட் டானரோ.

(இ-ள்.) ஒலிகொண்ட வச்சிரதந்தன்முதலாகிய வீரருடைய இரத்தமானது, அப்போர்க்களத்தில் ஐவகை நிறம்பெற்றிருந்ததில், அறிவும், கீர்த்தியும் தவமுமுடைய தேவாங்கமுனிவன், திருமால்கொடுத்த நூலை ஐந்து பாகமாகப் பிரித்து, ஒப்பாக நனைத்து, அந்நிறமாகச் செய்தான். எ - று.

அரோ—அசை. (சுஙு)

வருத்திய நிருதரை மடிக்க மாமுடி
தரித்தெழு பான்மையாற் சவுட தேவியென்
றுருக்கிளர் பெயருமுற் றுளிர்ப ராபரை
திருத்தகு தேவலற் கினைய செப்புவாள்.

(இ-ள்.) தேவாங்கமுனிவனை, துன்பஞ்செய்த வரக்கர்களைக் கொல்ல, பெருமையுள்ள கிரீடமணிந்து, எழுந்தருளியதன்மையினாலே, சவுடநாயகியென்று அழகுவிளங்கிய நாமமும் பெற்றுப் பிரகாசிக்கின்ற உமாதேவியானவள், செல்வமும் மேன்மையுமுடைய தேவாங்கமுனிவனுக்கு,இப்படிப்பட்ட வாசகங்களைச் சொல்லுவாள். எ - று. (சுச)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

செவ்விய குணத்தின் மேலோய் சிறிதுமஞ் சலையுன் னெஞ்சத்
தெவ்வுழிச் செலவி ருப்ப மிருப்பினுஞ் செல்க மேலோர்
கவ்வைபற் றிடினீ யெம்மைக் கருதுதி யுடனே யாம்போக்
தவ்வகை தவிர்த்தாள் வோமற் றையுற லின்று மாதோ.

(இ-ள்.) நல்ல குணங்களின் மேம்பட்ட தேவலமுனிவனே! நீ சிறிதாயினும் பயப்படாதே, உன் மனத்தில் எவ்விடம்போக விருப்பமிருந்தாலும் போகக்கடவை. இனி (யாதேனும்) ஒருதுன்ப முன்னைச் சேர்ந்தாலும் எம்மை நினைப்பாயாக,உடனே நாம்வந்து, அவ்வசுரர்களைக்கொன்றதுபோல, அத்துன்பத்தை நீக்கி, உன்னைக் காப்போம்; (இதற்குச்) சந்தேகப்படாதையென்றாள் சவுடநாயகி. எ - று.

மற்று, மாது, ஓ-அசைகள். (சுரு)

நிகழமா வாசைக் கங்கு னிருதர்பா லகப்பட் டெம்மை
யகமுற நினைத்தா யாம்வக் தளித்தன மதனு னீயிச்
செகமதி லுற்ப வித்த தினமது தானே யாகு
மகரகே தனனை வென்ற மாதவ வெமக்கு மற்றே.

(இ-ள்.) மீனக்கொடியையுடைய மன்மதனை (அழகினாலும், காமவிகாரமின்மையாலும்) சயித்த பெரிய தவத்தையுடைய தேவாங்கமுனிவனே! நடக்கின்ற அமாவாசையிரவிலே, இராக்கதரிடத்தகப்பட்டு எம்மை மனத்தில் மிகவும் நினைத்தனை (ஆதலில்) நாம் வந்து உன்னைக் காத்தோம், அதனாலே நீ யிவ்வுலகத்திற்பிறந்த நாள் அதுவேயாகும்; எமக்கும் அதுவேபிறந்தநாளாகும். எ - று. (சுஅ)

ஆகையா லினியெஞ் ஞான்று மனைபநாள் வரினன் றெல்லா
மோகையா லெனைத்தி யானித் துறைதிநீ யுறைந்தா யாகில்
வாகைசேர் திறலுஞ் சீரும் வளர்தரு குலமும் வாழ்வுஞ்
சோகமா றியபே ரின்பத் துணிவுமுண் டாகு மன்றே.

(இ-ள்.) ஆதலினாலே, இனி யெக்காலத்தும் அவ்வமாவாசைதினம் வந்தால், அன்றுமுழுதும் விருப்பத்துடனே நீ யென்னைத் தியானித்திருப்பாயாக; அவ்வா றிருப்பாயாகில், வெற்றிபொருந்திய வல்லமையும், சிறப்பும் பெருகும், குலமும், வாழ்வும், துன்பநீங்கிய மோக்ஷத்தில் உறுதியுமுண்டாகும்.

அன்றிநின் குலத்துள் ளோரு மன்றுநெய் தொழிலை நீத்தெம்
பொன்றிக ழடிபூ சித்துப் புகழ்வினா யிருப்பி னன்றாம்
வன்றிறன் மயக்கந் தன்னான் மறந்துறிற் றுயர்வ லைக்குட்
சென்றுழன் றலைவ ரென்றே செப்பிவிண் ணிடைமறைந்தாள்.

(இ-ள்.) (அவ்வாறுனக்குண்டாவ)தல்லாமல், உன்னுடைய குலத்தினுள்ளாவரும், அந்த அமாவாசைநாளில், நெய்யுந்தொழிலை நீக்கி, எம்முடைய பொன்போலும் விளங்குகின்ற பாதங்களைப் பூசனைசெய்து, (எமது) கீர்த்தியையுடைய புராணத்தை (அறிவுடையோராற் சொல்லக்) கேட்டுக்கொண்டிருந்தால் நன்மையாம். வலிமையாகிய மயக்கத்தால் மறந்துவிடில், துன்பவலையிலகப்பட்டு வருந்தி யலைவார்களென்று சொல்லி (ச் சவுடநாயகியம்மை) ஆகாயத்தில் மறைந்து போயினாள். எ - று.

ஏ - தேற்றம். வல்திறல் - ஒருபொருட் பன்மொழி. (சுஅ)

சலமிகு மரக்கர் தம்மைச் சவுடநா யகியால் வென்று
வலனுறு திறலு மின்ப வாழும்பெற் றுளம்பூ ரித்து
நலநிறை தருமா மோத நகர்தனை நோக்கிக் கன்னற்
சிலைமதன் கணைக்கஞ் சாத தேவல முனிசென் றானால்.

(இ-ள்.) கரும்புவில்லையுடைய மன்மதனது பஞ்சபாணங்களுக்குப் பயப்படாத தேவாங்கமுனிவன், கோபமிகுந்த விராக்கதர்களைச் சவுடநாயகியம்மையால் சயித்து, வெற்றியையுடைய வலிமையும், இனிதாகியவாழ்த்தும் அடைந்து, மனங்களித்து (எவ்வகை) நன்மைகளும் நிறைந்த ஆமோதநகரைச் சேரக் கருதிச் சென்றான். எ - று. (சுகூ)

வேறு.—அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

எனமா முனிவர் சூதனைநின் றேத்தி யிகல்கூர் வச்சிரபலன்
முனைசேர் புகைநேத் திரன்றூமமு கத்தி னோன்சித் திரசேன
னனலனேர் பஞ்ச சேனனெனு மவர்யார் திருமா லாழியினால்
வினையூ டிறவாத் திறமெவனீ விளம்பு கெனத்தான் விளம்பலுற்றான்.

(இ-ள்.) இவ்வாறு சூதபுராணிகர் சொல்ல, பெருமையையுடைய முனிவர்கள், சூதமுனிவரை யெதிரினின்று தோத்திரஞ்செய்து, வன்மைமிகுந்த வச்சிரதந்தனும், துணிவுபொருந்திய புஷ்கரநேத்திரனும், புகைமுகனும், சித்திரசேனனும், நெருப்பையொத்த பஞ்சசேனனும் ஆகிய இவர்கள் யாவர்? விஷ்ணுமூர்த்தியினுடைய சக்கராயுதத்தினாலே போரில் இறவாத தன்மை யாது? நீவிர் சொல்லவேண்டுமென்று கேட்க, அச்சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார். எ - று. (எ௦)

தவத்தீர் கேண்மின் முனமொருகாற் சகல வுயிருந் தலையழிய
நிவப்போ டெழுந்த பிரளயத்தா னீராய் மலிந்த துலகமெங்கு[கமலத்
முவப்பா லதன்மத் தியின்மணிச்சூட் டுரக மிசைக்கொண் டொளிர்
துவர்ப்பூ வுறைந்த மடந்தைபுணர் தூயோன் யோகத் துயில்புரிந்தான்

(இ-ள். தவத்தையுடைய முனிவர்களே! கேட்பீர்களாக. முன்னொரு காலத்தில், எவ்வுயிரும் முதலோடழிய மிகுந்தெழுந்த அழிவுகாலத்தில், உலகமெங்கணும் நீராகி நிறைந்தது, அதனடுவிலே விளங்குகின்ற செந்தாமரைமலரில் மகிழ்ச்சியோடு வசிக்கின்ற திருமகளானவள், சேர்கின்ற பரிசுத்தராகிய திருமாலானவர், மணியுள்ள வுச்சிக்கொண்டையை யுடைய ஆதிசேடன்மேல் யோகநித்திரைசெய்தார். எ - று. (எக)

எக்கா ரணத்தோ வந்நெடுமா லெழின்மே னியில்வேர் வெழுந்தததிற்
திக்கா காசம் புவியுமஞ்சுந் திறத்தோர் கருணை சிறிதுமில்லார்
புக்கார் வடவை குடியிருந்தாற் போலச் சிவந்த பொறிக்கண்ணார்
மைக்கார் வடிவத் தவர்மேற்சொல் வன்கண் டகரை வருமுதத்தார்.

(இ-ள்.) யாதுகாரணத்தினாலோ அந்தத்திருமாலுடைய அழகிய சரீரத்திலே, வெயர்வையுண்டாயிற்று; அவ்வெயர்வையில், எட்டுத்திசைகளும், ஆகாசமும், பூமியும் பயப்படத்தக்க வல்லமையையுடையவரும், (உயிர்களின்மீது) சற்றும் அன்பில்லாதவரும், வடவாமுகாக்கினியானது புகுந்து குடியிருந்தாற்போலச் சிவந்த தீப்பொறிகணிறைந்த கண்களையுடையவரும், கரிய மேகம்போலும் வடிவுடையவரும் ஆகிய மேற்சொல்லிய வச்சிரதந்தன்முதலாகிய வலிய அசுரர்கள் ஐந்துபெயர்களும் உண்டானார்கள். எ - று. (எஉ)

முனைந்தை வருமேய்த் துயில்புரிந்த முதல்வற் செகுப்ப முயலவவர்
நினைந்த நினைவை யுணர்ந்துதிரு நெடுமா லெழுந்து நிருதர்தம்மோ
டனந்த வகைத்தின் படைகள்கொண்டோ ராண்டு முழுது மமர்தொ
டங்கிக், கனங்கொள் புயங்கை சலித்திவரைக் கடப்ப தருமை யென
[க்கருதி.

(இ-ள்.) (வச்சிரதந்தன் முதலாகிய) ஐந் திராக்கதர்களும் எழுந்து கோபங்கொண்டு, பொருந்திய (யோக) நித்திரைசெய்த முதல்வனுகிய திருமாலைக்கொல்லுமாறு முயற்சி செய்ய, அவ்விராக்கதர்க ளெண்ணிய வெண்ணத்தைத் திருமாலறிந்து, எழுந்து அவர்களுடனே ஒருவருடமளவும் வலிய ஆயுதங்களைக்கொண்டு பலவகையாகப் போர்செய்து, பெருத்த புயங்களுங் கைகளும் இளைத்தோய்ந்து, இவ்வசுரர்களை வெல்வது முடியாதென்றெண்ணி. ()

விருது படைத்து வீர் நுமக்கு வேண்டும் வரமென் விளம்புமவை
தருது மெனப்பண் ணவர்க்கமுதந் தந்தோன் வியந்து சாற்றவன்னோர்
கருணை மழைத்தண் பெரும்புயலே கமல தளமோ கணநயன
மருவு முயிர்ப் பலவுமுந்தி மலரா லுயிர்த்த வலியோனே.

(இ-ள்.) தேவர்களுக்குச் (சமுத்திரத்தைக் கடைந்து) அமிர்தங்கொடுத்தோராகிய திருமாலானவர், ஆச்சரியமடைந்து (அவ்வசுரர்களை நோக்கி) வெற்றியுடையவர்களே! உங்களுக்கு வேண்டும் வரம் யாவை சொல்லுங்கள் அவற்றைக் கொடுக்கின்றோமென்று கூற, அவ்வசுரர்கள், கிருபையாகிய மழையைப் பொழிகின்ற குளிர்ந்த பெரிய மேகமே! செந்தாமரை யிதழ்கள் போன்ற விரும்பப்பட்ட கண்களை யுடையவரே! பொருந்திய உயிர்கள் பலவற்றையும் உந்தித்தாமரையாற் பெற்ற வல்லமையை யுடையவரே!. ()

எந்தப் படைக்குங் கலங்கேமின் னிலங்கு நேமிக் கிரிவேமா
லந்தப் படையா லுடைந்தடியே மயரா வரநீ யருடியெனக்
கந்தப் பதும பதந்தொழலுங் கவடகிருதர் களிகூரச்
சந்தப் பணைத்தோட் டிருமார்பன் றனைப் படியே தயைபுரிந்தான்.

(இ-ள்.) (நாங்கள்) எவ்வகையாயுதங்களுக்கும் பயப்படோம்; உன்னுடைய விளங்குகின்ற சக்கராயுதத்திற்கு அஞ்சுவோம் (ஆதலின்) அச் சக்கராயுதத்தால் தோற்று அடியேங்கள் வருந்தாத வரத்தைத் தேவரீர் அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று, மணம்பொருந்திய தாமரைமலர்போன்ற பாதங்களைவணங்கினவுடனே, அழகுவாய்ந்த பருத்த தோள்களை யுடைய திருமகள் (சேர்கின்ற) மார்பினையுடைய விட்டுணுமூர்த்தியானவர் வஞ்சநெஞ்சமுடையாராகிய அவ்வரக்கர் சந்தோஷிக்கும்படி அவ்விதமே அநுக்கிரகஞ்செய்தார்.

ஆல் அசை. தான் சாரியை. (எடு)

அப்பா லரக்கர் நமக்குநிக ரானொன் றகந்தை யடைந்தவராய் [றுநா
வெப்பார் வடவை யெனத்தருக்கி மிளிர்பா தலம்போய் விளைந்தொ
ளெப்பா வலரும் புகழ்புகரோ னெழிலாச் சிரமத் தினிதணுகத்
துப்பார் மனத்தன் னவன்பயந்த சுதைப்பம் மனைக்கட் டுலங்கினளால்.

(இ-ள்.) அதன்பின்பு அவ்வரக்கர்கள் ஐவரும் நமக்குச் சமானம் யாவொன்று அகங்காரங்கொண்டவராகி, வெம்மைபொருந்திய வடவாமுகாக்கினிபோலக் கர்வங்கொண்டு, விளைவாக ஒருநாள், அழகிய பாதாளலோகஞ்

சென்று, எந்தத் தேவர்களும் புகழுகின்ற சுக்கிரனுடைய அழகிய பன்னசாலையினின்று செல்லாநிற்க, (தவ) வல்லமைபொருந்திய அந்தச் சுக்கிரனானவன் பெற்ற சுதை யென்னும் பெயரையுடைய பெண்ணானவள், அப்பன்னசாலையின்கண் விளங்கினாள். எ - று. (௭௬)

பருவ முகிலும் பணிகுழலாள் பசுந்தண் பிறையைப் பழித்தொளிரு
மருண திலத மணிநுதலா ளனங்கன் சிலைபோ லறவளர்ந்த [ண்
புருவ வடிவாள் யமனை வென்று பொலிந்த குழையிற் பொருவிழியா
மருவு செழுநா சிகையதனான் மலர்பூங் குமிழை வாட்டியமான்.

(இ-ள்.) (பெய்யும்) பருவத்தையுடைய மேகமும் வணங்குகின்ற கூந்தலையுடையவள், சூரியனைப்போலுந்திலதமணிந்த சிறப்பாகிய குளிர்ச்சியுள்ள பிறைச்சந்திரனை இகழ்ந்து விளங்குகின்ற நெற்றியினையுடையவள், மன்மதனுடைய விற்போல மிகவும் வளர்ந்த அழகினைவாய்ந்த புருவங்களையுடையவள், குண்டலமென்னுங் காதணியைத்தாக்குகின்ற இயமனைச்சயித்து விளங்கிய கண்களையுடையவள், பொருந்திய செழித்த நாசியால் மலர்கின்ற குமிழம்பூவை வருத்திய மான்போன்றவள். எ - று. (௭௭)

வள்ளை யனைய செழுங்குழையாள் மவுனத் தவர்க்கு மயல்பெருக்குங்
கள்ள மதனன் முகுரமெனக் கருது முபய கபோலத்தாள்
வெள்ள வுததித் துவரிதழாள் விளைந்த தரள வெண்ணகையாள்
கிள்ளை மொழியா ளமுதகதிர் கிளரு மதிபோல் வளர்முகத்தாள்.

(இ-ள்.) வள்ளைக்கொடியையொத்த செழித்த செவிகளையுடையவள், மோனமும் தவமுமுள்ள யோகியர்களுக்கும் இச்சைபெருகச்செய்யும் வஞ்சத்தையுடைய மன்மதன் (தன்னழகைப்பார்க்கும்) கண்ணடியென்றெண்ணத்தக்க விரண்டு கதுப்புகளையுடையவள், நீர்ப்பெருக்கையுடைய கடலிலுண்டாகிய பவளம்போலும் அதரங்களையுடையவள், முதிர்ந்த முத்துகள்போலும் வெள்ளிய பல் வரிசையையுடையவள், கிளிபோலும் (இனிய) சொற்களையுடையவள், அமுத கிரணங்களால் விளங்குகின்ற பூரணசந்திரன்போலும் அழகு பெருகிய முகத்தினையுடையவள். எ - று. (௭௮)

கன்னிக் கமுகின் மணிமிடற்றாள் கன்னற் புயத்தாள் காந்தளென
மின்னிச் சிறந்த செழுங்கரத்தாள் விரவு கெளிறு பொருவிரலாள்
வன்னப் பசும்பூங் கிளியலகு மானு முகிராள் வடகனவெற்
பென்னத் திரண்டு பணைத்திறுமாந் தெழுந்த களப விளமுலையாள்.

(இ-ள்.) இளமையாகிய கமுகுபோலும் அழகிய கண்டத்தையுடையவள், கரும்புபோலுந் தோள்களையுடையவள், காந்தண்மலர்போலும் பிரகாசித்து மேம்பட்ட செழித்த கைகளையுடையவள், (நீரிற்) பொருந்திய கெளிறு மீன்போலும் விரல்களையுடையவள், அழகிய பசிய பொலிவினைப்பெற்ற கிளிமூக்கையொத்த நகங்களையுடையவள், வடக்கின்கண்ணுள்ள பொன்மலைபோலுந் திரண்டு பெருத்து நிமிர்ந்து வெளிப்பட்ட கலவைச்சாந்தணிந்த விளமையாகிய முலைகளையுடையவள். எ - று. (௭௯)

ஒளிர்பூ வடமென் றளிர்வயிற்று ளூறுநீர்ச் சுழிநே ருந்தியினு [ள்
டெளிவா ரிதியின் மூழ்கியெழு திரைபோன் மடிப்பிற் சிறந்தமின்னு
குளிர்தா மரைநன் றாளமெனக் கூறு ரோம பந்தியினள்
களிகூர் வஞ்சித் துவளிடையாள் காமன் மனையாங் கடிதடத்தாள்.

(இ-ள்.) விளங்குகின்ற பூக்களையுடைய ஆலமரத்தின் மெல்லிய இலைபோலும் வயிற்றினையுடையவள், மிக்க நீர்ச்சுழியை யொக்குங் கொப்பூழையுடையவள், தெளிந்தகடலில் அமிழ்ந்தெழுகின்ற அலைபோலும் மடிப்பினாலே சிறந்த மின்போன்ற வொளியுள்ளவள், குளிர்ந்த நல்ல தாமரைத்தண்டுபோலும் (புகழ்ந்து) சொல்லப்பட்ட மயிரொழுங்கையுடையவள், களிப்புமிகுந்த வஞ்சிக்கொடிபோலும் அசைகின்ற இடையினையுடையவள், மன்மதனுடைய வீடாகிய நிதம்பத்தையுடையவள். எ - று.

கடிதடம் - பின்றட் டெனினுமாம். (அ0)

முளைத்த கதலிச் செழுந்துடையாண் முதிர்ந்த நளிர்போன் முழந்தாளாள், களைத்தண் புனலூ டுறைந்தவராற் கன்று பொருவுங் கணைக்காலா, டிளைத்த மணிக்கந் துகமுமஞ்சத் திரண்டு வயங்குஞ் சிறுகுதியாள், கிளைத்த தராசு நிகர்பரட்டாள் கிளர்பொற் பதுமந் தளர் பதத்தாள்.

(இ-ள்.) விளைந்த வாழைபோலுஞ் செழித்த துடையினை யுடையவள், முற்றிய நண்டுபோலும் முழங்கால்களையுடையவள், அழகிய குளிர்ந்தநீரில் வசித்த வராலென்னு மீன்கன்றை யொக்கும் கணைக்கால்களை யுடையவள், நெருங்கிய மணிகளழுத்திய பந்துகள்பயப்படும்படித் திரண்டு விளங்குகின்ற சிறிய குதிகளை யுடையவள், நிறைந்த தராசையொத்த பரடுகளை யுடையவள், ஒளிசெய்கின்ற அழகிய செந்தாமரைகள் மெலிகின்ற பாதங்களையுடையவள். எ - று. (அக)

அரிய தூவி யனநடையா ளனக வமுத மெனுமியலாள்
பரிவு கூர்நன் னவமணிகள் பதித்தூக் கதிர்கால் பலபணியாள்
வரிகொ ணீல மலர்நெடுங்கண் மலர்மங் கையினும் வடிவுமிக்காள்
கரிய கூந்தல் வடமீனுங் கன்னி பரவுங் கற்புடையாள்.

(இ-ள்.) அருமையாகிய இறகினையுடைய அன்னம்போலும் நடையினையுடையவள், மாசில்லாத அமுத மென்று சொல்லத்தக்க சாயலையுடையவள், விருப்பமிகுந்த நல்ல ஒன்பதுவகை மணிக ளழுத்தி யொளியைக் கக்குகின்ற பலவாகிய ஆபரணங்களை யுடையவள், இரேகைகளைக்கொண்ட கருங்குவளைபோலும் நீண்ட கண்களை யுடையவள், தாமரைமலரில் வசிக்கின்ற திருமகளினும் அழகு மிகுந்தவள், கரியகூந்தலையுடைய அருந்ததியாகியபெண் வணங்குகின்ற கற்பினையுடையவள். எ - று. (அஉ)

இவ்வர் றெழில்கொண் டொளிர்சோமை யெனுந்தோ கையை
யவ் விகலரக்கர், வெவ்வாள் விழியாற் கண்டுமையன் மீறி மதன்வேள்
விடுக்குமெழி; லவ்வா ளிகளா லுடைந்து தம்மா லாற்ற தவள்பா லடு
த்தெதிர்நின், றுவ்வா விடம்போற் கொடியபுன்சொ லுணரா மை
யினு லோதினரால்.

(இ-ள்) இவ்வகை யழகுபெற்று விளங்குகின்ற சோமை என்னும் மயில்போன்ற பெண்ணை, அவ்வலிமையுள்ள விராக்கதர்கள், கொடிய வாள் போன்ற கண்களாற் பார்த்து, (காம) மயக்க மதிகரித்து, மன்மதனால் விடப்பட்ட அழகிய அம் மலரம்புகளால் (மனந்) தளர்ந்து, தங்களாற் சகிக்கப்பெருமல் அச் சோமையினிடஞ் சென்று எதிரே நின்று, (கல்வி கேள்விகளின்) உணர்வில்லாமையால் தகாத விஷம்போலத் தீய அற்பமாகிய சொற்களைச் சொன்னார்கள். எ - று.

தோகை உவமையாகுபெயர். விடுக்கும் இது செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது. ஆல் அசை. (அக)

திருவே யமுதே கனியேசெந் தேனே நிருதா திபர்நாங்க
ளிருவா னுலக மெவ்விடத்து மெமக்கு நிகரின் றிகலில்வல்லேம்
வருசீ ருடையே மெங்களிலுன் மனத்துக் கிசைந்த வரையுடனே
முருகூர் மாலை சூடிமண முடித்து வாழ்தி முறையினென்றார்.

(இ-ள்) இலக்குமியே! அமிர்தமே! (முக்) கனியே! சிவந்ததேனே! நாங்களைந்துபேர்களும், இராக்கதத்தலைவர்கள். பெரிய வானுலகினிடத்தும், மற்றெவ்விடங்களிலும் எங்களுக்குச் சமானமில்லாதபடி போரில்வல்லமையையுடையோம். (ஒவ்வொரு நாளும்) வளர்கின்ற சிறப்பினையுடையோம். (ஆதலினாலே) எங்களைந்துபேர்களில், உன்மனத்துக்குப் பொருந்தியவர்களையிப்பொழுதே மணமுள்ள பூமாலையைச் சூட்டிக் கலியாணத்தை நிறைவேற்றி முறையாக வாழ்கக்கடவை யென்று, அரக்கர் ஐவருஞ் சொன்னார்கள். ()

வெய்யர் கொடுஞ்சொல் வினவிமிக வெகுண்டு மூர்ச்சித் தெழு
ந்திருந்து, செய்ய குருவின் புதல்வியெனச் சிறிதென் னினுந்தே ராம
லென்பாற், பைய வணுகிப் பகராத பகர்ந்தீ ரதனாற் பலமிழந்து, து
ய்ய வகிலத் தென்போலோர் தோகை பொரநீர் தொலைதிரென்றாள்.

(இ-ள்.) தீயராகிய அவ்வசுரருடைய கொடியவார்த்தைகளைக் கேட்டு மிக்க கோபங்கொண்டு, பின் மூர்ச்சையடைந்து, எழுந்து, சிறந்த குருவினுடைய பெண்ணென்று சிறிதாயினும் தெளியாமல், என்னிடத்து மெல்லவந்து சொல்லத்தகாத கொடியவார்த்தைகளைச் சொன்னீர்கள், அத்தீமையால் வலிமையையிழந்து சத்தமாகிய பூமியினிடத்து, என்னைப்போல வொரு பெண் யுத்தஞ்செய்ய அதனால் இறந்துபோவீர்களென்று கூறினாள். எ - று.

பகராத - எதிர்மறை வினையாலணையும் பலவறிசொல். (அரு)

உசனன் பயந்த சோமையிவ்வா றுரைப்பப் பலமற் றுடன்மெலிந்து
விசனம் பெருகி நிருதர்தவம் விளைத்தா ரரனை மிகப்பரவி
யசைவின் றிபவன் பினையுணர்ந்தன் றமலன் விடைமீ தெழுந்தருளி
யிசையுஞ் சிறியீ ருமக்குவர மீதுங் குறித்த தியம்பு மென்றான்.

(இ-ள்.) சுக்கிரன் பெற்ற சோமையானவள், இவ்வகையாகச் சபிக்க; அச்சாபத்தால், பலம் நீங்கி யுடம்பு வாடி, துன்பம் பெருகி, அவ் வசுரர்கள் ஐவரும், பரமசிவனை மிகவுந் தோத்திரஞ்செய்து, தவஞ்செய்தார்கள். அப்பொழுது சிவபெருமானானவர், அவர்களுடைய கலக்கமில்லாத அன்பையறிந்து, இடபவாகனத்தின்மே லெழுந்தருளி, பொருந்திய சிறியோரே உங்களுக்கு வரங்கொடுக்கின்றோம், நீங்கள் எண்ணியது சொல்லுங்களென்றார். எ - று.

இறைவ கேளெங் குருதிதனை யிமையோ ரேனோ ரெவருமணிந்
துறைய வேண்டு மெனவரனு முதவி னேமென் றுரைத்தகன்றா
னிறைவு றாவை வருமனந்த நிருத ரோடு நெருங்கி யெய்திக்
குறைவி லாத தேவலனைக் கோறல் புரியக் குறித்தடர்ந்தார்.

(இ-ள்.) கடவுளே! கேட்பீராக, எங்களுடைய உதிரத்தைத் தேவர்களும் மற்றையோரும், அலங்கரித்துக்கொண்டிருக்கவேண்டுமென்றுவேண்ட, அதற்குச் சிவபெருமானும், அப்படியே கொடுத்தோமென்று சொல்லிப்போயினார். (அதன்பின்) மாட்சிமையில்லாத அந்த விராக்கதர்களைவரும் அளவில்லாத வசுரர்களுடனே கூடிச் சென்று வறுமையில்லாத தேவாங்கமுனிவனைக் கொல்லக் கருதி நெருங்கினார்கள். எ - று. (௮௭)

இலங்குஞ் சவுட நாயகியங் கெழுந்தன் னவ்வா யெற்றுதலு
மலங்க லணிவச் சிரபலனோ டைவர் கறையும் வெவ்வேறாய்
நலங்கொ ணிறம்பெற் றிருப்பவதி னற்றே வலனா னயந்துபங்கித் [தார்
கலந்தைந் துருவேற் றினனரன்சொற் கடவா தெவருங் களித்தணிந்

(இ-ள்.) பிரகாசிக்கின்ற சவுடநாயகியார் அப்போர்க்களத்தி லெழுந்தருளி, அவ்வசுரர்களைக் கொன்றவுடனே, பூமாலையை யணிந்த வச்சிரதந்தனுடனே ஐந்து பேர்களுடைய வுதிரமும் வேறுவேறாகி நன்மைபொருந்திய நிறம்பெற்றிருக்க, அவ்வுதிரத்தில் நல்ல தேவாங்கமுனியானவன், விரும்பி அந்நூலை ஐந்துபாகஞ்செய்து, நனைத்து ஐந்துநிற மேற்றினான்; அந்நிறமேற்றிய நூலைச் சிவபெருமானுடைய வரந் தவறாதபடித் தேவர்முதலாகிய வெல்லாரும் விருப்பத்துடனே யணிந்துகொண்டார்கள். எ - று. (௮௮)

சவுடநாயகிவரந் தந்தசருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ_ சருக்கம் ௫-க்கு பாடல் ௨௦௮.

தேவாங்கதலதேவி சவுடநாயகியம்மை செய்யதா டுணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

ஆறுவது

சூடாநவ மணிமுடி சூட்டிய சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

இனிது சுருதி யுணர்சூத னிவ்வா றுரைப்ப விடர்கடந்த
முனிவர் தொழுது நிறைகேள்வி முதியோய் வளமா மோதநகர்
புனித முறவத் தேவலன்பின் பொன்மா மகுடம் புனைசீருங்
கனிவி னுடுகூ றுதியெனமற் றவனுங் கடிது கழற்லுற்றான்.

(இ-ள்.) நன்றாக வேதங்களையுணர்ந்த சூதபுராணிகரானவர், இவ்வகையாகச் சொல்ல, துன்பத்தை வென்ற முனிவர்கள் வணங்கி, நிறைந்த நற்கேள்வியையுடைய பெரியோரே! (செல்வம்) பெருகிய ஆமோதநகரமானது பரிசுத்த மடைய அந்தத் தேவாங்கமுனிவன், பின்னை பொன்னாற் செய்யப்பட்ட பெருமையுள்ள முடிசூடிய சிறப்பையும் மகிழ்வுடனே சொல்லக்கடவீரென்று கேட்க அச்சூதபுராணிகரும் விரைவாகச் சொல்லத்தொடங்கினர். எ-று. (க)

சென்ற திருத்தே வலமுனிவன் செறிந்து பரந்த திறலடவி
குன்ற நதியெண் ணிலகடந்து குமுறுங் கடல்சூழ் குவலயமான்
மன்றல் வதன திலதமென வயங்கா மோத வளநகரைக்
கன்ற லுறாத கருணையினாற் கண்டா னிதயங் களிகூர.

(இ-ள்.) அவ்வாறுபோன அழகிய தேவாங்கமுனிவன், நெருங்கிப் பரவிய அளவில்லாத வலிய காடுகளையும், மலைகளையும், ஆறுகளையும் தாண்டிப் பேரொலிசெய்கின்ற சமுத்திரஞ் சூழ்ந்த பூமிதேவிக்கு முகத்திலணியப்பட்ட மணமுள்ள திலகமென்னும்படி விளங்குகின்ற வளப்பமுள்ள ஆமோதநகரத்தை, குறையாத கிருபையினாலே மனமகிழ்ச்சிமிகக் கண்டான். எ-று.

சரத குணதே வலமுனிவன் றனிவ் வுளிவந் தனனென்னப் [ள்
பரவு செழுமென் பொழிலனைத்தும் பசுந்தே னிறைத்துப் பாட்டளிக
விரவு நறும்பூ மாரிசிந்தி விளைந்த கனிகண் மிகவேந்தி
வரம துடைய வடியரென வணங்கி யெங்கு மலிந்தனவே.

(இ-ள்.) உண்மைக்குணத்தையுடைய தேவாங்கமுனியானவன், இவ்விடத்தில் வந்தானென்று, பரவிய செழித்த மெல்லிய சோலைகளெல்லாம் பசிய தேனைச் சொரிந்து, இசையைச் செய்கின்ற, வண்டுகள், பொருந்திய

நல்ல புட்பமழையைப் பொழிந்து, விளைந்த பழங்களை மிகவும் தாங்கி, விருப்பமுள்ள அடியார்கள்போல வணங்கி யெவ்விடத்தும் நிறைந்தன. எ - று.

அது பகுதிப்பொருள் விகுதி. ஏ - அசை. (௩)

குலவு சுரும்பர் சுருதிசெயக் குயில்பண் பாடக் குளிர்கானத்
துலவு சுகங்க ளரன்புகழ்ப்பாட் டோத மலர்க ளுள்ளுருகி
மலியு மதுர மதுவுகுப்ப மைவார் வரிக்கண் மகளிரொன
நலிவு றுத பசுந்தோகை நன்மா மயில்க ணடஞ்செயுமால்.

(இ-ள்.) பொருந்திய வண்டுகள் சுருதிகூட்ட, குயில்கள் இசைப்பாட்டைப் பாடிநிற்க, குளிர்ந்த சோலைகளில் உலாவுகின்ற கிளிகள் சிவபெருமானுடைய கீர்த்தியாகிய பாடல்களைப் பாட, பூக்களானவை மனமுருகிப் பெருகிய மதுரமாகிய தேனைச் சிந்திநிற்க, மை யெழுதிய நீண்ட இரேகை பொருந்திய கண்களையுடைய பெண்கள்போல, வருத்தமில்லாத பசிய தோகையையுடைய நல்ல பெருமையுள்ள மயில்கள் நடனஞ்செய்யும். எ - று.

சுரும்பர் - போலி. (௪)

புனைந்த நகரத் துறைமாந்தர் புகழ்வெண் பொன்னாற் பூரியினு
லனந்த மணிக ளாற்பலவு மமைத்தார் நமைவேண் டாரதனு
லினங்கொள் பொழில்வாய்ப் பொருந்துவமென் றிருத்தல் போலு
மிளங்கதலி, வனங்கொள் பூக தங்கழைகள் வளர்வுற் றெழுந்து மலி
தோற்றம்.

(இ-ள்.) இளமையுள்ள வாழைகளும், அழகினையுடைய இதழ்களுள்ள கமுகுகளும், கரும்புகளும் வளர்ந்து மேலோங்கி நிறைந்த காட்சியானது, அலங்கரித்துச் சொல்லப்பட்ட ஆமோதநகரத்தில் வசிக்கின்ற மனிதர்கள் யாவரும், வெள்ளியாலும் (செம்) பொன்னாலும், அளவில்லாத மணிகளாலும் பல (ஆபரணங்கள் முதலாகிய) பொருள்களை யெல்லாஞ் செய்துகொண்டார்கள்; ஆதலின் நம்மை விரும்பார்கள். கூட்டமாகிய சோலையின்கண் போயிருப்போமென்று, அவைகள்வந்து இருத்தலையொக்கும். எ-று. (௫)

நடவு புரியுங் கடைசியர்க ணயனம் புறந்தா ணகைமுழந்தாள்
சுடருங் கிரீப மிவற்றினுக்குத் தோற்றுச் செழுஞ்சேல் சொலுங்கமட
மடருங் கிரண வெண்டாள மலவன் வளையு மனுதினமும்
படரு நளின மலர்வாவி பழனந் தோறும் பயம்படுமால்.

(இ-ள்.) (அந்நாட்டின்கண் நாற்றுகளை) நடுகின்ற பள்ளப்பெண்களுடைய கண்களும், புறவடிகளும், பற்களும், முழந்தாள்களும், காந்திசெய்கின்ற கழுத்தும், ஆகிய இவைகளுக்குத்தோற்று, செழுமையாகிய சேல்மீன்களும், சொல்லுகின்ற ஆமைகளும், நெருங்கிய கிரணங்களையுடைய வெள்ளிய முத்துகளும், ஞெண்டுகளும், சங்கங்களும், (ஆகிய இவைகள்யாவும்) எக்காலத்திலும் பரவிய தாமரைமலர்களையுடைய தடாகங்களிலும், வயல்களிலும், நீரிலும் வசிக்கும். [பயப்பட்டு வசிக்கும் எனப் பொருள் கோட லுமொன்று].

சேன்முதலியவை பயந்து நீரில் வசிப்பதற்குக் கண்முதலிய வுறுப்புகள் ஏதுவாதலின் இது ஏதுத்தற்குறிப்பணியும்; கண்முதலிய வுறுப்புகளையும் சேன்முதலிய வுவமப்பொருள்களையும் முறையே வைத்தலின் முறைநிரனிறையணியுமாம். ஆல் - அசை. (சு)

மதுர கீத வரிச்சும்பர் மலர்வாய்ச் சிதறு மதுப்பெருகிக்
கதிர்கள் வளர்ந்து களிற்றடக்குங் கழனி தோறுங் களைகளைய
வெதிரு மாதர் நயனநிழ லெங்கும் புன லூ டிலங்கவ்வது
முதிரு மீன மெனவுழவர் முடுகித் தேட முறுவலிப்பார்.

(இ-ள்.) இனிமையாகிய பண்ணைப் பாடுகின்ற புள்ளியையுடைய வண்டுகளானவை பூக்களிலிருந்து சிந்திய தேனானது பெருக (அதனால்) பயிர்க்கதிர்கள் வளர்ந்து யானைகளைத் தம்மிடத்து மறைக்குந்தன்மையவாகிய வயல்கள்தோறும், களைகளைப்பிடுங்கும்படி வருகின்ற (பள்ளப்) பெண்களுடைய கண்களின் நிழலானவை நீரி லெவ்விடத்தும் பிரகாசிக்க அச்சாயலை முற்றிய மீன்களென்று உழவர்கள் விரைந்து தேடாநிற்க, (பார்த்த அம்மாதர்கள்) நகைப்பார்கள். எ - று.

பெருகி யென்னும் செய்தெனெச்சத்தைப் பெருக எனத் திரித்துக்கொள்க. பெண்களின் கண்களி னிழலை மீனென்று மயங்கினமையால் இது மயக்கவணி. (எ)

அலர்மென் முலைப்பூங் கடைசியர்தம் மரிய நடைபேட் டனம்பழகு
மலர்தண் சோலைக் கிள்ளையவர் மதுர மொழியான் மனமறுகு
மிலகுங் குழற்கு நாணிவன மெல்லாம் பொறிவண் டினம்புலம்புங்
கலவ மயிலின் றொகுதியவர் களிகூர் சாயல் கற்றிடுமால்.

(இ-ள்.) அடிபரவிய மெல்லிய முலைகளையுடைய அழகிய வுழத்தியரது அருமையான நடையைப் பெண்ணன்னங்கள் கற்றுக்கொள்ளும், விரிந்த குளிர்ச்சியுள்ள சோலைகளில்வசிக்கும் கிளிகள் அப் பெண்களுடைய இனிய வார்த்தைகளால், (தமக் கினிமை யின்மையால்) மனமயங்கும், பிரகாசிக்கின்ற (அவர்கள்) கூந்தலுக்கு வெட்கிச் சோலைக ளெவ்விடங்களிலும் புள்ளிகளையுடைய வண்டுக்கூட்டங்கள் ஒலிக்கும், தோகையையுடைய மயிலின் கூட்டங்கள் அவர்களுடைய களிப்புமிகுந்த சாயலைக் கற்றுக்கொள்ளும். ()

ஆலை மலிமென் மலர்கனிகா யரும்பர் தளிர்க ளடர்ந்ததடஞ்
சோலை யதிக வளநிறைந்த தோற்றம் புலவர் துதிக்கவளர்
மாலை யணிவங் காருதிரு மலைப்போ டயமான் மரபிலுள்ளோர்
வேலை யுலகிற் சவுபாக்ய மிகவீற் றிருக்கு மியல்போலும்.

(இ-ள்.) தேன்நிறைந்த மெல்லிய மலர்களும், பழங்களும், காய்களும், அரும்புகளும், தழைகளும் நெருங்கியுள்ள பெரிய சோலையினது மிக்க வளப்ப நிறைந்த காட்சியானது, வித்துவான்கள் (கவிகளால்) புகழ வளருகின்ற பூமாலையை யணிந்த வங்காருதிருமலைப்போடயன் என்னும் பெருமையிற்

சிறந்தோனது வம்சத்தி லுள்ளவர்கள், கடல்சூழ்ந்த பூமியினிடத்து கீர்த்திய யோகமிகுமாறு மகிழ்ந்திருக்குந் தன்மையை யொக்கும். எ - று. (௯)

மலர்மா துறைந்த வந்நகர்வாய் மணிப்பொற் சிகரி மிசைப்பொலிந்த
பலகே தனங்கள் சிறுகாலா லசையும் பான்மை பரனளித்த
நலமா தவவிந் நாளேநன் னாளா தலினு னகுமுடிவேய்ந்
தலர்பார் புரப்ப வந்தருளென் றழைக்குங் கருணை யதுபோலும்.

(இ-ள்.) தாமரைமலரில் வசிக்கின்ற திருமகளானவள், வீற்றிருந்த அந்த ஆமோதநகரினிடத்து, மணிகளாலும் பொன்னாலுஞ் செய்யப்பட்ட கோபுரங்களின்மேல் விளங்கிய பலவாகிய கொடிகளானவை தென்றற்காற்றால் அசைகின்ற காட்சியானது, சிவபெருமானு லருளப்பட்ட, நல்ல பெரிய தவத்தையுடைய தேவாங்கமுனிவனே! இன்றையத்தினமே நல்லதினம் ஆதலால், விளங்குகின்ற முடிசூடிப் பெரியபூமியைக் காக்க வந்தருள்வாயென்று கூப்பிடுங் கிருபையை யொக்கும். எ - று.

கருணையது - வேற்றுமைமயக்கம். கொடிகளசைதல் அழைத்தலாகக் கூறினமையால் இது தற்குறிப்பணி. (௧௦)

வளமை பலகண் டுளங்களித்து வருதே வாங்கன் வரவுணர்ந்தே
தளர்வு றாவந் நகர்புரக்குந் தக்க சுனுபன் றனதமச்ச
ரளவில் பொருநர் புரோகிதர்மற் றோருஞ் சூழ வணிகமொய்ப்ப [ந்து.
விளமென் மகளிர் நடஞ்செயப்பல் லியமார்த் தெழச்சென் றெதிர்போ

(இ-ள்.) பலவாகிய வளப்பங்களையெல்லாம் பார்த்து மனமகிழ்ந்து, வருகின்ற தேவாங்கனுடைய வரவையறிந்து, (குடிகள்) வருந்தாதபடி, அந்த ஆமோதநகரத்தைக் காக்கின்ற மேன்மையுள்ள சுநுபனென்னு மரசனானவன், தன்னுடைய மந்திரிகளும், அளவில்லாத போர்வீரர்களும், புரோகிதர்களும், மற்ற நகரத்தார்களுஞ் சூழ்ந்துவர, சேனைகள் நெருங்கிவர, இளமையும் மென்மையுமுடைய பெண்கள் நடனஞ்செய்ய, பலவாத்தியங்கள் ஆரவாரிக்க, எதிர்சென்றுவந்து. எ - று. (௧௧)

திறல்கூர் சுனுபன் முதற்பலருந் திருத்தே வலன்சே வடிதாழ்ந்து
நறவார் மலர்தூய்க் கரங்குவித்து நலமெய்த் துதிபற் பலபுரிந்து
மறமூ விலைவே ருங்குபரன் மகிழ்வி னளித்த மதிக்கடலே
குறைதீர் செல்வச் செழுஞ்சுடரே குலவு ஞானக் குணக்குன்றே.

(இ-ள்.) வலிமைமிகுந்த சுநுபவரசன் முதலாகிய யாவரும் அழகிய தேவாங்கனுடைய சேவடிகளைவணங்கி, மணம்பொருந்திய மலர்களா லருச்சனைசெய்து, கைகளைக்குவித்து நல்ல வுண்மையாகிய தோத்திரங்கள் பல செய்து, வீரத்தையுடைய சூலாயுதமேந்திய சிவபெருமான் விருப்பத்துடனே பெற்றஅறிவாகிய சமுத்திரமே! யாவருடைய குறைகளையுந்தீர்க்கின்ற செல்வமாகிய செழித்ததீபமே! யாவருங் கொண்டாடப்பட்ட ஞானத்தையுடைய குணபருவதமே! என்று தோத்திரஞ்செய்தனர். எ - று. (௧௨)

எமது கவலே யிருள்கற்ற வெழுந்த கதிரே யிந்தநகர்
விமல முறநீ யேமவுலி வேய்ந்து செங்கோல் விதிகைக்கொண்
டமர ருரகர் நரர்முதன்மற் றனேவோ ரையுங்காத் தருடியெனக்
கமல முகம்பூத் தறவியந்து கலேதேர் முனிவன் களிகூர்ந்தான்.

(இ ள்.) எங்கள் அச்சமாகிய இருளே நீக்க வெழுந்தருளிய சூரியனே! இந்த ஆமோதககாமானது பரிசுத்தமடையும்படி நீயே முடிசூடிச் செங்கோல் முறைமையைக் கைக்கொண்டு, தேவர்களும் நாகலோகவாசிகளும், மனிதர் முதலாகிய மற்றையோரும்ஆகிய இவர்களையெல்லாம் காத்தருள்வாயென்று சொல்ல, ஞான நூல்களையும், நீதிநூல்களையும் உணர்ந்த தேவாங்கமுனிவன், தாமரைமலர்போன்ற முகமலர்ந்து மிகவும் புகழ்ந்து, களிப்புமிகுந்தான்.

அறத்திற் றிரியாச் சுஞுபனெனு மரசன் பின்னு மடிவணங்கி
திறத்திற் சிறந்த மதிவல்லோய் நிறைதண் கருணே நீகூர்ந்து
திறத்திற் பொலிந்த கரடமதச் சினவிக் களிற்றின் செழியசிறு
புறத்துற் றெழுக வெனவழுத்திப் புகல முனியும் பொருந்தினனல்.

(இ ள்.) தருமத்தினின்றும் மாறுதலில்லாத சுஞுபன் என்னும் அரசனவன், மறுபடியும் (தேவாங்கமுனிவனுடைய) பாதங்களைவணங்கி, நற்குணங்களில் மேம்பட்ட அறிவில்வல்லோனுகிய தேவலமுனிவனே! நீ நிறைந்த குளிர்ச்சியாகிய கிருபைமிகுந்து, வலிமையால் விளங்கிய மதம்பாய் சுவட்டையும், மதத்தையும், கோபத்தையும் உடைய இந்த யானையினது செழித்த சிறிய பிடரியின்மீது எழுந்தருளி வரக்கடவை யென்று துதிசெய்து சொல்லத் தேவரங்கமுனிவனும் (அரசன் கருத்திற்குச்) சம்மதித்தான். ()

குணமா தவத்தோன் மதவேழக் கொழுந்திண் பிடர்மேற் கொளலோ
பணைவால் வளைதுந் துபிமுரசம் பாண்டின் முழவம் பகர்காளந் [டும்
கணைபே ரிகைகோ டுறுமிதுடி கரடி தவிலேழ் கடலுமஞ்ச
மணமூ வுலகெண் டிசையதிர்த்து மயங்க முழங்கி மலிந்தனவே.

(இ-ள்.) நல்ல குணங்களையும் பெரிய தவத்தையு முடைய தேவாங்கமுனிவன், மதத்தையுடைய யானையினது செழித்த வலிய பிடரியின்மீது ஏறினவுடனே, புல்லாங்குழலும், வெள்ளிய சங்கமும், துந்துபியும், முரசமும், கைத்தாளமும், குடமுழாவும், யாவருஞ் சொல்லுகின்ற எக்காளமும், மிகுந்த பேரிகையும், ஊதுகொம்பும், உறுமியும், உடுக்கையும், கரடிகையும், தவிலும் ஆகிய விவையெல்லாம் ஏழுசமுத்திரங்களும் அஞ்சவும் மகிழ்ச்சியுள்ள மூன்றுலகங்களும், எட்டுத்திக்குகளும் அதிர்ந்து மயங்கவும் முழங்கி நிறைந்தன. எ - று.

கரடிகை என்பது கரடி எனக் கடைக்குறையாய் நின்றது. (கரு)

கலிவிருத்தம்.

ஆடினர் வனிதைய ரமுத கீதங்கள்
பாடினர் வயிரியர் பரவி வந்தியர்

கூடின ரனைவருங் குலவு பேரின்ப
நீடினர் பூசுரர் நிறைந்து போற்றினர்.

(இ-ள்.) பெண்கள் நடனஞ்செய்தார்கள்; பாணர்கள் அமிர்தம்போலும் பாடல்களைப் பாடினார்கள்; புகழ்ந்துபாடுவோர் யாவரும் தேவலனைத் துதித்துக் கூடினார்கள்; பொருந்திய பேரின்பத்தில் பிராமணர்கள் மிகுந்தவராகி நெருங்கிப் புகழ்ந்தார்கள். எ - று. (கசு)

வானவர் தருமலர் மழைபொ ழிந்தனர்
மோனவ ராசிகண் மொழிந்து சூழ்ந்தனர்
தானவ ரறவருந் தவத்தற் கன்னமே
ரானவ ரனந்தரா லத்தி சுற்றினர்.

(இ-ள்.) தேவர்கள் கற்பகமுதலாகிய ஐந்து விருக்ஷங்களினுண்டாகிய மலர்களை மழைபோலப் பொழிந்தார்கள்; யோகியர்கள் மங்கல வாழ்த்துக் கூறி சூழ்ந்தார்கள்; அன்னப்பறவையை நடையாலொத்த அளவில்லாத பெண்கள், இராக்கதர்கள் நாசமடையும்படி (ச்சிவபெருமானுடைய இதயகமலத்தில் பிறந்து) வந்த தவத்தையுடைய தேவாங்க முனிவனுக்கு ஆலாத்தி சுற்றினார்கள். எ - று. (கஎ)

உலகுறை பவரெலா முவப்பக் கங்கைநீர்
குலவிய பலமணிக் கும்ப நேர்வரத்
தொலைவறு சீர்புனை சுனபன் மாளிகைத்
தலைமைகொண் மவுனமா தவத்தன் மேவினான்.

(இ-ள்.) பூமியில் வசிப்பவர்கள் யாவரும் களிப்படையவும், கங்கைநீர் நிறைந்த பல ரத்தினகுடங்களெதிரே வராநிற்கவும், அழிதலில்லாத சிறப்பினையுடைய சுனபவரசனது அரண்மனையில், முதன்மைகொண்ட ஞானமும் பெரிய தவமுமுள்ள தேவாங்கமுனிவன் சென்றான். எ - று. (கஅ)

சேர்ந்துழி யனைவருந் திரண்டு கங்கைநீ
ரார்ந்துள மஞ்சன மாட்டி யன்புளங்
கூர்ந்தரி தாங்கிய கொழும்பொற் பீடமேற்
சார்ந்திட விருத்தினர் தவக்கொ ழுந்தையே.

(இ-ள்.) (சுனபவரசனுடைய அரண்மனையில்) தேவாங்கமுனிபோய்ச் சேர்ந்தவுடனே, யாவரு மொன்றாகக்கூடி, கங்கைநீர் நிறைந்த மஞ்சனத்தினாலே அபிஷேகஞ்செய்து, மனத்தி லாசைமிகுந்து, சிங்கஞ் சுமந்த செழித்த பொன்மயமாகிய ஆதனத்தின்மேலே இருக்கும்படித் தவக்கொழுந்தாகிய தேவாங்கமுனிவனை யெழுந்தருளப்பண்ணினார்கள். எ - று. (கசு)

வலனுறு மமைச்சர்கண் மகிழ்பு ரோகிதர்
பலகலை தெளிந்தவிற் பன்னர் பண்டித
ருலைவறு சோதிட ரொற்றர் வீரர்க
ளிலகுகா விதிகண்மற் றெவரும் போற்றவே.

(இ ள்.) வெற்றிபொருந்திய மந்திரிகளும், மகிழ்ச்சியுள்ள புரோகித ர்களும், பல நூல்களைக் கற்றுணர்ந்த புலவர்களும், வயித்தியர்களும், மாறுபடு தலில்லாத சோதிட நூலுணர்ந்தவர்களும், தூதர்களும், சேனுவீரர்களும், விள ங்குகின்ற கணக்கர்களும், மற்றும் யாவர்களும் வந்து தன்னை வணங்கவும். ()

கலைமதி நிலவுமிழ் கவிகை சாமரை
மலைவரு கால்புரி வட்ட மேமுத
லலகில்பற் பலவிரு தனைத்து மோங்கமென்
மலர்வனி தையர்சிலர் வாரி வீசவே.

(இ ள்.) சோடச கலைகளை யுடைய சந்திரன்போலும் பிரகாசத்தை வீசுகின்ற குடைகளும், சாமரைகளும், பொதியமலையினின்றும் வருகின்ற தென்றற்காற்றைச் செய்கின்ற விசிறிகளும் ஆகிய விவைமுதலாகிய அளவில் லாத விருதுகளெல்லாம் மிகவும், மென்மையாகிய மலரில்வசிக்கின்ற திருமகள் போன்ற சில பெண்கள் எடுத்து வீசவும். எ-று. (உக)

மங்கல சோபன மதுர வோசையுந்
துங்கமா தவர்புகல் சுருதி யோசையும்
பொங்குவந் தியர்பலர் புகழு மோசையு
மெங்கணு மிடைவிடா தினிதி னோங்கவே.

(இ-ள்.) கலியாணவாழ்த்துகளின் இனியவோசையும், தூய்மையை யுடைய பெரிய தவசியர்கள், வேதாத்தியயனஞ்செய்கின்ற வோசையும், மிக ந்த மங்கலப்பாடகர்கள் பலர்புகழ்கின்ற வோசையும், எவ்விடத்தும் நீங்கா மல் நன்ருக மிகவும், எ-று. (உஉ)

பூவனி தையுமலர்ப் பொகுட்டின் மீதுறை
மாவனி தையுந்தமிழ் வாணர் போற்றிடு
நாவனி தையுமிக நாளு மின்புறத்
தூவக முனிக்கொளிர் சுடிகை சூட்டினர்.

(இ-ள்.) பூமிதேவியும், தாமரைக்கொட்டையின்மேல் வசிக்கின்ற திருமகளும், தமிழ்ப்புலவர்கள் துதிக்கின்ற கலைமகளும், எக்காலத்தும் மிகவு மன்[illegible] பரிசுத்தமாகிய மனத்தையுடைய தேவலமுனிவனுக்கு (எப்போதும்) பிரகாசிக்கின்ற மகுடத்தைச் சூட்டினார்கள். எ-று. (உந)

மடங்கலா தனத்திடை வயங்கு மாமுனி
திடங்கொள்சே வடிமலர் சென்னி மேற்கொடு
தடங்கரங் குவித்துளந் தளர்வு றுவகை
தொடங்குறு நற்குணச் சுனுபன் கூறுவான்.

(இ ள்.) சிம்மாசனத்தின்கண் (எழுந்தருளி) விளங்குகின்ற தேவாங்க முனிவனுடைய வலிமைகொண்ட சிவந்த பாதமலர்களைச் சிரசின்மேற் கொண்டு, பெரிய கைகளைக்குவித்து மனஞ் சோராதபடி (உலகத்திற்கு நன் மைசெய்யத்) தொடங்கிய நல்லகுணத்தையுடைய சுனுபவரசன், சொல்லத் தொடங்கினன். எ-று. (உச)

மூதுண ரிராசமா முனிவ கேட்டியிம்
மேதினி முழுவதும் விழைவி னோம்புதி
தீதினை மருவிய சிறிய னேன்செலக்
கோதிலா வருள்விடை கொடுக்க வேண்டுமால்.

(இ-ள்.) முதிர்ந்த அறிவினை யுடைய இராசனாகிய தேவாங்கமுனிவனே! கேட்பாயாக; இந்த உலகமெல்லாம் விருப்புடனே காக்கக்கடவை; தீமையையடைந்த சிறியேன் செல்லும்படி நல்ல கிருபையுள்ள உத்தரவு கொடுக்கவேண்டும் என்று சொன்னான். எ-று. (உரு)

என்னலு முனிவியந் தினிய சொற்பகர்ந்
தன்னவன் றனைத்தன தருகி ருத்தியே
துன்னலர் தொழவரு சுனப வென்னொடு
மன்னுக நீயென மன்னன் கூறுவான்.

(இ-ள்.) இவ்வாறு சுனபவரசன் சொன்னவுடனே, தேவாங்கமுனிவன், ஆச்சரியமடைந்து, இனிய வசனங்களைக்கூறி, அந்தச் சுனபவரசனைத் [illegible]னுடைய பக்கத்திலிருக்கச்செய்து, பகைவர்கள் வணங்கவருகின்ற சுனப [illegible]ரசனே! நீ [illegible]னுடனே நிலையாக வசிக்கக்கடவை யென்றுசொல்ல, சுனப [illegible]சொல்லுவான். எ-று. (உசு)

இனியிவ ணுறைகுவ தியல்பன் றென்னையாள்
புனிதவுன் னருளினாற் புணரி சூழ்புவி
தனியியான் றண்டுருச் சாபந் தாண்டினேன்
பனிகதிர் வரவகல் பான்மை போலென்றான்.

(இ-ள்.) என்னை யாளுகின்ற பரிசுத்தனாகிய தேவாங்கமுனிவனே! உன்னுடைய கிருபையால், கடல்சூழ்ந்த வுலகத்தில், சூரியன் வரப் பனி நீங்குந் தன்மைபோல், நான் கடக்கமுடியாத சாபத்தைக் கடந்தேன்; (ஆகையால்) இனிமேல் இவ்விடத்து வசிப்பது தகுதியல்லவென்று சொன்னான்; சுனபவரசன். எ-று. (உஎ)

அரசனிம் மொழிசொல வருந்த வத்தினோன்
புரவல சாபமார் பொருத்தி னாரது
தரவரு நிமித்தமென் சாற்று வாயென
வரமிகு களாவதி மணாளன் கூறுவான்.

(இ-ள்.) சுனபவேந்தன் இவ்வார்த்தைகளைச் சொல்ல, அரிய தவத்தையுடைய தேவாங்கமுனிவன், (அச்சுனபனைநோக்கி) அரசனே! உனக்கு யார் சாபமிட்டார்கள்? அச்சாபமிடும்படி வந்தகாரணம்யாது? சொல்லக்கடவையென்றுகேட்க, விருப்பமிகுந்த களாவதி நாயகனாகிய சுனபவரசன் சொல்லத் தொடங்கினான். எ-று. (உஅ)

சா[illegible]கே ளுருக்கும தரனெ னுந்திரு
காமமே புனைந்தகின் னரர்க டம்பிரான்

வாமநீள் புதல்வன்யான் மருவு மென்மனை
சேமமார் சித்திர ரேகை யென்பவள்.

(இ - ள்.) தலைவனே! கேட்பாயாக: நான் உருத்ருமதரன் என்னுந் திருநாமத்தையுடைய கின்னரர்களின் அரசன் பெற்ற அழகுமிகுந்த புத்திரன்; நிறைந்த சித்திரரேகை யென்பவள், பொருந்திய என்மனைவியென்றான்; சுறுப வரசன். எ - று. (உகூ)

அன்னவ ளொடெழியா னணிவி மானமேன்
மன்னுபு கயிலைமால் வரையைச் சார்ந்தரன்
தன்னிய லுமையொடு தனித்தி ருந்தருள்
பொன்னிற மலர்தரும் பொழிலை மேவினேன்.

(இ - ள்.) அந்தச் சித்திரரேகையுடனே நான், அழகிய விமானமேலேறி பெருமையுள்ள கயிலாசபருவதத்தை யடைந்து, சிவபெருமான் தன்னுடைய இலக்கணமுள்ள பார்வதிதேவியாரோடுந் தனியேயிருக்கின்ற பொன்னிறமுள்ள மலர்கள் வாசனை வீசுகின்ற சோலையை யடைந்தேன். ()

மேவலு மரனெனை வெகுண்டு மூடநீ
யாவலோ டிவ்வனத் தடைதற் கேதுவென்
பூவரு மாந்தர்த முதராய் புக்குறித்
தேவரு நெடுங்கடற் படிந்தி ருத்தியால்.

(இ - ள்.) (அப்படிச்சோலையிற்) சென்றவுடனே சிவபெருமான்கோபங்கொண்டு என்னைநோக்கி மூடனே! நீ ஆசையுடனே இச்சோலையின்கண் வருவதற்குக் காரணம் யாது? (காரணமின்றி வந்தபடியால்) பூமியிலுள்ள மானுடர் வயிற்றிற் பிறந்து, மாறிமாறிவருகின்ற பெரிய (பிறவிக்) கடலின் முழுகியிருக்கக்கடவை யென்று சாபமிட்டார். எ - று. (கக)

உன்னுடை மனைவியு முலகிற் றோன்றியே
மன்னுமுன் புயமும் பெறுவள் போதிநீ
யென்னலு மவர்பணிந் தேத்தி மற்றிது
[illegible] தவிர்வ தென்றென்றேன்.

(இ - ள்.) (மீட்டும் சிவபெருமான்) உன்னுடைய மனையாளும் பூமியிற்பிறந்து, நிலைபெறுகிய உனது புயத்தைச் சேருமாறு விவாகஞ்செய்துகொள்ளுவாள், நீ போகக்கடவையென்று சொன்னவுடனே, அச்சிவபெருமானை வணங்கித் துதித்து, தனக்குத்தானே உவமானமாகிய முதல்வனே! இச்சாபமானது நீங்குவது எப்பொழுதென்று கேட்டேன். எ - று. (கஉ)

இசைகொடே வாங்கனென் றிராச மாமுனி
வசையற கமதள மலரிற் றோன்றியே
திசைதொழு நின்பதி சேர்வ னன்னவ
லொழியுமிச் சாபமென் றுரைத்த கன்றனன்

(இ-ள்.) கீர்த்தியைப்பெற்ற தேவாங்கனென்கிற இராசமாமுனியானவன், குற்றமில்லாமல் நம்முடைய இதயதாமரைமலரி லுதித்து, எட்டுத்திசைகளிலுமுள்ளோர்வணங்குகின்ற உன்னுடைய ஆமோதநகரையடைவான்; அம்முனிவனாலே இச்சாப நீங்குமென்று அநுக்கிரகஞ்செய்தார்; சிவபெருமான்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பிற்றையிந் நகர்பு ரக்கும் பிரானெனும் பத்திர வாகு
முற்றுள மகிழ வன்றேன் முதிர்பெருங் கற்பின் மிக்காள்
வற்றன வரிநோக் கிந்து மதிவயிற் றுதித்தே னென்றன்
பொற்றொடி மனையாள் காசிப் புரவலன் புதல்வி யானாள்.

(இ-ள்.) அதன்பின்பு, இவ்வாமோதநகரத்தைக் [காக்]கின்ற தலைவனாகிய பத்திரவாகு என்பவன், மனமுற்று மகிழும்படி, அவனத் முதிர்ந்த பெருங்கற்பிற் சிறந்தவளாகிய சூதாடுகருவிபோன்ற முலைகளையும், இரேகையுள்ள கண்களையுமுடைய இந்துமதி என்னும் மனைவியினுடைய வயிற்றினின்கண் வந்து பிறந்தேன். பொன்னாற் செய்யப்பட்ட வளையல்களை யணிந்த என்னுடையமனைவியாகிய சித்திரரேகை யானவ[ள் கா]சிராஜனுக்குப் பெண்ணாகப் பிறந்தாள். எ-று. (௫௪)

அவடனை யெளியேற் கெந்தை யருள்மணம் புரிவித் தான்மற்
றிவைகளென் சரித மைய வென்றுதே வலனைப் போற்றித்
தவ்விடை மனைவி யோடுஞ் சுஞுபன்மெய் துறந்து தெய்வ
சுவவுருக் கொடுவி மான நண்ணிவிண் ணூடு புக்கான்.

(இ-ள்.) அக் காசிராசன் மகளாகிய கனாவதி என்பவளை, என் பிதாவானவன், எளியேனுக்குக் கிருபையுடனே கலியாணம் செய்வித்தான், ஐயனே! என் பூர்வீகசரிதம் இதுதானென்றுகூறி, தேவாங்கமுனிவனை வணங்கி (விடைபெற்றுக்கொண்டு) துவளுகின்ற இடையையுடைய மனைவியுடனே மானுட வுருவம் நீங்கிப் புதுமையாகிய தேவவுருவம் பெற்று விமானமேறிக் கொண்டு வித்தியாதரலோகமடைந்தனன். எ-று. (௫௫)

புவிபுகழ் சுஞுப மன்னன் பொன்னக[ர் பு]குந்த பின்னை
யவருடற் கியற்றத் தக்க வருங்கட[ன]னைத்துஞ் செய்வித்
துவகையின் புறுதே வாங்க னென்[ன]லர் [ப]ணிந்து [போற்ற]
சிவனருள் வழாமற் செங்கோல் செலுத்திவீற் றிருந்தான் மன்னோ.

(இ-ள்.) பூமியிலுள்ளோர்கள் கொண்டாடப்பட்ட சுஞுபராசன் தேவலோகத்தை யடைந்தபிறகு அச்சுஞுபன் கனாவதி யிவர்கள் சரீரத்துக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியை யாவுஞ் செய்வித்து, களிப்புஞ் சுகமுமுள்ள தேவாங்கமுனியானவன், பகையரசர்கள் வந்து பணிந்து கேழ்ப்பமேம்படி, சிவபெருமானுடைய கிருபை வழுவாமல், செங்கோல் நடத்தி வீற்றிருந்தான். ()

சுடர்நவமணிமுடி சூட்டிய சருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆ. சருக்கம் ௨-க்கு பாடல் ௨௪௪.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை மலரடித்தாள் [வாழி]டுணை.

சிவமயம்.

சவுடாம்பிகை சகாயம்.

ஏழாவது

கபிஞ்சலன் சாபங் களைந்த சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

திருந்திப்பற் பலகலையின் றிறமுமினி துணர்ந்துபுகழ்
சிறந்த மேலோய்
பருந்துழல்வேற் படை[illegible]யோன்னர் பணிந்திடவா மோதவளம்
பதியிற் சீயம்[illegible]
பொருந்துமணிப் [illegible]கமீ திருந்தருடே வலமுனிபின்
புரிந்த வாறு
[illegible]றுமுரைத்திநீ யோதெனமா தவர்வினவச் சூதனிசைத்
துணர்ப்ப தானான்.

(இ-ள்.) செவ்வையாகிய பலநூல்களினுடைய பொருள்களையெல்லாம் நன்றாக வுணர்ந்து கீர்த்தியினாற் சிறந்த பெரியோராகிய சூதபுராணிகரே! பருந்துகள் வட்டமிடும்படியாகிய வேலாயுதத்தை யேந்திய பகையரசர்கள் வணங்கும்படி, வளப்பமுள்ள ஆமோதநகரின்கண், மணிகள் பதித்த சிம்மாசனத்தின் மீதிருந்து அரசுசெலுத்திய தேவாங்கமுனிவன், பின் செய்த காரியங்களும் முற்றும் தேவரீர் சொல்லியருள்வீராகவென்று, மகத்தாகிய தவத்தினையுடைய முனிவர்கள் கேட்கச் சூதபுராணிகர் அதற்குடன்பட்டுச் சொல்லத்தொடங்கின[illegible] எ-று. (க)

தருமவங்கார் திருமலைப்பேர டயனைபோற் புவிபுரக்குந்
தளத்தே வாங்க
திரு[illegible]னெங்கும் புகழ்சுபுத்தி மானொடுகா ரியதக்க
னீதி வக்தன்
வருமுறைதேர் தீர்க்கதரி சனனெனுமந் திரரொருநால்
வரையு நோக்கித்
திருவனச முக[illegible]லர்ந்து கருணைமகிழ் பெருகியிவை
செப்பி னானால்.

(இ-ள்.) தரு[illegible]டைய வங்கார்திருமலைப்போ[illegible]யன் என்னும் அரசனைப்போல, உ[illegible]கத்தைக் [illegible]க்கின்ற சேனைகளையுடைய தேவாங்கமுனிவனுகிய அரச[illegible], எவ்வு[illegible]கரும் புகழ்[illegible]ன்ற சுபுத்தி[illegible] என்பவனுடனே, காரியதக்கன், நீதிவந்தன், குடிகளின் முறைமைகே[illegible] ஆராய்ந்தறி

கின்ற தீர்க்கதரிசனன் என்னும் மந்திரிகள் நால்வரையும் பார்த்து, இலட்சுமி யானவள் வசிக்கின்ற தாமரைமலர் போன்ற முகமலர்ந்து, கிருபையும் மகிழ்ச்சி யும் பெருகி இவ்வார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினான். எ - று. (உ)

வருவனவெ லாந்தெரிந்து வழுவாது பகர்சுருதி
வல்லீர் கேண்மின்
விரிகிரண முமிழ்குழவி வெண்ணிலவு தவழ்சடில
விமல மூர்த்தி
தருமமுறை தவறுதிந் நகரிலரா சிருந்தமரர்
தரணி யோர்க்கு
மருமைபெறு கலையியற்றி யளித்திடுதி யெனவரமெற்
கருளி னானால்.

(இ-ள்.) வருங்காரியங்கள் யாவு மறிந்து தவறாமற் சொல்லப்பட்ட நீதிநூல்களில் வல்லவர்களாகிய மந்திரிமார்களே! கேட்பீராக; விரிந்த கதிர்களைக் கக்குகின்ற வெள்ளிய இளஞ்சந்திரன் தவழும் சடையையுடைய மலரகிதராகிய சிவபெருமான் எனக்குத் தருமமார்க்கமானது நீங்காமல், இவ்வாமோதநகரில் செங்கோல்செலுத்தியிருந்து, தேவர்களுக்கும் மனிதர்களுக்கும், அருமையாகிய ஆடைகளைச் செய்து கொடுக்கக்கடவை யென்று வரங்கொடுத்தருளினாரென்று சொல்லுவான்; தேவாங்கமுனிவன். எ - று (ங)

சுருதிபுகழ் பரமனருட் படிநாமிவ் வயிற்றுறைந்து
துகில்க ளாற்றக்
கருவிபல வேண்டுமவை தரற்குரிய கருத்தனெந்தக்
கடவு ளோர்க்கும்
பெருமைபுரி திறலாளன் பிறங்குபுகழ் பெருந்தட்டப்
பிரம னீன்ற
தருணகய விச்சுவவி யாபகனு மணிக்கனக
சயிலத் துற்றான்.

(இ-ள்.) வேதங்களானவை புகழ்கின்ற சிவபெருமானுடைய கட்டளைப்படி, நாம் இவ்விடத்துவசித்து, வஸ்திரங்களைச் செய்ய பல ஆயுதங்கள்வேண்டும்; அவ்வாயுதங்களைக் கொடுப்பதற்குரிய கருத்தாவானவன் எவ்வகைத் தேவர்களுக்கும் பெருமையைச் செய்கின்ற வல்லமையுடையவனாகிய விளங்குகின்ற கீர்த்தியையுடைய விச்சுவகர்மா வானவன் பெற்ற காளையாகிய இனிய விச்சுவவியாபகன் என்னும் மயனானவன் மேருமலையில் வசிக்கின்றான். ()

வடவரையி னுறைமயனைப் பார்ப்பவனுப்பித் துகிற்கருவி
வனைகண் டுற்று
[illegible]ல்கெழுமன் னவனுநாற் கொணர்தியா னீவிரிந்த
வவனி பே[illegible]

யிடர்களைதி ரெனவுரைசெய் தெழுந்துமுனி தூணிபுயத்
திலங்க வீக்கிப்
படர்கிரணப் பிறைநிகர்விற் கரத்தேந்திப் படைக்கலங்கள்
பலவுந் தாங்கி.

(இ-ள்.) வடதிசையிலுள்ள மேருமலையில் வசிக்கும் மயனிடஞ் சென்று, அடை செய்தற்குவேண்டிய ஆயுதவகைகள் யாவும், வெற்றிபொருந்திய அம் மயனுடைய கிருபையால் யாம் பெற்றுவருகின்றேம், நீங்கள் இவ்வுலகத்தைத் துன்பநீக்கிக் காக்கக்கடவீரென்று சொல்லித் தேவாங்கமுனிவன் எழுந்து, அம்புக்கூட்டை புயத்தில் விளங்கக்கட்டி, பரவிய கிரணங்களுடைய பிறையை யொத்த வில்லைக் கையிலேந்தி, ஆயுதவகைகள் யாவும் தாங்கிக் கொண்டு. எ - று. (ரு)

சிகரதட வடகனகச் செழுஞ்சிலம்பு தனைநோக்கித்
திறல்கூர் மேலோன்
கனைமுத லொருவரின்றித் தனிகடந்து பலவடவி
கடந்து பாவ
விகடமறு கார்கேய மாமுனியாச் சிரமதின்
மேவ லோடும்
புகரிருள்சீத் தெழுந்தகதிர்ப் புத்தேள்வா ருணகடல்புக்
புகுந்தான் மன்னோ.

(இ-ள்.) ......யுடைய விசாலமாகிய செழித்த மேருமலையைக் கருதி வலிமை மிகுந்த தேவாங்கமுனிவன், படைத்துணைவர் முதலாகிய ஒருவர் துணையில்லாமல் தனியே சென்று, பலகாடுகளைத்தாண்டி, பாவமும் வேறுபாடுமில்லாத கார்கேயமுனிவரது ஆச்சிரமத்தைச் சேர்ந்தவுடனே, குற்றமாகிய விருளைப்போக்கி யெழுந்த சூரியதேவனானவன், மேற்றிசைக்கடலில் அஸ்தமித்தான். எ - று. (சு)

அன்றரிய தவமுனிவ னாச்சிரமத் திடைவதிந்தவ்
வல்கல போக்கிக்
குன்றாய கதிரரவி குணதிசையி லெழுதலுஞ்சற்
குணத்தின் மிக்கான்
சென்றளவில் சோலைசெழு ......ள மணிகொழித்துத்
திரை......டார்த்த
......ன்றனதி பல......து வருங்காலை யொருகொடிய
வனங்கண் ணுற்றான்.

(இ-ள்.) அவ்விரவைத் தினம் அரிய தவத்தையுடைய கார்கேயமுனிவ......ன்னசாலையில் ......சித்து, அவ்விரவைக் கழித்து, மிகுந்த கிரணங்களையுடைய சூரியனானவன், கீழ்த் திசையிலுதயமானவுடனே சன்மார்க்கத்தில் மிகுந்த தேவாங்கமுனிவன், அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, அளவில்லாத சோலைகளையுடைய மலைகளையும், செழித்த முத்துக்களை யொதுக்கி அலைகளைக்கொ

ண்டு சத்தித்த மணமுள்ள பல ஆறுகளையுங் கடந்து வரும்பொழுது கொடிதாகிய வொரு காட்டைக்கண்டான். எ - று. (௭)

கரடதட விகடமத களிறுவய மடங்கல்கொடுங்
காடி யாளி
திரள்வடவை யனையபெருஞ் சினவேங்கை கவரிபிணை
திண்கோட் டேனம்
வரைபொருது கவயமுண்மா மலிந்துபல தருவெழுந்து
வான ளாவி
யுரவுகட லிடையெழுந்த பரிதிகதிர் செலாதுசெறிந்
தோங்கு மாதோ.

(இ - ள்.) மதம்பாய்சுவடும், பெருமையும், வேறுபாடும், மதமுமுள்ள யானைகளும், வீரத்தையுடைய சிங்கங்களும், கொடியகரடிகளும், யாளிகளும், திரண்டவடவாமுகாக்கினியையொத்த மிக்க கோபத்தையுடைய புலிகளும், கவரிமான்களும், பெண் மான்களும், வலிய கொம்புகளையுடைய பன்றிகளும், மலையோடுமோதுகின்ற காட்டுப்பசுக்களும், முட்பன்றிகளும் ஆகிய விவ்விலங்குகளால் நிறைவுற்று, பலமரங்களெழுந்து ஆகாசத்தைக் கலந்து, ஓசையுள்ள சமுத்திரத்தி லெழுந்த சூரியனுடைய கிரணங்கள் உள்ளே நுழையாதபடி ங்கி வளரும்; அந்தவனம். எ - று. (௮)

இருள்குடிகொண் டிருந்தவந்த வனத்தி[illegible]மத வலமுனிவ
னிவர்த லோடும்
வருசயிலம் பொருமுடலும் வடவைய[illegible]ன வெரிந்து[illegible]
ய்ளர்செங் கண்ணும்
பரிதி மருள் கூரெயிறு கிமிர்ந்தெழுதே[illegible] கையுந்தோன்ற
பருவ காலக்
கருமுகிலு மிடியுமஞ்சக் குமுறியொரு மடங்கல்வரக்
கண்ணுற் [illegible]

(இ - ள்.) இருளானது [illegible] குடிகொண் டிருந்த [illegible]க் காட்டினிட[illegible]
தேவாங்கமுனிவன் சேர்ந்தவுடனே; நடந்து வருகின்ற வொரு ம[illegible]
யொத்த தேகமும், வடவாமுகாக்கினிபோலக் [illegible]வித்துத் தீப்பொ[illegible]
ரிருந்த சிவந்தகண்களும், சூரியன்மயங்குகின்ற பிரகாசமுள்ள பற்களு[illegible]
ர்ந்தெழுந்த வாலும் [illegible]ளுப்படி, மழைபெய்யும் பருவமுள்ள கரியமேக[illegible]
இடியும் அஞ்சுமாறு சத்தஞ்செய்து, ஒருசிங்கமானது வரப்பார்த்தான். (௯)

அம்மடங்கல் வரவையுணர்ந் தருந்தவத்தேவன் சிலையைவளைத்
தனந்த வாளி
கொம்மெனவுப் திடவ[illegible]வையிற் குலைந்தகலா தடர்தலும்பின்
கொதிக்குந் தீயின்

மும்மடங்கு விறல்படைத்த பிறைமுகக்கோ லொன்றெடுத்து
முனிவிற் பூட்டி
வெம்மைபொங்க நுதலழுந்த விடலுமது கலங்கிமண்மேல்
வீழ்ந்த தம்மா.

(இ-ள்.) அரியதவத்தையுடைய தேவாங்கமுனிவன், அந்தச்சிங்கத்தின் வருகையையறிந்து, வில்லைவளைத்துக் கணக்கில்லாத பாணங்களை விரைவாக எய்ய, அவைகளால் நடுங்கியோட்டாமல் (பின்னும்) நெருங்கி வருதலும், மறுபடியும் எழுகின்ற நெருப்பிலும் மூன்றுபங்குவலிமையுடைய பிறைமுகாஸ்த்திரமொன்றைக் கையிலெடுத்து, கோபத்தோடு வில்விற்பூட்டி, வெம்மைமிகும்படி நெற்றியிலழுந்தும்படியாறு விட்டவுடனே அச்சிங்கமானது நடுங்கி பூமியிலே விழுந்தது எ - று. (க0)

விழுந்தகண்டீரவத்தினது சிரத்தையொரு சரத்தறுத்து
மேவு மேல்வை
பழுந்துமதி விருந்தொருவ னுயிர்கனகாம் பரமருங்கி
லணிந்து வரகற்
கொழுந்தருமென மலர்சூடிப் பணிதாங்கி நறுந்தெய்வை
குளிரப் பூசிச்
செழுந்தருணத் தெய்வவுருக் கொண்டுவிமா னத்தினெழில்
சிறந்தெழுந்தான்.

(இ-ள்.) (அவ்வாறு) விழுந்த சிங்கத்தினுடைய தலையை யொரு பாணத்தினாலறுத்துவிட்டுப்போகின்ற சமையத்தில், வருந்திய அச்சிங்கத்தினின்று ஒருவன் விளங்குகின்ற பொன்னுடையை இடையிலணிந்து, மணமுள்ள கொழுமையாகிய விருக்ஷங்களின் மெல்லிய மலர்களைச்சூடி, ஆபரணங்களைத்தரித்து, நல்லசந்தனத்தை உடல் குளிரும்படிப் பூசி, செழிப்பாகிய விளமையமைந்த தேவவுருவம்பெற்று, விமானத்தின்மீது சிறந்து அழகுடனே தோன்றினன். எ - று. (கக)

கனகமெனக் கதிர்பரப்பும் கடவுளுருத் தாங்கியெழு
தல்லவ லோனை
மனமுவந்து முனிவியந்து நீயாருன் சரிதமெவன்
வழுத்து கென்ன
வுனதுதிரு வருளாலன் றொருவர்விடு கொடுஞ்சாப
மொருவப் பெற்றேன்
எனதுவினை தவிர்த்தனன்யா னெவர்க்குமிக்கோ யென்றுபின்னு
மிசைப்ப தானன்.

(இ-ள்.) பொன்போலுங் காந்தியை வீசுகின்ற தேவவடிவங்கொண்டு வந்த நல்லகுணமமைந்த அத்தேவனைத் தேவாங்கமுனிவன் (பார்த்து) மனக்களித்துப் புகழ்ந்து, நீயார்? உன்னுடைய வரலாறு என்ன? சொல்லக்கடவாயென்று கேட்க, யாவர்க்குமேலான தேவலமுனிவனே! உன்னுடைய திரு

வருளினாலே நீங்குதலில்லாத கொடிய சாபமானது நீங்கலானேன்; அதனால், என்னுடையபாவமு நீங்கினேன் என்று பின்னுஞ் சொல்லத்தொடங்கினான்.

அளகைவளம் பதிக்கதிபற் கன்புமிக்க வியக்கனியா
 னணிந்த வென்பேர்
வளமைபெறு கபிஞ்சலனோர் பகல்வேட்டை கருதியெ[illegible]ணில்
 வானோர் சூழ
வளமகிழ்வி னெழுந்துதெய்வ வன[illegible]த்[illegible]டந்து [illegible]விலங்கினங்க
 ளொருங்கு வீட்டித்
தளமலிய வரும்பொழுது தாவுபிணை யொன்று[illegible]வந்து
 தனித்த தல[illegible].

(இ-ள்.) [illegible]ளப்பமுள்ள [illegible] அளகாபுரிப்பட்டணத்துக்குத் தலைவராகிய குபேரனுக்குப் பிரியமிக்க கந்தருவன் நான்; அழகிய என்பெயர் யாதெனின்? வளமை பொருந்திய கபிஞ்சலன். ஒருநாள் வேட்டையாட நினைந்து அளவில்லாத தேவர்கள்சூழ மனவிருப்புடனெழுந்து, தெய்வத்தன்மையுள்ள ஒரு காட்டைச்சேர்ந்து, மிருகக்கூட்டங்களை யொருமிக்கக் கொன்று, சேனைகளுடனே வருகின்றகாலத்திலே, தாவிச்செல்லுகின்ற பெண்மானொன்று தனியே வந்தது. எ - று.

புள்ளிசெறி யுழையதனை முருக்கவெண்ணிக் காதளவும்
 பொருவில் வாங்கி
யொள்ளியவெங் கணைகள்பல வுலப்பவதிற் றப்பிவிரைந்
 தோடப் பின்சென்
றள்ளெ[illegible] லுமிழ்விசிக மொன்றதன்[illegible]த்தினன்மற்
 றதனி னோடுந்
துள்ளியெழுந் தடைந்ததருந் தூயதவக் கவுதமன்சா[illegible]
 சூழ றன்னில்.

(இ - ள்.) புள்ளிகள் நெருங்கிய அந்தமானைக் கொல்ல நினைத்து, பொருதுகின்ற வில்லைவளைத்து, செவிவரையிலும் (நாணையிழுத்துத்தெறித்து) [illegible]தியுள்ள கொடிய அம்புகள் பலவற்றைவிட, அந்த பாணங்களில் தப்பித்து விரைந்து ஓடாநிற்க, அதன்பின்னேபோய் நெருப்பை வாரிச்சொரிகின்ற ஒரு பாணத்தை அம்மானின்மீது புதையும்படிவிட்டேன்; அந்த அம்புடனே துடித்து மேலே கிளம்பி அருமையாகிய பரிசுத்தமுள்ள தவத்தையுடைய கவுதமமுனிவ ரொழுக்கருளிய அச்சிரமத்தை யடைந்தது. எ - று. (கசு)

[illegible]வழியாச் சிற[illegible]னு மற்றதனைத் தொடர்ந்து சென்றேன்
 மயங்கி [illegible]ளி
விரவுமுட[illegible]புகுந்த சாரங்கத் தையுமெனையும்
 விழ[illegible]து நோக்கி

கருணையதன் மேற்புரிந்தென் மேற்சினங்கொண் டிடர்க்கடலைக்
        கடந்த ஞான
குருபரனுங் கொடியதவக் கவுதமமா முனிவினைய
        கூறி னானால்.

(இ-ள்.) வருங்காரியங்களை யறியாத அற்பனாகிய யானும் அந்த மானைத்தொடர்ந்துபோனேன், துன்பசமுத்திரத்தைத் தாண்டிய பரமஞானசிரியராகிய கொடிய தவத்தைச்செய்யுடைய கவுதமமகாமுனிவர் அறிவு கலங்கி அம்பு புதைபட்ட உடலுடனே வந்த அந்த மானையும், என்னையும் (கண்களை) விழித்துப்பார்த்து அம்மானிடத்துக் கிருபைசெய்து, என்னிடத்துக் கோபங்கொண்டு இவற்றைச் சொன்னார். எ - று. (௧௩)

பாதகநீ நமதுதவ வனமானைக் கொலநினைந்த
        பான்மை தன்னால்
ஓதரிய பலவுயிருண் டுழலியல்பி னுடன்மடங்க
        லுருவந் தாங்கி
யேதமுற வுறைதியென வெகுளியேனுட் கலங்கிவந்தித்
        தெழுந்து நின்று
மாதவவிக் கடுஞ்சாப மாறுவதென் றடியேற்கு
        வழங்கென் றேனால்.

(இ-ள்.) துரோகியே நீ நம்முடைய தபோவனத்திலுள்ள மானைக் கொல்ல நினைந்த தன்மையினால், சொல்லுதற்கரிய பலவுயிருள்ளபிராணிகளை (க்கொன்று) தின்று சஞ்சரிக்கின்ற குணத்துடனே சிங்கவடிவங்கொண்டு, துன்பமுண்டாமாறு வசிக்கக்கடவையென்று சபிக்க, ஏழையாகிய நான் மனங் கலங்கித் தோத்திரஞ்செய்து எழுந்து நின்று பெருமைதாகிய தவத்தையுடைய கவுதமமுனிவரோ! இந்தக் கொடிய சாபமானது, நீங்குங்கால மெப்பொழுது எனக்குச் சொல்லக்கடவீரென்றேன். எ - று. (௧௪)

ஆதிசிவ னிதயபங்கே ருகத்துதித்த தேவாங்க
        னருளா லிந்தத்
தீதகலு மென்றுகவு தமனியம்ப வன்றுமுதற்
        சிய மானேன்
மேதகுநின் வரவதனால் வினைதவிர்த்தே னழியாத
        மேன்மை பெற்றேன்
சாதமிது தவக்கொழுந்தே தனிஞானச் செழுஞ்சுடரே
        தரும வாழ்வே.

(இ-ள்.) தவக்கொழுந்தானவரே! ஒப்பில்லாத ஞானசூரியனே! தருமத்தின் வாழ்வாயுள்ளவரே! (எவற்றிற்கும்) முதல்வராகிய சிவபெருமானது இதயதாமரையிற் பிறந்த தேவாங்கமுனிவனுடைய கிருபையால், இக்குற்றம் நீங்குமென்று கவுதமமுனிவர் சொல்ல, அன்றுமுதலாகச் சிங்கவடிவங்கொண்டேன்; மேன்மையுந் தகுதியுமுள்ள உன்னுடைய வருகையினாலே அத்தீவினை நீங்கிக் கெடாத மேன்மையையடைந்தேன்; இது உண்மையென்றுசொன்னான்; கபிஞ்சலன். எ-று. (கஎ)

இக்ககன வழிக்குவட பாரிசத்தில் யோசனைமூன்
றெல்லைக் கப்பாற்
றக்கபுகழ் வாலகில்ய மாமுனி[illegible]ா பதமுளதத்
தலத்தி னூடு
புக்கவனைத் தரிசித்துப் போகதருவென் றுயர்முனியைப்
புகழ்[illegible] போற்றி
மிக்குமணி விமானமிவர்ந் தவ்வியக்கன் பொன்னகரின்
மேவி னானால்.

(இ-ள்.) இந்தக் காட்டுவழிக்கு வடபாரிசத்தில் [illegible]றுயோசனைதூரத்துக்கப்பால் மேலாகிய கீர்த்தியையுடைய [illegible]ல்லியமாமுனிவருடைய பன்னசாலையுள்ளது; அப் பன்னசாலையை[illegible]த்துச் சென்று, அம்முனிவரைத்தரிசனஞ்செய்து போகக்கடவையென்று சொல்லி, உயர்ந்த தேவாங்கமுனிவனைப் புகழ்ந்து வணங்கி, மேலாகிய ஒரு இரத்தினவிமானத்திலேறி அந்தக்கபிஞ்சலனென்னும் கந்தருவன் சுவர்க்கலோகஞ் சென்றான். எ-று.

கபிஞ்சலன் சாபங் களைந்த சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் எ-க்கு பாடல் உகூஉ.

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை புண்டரிகத்தா டுணை.

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

எட்டாவது

உக்கிரதனுவன் *உவணைசேர் சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பவநெடுங் கடல்க டந்து பரம்பொரு ளுணர்ந்த சூத
னவைதவிர் சிறப்பு வாய்ந்த நைமிசா ரணிய மேவுந்
தவமுனி வரர்கட் கின்ன சாற்றலு மவர்க டாழ்ந்து
[illegible]வறு குணத்தோய் மற்றுஞ் சு[illegible]றெனக் கூறுகின்றான்.

(இ-ள்.) [illegible]வமாகிய பெரிய சமுத்திரத்தைத் தாண்டி, மேன்மையாகிய பிரமத்தையறிந்த சூதபுராணிகரானவர், குற்றமற்ற சிறப்பினையுடைய நைமிசாரணியத்தில் வா[illegible]யின்றி தவத்தையுடைய முனிசிரேஷ்டர்களுக்கு [illegible]ற்கூறிய சரித்திரமெல்லாம் சொன்னவுடனே, அம்முனிவர்கள் வணங்கி [illegible]ருந்த குணங்களையுடைய சூதபுராணிகரே! தேவாங்கமுனிவனுடைய மற்றுமுள்ள சரித்திரங்களையும் சொல்லியருளவேண்டுமென்று கேட்க, அவ்[illegible] சொல்லத்தொடங்கினார். எ - று. (க)

[illegible]வெற் பனைய திண்டோட் டேவல முனிவன் பின்னர்
முரண்டரு கொடுங்கான் றா[illegible] முழுவதுங் கடந்து சென்[illegible]
[illegible]ரந்ததன் பு[illegible]ம்போ[illegible]ங்கிப் பனிக்கதிர் வ[illegible]வெண் முத்தம்
வரன்[illegible]ய திரை[illegible]தண் கங்கை மாந்தி மருங்கு வந்தான்.

(இ-ள்.) தி[illegible]சியாகிய மலையை யொத்த வலிய தோள்களை யுடைய தேவாங்கமுனிவன், அதன் பின்னே, வலிய கொடிய காடுகள் முழுவதுந் தாண்டிச் சென்று (எவ்விடத்திலும்) பரவிய தனது கீர்த்திபோல வளர்ந்து, குளிர்ந்த கிரணங்களையுடைய சங்குக ளீன்ற வெள்ளிய முத்துகளை வாரி [illegible]குகின்ற அலைகளையுடைய குளிர்ந்த கங்கையாற்றுக்குப் பக்கமாக வந்[illegible]. எ - று.

வளைவெண்முத்தம் என்பது சங்குகளும் முத்துக்களும் எனினும் ஆம்.

ககிருமிழ் [illegible]ணைபோ லோடிக் கவின்குழை கிழித்து நீண்[illegible]
மு[illegible] படர்ந்து மைபில[illegible] [illegible]னர்கட் கெல்லாந்
துதிபெருங் [illegible]ருணை யென்றுஞ் சுரந்தகட் குமரி பாகன்
மதிதவழ் ச[illegible]யி னுற்று வருவதக் கங்கை யாறே.

* உவணை = தேவலோகம்,

(இ-ள்.) பிரகாசத்தைக் கக்குகின்ற அம்புபோலச் சென்று அழகிய குண்டலத்தைக்கிழித்து நீண்டு மிகுந்த இரேகைகள் பரவி மையெழுதப்பட்டு, துதிக்கின்ற அன்புடைய அடியவர்களுக்கெல்லாம் எக்காலத்தும் மிகுந்த கிருபை பெருகிய கண்களையுடைய பார்ப்பதிதேவியாரது நாயகராகிய சிவபெருமானுடைய சந்திரனை யணிந்த சடையிலிருந்து வருவது அக்கங்காநதி.

பகலவன் குலத்து தித்த பகீரத னெனும்பேர் வள்ளல்
புகலருந் திவசமன்று புரிந்தமா தவத்தின் சீராற்
சகரரென் பவர்பே ரின்பத் தனிப்பர கதியிற் சாரச்
செகதல முழுதும் போற்ற வெழுந்ததத் தெய்வ நீத்தம்.

(இ-ள்.) சூரியகுலத்திற் பிறந்த பகீரதன் என்னும் பெயரையுடைய கொடையிற் சிறந்த அரசனானவன், சொல்லுதற்கரிய சிரார்த்த முதலிய சடங்குகளை முற்காலத்திற் செய்த பெரிய தவத்தினுடைய சிறப்பினாலே, சகரரென்கின்ற அரசர்கள் பேரின்பமாகிய வொப்பில்லாத மோட்ச பதவியை யடையும்படி, பூமி முழுவதுந் துதிக்க அந்தத் தெய்வத்தன்மையையுடைய கங்கையானது வந்தது. எ - று. (௪)

ஆடுவோ ரெனைய பாவ ராயினு மனையர் தம்மை
மூடுதீ வினையி னீக்கி முடிவறு பேரா னந்த
நீடுசா யுச்சிய வீட்டி னிலைபெற வுய்க்கு மந்தப்
பீடுசா லறிஞர் போற்றும் பெரும்புனற் கங்கை யம்மா.

(இ-ள்.) அந்தப் பெருமை மிகுந்த அறிவுடையவர்களால் துதிக்கப்பட்ட மிக்கநீரையுடைய கங்காநதியானது, தன்னிடத்து ஸ்நானஞ்செய்கின்றவர்கள் எப்படிப்பட்ட பாவிகளாயினும் அவர்களைச் சூழ்ந்த தீவினைகளினின்று நீக்கி அளவில்லாத பேரானந்தமிகுந்த மோட்சபதவியில் நிலைபெறும்படிச் செலுத்தும். எ - று. (௫)

வேந்தவ னணுக வோடு மென்கயல் கமடஞ் சங்கம்
போந்ததிர் திரைகு லாவு புனலிடை மறையுங் காட்சி
சேந்தணி கதிர்வேல் வங்கார் திருமலைப் போட யேந்திரன்
நாந்தக வனிகங் கண்டு நண்ணலர் வெருவல் போலும்.

(இ-ள்.) அந்தக்கங்காநதியின் பக்கத்தில் தேவாங்கமுனிவன் சென்றவுடனே, மெல்லிய சேல்மீன்களும், ஆமைகளும், சங்குகளும், ஒலிக்கின்ற அலைகள்பொருந்திய நீரினிடத்து மறையுந்தோற்றமானது, சிவந்த அழகிய கிரணத்தையுடைய வேலைத்தாங்கிய வங்காரு திருமலைப்போடயன் என்னுந் தலைவனுடைய வாளேந்திய சேனைகளைக் கண்டு பகைவர்கள் பயந்து மறைதலை யொக்கும். எ - று. (௬)

பாதல வரையுந் தாழ்ந்து படர்திரி பதகை யுறும்
மாதவ விருடி சேர்ந்து வரன்முறை கடன்க ளாற்றி

காதலி னிசியோர் மூன்று கழிந்தபின் கடிது சென்று
மூதுணர் வால கில்ய முனிவரு)ச் சிரமம் புக்கான்.

(இ-ள்.) பாதாளலோகமட்டும் தாழ்ந்து பரவிய கங்காநதியினிடத்து அந்தப் பெரிய தவத்தையுடைய தேவாங்கமுனிவன் ஸ்நானஞ்செய்து, செய்யவேண்டிய முறைப்படி நித்திய கருமங்களை முடித்து, ஆசையுடனே மூன்றுநாள் சென்றபிறகு விரைந்துசென்று,முதிர்ந்த அறிவினையுடைய வாலகில்யமுனிவரது ஆச்சிரமத்தை யடைந்தான். எ-று. (எ)

சந்திர திலக நாகஞ் சண்பகங் காக லுண்டங்
கொந்தவி ழிலஞ்சி தாழை குங்குமந் தேவ தாரஞ்
சிந்து[illegible]ழை பூகஞ் செயலைபா டலம்புன் காலி
மந்தியு மறிவு ருத தருக்கள்பற் பலவு மன்னும்.

(இ-ள்.) மந்திகளும் எறி அறியமுடியாத சந்தனம்-புன்னை-சண்பகம்-அகில்-[illegible]விரிந்த மகிழ்-தெங்கு-குங்குமம்-தேவதாரம்-புளி-மா-[illegible]-அசோகு-பாதிரி-காயா முதலிய[illegible] (அ)
திருக்கும். எ-று.

மாலதி தளவு [illegible]மலிதம ணகங்க வீரங்
கோலமெ[illegible]செருந்தி பீதங் குருகுமுண் டகம ணங்க
நீலமம் புயஞ்சே தாம்ப லெய்தல்பட் டிகைகல் லார
மேலிவை யன்றித் தெய்வ மென்மலர் பலவு மல்கும்.

(இ-ள்.) மல்லிகை-முல்லை-சாதி-மண நிறைந்த மருக்கொழுந்து-அலரி-அழகு பொருந்திய மெல்லிய செருந்தி-மஞ்சள்-குருக்கத்தி-தாமரை-[illegible]ருவாக்ஷி-நீலம்-தாமரை-செவ்வல்லி-அல்லி-சீந்தில்-செங்குவளை ஆகிய இவையெல்லாமலும், தெய்வத்தன்மையுள்ள மெல்லிய மலர்கள் பலவும் அவ்விடத்துப் பொருந்தியிருக்கும். எ-று. (கூ)

காண[illegible]ர் கமல வேதக் கடவுட்ன் காமர் நாட்டு
மானத வாவி யிங்கும் வந்ததோ வெனவ யிர்ப்பத்
தூநிற வெகினம் போதாத் தொடர்ந்தெழு குரண்டஞ் சூழத்
தேனலர் பலம லிந்த செழுந்தட மனந்த மாதோ.

(இ-ள்.) வாசனைவிரிந்த செந்தாமரைமலரி லெழுந்தருளிய பிரமதேவனுடைய அழகிய சத்தியலோகத்திலுள்ள மானததடாகமானது இவ்விடத்திலும் வந்ததோவென்று சந்தேகிக்கும்படியாக, பரிசுத்தமாகிய வெள்ளிய நிறத்தையுடைய அன்னங்களும்,பெரியநாரைகளும்,கொக்குகளும் சுற்றியிருக்கத், தேனையுடைய பலமலர்கள் நிறைந்த செழுமையாகிய தடாகங்கள் அவ்விடத்தில் அளவில்லாதன வுள்ளன. எ-று. (க0)

கலிநிலைத்துறை.

பரம னூர்தியுங் கலையுமா கொருபுடை பயிலுஞ்
சரத யோகினி தனதுவா கனமுமக் தரத்திற்
திரன தூர்தியு மிடைவிடா தொன்றெனத் திரியும்
வரத மாலம ளியுங்குக னூர்தியு மகிழும்.

(இ-ள்.) சிவபெருமானுடைய வாகனமாகிய ரிஷபங்களும், மான்களும், அவ்வனத்தில் (ஒற்றுமையுடன்) ஓரிடத்தில் வசிக்கும்; உண்மையையுடைய காளிதேவியினது வாகனமாகிய சிங்கங்களும், சுவர்க்கலோகத்தில் வசிக்கின்ற இந்திரனுடைய வாகனமாகிய யானைகளும், நீங்காமல் ஓரினமென்னும்படி சேர்ந்து சஞ்சரிக்கும்; வரமருளத்தக்கோனாகிய திருமாலுடைய படுக்கையாகிய பாம்புகளும், முருகக்கடவுளுடைய வாகனமாகிய மயில்களும் களிப்புடனே வசிக்கும். எ - று. (௧௧)

திருந்து கிள்ளையும் பருந்துமோர் பஞ்சரஞ் சேரும்
பொருந்து பாந்தளுஞ் சிகரியு மோரளை புகுது
மருந்த [illegible] புகை கரும்புய லேய்க்கும்
வருந்து ருதுநான் மறைசெழும் பூவைகள் விழுத்தும்.

(இ-ள்.) செவ்வையாகிய கிள்ளைகளும், பருந்துகளும், ஒருகூட்டில் வசிக்கும்; பொருந்திய பாம்புகளும், எலிகளும் ஒருவளையில் புகுதும்; பெரிய [illegible]யுடைய முனிவர்களது யாகத்திலுண்டாகிய புகையானது கரிய மேகத்தையொக்கும்; [illegible]படாமல் நான்கு வேதங்களையும் செழிக்க நாகணவாய்ப்பறவைகள் ஓதிக்கொண்டிருக்கும். எ - று. (௧௨)

திரிபு றுதபல் வளம்புனை தெய்வமா வனத்து
டரிய தாபதத் தணிகிளர் தேவமா னணுகிப்
பொருவில் வாலகில் லியமுனி மலரடி போற்றி
யிருகை கூப்பிமற் றவனருளாசிபெற் றிருந்தே.

(இ-ள்.) மாறுதலில்லாத பல வளப்பங்களைப் பெற்ற தெய்வத்தன்மையையுடைய அந்த மகத்தாகிய வனத்தினிடத்துள்ள அருமையாகிய முனிவர்வாசஞ்செய்கின்ற பன்னசாலையினிடத்து, அழகினால் விளங்குகின்ற தேவாங்கமுனிவன்சென்று, ஒப்பில்லாத (தவத்தையுடைய) வாலகில்லிய முனிவரது தாமரை மலர்போன்ற பாதங்களை இரண்டுகைகளையுங்குவித்து வணங்கி, அம்முனிவரது கிருபையையும் ஆசீர்வாதத்தையும் பெற்று அவவிடத்திருந்து. எ - று. (௧௩)

அய்ய விவ்வழி யடிகண்மற் றீனவருஞ் சுகமே
செய்ய மந்திர வேள்விகள் சிறப்பினுற் றனவே

துய்ய மாதவ நாடொறுந் துலங்குகின் றனவே
மையல் கூரிடர் யாதுமிவ் வனத்திடத் திலேயே.

(இ-ள்.) சுவாமிகளே! இவ்விடத்தில் முனிவர்கள்யாவரும் சுகமாகவி ருக்கின்றார்களா? செவ்வையாகிய மந்திரங்களைக்கொண்டு செய்யப்படும் யாகங்கள் சிறப்பினோடுள்ளனவா? பரிசுத்தமாகிய பெரிய தவங்கள் எப்பொழுதும் விளங்குகின்றனவா? அஞ்ஞானமயக்கமிக்க துன்பங்கள்யாவும் இந்த வனத்தின்கண் இல்லையா? என்று வினவினன் தேவலமுனிவன். எ-று.

எனவி ளம்பலும் வாலகில் லியமுனி யென்பான்
மனம கிழ்ந்தில களித்திட வந்ததே வலகேள்
பனக சங்கர ரருளினாற் சுகங்கொடு பலகா
லனக விறுபமா தவமகம் புரிந்திருந் தனமால்.

(இ-ள்.) இவ்விதமாக தேவலமுனிவன் சொன்னவுடனே, வாலகில் லியமுனிவர் மனக்களிப்புற்று, உலகத்தைக்காக்கவந்த தேவலமுனிவனே! கேட்பாயாக, நாகாபரணத்தையுடைய சிவபெருமானது கிருபையால் இன்ப மடைந்து,பலகாலமும் பாவமில்லாத சுகத்தையுடைய மாதவங்களையும் யாகங் களையுஞ்செய்துகொண்டிருந்தோம். எ-று. (௧௫)

இன்று துன்பமொன் றெய்திய தஃதெவ னென்னிற்
றுன்று மிவ்வனத் திரண்டுயோ சனைத்தூலை தனிலோர்
குன்றி ருங்குகை யுண்டதிற் கனலினுங் கொடிய
வன்றி றம்பனை யொருபெரு நிசாசரன் வதிந்தான்.

(இ-ள்.) இப்போது ஒரு துன்பமுளதாயிற்று; அது யாதென்றால், நெருங்கிய இவ்வனத்தில், இரண்டு யோசனை தூரத்துக்கப்பால் ஒரு பெரிய மலைக்குகையுள்ளது; அக்குகையில், நெருப்பினுங்கொடிய வலிய திறமைபெற்ற ஒரு பெரிய அரக்கன் வாசஞ்செய்துகொண்டிருக்கின்றான். எ-று. (௧௬)

வளர்க ரும்பெரு வரையென நிமிர்புய வலியான்
இளமை வெண்பிறை போல்வளைந் திலங்குகூ ரெயிற்றான்
தளர்வு றும்பசி வரிற்பல வுயிரையுஞ் சதிப்போன்
அளவில் வெம்பவ மனைத்துமோர் வடிவெடுத் தனையான்.

(இ-ள்.) (நாளுக்குநாள்) வளருகின்ற கருமைதங்கிய பெரிய மலையென்றுசொல்லும்படி உயர்ந்த புயவல்லமையையுடையவன்; வெள்ளிய இளம் பிறைபோல வளைந்து விளங்குகின்ற கூர்மையாகிய தந்தங்களையுடையவன்; தளர்ச்சியையுண்டாக்கும் பசிவருங்காலத்தில் பல பிராணிகளையுங் கொன்று தின்பவன்; அளவில்லாத கொடிய பாவங்களெல்லா மொருவடிவம் பெற்று வந்தாற்போலும் வடிவத்தையுடையவன். எ-று. (௧௭)

காத மூவிரண் டெண்டிசை தொறுமுடை கமழும்
பூத வாயினன் கனற்பொறி யுமிழ்விழிப் புகையான்
மாத போதனர் யாரையும் வருத்துபுன் மனத்தான்
ஓது மூவுல குடனடு சூலமொன் றுடையான்.

(இ-ள்.) ஆறுகாததூரம் வரையில் எட்டுத்திக்குக்களிலும் துர்நாற்றம் நாறுகின்ற பூதவாயையுடையவன்; புகையோடுங்கூடிய நெருப்புப்பொறி களைக்கக்குகின்ற கண்களையுடையவன்; பெரியதவத்தினர் யாவரையும் வருத்துகின்ற அற்பமனத்தையுடையவன்; சொர்க்க மத்திய பாதாளமென்று சொல்லப்பட்ட மூன்றுலகங்களையும் ஏககாலத்தில் அழிக்கத்தக்க ஒப்பற்ற சூலாயுதத்தையுடையவன். எ - று. (௧௮)

அனைய பாதக னலிட றுறுபய மடைந்தே
மெனைய மாதவப் பெருந்திறல் வலியினு லேனு
முனைய ருவெயிற் றவனைவென் றிடமுடி யாதால
வினையி னேரலர் வெங்கிடத் திகழ்கதிர் வேலோய்.

(இ-ள்.) போர்க்களத்தில் பகைவர்கள் முதுகுகாட்டியோடும்படி விளங்குகின்ற காந்தியுள்ள வேலாயுதத்தையுடைய தேவாங்கமுனிவனே! அப்படிப்பட்ட பாவியாகிய அசுரனாலே, துன்பமும் மிகுந்த அச்சமும் அடைந்திருக்கின்றோம். எப்படிப்பட்ட மஹாதவவலிமையாலும், கூர்மைநீங்காத தந்தங்களையுடைய அவ்விராக்கதனை செயிக்கமுடியாது (என்று வாலகில்லியமுனிவர் சொன்னார்). எ - று. (௧௯)

முனிவ ருக்கிடர் களைவது நிருபர்தம் முறையே
யினியி வற்றினு மேற்படு தருமமொன் றில்லைத்
துன் ந ழைந்தவர் நிருதனைக் கணையினுற் றுணித்துக்
கனித வ வி விளைத்தெமைக் காப்பதுன் கடனால்.

(இ-ள்.) தபோதனர்களுக்குண்டாகிய துன்பத்தை நீக்குவது அரசர்களுடைய கடமையேயாம்; இவற்றினும் விசேஷமாக ஏற்பட்டதருமம் இனி வேறொன்றுமில்லை; (ஆதலால்) துன்பத்தில் மிகுந்த அவ்வரக்கனைப் பாணங்களாற்கொன்று, இனிமையாகிய தவப்பயிர்களை விளையச்செய்து, எங்களைப்பாது காப்பது உன்னுடைய கடமையாகும் (என்று சொன்னார்; வாலகில்லிய முனிவர்). எ - று. (௨௦)

எழில்பெ ருந்தவ வாலகில் லியமுனி யினைய
மொழிய வன்பொடு தேவல னெழுந்துகை முகிழ்த்துத்
தொழுது நுந்துயர் கெடவவற் றுணிப்பல்யா னென்றே
பழுத றுந்திரு விடைகொடு ர்தன்மே யினனால்.

(இ - ள்.) அழகிய பெரிய தவத்தையுடைய வாலகில்லியமுனிவரானவர், இவ்வார்த்தைகளைச் சொல்ல, தேவாங்கமுனிவன் எழுந்து பிரியத்துடனே கைகளைக்குவித்து வணங்கி, உங்களுடைய துன்பம்நீங்கும்படி, நான் அவ்விராக்கதனைக் கொல்வேனென்று, குற்றமற்ற மேன்மையான உத்தரவு பெற்றுக்கொண்டு (அவ்விராக்கதன் வசிக்கின்ற மலையைநோக்கிச்) செல்லத் தொடங்கினான். எ - று. (உ௧)

தருண வச்சிர சடாரிபொன் மார்பிடைத்தரித்து
விருது பெற்றபல் கணைநிறை தூணிதோள் வீக்கி
யிரும திப்பிறை பொருவுகார் முகங்கரத் தேந்தித்
திருகு டைச்சின நிருதனுற் றிடுதிசை சென்றான்.

(இ-ள்.) புதுமையாகிய வச்சிரகவசத்தை அழகிய மார்பினிடத்துத் தரித்து,வெற்றிபெற்ற பல அம்புகள்நிறைந்த தூணியைத் தோளிற்கட்டி,பெரிய சந்திரப்பிறைபோன்ற வில்லைக் கையிலேந்தி, (சன்மார்க்கத்தினின்றும் நீங்கிய) மாறுபாட்டையுங் கோபத்தையுமுடைய அவ்வரக்கன் வசிக்கின்ற திக்கு நோக்கித் தேவாங்கமுனிவன் சென்றான். எ - று. (உ௨)

கான கத்தத ரிரண்டெனு மியோசனை கடந்து
வான ளக்குமால் வரையிடை வடவைவான் கனனே
ரான வக்கிர நிசாசரன் முழைக்கெதி ரடைந்தான்
மோன மெய்த்தவ முழுதுணர் தேவல முதல்வன்.

(இ-ள்.) மௌனமும் உண்மையாகிய தவமும் முற்றுமறிந்த தேவாங்கமுனிவன், காட்டின்வழியே இரண்டு யோசனை தூரஞ்சென்று, ஆகாசம் வரையினுமுயர்ந்த மலையினிடத்து, வடவாமுகாக்கினியையொத்த கொடுமையுள்ள அவ்வரக்கன் வசிக்கின்ற குகையினெதிரிலே சென்றான். எ-று. (உ௩)

எண்ணி லாதபல் லுயிர்செகுத் தனுதினம் தெறிந்த
புண்ணி லாவுறு களேபரந் தோறலை புனைவான்
மண்ணி னுடிசின் மயிர்விடா ணம்பல வரைபோற்
கண்ணி னோர்குவித் திருப்பன வியப்பொடு கண்டான்.

(இ ள்.) பூமியிலே, அளவில்லாத பல வுயிர்களைக்கொன்று நாடோறும் (தின்று கழித்து) எறிந்த காயங்களுடனே விளங்குகின்ற பிணங்களும், தோல்களும், தலைகளும், பொருந்திய வால்களும், அழகிய நரம்புகளும், பல விதமயிர்களும், விலங்கின் கொம்புகளும்,பல மலைபோலக் குவிந்திருப்பனவற்றைக் கண்களினெதிரே ஆச்சரியத்துடனே தேவாங்கமுனிவன் பார்த்தனன்.

சின் = அசைநிலை.

உணர்வி லாதவின் னிசாசர னெத்துணை யுயிரை
யணவு தீப்பசி யாட்ட முடித் தனன்கொலிங் கத்தோ

கணம தாம்பொழு தினிவிவற் செகுப்பதே கடனென்
றிணையி லாததே வலமுனி திருவுளத் தெண்ணி.

(இ-ள்.) அறிவில்லாத இவ்வரக்கனானவன் இந்த இடத்தில், ஐயோ! எவ்வளவு உயிர்களை கொடுமைபொருந்திய பசியினாலே வதைத்திருக்கின்றானே! இப்படிப்பட்ட (கொலைபாதகனை) க்ஷணநேரத்திற்குள்ளே சங்காரஞ் செய்து விடுவதே தகுதியென்று தனக்கொருவரும் சமானமில்லாத தேவாங்க முனிவன் தனது திருவுள்ளத்தில் நினைத்து. எ-று. (உரு)

மண்ட லந்திசை விசும்பதிர்ந் திடச்சுரர் மயங்கக்
கொண்ட லஞ்சவெண் பணியுமெண் கயமுமெண் குவடும்
விண்ட லைந்துளங் கலங்கவான் மீன்குல முதிரத்
திண்ட டஞ்சிலை நாணிட்டுக் குணத்தொனி செய்தான்.

(இ-ள்.) பூமியும் திக்குகளும் ஆகாசமும் நடுங்கவும், தேவர்கள் மயங்கவும், மேகங்கள் பயப்படவும், அஷ்டநாகங்களும் அஷ்டகஜங்களும் அஷ்டகுலபருவதங்களும் வேறுபட்டுத் தத்தம் நிலைகுலைந்து மனங்கலங்கவும், ஆகாசத்திலுள்ள நட்சத்திரக் கூட்டங்கள் சிந்தவும், வில்லைவளைத்து பலம் பொருந்திய பெரிய நாணேற்றிக் குணத்தொனிசெய்தான்; தேவலமுனிவன்.

அக்கு ணத்தொனி கேட்டலு மிகச்சினந் தரக்கன்
றிக்கு றும்பணி நெளிந்திட வெழுந்துசெஞ் சோரி
கக்கு திண்டிறன் மூவிலை வேல்கரத் தேந்தி
யிக்கு வெஞ்சிலை மதனிகர் நிருபனை யெதிர்ந்தான்.

(இ-ள்.) அந்த (வில்லின்) நாணோசையைக்கேட்டவுடனே, அவ்வரக்கனானவன் மிகவுங் கோபங்கொண்டு, எட்டுத்திசைகளிலுமுள்ள நாகங்கள் நெளியும்படி எழுந்து, சிவந்த இரத்தத்தைக் கக்குகின்ற மிக்க வலிமையையுடைய சூலாயுதத்தைக் கையி லெடுத்துக்கொண்டு, இனிய கரும்புவில்லையுடைய மன்மதனை யொத்த தேவாங்கமுனியாகிய அரசனை எதிர்த்தான். ()

கருவ் வரை பெருந் தேகமும் புகையெழு கண்ணு
முருவு டைப்பிறை மூரலுந் தோன்றநேர்ந் தொலித்த
தரும மற்றவன் நிசாசரன் மேற்பல சரந்தூய்க்
குருதி கக்குற வருத்தினன் புவிபுகழ் கோமான்.

(இ-ள்.) பூமியிலுள்ளோர் புகழ்கின்ற தேவாங்கமுனிவன், கரியமலை போன்ற பெரிய உடலும், புகையெழுகின்ற கண்களும், பிறையின்வடிவையுடைய வக்கிரதந்தங்களும் தோன்றும்படி யெதிர்த்து அட்டகாசஞ்செய்து வந்த தருமமில்லாத அவ்வசுரன்மீது அநேகபாணங்களைப் பிரயோகஞ்செய்து இரத்தங்கக்கும்படி வருத்தினான். எ-று. (உஅ)

அரச மாமுனி வருத்தலு மிகச்சினந் தரக்கன்
பரவு சூலிலை வேலில்வீட் டுவனெனப் படரச்
சரம தானவை மூன்றினா லன்னதைத் தகர்த்து
விரைவி னோடுபின் மூன்றுகோ லால்வெதுப் பினனால்.

(இ-ள்.) தேவாங்கராசமகாமுனிவன் (இவ்வாறு) வருத்தினவுடனே, அவ் விராக்கதனானவன் மிகவுங் கோபங்கொண்டு, பெரிய சூலாயுதத்தினாலே கொல்லுவேனென்று வராநிற்க, அச்சூலாயுதத்தை மூன்று பாணங்களால் நாசஞ்செய்து, சீக்கிரமாகப் பின்னும் மூன்று பாணங்களால் அவனை வாட்டினான். எ-று. (௨௧)

பிறையெ யிற்றினன் பின்னரு மடர்ந்தனன் பெரியோன்
கறைநி ணைத்தவோர் கணையினால் வலப்புயங் கண்டித்
துறையெ னப்பல கங்கபத் திரந்தொடுத் துய்த்து
முறைமை யற்றவன் மெய்யெலாந் துளைத்தனன் முனிந்தே.

(இ-ள்.) பிறைபோலும் வக்கிரதந்தங்களையுடைய அவ்விராக்கதனானவன், பின்னும் போர்செய்யவந்து நெருங்கினான்; பெரியோனாகிய தேவாங்கமுனிவன் கோபித்து, இரத்தந் தோய்ந்த வொரு பாணத்தினால் (அவனுடைய) வலப்புயத்தை யறுத்து, மழைபோலப் பல பாணங்களைப் பிரயோகஞ்செய்து, நீதியில்லாத அவ்வசுரனுடைய உடம்புமுழுதுந் துளையாகும்படிச்செய்தான்.

தோள கற்றின னிவனைவச் சிரமெனச் சூழ்ந்த
வாளெ யிற்றினான் மடிப்பனென் றறிவிலி வந்தான்
காள முற்றெழு கனலுமிழ் பிறைமுகக் கணையொன்
றாளி யொத்ததே வலன்றொடுத் தவன்சிர மறுத்தான்.

(இ-ள்.) [illegible]லாக அவ்விராக்கதனானவன், இவன் நம்முடைய தோளையறுத்தான், ஆகையால், இவனை வச்சிராயுதம்போன்ற வளைந்த ஒளியுள்ள பற்களாலே (கடித்துக்) கொன்றுவிடுகிறேனென்று, பின்னும் நெருங்கி வந்தான், சிங்கத்தையொத்த தேவாங்கமுனிவன், [illegible]த்தில் தோய்ந்ததும், கொழுந்துவிட்டு எரியும் நெருப்பைக் கக்குகின்றதுமான ஒரு அர்த்தசந்திரபாணத்தைப் பிரயோகஞ்செய்து, அவ்வசுரனுடைய சிரசைப்போக்கினான். ()

அலைவி லும்பருந் தொழவருந் தேவல னம்பாற்
றலையி ழந்துமண் மிசைநிசா சரன்படுந் தன்மை
சிலைவ லம்புனை மகபதி கிரணவச் சிரத்தான்
மலைநெ டுஞ்சிறை யற்றுமுன் வீழ்கிழன் மானும்.

(இ-ள்.) மனிதர்களேயன்றி அலைதலில்லாத தேவர்களுந் தொழும்படியவதரித்த தேவாங்கமுனிவனுடைய பிறைமுகாஸ்திரத்தால், அவ்விராக் கதன் தலையறுபட்டு பூமியின்மீது விழுந்த காட்சியானது வில்வெற்[illegible]

யுடைய தேவேந்திரனது பிரகாசம்பொருந்திய வச்சிராயுதத்தினாலே மலையானது தனது பெரிய சிறகுகளறுபட்டு முற்காலத்தில் பூமியின்மேல் விழுந்த தன்மையை யொக்கும். எ - று. (கூஉ)

மாண்ட பாதகத் தேகத்தி னின்றொரு வலியோ
னீண்ட மாமணி விமானமேற் கொண்டெதிர் நேர்ந்தான்
பூண்ட சீர்புனை தேவலன் வியந்தருள் புரிந்தே
யாண்ட காய்புனல் யாவனீ யெனவவ னறையும்.

(இ-ள்.) இறந்த பாவத்தையுடைய அவ்வசரதேகத்திலிருந்து ஒரு வல்லமையையுடைய புருடனொருவன், சிறந்த இரத்தினத்தினாலாகிய பெரிய விமானமேலேறி (தேவாங்கமுனிவனுக்கு) முன்னே வந்தான்; புகழைப்பெற்றதேவாங்கமுனிவன் ஆச்சரியமடைந்து கிருபைசெய்து, ஆண்மையையுடைய வீரனே! நீயாவன்? என்று கேட்க அவ்வீரனானவன் சொல்லுவான். எ - று. (கூ௩)

மகிப கேளிக்கு வாகுவின் குலத்தினில் வந்த
விகல்வி சாலபூ பதிதரு புதல்வன்யா னென்பேர்
புகலி னுக்கிர தனுவனீள் விசாலமா புரியை
மிகமு றைப்படி யாண்டிருந் தனனந்த வேலை.

(இ-ள்.) அரசே! கேட்பாயாக, நான் [illegible]கு மஹாராஜாவின் வமிசத்திற் பிறந்த வலிமையுள்ள விசாலபூபதி என்னும் அரசன் பெற்ற புத்திரன்; என்னுடைய பெயர் சொல்லுமிடத்து உக்கிரதனுவென் ஆகும். பெரிய விசாலமாபுரி என்னும் பட்டணத்தை மிகவும் முறைமையுடனே ஆண்டுகொண்டிருந்தேன்; அக்காலத்தில். எ - று. (கூச)

விகட னென்றொரு கொடுந்தொழி னிசாசரன் மேவி
நகரி ருந்தவர் தமைவருத் தின[illegible]
பகர்த ளங்கொடு நானவ னுறைவனம் படர்ந்து
துகளெ ழும்படி அருவியப் பாதகற் றுணித்தேன்.

(இ-ள்.) [illegible] கொடுந்தொழிலையுடைய விகடனென்னும் இராக்கதனானவன் வந்து பட்டணத்திலுள்ள குடிகளையெல்லாம் வருத்தினன்; அக்காலத்தில், நான் யாவராலும் புகழ்ந்துசொல்லப்பட்ட சேனைகளுடனே அவ்வரக்கன் வசிக்கின்ற வனத்திற் புழுதியெழும்படி அவனிருக்குமிடந் தேடிச் சென்று அப்பாவியைக் கொன்றேன். எ - று. (கூரு)

து[illegible]த விற்பத கல்பட வல்ற்குமுன் றோன்றிக்
கொடி[illegible]கற்கட கன்பயந் துயிர்த்துளங் கொதித்தே
முடி[illegible]த [illegible]க்தமற் றிவனைநேர்ந் தமர்பொரா முடியா
தடிமை[illegible]யிற்புகுந் தடுவல்யா னெனத்திர மானன்.

(இ-ள்.) ஆடியென்னுங் காலதட்பத்துக்குள்ளே அக்கீழ்மகனாகிய அரக்கன் மாண்டுபோக, அவனுக்குத் தமையனாகிய கொடிய கற்கடகன் என்னு மசுரன், அச்சங்கொண்டு பெருமூச்சுவிட்டு, மனதிற் கோபமூண்டு, மருடஞ்சூடிய இவ்வரசனை யெதிர்த்துப் போரில் வெற்றிபெறுதல் முடியாது; (ஆதலால்) அடிமையாக வடைந்து கொல்லுவேன் என்று (மனதில்) உறுதி கொண்டான். எ - று. (௩௬)

மாய மங்கது குறித்தொரு மானுட வடிவாய்த்
தீய வெம்பகை நிசாசர னடைந்தெனைச் சேவித்
தேய வின்சுவை யமுதென வடுதொழி லினன்யா
னேய வன்பொடு நீபுரந் தருளென நேர்ந்தான்.

(இ-ள்.) அப்பொழுது, கொடுமையாகிய வெவ்விய பகையையுடைய அவ்வசுரனானவன், மேற்கூறிய வஞ்சகத்தை யெண்ணி ஒரு மனிதவுருவங் கொண்டுவந்து,என்னை வணங்கி, யான் இனிமைபொருந்திய சுவையையுடைய தேவாமிர்தமென்னும்படி சமையல் செய்யுந்தொழிலையுடையேன்; நீ என்னை நேசமாகிய அன்போடு ஆண்டருளுவா யென்று வேண்டிக்கொண்டான்.

பழி[illegible]னைந்தவப் பதகனைப் பாகசா லையினுட்
டொழில்[illegible] விருத்தினேன் வருவிதி சூழ்மேன்
கழிவ றும்பல பகற்பினென் மாளிகை கருதி
யழிவ றுந்துரு வாசமா முனிவர னடைந்தான்.

(இ-ள்.) பின்பு அவனால் சம்பவிக்குங் கெடுதியை ஆலோசியாமல், பொல்லாங்குசெய்யக் கருதிய அந்தக் கீழ்மகனைச் சமையல்செய்யும் மடைப்பள்ளியில் சமையற்றொழில்செய்யவிருத்தினேன். இப்படிபலகால் சென்றபிறகு என்னுடைய அரண்மனையைநோக்கி அழிவில்லாத துருவாச மகாமுனிவர் வந்தருளினார். எ - று. (௩௮)

அன்று மாதவன் றனைப்பணிக் தடியனேன் மனையி
லின்று நீயமு தயின்றருள் வெனவிசைக் திருந்தான்
றன்று மூதவக் கண்டகப் பாவியோர் நரனைக்
கொன்று தான்சமைத் தம்முனிக் கிட்டனன் குணத்தால்.

(இ-ள்.) அக்காலத்து எழுந்தருளிய துருவாசமுனிவரைப் பணிந்து, (சுவாமிகளே!) அடியேனுடைய இல்லத்தில், இன்றைய தினம் அமுது செய்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அதற்கு அம்முனிவரும் இசைந்திருந்தனர். அப்பொழுது நன்மை சிறிதுமில்லாத கொடிய கற்கடனென்னு மசுரன், ஒரு மனிதனைக்கொன்று சமைத்து (தீய) குணத்தினால் அம்முனிவருக்குப் படைத்தான். எ - று. (௩௯)

இணங்கு மாமுனி யன்னதை யின்னதென் றுணர்ந்து
பிணங்கு கோபமேற் கொண்டனல் கண்டொறும் பிறங்க
வணங்கி மேவிய வென்றனை நோக்கியே மனித
னிணங்கொ டூனெனக் கிட்டனை பாதக நீயே.

(இ-ள்.) (எனது இல்லில் அமுதுண்ண) இசைந்த துருவாசமுனிவர், மேற்கண்டவாறு படைத்தஅம்மாமிசத்தை இன்னதென்று தெரிந்து, மாறுபட்ட கோபங்கொண்டு நெருப்புப் பொறிகள் கண்களிலெல்லாம் தோன்றி நிற்க, அப்பொழுது வணங்கி அவரிடத்துச் சென்ற என்னைப்பார்த்து, பாவியே! நீ மனிதனுடையமாமிசத்தை யுணவாகக்கொண்டு எனக்குப்படைப்பித்தாய்.

ஆன தாலினி நீநரன் றசைகவர்ந் தலையு
மீன மேதகு கண்டக னாகுக வென்றா
னான தான்மிக நடுங்கியே பணிந்துள நலிய
வூன சாபமிஃ தொழிவதெந் நாளென வுரைத்தேன்.

(இ-ள்.) ஆகையினாலே, இனி நீ மனிதருடைய மாமிசங்களைப் பிடுங்கித்தின்று திரிகின்ற இழிதொழிலே தகுதியாகக்கொண்ட அசுரனாகக் கடவை என்று துருவாசமுனிவர் எனக்குச் சாபங்கொடுத்தார்; அச்சாபத்தினாலே நானும் மிகவும் பயமடைந்து அம்முனிவரை வணங்கி மனம் வருந்த ஈனமாகிய இச்சாபம் நீங்குவது எந்தக்காலமென்று வினவினேன். எ-று. (௪௧)

துங்க வெம்பிரா னிதயபங் கயத்திடைத் தோன்றி
யெங்க ணும்புரந் திடவருந் தேவல னென்பா
னங்க வன்றிரு வருளினா லகலுமீ தெனவே
புங்க வன்புகன் றெழுந்துதன் சூழலிற் போனான்.

(இ-ள்.) (நான் இவ்வாறு வினவியபோது) அந்தத் துருவாச முனிவர், பரிசுத்தராகிய எமது சிவபெருமானுடைய இதயதாமரையிற் பிறந்து, எவ்வுலகங்களினுமுள்ளவர்களைக் காக்குமாறு, தேவாங்கமுனி என்பவன் (இவ்வுலகத்தில்) வருவான்; அப்பொழுது அவனுடைய திருவருளினாலே இச்சாபம் நீங்குமென்றுசொல்லி யெழுந்து தம்முடைய பன்னசாலையிற் சென்றார்.

அது[illegible]ற்கொருடர்க் க[illegible]க்கனா யளவிலா வுயிர்கொன்
றிது[illegible]ரைப்பெரும் பவக்கட லழுந்தினே னின்று
முதி[illegible] வத்துநின் னருளினாய்க் [illegible]னை மொழிந்தே
துதிப லப்பல புரிந்துவா னடை[illegible]தனன் றாயோன்.

(இ-ள்.) அச்சாபம் பெற்றகாலமுதலாக இராக்கதனாகி அளவில்லாத உயிர்களைக் [illegible]ன்று தின்று இந்நாள்வரையிலும் பெரிய பாவசமுத்திரத்தில் மூழ்கிக்கிடந்தேன்; இன்றையத்தினம் முதிர்ந்த தவத்தினையுடைய உனதுதிரு

பையினால் அப்பாவத்தினின் றும் நீங்கிப் பிழைத்தேனென்று சொல்லிப் பற்பலவிதமாகத் தோத்திரஞ்செய்து, பரிசுத்தனாகிய உக்கிரதனுவன் தேவலோகஞ் சேர்ந்தான். எ - று. (சஈ)

பெரிது வந்துதே வலமுனி வியந்ததற் பின்னர்
திரிப றுந்தவ வாலகில் லியமுனி திருமுன்
பரிவில் வந்தடி பணிந்தினி வெருவலிர் பாவி
யிரிவு றும்படித் துணித்தன னென்றெலா மிசைத்தான்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் மிகவுங்களிப்படைந்து, அந்த உக்கிரதனுவனைப் புகழ்ந்து, அதன்பிறகு முத்திக்கு மாறுபாடில்லாத தவத்தையுடைய வாலகில்லியமுனிவரது சந்நிதானத்திலே ஆசையோடும் வந்து அவர் திருவடிகளைப்பணிந்து (சுவாமிகளே!) இனி நீங்கள் பயப்படாதிருங்கள்; பாவியாகிய அவ்வரக்கனை நாசமாகும்படி கொன்றுவிட்டேன் என்று நடந்த விருத்தாந்தங்களை யெல்லாஞ் சொன்னான். எ - று. (சஉ)

உக்கிரதனுவ னுவணைசேர் சருக்கம்.

முற்றுப்பெற்றது.

ஆ. சருக்கம் அ க்கு பாடல் கoசு.

தேவாங்கதுலதேவி சவுடாம்பிகையம்மை சரணமே.

சிவமயம்,

சவுடாம்பிகைசகாயம்.

ஒன்பதாவது

பட்டுப்பல் கலையும் படைத்த சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

துகளறு தவத்தின் மிக்க சூதமா முனியைப் போற்றிப்
பகர்மறைப் பொருளு ணர்ந்த பண்ணவ ரைய செம்பொற்
சிகரியிற் புவிபுரக்குந் தேவலன் சென்று மீண்டு
புகழ்துகில் புரிந்த சீலம் புகல்கெனப் புகல லுற்றான்.

(இ-ள்.) சிவபெருமான் சொல்லியருளிய நான்கு வேதப்பொருள்களையு முணர்ந்த முனிவர்கள், குற்றமில்லாத தவத்திற் சிறந்த சூதமாமுனிவரைவணங்கி,ஐயனே! உலகத்தையாளுகின்ற தேவாங்கமுனிவன், மகாமேருமலையின்கண் சென்று திரும்பி வந்து, யாவராலும் புகழப்பட்ட ஆடைகளைச் செய்த [illegible] சரித்திரத்தைச் சொல்லீராகவென்று கேட்க, அச்சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார். எ-று. (௧)

முன்னுற வால கில்ய முனிபத முடிமேற் சூடிப்
பின்னரங் கன்று செம்பொற் பிற[illegible] துலகம் போற்று
மின்னவிர் சமர [illegible] வேல் விறன்மைய னினிது வாழும்
பொன்னணி ம[illegible]ரத்துட் புகுந்தனன் புகழின் மிக்கான்.

(இ-ள்.) கீர்த்[illegible]மிகுந்த தேவாங்கமுனிவன், வாலகில்லிய முனிவருடைய திருவடிகளை முன்னாகச் சிரசின்மீது தரித்து, அதன்பின்பு அவ்விடத்தி னின்று நீங்கி, செம்பொன்னாகிய மேருமலையிற்சென்று, உலகத்தார் வணங்குகின்ற மின்னல்போல விளங்கும் போரில்வல்ல கூர்மை பொருந்திய வேலையுடைய வலிமைமிக்க தேவதச்சனானவன் சுகமாக வாழ்கின்ற பொன்[illegible]பட்ட அழகி[illegible]கோயிலிற்றெ[illegible] று. (௨)

வீர[illegible]னக் காண்ட லோடும் விச்சுவ வியாவ கன்றன்
சீரரு கிருத்தி யிங்கு [illegible]ன் செப்பு கென்னக்
காரண வல்லோ னீசன் கருணையாற் கலைக ளாற்ற
வோரணி கருவி வேண்டிக் [illegible]ன்னிடத் தெய்தி னேனால்.

(இ-ள்) வலியோனாகிய தேவாங்கமுனிவனைக் கண்டவுடனே, விச்சுவவியாவகனானவன், சிறப்பாகத்தன துபக்கத்திலிருக்கும்படிச்செய்து, நீ இவ்

விடம் வந்தகாரணம் யாது? சொல்லக்கடவாயென்று கேட்க, எவற்றினுக்கும் காரணமாகிய வல்லமையையுடைய மயனே! சிவபெருமானுடைய கிருபையால் ஆடைகளைச் செய்வதற்கு அழகினையுடைய ஆயுதங்கள் வேண்டும்பொருட்டு உன்னிடம்வந்தேன் என்றான். எ - று.

விச்சுவவியாவகன் = எங்குஞ் செல்லும் வல்லமையுடையவன். (ந)

உரிமையி னுடைக ளாற்றற் குளவுப கரண மெல்லா
மருளுதி யெனத்தே வாங்க னன்பினாற் பரவ லோடும்
விரிதரு புவனங் காக்கும் விச்சுவ கன்ம னெல்லாக்
கருவியு மனத்தி லுன்னிக் கணத்தினிற் படைத்தல் செய்தான்.

(இ - ள்.) தேவாங்கமுனிவன், ஒவ்வொன்றினுக்குந்தகுதியாகிய ஆடைகளைச் செய்வதற்கு வேண்டிய கருவிகளெல்லாம் கொடுக்கக்கடவை யென்று பிரியத்துடனே துதித்தவுடனே, விசாலமாகிய வுலகங்களைக் காக்கின்ற தேவதச்சனானவன், எல்லாஆயுதங்களையும் மனத்திலெண்ணி ஒருமாத்திரையென்னும் காலவளவைக்குள் சிருட்டித்தான். எ - று. (ச)

பயில்கதிர் வச்சி ரப்பொற் படமரம் வால வாய
மயலறு பலகை செப்ப மணிப்புறக் கேட கங்கள்
வெயிலுமிழ்ந் திலங்[illegible] மேலு
நயனுறு புருட ராகத் தண்டமு நயக்து நல்கி.

(இ - ள்.) ஒளியுள்ள வ[illegible]ரத்தினாலே அழகிய ப[illegible]மரங்களும், வயிடூயத்தினாலே குற்றமற்ற பலகைகளும், சிவந்தமணிகளைப் பக்கத்திலே பதித்த தோற்கேடகங்களும், பிரகாசத்தைக்கக்கி விளங்குகின்ற பண்ணையங்களும், நன்மைபொருந்திய புருடராகத்தினாலே தண்டங்களும், விரும்பி[illegible]த்துக் கொடுத்து, பின்னும். எ - று. (ரு)

மரகத நிறநா னாழி வண்டுகி ரெந்தி ரஞ்சேர்
திரடரு மிந்திர நீலத் திருவட்டம் விடுவாய் செய்ய
நாகவ மணியாற் பொன்னாற் சமைக்தகை வாளுக் தந்து
புரவலன் வத[illegible] புகழ்மயன் புகல லுற்றான்.

(இ - ள்.) கீர்த்தியையுடைய தேவதச்சனானவன் மரகதம்போலும் நிறத்தினையுடைய நாடாவும், வளப்பமுள்ள பவளத்தாலாகிய நிரிகைகளும், சிறப்பினையுடைய திரட்சியாகிய இந்திரநீலத்தாலாகிய திருவட்டமும், விடுவாயும், சிவந்த மேன்மையுள்ள ஒன்பது வகை இரத்தினங்களாலும், பொன்னாலும் ஆகிய கூர்மையுள்ள உடைவாளாயுதமுங் கொடுத்துத் தேவாங்கமுனிவனாகிய அரசனுடைய முகத்தைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினான். எ - று. (சு)

பற்றினை முனிந்தோய் கேளிப் படமர மெண்ணி லாடை
சுற்றினு நிரம்பு றாது சூழ்வினிற் குறுகி நீளும்
பொற்றிருப் பலகை தண்டம் பன்னையு மதுவே போலு
மற்றுளா தருநா ளுழி மகிமையைப் பகரு வேனால்.

(இ-ள்.) உலகப்பற்றறவெறுத்த தேவாங்கமுனிவனே! கேட்பாயாக, இந்தப்படமரமானது. அளவில்லாத ஆடைகளைச் சுற்றினாலும் நிறையாமல் சுற்றிக் குறுகி நீண்டுவரும்; பொன்னாலாகிய பலகையும், தண்டமும், பன்னையும் அவ்வாறே தொழிற்படும் ; சொல்லப்பட்ட நாடாவினுடைய பெருமையைச் சொல்லுகின்றேன். எ-று. (எ)

தினமுமை வருணா றாலுஞ் செறித்தெப்போ தெந்நூல் வேண்டு
மெனநினைப் பினுமவ் வேலை யிசைந்தந்நூ லினிது நல்கும்
புனைதிரு வடஞ்செஞ் சோதி பொலியுமெந் திரமி ரண்டு
மனையது தானே போலு மென்றன னருளின் மிக்கான்.

(இ-ள்.) கிருபைமிகுந்த தேவதச்சனனவன் (நாடாவானது) நாள் தோறும் ஐந்துநிறத்தையுடைய நூல்களையுஞ் சேர்த்து, எப்பொழுது எந்நிற நூல் வேண்டுமென்று நினைத்தாலும் அப்பொழுது உடன்பட்டு அந்நிறநூலை இனிதாகக்கொடுக்கும்; அழகிய திருவட்டமும், சிவந்த காந்திவிளங்குகின்ற திரிகையும், ஆகிய வரண்டும் அந்நாடாவைப்போலவே நினைந்தவைகளைக்கொடுக்கும் என்று சொன்னான். எ-று.

ஐவருணமாவன:—செம்மை, வெண்மை, கருமை, பசுமை, பொன்மை என்பனவாம். (அ)

மூவுல கெதிருற் றாலு முடிப்பருங் கனல்வெங் காள
மேவுமிழ்ந் திடுவ தோரெட் டிசைபெறுங் கண்டை பூண்ட
தோவறு மணியாற் பொன்னா லமைந்ததோ ருவணி நல்கித்
தேவல நிருபன் கையிற் கொடுத்தனன் றேவர் போற்ற.

(இ-ள்.) தேவதச்சனனவன், மூன்றுலகங்களிலுள்ளவர்களும் ஒருங்கு வந்தெதிர்த்தாலும் அழிக்கத் தக்கதும், நெருப்பையும் கொடியவிடத்தையுங் கக்குவதுமாகிய எட்டுப்பிராணங்களையும், கீர்த்தியைக் கொண்ட விருதாகிய ஆபரணந் தரித்ததும் கொல்லுந்தொழிலில் நீங்காததுமாகிய மணிகளாலும் பொன்னாலுஞ் செய்யப்பட்ட ஒரு கைவாளையும் விரும்பித் தேவாங்கமுனிவனுடைய கரத்தில் தேவர்கள் துதிக்குமாறு கொடுத்தான். எ-று.

முன்கொடுத்தது உடைவாளும், இது கைவாளும் ஆம். (கூ)

சொல்வளர் தருதென் காலசச் சுமுகாா சயமா லின்ற
செல்வன்மெய்ப் புகழ்கூர் வங்கார் திருமலைப் போட யேந்திரன்
மல்வளர் புயப்போ லோங்கும் வடகிரி தனில்வாழ் வுற்ற
நல்வர மயனு லெக்த நலமுந்தே வலன்பெற் றானால்.

(இ-ள்.) புகழ்வளர்கின்ற தென்காசை என்னும் நகரத்தையாளுகி ன்ற நன்முகமுள்ளவனாகிய இராசயபோடயனென்னும் பெருமையிற் சிறந் தோன் பெற்ற புத்திரனாகிய உண்மையும் கீர்த்தியுமிகுந்த வங்காருதிருமலைப் போடயனென்னும் நல்லவனுடைய வள்ளைமைமிகுந்த புயங்களைப்போல உயர் ந்த மேருமலையில் வாழுகின்ற நல்ல வரங்களையுடைய தேவதச்சனாலே தேவா ங்கமுனிவன் எவ்வகை நன்மைகளையு மடைந்தான், எ - று. (க0)

மயனருள் விடைகொண் டந்த மால்வரை நணுகிப் போந்து
புயல்வளர் பொழிலா மோத புரத்தடைந் தினிது வைகிச்
செயமுறு பரம னன்பு செறிதரு திறத்தாற் றூனே
வியல்புனை கயிறு மச்சு மியற்றினன் மேலவர்க்கு மேலகான்.

(இ-ள்.) எவர்க்கு மேலாகிய தேவாங்கமுனிவனானவன், தேவதச்சனு டைய கிருபையாற்கொடுத்த விடைபெற்று, அந்த மகாமேருவினின்று நீங்கி, மேகந்தவழ்கின்ற சோலைகள் சூழ்ந்த ஆமோதநகரையடைந்து, நன்றாக இரு ந்து, வெற்றிபொருந்திய சிவபெருமானிடத்துவைத்த அன்பானது சேர்ந்த திறமையினாலே, அழகினையுடைய வடங்களும், கட்டளைக்கயிறுகளும் (முன் னதாகத்) தானே செய்தான். எ - று. (கக)

செற்றவர் வணங்கு சீர்த்தித் தேவல முனிவன் பின்னுங்
கற்றவ ரேந்து செங்கைக் கடவுளின் னருளி னாலே
நற்றவ மயன்கொ டுத்த நவையிலாக் கருவி யோடு
மற்றைய வநுபந் தங்கள் யாவையும் வகுத்தல் செய்தான்.

(இ-ள்.) பகைவர்கள் வணங்குகின்ற கீர்த்தியையுடைய தேவலமுனி வன், மறுபடியும், மேருமலையாகிய வில்லைத்தாங்கிய சிவந்த கையினையுடைய சிவபெருமானது, இனிய கிருபையினாலே நல்ல தவத்தையுடைய விஸ்வகர்மா வினாற் கொடுத்த குற்றமில்லாத நெய்தற்கருவிகளுடனே பின்னும் அதற்கு வேண்டும் அநுபந்தமாகிய கருவிகளையெல்லாஞ் செய்தான். எ - று. (க௨)

என்றுசொல் சூத மேலோ னிணையடிப் பதுமம் போற்றித்
துன்றிய முனிவர் யாருஞ் சுருதிக ளுணர்ந்த தூயோய்
மென்றுகி லாற்றச் சேர்ந்த வநுபந்தம் விருப்பி னாற்றும்
வன்றிறன் முனிவ னேனைக் கருவியும் வகுக்க லாமே.

(இ-ள்.) இவ்வாறு சொல்லிய மேலோனாகிய சூதபுராணிகருடைய இரண்டு பாததாமரைகளை நெருங்கிய முனிவர்கள் யாவரும் நமஸ்கரித்து, நான்குவேதங்களையு மறிந்த பரிசுத்தரே! மெல்லிய ஆடைகளைச்செய்வதற்குத் தகுந்த தொடர்ச்சியாகிய கருவிகளை மகிழ்ச்சியுடனே செய்கின்ற வல்லமை யையுடைய தேவாங்கமுனிவன், மற்றக் கருவிகளையுஞ்செய்துகொள்ளக்கூடு மோ, (என்று பின்னுஞ்சொல்லுவார்கள்). எ - று. (க௩)

கனகமால் வரையின் வைகு மயனிடங் கருவி வேண்டி
பனகவா பரணன் பாத பங்கயம் பணிதே வாங்க
முனிவரன் சென்ற தென்னே முந்துமந் தணங்க ளெல்லா
மினிதுணர் குரவ வெங்கட் கையமீ தொழித்தி யென்றார்.

(இ-ள்.) மகாமேருவினிடத்து வசிக்கின்ற விஸ்வகர்மாவினிடம் ஆயுதங்களைப்பெறவிரும்பி, நாகாபரணத்தை யணிந்த சிவபெருமானுடைய பாத தாமரைகளைப்பணிகின்ற தேவாங்கமுனிவன் போனகாரணம் யாது? முற்பட்ட இரகசியங்களை யெல்லாம் நன்றுணர்ந்த வெங்கள் குருநாதனே! இந்தசந்தேகத்தை எங்களுக்கு நீக்கக்கடவீரென்று முனிவர்கள் கேட்டார்கள். எ-று. (கசு)

மாதவர் வதன நோக்கி மலவிரு ளகன்ற சூத
னோதுவா னநுபந் தங்க ளுளுற்றுறு வலிமை யீசன்
றீதிலா வருளி னாலுஞ் சீர்த்தநல் லொழுக்கத் தாலு
நீதியார் தேவாங் கற்கு நிலவுற நிரம்பிற் றன்றே.

(இ-ள்.) அஞ்ஞானவிருள் நீங்கிய சூதமுனிவரானவர், முனிவர்களுடைய முகத்தைப்பார்த்துச் சொல்வாராயினர்; நியாயங்களையுடைய தேவாங்க முனிவனுக்கு அநுபந்தமாகிய கருவிகளைச் செய்யக்கூடிய வல்லமையானது, சிவபெருமானுடைய குற்றமற்ற கிருபையினாலும் அழகினை யுடைய நன்னடையினாலும் விளங்கும்படி நிரம்பவுண்டாயிற்று. எ-று. (கரு)

சாதனம் பலவு மேற்பச் சமைத்திட வல்லோன் வேண்டிக்
கோதிலா மயன்பாற் சென்ற கொள்கையா தென்னிற் கேண்மி
னேதமார் சாபத் தாழ்வுற் றிருந்துய ருழந்துய் வில்லாத்
தீதுறு நிருத னுக்குத் திறலுறு சீயத் திற்கும்.

(இ-ள்.) பல உபகரணங்களையுந் தகுதியாகச் செய்துகொள்ளவல்லவனாகிய தேவாங்கமுனிவன், கருவிகளை விரும்பிக் குற்றமில்லாத விஸ்வ கர்மாவினிடம் போன கோட்பாடியாதென்றால், கேளுங்கள் முனிவர்களே! குற்றம் நிறைந்த சாபத்திலமிழ்ந்து மிக்க துன்பத்தையனுபவித் தீடேறுதலில்லாத தீமைபொருந்திய விராக்கதனுக்கும், வலிமைபொருந்திய சிங்கத்திற்கும்.

சொல்லுமச் சாப நீக்கந் தூயதே வாங்கன் றன்னாற்
புல்லுமென் றறவோர் மாற்றம் பொருந்திய வதனுன் மேருக்
கல்லிடைக் கருவி பெற்று வந்திடு கரும முன்னி
யொல்லையின் வழிக்கொண் டேகி யும்பர்கம் மியன்பாற் சென்றான்.

(இ-ள்.) விசேடித்துச் சொல்லும்படியாகிய அந்தச்சாபவிமோசனமானது, பரிசுத்தமாகிய தேவாங்கமுனிவனாலே கூடுமென்று முனிவர்களுடைய சொற்கள் பொருந்தியபடியினாலே, கருவிகளைப்பெற்று வருகின்ற தொழிலை

நினைத்துச் சி[illegible]ரமாக வழியைக்கடந்து மகாமேருவினிடத்து வசிக்கின்ற அந்தத் தேவதச்சனிடஞ்சென்றான். எ - று. (கஎ)

மடலுறு கமல மேவு வானவன் றனைநி கர்க்குந்
திடமுறு கலைக ளாய்ந்த செயமுறு தேவாங் கற்குக்
கடலுடைப் புவிமுன் னாகக் கருதுமூ வுலகத் துள்ளு
மடலொடு மாற்றொ ணாத வினையிலை யாயி னென்றான்.

(இ - ள்.) இதழ்கள் பொருந்திய தாமரைமலரில் வசிக்கின்ற பிரமதேவனையொத்த சாஸ்திரங்களை யாராய்ந்தறிந்த வெற்றிபொருந்திய வலிமைபெற்ற தேவாங்கமுனிவனுக்கு, சமுத்திரத்தை ஆடையாகவுடைய பூமிமுதலாகிய மூன்றுலகங்களினிடத்தும் ஆராயுமிடத்து வீரத்துடனே செய்யக் கூடாத தொழிலில்லை யென்று குதமுனிவர் சொன்னார். எ - று. (கஅ)

செய்தொழின் முயன்ற கோமான் சவுடதே வியைத்தன் னெஞ்சின்
மெய்வர நினைத்த லோடும் விறல்புனை மடங்க லூர்ந்து
கைவளர் சூல மின்னக் கவின்முடி காந்தி வீச
மைவிழி யருள்சு ரந்து வந்தன ளவளு மன்னே.

(இ - ள்.) (ஆடைகள்) செய்யுந்தொழிலில் முயற்சியெடுத்துக்கொண்ட தேவாங்கமுனிவன், சவுடாயகியம்மையைத் தன்மனத்தில் உண்மையாகத் தியானஞ் செய்தவுடனே, அந்தச் சவுடாயகியம்மையும், வெற்றியைக்கொண்டசிங்கவாகனத்தை நடாத்திக் கையினிடத்திலுயர்ந்த சூலாயுதமானது விளங்கவும், அழகிய கிரீடமானது பிரகாசத்தை வீசவும், மையெழுதப்பட்ட கண்களில் கிருபை சுரந்து வந்தாள். எ - று. (ககூ)

மைந்தநீ யெமைநி னைத்த வகையெவன் பகர்தி யென்னச்
சிந்தையின் மகிழ்வு பொங்கத் தேவலன் சென்னி தாழ்ந்து
வந்தனை புரிந்து நின்று மலர்க்கரங் குவித்து வாழ்த்தி
யெந்தனை யீன்ற வாதி யெம்பெரு மாட்டி கேண்மோ.

(இ - ள்.) (வந்தசவுடாயகியம்மையானவள், தேவாங்கமுனிவனைப் பார்த்து.) மைந்தனே! நீ எம்மை நினைத்த விஷயம் யாது? சொல்லக்கடவையென்று வினவ, தேவாங்கமுனிவன், உள்ளத்தில் மகிழ்ச்சி அதிகரிக்க முடி தாழ்ந்துநமஸ்காரஞ்செய்து நின்று, மலர்போன்ற கைகளைக் குவித்துத் தோத்திரஞ் செய்து, என்னைப்பெற்றெடுத்த முதன்மையாகிய வெம்பெருமாட்டியே பாயாகவென்று சொல்வான். எ - று. (உ0)

பரமனா ரருளா லாடை பாரிக்கும் படிமுயன்றேன்
சரதமா தவினு லொன்று தாம்பல வாக வேண்டு
மிரதவா னவர்முன் யாவ ரேவ்வகை விரும்பி னாலு
மருமைகூர் கலிங்க மெல்லா மங்கிறம் பொருந்தல் வேண்டும்.

(இ - ள்.) சிவபெருமானுடைய கிருபையால், ஆடைகளை யுண்டாக்கும்படி எத்தனித்தேன். இது மெய்யாதலினாலே, ஒரு ஆடை பலவாகப் பெருக

வேண்டும்; நற்குணமுள்ள தேவர்கள் முதலாகிய யாவராயினும் எவ்வித நிற முள்ள ஆடையை விரும்பினாலும் அருமையிருந்த ஆடைகள்யாவும் அந்நிறமாகவே யமைய வேண்டும். எ - று. (உக)

வரமிது தருக வென்ன மலரடி வணங்கி நின்ற
நிருபனை நோக்கி யன்னை நிறைதிரு வருள்புரிந்து
கரதல கமலம் பூண்ட கனககங் கணத்தை நல்கிச்
சரமுத லெவையு மீன்ற தற்பரை யினைய செப்பும்.

(இ-ள்.) இப்படிப்பட்ட வரங்களைக் கொடுக்கவேண்டுமென்று, தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கிநின்ற தேவாங்கமுனிவனாகிய அரசனைப் பார்த்து, சரவுயிரும் அசரவுயிருமாகிய எவ்வகைப்பொருள்களையும் பெற்ற சிவசத்தியாகிய சவுடாம்பிகையம்மையானவள், நிறைந்த திருவருள்செய்து, தாமரைமலர்போன்ற தமது திருக்கரத்தில்தரித்த பொன்வளையைக்கொடுத்து, இவ்வாறாகிய வார்த்தைகளைச்சொல்லுவாள். எ - று. (உஉ)

புதல்வநின் கரத்தி லிந்தப் பொற்றொடி யணிந்து கோடி
மதனுறு கலைக ளெண்ணு மனப்படி வடிவு வாய்க்கும்
பதமிக வொன்று தானே பற்பல வாமென் றோதிச்
சதுமறை முடிவு தேடுஞ் சவுடாம் பிகைசென் றாளால்.

(இ-ள்.) நான்குவேதங்களின் முடிபாகிப் பகிடதமும் தேடுகின்ற சவுடாம்பிகையம்மையானவள் புத்திரனே! உன்னுடையகையில் இந்தப்பொன்வளையை யணிந்துகொள்ளக்கடவாய், மாட்சிமையுள்ள ஆடைகளெல்லாம் மனத்தில் நினைத்தவிதம் வடிவுண்டாகும்; ஒரு ஆடையே பலபலவாகவே மிகுமென்று சொல்லித் தன்துறைவிடம் சென்றாள். எ - று. (உ௩)

மற்றதன் பின்னர் மேன்மை வளர்சுப முகூர்த்தந் தன்னிற்
கொற்றவன் கவுரி தந்த குருமணிக் கடகஞ் செங்கோல்
பெற்றதன் கரத்த ணிந்து பிறங்குவெண் கயிலை வெற்பி
லுற்றருள் பரனை யுன்னி நெய்திற முஞற்றி னானால்.

(இ-ள்.) அதன்பின்னே தேவாங்கமுனிவன், மேன்மையுண்டாகுஞ் சுபதினத்திலே, சவுடாம்பிகையம்மைகொடுத்த பொன்னாலும் மணியாலு மமைந்த வளையலைச் செங்கோல்பெற்ற தனது கையிலணிந்து, விளங்குகின்ற வெள்ளிய கயிலாசமலையி லெழுந்தருளிய சிவபெருமானைத் தியானித்து நெய்தற் றொழிலைச் செய்தான். எ - று. (உ௪)

வானதுந் துமிமு ழங்க வரர்மலர் மாரி தூவக்
கானவிஞ் சையர்கொண் டாடக் கதிபெறு முனிவோர் வாழ்த்த
வீனமின் றிவரு மின்ப மெய்தின மினியா மென்று
பூகலம் புனைந்த மாந்தர் யாவரும் புகழ்ந்து போற்ற.

(இ-ள்.) (ஆகாசவீதியிலே) தேவதுந்துபி முழங்கவும், தேவர்கள் பூமழை பொழியவும், இசையைப் பாடுகின்ற கந்தருவர்கள் தேவாங்கமுனி

வனைக் கொண்டாடவும், நல்ல பதவியைப் பெற்ற முனிவர்கள் ஆசீர்வதிக்கவும், பூமியில் நன்மைபெற்ற மக்கள் யாவரும், நாம் இன்றுமுதலாக (திருவாணிக ளென்கின்ற) இழிவை நீங்கினோம்; இனி நன்மைகள்யாவும் அடைந்தோமென்று புகழ்ந்து துதிக்கவும். எ - று. (௨௫)

மங்கைய ரேனோர் தத்த மானமாம் பயிர்செழிப்பப்
பொங்கருள் வளர்கும் கொண்ட புயலெனப் பொலிந்து தோன்ற
வங்கன மயனூற் பெற்ற வருப கரணங் கொண்டு
பங்கயக் கரத்தா லாடை பற்பல படைத்தான் மாதோ.

(இ - ள்.) பெண்களும் மற்றப்புருடர் முதலானோர்களும் ஆகிய இவர்களுடைய மானமாகிய பயிர்கள்தழைக்கவும்,தேவாங்கமுனிவன் அந்த ஆமோத்நகரிலிருந்து, மிகுந்த கிருபை வளருகின்ற கருப்பங்கொண்ட மேகம்போல விளங்கி, தேவதச்சனாலே கொடுக்கப்பெற்ற ஆயுதங்களைக் கொண்டு, தாமரைமலர்போன்ற கைகளாலே ஆடைகள் பலவற்றையுஞ் செய்தான். எ-று.

அங்ஙனம் என்பது, அங்கனமெனச் செய்யுள் கடை நோக்கி நின்றது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

வன்னகன்கார் நேத்திரபந்தர் வழியமிர்த சந்திரபந்தர்
வழிபொற் றாவி
யன்னபந்தர் வழிப்பாடமேற் றன்னபுஞ்சர் வழியுசித
வநேக சித்திர
மென்னருந்தா ருவளிமே காவளியின் னனபிறவும்
விதித்தான் யாவு
முன்னமன்பா லளித்தபரன் கருணையக லாததிரு
முதல்வன் மாதோ.

(இ - ள்.) முற்காலத்திலே ஆன்மாக்களின் பொருட்டு எப்பொருள்களையும் பிரீதியுடனே உண்டாக்கிக்கொடுத்த சிவபெருமானுடைய கிருபை நீங்காத அழகினையுடைய தலைவனாகிய தேவாங்கமுனிவன்,நல்ல நிறம்பொருந்திய நேத்திரபந்தரும், அதன்பின் அமிர்தசந்திரபந்தரும்,அதன்பின் பொன்போலுஞ் சிறைபினையுடைய அன்னபந்தரும், அதன்பின் அன்னபுஞ்சரும், அதன்பின் உத்தமமாகிய அழகினையுடைய மென்மையாகிய அநேக நல்ல தாருவளிகளும், மேகாவளிகளும் இவைபோன்ற அநேக ஆடைகளையும் உண்டாக்கினான். எ - று.

இவ்வாடைகளின்பெயர், நெய்பவர்களால் அவ்வக்காலங்களில் இடப்பட்டது. உம் எண்ணிடைச்சொல். மற்று அசை. (௨௬)

பற்பலகலையும் படைத்த சருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ௯-க்கு பாடல் ௩௩௫.

தேவாங்கநல்லதேவி சவுடாம்பிகையம்மை பொற்றுணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

பத்தாவது

அமரர்கட்கம்பர மளித்த சருக்கம்.

கலிவிருத்தம்.

மாமருவு சூதமுனி வன்றனை வணங்கி
நேமிவன மீதுறையு நீடுறு தவத்தோ
ரேமமொடு வானவ ரெவர்க்குமெழில் வேந்தன்
சோமனுடை தந்தவகை சொல்லென விளம்பும்.

(இ-ள்.) நைமிசாரணியத்திலே வசிக்கும் மிக்க தவத்தினையுடைய முனிவர்கள், பெருமைபொருந்திய சூதபுராணிகரை நமஸ்கரித்து, அழகினையுடைய தேவாங்கமுனிவனாகிய அரசனானவன், களிப்புடனே தேவர்கள் யாவருக்கும் (பன்னிரண்டு முழங்கொண்ட சீலைகளையும், இன்னும் பெரிய) சீலைகளையும் கொடுத்தவிதங்களைச் சொல்லுவீராக வென்று கேட்க, சூதபுராணிகர் சொல்லுவார். எ-று. (க)

ஆடையுயர் தேவல னநேகவகை செய்தே
கோடவிர வேவளர்வை குந்தநக ரெய்தி
வாடரிய சீர்குலவு மாலடி வணங்கி
நாடுகன காம்பரம வற்கினிது நல்கி.

(இ-ள்.) மேன்மையுள்ள தேவாங்கமுனிவன், ஆடைகளநேகவிதமுண்டாக்கி, தீமை நீங்குமாறு, நன்மை வளருகின்ற வைகுந்த நகரையடைந்து, நீங்காத சிறப்பினையுடைய விஷ்ணுமூர்த்தியினது திருவடிகளை நமஸ்கரித்து, விரும்பிய பொன்வஸ்திரத்தை அத்திருமாலுக்கு இனிதாகக்கொடுத்து. (உ)

கலிநிலைத்துறை.

திரும கட்குவெண் ணேத்திரந் தந்துபூ தேவிக்
கருண முற்றமென் கோசிக மருளியத் தலத்தின்
மருவு முத்தர்க ளெவர்க்கும்பல் காழகம் வழங்கிப்
பெரும ணிப்பணி யூர்திதா னேகடரப் பெற்றே.

(இ-ள்.) இலக்குமிதேவிக்கு வெண்பட்டாடையைக் கொடுத்து, பூமிதேவிக்கு மெல்லிய சிவப்புப்பட்டாடையைக் கொடுத்து, அவ் வைகுந்தத்

தில் வசிக்கின்ற பெரியோர்கள் யாவருக்கும் பல நிறமுள்ள ஆடைகளைக் கொடுத்துப் பெருமையுள்ள இரத்தினாபரணங்களும், வாகனங்களும், சேனைகளும், அவ்விஷ்ணுமூர்த்தியினால் கொடுக்கப்பெற்றுக்கொண்டு, எ - று.

திருமகள், பூதேவி இவர்கள் விஷ்ணுமூர்த்தியின் மனைவியர்கள். ()

பின்பு சத்திய லோகத்தின் மேவியப் பிரமற்
கன்பு றச்செழுஞ் செக்கர்ச் சம்பட மருவி
மென்பு ணித்தனா மாமகட் கினியவெண் டுகிறந்
தின்பு டைப்பசுந் தானைசா வித்திரிக் கீந்தே.

(இ-ள்.) அதன்பின்னர் தேவாங்கமுனிவன், சத்தியலோகத்திற் சென்று, அங்கு வசிக்கின்றபிரமதேவருக்குக் களிப்புண்டாகும்படி, செழித்த செம்மைநிறமுள்ள ஆடையைக்கொடுத்து, மென்மையாகிய ஆபரணங்களையணிந்த முலைகளையுடைய கலைமகளுக்கு நல்ல வெள்ளிய துகிலைக்கொடுத்து, சாவித்திரிதேவிக்கு நல்ல பசுமையாகிய ஆடையைக் கொடுத்து. எ - று.

சாவித்திரி = பிரமன்மனைவியர்களி லொருத்தி. (ச)

உறுப சப்புடை யோங்குகா யத்திரிக் குதவித்
தெறுபு லப்பெரும் புலத்தியப் பிரமதே வற்கு
மறுவ றச்சிவப் பேர்டுசெழும் பிங்கல வடிவும்
பெறுது கிற்கொடுத் தனன்புவி புரந்திடும் பெரியோன்.

(இ-ள்.) உலகத்தைக் காக்கின்ற தேவாங்கமுனிவன், சிறப்புமிக்க காயத்திரிதேவியாருக்குப் பொன்மைநிறமுள்ள உடையைத்தந்து, (விடயங்களிற் செல்லாமல்) இந்திரியங்களை யடக்கிய பெருமையையுடைய புலத்தியப் பிரமாவுக்குக் குற்றமறச் செம்மை நிறத்துடனே பொன்மை நிறமும்பெற்ற ஆடையையுங் கொடுத்தான். எ - று.

சாயத்திரியும் பிரமன் மனைவியரி லொருத்தி. புலத்தியப்பிரமர் - பிரமதேவருடைய புத்திரர்கள் ஒன்பதின்மரில் ஒருவர். இவருக்குப் படைப்புத்தொழிலுஞ் சில வுண்டு. (ரு)

செஞ்ச டாட்விப் பானரு டேவலன் பின்ன
ரஞ்ச வாகன னடிமலர் தன்முடிக் கணிந்து
தஞ்ச நாயக வென்குலத் துற்றவர் தமக்கு
விஞ்சு நாவினிக் கிடைப்பதெவ் வாறென விரித்தான்.

(இ-ள்.) சிவந்த சடைக்காட்டினையுடைய சிவபெருமானருளிய தேவாங்கமுனிவன், அதன்பின்பு அன்னவாகனத்தையுடைய பிரமதேவரது பாததாமரைகளைத் தலையினுடைய சிரசின்மேற்சூடி, எவற்றிற்கும் பற்றுக்கோடாகிய முதல்வனே, என்னுடைய குலத்திற் பிறந்தவர்களுக்கு மிகுந்த நூல்கள் இனி அகப்படுவது எவ்விதமென்று கூறினான். எ - று. (சு)

குணவி வேகநின் போல்வருந் தாமலுன் குலத்தோர்
புணரி சூழ்தலத் தினிதுறப் புரிகுது முன்னர்
இணர்கொள் பைந்துழா யெங்கையுந் தித்தடத் திருந்தே
யுணரு மானியோ டபிமானிவந் துதித்தார்.

(இ-ள்.) சிறந்த குணத்தினையும், பேரறிவினையுமுடைய தேவாங்க முனிவனே! உன் குலத்திற் பிறந்தவர்கள் உன்னைப்போல வருந்தாமல், சமுத்திரஞ்சூழ்ந்த உலகத்தில் (நூல்களை) இனிமையாக அடையும்படி செய்கின்றோம். (அஃது எவ்வாறெனின்) முற்காலத்தில், கொத்துக்களாகிய பசிய துளபமாலையையணிந்த விஷ்ணுமூர்த்தியினது நாபிக்கமலத்தினின்றும் யாவரும் விரும்புகின்ற உயர்ந்த மானி - அபிமானியென்று இரண்டு பெண்கள் வந்து பிறந்தார்கள். எ - று. (எ)

அனைய நங்கையர் தம்மையிவ் வவனியி னனுப்பிப்
புனையு நூறரும் பூடெனத் திகழ்வுறப் புரிந்துன்
னினைவு முற்றுற வளிக்குது மனையன மென்றே
நனைய லம்புபங் கயத்துறை மறையவ னவின்றான்.

(இ-ள்.) அந்த இரண்டு பெண்களையும் இந்தப் பூலோகத்திற் கனுப்பி (வஸ்திரமாக்கித்) தரித்தற் கேதுவாகிய நூலைத்தருகின்ற பருத்திச்செடிகளாக முளைக்கச்செய்து (ஆடைநெய்வதற்குநூல்வேண்டுமென்னும்) உனது எண்ணம் நிறைவேறும்படி செய்கின்றோம்; அதைக்குறித்து நீவருந்தவேண்டாமென்று, தேன்ததும்புகின்ற தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவர் அருளிச்செய்தார்.

புனித னீதருள் புரிதலு மவனடி போற்றி
யினிய வானபல் படைகள வரிசையு மேற்றுத்
தனிவி மானநா டடைந்துதே வலன்புரந் தரற்குக்
கனிவு கூர்தர வளித்தன னழகிய கமலம்.

(இ-ள்.) பரிசுத்தராகிய பிரமதேவரானவர், இவ்வாறதைக்கொடுத்தவுடனே, தேவாங்கமுனிவன், அவருடைய திருவடிகளை வணங்கி, நன்மையுடையனவாகிய பல ஆயுதங்களும், பெரிய மரியாதைகளும் பெற்று, (அதன்பின்) ஒப்பில்லாத தேவலோகத்தையடைந்து, தேவேந்திரனுக்கு (மனத்தில்) தயவுமிகும்படி அழகிய செந்தாமரை மலர்போலும் நிறமுள்ள ஆடையைக் கொடுத்தான். எ-று.

கமலம் ஆடைக்காதலால் பண்பாகுபெயர். புரந்தரன் = பகைவருடலை யழிப்பவன். (அ)

சசிக்கி லங்குபீ தாம்பரந் தந்துபின் சயந்தன்
வசுக்க ளெண்மரா தித்தரோ டுருத்திரர் மகிழ்வுற்
றசைப்ப வெண்டுகி லருளியே பிரமவந் தனற்கு
மிசைப்பெருஞ் சுரர்க் குந்தகும் பலகலை யீந்தே.

(இ-ள்.) அதன்பின் இந்திராணி தேவியாருக்குப் பிரகாசிக்கின்ற பொன்னுடையைக்கொடுத்து, பின்பு (அத்தேவராசனுடைய) புத்திரனாகிய சயந்தனுக்கும், அஷ்டவசுக்களுக்கும், பன்னிரண்டு சூரியர்களுக்கும், பதினொரு உருத்திரர்களுக்கும் மகிழ்ச்சிகொண்டு உடுத்துமாறு வெண்மையாகிய ஆடைகளைக்கொடுத்து, தேவகுருவாகிய வியாழபகவானுக்கும், கீர்த்திமிக்க தேவர்களுக்கும் தகுதியாகிய பல ஆடைகளையுங்கொடுத்து. எ-று. (கo)

வரிசை பற்பல பெற்றுமா மேருவில் வந்தாங்
கிருடி கட்குடை யவ்வவர் மனப்படிக் கீந்து
குருமணித்துகின் மயன்றனக் களவில கொடுத்துத்
திருநி றப்பணி படைத்தொகை யவன்றரச் சிறந்தே.

(இ-ள்.) இந்திரனாலே பலபலவாகிய உபசாரங்களையடைந்து, அதன்பின்னே, (தேவாங்கமுனிவன்) மகாமேருவைச்சேர்ந்து, அவ்விடத்து வசிக்கின்ற முனிவர்களுக்கு, அவரவர்கள் இஷ்டப்படி ஆடைகளை வழங்கி, தேவதச்சனுக்கு நல்ல மணிநிறமுள்ள ஆடைகள் அளவில்லாதவைகளைக்கொடுத்து, அத்தேவதச்சனானவன், அழகும் நிறமுமுள்ள ஆபரணங்களும், ஆயுதங்களும் கொடுக்கச் சிறப்புடனே பெற்றுக்கொண்டு. எ-று. (கக)

கின்ன ராதிபர் கருடர்க ளமரர்கிம் புருட
ரின்னர் யார்க்குமவ் வவர்மனப் படிதுகி லீந்து
பின்னர் நீள்பொதி யாசல முதற்பல பிறங்கன்
மன்னு மாதவர் சித்தர்கட் கருங்கலை வழங்கி.

(இ-ள்.) அதன்பின்பு கின்னரத்தலைவர்களுக்கும், கருடர்களுக்கும், தேவர்களுக்கும், கிம்புருடர்களுக்கும் இவர்போன்ற மற்றையோர்களுக்கும் அவரவர்மனம்போல வுடைகளைக்கொடுத்து, பெரிய பொதியமலை முதலாகிய பல மலைகளிலும் வசிக்கின்ற முனிவர்களுக்கும், சித்தர்களுக்கும் அருமையாகிய பலகலைகளைக்கொடுத்து. எ-று. (கஉ)

அக்கி னிக்கட வுட்கிரு ணிறப்படா மருளி
மிக்க வத்திர முதற்பல வவன்றர வியந்து
தெக்க ணத்திசைக் கதிபற்கு நீலவொண் சீரை
பக்க முற்றளித் தவன்றரு படைகளைப் பெற்றே.

(இ-ள்.) அக்கினிதேவனுக்குக் கருநிறந் தங்கிய ஆடையைக் கொடுத்து, மிகுந்த அஸ்திரமுதலாகிய பலபொருள்களை அவ்வக்கினிதேவன் கொடுக்க ஆச்சரியத்துடனே பெற்று, அதன்பின்பு தெற்குத்திசைக்குத்தலைவனாகிய எமதருமராசனுக்குப் பிரகாசமுள்ள நீல வஸ்திரத்தைப் பட்சமுடனே கொடுத்து, அவ்வெமதருமராசன் கொடுத்த ஆயுதங்களைப்பெற்றுக்கொண்டு. எ-று. (கங)

பக்கமுற்று-சமீபத்திற்சென்று எனினுமாம்.

புனற்கி றைக்குவெண் காழகந் தந்துபூ ணங்கள்
சினக்கொ டும்படை பெற்றுயர் வாயுவி ற்றேவு
தனக்குப் பிங்கல நிறம்புனை யம்பரந் தந்து
கனத்த வெங்கணை முதற்பல வவன்றரக் களித்தே.

(இ-ள்.) அதன்பின்பு, வருணபகவானுக்கு வெண்மையாகிய வஸ்திரத்தைக்கொடுத்து, ஆபரணங்களும், கோபமுள்ள கொடிய ஆயுதங்களும் பெற்று, உயர்ந்த வாயுபகவானுக்குப் பொன்மைநிறமுள்ள வஸ்திரத்தைக்கொடுத்து, பெரிய கொடிய அம்புகள் முதலிய பலபொருள்களும் அவ் வாயுதேவன் கொடுக்கக் களிப்புடனே பெற்று. எ - று. (கச)

தனத னன்னவன் றருநள கூபரன் றனக்குங்
கனக சித்திர வாடைக ணல்கிவெங் கணைகண்
முனைசி னப்படை மணிப்பணி முதற்பல பெற்றுப்
புனையு மெய்த்தவ முனிவட கீட்டிசை புக்கான்.

(இ-ள்.) அதன்பின், (யாவரும்) அலங்கரித்துச்சொல்லும் உண்மையாகிய தவத்தையுடைய தேவாங்கமுனிவன், குபேரனுக்கும் அக்குபேரன் பெற்ற நளகூபரனுக்கும் அழகினையுடைய பொன்வஸ்திரங்களைக் கொடுத்து, கொடியபாணங்களும், கூர்மையுங் கோபமு முள்ள வேறுபல ஆயுதங்களும், இரத்தினாபரணங்களும் ஆகிய இவைமுதலாகிய பலவற்றையும் பெற்று, அதன்பின் ஈசான திசையைச் சேர்ந்தான். எ - று. (கரு)

களிப்பு மிக்கவீ சானதே வற்குவெண் கலிங்க
மளித்து மற்றுள பூதசே னைபர் யார்க்குந்
துளித்த தேங்குழற் கயல்விழிச் சுரமடந் தையர்க்குந்
தெளித்த பன்மணிக் கலைவிருப் புணர்ந்தருள் செய்தே.

(இ-ள்.) மகிழ்ச்சி மிகுந்த ஈசானமூர்த்திக்கு வெண்மை உடையைத் தந்து, வேறுள்ள பூதசேனைகளுக்கும், தேன் றுளிகள் சிந்துகின்ற கூந்தலையும் கெண்டைமீன்போலுங் கண்களையுமுடைய தேவமாதர்களுக்கும், பலமணி கலைப்பரப்பினுலொத்த வஸ்திரங்களை அவரவர் பிரியமறிந்து கொடுத்து.

தெளித்தபன்மணிக்கலை என்பதற்கு சுத்தமாக்கிய மணிகள் கோர்த்த உடை எனினுமாம். (கசு)

உகிர்வி டும்படை கணைமணி முடிதொடி கடக
முதல ணிந்திடு பணிகொடி முழுமதிக் கவிகை
மிதமி கும்பல வாகன மிவைப்பெற் றெவர்க்கு
மகர்வு றும்படி தேவலன் காசினி வந்தான்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன், ஒளியைச்செய்கின்ற வாளாயுதங்களும், அம்புகளும், இரத்தின கிரீடங்களும், தோள் வளைகளும், கங்கணங்களும் முதலாகிய அணியப்படும் பல ஆபரணங்களும், கொடிகளும், பூரணசந்திரன் போலுங் குடைகளும், நல்லமை மிகுந்த பல வாகனங்களும் ஆகிய இவைகளை யெல்லாம்பெற்று, யாவருக்கும் ஆசைப் பெருக்க முண்டாகும்படி பூலோகத்தில் வந்தான். எ-று. (கஎ)

அமரர்கட் கம்பர மளித்த சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் க௦ - க்கு பாடல் ௲௱௦.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை சரண்டுணை.

சிவமயம்.

சவுடாம்பிகை சகாயம்.

பதினொன்றாவது

மக்கட் கம்பரம் வழங்கிய சருக்கம்.

கலிநிலைத்துறை.

மோக மற்றுயர் சூதனைத் தொழுதுமா முனிவோ
ராக மப்பொரு ளனைத்துணர் தேவல வரதன்
மாக னப்புவி வாழ்வுறு மானவர் யார்க்கு
நாக மற்புட னளித்தவை நவிலென நவிலும்.

(இ-ள்.) பெருமையுள்ள நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்கள் உலகப்பற்றை நீக்கி உயர்ந்த சூதமுனிவரைவணங்கி, ஆகமங்களின் பொருள்கள்யாவுமறிந்த தேவாங்கமுனிவனுகிய உபகாரியானவன், பெரிய பூமியில் வாழ்கின்ற மனிதர்களுக்கெல்லாம் அன்புடன் வஸ்திரங்கொடுத்த தன்மையைச்சொல்வீராகவென்று வினவ, அச்சூதபுராணிகர்சொல்லத்தொடங்கினர்.

தரணி நாவலந் தீவுறை யிருதுவேந் தனுக்கும்
வரமு லாவுபஃ றேயமன் னவர்க்குமற் றெவர்க்குங்
கரத லாம்புயத் தெடுத்தளப் பரியவொண் கலைதந்
திரத மாப்பணி யாதிபெற் றுயர்ந்தன னிறையோன்.

(இ-ள்.) தேவாங்கமுனிவனுகிய தலைவன், பூவுலகத்தில்- நாவலந்தீவில் வசிக்கின்ற இருதுவேந்தனுக்கும், மேன்மைபொருந்திய பல நாட்டுவேந்தர்களுக்கும் மற்றயாவர்களுக்கும் அளவில்லாத அழகினையுடைய வஸ்திரங்களைத் தாமரைமலர்போன்ற கைகளாலெடுத்துக் கொடுத்து, அவ்வரசர்களால் இரதங்களும், குதிரைகளும், ஆபரணங்களும் இவைமுதலாகிய பொருள்களையெல்லாம் பெற்று மேன்மையடைந்தான். எ - று. (உ)

இறைவி யம்பெருந் தீவினி லினிதுவீற் றிருந்த
வறக லம்புனை சூரசே னனுக்குமேல் யார்க்கு
திறமி கும்பல துகில்குந் [illegible]டுணர்ந்துதா னீட்டி
மறமு றுங்கயஞ் சிவிகைமுற் பெற்றுள மகிழ்ந்தே

(இ-ள்.) அதன்பின், இறலித்தீவிலே இனிதாக அரசுசெய்துகொண்டிருந்த அறங்களையும் மற்ற நன்மைகளையும்பெற்ற சூரசேனமகாராசனுக்கும் மற்றயாவருக்கும் நிறமிகுந்த பலவஸ்திரங்களை (அவரவர்கள்) எண்ண மறிந்து கொடுத்து, அவர்களால், வீரம் பொருந்திய யானைகளும், பல்லக்குமுதலாகிய வரிசைகளும் பெற்று மனக்களிப்படைந்து. எ-று. (ங)

குசைநெ டும்பெருந் தீவுறை குசனெனுங் குரிசிற்
கிசைவு றுங்கலை யருளியவ் வயினுளோ ரெவர்க்கும்
வசைய றும்பல கலையூ ணத்தொகை வழங்கி
யசைவ றுங்கன வரிசைபெற் றனன்புவிக் கரசன்.

(இ-ள்.) உலகத்தை யாளுகின்ற தேவாங்கமுனிவன், பெரிய குசைத்தீவில் வசிக்கின்ற குசன் என்னு மரசனுக்குத் தக்க ஆடையைக் கொடுத்து, அத்தீவில்வசிக்கின்ற யாவர்க்கும் குற்றமில்லாத பல ஆடைகளைக் கொடுத்து, நீக்கமில்லாத பெரிய மரியாதைகளைப் பெற்றான். எ-று. (ச)

இருநி லம்புகழ் கவுஞ்சதீ வுறையுமே மாக்ஷ
நிருப னூருளோர் யார்க்கும்பற் பலகலை நீட்டிப்
பரிக யம்படை சிவிகையா தவங்கொடி பணிகள்
வருண மங்கைய ரவன்றரப் பெற்றனன் வலியோன்.

(இ-ள்.) வல்லமையையுடைய தேவாங்கமுனிவன், பெரிய பூமிமுழுதும் புகழ்கின்ற கிரௌஞ்சதீவில் வசிக்கின்ற ஏமாக்ஷராஜனுக்கும், அவ்விடத்துள்ளோர் யாவருக்கும் பலவாகிய ஆடைகளைத் தந்து, குதிரைகளும், யானைகளும், ஆயுதங்களும், பல்லக்குகளும், குடைகளும், கொடிகளும், ஆபரணங்களும், நற்குலமாதர்களும் அவ்வேமாக்ஷராசன் கொடுக்கப்பெற்றான். எ-று.

ஏமாக்ஷநிருபன் = பொன்போலுங் கண்களையுடைய நிருபன். (ரு)

சாக நற்பெருந் தீவபி ராமவேந் தனுக்கும்
வாகு மிக்குறு மமைச்சரா தியர்க்குமா னவர்க்கு
மோக னப்பல கலைகடந் தவர்களான் மகுட
நாக மற்பரி படைதரப் பெற்றன னுதன்.

(இ-ள்.) தேவாங்கமுனிவனாகிய அரசன், நல்ல பெரிய சாகத்தீவை யாளுகின்ற அபிராமவரசனுக்கும், தோள்வலி மிக்க (அவன்) மந்திரிமுதலாயினோர்க்கும், மற்ற மனிதர்களுக்கும், கண்டோர் ஆசை கொள்ளும்படியான பலவிதமாகிய வஸ்திரங்களைக்கொடுத்து, அவ்வரசன்முதலியோரால் மகுடமும், யானைகளும், மற்போர்செய்கின்ற குதிரைகளும், ஆயுதங்களும் கொடுக்கப்பெற்றான். எ-று.

வாகு - அழகு எனினும், மல் - வளப்பம் எனினும் ஆம். (சு)

இலவத் தீவில்வீற் றிருந்தருள் சாவிகேத் திரற்குங்
குலவச் சூழுமத் தலத்தவர் யார்க்குமேர் கொண்ட
பலபொற் காழகந் தந்தவர் தரக்கயம் பரிமா
வலிமைத் தேர்படை பெற்றனன் மகிழ்ந்துதே வாங்கன்.

(இ-ள்.) தேவாங்கமுனியானவன், இலவத்தீவில்வசிக்கின்ற சாவிகேத்திரனென்னு மரசனுக்கும், அவ்வரசனைப்பொருந்தச் சூழ்ந்திருக்கின்ற அத்தீவிலுள்ள மற்ற மனிதர்களுக்கும் அழகுபொருந்திய பல பொன்னுடைகளைக்கொடுத்து, யானைகளும், குதிரைகளும், வலிமையுள்ளதேர்களும், ஆயுதங்களும் அவ்வரசன்முதலியோர்கொடுக்க மகிழ்ச்சியோடுபெற்றான். எ-று. (எ)

பதிக்கெலாமுயர் புட்கரத் தீவுறை பானு
மதிக்கு மேனைய தலத்தர சிருந்தமன் னவர்க்குந்
துதிக்கு மெய்க்குலத் தவர்க்கும்பற் பலதுகில் வழங்கி
நிதிப்பெ ருங்குவை யநேகமன் னவர்தர நேர்ந்தான்.

(இ-ள்.) அதன்பின் தேவாங்கமுனிவன்,எந்நாட்டினுக்கும் மேலாகிய புட்கரதீவில் வசிக்கின்ற பானுமதியரசனுக்கும், மற்றப்பூமியை யாளுகின்ற அரசர்களுக்கும், தன்னைத் துதிக்கின்ற எவ்வகை வருணத்தோர்களுக்கும் பலபல வஸ்திரங்களைக்கொடுத்து அவர்கள் அநேகதிரவியங்களைக்குவியல் குவியலாகக் கொடுக்கப்பெற்றான். எ-று. (அ)

அண்டர் மானவ ரளித்தவெம் படைகளை யணிக
ளெண்ட ருங்கரி பரிதள மாதரோ டனையவுங்
கொண்டு தன்பதி சென்றிட வுய்த்துநற் குணத்தோன்
றண்ட ரும்பெரும் பாதல நாட்டிடைச் சார்ந்தான்.

(இ-ள்.) நல்ல குணத்தையுடைய தேவாங்கமுனிவன், தேவர்களும் மனிதர்களும் கொடுத்த கொடியஆயுதங்களையும், அழகிய ஆபரணங்களையும், எண்ணத்தக்க யானைகளையும், குதிரைகளையும், காலாள்களையும், பெண்கள் முதலாகிய மற்றப்பொருள்களையும் பெற்றுத் தன்னுடைய பட்டணமாகிய ஆமோதநகருக் கனுப்பிவிட்டு, கெடுதலில்லாத பாதாளலோகத்திற்குச்சென்றான். எ-று. (கூ)

திக்கட்கம்பரம் வழங்கிய சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் கக-க்கு பாடல் கஙகூ.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை கழலடி துணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

பன்னிரண்டாவது

நாகர்க்கம்பர நல்கியசருக்கம்.

கலிநிலைத்துறை.

தழற்சி னக்கவிர் சூதனை வணங்கிமா தவத்தோர்
முழக்கு திண்டிறன் முரசுடைத் தேவல முதல்வ
னுழப்பு றும்பெரும் பாதல நாடுறை வோர்க்கும்
பழிப்ப றுங்கலை தந்தவை பகரெனப் பகரும்.

(இ-ள்.) பெரியதவத்தினையுடைய முனிவர்கள், நெருப்பையொத்த கோபத்தைநீக்கிய சூதமுனிவனை நமஸ்கரித்து, முழக்கப்படுகின்ற மிக்க வலியுள்ள பேரிகையையுடைய தேவாங்கமுனிவன், முயற்சியையுடைய பெரிய பாதாளலோகத்தில் வசிக்கின்ற நாகர்களுக்கும் நிந்தனையில்லாத வஸ்திரங்களைக்கொடுத்த முறையை உரைசெய்வீரென்றுகேட்க, சூதபுராணிகர் முறையே சொல்லத்தொடங்கினார். எ-று. (௧)

தக்கன் வாசுகி பதுமன்கார்க் கோடகன் சங்கன்
றிக்கு லாவுப தக்ககன் சித்திர சேனன்
மிக்க மாபது மன்குளி கன்சௌர வேயன்
றொக்க சீரயி ராவத னாதிமா சுணர்க்கும்.

(இ-ள்.) தக்கன் - வாசுகி - பதுமன் - கார்க்கோடகன் - சங்கன் - திசைகளிலுலாவுகின்ற பாதங்களையுடைய ககன் - சித்திரசேனன் - அறிவு மிகுந்த மகாபதுமன் - குளிகன் - சௌரவேயன் - சிறப்புமிகுந்த அயிராவதன் - முதலாகிய நாகங்களுக்கும். எ-று. (௨)

உளப்ப டிக்குநற் காமுகம் பற்பல வுதவி
வளப்பெ ருங்கதிர் மாணிக்க முதனவ மணிக
ளளப்ப ரும்பணி சரம்படை யவர்தரப் பெற்றான்
றுளக்கு றுந்துய ரெவர்க்குந்தீர்த் திடவருந் தூயோன்.

(இ-ள்.) யாவருக்கும் நடுக்க மிகுந்த துன்பங்களையொழிக்குமாறு அவதரித்த பரிசுத்தனாகிய தேவாங்கமுனிவன், அவரவர்கள் மனம்போல நல்லவஸ்திரங்கள் பலவற்றையுங்கொடுத்து, வளப்பமும் பெரியகாந்தியுமுள்ள மாணிக்க முதலாகிய ஒன்பதுவகை இரத்தினங்களும்; அளவில்லாத ஆபரணங்களும் பாணங்களும், வேறு ஆயுதங்களும், அந்நாகர்கள் கொடுக்கப்பெற்றான். எ-று.

அகிலர் தாங்கிய வனந்தனூர் மந்திரத் தணுகித்
திகழுங் காழக மவன்மனப் படிக்கருள் செய்து
வகிரும் பூங்குழல் வடிவமங் கைபர்க்குமற் றெவர்க்குந்
துகிலன் போடுதந் தனன்சுரர் புகழுமுத் துங்கன்.

(இ-ள்.) தேவர்கள் புகழ்கின்ற மகத்துவமுடைய தேவாங்கமுனிவன், பூமியைச் சுமக்கின்ற அனந்தன் என்னும் நாகராசன் வசிக்கின்ற அரண்மனையை யடைந்து, விளங்குகின்ற ஆடைகளை அவ்வனந்தன் மனம்போலக் கொடுத்து, கோதப்பட்டப்பூவையணிந்த கூந்தலையுடைய அழகிய நாககன்னியருக்கும், மற்றையோருக்கும் பிரியத்துடனே வஸ்திரங்களைக்கொடுத்தான். (சு)

ஆன காலையிற் றேவலன் றனை வியந் தனந்த
னான மார்குழற் சந்திர ரேகைகன் னும
மான மேவுதன் மகளையும் புனலொடு வழங்கித்
தான மாமணிப் பணிபடை யேனவுந் தந்தான்.

(இ-ள்.) அனந்தனாகிய நாகராசனானவன், அக்காலத்துத் தேவாங்கமுனிவனைப் புகழ்ந்து, மணம் நிறைந்த கூந்தலையுடைய சந்திரரேகையென்னும் நல்ல பெயரினையுடைய பெருமையுள்ள தன்புத்திரியையும், நீருடனே தானஞ்செய்து, மதத்தையுடைய யானைகளையும், இரத்தினாபரணங்களையும் ஆயுதங்களையும், மற்றும் ஏனைய பொருள்களையும் தானமாகக்கொடுத்தான். எ-று.

தன்மகளைப் புனலொடு வழங்கியது,—தாரைவார்த்துக் கலியாணஞ்செய்து கொடுத்தலாம். மகளையும் இவ்வும்மை இறந்ததுதழுவி நின்றது.

அனந்தன் பாவையை மணந்தக மலர்ந்துதே வாங்கன்
புனைந்த காசினி மருவியா மோதமா புரம்புக்
கினங்கொண் மானவர் யார்க்கும்பற் பலகலை யீந்து
மனங்கு லாவிய மானங்காத் திருந்தனன் மாதோ.

(இ-ள்.) தேவாங்கமுனிவன், நாகராசனுடைய புத்திரியாகிய சந்திரரேகையை விவாகஞ்செய்து மனக்களிப்புற்று, அழகிய பூவுலகத்தையடைந்து ஆமோதநகரைச் சேர்ந்து, கூட்டமாகிய மனிதர்கள் யாவருக்கும் அநேக ஆடைகளைத்தந்து அவர்கள் மனத்தின்கண்ணுண்டாகிய வெட்கத்தைக் காத்திருந்தான். எ-று. (சா)

நாகர்க் கம்பர நல்கிய சருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் கஉ - க்கு பாடல் நகசுடு.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை செய்யதாளே.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

பதின்மூன்றாவது

அரன்விடைக்கொடிவா ளருளிய சருக்கம்.

முந்து சூத முனிவனைப் போற்றியே
யந்த மாதவ ரன்பொடு தேவலற்
கெந்தை வாளு மிடபத் துவசமுந்
தந்த மாக்கதை சாற்றெனச் சாற்றுவான்.

(இ-ள்.) அந்த நைமிசாரணியவாசிகளாகிய பெரிய தவத்தையுடைய முனிவர்கள், பக்தியுடனே முதல்வராகிய சூதமுனிவரை நமஸ்கரித்து, எமது பிதாவாகிய சிவபெருமான், தேவாங்கமுனிவனுக்கு ரிஷபக்கொடியும், வாளும் கொடுத்த சிறப்புள்ள காதையைச் சொல்லுவீராகவென்று வினவ, சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர். எ - று. (க

சீர்வ ளம்புனை தேவல பூபதி
யார்வ னம்ப னடிதொழ வுன்னியே
சேர்வ ரும்பட்டின் னிறக்கலிங் கங்கொடு
கார்வ ழங்கு கயிலையை நண்ணினன்.

(இ-ள்.) அழகும் செல்வமும்பெற்ற தேவாங்கமுனிவனாகிய அரசன், அன்புடையவனாகிச் சிவபெருமானுடைய திருவடிகளைவணங்க நினைத்து, ஒப்பில்லாத பலநிறங்களையுடைய துகில்களையெடுத்துக்கொண்டு மேகங்கள் தவழ்கின்ற கயிலாசமலையை யடைந்தான். எ - று. (உ)

வேத வோதை விரும்பிடு விஞ்சையர்
கீத வோதை கிளர்முனி வோர்தொழும்
போத வோதை பொருவரு மாக்களி
னோத வோதையெந் நாளு மறுவரோ.

(இ-ள்.) (அக்கயிலாசபருவதத்தின்கண்) நான்குவேதங்களின் சத்தமும், யாவரும் விரும்புகின்ற வித்தியாதரருடைய இசைப்பாடலின் சத்தமும், விளங்குகின்ற முனிவோர் ஞானத்துடனே வணங்குகின்ற சத்தமும், ஒப்பில்லாத மனிதர்களுடைய தோத்திரஞ்செய்யும்சத்தமும், எக்காலமும் நீங்காமல் முழங்கும். எ - று.

பொருவருமாக்கள் - சாலோகமுதலிய பதவிகளைப்பெற்றமாக்கள். (ங)

பாட்டு வண்டினம் பாடப் பசுஞ்செழுந்
தோட்டு றுஞ்சுனா தூற்றிய பூம்பொழில்
கூட்டி யுண்ட குணத்தினர் கேளென
நீட்டி யெங்கு நிமிர்ந்து நிறங்குமால்.

(இ-ள்.) (அக்கயிலையினிடத்து) இசையைப்பாடுகின்ற வண்டுக்கூட்டங்களானவை பாடாநிற்க,பசுமையாகிய செழித்த மலரிதழ்களிலுள்ள தேனை அவற்றிற்குப் பரிசாகக்கொடுத்த மலர்களையுடைய சோலைகளானவை, உறவினரைச்சேர்த்துண்ட நல்லகுணத்தை யுடையவரது சுற்றத்தார்போலக் (கிளைகளை) நீட்டி யுயர்ந்து எங்கும் விளங்கும். எ - று. (ரு)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஏர்பூத்த தடஞ்சுனைக டொறுகளின மலர்ந்தெளிதி
னிடைவி டாமற்
கார்பூத்த சிறைச்சுரும்ப ருணச்செழுந்தே னினிதுபொழி
காட்சி மிக்க
நீர்பூத்த காசைவங்கார் திருமலைப்போ டயசுமுக
நிருப னென்றுஞ்
சீர்பூத்த தமிழ்ப்புலவர் தமக்குநிதி வரிசைதருஞ்
செய்கை போலும்.

(இ-ள்.) விசாலமாகிய அழகினையுடைய சுனைகளி னெவ்விடங்களிலும் தாமரைகளானவை மலர்ந்து, கருநிறம்பொருந்திய சிறகினையுடைய வண்டுகள் நீங்காமல் எஞ்ஞான்றுமுண்ணும்படி செழுமையாகிய தேனை இனிதாகக்கொடுக்குந் தோற்றமானது, மிகுந்த நற்குணம்பொருந்திய காசையென்னும் நகரையாளுகின்ற வங்கார் திருமலைப்போடயனென்னும் பெயரையுடைய இனிய முகத்தினனாகிய வரசன், சிறப்புள்ள தமிழ்க்கவிஞர்களுக்கு திரவியங்களை இடைவிடாமல் முறையே கொடுக்குந்தன்மையை யொக்கும்.

அருணகண கிரணபண வுரகமணி முதலவற்று
லமைந்த செம்பொற்
கருணைநிறை மந்திரத்துட் காந்தருவர் சுரரியக்கர்
கமன சித்தர்
தருநிழலில் வளரமரர் வசுக்களுருந் திரர்சுரர்க
டணவா வன்புந்
திருநளின கரஞ்சிரத்தின் முகிழ்த்திறைஞ்சி மறைகளினைத்
தெடுப்ப மாதோ.

(இ-ள்.) படத்தையுடைய நாகங்களாற் கொடுக்கப்பட்ட செம்மை மிகுந்த ஒளிபொருந்திய மாணிக்கமுதலிய இரத்தினங்களா லாகிய கிருபை நிறைந்த செம்பொன் விமானத்தினுள்ளே கந்தருவர்களும், தேவர்களும், வித்தியாதரர்களும், ஆகாசவாசிகளாகிய சித்தர்களும், கற்பகத்தருக்களின்கிழலில் வாசஞ்செய்கின்ற தேவர்களும், அஷ்டவசுக்களும், ஏகாதசவுருத்திரர்களும், மற்றைய தேவர்களும் நீங்காத பத்தியுடையவர்களாய்த் தாமரைமலர்போன்ற இரண்டு கைகளைச் சிரமேற்குவித்து வணங்கி வேதவாக்கியங்களாற் றுதிப்பார்கள். எ - று. (அ)

நறவுசெறி கமலமலர்ப் பீடிகையின் மருவுமய
னவிவ ருத
விறல்குலவு திகிரிவளை வாள்கதைகோ தண்டமணி
மிளிர்கைக் கொண்ட
னிறவிமல குணவரத நிமிர்தருகற் பகதருவி
னீழல் வைகு
மறமுலவு குலிசவதி பதியுமணி முடிதாழ்த்து
வணங்கிப் போற்ற.

(இ-ள்.) தேன்பொருந்திய தாமரைமலராசனத்திலெழுந்தருளிய பிரமதேவனும், கெடுதலில்லாத வெற்றிபொருந்திய சக்கரம், சங்கு, வாள், கதை, வில் ஆகிய பஞ்சாயுதங்களையும் அழகு விளங்குகின்ற கைகளினிடத் தணிந்த மேகம்போலுந் திருமேனியையுடை... திருமாலும், (நல்ல) நிறமும், பரிசுத்தமும், குணமும், வ... ...டைய உயர்ந்த கற்பகத்தருவி னிழலினிடத்து கொலுவீற்றிரு... ...பொருந்திய வச்சிராயுதத்தையுடைய தேவராசனும் இரத்தினமகுடங்களைத் தாழ்த்தி நமஸ்கரித்துத் துதிக்கவும். எ - று. (கூ)

பொதியமுனி கவுதமன்மார்க் கண்டேயன் சுகன்வசிட்டன்
பொருவில் கூர்மன்
மதிகுலவு காசிபன்றூர் வாசனுயர் பராசரனல்
வாம தேவன்
முதிர்புகழ்கூர் பதஞ்சலிவி யாக்கிரபதன் சனகன்முதன்
முடிவ ருத
வதிகதவ விருடிகள்பற் பலர்சுருதி முறைவணங்கி
யன்பிற் சூழ.

(இ-ள்.) பொதியமலையி லெழுந்தருளிய அகத்தியமுனிவரும், கவுதமமுனிவரும், மார்க்கண்டேயமுனிவரும், சுகமுனிவரும், வசிட்டமுனிவரும், ஒப்பில்லாதஉரோமரிஷியும், அறிவுமிகுந்த காசிபமுனிவரும், துருவாசமுனிவரும், உயர்ந்த பராசரமுனிவரும், நன்மைபொருந்திய வாமதேவரும், மிக்க புகழை

யுடைய பதஞ்சலிமுனிவரும், வியாக்கிரபாதமுனிவரும், சனகரும் இவர்கள் முதலாகிய அழிவில்லாத மிகுந்த தவத்தையுடைய ரிஷிகள்பலரும் வேதங்களிற் கூறியவிதிப்படி வணங்கி அன்புடனே சூழவும். எ - று. (அ)

தவளமதி நதிகுலவு சடிலமின்ன மழுமான்கைத்
தலத்தி லோங்கப்
புவனசரா சரமுழுது மீன்றவிளம் பாவையொரு
புறத்தின் மேவக்
கவளமத கரடதிடக் கயங்கலங்கு மடங்கலுடைக்
கவின்பீ டத்திற்
சிவபரன்வீற் றிருந்தசெழுந் திருவவைக்கட் டேவாங்கன்
சென்றா னன்றே.

(இ-ள்.) வெள்ளியசந்திரனும் கங்கையும்பொருந்திய சடைவிளங்கவும், மழுவும் மானும் கைகளி லோங்கவும், எவ்வுலகங்களும், சரம் அசரமுதலாகிய இயங்கியற்பொருள்களும், நிலையியற்பொருள்களும் ஆகிய எல்லாவற்றையும்பெற்ற இளமைவாய்ந்த பார்ப்பதிதேவியார் ஒருபாகத்தி லெழுந்தருளவும், கவளங்கொள்ளுகின்ற மதமும், மதம்பாய்சுவடுமுள்ள வலிய யானைகள் அஞ்சுகின்ற சிங்கங்கள் சுமக்கப்பெற்ற அழகிய ஆசனத்திலே சிவபெருமான் எழுந்தருளியிருந்த செழித்த திருவோலக்கத்தினிடத்துத் தேவாங்கமுனிவன்சென்றான். எ - று. (க)

துன்பமுறு பொறிவழியிற் சுழன்றலையா [illegible]ம்
துதித்து வாழு
மன்பர்மனத் திரு[illegible] வருஞானச் செழுஞ்சுடரோ
யளவி லாத
வின்பநெடுங் கடலே யினியகுணத் தெள்ளமுதே
யெழில்கொண் டோங்கிப்
பொன்பொதிந்த களபமுலைப் புனல்வனி[illegible]முடிமேற்
புனைகோ மானே.

(இ-ள்.) துன்பம்பொருந்திய ஐம்பொறிகளின் பின்னேசென்று (விஷயப்பற்றின்கண்) சுற்றியலையாதபடி, தேவரீருடைய கீர்த்தியைக்கொண்டாடி வாழ்கின்ற அடியாரது மனவிருள் நீங்கவருகின்ற செழித்த ஞானசுடரினனே! எல்லையில்லாத பெரிய அலைகளையுடைய இன்பசமுத்திரமே! இனியகுணத்தையுடைய தெளிந்தஅமிர்தமே! அழகுபெற்றுயர்ந்து பொன்போலுந்தேமல்பரவிய கலவைச்சாந்தணிந்த ஸ்தனங்களையுடைய கங்காதேவியைச் சிரசின்மீது சூடிய தலைவனே!. எ - று. (க௦)

புகலரிய வைம்பூத வுருவாகி யருவாகிப்
புலன்க ளாகிச்
சுகமவுனப் பொருளாகிச் சுருதிமுடி வுறைந்தபராஞ்
சோதி யாகிப்
பகலிரவாய் முப்பொருளின் பண்பாகி முதன்மூலப்
பகுதி யாகிச்
சகலமுந்தா னுகின்ற தற்பரமே யற்பனமாந்
தவத்தின் வாழ்வே.

(இ-ள்.) சொல்லுதற்கருமையாகிய (பிரிதிவுமுதலிய) ஐந்து பூதங்களின் உருவமாகியும், அருவமாகியும்; (சுவைமுதலாகிய) ஐந்து புலன்களாகியும், நல்ல ஞானப்பொருளாகியும், வேதங்களின் முடிவிலெழுந்தருளிய சுயம்பிரகாசக் கடவுளாகியும், பகலும் இரவுமாகியும், அறம் - பொருள் - இன்பம் - என்னும் மூவகையால் (சாத்துவிகமுதலிய) மூன்றுகுணங்களாகியும், எல்லாப்பிரபஞ்சங்களுந் தோன்றுங்காரணமாகிய மாயையாகியும், எல்லாந்தானேயாகியும் எழுந்தருளிய கடவுளே! தவத்தின் தோற்றமாகிய வாழ்வே!. எ - று.

பிரிதிவுமுதலிய பூதங்களாவன :— பிரிதிவு - அப்பு - தேயு - வாயு - ஆகாசம். சுவை முதலாகிய புலன்களாவன :— சுவை - ஒளி - ஊறு - ஓசை - நாற்றம். சாத்துவிகமுதலிய குணங்களாவன:— சாத்துவிகம் - இராசதம் - தாமதம். (கக)

என்று பல துதிகளெடுத் தினிதியம்பி வணங்கியெழுந்
திருகை கூப்பி
நின்றுனது திருவருளா லிவைதிருமித் தனென்னப்பன்
னிறவி சித்ர
நன்றுபுனை கலையனந்த நல்கினன்றே வலனவற்றை
நயபபு னேற்று
மன்றுலவு நடனபத வாதனுந்தே வியுமுவந்து
வணைந்தார் மாதோ.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் இவ்வகையாகப் பலவாறெடுத்துத் துதி செய்து நமஸ்கரித்தெழுந்து, இரண்டு கைகளையுஞ் சிரமேற்குவித்து நின்று, தேவாருடைய கிருபையால், இவைகளைச் செய்தேனென்று பலநிறங்களையு டைய பேரழகுள்ள பல ஆடைகளைக்கொடுத்தான்; அவ்வாடைகளை, திருச்சிற்றம்பலத்தின்கண் (மெய்யடியார்கள் உய்யுமாறு) பொருந்திய ஆனந்தத்தாண்டவஞ்செய்தருளுகின்ற திருவடிகளையுடைய சிவபெருமானும், பார்வதிதேவியாரும், விருப்பத்துடனே வாங்கி, மகிழ்ச்சியுடன் உடுத்திக்கொண்டார்கள்.

துங்கமதிப் பிறைமருப்புக் கடகளிற்று முகற்கணிவெண்
　　டுகிலுஞ் சோதிச்
செங்களப வரைப்புயவே லவற்கொளிர்சந் திரகாவிச்
　　செழும்பொற் றூசு
மங்கரிய திறல்வீர பத்திரற்குச் சேவுடையும்
　　வளர்நந் திக்குப்
பொங்கமிகு நீனிறவம் பரமுமளித் தவர்கருணை
　　புனிதன் பெற்றான்.

(இ-ள்.) பரிசுத்தனாகிய தேவாங்கமுனிவன், உயர்வுள்ள சந்திரப்பிறைபோலுங்கொம்பினையும்மதத்தையுமுடைய யானைமுகம்பொருந்திய விநாயகருக்கு அழகிய வெள்ளைவஸ்திரமும், காந்தியுள்ள சிவந்த கலவைச்சாந்தையணிந்த மலைபோன்ற புயங்களையுடைய முருகக்கடவுளுக்குப்பிரகாசிக்கின்ற சந்திரகாவியென்னுஞ் செழுமையாகிய பொன்வஸ்திரமும், கெடுதலில்லாத வலிய வீரபத்திரக்கடவுளுக்குச் சிவப்புவஸ்திரமும், கிருபைவளர்கின்ற திருநந்திதேவருக்குப் பொலிவுமிகுந்த நீலநிறவஸ்திரமும் கொடுத்து, அத்தேவர்களுடைய கிருபையை யடைந்தான். எ - று. (கங)

பிருங்கிமுத லுளசிவக ணாதிபரெவ் வெவர்க்குமனப்
　　பிரிய மோங்கத்
திருந்துபல நிறம்படைத்த சீலைகளுந் தழகியபத்
　　திரகா ளிக்குச்
சுருங்கலில்செந் துகிலளித்துச் சண்டன்பிர சண்டனெனுந்
　　துவார பாலர்க்
கிருந்தவபூ பதிசிவந்த வேடகமும் வெண்கலையு
　　மீந்தா னன்றே.

(இ-ள்.) பெரியதவத்தையுடைய தேவாங்கமுனியென்னும் அரசன், பிருங்கிமகாரிஷிமுதலாகிய சிவகணங்கள் யாவருக்கும் மனத்திற் பிரியமிகும்படி செவ்வையாகிய பலநிறமுள்ள வஸ்திரங்களைத்தந்து, அழகுள்ள பத்திரகாளிக்குக் குறைவில்லாத சிவப்புப்புடைவையைக் கொடுத்து, சண்டன் பிரசண்டனென்று சொல்லப்பட்ட வாயில்காப்போருக்குச் சிவப்புவஸ்திரமும், வெள்ளைவஸ்திரமும் முறையே கொடுத்தான். எ - று. (கச)

சக்கசரா சரவகையுந் தருசவுட நாயகியைத்
　　தனது நெஞ்சின்
மிகமகிழ்வி னுடமெகுட வேந்தனினைத் தலுமவன்முன்
　　விரைந்து மேவப்

பகரரிய மறைப்பொருளே பரஞ்சுடரோ யமுதனைய
பருவ மானே
சிகரதன புராதனியே சிற்பரையே யென்றுதுதி
செய்து நின்றான்.

(இ-ள்.) மகுடத்தையுடைய அரசனாகிய தேவாங்கமுனிவன், சரவுயிர் அசரவுயிர்களாகிய எவ்வகைப்பொருள்களையும்பெற்ற சவுடாம்பிகையம்மையை மனத்தில் மிகுந்த விருப்பத்தோடு தியானித்தவுடனே, அவன் முன்னதாகச் சீக்கிரமாக அச்சவுடாம்பிகையம்மை யெழுந்தருள, (அத்தேவாங்கமுனிவன்) சொல்லுதற்கருமையாகிய வேதப்பொருளே! மேன்மையாகிய சோதியே! தேவாமிர்தத்தையொத்த இளமையுள்ள மான்போன்றவளே! மலைபோன்ற ஸ்தனங்களையுடைய பழமையானவளே! ஞானசக்தியே! என்று தோத்திரஞ்செய்தான். எ - று. (கரு)

வழுத்திநின்ற தேவாங்கன் மலர்முகத்தை நோக்கியருள்
வழங்கி யம்மை
முழுத்தவநீ யெமைநினைத்த முறையெவனென் னலுமவன்கை
முகிழ்த்துப் போற்றிப்
பழுத்தசுவைத் தெள்ளமுதே யுனதுவரத் தாலெளியேன்
பரிவி னாற்றும்
விழுத்தகுமென் றுகிலதனைத் தரித்தருள்க வெனவளித்து
வேண்டி னானால்.

(இ-ள்.) உலகமாதாவாகிய சவுடாம்பிகையானவள், இவ்வாறு தோத்திரஞ்செய்து நின்ற தேவாங்கமுனிவனுடைய மலர்போன்ற முகத்தைப்பார்த்துக் கிருபைசெய்து, பூரணமான தவத்தையுடையவனே! நீ எம்மைநினைத்த காரணம் யாதென்றுகேட்டவுடனே, அத்தேவாங்கமுனிவன் இரண்டுகைகளையுங் குவித்து நமஸ்கரித்து, முதிர்ந்த மதுரம்பொருந்திய தெளிவாகிய அமிர்தமே! உன்னுடைய வரத்தினாலே ஏழையாகிய நான் விருப்புடனேசெய்த சிறப்பும் மென்மையுமுள்ள இந்த மேன்மையாகிய புடைவையை யணிந்துகொள்ளவேண்டுமென்று கொடுத்துப் பிரார்த்தித்தான். எ - று. (கசு)

பணிந்துதரு செழுந்துகிலைச் சவுடாம் பிகைமகிழ்ந்து
பரிவு கூர்ந்தேற்
றணிந்துதிரு வருள்வழங்கி யாசிபகர்ந் தகன்றனள்பின்
னமல னோர்போய்
வணங்கியெதிர் தொழுதிடவெம் பரனுமணி முடிபுனைதே
வலனை நோக்கி
யிணங்கியநன் மொழியாலிங் கிருத்தியென வவ்வவைக்கண்
ணிருந்தா னன்றே.

(இ-ள்.) தேவாங்கமுனிவன், வணங்கிக்கொடுத்த செழுமையாகிய புடவையைக் கவுடநாயகியம்மையானவள் மகிழ்ச்சியடைந்து, அன்புமிகுந்து வாங்கியுடுத்திக் கிருபைசெய்து, வாழ்த்துதல்கூறிச் சென்றாள்; பின்னே சிவபெருமானது சந்நிதியிற்சென்று நமஸ்கரித்து எதிர்நின்று தொழுதுநிற்க, எமது சிவபெருமானும் மணிமகுடத்தையணிந்த தேவாங்கமுனிவனைப்பார்த்துப் பொருந்திய நல்லவசனத்தால் இவ்விடத்தில் இருக்கக்கடவையென்று சொல்ல, அத்திருவோலக்கத்திலிருந்தான். எ - று. (கள)

அச்சமையத் தரம்பையுருப் பசிநெடுங்கட் டிலோத்தமைமா
　　தடர்ந்து விம்மிக்
கச்சணிபொற் பயோதரமே னகைமுதன்மங் கையர்முழவங்
　　கஞ்ச மார்ப்ப
மச்சமணிக் கொடிமதனு மயல்பெருகப் பரதநன்னூல்
　　வகைவ ழாமற்
செச்சைமலர்த் தொடைதுவள வபிநயமோ கனநடனஞ்
　　செய்தார் மன்னோ.

(இ-ள்.) அப்பொழுது அரம்பை, உருப்பசி, நீண்டகண்களையுடைய திலோத்தமை, நெருங்கிப்பருத்துக் கச்சையணிந்த பொலிவுள்ள ஸ்தனங்களையுடைய மேனகைமுதலாகிய பெண்கள் குடமுழாவும் தாளமும் முழங்க, அழகிய மீனக்கொடியையுடைய மன்மதனுக்கும் மோகம்பெருகும்படி பரதசாஸ்திரவிதி தவறாமல், வெட்சிப்பூமாலைகளசையும்படி, அபிநயத்துடனே யாவருமயங்குதற்கேதுவாகிய நடனஞ்செய்தார்கள். எ - று. (கஅ)

அரமகளிர் நடனமகிழ்ந் தமலனழி யாதபுக
　　ழணிதே வாங்க
வாமுனிவன் றிருவதன நோக்குதலு மக்குறிப்பை
　　மதித்தாச் சித்ர
பரணமுத லிலகுபல படாமெதிர்வைத் திடவவற்றைப்
　　பரமன் வாங்கிச்
சுரர்சகல விருடிகட்கு மபிநயமங் கையர்க்குமின்பந்
　　தோன்றத் தந்தான்.

(இ-ள்.) மலரகிதராகிய சிவபெருமான், அரம்பைமுதலாகிய தேவமாதருடைய நடனத்தைப்பார்த்து மகிழ்ந்து, கெடாத புகழையுடைய மேன்மையாகிய தேவாங்கமுனிவனது திருமுகத்தைப் பார்த்தவுடனே, அக்குறிப்பைத் தேவாங்கமுனிவனுணர்ந்து, பேரழகுள்ள பட்டாடைமுதலாகிய பிரகாசிக்கின்ற பல புடைவைகளை யெதிரேவைத்திட, அவ்வாடைகளைச் சிவபெருமானெடுத்துச் சகலதேவர்களுக்கும், இருடிகளுக்கும் அபிநயஞ்செய்யும் நடனமங்கையர்களுக்கும் இன்பமுண்டாகும்படி கொடுத்தருளினார். எ - று.

சாலகடங் கடர்வெருவத் தாக்கியதே வாங்கமுனி
　　தனக்கவ் வேலை
நீலநிறம் புனைமிடற்றுக் கடவுள்சுசந் திரகமெனு
　　நிகரில் வாளுங்
கோலமிலங் கிடபநெடுங் கொடியுமளித் திவைகளினாற்
　　கொதிக்குந் தெவ்வர்
காலமுடிந் திடச்செயித்தெக் காலமுநீ வாழியெனக்
　　கருணை செய்தான்.

(இ - ள்.) நீலநிறம்பொருந்திய விடத்தையணிந்த ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமான், இராக்கதர் பயங்கொள்ளுமாறு மோதிய தேவாங்கமுனிவனுக்கு அப்பொழுது சுசந்திரகம் என்னும் ஒப்பில்லாத வாளாயுதமும், அழகு விளங்குகின்ற பெரிய இடபக்கொடியுங்கொடுத்து, இவைகளினால் கோபிக்கும் பகைவருடைய வாணாள்முடியும்படி வென்று எந்நாளும்நீ வாழக்கடவையென்று அனுக்கிரகஞ்செய்தருளினர். எ - று. (உ0)

குழவிமதி சூடித்தபிரான் பரிதிதிரு முகத்தையருள்
　　கூர்ந்து நோக்கித்
தீழல்பொருவுங் கதிரோய்நின் றங்கையென வருதேவ
　　தத்தை தன்னை
யழகுபெறு மித்தேவாங் கற்குமண முடித்தியென
　　வமலை வானோர்
பழமறைமா தவருநன்றென் றனரவனுஞ் சம்மதச்சொற்
　　பகர்ந்தா னன்றே.

(இ - ள்.) இளஞ்சந்திரனை யணிந்த சிவபெருமான் கிருபைமிகுந்து சூரியனுடைய திருமுகத்தைப் பார்த்து, தழலையொத்த கிரணத்தையுடைய சூரியனே! உன்னுடைய தங்கையென்று பிறந்த தேவதத்தையை அழகு பெற்ற இத்தேவாங்கமுனிவனுக்குக் கலியாணஞ்செய்து முடிப்பாயென்று சொல்லப் பார்ப்பதிதேவியாரும், தேவர்களும், பழமையாகிய வேதங்களை யுணர்ந்த பெரிய தவத்தினையுடைய முனிவர்களும் சரிதானென்றார்கள்; அச்சூரியதேவனும்அதற்குடன்பட்டான். எ - று.

தேவதத்தை=தேவர்களால் அனுக்கிரகஞ்செய்யப்பட்டவள். (உக)

அவ்வேலை யரன்றனித யாம்புயத்தி லுதித்தவனை
　　யருளா னோக்கி
யொவ்வாத வவுணரொழித் தனைவருக்குங் கலைகடந்தா
　　யோவென் றேதச்

செவ்வாய்மை தவறாத தேவலனுமையவெனத்
திரும்ப வன்னோன்
வெவ்வாசை கடந்தமுனி வரரிமையோர் யாவருக்கும்
விடைதந் தானால்.

(இ-ள்.) அப்பொழுது சிவபெருமான் தம்முடைய இதயதாமரை யிலுதித்த தேவாங்கமுனிவனைக் கிருபையுடனே பார்த்து, தகுதியில்லாத இராக்கதர் தவிர மற்ற யாவருக்கும் துகில்களைக் கொடுத்தனையோ வென்று கேட்க, செவ்விய உண்மைகெடாத தேவாங்கமுனிவன், அப்படியே கொடுத்தேன் ஐயனே! என்று சொல்ல, மறுபடியும் சிவபெருமான் கொடிய உலகப்பற்றை யொழித்த முனிவர்களுக்கும் தேவர்களுக்கும், மற்றும் யாவருக்கும் அவரவ ரிருப்பிடஞ் செல்லும்படி விடைகொடுத்தனர். எ-று. (உஉ)

அண்ணலருள் பெற்றயன்மா லமரர்பதி காந்தருவ
ராதி யாய
விண்ணர்மா முனிவர்தத்தந் தானமடைந் திருந்தனர்பின்
விறல்கூர் வாளு
மெண்ணரிய புகழிடபத் துவசமுங்கொண் டியர்ந்ததவ
மிசைதே வாங்கன்
வண்ணமணி மாளிகையா மோதநகர் தனைநோக்கி
வழிக்கொண் டானால்.

(இ-ள்.) பிரமதேவனும், திருமாலும், தேவராசனும், கந்தருவர் முதலாகிய தேவர்களும், பெரிய முனிவர்களும் சிவபெருமானுடைய கிருபையைப்பெற்றுத் தங்கள்தங்கள் இடம்போய்ச்சேர்ந்தார்கள். அதன்பின் உயர்ந்த தவத்தினையுடைய தேவாங்கமுனிவன் வலிமை மிகுந்த சுசந்திரகமென்னும் வாளாயுதமும், யாவராலுங் கருதப்படுகின்ற அரிய கீர்த்தியினையுடைய இடபக்கொடியும்பெற்று, அழகிய பல மணிகளாலாகிய மாளிகைகள் நிறைந்த ஆமோதநகரத்திற் செல்லக்கருதிப் பிரயாணப்பட்டான். எ-று. (உங)

அரன்விடைக் கொடிவா ளருளிய சருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் கங-க்கு பாடல் கஅஅ.

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை போற்றி துணை.

உ

சிவமயம்.

சுப்பிரமணியசகாயம்.

பதினொன்காவது

அரம்பைசாப மளித்தசருக்கம்.

கலிவிருத்தம்.

மாசறு சூதனை வணங்கி மாதவ
ரீசன தருள்சிறந் தெழுந்த தேவலன்
பூசுரர் பரவுதன் பதியு குந்தமை
பேசென வவனது பேசன் மேயினான்.

(இ-ள்.) பெரிய தவத்தையுடையமுனிவர்கள், குற்றமற்ற சூதபுராணிகனை நமஸ்கரித்து, சிவபெருமானுடைய கிருபையால் சிறப்படைந்து சென்ற தேவாங்கமுனிவன் பூதேவராகிய பிராமணர்கள் புகழ்கின்ற தன்னுடைய நகரமாகிய ஆமோதநகரை யடைந்த தன்மையைச் சொல்லுவீராகவென்று கேட்ட, அச்சூதமுனிவர் அதனைச் சொல்லத்தொடங்கினார். எ-று. (க)

இனிதொடு தேவல னேகு நன்னெறி
தனினுயர் கற்பகத் தருக்கு லம்புகழ்
பனிமலர்க் காவிலோர் பங்க யத்தடங்
கனிதிரு வருள்பொழி கண்ணுற் றானரோ.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் மகிழ்ச்சியுடனே போகின்ற நல்ல வழியிலே, உயர்ந்த கற்பகவிருட்சங்களென்று கண்டோர் புகழ்கின்ற குளிர்ந்த மலர்ச்சோலையிலே, ஒரு தாமரைத்தடாகத்தை அழகு மிகுந்த கிருபைபொழிகின்ற கண்களாற் பார்த்தான். எ-று. (உ)

கமலவா னனம்வளைக் களமென் சேல்விழி
குமுதவா யறற்குழல் குமிழி மாமுலை
தமரவால் சங்குவெண் டரள வாணகை
யமர்தலான் மாதர்நே ராய தத்தடம்.

(இ-ள்.) அத்தடாகமானது, தாமரையாகியமுகமும், சங்கமாகிய கண்டமும், மென்மைபொருந்திய சேலாகிய கண்களும், அல்லிமலராகிய வாயும், கருமணலாகியகூந்தலும், குமிழியாகிய பெரியமுலைகளும், ஒலிக்கின்ற வெள்ளிய சங்குகள் பெற்றமுத்துக்களாகிய பல் வரிசைகளும் பொருந்தியிருத்தலினாலே மாதர்களை யொத்திருந்தது. எ-று. (ங)

அடல்புனை தேவல னணைந்து ளானெனத்
தடமெனு மாதுபாற் சாற்றல் போலுமான்
மடலவிழ் பற்பல மலர்தொ றுந்தொறு
மிடைவிடா தளிக்குல மிசைத்த கீதமே.

(இ-ள்.) இதழ்கள் விரிந்த பற்பலவாகிய மலரிடங்களிலெல்லாம், நீங்காமல் வண்டுக்கூட்டங்கள் பாடிய இராகமானது, தடாகமென்கின்ற பெண்ணினிடத்திலே வெற்றியைப்பெற்ற தேவாங்கமுனிவன் (இவ்விடத்து) வந்தானென்று சொல்லுதலையொக்கும். எ - று. (ச)

திசைத்திசை மணங்கமழ் தென்றல் வந்துவந்
தசைத்திட வூசல்போன் றசைந்த கஞ்சமேற்
பசப்புறு சிறையனம் பரந்த சோலைவண்
டிசைத்தபண் விளரியா லினிது றங்குமால்.

(இ-ள்.) திசைகள்தோறும் வாசனை வீசுகின்ற தென்றற்காற்றானது பலமுறைவந்து அசைக்க, (அதனால்) ஊசலைப்போலசைந்த தாமரைமலரின் மேலே, பொன்மை நிறம்பொருந்திய சிறைகளையுடைய அன்னப்பறவைகளானவை, விசாலமாகிய சோலையிலுள்ள வண்டுகள் பாடிய விளரியென்னும் செய்தனிலப்பண்ணினாலே நன்றாக நித்திரைசெய்யும். எ - று. (ரு)

தோய்ந்திடு வாவியுட் டுய வாளைகள்
வாய்ந்திடு பூகமென் மடல்கி ழித்தெழூஉ
வேய்ந்திடு சூற்புயன் மீது நாடொறும்
பாய்ந்திழி துளியொடு படிந்து ழக்குமால்.

(இ-ள்.) சுத்தமாகிய வாளைமீன்களானவை, தாங்கள் தங்கியிருக்கின்ற தடாகத்திலிருந்து பொருந்திய பாக்குமரங்களின் மெல்லிய பூவிதழ்களைக் கிழித்துக்கொண்டு மேலே போய், (ஆகாசத்தை) மூடிய கருப்பங்கொண்ட மேகத்தின்மேலே பாய்ந்து, எப்பொழுதும் அம்மேகம் பொழிகின்ற மழைத்துளியுடனே பூமியில்வந்து கலக்கும். எ - று. (சு)

தணிவரு நறைகமழ் சலச மெங்கணும்
பணிலம தேறியுட் பரிந்து யிர்த்தவெண்
மணிகடங் கருவென மயங்கி நாடொறு
மணிசிறைக் குருகின மடைகி டக்குமால்.

(இ-ள்.) குறைவில்லாத மணம்வீசுகின்ற தாமரை மலர்கள்தோறும் சங்குகளானவை யேறி மனம்வருந்திப் பெற்ற வெள்ளிய முத்துகளை, அழகிய சிறைகளையுடைய நாரைப்பட்சிகள் தங்களுடையமுட்டைகளென்று மயங்கி எப்பொழுதும் அடைகிடக்கும். எ - று. (எ)

இத்தகை வளம்புனைந் திலங்கு வாவியை
மத்தகக் கடகரி மன்னர் தம்பிரான்
சித்தம தின்புறச் சேர்ந்து மற்றதிற்
சுத்தநன் னூல்வழித் தோய்வுற் றானரோ.

(இ-ள்.) இப்படிப்பட்ட வளம்பெற்றுப்பிரகாசிக்கின்ற தடாகத்தை, மத்தகத்தையும் மதத்தையுமுடைய யானைப்படைகளுள்ள அரசர்களுக்கரச னாகிய தேவாங்கமுனிவன் மனமகிழ்வடைந்து, அத்தடாகத்திற்போய்ச் சுத்த மாகிய நல்லநூல்களிற்கூறிய விதிப்படி மூழ்கினான். எ - று. (௮)

ஆடியம் மடுத்தடத் தனுகி யீசனைப்
பாடியன் புளங்கொடு பரவிப் போற்றியே
தேடிய விதியெலாஞ் செய்து தேவல
னீடிய பொழிலிடை நிற்கு மெல்லையில்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் அத்தடாகத்தில் சேர்ந்து ஸ்நானஞ்செய்து, சிவபெருமானைப்புகழ்ந்துபாடி, மனத்தில் அன்புபூண்டு தோத்திரஞ்செய்து நமஸ்கரித்து, (பெரியோரால்) ஆராயப்பட்ட வேதாகம முறைகளையெல்லாந் நியானித்துப் பெரிய சோலையினிடத்து நிற்குஞ்சமையத்தில். எ - று. (௯)

கரும்புய லினங்களைக் கடிந்து பண்பகர்
சுரும்பினைச் சிறைப்படுத் திருண்டு சூழ்ந்தகி
றரும்புகை கமழ்ந்துபூந் தகர நீவிவார்ந்
தரும்பணி புனைந்தநெய் யளக மின்னவே.

(இ-ள்.) கரியமேகங்களைக் கோபித்து, இசையைப்பாடுகின்ற வண்டுகளைச் சிறைசெய்து, இருண்டு அகிற்புகைசூழ்ந்து மணம்வீசிப் பொலிவுள்ள மயிர்ச்சாந்து பூசி, நீண்டு அருமையாகிய ஆபரணங்களை யணியப்பட்ட தயிலம்பூசிய கூந்தலானது பிரகாசிக்கவும். எ - று. (௰)

திங்களங் குழவிவா னொளிப்பச் செங்கதிர்
தங்கிய சிந்தூரந் தரித்த பாலமு
மங்கசன் குனித்தவில் லாமெ னும்படிப்
பொங்கிய நுதல்களும் பொலிவு காட்டவே.

(இ-ள்.) பிறைச்சந்திரன் ஆகாசத்தில் (தோற்று) மறையும்படிச்செவ்வியகிரணம் பொருந்திய திலக மெழுதிய நெற்றியும், மன்மதன்வளைத்த வில்லாகு மென்று கண்டோர்சொல்லும்படி, அழகுமிகுந்த புருவங்களும் பிரகாசத்தைச் செய்யவும் எ - று. (௧௧)

கூற்றினுக் குங்கொடுங் கொலைப யிற்றிவேல்
போற்றிடக் கயல்களைப் புறந்த ரச்சினந்

தாற்றிய தவத்தினோ ரறிவு ஞானமு
மாற்றிய வஞ்சனை வரிக்கண் காட்டியே.

(இ-ள்.) யமதருமராஜனுக்குங் கொடிய கொலைத்தொழிலைக் கற்பித்து, வேலாயுதம் வணங்கக் கெண்டைமீன்களைத் தோற்றோடும்படிக் கோபித்து, (யாகமுதலிய) செய்ததவத்தினோருடைய புத்தியும் ஞானமும் நீக்கிய கபடத்தையுடைய இரேகைபொருந்திய கண்களைக்காட்டி. எ - று. (கஉ)

திருத்தகு குமிழெனச் சிறந்து நெஞ்சினை
யுருக்கிய நாசிகை யொளிர யோகர்தங்
கருத்திருந் தாடிய கனக வூசல்போற்
குருத்தழை கலனிடு குழைகு லுங்கவே.

(இ-ள்.) அழகும் மேன்மையுமுள்ள குமிழமலர்போலச் சிறப்புற்று, கண்டோருடைய மனத்தை யுருகச்செய்த நாசியானது பிரகாசிக்கவும், முனிவருடைய மனமானது தங்கியிருந்து ஆடிய பொன்னூசல்போல நிறமிக்க ஆபரணமணிந்த காதுகளசையவும். எ - று. (கங)

சித்தச னயனவா டீட்டு சாணையை
யொத்தொளிர் கபோலமு முசித விம்பநே
ரத்தகு மதாமு மார்ந்த கோவைவெண்
முத்தணி முறுவலு முன்னர்த் தோன்றவே.

(இ-ள்.) மன்மதனுடைய கண்களாகிய வாள்களைத் தீட்டுகின்ற சாணைக்கல்லையொத்து விளங்குகின்ற கபோலமும், தகுதியாகிய கொவ்வைக்கனியையொத்த அந்தமேன்மையாகிய இதழ்களும், வெண்மைபொருந்திய முத்துக்கோவைபோன்ற அழகிய பல்வரிசைகளும் முன்விளங்கவும். எ - று. (கச)

முழுமதி தொழுதிரு முகமும் வாரணச்
செழுமணி மிடறுநீ டிகிரித் தோள்களு
மெழுமிசை மகரயா ழிகலு முன்கையுங்
கொழுநறுந் தளிருளங் கையுங்கு லாவவே.

(இ-ள்.) பூரணசந்திரன் வணங்குகின்ற அழகிய முகமும், சங்கினையொத்த செழித்த அழகிய கண்டமும், நீண்ட மூங்கிலையொத்த தோள்களும், இராகமெழுகின்ற மகரயாழைக் கோபிக்கும் முன்கைகளும், கொழுமையாகிய நல்ல தளிர்போலும் உள்ளங்கைகளும் பொருந்தவும். எ - று.

மகரயாழ்என்பது நால்வகையாழ்களிலொன்று; அது மகரமீன்போலும் வடிவுள்ளது. நால்வகையாழாவன, — பேரியாழ் - மகரயாழ் - சகோடயாழ் - செங்கோட்டியாழ் என்பனவாம். (கரு)

செங்கிற [illegible] துகிலினுந் திரண்டு தெள்ளமு
தின் [illegible] சைத் திவவியா ழினிது நீவிய

மன்னிய விரல்களும் வன்னி நாசிகை
தன்னிலு மிலங்குகிர் தாமுந் தோன்றவே.

(இ-ள்.) செம்மைநிறமுள்ள பவளத்தைப்பார்க்கிலுந் திரட்சியுடைய தாகித் தெளிந்த அமுதம்போலப் புண்ணைச்செய்கின்ற வலிக்கட்டையுடைய வீணையை நன்றாகத் தடவியுள்ள நிலைபெற்ற விரல்களும், பசுங்கிளிகளின் மூக்கினலகிலும் அழகுடையனவாகிவிளங்குகின்ற நகங்களும் வெளிப்படவும்.

மருப்பெனக் குவிந்துவண் மகுடம் போன்மினிப்
பொருப்பென வளர்ந்துகச் சடர்ந்து பூண்பொலிந்
துருக்கிளர் சுணங்குபூத் திடையொ சிந்திடப்
பருத்தெழு கனதன பார மோங்கவே.

(இ-ள்) யானையின் கொம்புபோலத்திரண்டு, வெள்ளிய முடிபோல விளங்கி, மலைபோலவளர்ந்து, இரவுக்கையிடப்பட்டு, ஆப்ரணங்களாற் பிர காசித்து, அழகு விளங்குகின்ற தேமல்படர்ந்து, இடைமுறியும்படிப் பருத் தெழுகின்ற அடிபரந்த முலைகளானவை உயர்ச்சியடையவும். எ - று.

வண்மகுடம் எனவும் பாடம். இதற்கு வளப்பம் எனப்பொருள் கொள்க. (கஎ)

வடவிளந் தளிரொன வயங்கு பண்டியு
மடருநீர்ச் சுழிநிக ராய வுந்தியுந்
தடநெடுங் கடற்றிரை தரும டிப்புநேர்
படரெறும் பொழுக்கெனு முரோம பந்தியும்.

(இ-ள்.) ஆலமரத்தின்இளந்தளிர்போல விளங்குகின்ற வயிறும், நெரு ங்கிய நீர்க்குமிழியை[illegible]பாகிய உந்திக்கமலமும், விசாலமும் நீட்சியுமுள்ள சமுத்திர அலையையொத்த மடிப்பும், [illegible]ரோசெல்கின்ற எறும்புகளின் ஒழுங்கெ ன்று சொல்லப்பட்ட உரோமவரிசையும். எ - று. (கஅ)

நூலினு நுடங்கிய நுண்ம ருங்குலும்
பாலினி மதுச்சுனை பணிநி தம்பமும்
வாலிய தளிர்பனி வாழை போலெழில்
சாலிணை வாமமு மினிது தாங்கியே.

(இ-ள்.) நூலைப்பார்க்கினும் நுண்மையுடைய துவளுகின்ற இடை யும், பால்போலவும் இனிமையாகிய தேன்குளம்போலவும் பாம்பின்படத்தை யொத்த அல்குலும், வெள்ளியதளிரையுடைய குளிர்ந்த வாழைத்தண்டுபோ ன்று அழகுமிகுந்த இரண்டுதுடைகளும் நன்றுதாங்கிக்கொண்டு. எ - று.

கிளையுடை யலவனைச் சினந்த சானுவும்
வளைமதன் றூணியை மருட்டு சங்கமும்

புனைமணிப் பந்துநேர் குதியும் பொன்பகர்
வினையினர் துலைபுரை பரடு மின்னவே.

(இ-ள்.) கருப்பத்தையுடைய நண்டைக் கோபித்த முழங்கால்களும், கட்டப்பட்ட மன்மதனுடைய அம்புப்பெட்டியை அஞ்சச்செய்கின்ற கணைக்கால்களும், அலங்காரமாகச் செய்யப்பட்ட மணிப்பந்தைபொத்த குதிகால்களும், பொன்விற்கின்ற தொழிலையுடைய வணிகரது தராசுத்தட்டையொத்த காற்பரடுகளும் விளங்கவும். எ-று. (உ0)

வன்னவின் மதனநூல் வரைந்த புத்தக
மன்னமெல் லியபுற வடியுங் காஞ்சினி
மின்னவி ரங்குர விரலும் வெண்மணி
யின்னக வரிசையு மினிது தோன்றவே.

(இ-ள்.) நிறத்தினையுடைய வில்லைத் தாங்கிய மன்மதனது கொக்கோகநூலை யெழுதிய புத்தகம்போன்ற மெல்லியபுறவடிகளும், மஞ்சிட்டியின் மலரும், மின்னலும்போல விளங்குகின்ற முளைபோன்ற விரல்களும், வெண்மையாகிய முத்துப்போலும் நகங்களின் வரிசைகளும் நன்றாகப் பிரகாசிக்கவும். எ-று. (உக)

அனிச்சமென் மலரித ழமைத்த பூவணை
தனிற்சிறு பஞ்சுமெத் தையின டப்பினும்
பனிப்பொடு வருந்திமென் பதுமம் போலொளிர்
புனிற்றுளர் தாளிணை பொலிந்து தோன்றவே.

(இ-ள்.) அனிச்சம்பூவின் இதழ்களைக்கொண்டு செய்யப்பட்ட பூவணையின்மேலும், சிறியபஞ்சுமெத்தையின்மேலும் நடந்தாலும் நடுக்கத்துடனே வருந்தி மெல்லிய தாமரைமலர்போல் விளங்குகின்ற இளமையாகிய வுள்ளங்கால்களும் பிரகாசித்து விளங்கவும். எ-று. (உஉ)

சுரும்பிமிர் குழலணி சுடிகை தோடுசீர்
தரும்பல மேகலை தரள மாலிகை
விரும்பிய வளைதொடி வீகம் பட்டிகை
வரும்பரி புரஞ்சிறு மணிவ யங்கவே.

(இ-ள்.) வண்டுகளொலிக்கின்ற கூந்தலில் அணியப்பட்ட நெற்றிச்சுட்டியும், காதணியும், சிறப்பைத்தருகின்ற பலவகையாகிய மேகலாபரணங்களும், முத்துமாலைகளும், யாவராலும் விரும்பப்பட்ட கங்கணங்களும், வளைகளும், மோதிரங்களும், அரைஞாணும், அணியப்பட்டுவருகின்ற சிலம்புகளும், சிறியபாதசாலரும் விளங்கவும். எ-று. (உங)

வெயில்விரி மணியணி வேய்ந்த மேனியிற்
பயில்செழுங் களபவான் பரிமளங்களு

மயில்வளர் கற்பகத் தலர்செ றிந்தளி
துயிலணி மணமுமோர் காதஞ் சூழவே.

(இ-ள்.) ஒளியைப்பரவச்செய்கின்ற இரத்தினுபரணங்களை யணிந்த வுடம்பிலே சேர்ந்த செழிய கலவைச்சாந்தி லுண்டாகிய திருந்தவாசனைக ளும், வண்டுகள் முழங்குகின்ற அழகு நிறைந்த கற்பகப் பூமாலையின் அழகிய வாசனையும் ஒருங்கு தவழ்தாரஞ் சுற்றவும். எ - று. (உச)

பன்மணிக் கோவைசூழ் பசும்பொற் காழக
மின்மிகத் திசைதொறும் வீசப் பூங்கணை
மன்மதற் குடைவுறு மாத வத்தினோர்
கன்மனத் துறுதியுங் கலங்கிச் சோரவே.

(இ-ள்.) பலவாகிய மணிகளிழைத்த மேகலாபரணங்கள் சூழ்ந்த பசிய பொன்னுடையானது திசைகளிலெல்லாம் பிரகாசத்தை மிகுதியாக வீசவும், மலரம்புகளையுடைய மன்மதனுக்குத்தோலாத பெரிய தவத்தையுடைய முனி வர்களது கற்போன்ற மனத்திண்மையுங் கலங்கிச் சோர்வடையவும். எ-று.

அன்னமோ மின்னலோ வமுத மோவலாற்
சொன்னமோ மலர்ச்செழுந் தோகை யோமதன்
வன்னமோ விரதியோ வரன்ம யங்கிய
முன்னமோ கினிகொலோ முயங்கு கிள்ளையோ.

(இ-ள்.) அன்னப்பறவையோ! மின்னலோ! அமிர்தமோ! இவை யல்லாமல், பொன்னே! தாமரைமலரில் வசிக்கின்ற செழுமையுள்ள மயில் போன்ற திருமகளோ! மன்மதனெழுதிய சித்திரமோ! இரதிதேவியோ! பரமசிவன் முற்காலத்தில் மயக்கங்கொண்ட மோகினியோ! முயங்குகின்ற கிளியோ!. எ - று.

அடிபெயர்த்தலைநோக்கி அன்னமோவெனவும், ஒளியைநோக்கி மின் னலோவெனவும், மிக்க இனிமைபயத்தலால் அமுதமோவெனவும், நிறத்தினுற் சொன்னமோவெனவும், பேரழகுடைமையான் மலர்ச்செழுந்தோகையோ வெனவும், கேசாதிபாதம்வரையும் சாமுத்திரிகவிலக்கணம் நன்று பெற்றிருத் தலால் மதன்வன்னமோவெனவும், தெய்வத்தன்மையுடைமையால் இரதியோ வெனவும், கண்டோர்யாவரும் மையலொழியாமையால் மோகினியோ வெனவும், இனிய மொழியினுலே கிள்ளையோவெனவுங் கூறினர். (உசு)

தோகையோ குயில்கொலோ சுடர தோவென
வாகையோ கேசரு மகிம யங்குற
வீகையோ வெழிலியோ வெனும்பி ரான்முன
மோகையோ டரம்பைமா லுறவந் தாளரோ.

(இ-ள்.) மயிலோ! குயிலோ! விளக்கோ! என்று கண்டோர்சொல்ல, ஆசையைவென்ற ஞானிகளும் அறிவுகலங்கும்படி, கற்பகத்தருவோ! மேக

மோ! என்று யாருஞ் சொல்லப்பட்ட தேவாங்கமுனிவனுக்கு முன்னே, அரம்பையானவள் விருப்புடனே காமவிகாரம் பெருகவந்தாள். எ - று.

சாயலால் தோகையோவெனவும், மொழியினாலே குயிலோவெனவும், விளக்கத்தால் சுடரோவெனவும் கூறினர். மாறுற வென்பதற்குக் கண்டோர் மாறுற வென்னினும் அம். (உஎ)

முரண்டகு கயிலையின் முன்க ணுற்றநால்
வரம்பறு கடலென மையன் மீறிவேள்
சரம்பட மனமதி தளர்ந்து வந்தவவ்
வரம்பைதே வாங்கன தருகின் மேவியே.

(இ-ள்.) வலிமையுந் தகுதியுமுள்ள கயிலாசமலையிலே முன்னே பார்த்தபடியினாலே, கரையில்லாத சமுத்திரம்போல மோகமிகுந்து, மன்மதனுடைய பாணங்கள் வந்து தாக்குதலாலே மனவறிவு தளர்ந்து வந்த அவ்வரம்பையானவள், தேவாங்கமுனிவனுடைய சமீபத்தில் வந்து. எ - று. (உஅ)

நலத்தகு நாணொடு நயனப் பார்வைபூ
தலத்துற வளர்மயல் சகிக்க லாமையான்
மலைக்குல மெனும்படி வயங்கு வாகையஞ்
சிலைப்புயன் செவிபொருச் சிலசொற் கூறுவாள்.

(இ-ள்.) நல்ல தகுதியாகிய வெட்கத்துடனே, கண்களின் பார்வை பூமியிற்படும்படி, பெருகுகின்ற மோகமானது சகிக்கக்கூடாமையால், அரம்பையானவள் இரண்டு மலையென்னும்படி விளங்குகின்ற வெற்றியையுடைய வில்லைத்தாங்கிய அழகிய இரண்டு புயங்களையுடைய தேவாங்கமுனிவனிடம் வந்து, செவிகள் கேட்கச் சகிக்கமுடியாத சில கொடுஞ்சொற்களைச் சொல்லத் தொடங்கினாள். எ - று. (உகூ)

காவல கேட்டிமுன் கயிலை மால்வரை
மேவவை தனிலியா னடஞ்செய் வேலையிற்
றேவரும் புகழுநின் சீர்கண் டன்றுதொட்
டாவலி னிடர்க்கட லழுந்தி னேனரோ.

(இ-ள்.) அரசனே! நீ கேட்பாயாக, முன்னமே பெரிய கயிலாசமலையிலே சிவபெருமான் முதலாகிய தேவர்கள் எழுந்தருளியிருந்த திருவோலக்கத்திலே நான் திருத்தஞ்செய்த சமையத்தில், தேவர்களும் புகழுகின்ற உன்னுடைய அழகைப்பார்த்து அன்று முதலாக உன்னிடத்துண்டாகிய விருப்பத்தினால் துன்பக்கடலிலே யழுந்தினேனென்று பின்னுஞ்சொல்லுவாள்.

கலையிடை தளர்ந்திடக் காம வேள்கணை
முலைமிசைப் படவவை முதிர்ப சுங்கன
மலையென வளர்ந்தணி வார்கி ழித்ததா
லலைகடற் றுரும்புபோ னழுங்கி னேனரோ.

(இ-ள்.) ஆடையானது இடையினின்றும் அவிழ்ந்துவிழாநிற்க, மன்மதனுடைய மலரம்புகள் முலையின்மேலே வந்துதைத்தலாலே அம்முலைகளானவை தேமல்மிகுந்த பசுமையுள்ள பெரிய மலையென்னும்படி வளர்ந்து, அணிந்த கச்சைக் கிழித்தன; அதனாலே அலைகளையுடைய சமுத்திரத்திலகப்பட்ட துரும்பை யொத்து மனமேல்லாமல் வருந்தினேனென்று பின்னுஞ் சொல்லுவாள். எ - று. (ருக)

பட்டன மதன்கணை பனிம லர்க்கரம்
விட்டன வளைதொடி மெய்யிற் சந்தனஞ்
சுட்டன வென்மனஞ் சூழ்ந்த நாணெலாங்
கெட்டன நின்மயல் கிளர்ந்த தாலரோ.

(இ-ள்.) உன்னிடத்திலுண்டாகிய மோகமானது பெருகினபடியினாலே மன்மதனுடைய மலரம்புகள் (முலைகளின்மேலே) தைத்தன; கங்கணங்களும், வளைகளும் குளிர்ச்சிபொருந்திய மலர்போன்ற கைகளினின்றும் நீங்கின; உடம்பிற்பூசப்பட்ட சந்தனம் நெருப்புப்போலச்சுட்டன; என்னுடைய மனத்தைச் சூழ்ந்திருந்த வெட்கமெல்லாங் கெட்டொழிந்தனவென்று பின்னுஞ் சொல்லுவாள். எ - று. (ருஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இனியெனது மயல்சிறிதா யினுஞ்சகியா தாதலினு
லிப்பூங் காவிற்
பனிமலர்மென் பரப்பினிடைப் பவளவிதழ் சுவைத்தமுத
பானந் தேக்கிக்
குனிசிலைமன் மதனைப்போற் கொஞ்சியுன்மார் பினிற்களபக்
கொங்கை தாக்கக்
கனிவுபெறு கலவிநன்னூற் படிமுயங்க வீதேற்ற
கால மன்னே.

(இ-ள்.) என்னுடைய மோகமானது கொஞ்சமாயினும் இனிமேல் பொறுக்க முடியாது; ஆதலால், இந்த மலர்ச்சோலையில் குளிர்ச்சியுள்ள மலர்கள் பரப்பிய மென்மையாகிய சப்பிரமஞ்சத்தின்மேல் பவளம்போலும் இதழைச் சுவைத்து அமுதபானஞ்செய்து நிறைந்து, வளைந்த கரும்புவில்லையுடைய மன்மதனைப்போலச் செல்வமாகப்பேசி, உன்னுடைய மார்பினிடத்துக் கலவைச் சாந்தையணிந்த எனது முலைகளழுந்தும்படி இன்பம்பொருந்திய புணர்ச்சியை நல்ல காமசாஸ்திரத்திற் கூறிய விதிப்படி நாமிருவருங் கூடியனுபவிக்க இதுவே தக்ககாலமென்று பின்னுஞ்சொல்லுவாள். எ - று. (ருரு)

சமயமிது தயவுபுரி தாமதங்கூ டாதுமைய
ருழா தென்னச்
சிமயவரை யனையதிண்டோட் டேவலவேந் தனுங்கலங்கிச்
சிவசி வாவென்

றமையுமிரு செவிபுதைத்து கிருவிடயா னந்தசுக
வறிவின் பண்பா
லிமையவர்மார் புறமுயங்கு மரம்பைமலர் முகநோக்கி
யிசைப்ப தானான்.

(இ-ள்.) இது நல்லகாலம்; தயவுசெய்யவேண்டும்; இனித் தாமசஞ் செய்யக்கூடாது; நான் கொண்ட காமவிகாரமானது குறையாது என்று தேவரம்பையானவள் சொல்லாநிற்க, (அவ்வார்த்தைகளைக் கேட்டு) சிகரங்கள்பொருந்திய மலையையொத்த வலிய தோள்களையுடைய தேவாங்கமுனிவனாகிய அரசன் மனங்கலங்கிச் சிவசிவா வென்றுசொல்லிப் பொருந்திய இரண்டு காதுகளையும் மூடிக்கொண்டு, உலகப்பற்று நீங்கிய ஆனந்த வின்பவறிவுடைமையாகிய பெருங்குணத்தினாலே, தேவர்களுடைய மார்பைப் பொருந்த அனுபவிக்கும் அரம்பையினது மலர்போன்ற முகத்தைப் பார்த்துச் சொல்லத்தொடங்கினான். எ - று.

சிவசிவா என்னும் அடுக்கு அச்சப்பொருணிலை. (ருச)

வேறு.

அணங்கு கேட்டி யென்போல்வார்க் கமையா தென்று மவ்வினைக
ளிணங்கு காம முயக்கவிருப் பில்லேன் சிறிது மினியவறந்
தணந்த நீதா னெனைப்பிரம சாரி யெனவிங் கறிந்திலையோ
மணந்த மகவான் முதலிமையோர் தம்பாற் புரிநின் மனப்படியே.

(இ-ள்.) அரம்பையே! கேட்பாயாக, (நீ சொல்லிய) அந்தக் காமவனுபவமாகிய செய்கைகள் என்போன்றவர்களுக்கு எக்காலமும் பொருந்தாது; நான் பொருந்திய காமவிருப்பம் சற்று மில்லாதவன்; நல்ல தருமநூல் விதியை நீக்கிய நீ என்னைப் பிரமசரியவாச்சிரமத்தானென்று தெரிந்தாயில்லையோ? உன்னை விரும்பிய இந்திரன்முதலிய தேவர்களிடத்தில் உன் மனம்போலக் காமவிருப்பத்தை முடித்துக்கொள்ளக்கடவை யென்று பின்னுஞ் சொல்லுவான். எ - று. (ருரு)

கருந்தார்க் குழலா யுணர்ந்தவர்க்குக் கணிகை மடவார் கலவிநலம்
பொருந்தா தொருபோ தேனுமது பொருந்திற் புகழும் புண்ணியமும்
வருந்தா மதியு மனவலியும் வாழுங் குணமு மாதவமுந்
திருந்தா தொழிவ தன்றியென்றுந் தீராப் பவநோய் செறிந்திடுமால்.

(இ-ள்.) பூமாலையையணிந்த கருமையான கூந்தலையுடைய அரம்பையே! நீ கேட்பாயாக, நூல்களை ஆராய்ந்து தெளிந்தவர்களுக்கு வேசியருடைய போகவின்பமானது எப்பொழுதும் பொருந்தாது; (ஒருவேளை தவறி) அக்காமநுகர்ச்சியுண்டானால், கீர்த்தியும், புண்ணியமும், துன்புறாத புத்தியும், மனவுறுதியும், மேன்மையும், குணமும், பெரிய தவமும் முடியாமல் கெடுவதேயன்றி, எப்பொழுதும் தீராத பாவமும் வியாதியும் வந்துசேரும் என்று பின்னுஞ் சொல்லுவான். எ-று.

பவரோய் - பிறவிநோய் எனினுமாம். வரமும் - இதற்குப் பெரியோர் ஆசீர்வாதமும் எனினும் ஆம். (௯௬)

போதி போதி யெனலுமந்தப் பொன்னாட் டுறையும் புகழ்வனிதை
நீதி யோய்பற் பலமகநன் னெறியான் முடித்த வறிவினர்க்கே
கோதி லாவென் போகவின்பங் கூடும் பிறர்க்குக் கூடாதென்
றோதி நூல்க ளனைத்துமெடுத் தடைவே பகர்வ தறியாயோ.

(இ-ள்.) ஆதலினாலே நீ போகக்கடவை போகக்கடவை யென்று தேவாங்கமுனிவன் சொன்னவுடனே, சுவர்க்கலோகத்தில் வசிக்கின்ற அந்தக் கீர்த்தியினையுடைய அரம்பையானவள் மநுநீதியையுணர்ந்த தேவாங்க முனிவனே! பலபலவாகிய யாகங்களை வேதங்களிற் கூறிய முறைப்படி செய்துமுடித்த அறிவுடையவர்களுக்கே என்னுடைய குற்றமில்லாத போக வின்பம் பொருந்துமேயன்றி மற்றவர்களுக்குப் பொருந்தாதென்று, பிரதான மாகிய சாஸ்திரங்கள்யாவும் பலவாக முறையே சொல்லுவதை நீயறிந்ததில்லை யோ வென்று பின்னுஞ் சொல்லுவாள். எ - று. (௯௭)

மற்ற மடவார் போலெனையு மதித்துள் வெறுக்கும் வகைமுறையோ
கற்ற வறத்தின் மிக்கவரே கனிவோ டெனது கலவிதுய்ப்பா
ரற்ற சுகிர்தத் தவர்கடுய்யா ரவையெலாநீ யறிந்திருந்துங்
குற்ற மிதனா லடையுமெனக் கூறுந் திறமென் குணமேலோய்.

(இ-ள்.) மேன்மைக்குணத்தை யுடைய தேவங்கமுனிவனே! மற்றப் பெண்களைப்போல என்னையும் நினைத்து மனதில் வெறுக்கும்விதம் முறைமையோ! நூல்களைக் கற்ற மிக்க தருமவான்களே விருப்புடன் என்னுடைய போகத்தை யனுபவிப்பார்கள்; அதிர்ஷ்டமில்லாதவர்கள் எனது போகத்தை யனுபவியார்கள்; அவ்விஷயங்களெல்லாம் நீ தெரிந்திருந்தும் என்னை அனுப விக்கும் இச்செய்கையால் குற்றமுண்டாமென்று சொல்லுந் தன்மை யாதெ ன்று பின்னுஞ் சொல்லுவாள். எ - று. (௯௮)

துஞ்சு ருவத் திரிமுதலாந் துறவோர் களுமென் சுகம்வேட்டு
மிஞ்சு மோனத் தொடுதவத்தை விடுத்தா ரன்றி மேவினனோ
மஞ்சு நேருங் கரத்தோய்நீ மட்டு பிணங்கு வகையாதுன்
னெஞ்சு தான்வல் லிரும்புருவோ நெடுங்கண் சிலையோ நெகிழாதோ.

(இ-ள்.) ஈகையினாலே மேகத்தையொத்த கைகளையுடைய தேவாங்க முனிவனே! அழிதலில்லாத அத்திரிமாமுனிவர் முதலாகிய துறவியர்களும் என்னுடைய போகத்தை விரும்பி மேலாகிய ஞானத்துடனே தவத்தையும் விட்டார்களே யல்லாமல், நான் அம்முனிவர்களைக் கூடினேனோ! [சேர வில்லை;] அவ்வாறிருக்க, நான் வலுவிலே வந்தும் (என்னுடன் கூட) நீமாத்தி ரஞ் சம்மதியாதவகை யென்ன? உன்னுடைய மனமானது வலிய இரும்

போ! பெரிய வலிய கல்லோ! கனியாதோ! என்று பின்னுஞ் சொல்லு வாள். எ - று. (நகூ)

நளகூ பரன்சித் தசன்சயந்த னலங்கூர் வசந்த னால்வர்களும்
வளமா முருவ முடையோரிற் சிறந்தா ரென்ப மற்றவர்த
மிளமே னியின்பொற் பனைத்துமுன திலங்கு மெழிற்கீ ரொட்டினிலோ
ரளவா மதனா லெனதுமனத் தடங்கா மயல்கொண் டலைந்தேனால்.

(இ-ள்.) தேவாங்கமுனிவனே! நளகூபரனும் மன்மதனும் சயந்த னும் நன்மையிருந்த வசந்தனும் ஆகிய இந்நால்வர்களும், வளப்பமாகிய அழகினையுடையவர்களுக்குள்ளே சிறந்தவர்களென்று பெரியோர்கள் சொல்லு வார்கள்; அவர்களுடைய இளமையாகிய உடம்பினழகெல்லாம் உன்னுடைய பிரகாசிக்கின்ற அழகினுக்குப் பதினாறி லோர் பங்காகும்; ஆதலாலே நான் மனத்திலடங்காத மோகங்கொண்டு வருந்தினேனென்று பின்னுஞ் சொல்லு வாள். எ - று.

நளகூபரன் - சித்தசன் - சயந்தன் இவர்கள் முறையே - குபேரன் - திருமால் - இந்திரன் - இவர்கள் புதல்வர்கள். வசந்தன் - வசந்தருதுவின் அதி தேவதை. (சுo)

எவ்வா றுரைத்த போதினுஞ்சற் றெனினு மிரக்க மில்லையந்தோ
வெவ்வாய் வேலோ யெனதுமொழி வீணே பழுதாய் விடுதனன்றே
வவ்வா நின்ற தறிவுமுற்று மதன சரங்க ளாதலினுன்
செவ்வா யமுத மருந்தினன்றிச் சிறிதும் விரகந் தீராதே.

(இ-ள்.) வெம்மைபொருந்திய வேலாயுதத்தையுடைய தேவாங்கமுனி வனே! நான் எவ்விதமாகச் சொன்ன போதிலும் சிறிதாயினும் மனவிரக்கமுனக்கில்லை; ஐயோ! என்னுடைய சொல் வீணாகப் பழுதாகுதல் நலமோ! மன் மதனுடைய புட்பபாணங்கள் என்னுடைய அறிவுமுழுமையும் அபகரியா நின்றது ஆதலினாலே, உன்னுடைய சிவந்த வாயமுதமுண்டா லல்லாமல், சற்றுமினும் மோகமடங்காதென்று அரம்பையானவள் பின்னுஞ் சொல்லு வாள். எ - று. (சுக)

வாச மருவு மலர்முடித்து மதுரக் கனிவாய் மதுவருந்திக்
காசு குலவு களபமுலை யையா னெருடிக் களிகூர்ந்து
கேச மதன கரணவகை யெல்லாம் புரிந்து நெடிதாமென்
னாசை முழுது நிறைவேற வன்புற் றெனைச்சேர்ந் தருளென்றாள்.

(இ-ள்.) தேவாங்கமுனிவனே! மணம்பொருந்திய மலர்களை என்னுடைய கூந்தலில் முடித்து, மதுரம்பொருந்திய கனிபோன்ற வாயினிடத்துத்தேனை யுண்டு, இரத்தினாபரணங்களையணிந்த கலவைச்சாந்தணிந்த முலைகளை உனது

கைகளாலே தடவிப்பிடித்து, களிப்பு மிகுந்து, அன்புடனே மதனநூலிற் கூறிய வகையின் முறையே போகங்களை நுகர்ந்து, பெரிதாகிய என்னுசை யெல்லாம் முடியும்படி விருப்புடனே யென்னைக் கூடியருளுவாயென்று அரம்பையானவள் சொன்னாள். எ-று. (சஉ)

ஒருக்கான் முன்ன ரேமொழிந்த வுரைபோ தாதோ வதனையுனக்
கிருக்கான் மொழிய வேண்டுவதென் னெனவேக் திணங்கா திசைத்
மருக்கா ரோதி துயருழந்து மனத்திற் சினந்து வாய்புலர்ந்து[தனளம்
தருக்கார் குருதி வேற்குரிசி றனைப்பார்த் தினைய சாற்றினளால்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன், நான் முன்னமே உனக்கு சொன்ன சொல் அமையாதோ! அச்சொல்லையே யின்னுஞ் சொல்லவேண்டுவதென்ன வென்று மனம் பொருந்தாமற்சொன்னான். (இவ்வார்த்தைகளைக்கேட்டு) அந்த வாசனைபொருந்திய கருமையாகிய கூந்தலையுடைய அரம்பையானவள் துன்ப மடைந்து, மனத்திற்கோபங்கொண்டு, வாயிலுள்ள நீர் வற்றி, கதிரையுடைய இரத்தந்தோய்ந்த வேலையேந்திய தேவாங்கமுனிவனைப்பார்த்து, இவ்வகையாகிய சொல்லைச்சொல்லுவாள். எ-று.

ஒருகால் இருகால் என்பது - ஒருக்கால் இருக்கால் என எதுகை நோக்கிக் ககரமெய்கள் மிகுந்தன. கோபத்தினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சாற்றினள் என வந்தது. ஆல் அசை. (சங)

பாவி நீயென் மொழிக்கிணங்காப் பரிசா லுனது பகைவர்கையா
லாவி வருந்த வுழந்துகட்டுண் டமரென் றுரைத்தங் கரம்பைசென்[ள்
காவி லரச னொருகணப்போ தெண்ணிக் கடவுள் கருணையென
மேவி மதிதேர்ந் தினிதேகி விரைந்தா மோத புரஞ்சார்ந்தான்.

(இ-ள்.) அரம்பையானவள், அவ்விடத்துத் (தேவாங்கமுனிவனைப் பார்த்து) பாவியே! நீ யென் வார்த்தைக்குப் பொருந்தாத தன்மையினாலே, உன்னுடைய பகைவரிடத்தகப்பட்டு, அவர்கள் கையா லுயிர் வருந்தும்படி துன்பமடைந்து கட்டுப்பட்டிருப்பாயாகவென்று சொல்லி விண்ணுலகஞ் சென்றாள். தேவாங்கமுனிவன் அச்சோலையிலிருந்து ஒருகணப்பொழுது சிந்தித்துச் சிவபெருமானுடைய கிருபையென்று நினைத்து எழுந்து அறிவுதெளிந்தவன்றாகச்சென்று விரைவாக ஆமோதநகரையடைந்தான். எ-று. (சச)

அரம்பைசாப மளித்தசருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் கச க்கு பாடல் சநஉ.

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை கழலடி. துணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைகாயம்.

பதினைந்தாவது

தேவதத்தையைமணஞ் செய்த சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தனிப்பொரு ளுணர்ந்த சூதன் றனையெதிர் தொழுது போற்றிப்
பனிப்பகலாத செம்மைப் பவக்கடல் கடந்த மேலோர்
கனப்பணி புனைந்த வாங்கன் கடிமணப் பெருமை யெல்லா
மினிப்பகர்ந் தருள வேண்டு மெனவவ ணிசைப்ப தானுன்.

(இ-ள்.) நடுக்கம்நீங்காத பிறவியாகிய பாவசமுத்திரத்தைத்தாண்டிய முனிவர்கள், ஒப்பில்லாத பிரமத்தையுணர்ந்த சூதமுனிவரை யெதிரேகின்று நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்து, நிறைவாகிய ஆபரணங்களை யணிந்த தேவாங்கமுனிவன் விவாகஞ்செய்த சிறப்பையெல்லாம் இனிச் சொல்லக்கடவீராகவென்று கேட்க, அச்சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர். எ-று.

புனிததே வலனு மோத புரத்தடைந் திருந்த பின்னர்த்
தனிதமா முகில்கு லாவு தடமுடிக் கயிலை வாழும்
வனிதையோர் பாக னுள்ள மகிழ்ச்சிறந் தாதி ஞான
முனிவரோ ரெழுவர் தம்மை முன்னினன் சிறிது பின்னே.

(இ-ள்.) பரிசுத்தத்தையுடைய தேவாங்கமுனிவன் ஆமோதகநகரைச் சேர்ந்திருந்தபின்னே, இடிமுழக்கத்தையுடைய பெருமையுள்ள மேகங்கள் தவழ்கின்ற விசாலமாகிய சிகரங்கள்பொருந்திய கயிலாசமலையி லெழுந்தருளியிருக்கின்ற உமாதேவியை ஒருபாகத்தில்வைத்தருளிய சிவபெருமான் மனமகிழ்ச்சியுடனே, ஆதிதன்மையாகிய ஞானத்தையுடைய ஏழுமுனிவர்களையும் சற்றுத் திருவுளத்தில் நினைந்தார். எ-று. (உ)

மனத்தான் றமைநினைத்த வகையுணர்ந் தருங்கா வேரிப்
புனற்றரு கும்ப யோனி புலத்திய னங்கி ராதன்
கனக்கவு தமன்வ சிட்டன் காசிபன் மார்க்கண் டேயன்
எனப்பகர் முனிவர் தாமோ ரெழுவரு மினிது வந்தார்.

(இ-ள்.) அருமையாகிய காவேரிநதியை உலகத்தாருக்குக் கொடுத்த அகத்தியமுனிவர், புலத்தியமுனிவர், அங்கிராத முனிவர், பெரிய கவுதம

முனிவர், வசிட்டமுனிவர், காசிபமுனிவர், மார்க்கண்டேயமுனிவர் என்று சொல்லப்பட்ட சப்தமுனிவர்களும், தங்களைச் சிவபெருமான் மனத்தில்நினைத்ததன்மையை யறிந்து ஸ்ரீகயிலாசமலையின்கண் விருப்பத்துடனே வந்து சேர்ந்தார்கள். எ - று.

கும்பயோனி = கடத்திற்றோன்றினவர். காவேரிநதியைத்தருதலாவது, அகத்தியமுனிவர் கயிலைமலையினின்றும் பொதியமலைக்கு வருகையில் சைய மலையிலே தங்கிச் சிவபூசை செய்யும்போது கமண்டலத்தைக் கீழே வைக்க, அதை இந்திரன் வேண்டுகோளால் விநாயகர் காகவடிவாய்வந்து அக்கமண்டலத்தைக் கவிழ்க்க, அக்காவேரி பூமியிற்பெருகிவந்ததென்பது புராணவரலாறு.

எழுமுனி வாரு மன்புற் றிறைஞ்சிநின் றிருகை கூப்பித்
தொழுதெமை நினைத்த தென்னைத் தூயநீ யருளு கென்ன
மழுவுழை தாங்கி யாதி வனிதையோ டுளம கிழ்ந்து
விழுமிதி னமர்ந்த வெந்தை விளம்புதன் மேயி னானால்.

(இ-ள்.) (அகத்தியமுனிவர் முதலாகிய முனிவர்கள்) எழுவரும், அன்புடனே சிவபெருமானுடைய சந்நிதியிலே தோத்திரஞ்செய்து நின்று, இரண்டு கைகளையுங் குவித்து நமஸ்கரித்துப் பரிசுத்தமான கடவுளே! தேவரீர் எங்களை நினைத்தகாரணம் யாது? அதனைத் தெரியும்படிச்சொல்லவேண்டுமென்று கேட்க, மழுவும் மானும் கைகளிலே தாங்கி, முதல்வியாகிய பார்ப்பதி தேவியாருடனே மனமகிழ்ந்து சிறப்புடன் அக்கயிலாசமலையி லெழுந்தருளிய எந்து பிதாவாகிய சிவபெருமான் (அம்முனிவர்களைப் பார்த்துச்) சொல்லத்தொடங்கினார். எ - று. (௮)

மாதவ முனிவீர் கேண்மின் வருகதிர்ப் பின்னை தன்னைத்
தீதறு தேவாங் கற்குத் திருமண முடித்தல் வேண்டு
மாதலி னின்று நீவி ரக்கதி ரிடத்திற் சென்று
மேதகு முகூர்த்த காலம் விரித்திவண் வருதி ரென்றான்.

(இ-ள்) பெரிய தவத்தையுடைய முனிவர்களே! கேட்பீர்களாக, நாள்தோறும் உதித்துவருகின்ற சூரியனுடைய தங்கையாகிய தேவதத்தையென்பவளைக் குற்றமற்ற தேவாங்கமுனிவருக்கு விவாகஞ்செய்து முடிக்கவேண்டும்; ஆகையினாலே, இப்பொழுது நீங்கள் அந்தச்சூரியனிடஞ்சென்று, மேன்மையாகிய தகுந்த விவாகஞ்செய்யவேண்டிய நல்லோரையை எடுத்துச்சொல்லி இவ்விடத்து வாருங்களென்று சொன்னார். எ - று. (௯)

மின்றிகழ் பவள வேணி விமலனீ துரைத்த லோடு
நன்றுநன் றெனவ ணங்கி நலனுறத் தொழுது போற்றி
யின்றிரு வருள்பெற் றேகி யெழுமுனி வாரு மெங்குந்
துன்றிரு ளகற்றுஞ் செங்கேழ்ச் சுடரவ னகரம் புக்கார்.

(இ-ள்.) மின்னுகின்ற பவளம் போன்ற (சிவந்த) சடைமுடியையுடைய மலரகிதராகிய சிவபெருமான், இவ்வார்த்தைகளைச் சொன்னவுடனே, அந்த அகத்தியர் முதலிய எழு முனிவர்களும், நல்லது நல்லதென்றுவணங்கி, நன்மை யுண்டாகும்படி நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்து, (அவ்வெம்பெருமானுடைய) இனிய திருவருளைப் பெற்றுச்சென்று, எவ்வுலகங்களிலும் நெருங்கிய இருளைநீக்குகின்ற செம்மை நிறமுள்ள சூரியதேவனுடைய நகரத்தை யடைந்தார்கள். எ - று.

சூரியலோகமானது, பூமியிலிருந்து ஆகாசத்தில் இலக்கம்யோசனை தூரத்திலுள்ள அந்தரிட்சாலோகத்தில் ஓர் பாகத்துள்ளது. (கூ)

வந்தவம் முனிவர் தம்மை மகிழ்சிறந் ததிர்கொண் டாடிச்
சிந்தையி னன்பு கூர்ந்து தேன்புரை முகமன் கூறிச்
சந்தவின் மணிசூழ் செம்பொற் றவிசவ ரவர்க்கு நல்கி
யந்தமி லுலகம் போற்று மாயிரங் கிரணன் சொல்வான்.

(இ-ள்.) அழிவில்லாத வுலகத்திலுள்ளவர்கள் யாவரும் வணங்குகின்ற ஆயிரங்கிரணங்களையுடைய சூரியனானவன், தன்னிடத்து வந்த அம்முனிவ ரெழுவரையும் மகிழ்ச்சியுடனே யெதிர்சென்று புகழ்ந்து,மனத்திலாசைமிகுந்து தேனைப்போன்ற இனிய வுபசாரவார்த்தைகளைச்சொல்லி, அழகிய இனிய இரத்தினங்கள் பதித்த செம்பொன்னாசனம் அவரவர்களுக்குத் தங்கும்படிகொடுத்து (எழுந்தருளச்செய்து) சொல்லத்தொடங்கினான். எ - று.

இந்தநா ளௌியேற் றேடி யிணையிலா முனிவிர் நீவிர்
வந்தகா ரணமே தென்ன மாயவெம் பிறவி மாற்றித்
தொந்தமா முலக பாசத் தொடரொனு மிருளை வாட்டி
முந்துபே ரின்பந் துய்க்கு மிருடிகண் மொழிய லுற்றார்.

(இ-ள்.) ஒப்பில்லாத முனிவர்களே! நீங்கள் இப்பொழுது எளியனாகிய என்னைத் தேடிவந்த காரணம் யாதென்றுவினவ, மாயமாகிய கொடிய பிறவித்துன்பத்தை நீக்கித் தொடர்பாக வருகின்ற உலகவாசையாகிய விலங்கென்னும் இருளைக் கெடுத்து, (எவற்றிற்கும்) மேற்பட்டதாகிய பேரின்பத்தை யனுபவிக்கும், அகத்தியர்முதலாகிய முனிவர்கள் சொல்லத்தொடங்கினார்.

வருமொரு திகிரித் தேரோய் வளருகின் றங்கை தன்னைத்
தருகிகர் சொத்தான் மிக்க தவமுடைத் தேவாங் கற்குத்
திருமணஞ் செய்மு குர்த்த தினமிய மிக்க வேண்டி
யருளுரு வாரு மண்ண லனுப்பின னெம்மை யென்றார்.

(இ-ள்.) மகாமேருவை வலமாக வருகின்ற ஒற்றைச்சக்கரம் பூண்ட தேரையுடைய சூரியதேவனே! வளருகின்ற உன்னுடைய தங்கையாகிய தேவதத்தையைக் கொடையினாலே கற்பகமுதலிய பஞ்சதருக்களையொத்த கை

கனையுடையவனாகிய மிகுந்த தவத்தையுடைய் தேவாங்கமுனிவனுக்கு அழகிய விவாகஞ்செய்யவேண்டிய முகூர்த்தநாள் நியமிக்க நினைத்து, அருளே திருமேனியாகவுடைய சிவபெருமான் எங்களை உன்னிடமனுப்பினா னென்று சொன்னார்கள். எ - று. (கூ)

பண்ணவ ரினைய செப்பப் பரிதியுண் மகிழ்ச்சி பொங்க
வண்ணலம் புயங்கள் விம்ம வவரொடு மெழுந்து போந்து
தண்ணர விந்த மேவுந் தலைவனை யடைந்து போற்றி
யெண்ணருந் துதிகள் செய்தே யியம்புதன் மேயி னானல்.

(இ-ள்.) அம்முனிவர்கள் இத்தகையவார்த்தைகளைச் சொல்லாநிற்க, சூரியதேவன் மனத்தில் மகிழ்ச்சிமிகப் பெருமையையுடைய அழகிய புயங்களானவை பூரிக்க, அம்முனிவர்களுடனே எழுந்துபோய், குளிர்ச்சிபொருந்திய செந்தாமரைமலரி லெழுந்தருளிய தலைவனாகிய பிரமதேவனை யடைந்து நமஸ்கரித்து, அளவில்லாத தோத்திரஞ்செய்து சொல்லத்தொடங்கினான்.

வானவர் முறுவ கேண்மோ வளர்சிவ னருளாற் றிங்க
ளானன வமுதென் றங்கை யாந்தேவ தத்தை தன்னைப்
பூநறுந் துகில்க ணல்கிப் புவிமுத லுலகம் போற்று
மூனமில் குணத்தே வாங்கற் களித்திட வுளங்கொண் டேனால்.

(இ-ள்.) தேவர்களுள்ளே பெரியோனாகிய பிரமதேவரே! கேட்பீராக, கீர்த்திவளருகின்ற சிவபெருமானுடைய கட்டளையினாலே, சந்திரன்போலும் முகத்தையுடைய அமுதம்போன்ற என் தங்கையாகிய தேவதத்தை யென்பவளை, பூமிமுதலாகிய உலகங்களெல்லாந் துதிக்கின்ற குற்றமில்லாத குணத்தையுடைய தேவாங்கமுனிவனுக்குப் பூமிகளும் நல்ல வஸ்திரங்களுங் கொடுத்து, விவாகஞ் செய்துகொடுக்க மனதி லெண்ணங்கொண் டிருக்கின்றே னென்று சூரியதேவன் பின்னுஞ் சொல்லுவான். எ - று. (கக)

அத்திரு மணமு டித்தற் கானகன் முகூர்த்த கால
மித்தின மினிய தென்றெற் கியம்பென விரவி கேட்ப
நித்தில முறுவற் செவ்வாய் நெடுமதர் வரிவி ழிப்பூங்
கொத்திரு ளோதி வாணி கொழுநனங் கினைய கூறும்.

(இ-ள்.) சூரியதேவன், அந்த விவாகத்தை நிறைவேற்றுவதற்கு நன்மையாகிய முகூர்த்தகாலம் இன்றையத்தினம் நல்லதென்று எனக்குச் சொல்லுவீரென்று கேட்க, முத்துப்போல் பல்வரிசைகளும், சிவந்த வாயும், நீண்ட மதர்த்த இரேகைபொருந்திய கண்களும், பூங்கொத்துகளை யணிந்த இருள்போன்ற கூந்தலுமுடைய சரஸ்வதிதேவியினது நாயகனாகிய பிரமதேவர் அப்பொழுது இத்தகைய வார்த்தையைச் சொல்லுவார். எ - று. (கஉ)

இந்தவை காசித் திங்க ளிசைகெழு பூர்வ பக்கம்
வந்தசத் தமியிற் புந்தி வாரநற் பகலி லாறு
விந்தைகொள் கடிகை யின்மேன் மிதுனமு மகமுங் கூடி
முந்துமத் தினமே நல்ல முகூர்த்தமா மணத்திற் கென்றான்.

(இ-ள்.) கீர்த்திபொருந்திய இந்த வைகாசிமாதத்தில் வந்த பூர்வபட்சம் சத்தமிதிதியில் புதன்கிழமை நல்லபகலில் வியப்பைத்தரத்தக்க ஆறுநாழிகைக்குமேல் மிதுனலக்கினமும் மகநட்சத்திரமுஞ்சேர்ந்த முற்பட்ட அந்த நாளே விவாகம் நிறைவேற்றுவதற்கு நல்லமுகூர்த்தமாகுமென்று பிரமதேவர் சொல்லினர். எ - று. (கங)

பங்கய னிணைய கூறப் பகலவ னவனைப் போற்றி
மங்கல மகிழ்வு கூர்ந்து வந்துதன் மனையிற் சார்ந்து
புங்கவர் வதன நோக்கிப் புகுந்தமை யனைத்து நீவிர்
சங்கரற் குரைமி னென்று வன்னவர் தமையனுப்பினான்.

(இ-ள்.) செந்தாமரைமலரில் வசிக்கின்ற பிரமதேவர் இவ்வசனங்களைச் சொல்லக்கேட்டு,சூரியதேவன் அந்தப்பிரமதேவரை நமஸ்கரித்து, சோபனமாகிய மகிழ்ச்சிமிகுந்து தன்னுடைய மாளிகைவந்துசேர்ந்து, அகத்தியர் முதலாகிய முனிவர்களுடைய முகத்தைப்பார்த்து, நீங்களிவ்விடத்து நடந்த காரியங்களையெல்லாஞ் சிவபெருமானுக்குச் சொல்லுங்களென்று அம்முனிவர்களை அந்தக்கயிலாசமலைக்கு அனுப்பினன். எ - று. (கச)

விழைந்தெழு முனிவர் தாமும் வெள்ளிவே தண்ட நண்ணித்
தழைந்தெழு மன்பி னோடு சங்கரற் பாவி நின்று
குழைந்தநன் மனத்த ரிங்கு நிகழ்ந்தமை முழுதுங் கூறிச் [ர்.
செழுந்திரு வருள்பெற் றன்னோர் சென்றுதம் மிருக்கை சார்ந்தா

(இ-ள்.) அகத்தியர்முதலாகிய ஏழுமுனிவர்களும், விருப்பத்துடனே கயிலாயபருவதத்தையடைந்து, நாளுக்குநாள் வளருகின்ற பிரியத்துடனே சிவபெருமானைத் தோத்திரஞ்செய்துநின்று, உருகிய நல்லமனத்தராகிச் சூரியதேவனிடத்தில் நடந்தகாரியங்கள்யாவுஞ்சொல்லி அச்சிவபெருமானுடைய செழித்த திருவருளைப்பெற்று, அம்முனிவர்கள் அங்குநின்றும் புறப்பட்டுத் தங்களுடைய வாசஸ்தலத்தை யடைந்தார்கள். எ - று. (கரு)

தினகரப் புத்தேள் பின்னர்த் தேர்தன தமைச்ச னென்னும்
வனைமணிக் கழற்கால் வீர மார்த்தாண்டன் வதன நோக்கித்
தனதடக் கருங்கட் டேவ தத்தைதன் மணத்திற் கேற்ப
முனமலர்க் கடவுள் வைத்த முகூர்த்தம தனைத்துங் கூறி.

(இ-ள்.) சூரியதேவன், அதன்பின்னே இராசகாரியங்களை ஆராய்கின்ற தன்மந்திரியென்னும் அழகிய வீரக்கழலை யணிந்த காலையுடைய வீரமார்த்தா

ண்டனது முகத்தைப் பார்த்துப் பெரிய முலைகளையும், கரிய கண்களையு முடைய தேவதத்தையினது கலியாணத்துக்குத்தக்கவாறு பிரமதேவர் முன்னர் நியமித்த முகூர்த்தநாள்முதலாகிய அனைத்துஞ் சொல்லிப் பின்னுஞ் சொல்லுவான். எ - று.

வீரமார்த்தாண்டன் = நவசத்தி புதல்வரில் ஒருவன். (கசு)

நவையுறு வெழிலா மோத நகர்புரக் தருடே வாங்க
னவையைநீ நண்ணி யேமற் றவற்கிவை யனைத்துங் கூறி
மவுலிசூ டரசர் சூழ வந்தரு ளெனவே வாழ்த்திக்
கவலைதீர் மதிவல் லோயிக் கணத்தினில் வருதி யென்றான்.

(இ-ள்.) துன்பம் நீங்கிய அறிவில் வல்லவனாகிய மார்த்தாண்டனே! குற்றமில்லாத அழகினையுடைய ஆமோதநகரத்தை யாளுகின்ற தேவாங்க ராசனுடைய சபையை யடைந்து, அவ்வரசனுக்கு நடந்த இக் காரியங்களெல்லாஞ்சொல்லி முடிகளையணிந்த அரசர்கள்சூழும்படிவரக்கடவாயென்று வாழ்த்தி இக்கணமே வருவாயென்று சொன்னான். எ - று. (கஎ)

வீரமார்த் தாண்டன் பானு மென்மலர்ப் பதங்கள் போற்றிப்
பாரெலாம் புகழா மோத பதிதனில் விரைந்து போந்து
நீரமா மடங்க லுங்கு செழுமணிப் பீடத் துற்ற
போரரு வாட்டே வாங்க பூபதி சமுகம் புக்கான்.

(இ-ள்.) வீரமார்த்தாண்டன், சூரியதேவனுடைய மெல்லிய மலர்போன்ற பாதங்களைவணங்கி, பின் உலகத்திலுள்ளவர்கள் யாவரும் வணங்குகின்ற கீர்த்தியினையுடைய ஆமோதநகரில் விரைவாகவந்து, வலிமையுள்ள பெரிய சிங்கங்களாற் சுமக்கப்பட்ட செழித்த இரத்தினாசனத்தி லெழுந்தருளியிருக்கின்ற யுத்தநீங்காத வாளையேந்திய தேவாங்கவரசனுடைய சமுகத்திற் பிரவேசித்தான். எ - று. (கஅ)

கதிர்புக ழமைச்ச னென்னுங் கலைவலான் கணதே வாங்க
னெதிர்படர்ந் தினிது வாழ்த்தி யிறைவகே ளெங்கோன் செல்வ
மதிபெறு தங்கைக் குன்றன் மணம்புணர்த் திடுதற் கேற்ப
விதிபகர் முகூர்த்த மின்றென் றவையெலாம் விளம்பிப் பின்னர்.

(இ-ள்.) சூரியதேவனுடைய கீர்த்தியுள்ள மந்திரியாகிய நீதிநூல்வல்லோனாகிய வீரமார்த்தாண்டன், தேவாங்கமுனிவனுக்குமுன்சென்று நன்றாக வாழ்த்தி, அரசனே! கேட்பாயாக, எமது தலைவனாகிய சூரியதேவனுடைய செல்வமும், அறிவு முள்ள தங்கையாகிய தேவதத்தையை உனக்கு மணஞ் செய்துமுடிப்பதற்குத் தக்க முகூர்த்தகாலம் பிரமதேவனாற்கூறியதே, இன்னநாளென்று நடந்தவைகளையெல்லாங் கூறிப் பின்னுஞ் சொல்லுவான். எ - று.

எந்தனீ யுறவி னோடு மெழுந்தவண் வருக வென்றே
வேந்தருள் விடைபெற் றேகி வீரமார்த் தாண்ட னென்பான்
போந்தகல் விசும்பி னண்ணிப் புகழ்கதிர்ப் பொற்றாள் போற்றிச்
சாந்தநன் மொழியாற் செய்தி சகலமு முரைத்துச் சார்ந்தான்.

(இ-ள்.) வீரமார்த்தாண்ட னென்பவன், தேவாங்கமுனிவனே! நீ உறவினரோடும் சூரியலோகத்துக்கு வரக்கடவாயென்று சொல்லி அவ்வேந்தனுடைய கிருபையாகிய உத்தரவுபெற்றுச் சென்று, அகன்ற சூரியலோகத்தில் வந்துசேர்ந்து, புகழ்பெற்ற சூரியதேவனுடைய அழகிய பாதங்களை வணங்கி, சாந்தமாகிய நல்லசொற்களால் நடந்தகாரியங்களெல்லாஞ்சொல்லி அவ்விடத்தில் இருந்தான். எ-று. (உ௰)

மிக்கசெங் கதிரோ னாதி விச்சுவ கன்மன் கோவில்
புக்கவன் றனைவந் தித்துப் புவிமுதற் புவனமெங்குந்
தக்கதண் ணளியாற் காக்குந் தலைவவெத் தொழிலும் வல்லோ
யெக்கட வுளர்க்கு மேலா மிறைவவொப் பிகலி லாதோய்.

(இ-ள்.) மிகுந்த செம்மையாகிய கிரணங்களையுடைய சூரியதேவன், விஸ்வகர்மாவினது முதன்மையாகிய ஆலயத்திலே சென்று அவ்விஸ்வகர்மாவைப் புகழ்ந்து, பூமிமுதலாகிய உலகங்களையெல்லாம் தகுதியாகிய குளிர்ந்த கிருபையாற் படைத்துக் காக்கின்ற முதன்மையானவனே! எத்தொழிலினும் வல்லவனே! எந்தத் தேவர்கட்கும் மேலான இறைவனே! சமானமும் பகைவருமில்லாதவனே! என்று துதித்துப் பின்னுஞ் சொல்லுவான். எ-று.

என்றிருத் தங்கை யாகு மெழிற்றேவ தத்தை தன்னை
வன்றிறற் றேவாங் கற்கு மணமுடித் திடம தித்தேன்
தென்றமு வியலி வாக தெய்வமண் டபவி லாச
மொன்றுன தருளா லிப்போ துதவிடல் வேண்டு மென்றான்.

(இ-ள்.) என்னுடைய செல்வத்தங்கையாகிய அழகிய தேவதத்தையை, வலிமையையுடைய தேவாங்கமுனிவனுக்கு விவாகஞ்செய்து முடிக்கும்படி நினைத்தேன்; (அதற்கு) அழகு பொருந்திய தெய்வத்தன்மையுள்ள ஒரு கலியாணமண்டபம் விநோதமாக உன்னுடைய கிருபையால் இப்பொழுது செய்துகொடுக்கவேண்டுமென்று சொன்னான். எ-று. (உஉ)

பிறங்குசீர் புனைது வட்டப் பிரமனங் கதனைக் கேளா
வறங்குல வலரிப் புத்தே ளமர்தரு நகரி னப்ப
ணிறங்கிளர் கனகத் தாலு நிறைபல மணியி னாலுஞ்
சிறந்தமண் டபமுண் டாகச் சிந்தனை சிறிது செய்தான்.

(இ-ள்.) விளங்குகின்ற சிறப்பினையுடைய விச்சுவகர்மன் அப்பொழுது அச் சூரியதேவனுடைய வசனத்தைக்கேட்டு, தருமம்பொருந்திய சூரிய

தேவ னெழுந்தருளியிருக்கின்ற நகரத்தினடுவிலே, வண்ணத்தால் விளங்குகின்ற பொன்னாலும், ஒளிநிறைந்த பல இரத்தினங்களாலும் சிறப்பாகிய மண்டபமொன் றுண்டாம்படி சற்று மனத்தில் நினைந்தான். எ - று. (உங)

ஏழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பிதிரமய மொன்றினிற் பாதபீந் தம்பதும
　　பிந்தமொடு பதுமா லயம்
பதுமசிரை யம்பதும புட்கல மொழுங்கிற்
　　படிந்திலகு பிருதி பிந்த
நிதிகொள்பிரு திக்கிரம நிமிர்பிருதி சுந்தர
　　நெடும்பிரதம பால கூட
முதிர்செகதி குமுதங்க தம்பபட் டிகையிந்திர
　　முழுநீல மதின்மொய்ப் பவே.

(இ-ள்.) ஒரு காலநுட்பத்துக்குள்ளே அடிப்பீடமும், அதன்மேற் பதுமபிந்தமும், அதன்மேற் பதுமாலயமும், அதன்மேற் பதுமசிரையமும், அதன்மேற் பதுமபுட்கலமும், அதன்மேல் ஒழுங்காகச்சேர்ந்துவிளங்குகின்ற பிருதிபிந்தமும், அதன்மேல் தெய்வமணிகளைக் கொண்ட பிருதிக்கிரமமும், அதன்மேல் உயர்ந்த பிருதிசுந்தரமும், அதன்மேல் நீண்ட பிரதமபாலகூடமும், அதன்மேல் தொழின்முற்றிய செகதியும், அதற்மேற் குமுதமும், அதன்மேற் கதம்பபட்டிகையும், அதில் இந்திரநீலமாகிய பெரிய விரத்தினங்கள் விளங்கவும் எ - று.

காலநுட்பமாவது, கணத்தினனுஙிய காலம்; இதிற் கூறிய பதுமபிந்த முதலாகிய உறுப்புக்களின் விவரங்களைச் சிற்பநூல் வல்லார்வாய்க் கேட்டுணர்க. (உச)

மீதுகோ மேதக மணித்தொகைக ளாலளவில்
　　வேதிகை சிறந்து மின்னச்
சோதிசூழ் பவளவண் டூண்களோங் கிடவவை
　　தொறுந்தொறும் வீர கண்டங்
கோதறு வயிடூரி யத்தினு லிசைபெறக்
　　குடதாளி யுரக மணியா
லாதுசி ரணியொட்டு மதலைதா ளங்களா
　　லுற்றெழுங் கொடுசெ றியவே.

(இ-ள்.) மேற்சொல்லிய பட்டிகையின்மேல் அளவில்லாத கோமேதகமணிகளாலே (அழகுசெய்யப்பட்ட) மேடை சிறப்புடனே பிரகாசிக்க, அதன்மேலே ஒளிபொருந்திய வளப்பமுள்ள ஸ்தம்பங்களானவை உயரவும், அத்தூண்கள் ஒவ்வொன்றினும் வீரகண்டமும், குற்றமில்லாதவயிடூரியத்தினாலே கீர்த்தியுண்டாகக் குடதாளியும், நாகவிரத்தினங்களால் யாவராலுஞ் சிறப்பித்

துச் சொல்லுகின்ற சிறப்புப்பொருந்திய கொடுங்கையும், முத்துக்களால் வரிசையாக நெருங்கவும். எ - று.

இசைபெற=ஒன்றும்படி எனினுமாம். தொறும் தொறும் என்னும் இடைச்சொல்லடுக்கு இடப்பண்மைப்பொருளில் வந்தது. (௨௫)

வயிரவண் போதிகை வயங்கமா கதகோல
மணியுத் திரங்கண் மலிய
வயல்பொருந் தியகொடுங் கைமியா ளங்களு
மகாரசா லையினொ ழுங்கும்
வியனுறும் பதுமரா கங்களால் வரிசைபெற
மீதரிய கர்ன கூடங்
கயமில்பஞ் சரமந்த ராளமும் புருடரா
கங்களா லோங்க மாதோ.

(இ-ள்.) வயிரத்தாற் செய்த வளப்பம்பொருந்திய போதிகைகள் விளங்கவும், அழகிய மரகதரத்தினத்தால் உத்திரங்கள் நிறையவும், அதன் பக்கத்தில் பொருந்திய கொடுங்கையும், வீடுகளும், அறச்சாலைகளின் வரிசைகளும், பெருமை பொருந்திய பதுமராகமணியினாலே ஒழுங்குபெறச்செய்த மேன்மையும் அருமையுமுள்ள கர்னகூடமும், கேடில்லாத பஞ்சரமும், அந்தராளமும் புருடராகமணியினாலே செய்து ஓங்கவும். எ - று. (௨௬)

தேவகூ டந்தேவ பந்திகள் பந்திசுத
திறனுசி மாகா சிமேற்
பாவுசீர் பெறுவன்னி மாலைகிர ணங்குலவு
பதுமதள மொடுதூ வியு
மேவுகாஞ் சனநவ மணித்தொகைக ளான்மிக
விளங்கவிமை யவர்வி யப்ப
மாவிவா கப்பிரபல மண்டப விலாசமிவ்
வகைபடைத் தருளி னனரோ.

(இ-ள்.) தேவர்கள் வசிக்கும் இடங்களும், தெய்வத்தன்மையுள்ள யானை குதிரைகள் நிற்குஞ் சாலைகளும், முறையாகிய வாசல்களும், பெரிய வாசல்களும், மேன்மைபொருந்திய சிறப்பினையுடைய கிளியின் வரிசையும், ஒளிபொருந்திய பதுமதளமும், முடியும் பொருந்திய பொன்னாலும் ஒன்பது வகை இரத்தினங்களாலும் மிகவும் பிரகாசிக்கத் தேவர்கள் ஆச்சரியப்படும்படி மகத்தாகிய கீர்த்தியுள்ள கலியாணமண்டபவிலாசத்தை இவ்விதம் விஸ்வகர்மன் அமைத்தனன். எ - று.

சுதம்=முனை. (௨௭)

கொச்சகம்.

கலைமுனிவ னினிதமர்ந்த கனவரையி னிடைப்பிறந்து
மலைவறுபைந் தமிழ்மணமு மலர்மணமு மளைந்துசெழுந்
தலைகெழுசந் தனவடவி தவழ்ந்தெழுதென் காலுலவ
நிலைபெறுசா ளரங்கள்பல நித்தியவிச் சுவனளித்தான்.

(இ-ள்.) இலக்கண நூல் முதலிய நூல்களுக்குரிய அகத்தியமுனிவர், நன்றாக வெழுந்தருளியிருக்கின்ற பெரிய பொதியமலையினிடத்திற் றோன்றிச் சந்தேகவிபரீதமில்லாத பசிய தமிழ்மணமும் பூக்களின் மணமும் கலந்து, செழுமையாகிய முதன்மையுள்ள சந்தனச்சோலையிலே யுலாவிவருகின்ற தென்றற்காற்றானது வந்து உலாவும்படி, நிலையாகிய பல பலகணிகளை அழிவில்லாத விஸ்வகன்மன் செய்தனன். எ-று. (௨௮)

மகவரசன் முதற்சகல வானவர்க்கு மழியாத
சுகமுனிவர் பலர்க்குமங்கட் சூழ்மணிப்பீ டிகைகணல்கிச்
செகதலமெங் கணும்பரவு தேவலவேந் துடனடைந்த
விகல்படைமன் னவர்க்கிசைந்த விருக்கைகளு மருளினனால்.

(இ-ள்.) இந்திரன் முதலாகிய வெல்லாத் தேவர்களுக்கும், கெடாத தருமவடிவாகிய முனிவர்கள் பலருக்கும், அம்மண்டபத்தில் மணிகள் சுற்றிப் பதித்த ஆதனங்களைச் செய்து, எவ்வுலகத்தோரும் துதிக்கின்ற தேவாங்க முனி [illegible] அரசனுடன்வந்த வலிமையுள்ள சேனைகளையுடைய அரசர்களுக்குத் தகுதியாகிய சிங்காசனங்களும் விஸ்வகர்மன் செய்தமைத்தான். எ-று.

பருவமழை முகில்களெனப் பல்லியங்க டொனிப்பவர்க்கும்
கருதுமபி நயநடனக் கலகவிழி வனிதையர்க்கு
மருவுமணி யரங்குபல வகையுமினி தருள்புரிந்தான்
பெருகியவைந் தொழிற்குரிய பெருந்தவட்டப் பிரமனரோ.

(இ-ள்.) பெருகிய ஐந்துதொழிலுக்கும் உரியவனாகிய விஸ்வகன்மன், மழையைப் பெய்யும் பருவத்தையுடைய மேகங்கள்போலப் பலவாகிய வாத்தியங்களை முழக்குகின்றவர்களுக்கும், மனதில் நினைந்தபடி அபிநயமும் நடனமுஞ் செய் [illegible] போர்செய்கின்ற கண்களையுடைய கணிகைமாதர்களுக்கும், பொருந்திய அழகிய சாலைகளையும் பலவாக நன்றாகச் செய்தான். எ-று.

ஐந்து தொழில்களாவன:— இரும்பு - பொன் - மரம் - கல் - சிற்பம் என்னு மிவைகளிற் செய்யப்படுவன. (௩0)

கம்பலங்க டிருத்தியெங்குங் கதிர்த்தரள வடந்தூக்கி
வம்பவிழு நறுந்தருவின் மதுமலர்மஞ் சரிநிறைத்து
பம்புமணித் தூண்டொறும்பொற் பாவைகள்பற் பலநிறுவி
யும்பருளங் களிகூர வோவியமெண் ணிலடுநித்தான்.

(இ-ள்.) எவ்விடங்களிலும்இரத்தினக்கம்பளங்களையிட்டு,காந்தியுள்ள முத்துமாலைகளை யெங்குந் தூக்கிக் கட்டி, வாசனை விரிந்த நல்ல தருக்களின் தேன்பொருந்திய பூங்கொத்துக்களை யெங்கும் நிறைத்து, நெருங்கிய இரத்தினத்தூண்களெவ்விடத்திலும் பொன்னாற்செய்யப்பட்ட பிரதமைகள் பலவற்றை நிறுத்தி, தேவர்கள் மனத்திற் சந்தோஷமிகும்படிச் சுவரில் அளவில்லாத சித்திரங்களையும் செய்தமைத்தனன். எ-று. (ருக)

விரும்புபல மணியாலு மிளிர்பசுங்காஞ் சனத்தாலுங்
கரும்புநறு மடற்பூகங் கதலிகடோ ரணமமைத்துத்
தரும்புதிய மலரிதழிச் சரமருணச் செழுங்கனிக
ளரும்புமிள நீர்முதன்மற் றனைத்துமங்கங் கருளினனால்.

(இ-ள்.) (யாவரும்) விரும்புகின்ற பல இரத்தினங்களாலும், விளங்குகின்ற பசிய பொன்னாலும், கரும்புகளும், நல்ல மடல்களையுடைய கமுகமரங்களும், வாழைகளும், தோரணங்களும் செய்து, அழகைச்செய்கின்ற புதுமையாகிய கொன்றைப்பூமாலைகளும்,சிவந்த கொழுமையாகிய கனிகளும், தோன்றுகின்ற இளநீர் முதலாகிய எல்லாப்பொருள்களையும் அம் மண்டபத்திலும் மற்றுமுள்ள விடங்களிலும் விஸ்வகர்மன் அமைத்தான். எ-று. (ருஉ)

கதிர்குலவு கனகமணிக் கலசங்கள் பலவமைத்துப்
புதியமுளைப் பாலிகைகள் பொலிவுறவவ் வயினிறைத்து
மதிதருபொற் கொழுந்தீப வகைதிசைக டொறுநிறுவி
யெதிர்தருமெண் காதமிவ்வா றெழில்புனைந்தா னெவர்க்குமிக்கான்.

(இ-ள்.) யாவருக்கும் மேலாகிய விஸ்வகன்மன், காந்தி பொருந்திய பொன்னாலும் இரத்தினங்களாலும் பூரணகும்பங்கள் பல செய்து, புதிய முளைப்பாலிகைகளை அம்மண்டபத்தில் நிறையவைத்து, (காண்போர்க்கு) விருப்பத்தைத் தருகின்ற அழகுஞ் செழுமையுமுள்ள பலவகையாகிய தீபங்களைத் திக்குகளெவ்விடத்திலும் நிலைபெற வைத்து, எட்டுக்காததூரம் வரையிலும் ஒப்பாக இவ்வித அழகுடனே விவாகமண்டபத்தை அலங்கரித்தனன். எ-று.

மதி=விருப்பம். (ருங)

முருகுகமழ் செழும்பனிநீர் முதிர்புனுகு களபமிங்கும்
பெருகிமணித் தளமுழுதும் பெரிதுதண்ணென் றிருக்கதன்மை
திருவளர்தென் காசைவங்கார் திருமலைப்போ டயபூமன்
கருணைமலர்க் கரத்தேற்ற கவிவலவ ருளம்போலும்.

(இ ள்.) மணம் வீசுகின்ற செழுமையுள்ள பனிநீரும், மணமுதிர்ந்த புனுகும், கலவைச்சாந்தும் பெருகி, மணிகளாற் செய்யப்பட்ட அம் மண்டபத்தின் கீழ்த்தளமெல்லாம் மிகவும் குளிர்ந்திருந்த செயலானது, செல்வம் பெருகுகின்ற தென்காசையென்னும் நகரை யாளுகின்ற வங்கார்திருமலைப்

போடயனென்னும் பெயரினையுடைய அரசனானவன், கிருபையுடனே மலர் போன்ற கைகளாற் கொடுத்த பொருள்களைப் பெற்ற (மகிழ்ச்சியால்) கவிக ளியற்றும் புலவர்களுடைய மனக்குளிர்ச்சியை யொக்கும். எ-று.

உபமானத்திலும் தண்மை வருவிக்கப்பட்டது. (கூசு)

தாளநிரை வயிரமணி தருகதிரொங் கணுமலிந்து
பரவுமெழி லிருநிதிகற் பகமனைய கரதலவான்
வரமருவு நயமூக்க மனியமல்லை யேந்திரனருள்
புரவலனன் னீலகண்ட பூபதிதன் புகழ்போலும்.

(இ-ள்.) முத்துவரிசைகளும், வயிரங்களும் உமிழ்கின்ற கிரணங்க ளெவ்விடத்திலும் மிகுந்து பரவிய அழகானது, சங்கநிதி - பதுமநிதி - கற்ப கத்தரு இவைகளை ஈகையாலொத்த கரங்களை யுடையவனும், மேன்மை பொருந்திய உபசாரமும், முயற்சியுமுடைய மல்லையன் என்னும் தலைவன் பெற்ற காத்தற்றொழிலையுடைய நல்லவனுமாகிய நீலகண்டன் என்னும் பெய ரினை வாய்ந்த தலைவனது கீர்த்தியை யொக்கும். எ-று.

கீர்த்தியினிறம் வெண்மையாதலால் "தாளநிரை *** கரதலவான்" என்று கூறினர். (கூஎ)

வேண்டுவன முழுதுநொடிப் பொழுதினில்விச் சுவப்பிரம
னூண்டுதன துளத்திலுன்னி யருளினளித் தெதிர்காட்டத்
தூண்டுசுட ரிரவியவன் றுணைமலர்த்தா டொழுதிறைஞ்சிப்
பூண்டுதிக ழன்பினொடு புகழ்ந்துமிக வியந்திருந்தான்.

(இ-ள்.) திருமணமுடிப்பதற்கு வேண்டுவனவாகிய பொருள்களெல் லாம் விஸ்வகர்மன் ஒருநொடிப்பொழுதிற்குள்ளே அவ்விடத்துத்தன்னுடை ய மனத்தி லெண்ணி யுண்டாக்கி கிருபையுடனே காட்ட, எவ்விடத்துஞ் செல் லுகின்ற கிரணங்களையுடைய சூரியதேவன், அந்த விஸ்வகர்மாவினது மலர் போன்ற இரண்டு திருவடிகளையும் வணங்கித் தோத்திரஞ்செய்து, பொருந்தி விளங்குகின்ற ஆசையுடனே புகழ்ந்து மிகவும் ஆச்சரியத்துடனேயிருந்தான்.

இருந்தபின்பா கிரண விரவிபல சாரணரைத்
திருந்தருளி னொடுநோக்கிச் சென்றுவிரை வினிநீவி
ரருந்திறல்கூர் விபுதர்கட்கு மதிகதவ முனிவர்கட்கும் [ன்.
பொருந்துமிந்த மணமுகூர்த்தம் புகன்றழைத்து வருகிரென்று

(இ-ள்.) அநேக கிரணங்களையுடைய சூரியதேவன், இப்படி விஸ்வகர் மாவைப் புகழ்ந்திருந்தபின்னே, பல ஒற்றர்களைத் திருத்தமாகிய கிருபையுட னே பார்த்து, நீங்கள் விரைவாகச்சென்று, அருமையாகிய வல்லமை மிகுந்த தேவர்களுக்கும், மிகுந்த தவத்தையுடைய முனிவர்களுக்கும் (என் தங்கை

யாகிய தேவதத்தைக்கு) அமைந்த இவ்விவாகமுகூர்த்தகாலத்தைச் சொல்லி அவர்களை யழைத்துவாருங்களென்று சொன்னான். எ - று. (கஎ)

சாரணரப் பகலவன்சொற் றலைமிசைக்கொண் டடிவணங்கிச்
சீரணவு மனவினைவிற் சென்றுமுதற் கயிலைநண்ணிக்
காரணநா யகன்றிருமுன் கழறியதன் பின்னிமையோ
ராரணன்மால் புரந்தரன்மற் றருந்தவர்க்கு முணர்த்தினரால்.

(இ-ள்.) ஒற்றர்கள், அந்தச் சூரியதேவனுடைய கட்டளையைச் சிரமேற்றாங்கிக்கொண்டு அவனது பாதங்களை வணங்கி, சிறப்புப்பொருந்திய மனவேகத்தினும் விரைவாகச்சென்று, முன்னே கயிலாயமலையையடைந்து, எப்பொருட்கும் மூலகாரணராகிய சிவபெருமானுடைய திருவோலக்கத்தில், (தேவதத்தையினது திருமணகாலத்தை) விண்ணப்பஞ்செய்து, அதன்பின், தேவர்களுக்கும், பிரமதேவருக்கும், திருமாலுக்கும், தேவேந்திரனுக்கும், அவர்களொழிந்த அரிய தவத்தையுடைய முனிவர்களுக்குஞ் சொன்னார்கள்.

கலிநிலைத்துறை.

அந்த வேலையிற் கயிலைமால் வரைதனி லமரு
மெந்தை யாதியம் பிகையொடுந் திறல்விடை யிவர்ந்து
தொந்த பாசமு றுதபல் கணம்புடை சூழ
வந்து மேவினன் மணமணி மண்டப மாதோ.

(இ-ள்.) அவ்விவாககாலத்திலே, பெரிய கயிலாயபருவதத்தில் எழுந்தருளிய சிவபெருமான் முதல்வியாகிய பார்ப்பதிதேவியாரோடும் வலிய இடபவாகனத்திலேறி விடாது பற்றிவருகின்ற மாயையானது சேராத பல பூதகணங்கள் தம்மைச்சூழ்ந்துவரத் தேவதத்தையினது அழகிய கலியாணமண்டபத்தில் வந்தெழுந்தருளினார். எ - று. (கக)

அண்ட மாதிமற் றுலகெலா முந்தியா லளித்த
கொண்ட னேர்தரு மேனிமா தவன்கரங் குவித்த
தொண்டர் சூழ்வரத் திருவொடுங் கலுழன்மேற் றோன்றி
மண்டு சீர்புனை விவாகமண் டபத்திடை வந்தான்.

(இ-ள்.) தேவலோக முதலாகிய எவ்வுலகங்களையும் உந்திக்கமலத்தினாலே பெற்றருளிய நீருண்ட மேகத்தையொத்த திருமேனியை யுடைய திருமாலானவர், அடியார்கள் கையைக் குவித்தவர்களாகித் தம்மைச்சூழ்ந்துவரத் திருமகளுடனே கருடவாகனத்திலேறி, மிகுந்த சிறப்பினைப்பெற்ற கலியாணமண்டபத்தினிடத் தெழுந்தருளினார். எ - று. (உ0)

பழும றைத்திரண் முழங்கவிண் ணவரடி பணிய
எழுகு டைச்செழும் பவளவா யோதிம மதிற்கார்
தொழுவ ரத்திகழ் குழற்கலை மகளொடுந் தோன்றி
முழவ திர்த்தமண் டபத்தடைந் தனன்சதுர் முகத்தோன்.

(இ-ள்.) நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவர், பழமையாகிய நான்குவேதங்களுஞ் சத்திக்க, தேவர்கள் தமது திருவடிகளைவணங்க, அழகு பொருந்திய செழுமையாகிய பவளம்போலும் வாயினையுடைய அன்னவாகனத்தின்மீது மேகங்களும் தொழும்படி கறுத்து விளங்குகின்ற கூந்தலையுடைய சரஸ்வதிதேவியாரோடு மெழுந்தருளி வாத்தியங்கள் இடைவிடாமல் முழங்கிய அக்கலியாணமண்டபத்தை யடைந்தார். எ-று. (௬௧)

புகழ்ந்து சூழ்ந்தரம் பையராபி நயநடம் புரியத்
திகழ்ந்த நான்மருப் புடைமதக் களிற்றினிற் சிலையை
யிகழ்ந்த வாணுதற் கருங்குழற் சசியினோ டிவர்ந்து
மகிழ்ந்து வானவர் தொழுதிட வலாரியும் வந்தான்.

(இ-ள்.) தேவேந்திரனும், தேவமாதர்கள் தன்னைப்புகழ்ந்து அபிநயத்துடனே நடனஞ்செய்யாநிற்க, விளங்கிய நான்கு கொம்பினையும், மூன்று மதங்களையுமுடைய அயிராவதமென்னும் வெள்ளையானையின்மேலே, வில்லை வடிவினாலே நிந்தித்த வொளிபொருந்திய நெற்றியையும், கரிய கூந்தலையுமுடைய இந்திராணிதேவியாரோடும் எழுந்தருளி, தேவர்கள் மகிழ்ந்து தொழுமாறு விவாகமண்டபத்தை யடைந்தார். எ-று.

அபிநயமாவது பாடலுக் கேற்பக் கை மெய் காட்டுதல். (௬௨)

கூனி ளம்பிறை போலழ கியதனிக் கோடு
மேனி வந்தொளி ரருட்கய வதனமும் விளங்கக்
கானி றைந்ததார் துயல்வர வாகுவர் கனமூர்ந்,
தானி வர்ந்தவ னளித்தவே ரம்பனு மடைந்தான்.

(இ-ள்.) இடபவாகனத்திலெழுந்தருளும் சிவபெருமான்பெற்றருளிய விநாயகக்கடவுளும், வளைவாகிய இளம்பிறைபோலும் அழகிய ஒற்றைக்கொம்பானது மேலே நிமிர்ந்து விளங்குகின்ற யானைமுகம் விளங்கவும், மணநிறைந்த கொன்றைமாலை யசையவும், ஆகுவாகனத்தை நடத்திக்கொண்டு அவ்விவாக மண்டபத்தை யடைந்தார். எ-று. (௬௩)

மூரி யந்தர துந்துபி கடலென முழங்க
வேரி யந்தொடைப் புயவரைக் குலமிக விளங்கச்
சீரி யங்குவெம் பூதவீ ரியர்துதி செய்யத்
தாரி சைந்தமண் டபத்திடைக் குரோதனுஞ் சார்ந்தான்.

(இ-ள்.) வீரபத்திரக்கடவுளும், பெரிய ஆகாயவீதியிலே தேவவாத்தியங்கள் சமுத்திர வொலிபோலச் சத்திக்கவும், தேன் பொருந்திய அழகிய பூமாலையை யணிந்த புயமாகிய மலைகள் விளங்கவும், சிறப்பு விளங்குகின்ற கொடியபூதவீரர்கள் தம்மைத் தோத்திரஞ்செய்யவும், பூமாலைகள் தொங்கக் கட்டிய விவாகமண்டபத்தை யடைந்தார். எ-று. (௬௪)

கற்ப கத்திமை யவர்துதி புரிந்துளங் களிப்ப
வெற்பெ னெத்திகழ் பன்னிரு வாகுவும் விளங்க
நற்ப சுஞ்சிறைக் கேகய துரகத நடத்திப்
பொற்ப மைந்தமண் டபத்திடைக் குமரனும் புக்கான்.

(இ-ள்.) முருகக்கடவுளும், கற்பகநாட்டில் வசிக்கின்ற தேவர்கள் தோத்திரஞ்செய்து மனங்களிக்கவும், மலைகளென்னும்படிப் பிரகாசிக்கின்ற பன்னிரண்டு தோள்களும் விளங்கவும், நன்மையும் பசுமையுள்ள சிறகுகளை யுடைய மயிலாகிய குதிரையைநடத்தி அழகு நிறைந்த அவ்விவாக மண்டபத்தை யடைந்தார். எ-று. (சுடு)

மதிக்கு மெண்டிசைக் கதிபரோ டுருத்திரர் வசுக்கள்
கதிக்கு மேனைய விமையவ ருரகரா காசர்
விதிக்கு மாதவர் சித்தர்மற் றெனையரும் விரைந்து
துதிக்கு மேமகல் யாணமண் டபத்திடைத் தொக்கார்.

(இ-ள்.) யாவரும் நன்கு மதிக்கப்பட்ட அஷ்டதிக்குப்பாலரும், பதினொரு வருத்திரர்களும், அஷ்டவசுக்களும், மிகுந்த மற்றைய தேவர்களும், நாகலோகத்தாரும், ஆகாயவாசிகளும், (எவற்றையும்) படைக்கவல்ல பெரிய தவத்தினர்களும், சித்திபெற்ற யோகியர்களும், மற்றும் யாவர்களும் விரைவாகக் கண்டோர் புகழ்கின்ற பொன்னாலமைந்த விவாகமண்டபத்தினிடத்து வந்து கூடினார்கள். எ-று. (சுசு)

ஈண்டு மற்றிவை நிகழ்தரு மேல்வைபா ரிடமுற்
றாண்டு வாழ்வுயர் தேவல பூபதி யருளாற்
றூண்டு சாரண ருரைப்பவெவ் வரசருந் துறுமித்
தேண்டு சீர்கொளா மோதமா நகரிடைச் சேர்ந்தார்.

(இ-ள்.) இந்தச் சூரியதேவனுடைய நகரில் இக்காரியங்கள் நடந்து வருங்காலத்திலே, பூவுலகமுழுமையும் ஆண்டு வாழ்கின்ற வுயர்ந்த தேவாங்க முனிவனென்னு மரசன், கிருபையினாலே அனுப்பப்பட்ட தூதர்கள், விவாக முகூர்த்தகாலத்தைத் தெரிவிக்கப் பூலோகவரசர்கள் யாவரும், தேடப்பட்ட சிறப்பினையுடைய ஆமோதநகரினிடத்து நெருங்கிவந்து சேர்ந்தார்கள். எ-று.

அங்கர் கேரளர் பப்பரர் கேகயர் யவனர்
வங்கர் மாளவர் குச்சரர் கன்னடர் மராடர்
கிங்கா சினர்பாஞ் சாலர்மத் திரர்குரு நாடர்
சிங்க ளாதிபர் முதற்பல தேசருஞ் செறிந்தார்.

(இ-ள்.) அங்கதேசத்தாரும், கேரளதேசத்தாரும், பப்பரதேசத்தாரும், கேகயதேசத்தாரும், யவனதேசத்தாரும், வங்கதேசத்தாரும், மாளவதேசத்தா

ரும், குச்சரதேசத்தாரும், கன்னடதேசத்தாரும், மராடதேசத்தாரும், கொங்கதேசத்தாரும், சினதேசத்தாரும், பாஞ்சாலதேசத்தாரும், மத்திரதேசத்தாரும், குருநாடரும், சிங்களதேசவரசரு முதலாகிய பலதேசவரசர்களும் ஆமோதநகரை யடைந்தார்கள். எ - று. (சஅ)

நேர்ந்த மன்னவர் தம்மொடுந் தேவல நிருபன்
தேர்ந்த மந்திரர் சேனைப்பற் பலபுடை செறிய
வார்ந்த வாயிரங் கதிரவன் பதிசெல மதித்துக்
கூர்ந்த சீர்மணிக் கொடிஞ்சியந் தேர்மிசைக் கொண்டான்.

(இ-ள்.) தேவாங்கமுனிவனுகிய அரசன், ஆமோதநகரின்கண் வந்த அரசர்களுடனே, நீதிநூல்களைக் கற்றுத்தெளிந்த மந்திரிகளும், பற்பல சேனைகளும், தன் பக்கத்திற்சூழ்ந்துவர, நீண்ட ஆயிரங் கிரணங்கள்வாய்ந்த சூரியதேவனுடைய நகரத்திற்குச் செல்லும்படிநினைத்து,மிகுந்த சிறப்பினையுடைய மணிகளமைந்த சிகரமுள்ள அழகிய தேரின்மீதேறினன். எ - று. (சக)

கடலெ னும்படி கடகளி றெழுந்தன கடலிற்
படர்செ ழுந்திரை யெனவெழுந் தனகடும் பரிகள்
தடநெ டுங்கிரி யெனவெழுந் தனரதந் தனங்க
ளடல்கெ ழும்பதா திகள்வரம் பிலவெழுந் தனவே.

(இ-ள்.) மதங்களையுடைய யானைகள், (மிகுதியால்) சமுத்திரமென்று சொல்லும்படியெழுந்தன; வேகமுள்ள குதிரைகள் அச் சமுத்திரத்திற்பரவிய செழித்த அலைகளென்று சொல்லும்படி யெழுந்தன; தேர்கள் அகலமும் நீளமுமுள்ள மலைகளென்னும்படி யெழுந்தன; வெற்றிபொருந்திய காலாட்படைகள் அளவில்லாதவைக ளெழுந்தன. எ - று. (ருo)

கவினி லங்கிய கதிருமிழ் பலமணிக் கவிகை
துவசம் பீலிசார் தாற்றிமற் றேனவுந் துவன்றித்
தவனன் நீவிர மறைத்திருள் செயத்தர ணிபர்தந்
திவள்பைம் பொற்றட மகுடகாந் திகளதைச் சிதைக்கும்.

(இ-ள்.) அழகு விளங்குகின்ற காந்தியைக் கக்குகின்ற பல முத்துக் குடைகளும், கொடிகளும்,ஆலவட்டங்களும், கால்செய் வட்டங்களும், இவையல்லாத மற்றவிருதுகளும் நெருங்கிச் சூரியனுடைய கிரணங்களை மறைத்து இருளையுண்டாக்க, அவ்விருளை அரசர்களுடைய விளங்குகின்ற பசிய பொன்னாற்செய்யப்பட்ட விசாலமாகிய கிரீடங்களின் காந்திகளானவை போக்கும்.

முன்ன டந்திடு படைகளா னிலத்தெழு முதிர்தூண்
மின்ன ரும்புயல் குலவிய விசும்பெலா மறைத்து

பின்ன டார்த்தலை கடற்குழி திடர்படப் பெருக்கித்
துன்னு மெண்டிசைக் கயக்கவுட் பள்ளமுந் தூர்க்கும்.

(இ-ள்.) முன்னே நடந்து செல்லுகின்ற சேனைகளாலே, பூமியினின்று மெழுகின்ற மிக்க புழுதிகளானவை, மின்னலும் அரிய மேகங்களுஞ் சஞ்சரிக்கின்ற ஆகாயமெல்லா மறைத்து, அதன்பின்பு நெருங்கிய அலைகளையுடைய சமுத்திரமாகிய குழியை மேடுபடும்படிப் பெருகச்செய்து, நெருங்கிய எட்டுத்திக்கு யானைகளின் கபோலக்குழிகளையும் நிரப்பும். எ-று. (ருஉ)

வயிர வெண்பிறை மருப்புடைக் கயம்பொழி மதமும்
பயில்க டுங்கதிக் கலினவெம் பரிவிலா ழிகளுந்
கயில்செ றிந்தபொற் கலனணி யரசர்தோள் கமழு
மயிலு றும்பனி நீருமம் மறுகள் ளுக்கும்.

(இ-ள்.) வச்சிராயுதத்தையும் வெண்மையாகிய இளம்பிறையையுமொத்த கொம்புகளையுடைய யானைகள்சிந்துகின்ற மதங்களுஞ் சஞ்சரிக்கின்ற வேகமாகியநடையினையுடையகடிவாளமணிந்த வெவ்வியகுதிரைகளினுடைய வாய்நுரைகளும், சடைப்புணர்வு நெருங்கிய பொன்னாபரணங்களை யணிந்த கைவேலேந்திய அரசர்களுடைய தோள்களில் மணம் வீசுகின்ற பனிநீரும் அந்த வீதிகளையெல்லாஞ் சேறுகும்படிச் செய்யும். எ-று. (ருங)

கோடு சல்லரி காகளந் தவில்குட முழவம்
பாடு வெள்வளை துந்துபி தடாரிபொற் பணவம்
பீடு சால்பணை கிணிகுளிர் தண்ணுமை பிறவு
நீடு வேலையே ழுடைந்தென வியம்பின நெருங்கி.

(இ-ள்.) ஊதுகொம்பும், பம்பையும், எக்காளமும், தவி லென்னும் பறையும், குடமுழாவும், பெருமை பொருந்திய வெண்மையாகிய சங்கமும், துந்துபியும் பேரிகையும், பொன்னாற்செய்யப்பட்ட தம்பட்டமும், பெருமை மிகுந்த புல்லாங்குழலும், கைத்தாளமும், ஒலிக்கின்ற மத்தளமும்; மற்ற வாத்தியங்களும் நீண்ட எழுகடல்களு முடைந்தாற்போல மிகுந் தொலித்தன.

வேந்தர் பன்மணி மகுடமு மகுடமு மிடைந்த
காந்தி கொண்டபொன் னிரதமு மிரதமுங் கடிது
போந்தெ ரிந்திட வவைதொறு முதிர்பொடி போர்த்துப்
பாந்த ளேந்திய பார்சுர ருலகையும் பழிக்கும்.

(இ-ள்.) அரசர்களுடைய பலமணிகளாற் செய்யப்பட்ட முடிகளும் முடிகளும் நெருங்கின; ஒளியையுடைய பொன்னாற் செய்யப்பட்ட தேர்களும் தேர்களும் விரைந்து செல்லாநிற்க அவைகளினின்றும் உதிர்கின்ற பொற்பொடிகளால் மூடப்பட்டு, ஆதிசேடனாற் சுமக்கப்பட்ட பூமியானது

பிரகாச மிகுதியால் தேவருலகாகிய அமராவதிப்பட்டணத்தையும் நீ ஒளிபெற் றிலையெனப்பழிக்கும். எ று. (ருரு)

அணங்க னார்பல ரணிமணிக் கவரிகா லசைப்ப
வணங்கு நூலெனு மருங்குலா ரிசைத்திரு மருங்கு
மிணங்கு கீதமு மபிநய நடனமு மியற்ற
குணங்கு லாவுறு வந்தியர் புகழ்வளங் கூற.

(இ-ள்.) தெய்வப்பெண்களையொத்த அநேகம் பெண்கள் அழகிய மணிகள் பதித்த சாமரங்களின் காம்புகளைப்பற்றி வீசவும், துவளுகின்ற நூலென்று சொல்லத்தக்க இடையையுடைய பெண்கள் கூடி நின்று, இரண்டு பக்கங்களிலும் பொருந்திய பாடலும், அபிநயத்தோடு கூடிய நடனமும் செய்யவும், தேவாங்கமுனிவனுடைய நற்குணம் பொருந்திய மங்கலபாடகர்கள் புகழின் வளப்பங்களைக் கூறவும். எ - று. (ருசு)

மகர குண்டல மகுடமுங் கதிர்கள்போல் வயங்கச்
சிகர வண்கிரி பொருதடந் தேர்மிசைச் சிறந்து
புகழ்பெ றுஞ்சிலை மதனனும் புறமிடப் புனித
வகமு கிழ்ந்துதே வலன்மணிச் செழுமறு கடைந்தான்.

(இ-ள்.) மகரகுண்டலங்களும் கிரீடமும் சூரியனைப்போலப் பிரகாசிக்க, சிகரங்களையுடைய வளப்பமுள்ள மலையை யொத்த விசாலமாகிய தேரின் மீது சிறப்பாகஏறி, கீர்த்திபெற்ற கரும்புவில்லை யேந்திய மன்மதனும் முதுகு காட்டி யோடும்படி பரிசுத்தமாகிய மனமானது மகிழ்ச்சியடைந்து, தேவாங்கமுனிவன் அழகினையுடைய செழிய வீதிகளின் வழியாகச்சென்றான். எ - று.

மறுகி டைத்தடத் தேர்மிசைத் தேவலன் வரலும்
நறும லர்க்குழற் பிறைநுதற் கயல்வரி நயனத்
துறுமு லைப்பொற்பொறிக் கனதனத் தோகையர் பலரும்
உறும துப்பெருக் கெதிர்ந்தவண் டொப்பென வளைந்தார்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன், வீதியினிடத்து விசாலமாகிய தேரின்மீது வந்தவுடனே, வாசனை பொருந்திய பூக்களையணிந்த கூந்தலையும், மூன்றாம் பிறைபோன்ற நெற்றியையும், கெண்டைமீன்போன்ற இரேகையுள்ள கண்களையும், நெருங்கிய பொன்போன்ற தேமல் படர்ந்த பருத்த முலைகளையுடைய பெண்கள் பலரும், மிகுந்த தேன் பெருக்கை யடைந்த வண்டுகளை யொப்பென்னும்படி வந்து கூடினார்கள். எ - று. (ருஎ)

அனங்க வேள்விடுத் திடுமரு மலர்க்கணை யடாத
தனங்கள் விம்முற விடையொசிந் திடவுடை தளர

கனப்ப யின்றபொற் கையினுன் புயவெழில் கண்டு
மனங்கு லாமய லொடுதொட ருவர்பல மாதர்.

(இ-ள்.) மேகம் போலும் (கொடைத்தொழிலில்) பழகிய அழகிய கரங்களையுடைய தேவாங்கமுனிவனது தோள்களின் அழகைப்பார்த்து மன்மதனுல் எய்யப்பட்ட அருமையாகிய புட்பபாணங்கள் தைக்குதலால் முலைகள் பூரிக்க, இடை துவள, ஆடைகள் சோர, மனத்தில் பொருந்திய காமவிச்சையோடு பல பெண்கள் (பின்) தொடர்ந்து செல்வார்கள். எ-று.

கனம் பயின்ற என்பதற்கு மேகங்கள் கொடைத் தொழிலைக் கற்ற எனினுமாம். (ருக)

இந்த வென்றிமன் னவர்பிரான் புயந்திளைத் திணங்க
முந்து றுந்தவம் புரிகிலீர் நீரென முனிந்து
சந்த னம்புனு கணிந்தடி படர்ந்தெழுந் தோங்கு
மந்த ரம்பொரு கொங்கையை வைவர்பன் மாதர்.

(இ-ள்.) பலபெண்கள் சந்தனமும் புனுகும் பூசி, அடிகனத்து விசாலித்தெழுந்த தங்களுடைய மந்தரமலையையொத்த முலைகளைப் பார்த்து, இந்த வெற்றியையுடைய அரசர்க்கரசனுகிய தேவாங்கமுனிவனது தோள்களைச் சேரும்படி முற்காலத்தில் மிகுந்ததவங்களை நீங்கள் செய்தீர்களில்லை யென்று கோபித்து வைவார்கள். எ-று. (கூ0)

இவன்க லந்தமு தயின்றிடப் பெறுதநம் மிதழ்கள்
சிவந்தி ருந்ததாற் பயனெவ னென்பராற் சிலபேர்
அவம்பி றந்தன மினியிவன் மார்பினு டணையத்
தவம்பு ரிந்திடு வோமெனச் சிலர்மனந் தளர்வார்.

(இ-ள்.) இந்தத் தேவாங்கமுனிவன் கூடி அமுதுண்ணப்பெறுத நம்முடைய இதழ்களானவை செம்மை நிறம் பெற்றிருத்தலினுற் பிரயோசனம் யாது? என்று சில பெண்கள் சொல்வார்கள்; சில பெண்கள் நாம் வீணே பிறந்தோம், இனி இவனதுமார்பினேடு கூடும்படித் தவஞ்செய்வோமென்று மனந்தளர்வார்கள். எ-று. (கூக)

தொற்று மத்தடந் தேர்த்துர கதங்களைத் தொடர்ந்து
போற்றி யன்பொடு பணிந்தினி நீவிரிப் பொழுது
மாற்ற ருந்திறல் வேந்தெழில் கண்டுநா மகிழ
வாற்றி மெல்லெனச் செல்லுமென் றெருசில ரறைவார்.

(இ-ள்.) சில பெண்கள், தங்கள் முன்காணப்பட்ட விசாலமாகிய தேரிற் பூட்டிய குதிரைகளைத் தொடர்ந்து சென்று தோத்திரஞ்செய்து, பிரியத்துடனே நமஸ்கரித்து, இனி நீங்கள் இப்பொழுது பிறரால் நீக்கமுடியாத வல்லமையையுடைய தேவாங்கமுனிவனது அழகைப்பார்த்து நாங்கள் களிப்ப

டையும்படி (வேகத்தை) ஆற்றி மெதுவாகச் செல்லக்கடவீர்களென்று சொல்லுவார்கள். எ-று. (௬௨)

நொய்ய காந்தளங் கரத்துறை சுகங்களை நோக்கிப்
பைய நீவிர்சென் றளவிலா மணிக்கதிர் பரப்புஞ்
செய்ய தேர்மிசை வருமிவன் செவியினு டெமது
மையல் யாவையும் வழுத்துமி னென்பர்பன் மாதர்.

(இ-ள்.) பெண்கள், மென்மையாகிய காந்தள்மலர்போன்ற அழகிய தங்கள் கைகளில் இருக்கின்ற கிளிகளைப்பார்த்து, நீங்கள் மெல்லப்போய் எல்லையில்லாத இரத்தின கிரணங்களைப் பரவச் செய்கின்ற செவ்விய தேரின்மீதுவருகின்ற இந்தத்தேவாங்கமுனிவனது திருச்செவியில் எங்களுடைய காமவிகாரமுழுதுஞ் சொல்லுங்கள் என்று சொல்லுவார்கள். எ-று. (௬௩)

சிங்க வேறனை திருவெழில் கண்டுளந் திகைத்துக்
கொங்கை மீதெலாம் பசலைபோர்த் திடக்கொழுங் காந்த
ளங்கை சூழ்வளை கலையிழந் தரிவைய ரனந்தர்
தங்க ளாசையாற் கனவுகொ லிவையெனத் தளர்வார்.

(இ-ள்.) ஆண்சிங்கத்தை யொத்த தேவாங்கமுனிவனுடைய கண்டோரால் விரும்பப்படுந் தன்மையுள்ள அழகைப்பார்த்து மனம் பிரமைகொண்டு, முலைகளின் மேலிடமெல்லாந் தேமல்போர்ப்ப, செழித்த காந்தள் மலரையொத்த அழகிய கைகளிற்சூழ்ந்த வளைகளும் ஆடைகளும் போக்கி, அநேகம் பெண்கள் தங்கள் ஆசையினால் இவை கனவோவென்று வாட்டமடைவார்கள்.

மாத ரார்பல வகைமயல் பெருகவேன் மன்னன்
வேத பாரகர் பரவவே னையரொடும் விரைந்து
கோதை சூழ்புயப் பரிதிவா னவனெதிர் கொளப்போய்ப்
போத ருதகல் யாணமா மண்டபம் புக்கான்.

(இ-ள்.) பெண்களுக்குப் பலவகை மோகம் பெருகும்படி வேலாயுதத்தை யேந்திய தேவாங்கமுனிவன், பிராமணர்கள் தன்னைச்சூழ்ந்துவர மற்ற அரசர் முதலியரோடும் சீக்கிரமாகப் பூமாலையையணிந்த புயத்தையுடைய சூரியதேவன் எதிர்கொண்டழைக்கச்சென்று, மலர் நீங்காத விவாகமண்டபத்தை யடைந்தான். எ-று. (௬௫)

ஆய காலையி லமலையோர் பாகனு ரருளாற்
சேய மாமணி முடியிமை யவர்பலர் திரண்டு
சாயல் கூர்தடம் புயவரைத் தேவலன் றனக்குத்
தூய தாமண வொப்பனை செய்திடச் சூழ்ந்தார்.

(இ-ள்.) அப்படிப்பட்ட சமையத்தில், பார்வதிதேவியாரை ஒரு பாகத்திலுடைய சிவபெருமானது கட்டளையினாலே, சிவந்த பெரிய இரத்தின

கிரீடங்களை பணிந்த வல் தேவர்கள் கூடி, அழகு மிகுந்த விசாலமாகிய மலை போன்ற தோள்களையுடைய தேவாங்கமுனிவனுக்குப் பரிசுத்தமாகிய திருமணக்கோலஞ் செய்யும்படி சூழ்ந்தார்கள். எ-று. (௬௬)

வான ருகிப் புனிதநீர் கொணர்ந்துவா மகிழ்கூர்ந்
தான நான்மறை யார்த்தெழ மஞ்சன மாட்டி
மேனி லாவுறு புகழினன் மருங்குவில கக்
கான ருமணிக் கனகமென் றுகிலலங் கரி ார்.

(இ-ள்.) ஆகாயத்தினின்றும் நீங்கா பரிசுத்தம கியகங்கையைக்கொண்டுவந்து, மனக்களிப்பு மிகுந்து, நான்குவேதங்களு சத்திக்க ஸ்நானஞ்செய்வித்து, தேவலோகம் வரையினும் விளங்கியகீர்த்தியையுடைய தேவாங்கமுனிவனது இடையில் விளங்கும்படி மணநீங்காத மணிகளாலும் பொன்னாலும் அமைந்த மெல்லிய ஆடையால் அலங்கரித்தார்கள். எ-று. (௬௭)

துங்க மாமணிக் கதிருமிழ் தடமுடி சூட்டிப்
பொங்க மேவுறு பொலங்குழை கொழுஞ்செவி புனைந்து
திங்கள் சூழ்வட கிரிப்புயத் தங்கதஞ் சேர்த்தித்
தங்க வாபர ணம்பல கரத்திடைத் தரித்தார்.

(இ-ள்.) பரிசுத்தமாகிய பெருமையுள்ள இரத்தினங்கள் காந்தியைக்கக்குகின்ற விசாலமாகிய கிரீடத்தைச்சூட்டி, அழகு பொருந்திய பொன்னாலாகிய குண்டலங்களைக் கொழுமையுள்ள காதுகளில் அணிந்து, சந்திரன் சூழ்கின்ற மேருமலைபோன்ற புயத்தில் தோளணியென்னும் ஆபரணங்களையணிந்து, கைகளில் பொன்னாபரணங்கள் பலவற்றையணிந்தார்கள். எ-று. (௬௮)

சிலம்பெ னும்படி பரந்தொளிர் செழுந்தட மார்பி
லலங்கு பன்மணி யாரம தெண்ணில வணிந்து
வலங்கொ ளுங்கழல் வலப்பத மீமிசை வனைந்த
இலங்கு பொற்கல னுவு முறைமுறை யிசைத்தார்.

(இ-ள்.) மலையென்று சொல்லும்படி விசாலித்து விளங்குகின்ற செழித்த மார்பினிட்டுத்து அசைக்கின்ற பல மணிகளாற் செய்யப்பட்ட மாலைகள் பலவற்றையணிந்து, வெற்றிபொருந்திய வீரக்கழலை வலது பாதத்திற்கட்டி, விளங்குகின்ற பொன்னாபரணங்கள் பலவற்றையும் வரிசையாக அணிந்தார்கள். எ-று. (௬௯)

அண்டர் பற்பல வெழில்புரிக் கைங்கணைக் கரசுங்
கண்ட கத்துவெள் குறவா னளித்தகா வலனை
மண்ட பத்திடை வயங்குபொற் பீடிகை மீதி
லெண்டி சைத்தலை வருந்துதி செய்விருத் தினரால்.

(இ-ள்.) தேவர்கள் பலபலவாக அலங்காரஞ்செய்து, பஞ்சபாணங்களையுடைய மன்மதனுங் கண்டு மனத்தில் வெட்கமடையும்படி சிவபெருமானாற் பெறப்பட்ட தேவாங்கமுனிவனைக் கலியாண மண்டபத்தினிடத்து விளங்குகின்ற பொன்னாசனத்தின்மேல் அஷ்டதிக்குப்பாலகர்களும் துதிக்கும்படி எழுந்தருளப்பண்ணினார்கள். எ - று.

ஐங்கணைகளாவன முல்லை, அசோகு, நீலம், மா, தாமரை என்பன.

ஆத னத்தெழு ந்தருளிய தேவல வரசை
காத லுற்றிரு கண்களாற் கண்டுளங் களித்து
மாதர் பற்பலர்க் கூறினர் நந்திரு மாதை
மேத கக்கொண ருதிரிவ ணென்றனன் வெய்யோன்.

(இ-ள்.) சூரியதேவன், ஆசனத்தின்கண் எழுந்தருளிய தேவாங்கமுனிவனாகிய அரசனை,ஆசையோடும் இரண்டு கண்களாலும் பார்த்து, மனக்களிப்படைந்து, பல பெண்களை யழைத்து, நீங்கள் நம்முடைய அழகிய தங்கையாகிய தேவதத்தையை மேன்மையோடு இக்கலியாணமண்டபத்துக்கு அழைத்துவாருங்கள் என்றான், எ - று. (எக)

பானு மற்றிது பகரலு நன்றெனப் பரவி
நீனி றக்குழற் பைந்தொடி வனிதையர் நெடிய
வேனி கர்த்தகட் டேவதத் தைப்பெயர் மேவு
மானி ருக்குமக் கன்னிமா டத்திடை வந்தார்.

(இ-ள்.) நீலநிறமுள்ள கூந்தலையும், பசிய வளையல்களையும் உடைய பெண்கள், சூரியதேவன் இவ்வாறு சொன்னவுடனே நல்லது என்று வணங்கி, நீண்ட வேலையொத்த கண்களையுடைய தேவதத்தை யென்னும் பெயர்வாய்ந்த மான்போன்ற பெண் இருக்கின்ற கன்னிமாடத்தினிடத்து வந்தார்கள்.

மற்று-அசை. ...வம ஆகுபெயர். (எஉ)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கரும்புயல் வரைக டொறுந்திரிந் தலையக்
காத்தலை பயப்படக் கடுக்கை
யரும்பெருங் கானத் தடையவண் டினங்க
ளலமரக் கடிந்தற மறியார்
வருந்துறு மனம்போ லிருள்குடி யிருந்து
மான்மதங் காசறை நீவித்
தரும்புகை கமழ்ந்து சினைமலர்ப் படலை
தரித்தறச் செறிந்தபூங் குழலாள்.

(இ-ள்.) கரிய மேகங்களானவை மலைகளெவ்விடங்களிலுஞ் சென்று அலையவும், சோலைகளின் முடிகளானவை அஞ்சவும், கொன்றை மரங்கள்

அரிய பெரிய காட்டினிடத்துச் செல்லவும், வண்டுக்கூட்டங்கள் சுழலவும் அவற்றைநீக்கி, தருமத்தையறியாதவரது வருந்துகின்ற மனம்போல இருள் குடிகொண்டிருந்து, கஸ்தூரியும், மயிர்ச்சாந்தும் பூசி, ஊட்டப்பட்ட (அகில் முதலிய) புகைமணந்து, கொம்புகளின் மலர்ந்த மலர்மாலை சூடி, மிக நெருங்கிய பொலிவுள்ள கூந்தலையுடையவள். எ - று.

கா தலை பயப்பட என்பதற்கு-சோலை தன்னிடத்துக் காய் முதலிய பலனுண்டாக எனச் சிலேடையாகக் கூறினர். (எக)

திங்களங் குழவி சங்கரன் சடையிற்
சென்றடைக் கலம்புகச் சீறிப்
பொங்குறு திலதம் புனைந்துமாற் றுயர்ந்த
பொன்னிறம் படைத்தநன் னுதலாள்
வெங்கணை மதனு மிரதியுங் குனித்த
வேழமென் சிலைகள்போல் விளங்கி
மங்குறு முனிவோர் மனத்தையுங் கவர்ந்து
வடிவுதங் கியபுரு வத்தாள்.

(இ-ள்.) பிறைச்சந்திரனானவன், சிவபெருமானுடைய சடையினிடத்துப்போய் அடைக்கலம் புகும்படிக் கோபித்து, விளங்குகின்ற திலகந்தரித்து, மாற்றுயர்ந்த பொன் போலும் நிறம் பெற்ற நல்ல நெற்றியை யுடையவள்; (விரக) வெம்மையைச் செய்கின்ற மலரம்புகளையுடைய மன்மதனும், இரதிதேவியும் வளைத்த மெல்லிய கரும்புவிற்களைப்போலப் பிரகாசித்து, அழிவில்லாத முனிவருடைய இருதயத்தையும் கவர்ந்து, அழகு தங்கிய புருவத்தினையுடையவள். எ - று. (எச)

தடக்கட லலைத்துக் கயல்கருங் குவளை
சலத்திடைப் படிந்திடத் தள்ளி
மடற்குழை யிடித்துக் குமிழ்மிசை மறிந்து
வாள்கணை கடைப்பட வாட்டி
விடத்தினுங் கறுப்புந் தமுதினும் விளர்த்து
வேலினுங் கூர்ந்தரி பரந்து
நிடக்கொலைத் தொழிலின் மறலியைப் பயிற்றிச்
செயங்குடி யிருந்தமை விழியாள்.

(இ-ள்.) விசாலமாகிய சமுத்திரத்தை அலையச்செய்து, கெண்டைமீன்களையும் கரிய நீலமலர்களையும் நீரினிடத்து முழுகும்படித் தள்ளி, பூவிதழ் போலுங் காதுகளிலுள்ள குண்டலங்களைத் இடித்து, குமிழமலர்போன்ற நாசியில் தடைபட்டு, வாளும் அம்பும் முதுவடைய அவைகளை வருத்தி, விஷத்தைப்பார்க்கினும் கருமையையும், அமுதைப்பார்க்கினும் வெண்மையையும்

..ப்பார்க்கினும் கூர்மையையுமடைந்து, இரேகை பரவி, திடமாகிய கொலை த..தாழிலில் எமதருமராசனைப் பழக்கி, வெற்றி குடியிருந்ததையொத்த மையெழுதிய கண்களையுடையவள். எ - று. (எரு)

மருக்கமழ் குமிழ மலரினை வாட்டி
வடிவுவிற் றிருந்தா ..கையாள்
திருக்கிளர் செழுந ..ளிகத்தினைக் கடிந்து
திகழ்க.. ணணிந்துமா முனிவோர்
சருத்திருந் தாடூ மூசல்போன் றுலவு
கனமணிக் குழையினள் காமன்
உருத்தரு விழிவா ளட்டிய சாணைக்
கொப்பென வொளிர்கபோ லத்தாள்.

(இ - ள்.) வாசனை வீசுகின்ற குமிழமலரினை வருத்தி, அழகு தங்கியிருந்த மூக்கினையுடையவள்; அழகு விளங்குகின்ற செழுமையுள்ள வள்ளைக்கொடியை நீக்கி, விளங்குகின்றஆபரணங்களையணிந்து, பெருமையுள்ள முனிவரது ..வினவானது தங்கி ஆடும்படியாகிய ஊசலையொத்து உலாவுகின்ற பெருத்த இ.. தினகுண்டலங்களை யணிந்தகாதுகளையுடையவள்; மன்மதனது அழகுள்ள மேன்மையுடைய கண்களாகிய வாளைத்தீட்டிய சாணைக்குச் சமானமென்னும்படி விளங்குகின்ற கபோலத்தை யுடையவள். எ - று. (எசு)

குமுதமு முருக்குங் கமலமுஞ் சிவந்த
கொவ்வையுங் கோபமும் வெள்க
வமுதிருந் தெழுந்த மதுரமெல் லிதழா
..முருந்தள வரும்பினை யலர்த்தி
..கதிர்த் தாள மணிகளைத் துளைத்து
நிறைசெழு முருந்தினை மறைத்துத்
திமிர்திரு வள்.. யாசு.. ..ந்து
சிறந்தொளிர் .. ..கபங் கி..ளுள்.

(இ - ள்.) செவ்வாம்பன்மலரும், முருக்கமலரும், செந்தாமரைமலரும், சிவந்த கொவ்வைக்கனியும், தம்பலப்பூச்சியும் வெள்கும்படி, அமிர்..ம் தங்கி வெளிப்பட்ட மதுரமுள்ள மெல்லிய இதழ்களை யுடையவள்; அரு..மையாகிய முல்லையரும்பை மலரச்செய்து, மிக்ககிரணத்தையுடைய முத்துக்க..க் துளைசெய்து, நிறைந்த செழித்த மயிலிறகினடியை (அதனுடலில்) மறைத்து, வ..ர்த்த அழகின் செல்வமானது அரசு பூண்டிருந்து மேம்பட்டு விளங்குகின்ற பல்வரிசையை யுடையவள். எ - று. (எஎ)

கோபம்-பட்டுப்பூச்சி பென்பாரும் உளர்.

கலைகளெண் ணிரண்டுங் குறைவற நிறைந்த
களங்கமின் மதியெனக் கவின்கொண்
டிலங்கிய கருணை முகத்தினுண் முகுந்த
னேந்திய வளைபுற மிடவ
றலைவரு மிளம்பூங் கமுகினைத் துறந்த
வணிமணிக் கழுத்தின ளமுத
நிலைகெழு கரும்புங் கழையுமுஞ் சலிப்ப
நிமிர்ந்தெழு மென்றடம் புயத்தாள்

(இ-ள்.) சோடச கலைகளும், குறைவில்லாமனிறைந்த களங்கமில்லாத சந்திரனென்று சொல்லும்படி அழகு கொண்டு விளங்கிய கருணையுள்ள முகத்தினையுடையவள்; திருமால் தாங்கிய பஞ்சசன்னியம் என்னும் சங்கமானது பின்னடையக் குற்றமில்லாத இளமையுள்ள அழகிய பாக்குமரத்தை வேறாக நீக்கிய ஆபரணங்களை யணிந்த அழகிய கண்டத்தினை யுடையவள்; அமுதந்தங்கிய கரும்பும், மூங்கிலும் வணங்கும்படி உயர்ந்தெழுந்த மெல்லிய விசாலமாகிய புயங்களையுடையவள். எ-று. (எஅ)

கறங்கிசை மகர வீணைவெந் கொடுப்பக்
கதிர்வளை புனைந்தமுன் கரத்தாள்
மறந்திரை நரையுந் தவிர்தர வமுத
மகிழ்ந்தருள் காந்தளங் கையினள்
திறந்தகும் பவளக் கடிகையிற் சிறந்து
திரண்டழ கொழுகுமங் குலியாள்
நிறங்கிளர் கிள்ளை யலகினுஞ் சிவந்து
நிரைநிரை நிலவுகூ ருகிராள்.

(இ-ள்.) இராகம் ஒலிக்கின்ற மகரமீன்போலும் வடிவுள்ள வீணை புறங்கொடுக்கும்படி காந்தியுள்ள வளையல்களையணிந்த முன்னங் கைகளையுடையவள்; கொலையும்-திரையும்-நரையும் நீங்கும்படி, அமுதத்தை மகிழ்ந்து கொடுக்கின்ற காந்தள்போலும் அழகிய கைகளையுடையவள்; வலிமையும் மேன்மையுமுள்ள பவளத்துண்டங்கள்போலச் சிறப்புற்றுத் திரண்டு அழகு சிந்தாநின்ற விரல்களையுடையவள்; செம்மை நிறம் விளங்குகின்ற கிள்ளை மூக்கினைப் பார்க்கினும் சிவந்து வரிசை வரிசையாக விளங்குகின்ற கூரிய நகங்களையுடையவள். எ-று. (எகூ)

குடங்களைப் பழித்துத் தடமுடிக் கனகக்
குவட்டினை முனிந்துவெண் டரள
வடங்கொடு திரண்டு திடமளை மதனன்
மனத்தையுங் கவர்ந்துமார் பணைத்தும்

படர்ந்திரு மார்த்து சுணங்குபூத் திளகிப்
பரிமளங் குடியிருந் தணிகச்
சடர்ந்துபூ ரித்துப் புளகமுற் றெழுந்த
வமுதபூ ரணவிள முலையாள்.

(இ-ள்.) குடங்களை நிந்தித்து, விசாலமாகிய சிகரங்களையுடைய மகாமேருவைக்கோபித்து, வெள்ளிய முத்துமாலையையணிந்து, திரட்சிபெற்று, வலிமை பொருந்திய மன்மதனுடைய மனத்தையுங்கிரசித்து, மார்புமுழுவதும் பரவி, நிமிர்ந்து, தேமலடைந்து, மிருதுவடைந்து, மணங் குடிகொண்டு அழகிய இரவுக்கைகளை நெருக்கிப் பெருத்துப் புளக மடைந்து ஓங்கிய அமுத நிறைந்த இளமையாகிய முலைகளையுடையவள். எ-று. (அ௦)

மாலினி துறைந்த வடவிளந் தளிர்போல்
வயங்கிய சிறியபண் டியினுள்
கோலமென் மகிழ மலர்வனம் புருதக்
குலவுறு மிலஞ்சியஞ் சுழியாள்
மேலுயிர் களப விளமுலைக் குவட்டில்
வேண்மனஞ் சென்றுசென் றேறப்
பாலுரை வாணி கொழுநனன் றமைத்த
படியெனு மணிமடிப் புடையாள்.

(இ-ள்.) திருமாலானவர் நன்றாக வசித்த ஆலந்தளிர்போல விளங்கிய சிறிய வயிற்றினையுடையவள்; அழகிய மிருதுவாகிய மகிழமலரானது காட்டிற்செல்லும்படி விளங்குகின்ற கொப்பூழாகிய சுழியினை யுடையவள்; மேலாக வுயர்ந்த கலவைச்சாந்தை யணிந்த இளமுலையாகிய மலையின்மேல் மன்மதனுடைய மனமானது பிரவேசித்து ஏறும்படி, பால்போலுஞ் சொல்லையுடைய சரஸ்வதியின் நாயகனாகியபிரமதேவர் செவ்வையாகச் செய்தபடி என்று சொல்லத்தக்க அழகிய மடிப்பினையுடையவள். எ-று. (அக)

களபமென் முலையாங் கடகளிற் றினத்தைக்
கட்டிய மணித்தொடர் கடுப்ப
வளர்தரு முரோம பந்தியா ளுலோபர்
வாழ்வெனத் தேய்ந்தசிற் றிடையாள்
தளமத னிரதத் திகிரிபோற் சிறந்து
தழைமணங் கமழ்கடி தடத்தா
ளிளநறுங் கதலி தளிர்பிடிக் கரம்பின்
னிடும்படி யிலங்குபொற் றொடையாள்.

(இ-ள்.) கலவைச்சாந்தையணிந்த மென்மையுடைய முலையாகிய மதமுள்ள யானைக்கூட்டங்களைக்கட்டிய கரிய சங்கிலிகளையொப்பாக வளர்கின்ற வுரோமவொழுங்கையுடையவள்; இரப்பவர்களுக்குக் கொடாத வுலோபிகளுடைய செல்வந் தேய்தல்போலுந் தேய்ந்த இடையினையுடையவள்; சேனைகளையுடைய மன்மதனது தேரைப்போலச் சிறந்து தழைகின்ற மணம் வீசும் நிதம்பத்தையுடையவள்; இளமையுள்ள நல்ல வாழையும், செழித்த பெண்யானைகளின் துதிக்கைகளும் தோற்றோடும்படி விளங்குகின்ற அழகிய தொடைகளை யுடையவள். எ-று. (அ௨)

மலிசினை யலவ னளைபுக முனிந்து
மணிமுழந் தாளினுண் மதவேள்
நலிவுறு வெற்றி குறித்திட விதிமுன்
னல்குபொற் காகள நடுங்க
வொலிமலர்க் கணைபெய் தூணிவெந் நிடச்சென்
றுறுவரால் புனலிடத் தொளிப்பக்
கலிகதிர் பரப்புங் கலன்பல வணிந்து
கவின்கெழு மிருகணைக் காலாள்.

(இ-ள்.) மிக்க உறுப்புக்களையுடைய நண்டுகள் வளைகளில் நுழையும்படிக்கோபித்த அழகிய முழந்தாளையுடையவள்; மன்மதனுடைய கெடுதலில்லாத செயத்தைத் தெரிவிக்கும்படிப் பிரமதேவன் முற்காலத்தில் சிருட்டித்த பொன்னாலாகிய எக்காளமானது நடுங்கவும், ஆரவாரத்தினையுடைய புட்பாணத்தை வைத்த கூடானது புறங்காட்டவும், மிக்க வரால்மீன்கள் நீரினுட்சென்றொளிக்கவும், ஓசையுள்ள காந்தியைப்பரப்புகின்ற பலவாகிய ஆபரணங்களையணிந்து அழகு பொருந்திய இரண்டு கணைக்காலையுடையவள் எ-று.

மாரனு மிரதி வனிதையுங் கரத்தான்
மகிழ்ந்தெடுத் தாடுபந் திரண்டு
நேரெனத் திரண்ட குதியினண் மதன
நிறைசுக நிறுத்திடு நிறைபோற்
சீரழ கிமைக்குஞ் செழும்பர டுடையாள்
சிறந்தகோக் கோகநு நீட்டும்
பூரண வின்பப் புத்தக மெனவே
பொலிவுறு பொற்புறந் தாளாள்.

(இ-ள்.) மன்மதனும் இரதிதேவியும் கைகளில் களிப்புடன் எடுத்து விளையாடுகின்ற பந்துகளிரண்டும் ஒப்பென்னும்படி திரண்டகுதிகாலையுடையவள்; காமம் நிறைந்த இன்பத்தை நிறுக்கின்ற தராசுக்கோல்போல சிறந்த அழகான்று விளங்குகின்ற செழித்த பரட்டையுடையவள்; மேம்பட்ட காம

நூலை யெழுதிய பூரண வின்பத்தினையுடைய புத்தகமென்று சொல்லும்படி விளங்குகின்ற அழகிய புறங்காலையுடையவள். எ - று. (அச)

அரிசனங் குரம்போ லணிவிர லுடையா
 ளருங்கழு நீரித ழனைய
வரிசைவா ளுகிரா ளனிச்சமென் மலரை
 வாட்டியம் புயத்தினை யோட்டிப்
பரியுமோ திமத்தின் றூவியைப் பழித்துப
 பருவரைச் செயலையைக் கறுவித்
திரிபுரா வருண வலத்தகக் குழம்பிற்
 செறிந்தசீ ருள்ளடி சிறந்தாள்.

(இ - ள்.) மஞ்சளின் முளையைப்போலும் அழகிய விரல்களை யுடையவள்; அரிய செங்கழுநீர் மலரிதழையொத்த வரிசையாகிய ஒளியுள்ள நகங்களையுடையவள்; மெல்லிய அனிச்சமலரைவருத்தி, தாமரைமலரைத் துறத்தி, அன்புள்ள அன்னப்பறவையின் சிறகைப் பரிகாசஞ்செய்து, பெரிய மலைகளிலுள்ள அசோகமலரைக் கோபித்து, மாறுபடுத லில்லாத செம்மைநிறமுள்ள செம்பஞ்சுக்குழம்பினாற் பூசப்பட்ட சிறந்த பாதங்களாற் சிறப்புடையவள். எ - று. (அரு)

பெருங்களித் தடக்கைப் பிடியையு மெகினப்
 பெடையையும் பயிற்றிய நடையாள்
வருங்குயி லுவக்கு மரகத கலாப
 மயிலெனு மியலினள் வரிவிற்
பொருங்கணை யனங்கன் மதித்ததெள் ளமுதும்
 பொன்றிடா மின்னலும் பொருத்தி
யொருங்குறத் திரட்டி மலரய னமைத்த
 தொத்தொளிர் திருவடி வுடையாள்.

(இ - ள்.) பெருமையும் மகிழ்ச்சியுமுள்ள விசாலமாகிய துதிக்கையை யுடைய பெண் யானையையும், பெண்ணன்னத்தையும் கற்பித்த நடையை யுடையவள்; வருகின்ற குயில்கள் விரும்புகின்ற பசிய கலாபத்தையுடைய மயிலென்று சொல்லத்தக்க சாயலையுடையவள்; கட்டமைந்த கருப்புவில்லையும் பொருதுகின்ற மலரம்புகளையுமுடைய மன்மதன் கடைந்த தெளிவாகிய அமுதத்தையும், அழியாத மின்னலையும் ஒன்றாகச்சேர்த்துத் தாமரைமலரில் வசிக்கின்ற பிரமதேவர் செய்ததை யொத்து விளங்குகின்ற அழகினை யுடையவள். எ - று. (அசு)

களிக்குயி லுடைந்து கறுத்திட வெறுத்துக்
கரும்பினை யாலையாற் கசக்கிக்
கிளிக்குலங் கிரிபுக் கொளித்திட முடுக்கிக்
கின்னரஞ் சிறிதுறப் பற்றி
முளிக்குமெத் தருவுந் தழைந்திட விளித்து
முதிருமென் புயிர்பெற முழுத்தேன்
துளிக்குமுக் கனிதெள் ளமுதினுங் கனிந்த
சுவைகுடி யிருந்தமென் மொழியாள்.

(இ-ள்.) களிப்பினையுடைய குயிற்பறவைகளானவை (மொழிக்குத்) தோற்றுக் கருமையடையும்படி கோபித்து, கரும்பை ஆலையினால் நொறுக்கி, கிளிக்கூட்டங்களானவை மலைப்பக்கங்களிற்சென்று ஒளித்துக்கொள்ளும்படி துரத்தி, வீணையானது பிடிக்கப்பட்டுச் சிறுமையையடைய, உலர்ந்த எவ்வகை மரங்களும் தளிர்க்கவும், இறந்து உலர்ந்த எலும்பு உயிர்பெறவும், முழுமையும் தேன் சிந்துகின்ற மூவகைக்கனிகளினும் தெளிந்த அமிர்தத்தினும் மிகுந்த மதுரமானது குடிகொண்டிருந்த மெல்லிய வசனத்தையுடையவள்.

மூவகைக்கனிகளாவன:—வாழை, மா, பலா என்பனவாம். (அஎ)

தக்கவிவ் வனப்பான் மிக்கவத் தேவ
தத்தையென் பவடனைச் சார்ந்து
மைக்கரு நெடுங்கட் சிலதியர் பலரு
மலர்த்திரு முதல்வனி தையருஞ்
செக்கர்விள் மணிப்பொற் றசும்பினிற் கங்கைச்
செழுநதி நறும்புனல் கொணர்ந்து
பக்கமுற் றிடச்சூழ்ந் தருமறை பகரும்
படித்திரு மஞ்சன மாட்டி.

(இ-ள்.) தகுதியாகிய இவ்வகையழகினால் மிகுந்த அந்தத் தேவதத்தையென்பவளை மையெழுதிய கரிய நீண்ட கண்களையுடைய ஏவல்செய் தோழிப்பெண்கள் பலரும், தாமரைமலரில் வசிக்கின்ற திருமகள் முதலாகிய தேவப்பெண்களும், சிவந்த காந்தியுள்ள மணிகளிழைத்த பொற்குடத்தில் செழுமையுள்ள கங்காநதியைக்கொண்டுவந்து சமீபத்தில் வந்துகூடி, அரிய வேதங்களில் சொல்லிய முறைப்படி ஸ்நானஞ் செய்வித்து. எ-று. (அஅ)

விலைவரம் பறியா நவமணிக் கோவை
விளிம்புசூழ் கிரணமென் கனகக்
கலையிடைக் கணிந்துத் துரியமேற் புனைந்து
கருமுகிற் செழுங்குழன் முடித்து.

மலர்நறுந் தெரியல் சூட்டிமுன் வகிர்ந்து
வயங்கிய சுடிகைநேர் தூக்கித்
திலதநன் னுதற்கீ ழரிபடர் நெடிய
சேல்விழிக் கஞ்சனந் தீட்டி.

(இ-ள்.) விலைமதிக்க அறியக்கூடாத ஒன்பதுவகை இரத்தினக்கோவை அருகிற் சூழ்ந்த காந்தியுள்ள மிருதுவாகிய பொன்னுடையை இடையிற்கட்டி, உத்தரியத்தை மேலே அலங்கரித்து, கரிய மேகம்போலுஞ் செழித்த கூந்தலை முடித்து, மணமுள்ள மலர்மாலையைச் சூட்டி, முன்னே வகிர்ந்து விளங்கிய உச்சிக்கொண்டையை நேராகத் தூக்கிக்கட்டி, திலதமெழுதப்பட்ட நல்ல நெற்றியின்கீழ் இரேகைபடர்ந்த நீண்ட சேல்மீன்போன்ற கண்களுக்கு மை யெழுதி. எ - று. (அகூ)

நித்திலந் தூங்கும் பணிமணித் தளுக்கு
நிறங்கிளர் குமிழிடை நிறுவி
யொத்திரு குழைக்கு மதனுளங் குழைக்கு
முருவுடைக் கலன்பல வணிந்து
நத்தினுந் திரண்ட கந்தர நிறைய
நவைதவிர் சரங்களும் பூட்டிச்
சித்திர முபய முலைக்குந்தோட் டுணைக்குந்
திகழ்தர வினிதெழு தினரால்.

(இ-ள்.) முத்துத்தொங்குகின்ற அழகிய மூக்குத்தி என்னும் ஆபரணத்தை அழகு விளங்குகின்ற குமிழ் மலர்போன்ற நாசியி லணிந்து, இரண்டு குண்டலங்களுக்கு ஒப்பாக மன்மதனுள்ளத்தை யிளகச்செய்கின்ற அழகினையுடைய தேகத்திற் பலஆபரணங்களை யணிந்து, சங்கினுந்திரண்ட கழுத்து நிறையக் குற்றமற்ற மணிவடங்களை யணிந்து, இரண்டு ஸ்தனங்களுக்கும் இரண்டு தோள்களுக்கும் விளங்கும்படி நன்றாகச் சந்தனக்கோல மெழுதினார்கள். எ - று.

சந்தனக்கோலமாவது:—மன்மதன் இரதி இவர்கள்வடிவைக்கிளிவாகனம் கரும்பு வில்லுடன் பெண்கள் முலைகளின்மீது எழுதுவது. குமிழ் - உவமாகுபெயர். ஆல்-அசை. (கூo)

புளகித களப விளமுலை சிறப்பப்
பொலிதரு தூயகச் சணிந்து
வளர்கதிர்த் தரள மணிவடஞ் சூட்டி
மான்மதம் புனுகுமட் டித்துத்

தளநறுங் கமலக் கரங்களிற் கடகஞ்
சரிவளை தொடிபல தரித்து
விளர்விசும் பனைய சிற்றிடைக் கிணங்க
விலைதவி ரிரதன மிட்டார்.

(இ-ள்.) உரோமாஞ்சிதத்தையுடைய கலவைச்சாந்தையணிந்த இளமுலைகளானவை சிறக்கும்படி விளங்குகின்ற பரிசுத்தமாகிய இரவுக்கையையணிந்து, காந்திமிகுந்த முத்து மாலையைத்தரித்து, கஸ்தூரியும் புனுகும் கலந்துபூசி, வாசனையுள்ள இதழ்களையுடைய செந்தாமரைமலர்போன்ற கைகளில் கடகம் வளை கங்கணமுதலிய ஆபரணங்களை யணிந்து, வெண்மையாகிய ஆகாசத்தையொத்த சிறிய இடைக்குத் தக்க விலைமதித்தலில்லாத இரத்தினபரணங்களைத்தரித்தார்கள். எ-று.

சரி வளை - ஒருபொருட் பன்மொழி. (கூக)

அனிச்சமென் மலரிற் பனிப்புறு பதத்திற்
கலத்தக நறுங்குழம் பெழுதித்
தொனித்தெழு கனக நூபுரஞ் சதங்கை
சுடர்மணிப் பாடகஞ் சூழ்வித்
தினிப்பிற வணிக ளனைவுந் தரித்திட்
டிரதியுந் தொழுதுநின் றேத்தத்
தனிப்பெரு மதனுந் தளர்ந்துளங் கலங்கத்
தையலை யலங்கரித் தனரே.

(இ-ள்.) மெல்லிய அனிச்சமலரின்மேல் வைத்தாலும் நடுக்கங் கொள்ளத்தக்க பாதத்திற்கு மணமுள்ள செம்பஞ்சுக்குழம்பெழுதி, சத்தித்தெழுகின்ற பொற்சிலம்பும், சதங்கையும், காந்தியுள்ள இரத்தினபாடகமும் சூழும்படி சூட்டி, மேலும் மற்ற ஆபரணங்கள் பலவுஞ்சூட்டி, இரதிதேவியும் வணங்கி நின்று தோத்திரஞ்செய்ய, ஒப்பில்லாத பெருமையையுடைய மன்மதனும் வாடி மனம் கலங்கும்படி, தேவதத்தையை இவ்வாறு அலங்காரஞ் செய்தார்கள். எ-று. (கூஉ)

இடங்கொள்பாற் கடவி னெழுதிரை பொருவு
கெழிற்கவ ரிகளிரு மருங்கு
நுடங்கிடை மடவார் சிலர்சணின் றிரட்ட
நுவன்மதிக் கவிகைமே னிழற்ற
வடர்ந்தெழு முலையார் சிலர்நறை குலவு
மடப்பைக டாங்கியங் கணைய
விடந்திகழ் விழியா ரளப்பிலர் களப
மென்மலர்க் கோடிக ளேந்த.

(இ-ள்.) விசாலமாகிய பாற்கடலின்கண் வீசுகின்ற அலையையொத்த ... ணாகவித் துவளுகின்ற இடையையுடைய சிலபெண்கள் இரண்டு பக்கங்களிலும் நின்று வீசவும், சொல்லப்பட்ட சந்திரவட்டக்குடைகள் மேலே நிழலைச்செய்யவும், பெருகி யெழுந்த முலைகளையுடைய சிலபெண்கள் வாசனை பொருந்திய தாம்பூலப்பெட்டிகளைத் தாங்கி அவ்விடத்திற்செல்லவும், விஷம்போலும் விளங்குகின்ற கண்களையுடைய அளவில்லாதபெண்கள் கலவைச்சாந்தும், மென்மையாகிய ...ப்பெட்டிகளு மேந்தவும். எ-று. (கூக)

சில்லரிச் சிலம்புஞ் சிறுமணிக் குலமுஞ்
சிற்றிடைக் கிரங்கிய திறம்போற்
கல்லென வொலிப்பத் தாளமா மணிகள்
கலைமதிச் செழுநில வுமிழ
வல்லணி முலைக டதும்பமே கலைகள்
வயங்கவால் வளைதொடி கடகம்
வில்லெறி சரிவாய் விடுத்தெழுந் தார்ப்ப
மென்மலர் பரிமளம் வீச.

(இ-ள்.) ஆரவாரத்தையுடைய பருக்கைக்கற்களுள்ள சிலம்பும், சிறிய பாதசாலமணிக்கூட்டமும் சிறிய இடைக்கு இரக்கமுற்ற தன்மைபோலக் கலீரென்று சத்திக்கவும், முத்துமாலைகள் கலைகளையுடைய சந்திரனது செழுமையுள்ள பிரகாசத்தையுமிழவும், சூதாடுகருவிபோலும் விளங்குகின்ற முலைகளசையவும், மேகலைகள் விளங்கவும், வெள்ளியவளைகளும், கங்கணங்களும், கடகங்களும், பிரகாசத்தைவீசுகின்ற தோள்வளைகளும் வாய்விட்டுச்சத்திக்கவும், மெல்லிய மலர்கள் வாசனையை வீசவும். எ-று. (கூ௨)

பல்லியங் கறங்கப் புலோமிசை வாணி
பங்கயத் திருமுதற் பலருஞ்
சொல்லிய தேவ தத்தைமா மயிலைத்
துதித்தழைத் திருபுடை சூழ்ந்து
மெல்லிய மலரி னிரைப்புவிரித் திருந்த
விழுத்தரு நிலத்திடை நடத்தி
வல்லிய மெனுக்தே வலன்மிகிழ் வுறமுன்
மணித்தவி சிருத்தினர் மாதோ.

(இ-ள்.) பலவாகிய வாத்தியங்கள் முழங்க, இந்திராணியும், சரஸ்வதியும், ...தாமரைமலரில் வசிக்கின்ற திருமகள் முதலாகிய பல தேவமாதரும், இவ்விடத்து ...சடித்துச் சொல்லிய தேவதத்தையாகிய மயில்போன்ற சாயலையுடைய மாதைப்புகழ்ந்து இரண்டுபக்கமுஞ்சூழ்ந்து அழைத்துக்கொண்டு, மென்மையாகிய மலரிதழ்களை விரித்திருந்த சிறந்த பூமியில் நடத்தி, புலியென்

று சொல்லத்தக்க தேவாங்கமுனிவன் மகிழும்படி, முன்னேயிட்டபட்ட இரத்தினாசனத்தின்கண் இருக்கும்படி செய்தார்கள். எ - று. (கூ௫)

கலிவிருத்தம்.

வரிவளை காகள முதங்கந் தண்ணுமை
யரியதுந் துமிதுடி யாழ்குழல் சல்லரி
பரிமுர சொடுதவில் பணவ மேனவும்
விரிகடல் வெருவுற மீறி யார்ப்பவே.

(இ-ள்.) வரிகளையுடைய சங்கமும், எக்காளமும், மதங்கமும், மத்தளமும், அருமையாகிய துந்துபியும், உடுக்கையும், இசைக்குழலும், சல்லரியும், [illegible] பேரிகையும், தவிலும், தம்படடமும், மற்ற வாத்தியங்களும் விரிந்த சமுத்திரமும் அஞ்சும்படி மிகுந்து சத்திக்க. எ - று.

மதங்கம், துந்துபி, இவை தேவவாத்தியங்கள். (கூ௬)

அனநடை யாம்பைய ரபிந யத்தொடு
மனமகிழ் பாதநூல் வகைந டித்திடக்
கனவரு நாரதன் கருது தும்புரு
வினமலி விஞ்ஞைய ரிசையெ ழுப்பவே.

(இ-ள்.) அன்னம் போலும் நடையினையுடைய தேவமாதர்கள், கண்டோர் யாவரும் மனமகிழுமாறு பரதசாஸ்திரவிதிப்படி அபிநயத்தோடு நடனஞ்செய்ய, இசையினில் வல்ல அரிய நாரதமுனிவரும், யாவரும் கருதுகின்ற தும்புருவும், கூட்டமாகிய வித்தியாதரரும், இராகம் பாடவும். எ - று. (கூ௭)

மலைமகள் பூமகள் வனச மீதுறை
கலைமகள் புலோமிசை கரும்பு போன்றசொ
லலைமக ளேனையர் யாரு மன்பொடு
நிலைகெழு சோபன நிறைந்து பாடவே.

(இ-ள்.) பார்ப்பதிதேவியும், பூமிதேவியும், வெண்டாமரைமலரின்மேல் வசிக்கின்ற சரஸ்வதியும், இந்திராணியும், கரும்பு போன்ற சொல்லையுடைய திருமகளும், மற்றத்தேவமாதர்கள் யாவரும் கூடி ஆசையோடு அழிவில்லாத மங்கலப்பாடலைப் பாடாநிற்க. எ - று. (கூ௮)

அம்புய மலரய னாதி வேதியர்
பம்பிய நான்மறை பகரு மவ்வழி
நம்புபர் கபிலையி னறுநெய் யாதிதூய்
வம்புறு தெய்வமா மகம்வ ளர்க்கவே.

(இ-ள்.) பிரமதேவர் முதலாகிய வேதியர்கள், நிறைந்த நான்கு வேதங்களும் கூறிய முறைமைப்படி, யாவரும் நம்புகின்ற சிறந்த பசுவின் நெய்

மணமுள்ள நெய் முதலிய திரவியங்களைவார்த்து, வாசனை பொருந்திய தெய்வத்தன்மையுள்ள பெரிய (விவாகத்திற்குரிய) யாகத்தை வளர்க்கவும். எ - று.

சங்கரன் மாதவன் றனிமருப்புடை
யைங்கரன் முருகவே ளநங்கன் கோபதி
யெங்கணு நிறைசுரரெவரு மின்பமேற்
பொங்கமெய் முனிவரர் புகழ்ந்து வாழ்த்தவே.

(இ-ள்.) சிவபெருமானும், திருமாலும், ஒற்றைக்கொம்பையுடைய விநாயகக்கடவுளும், குமாரக்கடவுளும், மன்மதனும், இந்திரனும், எவ்விடத்தினும் நிறைந்த தேவர்கள் யாவரும் இன்பமதிகரிக்கவும், உண்மையாகிய முனிவர்கள் புகழ்ந்து தோத்திரஞ்செய்யவும். எ - று. (௪00)

கனலொர்சீர் கரத்தினன் கருணை யாசிநி
யெனவரு தேவல னின்ப முற்றுயர்
தினகரன் சோதரி திருக்க ழுத்தினில்
வனமணி மங்கல மகிழ்விற் சூட்டினன்.

(இ-ள்.) மழுவாயுதம் விளங்குகின்ற கையையுடைய சிவபெருமானது கிருபையால், (உலகத்தாருக்கு) திரவியமென்னும்படி அவதரித்த தேவாங்கமுனிவன் இன்பமடைந்து, உயர்ந்த சூரியதேவனுடைய தங்கையாகிய தேவதத்தையினது அழகியகழுத்தில், மணிகள் பதித்த அழகமைந்த திருமங்கிலியத்தைச் சூட்டினன். எ - று. (௪0௧)

துதித்தன ரிமையவர் சூழ்ந்து கற்பக
மதுப்பொழி நறுமலர் மாரி தூற்றினர்
கதிர்ப்பக லவனிரு கண்க ளித்தனன்
புதுப்புனு குணிபுயம் புளகம் பூப்பவே.

(இ-ள்.) தேவர்கள் தோத்திரஞ்செய்து சூழ்ந்து தேனைப்பொழிகின்ற மணமுள்ள கற்பகமலர்மழையைத் தூவினார்கள், புதிய புனுகணிந்த புயம் புளகமுண்டாகும்படி காந்தியுள்ள சூரியதேவன் பார்த்து இரண்டு கண்ணும் களித்தனன். எ - று.

துதித்தனர் என்பது முற்றெச்சம். (௪0௨)

கதிரவன் மகிழ்ந்துபின் காம தேனுவான்
முதிர்வெ மணிசெறி முடிவிண் ணோர்க்குநீ
டதிர்திரைக் கடற்புவி யரசர் மாதவர்
வதிபிற ரெவர்க்கும்வேண் டுவவ ழங்கியே.

(இ-ள்.) இவ்வாறு சூரியதேவன் களிப்படைந்து, பின்பு காமதேனுவென்னும் தெய்வப்பசுவால் மிக்க ஒன்பது வகைமணிகள் நெருங்கிய முடியையுடைய தேவர்களுக்கும், விசாலமாகிய ஒலிக்கின்ற அலைகளையுடைய சமுத்தி

ரஞ்சூழ்ந்த பூலோகவேந்தர்களுக்கும்,பெரிய தவசிகளுக்கும்,வசிக்கின்ற பிறர்க்கும் வேண்டுவனவாகிய பொருள்கள் எவற்றையும் கொடுத்[தா]ன். எ - று. (௧௦௩)

கள்ளரு மாலிகை களபம் பாளிதம்
வெள்ளடை பாகணி விளங்கு பூணுநூல்
தள்ளரு மவரவர் தமக்குத் தக்கவை
யொள்ளிய மணிக்கலத் துதவி னானரோ.

(இ-ள்.) தேன் பொருந்திய பூமாலைகளும், கலவைச்சாந்தும், பட்டுச்சீலையும், வெற்றிலைபாக்கும், ஆபரணங்களும், பிரகாசிக்கின்ற பூணுநூலும், நீங்குதலில்லாத அவரவர்களுக்குத்தக்க பொருள்களை அழகிய இரத்தினப்பெட்டியின்கண் கொடுத்தான். எ - று. (௧௦௪)

தேவலன் பின்கொணர்ந் துள்செ ழுங்கலை
மூவர்மா தவம்புரி முனிவர் மங்கையர்
தாவரும் விண்ணவர் தரணி மன்னவர்
யாவரு முவப்பவவ் வவர்க்கு நல்கியே.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் பிறகு தான் கொண்டுவந்துள்ள செழுமையையுடைய கலைகளைப் பிரமதேவர்-விஷ்ணுமூர்த்தி-சிவபெருமான் ஆகிய மூவர்களும், பெரிய தவஞ்செய்கின்ற முனிவர்களும், அவர்கள் மனைவியர்களும், குற்றமில்லாத தேவர்களும், பூலோகவரசர்களும் மற்ற யாவர்களும் மனங்களிக்கும்படி அவரவர்களுக்குங்கொடுத்து. எ - று. (௧௦௫)

வித்த[illegible] றனக்கொரு மிளிர்ம ணித்துகி
லதத்லை யளித்தலு மவன்பி ணங்கிநீ
யித்தனை சுரர்க்குமே னையர்க்கு மீந்துபின்
வைத்துள கலையையாம் வாங்க லேமரோ.

(இ-ள்.) வயிரவதேவனுக்குப் பிரகாசிக்கின்ற ஒரு அழகிய ஆடையை அவ்விடத்துக்கொடுத்தவுடனே, அவ்வயிரவதேவன் கோபித்து, நீ இவ்வளவு தேவர்களுக்கும், மற்றவர்களுக்கும் கொடுத்துப் பிறகு வைத்திருக்கின்ற ஆடையை நாம் வாங்கமாட்டோம் என்றான். எ - று. (௧௦௬)

* முதலுற நீயவண் முறையி னெய்ததோர்
றுதவிடிற் கொள்வமென் றுரைப்ப மன்[illegible]
பதனறுங் கலைதரப் பயனின் றாயினும்
இதமிது வென்னவேற் றேத்தி னானரோ.

(இ-ள்.) முன்னமே நீ அவ்விடத்து முறையாக நெய்த ஓராடையைக் கொடுத்தால் வாங்குவோமென்று சொல்லத் தேவாங்கமுனிவனாகிய அரசன்

---

* "முதலுற நீ யவண் முறையி னெய்ததொன்று" என மூலத்திலும், "முன்னமே நீ அவ்விடத்து முறையாக நெய்த ஓராடை" என உரையிலும் கூறியதைத் தெலுங்கில் "பத்தை" என்பர்; இது நெய்யுங்காலத்தில் நெசவுக்கு ஆதாரமாக உபயோகித்துப் பின் கிழித்[illegible] வேண்டிய பாகம்; இது முன்றலை யென்றும் வழங்கும்.

(கேட்டு)அபக்குவமாகிய இழித்தகற்றவேண்டிய வஸ்திரக்கூறென்று தர,அது பயனில்லையாயினும் இது நல்லதென்று பெற்றுக்கொண்டு அத்தேவாங்க முனிவனைத் துதித்தான். எ - று. (௧0௭)

ஈரிரு தினமண வியல்பி யன்றபின்
யாருமன் னவர்ப்புகழ்ந் தாசி கூறியே
தேரிடை தொறுந்தொறுஞ் சென்று நண்ணினர்
சூரிய வானவன் றொழுத னுப்பவே.

(இ-ள்.) நான்குநாள் வரையிலும் கலியாணச்சடங்கு நடந்தபிறகு, யாவரும் அத்தேவாங்கமுனிவனையும், தேவதத்தையையும்புகழ்ந்து வாழ்த்துதல்கூறி, சூரியதேவன் வணங்கியனுப்ப விடைபெற்றுத் தேரின்மீ தேறிக்கொண்டு தங்கள் தங்க ளிடங்களிற் போய்ச்சேர்ந்தார்கள். எ - று. (௧0௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அவ்வயி னமர்ந்து சின்னா ளரிவையோ டின்பந் துய்த்துத்
தெவ்வமர் கடந்த வைவேற் றேவல கிருபன் பின்னர்
கவ்வையங் கடல்சூழ் பூமி காவல ருடனெ ழுந்தே
யெவ்வமில் புகழா மோத வெழினகர் செலநி னைந்தான்.

(இ-ள்.) பகைவரைப் போரில்வென்ற கூர்மையாகிய வேலைத்தாங்கிய தேவாங்கமுனிவனாகிய அரசன் சிலநாள் அவ்விடத்து வசித்து, தேவதத்தையுடனே இன்பமனுபவித்து, பிறகு ஒலிக்கின்ற சமுத்திரஞ் சூழ்ந்த பூமியையாளுகின்ற அரசருடனெழுந்து, யாதொரு துன்பமு மில்லாத கீர்த்தியையுடைய அழகிய ஆமோதநகரத்தின்கண் போவதற் கெண்ணினான். எ - று.

வெய்யவ னொடுதே வாங்கன் விளம்பமற் றவனவ் வேலை
ஐம்மதங் களிறு பாய்மா மணிநெடுங் கொடிஞ்சித் திண்டேர்
மொய்யடர் பதாதி நானா முடிமுத லணிய நேகந்
தையலர் பலரு மேனை வரிசையுந் தந்து பின்னர்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் (தான் ஆமோதநகரத்திற்குச் செல்ல விருப்பங்கொண் டிருப்பதைச்) சூரியதேவனோடு சொல்ல, அப்பரிதியங்கடவுள் அச்சமையத்தில், மதமயக்கத்தையுடைய யானைகளும், குதிரைகளும், மணிகள் பதித்த பெரியசிகரத்தையுடைய இரதங்களும்,பல மிகுந்த காலாட்படைகளும், வஸ்திரங்களும், கிரீடமுதலாகிய பல ஆபரணங்களும், பெண்கள் பலரும், மற்றவரிசைகளும் கொடுத்து அதன்பின். எ - று. (௧௧0)

கந்துகங் கழகம் மானை கதிர்மணிச் சிவிகை செம்பொற்
சுந்தர மஞ்ச மற்றுஞ் சோதரி தனக்கு நல்கிச்
செந்திரு வனைய சாயா தேவிசே ரிரவி புற்தேள்
அந்தமி லுவகை பூப்பத் தழுவியங் கதுய்ட் டனனல்.

(இ-ள்.) அழகிய இருமகளுக்கொப்பாகிய சாயாதேவியைச்சேர்கின்ற சூரியதேவன், தன் சகோதரியாகிய தேவதத்தைக்கு, பந்தும், அம்மானையும்,

காந்திபொருந்திய இரத்தினப்பல்லக்கும்,செம்பொன்னாற்செய்த அழகிய மஞ்சமும், மற்றுப்பணிகளும் கொடுத்து, அளவில்லாத மகிழ்ச்சியுண்டாகும்படி தழுவி யனுப்பினான். எ - று.

கழங்கு அம்மானை ஒருபொருட் பன்மொழி. (ககக)

பகலவன் விடைபெற் றந்தப் பைந்தொடி யொடுதே வாங்கன்
நகைமணித் தேர்மேற் கொண்டு நாற்பெருஞ் சேனை சூழச்
சகலவேந் தருநெ ருங்கத் தாளவெண் குடைநி ழற்ற
வகலிரு விசும்பு நீங்கி யவனியிற் படர்ந்தா னன்றே.

(இ - ள்.) அந்தப் பசிய வளையல்களை யணிந்த தேவதத்தையுடனே தேவாங்கமுனிவன் சூரியதேவனிடத்து உத்தரவுபெற்றுக்கொண்டு, பிரகாசிக்கின்ற இரத்தினத்தேரின்மீதேறி நால்வகைச்சேனைகளுஞ் சூழ, எல்லாவரசர்களும் நெருங்கிவர, முத்துக்குடைநிழலைச்செய்ய, அகன்ற பெரிய ஆகாயத்தை நீங்கிப் பூமியில் வந்தனன். எ - று. (ககஉ)

மணிநிறை குடங்க ளாதி வழங்குநன் னிமித்தந் தோன்றப்
பணியரா வல்குன் மாதர் பலர்களா லாத்தி சுற்றத்
திணிபுயா சலனு மோகத் திருநகர் விரைவி னெய்தி
யணிகொடே ரிழிந்து மாதோ டம்பொன்மா ளிகையிற் புக்கான்.

(இ - ள்.) வலிமையுள்ளமலைபோலும் புயங்களையுடைய தேவாங்கமுனிவன் அழகிய நிறைகுடங்கள் முதலாகிய வழங்குகின்ற சுபசகுனங்கள் உண்டாகவும், பாம்பின்படம்போலும் அல்குலையுடைய பல பெண்கள் ஆலாத்தி சுற்றவும், [illegible]த்தின்கண் சீக்கிரமாகச்சென்று, அழகிய தேரினின்று மிறங்கித் தேவதத்தையுடனே மாற்றுயர்ந்த பொன்னாலாகிய அரண்மனையின் கண் சென்றான். எ - று. (ககங)

பற்பல வரசர் கட்கும் பதிசெலக் கருணை நல்கித்
தற்பர னளித்தோன் றேவ தத்தையோ டின்பந் துய்த்துச்
சொற்படி மறையோர் வாழ்த்தச் சுடர்மணித் தவிசி னேறிப்
பொற்பமை யமைச்சர் போற்றப் புவிபுரந் திருந்தான் மன்னோ.

(இ - ள்.) சிவபெருமானலருளிய தேவாங்கமுனிவன்,பலவாகிய அரசர்களுக்கும் தங்கள்தங்கள் நகரத்திற்போய்ச் சேரும்படி விடைகொடுத்தனுப்பி, பின் தேவதத்தையுடனே இன்ப மனுபவித்து, அமிர்த வசனத்தையுடைய வேதியர்கள் ஆசிகூறக், காந்தியுள்ள இரத்தினாசனத்திலேறி அழகமைந்த மந்திரிகள் வணங்க, உலகத்தை யாண்டுகொண்டிருந்தான். எ - று. (ககச)

தேவதத்தையைமணஞ் செய்தசருக்கம்.

முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் கஅ - க்கு பாடல் ருசசு.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை தண்டாடுணை.

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்

பதினாறுவது

பெருமான்புதல்வரைப் பெற்றசருக்கம்.

கலிவிருத்தம்.

பழுதறுமருட் பண்ணவர் சூதனைத்
தொழுது தேவலன் றுயசெங் கோன்முறை
வழுவில் சீர்புனை மைந்தர் வரவிவை
முழுது நீமொழி கென்ன மொழிகுவான்.

(இ-ள்.) குற்றமில்லாத கிருபையையுடைய முனிவர்கள், சூதமுனிவரை வணங்கி, பரிசுத்தமாகிய செங்கோன்முறையினையுடைய குறைவில்லாத தேவாங்கமுனிவனது சிறப்புப்பொருந்திய மக்கட்பேறுமுதலாகியவைகளையெல்லாம் தேவரீர் சொல்லியருள்வீராகவென்று கேட்கச் சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர். எ - று. (க)

ஒன்ன லார்வந் துவந்து தொழுந்திறன்
மன்ன னன்மணி மாமுடித் தேவலன்
றன்ன தானை தனைப்புவி மீதினி
வின்ன வாறென் றிசைப்பவர் யாவரே.

(இ-ள்.) பகைவர்கள் வந்து விரும்பிப் பணிகின்ற வல்லமையுடைய அரசனாகிய சிறந்த இரத்தினகிரீட மணிந்த தேவாங்கமுனிவனுடையவெற்றியைப் பூமியின்மீது இவ்வகையென்று சொல்ல வல்லவர் யாவர்? (ஒருவராலுஞ் சொல்லமுடியாது.) எ - று. (உ)

நாற்கு லங்க ளடைபிற ழாதற
நூற்கு லங்க ளுவல்பொரு ளெங்கணு
மேற்க முப்பத் திரண்டற மும்புவி
மேற்க லந்து விளங்கின் றோங்குமால்.

(இ-ள்.) அந்தணர்முதலிய நால்வகைச் சாதியாரும் தங்கள் தங்கள் வருணாச்சிரமங்களின் ஒழுக்கம் தவறாமல் நடக்கவும், தருமசாஸ்திரங்கள் கூறிய எவ்வகைப் பொருள்களும் எவ்விடங்களிலும் நிலைபெறவும், பூமியின்மேல் எவ்விடத்தும் முப்பத்திரண்டு தருமமும் விளங்கி நாளுக்குநாள் சிறப்புற்றோங்கும். எ - று.

நாற்குலத்தினராவார்:— பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்பவர்களாம். (௩)

புலியு மானும் பொருந்தி யொருதுறை
மலியு நீருண்டு வாழ்ந்து சிநேகமாம்
எலிவி யாள மிரண்டுமொன் றென்றிட
நலிவு றாமலெந் நாளு நயக்குமே.

(இ-ள்.) புலியும் மானுஞ் சேர்ந்து, ஒருதுறையிலே நிறைந்த நீரை யுண்டு வாழ்ந்து நட்பாகும்; எலியும் பாம்புமாகிய விரண்டும் ஒருவகையென்று கண்டோர் சொல்லும்படி வருத்தமில்லாமல் எந்தநாளினுஞ் சிநேகமாக விருக்கும். எ - று. (௪)

வருத வக்குறை மற்று மலடலி
யிருதி ணைக்குளு மில்லையந் நாட்டினி
லருமை சற்குண மன்பு நலந்திடங்
கருணை மெய்ப்பொருள் கல்வி தழைக்குமே.

(இ-ள்.) அந்த ஆமோதநகரின்கண், மக்களாகப் பிறந்தவர்களில் தவக்குறைவினரும், இவரொழிந்த பிள்ளைப்பே றில்லாதவர்களும், அலியினரும், உயர்திணை அஃறிணையாகிய விரண்டு திணைகளுள்ளு மில்லை; அருமையும், நல்லகுணமும் அன்பும், நன்மையும், உறுதியும், கிருபையும் உண்மைப் பொருள்களும், கல்வியும் நாளுக்குநாள் விருத்தியாகும். எ - று.

தவக்குறை என்பதற்கு மிக உறுப்புக் குறைவுள்ளவர்களு மெனினு மாம். உயர்திணை உயர்வாகியசாதி; அது தேவர்-மக்கள்-நரகர்என்பவர்களாம். அஃறிணை அஃதல்லாதசாதி; அது விலங்கு-பறவை முதலிய உயிருள்ளவைகளும், மலை மரம் முதலிய உயிரில்லாதவைகளுமாம். அலியாவது ஆணும் பெண்ணும் அல்லாத பேடு. (௫)

வஞ்ச மென்பது வாட்பெய ரேயலால்
நெஞ்ச மொன்ற நினைப்பதங் கில்லையாம்
பஞ்ச மென்பது பன்னுந் தொகையலால்
அஞ்ச வந்த வறுமிடி யன்றரோ.

(இ-ள்.) அந்த ஆமோதநகரினிடத்து வஞ்சமென்று சொல்லப்படுவது வாளின்பெயரே யல்லாமல் மனத்திற்பொருந்த நினைக்கின்ற கபடமென்னும் பொருளில்லை; பஞ்சமென்பது, சொல்லுகின்ற ஐந்தென்னுமெண்ணின் பெயரேயல்லாமல், மனிதர்கள் பயப்படவந்த அரிதாகிய வறுமையென்னும் பொருளன்று. எ - று. (௬)

மதமெ னுஞ்சொல் வளர்கயத் தன்றியெவ்
விதமு மைந்தர்த மெய்யுளத் தில்லையா

வதமெ னுஞ்சொலத் திப்பெய ரல்லது
கதமு நுந்தொழில் காட்டுவ தில்லையே.

(இ-ள்.) மதமென்கின்ற சொல்லின்பொருளானது,வளர்கின்ற யானையிடத்திலல்லாமல்,எவ்வகையினும் வாவியர்களுடைய வுண்மையாகிய மனத்தினுண்டாவதில்லை; அதம் என்கின்ற சொல்லின்பொருளானது அத்தியென்னும் மரத்தின் பெயரேயல்லாமல், கோபம்பொருந்திய சங்கரித்தற்றொழிலைத் தெரிவிப்பதில்லை. எ - று.

மதம் - யானையின்மதம்; செருக்கு. அதம் - அத்தி; அழித்தல். (எ)

இலையெ னுஞ்சொ லிருந்தழைப் பேரலான்
மலைவு கொண்டவின் மைப்பொரு ளைத்தரா
தலையெ னுஞ்சொ லருந்தடத் தன்றிமுன்
னிலைவி ளம்பு நெடுமொழி யன்றரோ.

(இ-ள்.) இலை யென்கின்ற சொற்பொருளானது பெரிய தழைபெயரேயல்லாமல், மாறுபாட்டையுடைய இல்லையென்னும் பொருளைக்கொடுக்கமாட்டாது. அலை யென்கின்ற சொற்பொருளானது அருமையாகிய தடாகத்தினுள்ளதே யல்லாமல், முன்னிலையினுள்ளவரைப் பார்த்துச் சொல்லுகின்ற பெரிய வினைச்சொல் லன்று. எ - று.

இலை - தழை; இல்லை. அலை - திரை; அலையென்னேவல். (அ)

இன்ன சீர்பெற் றிலங்குஞ் சகரநாட்
டன்ன தேவல னண்டர் பிரானென
மின்னல சூர்முடி வேந்தர் திறைதர
நன்னர் நீதி நடத்துமந் நாளிலே.

(இ-ள்.) இவ்வகையாகிய சிறப்பினையடைந்து விளங்குகின்ற சகரநாட்டில், மேல்சொல்லிய தேவாங்கமுனிவன், தேவர்கள் பெருமானாகிய இந்திரனைப்போலப் பிரகாசித்திருந்த மகுடமணிந்த அரசர்கள் கப்பங்களைக்கொண்டுவந்து கொடுக்கப்பெற்று நன்மையாகச் செங்கோல் நடத்துகின்ற அக்காலத்தில். எ - று. (கூ)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சிலம்பென வளர்ந்த திண்டோட் டேவலா திபன்ம ணந்த
தலம்புகழ் கற்பிற் றேவ தத்தைமா மயில்சூன் முற்றி
வலம்புரி வருந்தி முத்த மணிபுயிர்த் தனும்பொன் மாறு
நலம்புனை புதல்வர் மூவர் தம்மைநற் றவத்தாற் பெற்றாள்.

(இ-ள்.) மலையென்னும்படிவளர்ந்த வலிய தோள்களையுடைய தேவாங்கனென்னும் அரசன் விவாகஞ்செய்துகொண்ட உலகத்தார் புகழுகின்ற கற்பினை யுடைய தேவதத்தையாகிய மயில்போன்ற சிறந்த பெண்ணானவள்

கருப்பம் முதிர்ந்து வலம்புரிச்சங்கமானது கருப்பவேதனைப்பட்டு முத்துக்களைப் பெற்றதுபோல, நீங்காத நன்மையைப்பெற்ற மூன்று புத்திரர்களை நல்ல தவப்பயனாலே பெற்றாள். எ-று. (கo)

தந்தையும் பயந்த தாயுந் தனயர்க ளும்மை நோக்கிச்
சிந்தையின் மகிழ்வு கூர்ந்து செனித்திடு மவ்வவ் வேலை
வந்திடு பதினொன் றாநாள் வாய்ந்தசா தகம்வ ரைந்து
முந்திய சுருதி தேர்ந்த முனிவரர் பெயரு மிட்டார்.

(இ-ள்) பிதாவும் பெற்ற மாதாவும், பிறந்த புத்திரரைப் பார்த்து, மனதிற்களிப்பு மிகுந்து, பிறந்த அவ்வக்காலத்துக்குப் பதினொன்றாவது தினத்தில், பொருந்திய சாதகம் எழுதி, முதன்மையாகிய வேதத்தையுணர்ந்த முனிவர்களாலே நாமகரணமுஞ் சூட்டினார்கள். எ-று. (கக)

திருந்துதிவ் வியாங்க னென்றுந் திகழ்விம லாங்க னென்றும்
வருந்தவ ளாங்க னென்று மதித்தபேர் தரித்த பின்னர்
இருந்ததொன் மறையொ ழுங்கி னியல்வழா தினிதொ ராண்டுள்
அருந்தவர் முனிவர் வாழ்த்த வமுதமு நுகர்வித் தாரால்.

(இ-ள்.) செவ்வையாகிய திவ்வியாங்கன் என்றும், விளங்குகின்ற விமலாங்கன் என்றும், (நாளுக்குநாள் விருத்தியாகி) வருகின்ற தவளாங்கன் என்றும், யாவராலும் மதிக்கப்பட்ட பேரைச் சூட்டியபிறகு, பழமையாகிய வேதத்திற் சொல்லியிருந்த முறையினியல்புவழுவாமல் நன்றாகவொருவருஷத்தினுள் அருமையாகிய தவசிகளும், முனிவர்களும் வாழ்த்த, அன்னமும் உண்பித்தார்கள். எ-று. (கஉ)

சார்ந்திடு மவ்வவ் வேலை சவுளகற் கன்ன வேதை
யார்ந்தநூ லியல்பி னுற்செய் தாயபி னொன்பா னாண்டி
லோர்ந்துவா னவர்கொண் டாட வுபநய னம்பு ரிந்து
சேர்ந்தவா கமநால் வேதப் பயிற்சியுந் திருத்தி னாரால்.

(இ-ள்.) வருகின்ற அந்தந்த முகூர்த்த காலங்களில், சவுளமும், கர்ணரந்திரமும் பொருந்திய சாஸ்திரவிதிப்படி செய்து முடிந்தபிறகு, ஒன்பதாவது வயதில் தேவர்களும் ஆராய்ந்து கொண்டாட உபநயனஞ் செய்து, பொருந்திய ஆகமங்களும், நான்கு வேதப்பயிற்சியும் திருத்தமாகச் செய்வித்தார்கள்.

பெற்றனி தெடுத்த தாயும் பிதாவுமுண் மகிழ்வு கூர
முற்றிய வெழில்கொ ளைமைந்தர் மூவரு முறைவ ழாமற்
கற்றிடு மறையோ டேந்தக் கலைகளும் பலப யின்று
மற்றிரு மதனு காண வரமதி யெனவ ளர்ந்தார்.

(இ-ள்.) கன்றாகப் பெற்றெடுத்த தாயும் தந்தையும் உள்ளத்தில் களிப்புமிக, முதிர்ந்த அழகினைக்கொண்ட மூன்று புத்திரர்களும் நீதிவழுவாமல் கற்கின்ற வேதத்துடனே எல்லைகைப்பட்ட சாஸ்திரங்கள் பல வற்றையுங் கற்று, பேரழகினையுடைய மன்மதனும் வெட்கும்படி பூருவபக்ஷத்துச் சந்திரனைப்போல வளர்ந்தார்கள். எ - று. (கச)

சிறுவர்தம் பருவ நோக்கித் தேவல னிரவிப் புத்தேள்
பெறுதிரு வனைய தீஞ்சொற் பிரபைதிவ் வியாங்க னுக்கும்
உறுபது மாட்சி யின்ப முயர்விம லாங்க னுக்கும்
மறுவறு சபலாட் சிப்பேர் மான்றவ ளாங்க னுக்கும்.

(இ-ள்.) பிள்ளைகளுடைய பருவகாலத்தைப்பார்த்துத்தேவாங்கமுனிவன், சூரியதேவன்பெற்ற இலக்குமியையொத்த மதுரமாகிய சொல்லையுடைய பிரபை என்னும் பெண்ணைத் திவ்வியாங்கனுக்கும், பொருந்திய பத்மாக்ஷி என்னும் பெண்ணை, உயர்ந்த விமலாங்கனுக்கும், குற்றமற்ற சபலாக்ஷி என்னும் பெயரையுடைய பெண்ணை, தவளாங்கனுக்கும். எ - று. (கரு)

மன்றலந் தெரியல் சூட்டி வானவ ரேனோர் வாழ்த்த
நன்றணி மணஞ்செய் வித்து நலனுறு திவ்வியாங் கற்குப்
பொன்றிகழ் முடிநன் னாளிற் புனைந்துமந் திரிகள் போற்றத்
தன்றிரு வரசு நல்கித் தடம்புயம் புளகம் பூத்தான்.

(இ-ள்.) கலியாணத்துக்குரிய பூமாலையைச்சூட்டி, தேவர்களும் மற்றையோரும்ஆசீர்வதிக்க, நல்ல அழகிய விவாகத்தைமுடிப்பித்து, நன்மையையுடைய திவ்வியாங்கனுக்கு நல்லமுகூர்த்தநாளில் பொன்னாற்செய்து விளங்குகின்ற கிரீடத்தைச்சூட்டி, மந்திரிகள் போற்றும்படி தன்னுடைய அழகிய அரசாட்சியைக்கொடுத்து, விசாலமாகிய புயங்கள் பூரித்தான். எ - று. (கசு)

...யந்தனை யினிதி னீன்ற சசியுங்கோ பதியு மென்ன
...யங்குறு தேவ தத்தை மயிலுந்தே வலனு மின்புற்
றியங்குள மகிழ்வு பூப்ப விசைவழா திருந்திவ் வியாங்கன்
செயங்கெழு செங்கோ லோச்சிச் செகதலம் புரந்தா னன்றே.

(இ-ள்.) விளங்குகின்ற மயில்போன்ற தேவதத்தையும் தேவாங்கமுனிவனும், சயந்தனை நன்றாகப்பெற்ற இந்திராணியுந் தேவேந்திரனும்போல இன்பமடைந்து, விஷயங்களில் உலாவுகின்ற மனமான தமகிழாநிற்பக் கீர்த்தி கெடாதபடி மூத்த திவ்வியாங்கன், வெற்றிபொருந்திய செங்கோலைச் செலுத்தி உலகத்தைக் காத்தான். எ - று. (கஎ)

மால்பொரு தேவாங் கற்கு வயங்கெழு மனந்த னன்று
சால்புறு மன்பிற் றந்த சந்திர ரேகையென்னும்
வேல்பணி தடங்கட் செவ்வாய் மெல்லியல் கருப்ப முற்றிப்
பால்பொருந் தியதிக் கெங்கும் பரவவோர் சுதனை யீன்றாள்.

(இ-ள்.) விஷ்ணுமூர்த்தியையொத்த தேவாங்கமுனிவனுக்கு வெற்றி பொருந்திய அனந்தன், மு[illegible]ளிலே மிக்க விருப்பத்துடனே மணஞ்செய்துகொடுத்த சந்திரரேகை என்னும் பெயரையுடைய வேலாயுதமும் பணியும்படியாகிய விசாலித்தகண்களையும், சிவந்த வாயையுமுடைய அப்பெண்ணானவள், கருப்பமுதிர்ந்து பகுப்பாகிய திக்கிலுள்ளவர்கள் யாவரும் பரவும்படி ஒரு பிள்ளையைப் பெற்றாள். எ - று.

இக்கு - இடவாகுபெயர். (கஅ)

மதலைவந் துதித்தா னென்ன மன்னர்கோன் மனங்க ளித்து
விதமுறு வேத நூலின் விதிமுறை வழாமற் போற்றிச்
சுதர்மனென் றொருபே ரிட்டுத் தூயபல் கலைய னைத்தும்
கதழ்வுறப் பயிற்றி னாற்காசினி புகழ மாதோ.

(இ-ள்.) அரசர்க்கரசனாகிய தேவாங்கமுனிவன், பிள்ளைவந்து பிறந்தானென்று மனமகிழ்ந்து, பலவகைப்பட்ட நீதியையுடைய வேதங்களில் விதிக்கப்பட்ட முறைமைவழுவாமல் பாதுகாத்து, சுதர்மனென்றொரு பெயரிட்டு பரிசுத்தமாகிய பலசாஸ்திரங்களெல்லாம் பெருமையுண்டாக உலகத்தார் புகழும்படிக் கற்பித்தான். எ - று. (ககூ)

இசைகொடே வாங்க னிவ்வா றினிதுவீற் றிருக்கு நாளிற்
குசைநெடுந் தீவை யாளுங் கொடுஞ்சூர சேன னென்பான்
கசரத துரங்க மொய்ப்பக் கடும்படை கொடுபோ ருன்னி
வசையறு புகழா மோத வளநகர் தனைவ ளைத்தான்.

(இ-ள்.) கீர்த்தியைப்பெற்ற தேவாங்கமுனிவன் இ[illegible]விதமா[illegible] இனி[illegible]துவசிக்கின்றகாலத்தில், குசைத்தீவையாளுகின்ற கொடுமை[illegible]யுடைய சூரசேனனென்னுமரசனானவன், யானைகளும், தேர்களும், குதிரை[illegible]நெருங்க, வேகமுள்ள சேனைகளைக்கொண்டு யுத்தஞ்செய்ய நினைத்து, கு[illegible] கீர்த்தியையும் வளப்பத்தையுமுடைய ஆமோதநகரைச் சுற்றிக்கொண்[illegible].

மாண்டகு சூர சேனன் வரவுணர்ந் தரசர் கோமான்
சேண்டொடு தேர்மேற் கொண்டு சேனைகண் மருங்கு சூழ
வாண்டனைத் தயத்தின் கூட்டத் தரும்புலி யடர்ந்தா லென்னப்
பூண்டவிற் கணைக ளேவிப் பொருதினன் புகழ்கின் றோங்க.

(இ-ள்.) அரசர்களுக்கரசனாகிய தேவாங்கமுனிவன், மாட்சிமைப்பட்ட மேன்மையாகிய சூரசேனவரசனது வருகையையறிந்து, ஆகாயத்தையளாவிய தேரின்மேலேறிச் சேனைகள் பக்கத்திற்சூழ்ந்துவர, அச்சூரசேனவரசனுடைய சயினியத்திற் சென்று, ஆட்டின் கூட்டத்தில் அரியபுலியானது நெருங்கினாற்போல, தான்கொண்டிருக்கின்ற வில்லிற்பாணங்களைத் தொடுத்து ஏவி, கீர்த்தி [illegible] பெற்று [illegible]படிப் போர்செய்தான். எ - று. (உ௦)

திருக்கிளர்மார்பன் சூர சேனனைப் படையி னோடும்
முருக்கியந் தகனு டேற்றி முடிவிலா வாகை தாங்கித்
தருக்குறு மவன்முன் னாண்ட தனிக்குசைத் தீவுக் கெல்லாம்
வருத்தமில் சுதர்மன் றனே யரசென மௌலி சூட்டி.

(இ-ள்.) வீரலட்சுமி விளங்குகின்ற மார்பையுடைய தேவாங்கமுனிவன், சூரசேனமகாராசனைச் சேனைகளோடுங் கொன்று, எமபட்டணத்துக்கனுப்பி, அளவில்லாத கீர்த்தியையடைந்து கருவங்கொண்டிருந்த அச்சூரசேனவரசன் முன்னே அரசாட்சிசெய்த ஒப்பற்ற குசைத்தீவுக்கெல்லாம் துன்பமில்லாத சுதர்மனே யரசனென்று பட்டத்தைச் சூட்டி. எ - று. (உ..)

அவந்திநாட் டரச னென்ற வரியபுட் கலைய ணங்கைச்
சிவந்தழ லுமிழுங் கூர்வேற் சிறுவனுஞ் சுதர்ம னென்பாற்
குவந்திட வதுவ சூட்டி யுலகெலாங் களிப்புற் றோங்கத்
தவம்புரி மறையோர் வாழ்த்தத் தனதனைத் திருந்தா னன்றே.

(இ-ள்.) தேவாங்கமுனிவன், சிவந்து நெருப்பைக்கக்குகின்ற கூர்மையுள்ள வேலையேந்திய புத்திரனாகிய சுதர்மனென்பவனுக்கு அவந்திதேசத்தையாளுகின்ற அரசன் பெற்ற அருமையாகிய புட்கலை என்கின்ற பெண்ணை மகிழும்படி விவாகஞ்செய்து, உலகமெல்லாங் களிப்படையும்படித் தவஞ்செய்கின்ற பிராமணர்கள் துதிக்கக் குபேரனையொத்திருந்தான். எ - று. (உங)

பெருமான்புதல்வரைப் பெற்றசருக்கம்

முற்றுப்பெற்றது.

ரு சருக்கம் கசு-க்கு பாடல் ருசுக.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை துணைசூழ வேணு.

சிவமயம்.

சௌடாம்பிகை சகாயம்.

பதினேழாவது

நிருதர்போர்க்கேகநினைத்தசருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

செவிக்கமு தெனவி னவித் திருந்திய தவத்தோர் செங்கை
குவித்தனர் தொழுது போற்றிக் கோதறு குணத்தின் மிக்கோய்
புவித்தலம் புகழ்தே வாங்கன் புண்ணிய சரித மின்னு
நவிற்றுதி யெங்கட் கென்ன நான்மறைச் சூதன் சொல்வான்.

(இ-ள்.) செம்மையாகிய தவத்தினையுடைய முனிவர்கள், செவிகளுக்கமுதென்னும்படிக் கேட்டு, சிவந்த கைகளைக்குவித்து வணங்கித் தோத்திரஞ்செய்து, குற்றமற்ற குணத்தினாலுயர்ந்த சூதபுராணிகரே! பூமிமுழுதும் புகழ்கின்ற தேவாங்கமுனிவனுடைய புண்ணியசரித்திரத்தை இன்னமும் எங்களுக்குச் சொல்வீராகவென்று கேட்க, நான்கு வேதங்களை யுணர்ந்த சூதபுராணிகர் சொல்லலுற்றார். எ - று. (க)

அமைதிபெற் றிவ்வா றந்த வரசன்வீற் றிருக்கு நாளிற்
கமைதவிர் நிருதர் யாருங் கலையில ராகி மாந்த
ரிமையவர் தமக்கு நாணி யெரிதரு மனத்தோ டேகித்
தமையினி தாளும் வச்சிர தந்தனை யடைந்து சொல்வார்.

(இ-ள்.) இவ்வகையாக அத்தேவாங்கமுனிவனாகிய அரசன் மாட்சிமை யடைந்து எழுந்தருளியிருக்கின்ற காலத்தில், பொறுமையற்றவராகிய இராக்கதர்களெல்லாம் ஆடையில்லாதவர்களாய் மனிதர்களுக்கும் தேவர்களுக்கும் வெட்கி, எரிகின்ற மனத்துடனே தங்களை நன்றாகக்காக்கின்ற வச்சிரதந்தன் என்பவனை யடைந்து சொல்லுவார்கள். எ - று.

வச்சிரதந்தன் = வச்சிரம்போலும் பற்களையுடையவன். (உ)

அண்ணல்கே ளிமையோ ரேனோ ரியாவரு மளவி லாத
வண்ணமென் கலைகள் வேய்ந்து வருமன மதத்தோர் நம்மை
யெண்ணலர் சிறிது நாண மிகுநிரு வாண ரென்ன
வுண்ணகை முறுவல் காட்டி யுயர்வற விகழ்ந்தா ரென்றார்.

(இ-ள்.) பெருமையிற்சிறந்த அரசனே! நீ கேட்பாயாக: தேவர்களும் மற்றையோர் யாவரும் பல நிறமுள்ள மெல்லிய ஆடைகளையணிந்து, மனத்தில் செருக்குற்றவராகி நம்மைச் சற்றும் மதிக்காதவராய் வெட்கமிகுந்த நிருவாணிகளென்று மனதில் இகழ்ச்சியுடனேசிரித்து உயர்வில்லாமல் நிந்தித்தார்களென்று சொன்னார்கள். எ - று. (௩)

வச்சிர தந்த னென்னு மன்னனங் கதனைக் கேளா
வுச்சிகம் பிதஞ்செய் தேதன் னுடனவ தரித்த வீ
ரச்சுறு புலிமு கன்போ ரடுசர்ப்ப நாவ னென்ன
மெச்சுமிவ் விருவர் தம்மை விரைவினில் விளித்துச்சொல்வான்.

(இ-ள்.) வச்சிரதந்தன் என்கின்றஅரசன் அவ்விடத்து அதனைக்கேட்டுத் தலையையசைத்து,யாவரும் அஞ்சுந்தன்மையையுடைய தன்னுடன்பிறந்த வீரராகிய புலிமுகனும், போரிற் பகைவரைக்கொல்லும்படியாகிய சர்ப்பநாவனுமென்று யாவரும் மெச்சுகின்ற இவ்விருவரையுஞ் சீக்கிரமாக அழைத்துச் சொல்லத்தொடங்கினன். எ-று. (ரு)

கேட்டிரா லனுசர் காள்பொற் கிளர்முடி ...
நாட்டிருங் கலைகள் வேய்ந்து நமைமிக வெள்ளி னூரா
நீட்டிய புகழ்த்தே வாங்க திருபனு மவர்கட் கீந்தான்
வ... னமக்குத்தானை வழங்கிலன் மதியான்போலும்.

(இ-ள்.) தம்பிமார்களே! கேட்பீராக; பொன்னாற்செய்துவிளங்குகின்ற முடியையுடைய தேவர்கள்யாவரும் விலைபெற்ற பெரியவஸ்திரங்களைத்தரித்துக்கொண்டு நம்மை மிகவும் நிந்தித்தார்களாம்; நீண்ட கீர்த்தியை யுடைய தேவாம்சமுனிவனும், அத்தேவர்களுக்கே வஸ்திரங்கொடுத்தனனும்; வாட்போரில்வல்ல நமக்கு ஆடைகள் கொடுக்கவில்லை ஆதலினால் நம்மைக் கனஞ்செய்யவில்லைபோலும் என்று பின்னுஞ்சொல்வான்வச்சிரதந்தன். எ-று. (சு)

வேதமா முனிவர் போற்றும் வெள்ளியங் கிரியி னுற்றான்
...கனை யிலுந மக்கு நல்குகென் றுரைத்தா னல்லன்
ஆதலா லவிண்ணு மெய்தி யண்டர்கோன் றனைமுருக்கிச்
...வா ...ங் காத தேவையுஞ் சிதற வாட்டி.

(இ-ள்.) ...ங்களையுணர்ந்த மகத்தாகிய முனிவர்கள் துதிக்கின்ற கயிலாயமலையி லெழுந்தருளிய சிவபெருமானுக்கும் நமக்கு ஆடை கொடுக்கும்படிச்சொன்னனல்லன்; ஆகையினாலே,தேவலோகத்திற்சென்று தேவேந்திரனை யழித்து, ... தாமரை ...னின்று நீங்காத பிரமதேவனையுஞ் சிந்தும்படி வருத்தி. எ-று. (எ)

கேசவன் றனையும் வென்று கேழ்கிளர் ... வானோர்
தேசுறுந் திறமை முற்றுஞ் சிதைந்தவர் ... நீங்க
வீசனுங் கலக்க மெய்த வின்றுநா மெதிர் ... முற்றி
மாசறும் புகழ்கூர் வாகை வனைந்திடல் வேண்டு மென்றான்.

(இ-ள்.) திருமாலையுஞ் செயித்து,நிறம்விளங்குகின்ற கிரீடத்தை யணிந்த தேவர்கள் அழகிய திறமை முழுதுங் கெட்டுச் செருக்கு நீங்கவும், சிவ...

பெருமானுங் கலக்கமடையவும், இப்பொழுது நாம் எதிராகப்போர்முடித்துக் குற்றமற்ற கீர்த்தியிருக்கும் வெற்றியையடையவேண்டுமென்று சொன்னான். (எ)

தம்முனோ ரிளைய கூறத் தம்பிய ரவனைப் போற்றி
யெம்மையா ளிறைவ கேட்டி யிமையவ ரிரிய வாட்டி
யம்மக பதியை வெல்வ தருமையன் றனையாற் காகத்
தெம்முனேர் வருமா யோனைச் செயங்கொள முடியா தென்றார்.

(இ-ள்.) தங்கள் தமயனாகிய வச்சிரதந்தன், இவ்வார்த்தைகளைச் சொல்ல, தம்பிமார்கள் அவனை நமஸ்கரித்து, எங்களையாளுகின்ற தலைவனே! கேட்பாயாக: தேவர்கள் அஞ்சும்படி வருத்தி அந்தத் தேவேந்திரனைச் செயிப்பது அருமையல்ல; இவ்விந்திரனுக்காகப் போரின்முன் எதிர்த்துவருகின்ற திருமாலை வெற்றிகொள்ள முடியாதென்று சொன்னார்கள். எ - று. (அ)

இளையவ ரிருவர் தாமு மிவ்வகை யியம்ப லோடும்
வளமலி வச்சிர தந்தன் மற்றவர் தம்மை நோக்கி
யுளமிக மருண்டீர் போலு மொன்னலர் தமக்கு நாணிக்
களவரோத் துயிர்சு மந்து காப்பதிற் பயன தென்னே.

(இ-ள்) தம்பிமார்கள் இருவரும் இவ்வாறுசொன்னவுடனே, வளப்பமிகுந்த வச்சிரதந்தன் அவர்களைப் பார்த்து (நீங்கள்) மிகவு மனம் அஞ்சினீர்கள்போலும்! பகைவர்களுக்கு வெட்கித் திருடனையொத்து உயிர்சுமந்து காப்பாற்றுவதிற் பிரயோசனம் யாதென்று பின்னுஞ் சொல்வான். எ - று. (சு)

இதற்கினி யாலோ சிப்ப தெவனியா மெவரும் பொன்னு
டிற்புகுந் திமையோர் வேந்தை யலைக்குது மந்த வேலை
மதுத்துள வணிந்த மார்பன் வரினவன் றனக்கஞ் சாமற்
கொதித்தமர் புரிது நம்மாற் கூடின வனையு மென்றான்.

(இ-ள்.) இனிமேல் இதனுக்கெண்ணுவதென்னே? நாம்யாவரும் தேவலோகத்திற்சென்று தேவராசனை அழிப்போம், அச்சமையத்தில் தேன்பொருந்திய துளவமாலையையணிந்த மார்பையுடைய திருமாலும்வந்தால் அவனுக்குப் பயப்படாமல், நம்மாலியன்றவனையினும் கோபித்துப் போர்செய்வோம் என்றான் வச்சிரதந்தன். எ - று. (௧0)

மன்னிது சொலவன் னேன்பின் வந்தவர் வணங்கி யைய
முன்னர்யாம் பல்கால் வானோர் முதல்வனோ டமர்தொ டங்கி
யன்னவன் றனைமு ருக்கு மமயத்தி லங்க ணேற்ற
மின்னகு திகிரி யாற்கு வெருவியே வெரிகிட் டேமால்.

(இ-ள்.) வச்சிரதந்தன் இவ்வாசகத்தைச் சொல்ல, அவன்தம்பியராகியபுண்டரிமுகன், சர்ப்பநாவன் என்னு மிருவரும் நமஸ்கரித்து, ஐயனே! முற்

காலத்தில் நாங்கள் பலதடவை இந்திரனோடுபோர்செய்ய ஆரம்பித்து அவனை அழிக்குஞ்சமையத்தில் அவ்விடத்து வந்து எதிர்த்த மின்னல்போலும் விளங்குகின்ற சக்கராயுதத்தையுடைய திருமாலுக்குப்பயந்து தோற்றோம். எ-று.

இன்றுமச் சுதனுக் காற்று திரிந்துவெந் கிடுதல் வீர
மன்றுநா மரனை யுன்னி யருந்தவம் புரிந்தன் னோனால்
வன்றிறல் வரம்பெற் றப்பான் மணிமுடி விபுதர் கோன்மேற்
சென்றிடி லெவரு நம்மைச் செயங்கொள வரிய தென்றார்.

(இ-ள்.) இப்பொழுதும் திருமாலுக்குத் தோற்று அஞ்சி முதுகு காட்டியோடுதல் வெற்றியல்ல; ஆதலால், நாம் பரமசிவனைக் குறித்து அரியதவஞ்செய்து அவரால் வலிமையாகிய வரத்தைப்பெற்று, அதன்பின் அழகிய இரத்தின கிரீடத்தையணிந்த தேவராசன்மீது போர்க்குப் போனால் எவரும் நம்மை வெற்றி கொள்ளமுடியாதென்று சொன்னார்கள். எ-று. (௪௨)

அரியதெ வெனவே வச்சிர தந்தனவ் விருவ ரோடும்
மிகுமகிழ் சிறப்பி னெழுந்து விரைவினோர் வனத்தி னெய்தி
நகுகறை மணிமி டற்று நாதனைக் கருத்தி லுன்னித்
தொகுதிகொள் மகத்தி னோடு தூய்த்தவம் புரிந்தான் மன்னே.

(இ-ள்) வச்சிரதந்தன் இது சரிதானென்று அவ்விருவருடனே மிகவும் மகிழ்ச்சியோடு சிறப்புடன் எழுந்து சீக்கிரமாக ஒரு வனத்தையடைந்து, ஆலகாலவிஷம் விளங்குகின்ற கண்டத்தையுடைய சிவபெருமானை மனதில் நினைந்து, மிகுதியாகிய யாகத்தினோடு பரிசுத்தமாகிய தவத்தையுஞ் செய்தான். எ-று. (௪௩)

கூருகி ரனைத்து நீண்டு குவலயத் திடைவே ரூன்றச்
சீருறு நகங்கள் கோடி சிகையிற்பஞ் சரங்கள் செய்யப்
பேருரு விளைப்புற் றென்பு பிறங்கவெண் ணரம்பு தோன்றப்
போருட னிருத ரெண்ணில் பொழுதருந் தவமபு ரிந்தார்.

(இ-ள்.) பகைவரைப் போரிற் கோபிக்கின்ற இராக்கதர்கள், கூர்மையுள்ள நகங்கள் யாவும் நீண்டு பூமியினிடத்து வேரூன்றவும், சிறப்புப்பொருந்திய அநேகம்பட்சிகள் முடிகளில் கூடுகட்டவும், பெரியஉடலான து இளைத்து எலும்பு (வெளிப்பட்டு) விளங்கவும், வெள்ளிய நரம்புகளெல்லாந்தோன்றவும், உடலையுடைய இராக்கதர்கள் அநேகநாள் அரியதவத்தைச் செய்தார்கள்.

நோற்றிடு நிருதர் தம்முன் னுவலருங் கயிலை வெற்பின்
மேற்றிகழ் பரமன் ஞான விமலையோ டிடப மூர்ந்து
தோற்றிளம் பிறையூர் வேணி கிளர்செழுங் கதிர்ப ரப்பத்
தோற்றிநன் றுமக்கு வேண்டும் வரமெவன் சொன்மினென்றான்.

(இ-ள்.) தவஞ்செய்கின்ற இராக்கதர் முன்னே சொல்லுதற்கரிய கயிலாயமலையினிடத்து விளங்குகின்ற சிவபெருமான் ஞானத்தையுடைய பார்ப்பதிதேவியாருடனே இடபவாகனத்தை நடத்திப் பிளவாகிய இளம்பிறை தங்கிய சடையானது விளங்குகின்ற செழுமையாகிய கிரணத்தைப் பரப்பக் காட்சி கொடுத்து, நன்மையாக உங்களுக்கு வேண்டியவரம் யாதுசொல்லுங்களென்றார். எ-று. (கரு)

மூர்த்திமற் றிதுவ ரும்ப மூவரும் பணிந்து போற்றிச்
சீர்த்திரு மறையுங் காணுஞ்செல்வவிவ் வுலக மெங்கும்
பார்த்தொளிர் மதி யமற்றிப் படாதுணங் கறலென் றென்றும்
போர்க்கிடல் வேண்டு மிந்த வரமருள் புரிதி யென்றார்.

(இ-ள்.) சிவபெருமான் இவ்வசனத்தைச்சொல்ல, மூவரும் வணங்கித் துதித்து, சிறப்பினையுடைய அழகிய வேதங்களு மறியாதசெல்வனே! இவ்வுலகமெவ்விடங்களிலும் காணப்பட்டுவிளங்குகின்ற சூரியனில்லாமல்கெடாத இருளானது எக்காலமும் மூடிக்கொள்ளவேண்டும்; இந்த வரத்தை [illegible] எங்களுக்குக் கொடுத்தருளவேண்டுமென்று சொன்னார்கள். எ-று. (கசு)

கையரிவ் வாறு வேண்டக் கணனுதன் மைந்தர் காளவ்
வெய்யவ னுதய மின்றேல் விண்ணவ ரேனை ரியாரு
முய்வகை யரிது வேத வொழுக்கமும் பிறவு நீங்கி
யையுறு மதனா லன்ன தன்றிமற் றதுகேண் மென்றான்.

(இ-ள்) கீழ்மக்களாகிய இராக்கதர்கள் இவ்வகை வேண்டிக்கொள்ள, சிவபெருமான் பிள்ளைகளே! அச்சூரியதேவன் உதயமில்லையாயின், தேவர்களும் மற்றையோர் யாவரும் பிழைக்கும்விதம் முடியாது; வேதங்களின் நடையும் மற்றவையுமழிந்து சந்தேகமுண்டாகும்; அதனாலே அதுவல்லாமல் வேறு வரங்களைக் கேளுங்களென்று சொன்னார். எ-று. (கஎ)

கண்டகர் பின்னுந் தாழ்ந்து கைதொழு தினிது போற்றி
யண்டர்தம் பெரும வெங்கட் கவ்வகை யளியா யேனும்
மண்டல வுதய பானு வருடமொன் றுதியா வண்ணந்
திண்டகு மிருள்ப ரப்பும் படியருள் செய்தி யென்றார்.

(இ-ள்.) இராக்கதர்கள் மறுபடியும் வணங்கி நன்றாய்த் தோத்திரஞ்செய்து, தேவர்களுக்கு நாயகனே! எங்களுக்கு அவ்விதமாகிய வரம் கொடாவிட்டாலும், வட்டமாக உதயமாகின்ற சூரியதேவன், ஒருவருடம் உதியாதபடி வலிய தன்மையாகிய இருளைப்பரவச்செய்யும்படி அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்றார்கள். எ-று. (கஅ)

அவ்வகை தந்தோ மென்ன வமலனங் கருளிவார்ந்த
மவ்வலங் குழலி யோடு மறைதலு மளவி லாத

வெவ்விருட் பிழம்பு தோன்றி மேலெழுந் தோங்கி விண்பார்
செவ்விடை யின்றி யோரெண் டிசைதொறு மலிந்த மாதோ.

(இ-ள்.) சிவபெருமான் அவ்விதம் கொடுத்தோமென்று சொல்லி, நீண்ட முல்லைமாலையை யணிந்த கூந்தலையுடைய பார்ப்பதிதேவியாரோடு மறைந்தவுடனே, அளவில்லாத கொடிய இருளின் திரட்சியானதுண்டாகி மேலே யெழுந்து மிகுந்து, ஆகாயமும் பூமியும் செவ்வையாகிய இடமில்லாமல் எட்டுத்திக்குகள் தோறும் மூடின. எ-று. (க௯)

திமிரமெங் கணும்ப டர்ந்து செறிதல்கண் டுவந்து தீயோர்
மமதையோ டெழுந்து வீர மயேந்திர மெனும்பேர் பெற்ற
தமதுநன் னகர்வந் தெய்திச் சார்ந்தபின் வச்சிர தந்தன்
நமனையு முருக்குந் தூது நடையரை விளித்துச் சொல்வான்.

(இ-ள்.) தீய இராக்கதர்கள், இருளானது எவ்விடங்களிலும் பரவியிருத்தலைக்கண்டு களித்து, கர்வத்துடனே கிளம்பி வீரமயேந்திரமென்னும் பெயரையடைந்த தங்களுடைய நல்லபட்டணத்தின்கண்வந்து சேர்ந்தபிறகு, வச்சிரதந்தன் எமனையுமழிக்கத்தக்க தூதசெல்லும்படியான செய்கையையுடையவரை யழைத்துச் சொல்லுவான். எ-று. (௨௰)

வேயர்கா ணீவி ரின்று விரைவினிற் படர்ந்து வெவ்வே
றாயபஃ றிசையி னுற்ற வரக்கர்யா வரையு நம்பா
லேயவிங் கழைத்து வம்மி னெனவவ ரினிது போற்றி
வாயுவு மனமு நாணு மறலியு மொழிப்பச் சென்றார்.

(இ-ள்.) தூதர்களே! நீங்களிப்பொழுது சீக்கிரமாகச்சென்று, வேறுவேறாகிய பலதிசையிலுமிருக்கின்ற இராக்கதர்கள் யாவரையும் நம்மிடத்துச் சேரும்படி இவ்விடத்து அழைத்துவாருங்களென்றுசொல்ல, அத் தூதர்கள் நன்றாக நமஸ்கரித்து, வாயுவேகமும் மனவேகமும் நாணவும், இயமனும் அறியுமாறும் அவைகளினும் வேகமாகச்சென்றார்கள். எ-று. (௨௧)

சாரணர் திசைக டோறுஞ் சார்ந்தினி தழைத்த லோடுங்
காருடற் பிறையெ யிற்றுக் கண்டகர் பலருங் கூடிக்
கூருடைப் படைக டாங்கிக் கொடியபோர்க் கோல ராகி
யேருறு வச்சிர தந்த னிடத்தில்வந் தடைந்தா ரன்றே.

(இ-ள்.) தூதர்கள் திசைகளெவ்விடத்துஞ்சென்று நன்றாக அழைத்தவுடனே, கரிய சரீரத்தையும் பிறைபோன்றபற்களையுமுடைய இராக்கதர்கள்

பலருங்கூடி, கூர்மையினையுடைய ஆயுதங்களையேந்திக் கொடிதாகிய போர்க்கோலங்கொண்டு அழகுபொருந்திய வச்சிரதந்தனிடத்தில் வந்து சேர்ந்தார்கள். எ - று. (௨௨)

அம்பரந் தொறுநி றைந்த வரக்கர்யா வரையு நோக்கி
வம்புட ரடிம னத்து வச்சிர தந்த னென்பான்
வெம்பகை வனைநா மின்று வெல்லது திண்ண மென்றே
யும்பர்தம் பெருமா னுற்ற வுலகின்மேற் செலம தித்தான்.

(இ-ள்) தீமை நிறைந்த மூலமாகிய மனத்தையுடைய வச்சிரதந்தன் இக்குகளெவ்விடங்களிலும் நிறைந்த இராக்கதர்களெல்லாரையும் பார்த்து, கொடியபகைவனை நாம் இப்பொழுது செயிப்பது உறுதியென்று தேவேந்திரன் வசிக்கின்ற அமராவதிப்பட்டணத்தையடைய நினைந்தான். எ - று. (௨௩)

நிருதர்போர்க்கேக நினைத்தசருக்கம்

முற்றுப்பெற்றது.

———

ஆ சருக்கம் ௧௭-க்கு பாடல் ௫௬௨.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை துணை.

உ

சிவமயம்.

பதினெட்டாவது

சவுடாம்பிகைசகாயம்.

அரக்கர்தேவலணமர்க் கஞ்சியசருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

போத முற்ற வியாச னோதுபு ராணம் யாவுமோ ருங்குதேர்
சூத னிப்படி மொழிய வேணி துளக்கி யன்பொடு தொழுதுபின்
மாத வத்தின ரும்ப ரோடடல் வலிய வச்சிர தந்தனன்
றேத முற்றமர் செய்த வாறு மியம்பு கென்ன வியம்புவான்.

(இ-ள்.) மகத்தாகிய தவசிரேஷ்டர்களாகிய முனிவர்கள், ஞானம் பொருந்திய வியாசமுனிவராற்சொல்லிய புராணமெல்லாம் முற்றுமுணர்ந்த சூதபுராணிகர் இவ்வாறு சொல்லக்கேட்டு, சடைமுடியையசைத்து அன்புடனே வணங்கி,பிறகு வலிமையுடைய வச்சிரதந்தன் தேவர்களோடு முன்னமே சினமடைந்து போர்செய்தவகையையும் சொல்லியருள்வீராகவென்று கேட்க, அச்சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர். எ-று. (௧)

கனக வச்சிர கவச மிட்டடு கணைநி றைத்துள தூணிநீள்
வனவ ரைப்புய மிசைத ரித்தயில் வாள்கொ டுஞ்சிலை தாங்கியே
வினைகள் பற்பல விளைவ தற்கொரு விறல ரக்கர்க டம்பிரான்
சினம தத்தரி யெனவ மைத்தொரு தேரின் மீதினி லேறினன்.

(இ-ள்.) பலவினைகள் விளைதற்குக்காரணமாகிய மனத்தையுடைய போர்செய்யும் வல்லமைபொருந்திய வச்சிரதந்தன், பொன்மயமாகிய வச்சிர கவசத்தையணிந்து, கொலைத்தொழிலைச்செய்யும் பாணங்கள் நிறைந்துள்ள அம்புக்கூட்டை நீண்ட அழகிய மலைபோன்ற தோளிற்கட்டி, வேலும் வாளும் வில்லும் தாங்கிக்கொண்டு, கோபமும் செருக்குமுள்ள சிங்கமென்னும்படி அழகாக அமைக்கப்பட்ட ஒரு இரதத்தின்மேலேறினன். எ-று. (௨)

அனுச ராய்வரு புலிமு கத்திற லாள னும்பணி நாவனுங்
குனிபி றைச்சிலை மைந்தர் சூரிய கோப னக்கினி கோபனுங்
கனல்கொ ழித்தபு கைக்க ணன்பொரு கடக நாவனெ னும்பெயர்
புனையு மற்புத மருக ரும்பல பொருவில் கூவிர மேவினர்.

(இ-ள்.) தன்னுடனே பிறந்தவர்களாகிய புலிமுகனும், சர்ப்பநாவனும், வளைந்த பிறைபோன்ற வில்லையுடைய சூரியகோபன் அக்கினி கோபனுகிய மைந்தர்களும், நெருப்புப்போலுஞ்சுடுகின்ற புகைக்கண்ணனும், போர்செய்கின்ற கடகநாவன் என்னும் பெயரையுடைய அழகிய மருகரும் பலவாகிய வொப்பில்லாத தேரின்மீதேறினார்கள். எ - று.

கடகநாவன்:—ஆயுதம் போலும் நாவையுடையவன். (ங)

கடக ரித்தொகை துரக தத்திரள் கடலெ னப்புடை செறியவெள்
ளிடைய றக்குவ டனைய பற்பல் விரத மொய்த்திட வெண்ணரும்
படைய ரக்கர்க ணமது டற்படு பசியொ ளிக்குது மினியெனத்
தொடைக டட்டினர் படர மட்டுக டீய வானிடை மூடவே.

(இ-ள்.) மூன்றுமதங்களையுடைய யானைக்கூட்டங்களும், குதிரைக் கூட்டங்களும், சமுத்திரமென்னும்படி பக்கத்தில் நெருங்கிவரவும், வெற்றிடமில்லாமல் மலையையொத்த பலவாகிய இரதங்கள் நெருங்கிவரவும், அளவில்லாத ஆயுதங்களையுடைய இராக்கதர்கள், இனிநம்முடைய வயிற்றிலுண்டாகிய பசியை நீக்குவோம் என்றுதொடைகளைத்தட்டிக்கொண்டு செல்ல, மண்தூளியானவை ஆகாயத்தை மூடவும். எ - று. (ச)

பரசு சக்கர மயிலு லக்கைகள் பகழி கொக்கரை கண்டகம்
விரவு வச்சிர மழுவெ ழுக்கதை வீறு மேதகு தோமரம்
கரள் முற்றுமிழ் குளிர்க ணிச்சிகள் காள மேனைய தானையுந்
தாமு றப்பர வியவ ளப்பரு சகட மும்படர் தரவரோ.

(இ-ள்.) மழுக்களும், சக்கரங்களும், வேலாயுதங்களும், உலக்கைகளும், அம்புகளும், வில்லுகளும், வாளாயுதங்களும், பொருந்திய வச்சிராயுதங்களும், எரியிரும்புகளும், வளைதடிகளும், கதைகளும், பெருமையுள்ள மேம்பட்ட எறியீட்டிகளும், நஞ்சுபூசப்பட்டுமிழ்கின்ற ..., உளியும், நஞ்சும் மற்ற ஆயுதங்களும், மேன்மையாக பரப்பிவைக்கப்பட்ட அளவில்லாத வண்டிகளும் பின் செல்லவும். எ - று. (ரு)

பேரி துந்துமி காக ளம்பணை பீலி பம்பைக் காளகந்
தூரி யத்துடி கோடு சல்லரி தூய நாகசு ரந்தவில்
வாரி யங்கிய முரசு சங்கமி தங்க மின்னவ கைப்பெருஞ்
சீரி யங்கட லொலியெ னும்படி திசைக ளெங்கணு மதிரவே.

(இ-ள்.) பேரிகையும், துந்துபியும், காளமும், குழலும், பீலியும், பம்பை யென்னும் முல்லைநிலப்பறையும், தம்பட்டமும், உவகைப்பறையும், உடுக்கையும், ஊதுகொம்பும், பம்பைமேளமும், தூய்மையாகிய நாகசுரமும், தவிலும், வாரால்கட்டப்பட்டு விளங்குகின்ற முரசென்னும் வாத்தியமும், சங்கமும், மத்தளமும், இவைபோன்ற பலவகைப்பட்ட பெருமையுஞ் சிறப்புமுள்ள

வாத்தியங்கள் கடலோசையென்னும்படி திக்குகளெவ்விடத்திலும் சத்திக்க வும். எ - று. (௬)

தீர வச்சிர தந்த னிவ்வகை தேர்க டாவிவி ரைந்து சென்
ஞர மொத்த நகைப்பு லோமிசை யார்வ லன்பதி யருகுறூ
வார ணத்துநி றத்த ரக்கரை மாதி ரந்தொறு நிறுவிபே
சூர முற்றிய சமர பேரிதொ னித்தி டும்படி யருளினன்.

(இ-ள்.) வலிமையுள்ள வச்சிரதந்தன் இவ்வாறு தேரை நடத்திக் கொண்டு சீக்கிரமாகப்போய், முத்துப்போன்ற பல்வரிசையையுடைய இந்திராணியிடத்து விருப்பமுள்ள இந்திரனது அமராவதிப்பட்டணத்தின் சமீபத்தையடைந்து, கடல்போலும் நிறமுள்ள இராக்கதரைத் திக்குகளெவ்விடத்தும் நிறுத்தி, அச்சமிகுந்த போர்ப்பறையை முழக்கும்படி உத்தரவு செய்தான், எ - று. (௭)

தமர வேலையெ னக்க தித்தெழு சமர பேரி தனைத்தெரிந்
தமரர் யாவரு மஞ்சி யோடிய லங்கல் வச்சிர பாணிதன்
கமல பாத மிறைஞ்சி யைய கடுங்கொ லைத்தொழி னிருதர்க
ணமது நாடு வளைந்து போர்செய நண்ணி னாரென வோதினார்.

(இ-ள்.) ஒலியையுடைய சமுத்திரமென்னும்படி மிகுந்தெழுகின்ற போர்ப்பறை முழக்கைத்தெரிந்து, தேவர்கள் யாவரும் பயந்தோடி, பூமாலையையணிந்த இந்திரனுடைய தாமரைமலர்போன்ற பாதங்களை வணங்கி, ஐயனே! தீய கொலைத்தொழிலைச் செய்பவர்களாகிய இராக்கதர்கள் நம்முடைய பட்டணத்தைச் சூழ்ந்துகொண்டு போர்செய்ய வந்திருக்கின்றார்களென்று சொன்னார்கள். எ - று. (௮)

நிறையு மும்பர்க ளமர்பு ரிந்திட நிருதர் வந்தன ரென்னலு
மிறைவ னங்கது வினவி யொலிலையெ ழுந்து பேரிய திர்ந்திட
முறைபெ ருஞ்சது ரங்க சேனைகண் முழுவ தும்கடை யுகமலிந்
தறைநெ டுங்கட லெனந டுங்கிட வணிகொ டேர்மிசை யேறினான்.

(இ-ள்) நிறைந்த தேவர்கள், இராக்கதர்கள் யுத்தஞ்செய்ய வந்தார்களென்றுசொன்னவுடனே, தேவேந்திரன் அவ்விடத்து அதைக்கேட்டுச் சீக்கிரமாகவெழுந்து, வாத்தியங்கள் சத்திக்க முறையாகப்பெரிய நான்குவகைச் சேனைகளெல்லாம் ஊழிக்காலத்திலொலிக்கின்ற பெரியசமுத்திரம் போலச் (சூழ்ந்துவரக்) கண்டோர் நடுங்கும்படி அழகுகொண்ட தேரின்மேலேறினான். எ - று. (௯)

மகர குண்டல மணிகொள் கண்டிகை மகுட மும்கதிர் திகழவே
சிகர வண்கிரி யெனவ ளர்ந்தெழு தேர்க டாவிவி ரைந்துபோய்

நகர்வ ளைந்துள நிருதர் வெம்படை நடுந டுங்கிட விற்குனித்
துகள்கொ டுங்கணை பலபொ ழிந்தன னேல மாமழை போலவே.

(இ-ள்.) மகரகுண்டலமும், இரத்தினம் பதித்தபதக்கமும், கிரீடமும் காந்தி விளங்கச் சிகரங்களையுடைய வளப்பமுள்ள மலையென்னும்படி உயர்ந்த தேரைநடத்திச் சீக்கிரமாகச்சென்று, அமராவதிப்பட்டணத்தைச்சூழ்ந்துள்ள இராக்கதர்களாகிய கொடிய சேனைகள் நடுங்கும்படி வில்லைவளைத்துப் (பகைவருடலில்) பாய்கின்ற கொடிய அம்புகள் பலவற்றைஒலிக்கின்ற பெரிய மழைபோலத் தூவினன். எ-று. (௧௦)

அண்டர் மன்பிர சண்ட வெங்கன லம்பு சிந்தவ ளைந்துளோர்
கண்ட துண்டம தென்று லைந்திடல் கண்டு கண்டகர் தம்பிரான்
மண்டு கின்றசி னந்த தும்பிவ ளர்ந்தெ ழும்பவெ திர்ந்துபோர்
கொண்ட னன்புவி யண்ட ரண்டமெ னுந்த லங்கள்கு லுங்கவே.

(இ-ள்.) தேவராசன் மிகுந்த வேகத்தையுடைய கொடிய நெருப்புப் போன்ற பாணங்களைப்பொழியாநிற்க, வளைந்துள்ள இராக்கதர்கள் துண்டு துண்டாக அழிதலைப்பார்த்து இராக்கதர்களுக்கு அரசனாகிய வச்சிரதந்தன் மிகுந்தெழுகின்றகோபமானது சினந்துவளர்ந்துஅதிகரிக்கத்தேவராசனோடெதிர்த்து, பூமியும் தேவலோகமும் நடுங்கும்படி யுத்தஞ்செய்யத் தொடங்கினன்.

விண்டு வானவர் தங்கு ழாமுமி குங்கு ரூரர்க ளுங்கலந்
தெண்டி சாமுக முஞ்ச ராசர மென்ற யாவுந டுங்கநீள்
பிண்டி பாலமி லங்கு மாழிபி றங்கு சூலமெ றிந்துபோர்
கொண்டு லாவினர் துங்க மேனிகு லைந்து சோரிகள் பொங்கவே.

(இ-ள்.) தேவர்களது கூட்டமும், மிகுந்த கொடுமையையுடைய இராக்கதர்களும் காற்றுபோலக்கூடி எட்டுத்திக்குகளும், சராசரங்களாகிய அசையும்பொருள்களும் அசையாப்பொருள்களும் நடுங்கும்படி, நீண்ட எறியாயுதங்களும், விளங்குகின்ற சக்கராயுதங்களும், பெருமையுள்ள சூலாயுதங்களுமாகிய இவைகளை யெல்லாம் வீசிப்போர்செய்து உயர்வாகிய உடம்புகள் நடுங்கி இரத்தங்கள் பெருகும்படிப் போர்விளையாட்டைச்செய்தார்கள். எ-று.

விண்டு - என்பதற்கு, தங்கள் வீரத்தைப் புகழ்ந்து சொல்லி எனினுமாம். (௧௨)

இருபெ ரும்படை களுமெ திர்ந்தம [illegible]ரில டர்ந்திடு பொழுதுவெண்
முருவொ டுங்கட லுறுதி ரியங்கல முதன்மி தந்தன முகிலெலா
மருவி யம்பிடை வெருவி யொண்டின வலரி திங்களு மறுகியே
வருப யம்பெரி தொடுகு முன்றன மனம யங்கினர் முனிவரே.

(இ-ள்.) இரண்டு பெரிய சேனைகளும் போரிலெதிர்த்து மோதுகின்ற காலத்தில், வெண்மையாகிய முருடு என்னும் வாத்தியம்போலச் சத்திக்கின்ற கடலிலுள்ள திமிங்கிலமுதலாகிய மீன்கள்யாவும் மிதந்தன; மேகங்கள்யாவும் அரிய ஆகாயத்தினிடத்துப்பயந்து சேர்ந்தன; சூரியனும் சந்திரனும் மயக்க மடைந்து வருகின்ற பெரிய அச்சத்துடனே சுற்றின; தவத்தோர்கள் மன மயங்கினார்கள். எ-று. (கசு)

தரைபி ளந்தன வடவை யஞ்சின தலைம யங்கின திசையெலாம்
வரையு மெண்கரி களுந டுங்கின வள்ர வந்தனு மறுகினன்
நிரைபெ றும்பல கணமு திர்ந்தன நிமிர்செ ழுஞ்சடை முடியுளோன்
உரைபொ ருந்திய காத லங்கிக மூழையு நொந்தது பதறியே.

(இ-ள்.) பூமியானது பிளந்தன; வடவாமுகாக்கினி பயந்தன; திக்குகளெல்லாம் இடம் விட்டுப்பெயர்ந்தன; எட்டுமலைகளும் எட்டுத்திக்கு யானைகளும்நடுங்கின; வளர்கின்றசேடனும் மயங்கினன்; வரிசைபெற்ற நக்ஷத்திரக்கூட்டங்களும் உதிர்ந்தன; உயர்ந்த செழித்த சடைமுடியையுடைய சிவபெருமானது உயர்ச்சி பொருந்திய கையினிடத்து விளங்குகின்ற மானும் நடுங்கி வருந்தியது. எ-று. (கஎ)

கலிவிருத்தம்.

இன்ன வாறமர் செய்திய போழ்தினி
லன்ன தானை யரக்கர்பல் லோர்மக
மன்ன னேமுதல் வானவர் போர்வெரீஇப்
பின்ன மோடுவெந் நிட்டனர் பிந்தியே.

(இ-ள்.) இவ்விதமாகப்போருண்டாகிய காலத்தில், அப்படிப்பட்ட சேனைகளையுடைய இராக்கதர்கள் பலரும், இந்திரன் முதலாகிய தேவர்களுடைய சண்டைக்குப்பயந்து, பழுதடைந்து பிற்பட்டு முதுகுகாட்டியோடினார்கள். எ-று. (கஅ)

தலைமை வச்சிர தந்தன தைத்தெரிந்
துலைய ரக்கரை யோடன்மி னென்றுகூய்ச்
சிலைகு னித்தெதிர் தேவர் தளர்ந்திட
மலைதி றத்தை மதித்து நெருங்கினன்.

(இ-ள்.) முதல்வனாகிய வச்சிரதந்தன் அதனைத்தெரிந்து,வருந்துகின்ற இராக்கதர்களை ஓடாதீர்களென்றழைத்து வில்லைவளைத்து எதிர்ந்ததேவர்கள் தளரும்படிப் போர்செய்யுந்தன்மையை ஆராய்ந்து அத்தேவர்களை நெருங்கினன். எ-று. (கசு)

கொடிய கண்டகர் யாருங் குழுமிவேல்
கடிய வம்பொடு காளங் கழுக்கடை

தடியெ றிந்து தருவரை வீசியே
முடுகி யும்பர்க டம்மையெய்த் தாரரோ.

(இ-ள்) கொடுமையையுடைய இராக்கதர்கள் யாவருங்கூடி, வேலும் கடுமையாகிய பாணமும் சூலமும் ஈட்டியும் உலக்கையும் எறிந்தும், மரங்களை யும் மலைகளையும் வீசியும் விரைந்து தேவர்களை நெருங்கினார்கள். எ-று. (கஎ)

உம்ப ரப்பொழு தொண்மகு டம்பணி
சம்ப முற்படு தானை யுமிழ்கதிர்
பம்ப லுற்ற படரிருள் சீத்திட
வெம்ப வத்தினர் மேற்கலந் தாரரோ.

(இ-ள்.) தேவர்கள் அச்சமயத்தில் அழகிய கிரீடமும், ஆபரணமும், வச்சிராயுதம் முதலாகிய ஆயுதங்களும், கக்குகின்ற கிரணங்களானவை நெரு ங்கிப்பரவிய இருளை நீக்கும்படி கொடிய இராக்கதர்மீது போரிற்கலந்தார்கள்.

மூரி வேலை முரச மதிர்ந்தெழக்
காரு லாவுறு காளத்தி னூடமு
தாரு நீரென வண்டர்வெய் யோரொடு
போரி னேர்ந்து பொருபடை தூவினார்.

(இ-ள்.) பெரியசமுத்திரம்போலும் வாத்தியங்கள் முழங்க, கருமை பொருந்திய விஷத்துடனே அமிர்தமானது கலக்குந்தன்மைபோலத் தேவர் கள் கொடிய அரக்கரோடு போரிலெதிர்ந்து,பொருதுகின்ற ஆயுதங்களை ஏவினா ர்கள். எ-று. (கசு)

தாம வச்சிர தந்தன் சினந்துபின்
காமர் பொற்சிலை கோட்டிக் கணைகடூ
யேம முற்றவி லேகர் விடுத்தபன்
மாமி டற்படை யாவையும் வாட்டியே.

(இ-ள்.) பூமாலையையணிந்த வச்சிரதந்தன் கோபங்கொண்டு, பிறகு அழகிய பொன்னுலாகிய வில்லைவளைத்துப்பாணங்களையேவி,இன்பம் பொருந் திய தேவர்கள்விட்ட பலவகைப்பட்டபெரிய வலிமையுடைய ஆயுதங்களெல் லாவற்றையும் அழித்து. எ-று. (உ0)

மற்று மெண்ணில் வடிக்கணை தூண்டிநே
ருற்று டன்றிடு மும்பர்கள் மெய்யெலா
மற்ற மொன்றத் துளைத்தன னுறுமேபாற்
பற்று செங்குரு தித்திரள் பாயவே.

(இ-ள்.) பின்னும் அளவில்லாத கூர்மையுள்ள அம்புகளைத்தூவி,நேரி ல்வந்து போர்செய்கின்ற தேவர்களுடைய உடம்புகளெல்லாம் வருந்த நதி

போலப் பொருந்திய சிவந்த உதிரம் மிகுதியாகப் பாயும்படி வச்சிரதந்தன் துளைத்தனன். எ - று. (உக)

அந்த வேலை யரக்கன் சமர்க்குடைந்
திந்தி ராதி யிமையவர் யாவரும்
புந்தி சோர்ந்து புறங்கொடுத் தோடியே
முந்து வான முகட்டொளித் தாரரோ.

(இ-ள்.) அப்பொழுது தேவேந்திரன் முதலாகிய தேவர்களெல்லாரும் வச்சிரதந்தனுடைய போருக்குத்தோற்று, அறிவழிந்து புறங்காட்டி யோடிமுற்பட்ட ஆகாயத்திலுச்சியில் ஒளித்துக்கொண்டார்கள். எ - று. (உஉ)

புறமிட் டோடினர் புங்கவ ரென்றுள
மறமுற் றோங்கிய வச்சிர தந்தனும்
திறமிக் கானபல் சேனையுஞ் சூழ்தர
வீரமற் றுடன் னணிநகர் நண்ணினான்.

(இ-ள்.) மனஇற் பாவமிகுந் தோங்கிய வச்சிரதந்த னென்கின்ற இராக்கதன் தேவர்கள் தோற்றோடினார்களென்று, திறமை மிகுதியுமுள்ளபல சேனைகளுஞ் சூழத் தருமஞ் சிறிதுமில்லாமல் ஆளுகின்ற தன்னுடைய அழகிய பட்டணமாகிய வீரமயேந்திரத்தை யடைந்தான். எ - று. (உஙு)

அனனி கர்ந்தவ ரக்கர கன்றன
ரெனவொ ளித்தவி மையவர் யாவரு
மனப யத்தொடு வாசவற் சூழ்ந்துபோய்க்
கனமு டித்தண் கைலையின் மேவினார்.

(இ-ள்.) தீயையொத்த இராக்கதர்கள் போய்விட்டார்களென்று, மறைந்திருந்த தேவர்களெல்லாரும் மனத்திலச்சத்தோடுதேவராசனைச்சுற்றிக் கொண்டு சென்று, மேகங்கள் தவழுகின்ற சிகரங்களையுடைய திருக்கயிலாய மலையை யடைந்தார்கள். எ - று. (உச)

[illegible]டை. போற்றுறு நந்திக
டன்ம லர்ப்பதந் தாழ்ந்தவ னுய்த்திட
மின்ம லைப்புய விண்ணவ [illegible]ம்பிரான்
மன்ம ணிக்கிரு மந்திரத் தெய்தியே.

(இ-ள்.) பொன்னுலமைந்த [illegible]லவாயிலேக்காக்கின்ற நந்திதேவருடைய மலர்போன்ற பாதங்களை [illegible], அந்நந்திதேவரனுப்ப, மின்னல் படிந்த மலை போன்ற புயங்களையுடைய தேவர்கள் எமது கடவுளாகிய சிவபெருமானெழுந்தருளிய இரத்தினத்தாலமைந்த அழகிய கோயிலின்கட்சென்று, எ - று.

அமலை யோடரி யாதனமீ துறும்
விமல நாதனை மேவிப் பணிந்துவில்
லுமிழு மாமுடி யும்பரெல் லோர்களு
மிமிழு நான்மறை யாலினி தேத்தினர்.

(இ-ள்.) பார்ப்பதிதேவியாரோடு சிங்காதனத்தின்மேலெழுந்தருளிய பரிசுத்தராகிய சிவபெருமானையடைந்து வணங்கி, பிரகாசத்தைக்கக்குகின்ற பெரிய கிரீடமணிந்த தேவர்களெல்லோரும் ஒலிக்கின்ற நான்கு வேதவாக்கியங்களால் நன்றாகத் தோத்திரஞ் செய்தார்கள். எ - று. (உசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மேவினின் றினிது போற்று மேதகு மிமையோர் தம்மை
யாவியெங் கணுநி றைந்த வரன்றுணை விழியா னோக்கி
நீவிரிங் கடைந்த தென்னை நிகழ்த்துமி னென்ன லோடும்
பூவிரு காங்கு வித்துப் புகழ்ந்தவர் புகல்வ தானார்.

(இ-ள்.) உயிர்கள் தோறும் நிறைந்தசிவபெருமான் தமது சந்நிதானத்தில்வந்து நின்று நன்றாக வணங்கிய மேன்மை பொருந்திய தேவர்களை இரு கண்களாலும் பார்த்து, நீங்களிவ்விடத் துவந்த காரணம்யாது சொல்லுங்களென்று கேட்டவுடனே, மலர்போன்ற இரண்டு கைகளையுங் குவித்து நமஸ்கரித்து, அத்தேவர்கள் சொல்லத்தொடங்கினர்கள். எ - று. (உஎ)

பதந்தரு மவுன முக்கட் பரமகேட் டருடி பாவ
மதங்குடி யிருந்த சிந்தை வச்சிர தந்த னென்னுங்
கதந்திக ழரக்க னெண்ணில் கடும்படை யொடுவந் தெய்தி
விதந்தவிர் செருமு யன்று வெருவுற வருத்தி னனல்.

(இ-ள்.) (அடியார்களுக்கு) மோட்சபதவியைக்கொடுக்கின்ற மோனந் தங்கிய மூன்றுகண்களையுடைய சிவபெருமானே! கேட்பீராக. பாவமும், கருவமும் குடியிருக்கின்றமனத்தையுடைய வச்சிரதந்தனென்று சொல்லப்பட்ட கோபம் விளங்குகின்ற இராக்கதன், அளவில்லாத வேகமுள்ள சேனைகளுடனே வந்துகூடி, வகையில்லாத போரைச்செய்து நாங்கள் அஞ்சும்படி வருத்தினான். எ - று. (உஅ)

கடும்படை யுடைய காலன் கடையுகடன் சமருக் காற்று
துடைந்தற முதுகிட் டோடி யொளிந்துளம் வெருவி யுன்பால்
அடைந்தன மெங்கட் குன்னை யன்றியொரு கதிவே றுண்டோ
விடும்பைமற் றிதனை நீக்கி யெமையளித் தருடி யென்றார்.

(இ-ள்.) கொடுமையாகிய சேனைகளையுடைய வச்சிரதந்தனது சண்டைக்கு நிலைபெறுதபடி தோற்று, மிகவும் புறங்காட்டியோடி யொளிந்து

கொண்டு மனமஞ்சித்தேவரீரது சந்நிதியைச்சேர்ந்தோம்; எங்களுக்குத் தேவரீரையல்லாமல் வேறே யொருகதியுள்தோ (இல்லையாதலால்) இத்துன்பத்தை நீக்கி எங்களைக் காக்கவேண்டுமென்று சொன்னார்கள். எ - று. (உகூ)

ஐயர்மற் றினைய கூற வவர்தமைக் கரம மைத்துச்
செய்யபொற் பவள வேணிச் செம்மறே வலனை யுன்ன
மையலற் றொளிரு மந்த மாதவ னதனைத் தேர்ந்து
நொய்தெனக் கயிலை மீதோர் நொடிக்குள்வந் தடைந்தா னன்றே.

(இ-ள்.) தேவர்கள் இவ்வார்த்தைகளைச்சொல்ல, சிவந்த அழகிய பவளம்போலுஞ் சடையினையுடைய சிவபெருமான் அத்தேவர்களைப் பார்த்துக் கையமைத்துத் தேவாங்கமுனிவனை நினைக்க, மயக்கம் நீங்கி விளங்குகின்ற அப் பெரியதவத்தினையுடைய தேவாங்கமுனிவன் அதைத்தெரிந்து, கயிலாயமலையின்கண் விரைவாக ஒரு நொடிப்பொழுதில் வந்து சேர்ந்தான். எ - று.

ஆமோத நகர்பு ரக்கு மரியதே வாங்க னென்னை
பூமோது மடிக டாழ்ந்து புகழது மவனை நோக்கி
மாமோன வள்ள லீயிவ் வானவர் தமைவ ருத்துந்
தீமோக நிருதர் தம்மைச் செற்றிவண் வருதி யென்றான்.

(இ-ள்.) ஆமோதநகரத்தையாளுகின்ற அருமையாகியதேவாங்கமுனிவன், சிவபெருமானது மலரை வருந்தச் செய்கின்ற திருவடிகளை வணங்கித் தோத்திரஞ்செய்தவுடனே, மகத்தாகிய மௌனத்தையுடைய சிவபெருமான் அத்தேவாங்கமுனிவனைப் பார்த்து, நீ இந்தத்தேவர்களைவருத்துகின்றகொடிய மயக்கத்தையுடைய இராக்கதர்களைக் கொன்று, இவ்விடத்துவரக்கடவாயென்று சொல்லியருளினார். எ - று. (ஙக)

ஆலமர் கடவு ளிவ்வா றருள்செயு வகிலங் காக்கு
மேலவ னன்றென் றன்னேன் விரைமலர்க் கழலி றைஞ்சி
மாலணி வரைகள் சாய்த்த வச்சிர பாணி வேந்தன்
கோலமா முகத்தை நோக்கிக் கூறுதின் மேயி னனல்.

(இ-ள்.) கல்லாலவிருட்சத்தின் கீழலிலெழுந்தருளிய சிவபெருமான் இவ்வாறு சொல்லியருள, உலகத்தையாளுகின்ற மேன்மையையுடைய தேவாங்கமுனிவன் நல்லதென்று அச்சிவபெருமானுடைய மணமுள்ள தாமரைமலர்போன்ற பாதங்களை வணங்கி, மேகந்தவழ்கின்ற அழகிய மலைகளையழித்த வச்சிராயுதத்தையுடைய தேவேந்திரனது அழகிய முகத்தைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினான். எ - று. (ஙஉ)

ஊனகு குலிச வேலோ யுளமினி யஞ்சே லுன்றன்
சேனையி னெடுது நக்கன் சேர்தியால் யானு மோத

மாநகர் குறுகி யெண்ணில் வன்படை திரட்டிக் கொண்டத்
தானமை தொருக் ணத்துட் டரமுறச் சார்வ லென்றான்.

(இ-ள்.) பகைவருடைய மாமிசம் விளங்குகின்ற வச்சிராயுதத்தை யேந்திய இந்திரனே! இனி நீமனதில் பயங்கொள்ளாதே; உன்னுடைய சேனை யுடனே அமராவதிப்பட்டணத்தை யடைவாயாக; நான் ஆமோதநகரத்தை யடைந்து [illegible] வில்லாத வலிய சேனைகளைச் சேர்த்துக்கொண்டு அவ் வமராவதிப்பட்டணத்திற்கு ஒரு கணப்பொழுதில் மேன்மையோடு வருவேனென்று சொன்னான். எ-று. (நங)

பூதலத் தரச னின்ன புகலநன் றெனவி சைந்தங்
காதனத் தமர்ந்த வெந்தை யடிமலர் முடியிற் சூடிக்
காதலிற் கருணை பெற்றுக் கடவுள ரொடுவ லாரி
தீதறத் திகழ்த ருந்தன் றிருவளர் நகரம் புக்கான்.

(இ-ள்.) பூமியையாளுகின்ற அரசனாகிய தேவாங்கமுனிவன் இவை களைச்சொல்ல நல்லதென்று சம்மதித்து, அவ்விடத்துச் சிம்மாசனத்தில் எழுந்தருளிய சிவபெருமானுடைய ஸ்ரீபாததாமரைகளைச் சிரமேற் றரித்த, இச்சையுடனே அவனது கிருபையைப்பெற்று, தேவர்களுடனே தேவேந்திரனானவன் குற்றமற விளங்குகின்ற தன்னுடைய செல்வமிக்க அமராவதிப் பட்டணத்தைச் சேர்ந்தான். எ-று. (நச)

மகபதி யகன்ற பின்னர் வயங்குல வியதே வாங்க
னகமகிழ் சிறப்ப வாதி யமலனம் புயத்தாள் போற்றித்
தகவுறு விடைபெற் றந்தத் தவளமால் வரைத ணந்து
செகதலம் புகழா மோதத் திருநகர் சேர்ந்தான் மன்னோ.

(இ-ள்.) தேவேந்திரன் போனபிறகு, வெற்றிபொருந்திய தேவாங்க முனிவன் மனதில் மகிழ்ச்சி யுண்டாக முதல்வனாகிய சிவபெருமானுடைய தாமரை மலர்போன்ற பாதங்களை நமஸ்கரித்து, தகுதியாகிய உத்தரவுபெற்று, வெள்ளிய அக்கயிலைமலையினின்று நீங்கி, பூமிமுழுதும் புகழ்கின்ற அழகிய ஆமோதநகரத்தை யடைந்தான். எ-று. (நரு)

அரசணி மண்ட பம்புக் கரிகொள [illegible] தனத்த மர்ந்து
திரள்புய திருப [illegible]கட் சிலர்தமை விளித்துத் தத்த
மிரதகுஞ் சா[illegible] ரங்க மெழுபதா [illegible]ளை னைத்துந்
தருதிரொன் றுரைப்ப வன்னோர் [illegible]ழ்ந்துநன் றெனந டந்தார்.

(இ-ள்.) திரண்ட தோள்களையுடைய தேவாங்கமுனிவன் கொலுமண்டபத்தில் பிரவேசித்துச் சிம்மாசனத்திலெழுந்தருளி, அவ்விடத்துள்ள சிலரை யழைத்து, தங்கள் தங்களுடைய தேர் - யானை - குதிரை - காலாளாகிய

இவைகளையெல்லாங் கொண்டுவாருங்களென்று சொல்ல, அவர்கள் வணங்கி நல்லதென்று சென்றார்கள். எ - று. (௧௬)

ஒற்றர்சென் றுரைத்த லோடு முறுபதா கினிகள் யாவு
மற்றமில் கடல்க ளேழு மடைந்தென மிடைந்து துள்ளிப்
பற்றல ருயிரை வவ்விப் பசுந்தசை நுகர்ந்து செவ்வேற்
கொற்றவ னெதிர்வந் தெய்திக் குழுமின தொழுது மாதோ.

(இ-ள்.) ஏவுகாரர்கள் போய்ச் சொன்னவுடனே, மிக்க சேனைகளெல்லாம் மெலிவில்லாத ஏழுசமுத்திரங்களும் வந்தாற்போல நெருங்கித் துள்ளிப் பகைவருடைய உயிரைக் கிரகித்து, பசிய மாமிசத்தை யுண்டு செவ்விய வேலையேந்திய தேவாங்கமுனிவனுடைய சமுகத்தை யடைந்து தொழுது கூடின. எ - று. (௧௭)

குரிசிலங் கெழுந்து செம்பொற் கோயிலி னெய்திச் சோதி
விரிமணி மகுடஞ் சூட்டி மிளிர்பல கலனும் வேய்ந்து
புரிசெழுஞ் சடாரி மார்பிற் பூட்டிநுண் மருங்கி னூடு
வரிதரு கச்சு மைத்து மற்றதிற் சுரிகை மாட்டி.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் அவ்விடம்விட்டகன்று, செம்பொன்னாலமைந்த அரண்மனையிற் சென்று, ஒளிபரவிய இரத்தினகிரீடத்தைத்தரித்து விளங்குகின்ற பல ஆபரணங்களையுமணிந்து, விரும்புகின்ற செழித்த கவசத்தை மார்பினிடத்துக்கட்டி, நுண்மையாகிய இடையிற் கட்டப்பட்ட வரிகளையுடைய கச்சைச் சேர்த்து அதில் உடைவாளைச் செருகி. எ - று. (௧௮)

மாற்றவர் வருந்தும் பொற்றாண் மலரில்வார் கழல்வ ணைந்து
மேற்றடம் புயத்தி னூடு வெஞ்சரத் தூணி வீக்கி
யாற்றல்கொ டனுவு மேந்தி யளப்பருங் கருவி தாங்கிக்
காற்றினும் விரைந்து செல்லுங் கலிம்பரித் தேர்மேற் கொண்டான்.

(இ-ள்.) பகைவர்கள் கைகளாற்றடவும்படியாகிய அழகிய மலர்போன்ற பாதங்களில் பெரிய வீரக்கழலை யணிந்து, மேலாகிய பெரிய தோள்களில் கொடிய அம்புப்பெட்டியைக்கட்டி, வலிமையைக்கொண்ட வில்லையுந்தாங்கி, இன்னும் அளவில்லாத ஆயுதங்களையுஞ் சுமந்து, வாயுவேகத்திலும் விரைந்து செல்லுகின்ற கடிய வேகத்தை யுடைய குதிரைகட்டிய தேரின்மே லேறிச் சென்றான்; தேவாங்கமுனிவன். எ - று. (௧௯)

கருங்கட லுடைந்த தென்னக் கனகதுந் துபித வண்டை
யருங்கன வியங்கள் யாவு மதிர்ந்தவெண் டிசையு மஞ்சப்
பொருங்கொடி கவரி தொங்கல் பொருந்துசாந் தாற்றி யாதி
நெருங்குபல் விருது மெங்கு நிறைந்துற வெழுந்த வன்றே.

(இ-ள்.) கரிய சமுத்திரமுடைந்ததுபோலப் பொன்னாற்செய்த பேரிகையும் தவண்டையும் அரிய பெரிய பலவாத்தியங்களும் எட்டுத் திக்குகளும் அச்சங்கொள்ளும்படி ஒலித்தன; போர்செய்தற்குரிய கொடிகளும், சாமரைகளும், வெள்ளைக்குடைகளும், விசிறிகளும் இவைமுதலாக நெருங்கிய பல விருதுகளும் எவ்விடங்களிலும் நிறைந்து மிகவுமெழுந்தன. எ - று. (௬0)

நிழ[illegible]மித் தெழுந்து வீரர் நெஞ்சகங் கலங்கத் தாக்கி
யழல்கடை விழியாற் சிந்தி யண்டமுங் கிழிய வீரிட்
டுழலுமக் குலாலவாழி யொப்பென வுலவுஞ் சீற்ற
மழைமதப் பிறைக்கோட் டும்பல் வரம்பில மருங்கு செல்ல.

(இ-ள்.) தன்னுடைய நிழலைக்கோபித்துக் கிளம்பி, வீரர்களுடைய மனமானது நடுங்கும்படி மோதி, கடைக்கண்ணால் நெருப்பைச் சிந்தி, ஆகாசமும் பிளக்கும்படி சத்தித்து, சுழலுகின்ற குயவனுடைய சக்கரமொப்பென்னும்படிச் சஞ்சரிக்கின்ற மழைபோலும் மதத்தையும், பிறை போலுங் கொம்புகளையுமுடைய யானைகள் அளவில்லாதன பக்கங்களிற் செல்லாநிற்க.

வாழிருங் குவட்டு மேரு வரைபல நிகழ்வ தென்ன
வாழியங் கொடிஞ்சித் திண்டே ரளவில மருங்கு சுற்றச்
சூழுறு கடலிற் றாவித் தொடர்மன மெனகொ டிக்கு
ளேழுல குலாவி மீளு மிவுளிக ளனந்த மொய்ப்ப.

(இ-ள்.) முறைமையாகிய பெரிய சிகரங்களையுடைய பலமேருமலைகள் நடப்பதுபோல, உருளைகளையுடைய அழகிய சிகரமுள்ள வலிய தேர்கள் அளவில்லாதன பக்கங்களிற்சூழ, பூமியைச்சுற்றிய கடல்போலவும் விஷயங்களில் தாவிப்பற்றுகின்ற மனம்போலவும் கணப்பொழுதினுள் ஏழுலகங்களிலும் உலாவித் திரும்புகின்ற அளவில்லாத குதிரைகள் சுற்றிவர. எ - று. (௬௨)

நடுவனு முதுகிட் டோட நண்ணரு மமர்க்க ளம்புக்
கடுதொழில் விளைக்குந் தானை யதிபரங் கனந்தர் சூழ
விடுசுட ரணிக ளெண்ணில் வெய்யவ னினுமி லங்கத்
தொடுகணை மதன்கொ லென்னத் தோகையர் மோக மெய்த.

(இ-ள்.) இயமனுந்தோற்றோடும்படி அடைதற்கரிய போர்க்களத்திற்போய்க் கொல்லுந்தொழிலைச் செய்கின்ற சேனைகளையுடைய தலைவர்கள் அநேகர் சூழ, காந்தியை வீசுகின்ற அளவில்லாத ஆபரணங்கள் சூரியனைப்பார்க்கிலும் மிகுதியாக விளங்க, பெண்கள் மலரம்புகளைத் தொடுக்கின்ற மன்மதனோவென்று காமவிகாரத்தையடைய. எ - று. (௬௩)

அப்பெரும் படைக ளோடு மாழியந் தேர்க டாவிச்
செப்பருந் திறலான் மிக்க தேவல னவனி நீங்கி

யொப்பனை யமைந்த வந்த வும்பர்தன் னுறக்க மெய்தி
யெப்புக ழினுமு யர்ந்த விந்திரன் கோயில் புக்கான்.

(இ ள்.) சொல்லுதற்கரிய வலிமையால் மிகுந்த தேவாங்கமுனிவன், அந்தப் பெரியசேனைகளுடனே சக்கரத்தையுடைய அழகிய தேவாங்கநாட்டுப் பூமியினின்றும் நீங்கி, அலங்காரம் நிறைந்த அந்தத் தேவர்களுடைய அமராவதிப்பட்டணத்தை யடைந்து, எவ்வகைப் புகழிலும் உயர்ந்த தேவேந்திரனுடைய அரண்மனையிற் சென்றான். எ - று. (௪௪)

நண்ணின னரச னென்று நலங்கிளர் குலிசப் புத்தேள்
எண்ணிகு களிப்பி னோடங் கெதிர்தழீஇ முகமன் கூறித்
...ணிய கதிர்செய் சிங்கா தனத்தினி லிருத்தி நெஞ்சப்
புண்... பகன்றே னுய்ந்தேன் யானெனப் புகழ்ந்தா னன்றே.

(இ ள்.) அழகிய விளங்குகின்ற வச்சிராயுதத்தையுடைய இந்திரனானவன் தேவாங்கமுனிவனாகிய அரசன் வந்தானென்று அளவில்லாத விருப்பத்துடனே அவ்விடத்து எதிர்தழுவி உபசாரவார்த்தைகள் சொல்லி, குளிர்ந்த கிரணத்தைவீசுகின்ற சிம்மாசனத்தி லெழுந்தருளப்பண்ணி, யான் மனக்கவலை நீங்கினேன்; பிழைத்தேன்; என்று புகழ்ந்தான். எ - று. (௪௫)

தேவாங்க நிருப னந்தச் செம்மலை வியந்து நீயும்
பாவாங்க நிருதர்க் காகப் படையொடு மெழுக வெள்ளத்
தூவாங்க மிளிருந் தானைப் படைபல துவன்றிச் சூழ
மாவாங்க னேகம் பூண்ட வையமேற் பொலிந்தான் வானோன்.

(இ-ள்.) தேவாங்கமுனிவனாகிய அரசன், அவ்விந்திரனைப்புகழ்ந்து, பாவசரீரத்தையுடைய இராக்கதரைக் கொல்வதற்காகச் சேனைகளோடு நீயும் எழக்கடவையென்று சொல்லப், பரிசுத்தமாகிய உறுப்புக்களால்விளங்குகின்ற சேனைகள் பல நெருங்கிச் சூழ்ந்துவரப் பல குதிரைகள் கட்டிய தேரின்மேல் இந்திரனேறி விளங்கினான். எ - று. (௪௬)

வானவர் பதியு மீசன் மதலையுந் தேர்க டாவித்
தானைகள் பலவு மொய்ப்பத் தரணிமேல் விரைவி னெய்தித்
தேனகு மேரு கூடச் செழுங்கிரிச் சாரல் போந்து
தூநவி சமர பேரி தொனித்தெழச் சூழ்ந்தார் மன்னோ.

(இ-ள்.) தேவேந்திரனும் சிவபெருமானுடைய புத்திரனாகிய தேவாங்கமுனிவனுந் தேரை நடத்திக்கொண்டு சேனைகள் பலவும் நெருங்கவரப் பூமியில் விரைவாகவந்து, தேன் விளங்குகின்ற செழித்த மேருமலையின் சாரலில் வந்து பரிசுத்தமாகிய பகைவரை வருத்துகின்ற யுத்தபேரிகை சத்திக்கச் சூழ்ந்தார்கள். எ - று. (௪௭)

அம்மூர சோ... கேளா வனல்பொரு வச்சிர தந்தன்
வெம்முனை யரக்கர் தானை மிடைந்திட விருது மொய்ப்பக்
கொம்மென வெழுந்து தேர்மேற் கொண்டுபல் லியங்க றங்கக்
கம்மிரு ளெனவெ குண்டு கடிதுபோந் தமரி னேற்றான்.

(இ-ள்.) நெருப்பை யொத்த வச்சிரதந்தன் அந்தப்போர்ப்பறையைக் கேட்டு கொடிய பகைவராகிய இராக்கத சேனைகள் நெருங்கிச்சூழ, விருதுகள் நெருங்க, விரைவாக வெழுந்து தேர்மேலேறி பல வாத்தியங்கள் சத்திக்க மேகம்போலவும் இருள்போலவும் கோபித்து விரைவாக வந்து போரில் எதிர்த்தான். எ - று. (சு அ)

சந்தக்கலிவிருத்தம்.

வந்தவச்சிர தந்தனுக்கிர வலியவிற்கு னித்துவா
னுந்தலுற்ற விடிநிகர்ப்ப வொலியெழுப்பி யளவிலா
வெந்தழற்ச ரங்கடொட்டு மெய்யர்தானை மத...
சிந்திடச்சி னந்துபூசல் செய்துலாவு மெல்லையில்.

(இ-ள்.) வந்த வச்சிரதந்தனுணவன், வேகமாகிய வலியவில்லை வளைத்து ஆகாயத்தில் நின்று வெளிப்பட்ட இடியை யொப்பாகச் சத்தித்துத், தேவர் சேனைகள் துடித்துச் சிந்தும்படி கோபித்து எண்ணில்லாத கொடிய நெருப்புப்போன்ற பாணங்களை யேவிப் போர்செய்து சஞ்சரிக்கின்ற காலத்தில். ()

நிருதவீரர் பலருமாழி நெடியசூல முவணிவேல்
பரிகமாசு கங்கள்பிண்டி பாலமீட்டி தோமரந்
தருவநேக வரைகள்கொண்டு சமரில்வீசி விடுதரும்
விருதுமேவு நரருமெத்த வெருவியோட முடுகினர்.

(இ-ள்.) பல இராக்கதவீரர்களும், சக்கரம் நீண்ட சூலம் வாள் வேல் வளைதடி அம்பு எறியாயுதம் ஈட்டி பெருஞ்சவளம் மரங்கள் அநேக மலைகள் முதலியவைகளை எடுத்துப் போரிலெறிந்து தேவர்களும் விருதுகளையுடைய மனிதர்களும் மிகவும் பயந்தோடும்படி யெதிர்த்தார்கள். எ - று. (ரு0)

தந்திரங்க ளிடைமுறிந்த தகைமைகண்டு தேவல
னிந்தையின்றி யிந்திரற்பி னிறுவியேவி னாக்குதான்
முந்திநீடு தேர்கடாவி முறையிலாத கயவர்தம்
பந்தியாவு நெஞ்சகம்ப யந்தெர்துங்க வந்தரோ.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் தன்து சேனைகள், நடுவில் முறிந்தோடின தன்மையைப் பார்த்து இகழ்ச்சியில்லாமல் தேவராஜனைப் பின்னே நிறுத்தித் தான் விரைவாகச்சென்று பெரிய தேரை முற்பட நடத்தி, ஒழுக்கமற்ற கீழ்மக்களாகிய அரக்கர் கூட்டங்களெல்லாம், மனம் பயந்து ஓடும்படி வந்து. எ - று. (ருக)

சிலைகுனித்து வெறியரக்கர் செவிபுதைப்ப நீ...பான்
மலைவிதிர்ப்ப நிலைகொடிக்கு வாரணங்கள் வ...ட
வலைகடற்கு லங்கலங்க வண்டமும்ப டிரொன
உலையவட்ட வாவுயிர்ப்ப வொலியெழுப்பி னா...ரோ.

(இ-ள்.) மனத்தில் மயக்கத்தை யுடைய இராக்க...ர்கள் ...துகளை மூடிக்கொள்ளவும், பெரிய மேருமலையானது அசையவும், நிலையாகிய திக்கு யானைகள் சத்திக்கவும் ...கின்ற நீரையுடைய சமுத்திரங்களெல்லாம் கலங்கவும், ...று பிளக்கவும், அஷ்டதிக்கு நாகங்களும் பெருமூச்சு விடவும் வில்லைவளைத்து நாணொலிசெய்தான். எ - று. (ருஉ)

...யகல் ... ளளவிலாத தாணிபன்மெ டுத்துநேர்
மாயவஞ்... மீதுகால மழைகள்போலி றைத்தலுந்
தீயடைந்த பஞ்செனச்சி தைந்துவாகு சென்னிகை
மேயகண்ட மடிகளற்று வெருவியோடி யலறினர்.

(இ-ள்.) அரசனாகிய தேவாங்கமுனிவன் அளவில்லாத பாணங்களைத் தொடுத்துக் கபடத்தையுடைய இராக்க...ர்களின்மேல்பருவகாலங்களிற் பெய்கின்ற மழையைப்போல விடுதலும், நெருப்புப்பற்றிய பஞ்சுபோல அழிந்து, தோள்களும் தலைகளும் கைகளும் பொருந்திய கழுத்தும் பாதங்களும் அறுபட்டுப் பயந்தோடி யலறினர்கள். எ - று. (ருஙு)

தளமுறிந்த தென்றுவச்சிர தந்தனுந்து னெமிஞசக்
கொளவெதிர்ந்து கணைகளெண்ணில் கோடிகோடி தூவலும்
வளமைதங்கு தேவலன்வ டிச்சரங்க ளைந்துதொட்
டளவுதின்ற வவையெலாம றுத்தடங்க வீட்டியே.

(இ-ள்.) வச்சிரதந்தன் தன் சேனைகள் தோற்று முறிந்து விட்டதெ...று வெளிப்பட்ட கோபம் மிகவெதிர்த்து அளவில்லாத கோடா கோடி பாணங்களை ஏவுதலும், வளப்பந்தங்கிய தேவாங்கமுனிவன் கூர்மைபொருந்திய ஐந்துபாணங்களைவிட்டு அளவில்லாது வந்தபாணங்களையெல்லாம் அறுத்துக் ...டித் தள்ளி. எ - று. (ருச)

மற்றிரண்டு வாளிதூவி வஞ்சகன்கை வார்சிலை
யற்றிடத்து ணித்துமார்பி லணிசடாரி தனையறுத்
துற்றபொற்கொ டிஞ்சிமேவு ருகள்பரிக்கு ழாமெலா
மிற்றிடச்சி தைத்துருத னிடைந ரக்க லக்கியே.

(இ-ள்.) பின்னும் தேவாங்கமுனிவன், இரண்டு அம்புகளை விட்டு வச்சிரதந்தனுடைய கையிலிருக்கின்ற பெரிய வில்லானது கெடும்படி வெட்டி, மார்பிலணிந்த கவசத்தையறுத்து, பொன்னாலாகிய தேரிற்பூட்டிய பாய்கின்ற

குதிரைக்கூட்டங்களெல்லாம் அறுபடவும், தேர்ப்பாகன் அழிந்து பின்னிட்டோடவும் கலக்கி. எ - று. (ருரு)

சிலசரங்கள் பின்னருஞ்செ லுத்திவெய்யர் திரளெலாங்
குலைகுலைந்து விழுவெழுந்த குருதிபொங்க வழன்மர
மலைகளெங்கு மெதிர்குவிந்து வளரவோரி வளையவே
யலகையுண்டு தசைதெவிட்ட வமர்முருக்கி னனரோ.

(இ-ள்.) பின்னுஞ் சிலபாணங்களையேவி, கொடிய இராக்கதர்கள் கூட்டங்கள்யாவும் நடுநடுங்கிவிழ அவற்றி னெழுந்த இரத்தம்பெருகவும், நெருப்பானது மரங்களிலும் மலைகளிலும் மற்றுமெவ்விடங்களிலும் திரண்டு பெருகவும், நரிகள் சுற்றிக்கொள்ளவும், பிசாசங்கள் மாமிசங்களைப் புசித்துத் தெவிட்டவும் போர்செய்தான்; தேவாங்கமுனிவன். எ - று. (ருசு)

எஞ்சுறுத கருணையாள னிவையவாறு சமர்செயத்
துஞ்சினார கேகர்பின்சு டுஞ்சரங்க ளாற்றிடா
தஞ்சி நீடு வச்சிர தந்த னாதி வீரர் யாவரு
மிஞ்சு வீற ழிந்து துன்ப மேவி யோடி னாரரோ.

(இ-ள்.) குறையாத கிருபையையுடைய தேவாங்கமுனிவன் இவ்வகையாகப் போர்செய்யாநிற்க,அளவில்லாத இராக்கதர்க ளிறந்துபோனார்கள்; பிறகு கொடிய அம்புகளைச் செலுத்தாதபடிப் பயந்து, பெரிய வச்சிரதந்தன் முதலாகிய வீரர்களெல்லாம் மிகுந்த பெருமை கெட்டுத் துக்கத்தையடைந்து ஓடினார்கள். எ - று. (ருஎ)

அரக்கர்தேவலனமர்க் கஞ்சியசருக்கம்.

முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் கஉக்கு பாடல் கூசகக.

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை திருந்தாடுணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகை சகாயம்.

பத்தொன்பதாவது

வியாக்கிரமுகத்தனை வீட்டியசருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

துறவு கொண்ட முனிவ ரன்ன சூத னைத்து தித்துமா
சறவு ணர்ந்து ளோர ...க்க ரமரி னன்று தேவலன்
றெறுசர ரங்க... மு றந்து சிந்தை நொந்த கன்றபின்
னுறுதி றங்க ளெவையு மன்பி னோது கென்ன வோதுவான்.

(இ-ள்.) துறவறத்தை யடைந்த முனிவர்கள், அவ்வகைப்பட்ட சூத முனிவரைத் தோத்திரஞ்செய்து, வேதாகமங்களைக் குற்றமறத் தெளிந்தவரே! இராக்கதர்கள் முற்காலத்தில் தேவாங்கமுனியினுடைய போரில் கொல்லுகின்ற பாணங்கள் வருத்த முதிந்து மனம்வருந்திப் போனபின் நடந்த விஷயங்கள்யாவும் பிரியத்துடனேசொல்லி யருள்வீராகவென்று கேட்க, சூதபுராணிகர் சொல்லத் தொடங்கினர். எ - று. (க)

விதிர்ம னங்கொ ளிருத ரன்று வீர மாம கேந்திரப்
பதிய டைந்த பின்னர் வெம்ப டைத்த ரக்கு முகனெழுந்
ததிக வஞ்ச வச்சிர தந்த னடிப ணிந்து கைகுவித்
தெதிரி னின்று தலைவ கேளெ னுவெ டுத்தி யம்புவான்.

(இ-ள்.) நடுங்கிய மனதையுடைய இராக்கதர்கள் அப்பொழுது வீரத் தன்மையையுடைய பெரு... பொருந்திய மகேந்திரபுரியைச் சேர்ந்தபிறகு, கொடிய ஆயுதங்களையேந்திய வியாக்கிரமுகன் எழுந்து, மிக்க கபடந்தங்கிய வச்சிரதந்தனது பாதங்களைவணங்கி, இரண்டுகைகளையுங் குவித்துக்கொண்டு முன்னே நின்று, தலைவனே! கேட்பாயாகவென்று எடுத்துச்சொல்வான். (உ)

அவனி தங்கு தேவ லன்கை யம்பி னால கன்றுநா
மிவண டைந்த தழகு தேவ ரிகழ்வ ராத லாலினிக்
கவர்த ளங்கொ டவனை வென்று கடிது வந்து சேர்வல்யா [வான்.
னுவகை பொங்க விடைவ ழங்கு கெனலு மன்ன னுரைசெய்

(இ-ள்.) நாம்பூமியிலிருக்கின்றதேவாங்கமுனிவனுடையகையினிடத் துள்ள பாணங்களால் தோற்று இவ்விடம் வந்தது அழகாக விருக்கிறது; தேவ

ர்கள் நம்மை இகழ்வார்களாகையால், இனிப் (பகைவருயிரைக்) கொள்ளையிடு கின்ற சேனைகளைக்கொண்டு நான் அந்தத் தேவாங்கனைச்செயித்துச் சீக்கிரமா [illegible]வருவேன்; களிப்புமிக உத்தரவுகொடுமென்று கேட்டவுடனே வச்சிரதந் தன [illegible]சொல்லுவான். எ - று. (௩)

மாலி [illegible]லாவு தேவ லங்க னத்த வலியினேன்
போரு மங்க வங்க ணைக்கு வெருவி டாது பொருதுநீ
மேலு மும்பர் பலரு மஞ்ச விறல்பு னைந்து மீடியென்
றேனு மன்பின் விடைவ ழங்க விளவ லின்ன புரிகுவான்.

(இ-ள்.) திருமாலைப் பார்க்கிலும் பாராட்டப்பட்ட தேவாங்கமுனிவன் மிக்கபலத்தையுடையவன்; அப்போர்க்களத்தில் அவனுடைய பாணங்களுக் கஞ்சாமல் நீயோர்செய்து அப்பாலுக் தேவர்கள் பலரும் அஞ்சியோடும்படி வெ ற்றிகொண்டு வரக்கடவையென்று பெ[illegible] அன்போடு உத்தரவுகொடுக் கத் தம்பியாகிய வியாக்கிரமுகன் இவற்றைச் செ[illegible]ன். எ-று. (௪)

முன்சி லைத்த கவச மாறி முழுத கற்றி வேறுபூண்
டின்சொ லென்ப தறிவு றாத விகல ரக்க ரளவிலார்
கொன்செ றிந்த படையி னேடு குழுமி யோதை புரியவே
மின்செய் தேரி னேறி வீரன் மிகவி ரைந்து கடவினான்.

(இ-ள்.) இனியவாசகமென்பது சிறிதும் அறியப் பெறாத வலிமை யுள்ள அளவில்லாத இராக்கதர்கள் முன்னமே போரிலழிந்த கவசமுதலான வைகளை முழுதும் நீக்கி, வேறு கவசமுதலாகிய ஆபரணங்களை யணிந்து, பெரு மைபொருந்திய ஆயுதங்களுடனே வியாக்கிரமுகனிடத்துவந்து கூடிச் சத்தி யாதிக்க, வியாக்கிரமுகன் பிரகாசிக்கின்ற தேர்மேலேறி அதிக விரைவாக நடத்தினான். எ-று. (௫)

ஒலிக டல்க லங்க மீன முதிர ஞால மதிரவே
புலிமு கத்த ரக்க னீடு பொருவில் சேனை செறிதரக்
கலிக திர்ப்பொ ருப்பை [illegible]ன்ன [illegible] தேர்க டாவிவாள்
வலிப டைத்த தேவ லின்மு[illegible]வந்து போர்தொ டங்கினான்.

(இ-ள்) வியாக்கிரமுகன், சத்திக்[illegible]ன்ற சமுத்திரம் கலங்கவும், நக்ஷத் திரங்களுதிரவும், பூமி யசையவும், மிகு[illegible] ஒப்பில்லாத சேனைகளானவை தன்னை நெருங்கிவரவும், ஒலியும் கிரண[illegible]முள்ள பருவதத்தையொத்த வேக முள்ள தேரை நடத்திக்கொண்டு, வாட்[illegible]போரில் வல்லமையைப்பெற்ற தேவா ங்கமுனிவனுக் கெதிரில்வந்து போர்செ[illegible]யத் தொடங்கினான். எ - று. (௬)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அறிவிலி கொடுமா மதுகோட்டி யளவறு கனலுமிழ் கணைபூட் டி நெறிபெறு சார்குழு விடையோட்டி நிறைதரு சினமொடு மிகவா

ட்டிச்,செறிபொழு தினிலுயர் தேவாங்கன் றெறுசா மிருபது செலவு
ய்த்து,முறிபட வெதிர்பவை தமை நீக்கி முதிர்சிறு துகளொனு முறை
செய்தான்.

(இ-ள்.) அறிவில்லாத வியாக்கிரமுகன் வில்லைவளைத்துக் கணக்கில்
லாத நெருப்பைக் கக்குகின்ற அம்புகளைச் சந்தானஞ்செய்து, நல்லொழுக்கத
தைப் பெற்ற தேவர்கள் கூட்டத்திற் செலுத்தி, மிகுந்த கோபத்துடனே
மிகவருத்தி நெருங்கிய காலத்தில், உயர்வாகிய தேவாங்கமுனிவன் பகைவனை
க்கொல்லுகின்ற இருபது அம்புகளைச் செல்லும்படி அவ்வரக்கர்மீது ஏவித்
தன்னிடத்துவந் தெதிர்வனவாகிய பாணங்களை முறிந்துபோக நீக்கி, மிகுந்த
சிறிய துகளொன்னும்படியாகச் செய்தான். எ - று. (எ)

இயல்பறு கொடியவ னெதிர்பின்னு மிருசத கணைமழை யெனவெய்யப், புயல்பொரு கரதல வலியோனும் புகழொரு கணைகொடு பொடிசெய்தான், மயலுறு மனமிரு தன்சீறி வாளிக ளாயிர நேர்தூவக், கயதுரக ரதத்தள பதிநூறு கணைதனி லவைதுகள் கண்டானே.

(இ-ள்.) நல்லொழுக்கமில்லாத கொடிய வியாக்கிரமுகன் (தேவா
ங்கமுனிவனுக்கு) எதிரே மறுபடியும் இருநூறு பாணங்களை மழைபோல்
ஏவ, கொடுக்குந்தன்மையில் மேகத்தை யொத்த கைகளையுடைய வலியோனா
கிய தேவாங்கமுனிவனும், யாவரும் புகழாநின்ற ஒரு பாணத்தைக் கொண்டு
பொடியாக்கினான்; மயக்கம்பொருந்திய மனத்தையுடைய வியாக்கிரமுகன் கோ
பித்துப் பின்னும் ஆயிரம் பாணங்களை முன்னாகத்தூவ, யானைகளையும் குதிரை
களையும் பதாதிகளையுமுடைய தேவாங்கமுனிவன் நூறுபாணங்களால் அவை
களை யெல்லாம் பொடியாகச் செய்தான். எ - று. (அ)

கலிவிருத்தம்.

வல்லியமு கத்தவன் மனங்கொதி கொதித்தே
வில்லிலொரு வெங்கனல் விறற்கணை தொடுக்கச்
சொல்லரிய வன்னது சுராதிபர் நலங்க
வெல்லைதவிர் கோபமொ டெழுந்ததெதி ரன்றே.

(இ-ள்.) வியாக்கிரமுகன் மனதில் மிகவும் கோபித்து,வில்லினிடத்து
வைத்து ஒருகொடிய அக்கினியாஸ்திரத்தைத் தொடுக்க, சொல்லுதற்கருமை
யாகிய அந்தப் பாணமானது தேவர்கள் நடுங்கும்படி அளவில்லாத கோபத்
துடன் எதிரேவந்தது. எ - று. (கூ)

விட்டகனல் வாளிவரு வேகமது கண்டு
மட்டமைபு மாலைபுனை மார்பவரை மன்னன்
நட்டரிய சூர்வருண சாயகம் விடுப்பப்
பட்டதது பானுவெதிர் பாம்புபனி யொத்தே.

(இ-ள்.) வாசனைபொருந்திய பூமாலையையணிந்த மலைபோன்ற மார்பையுடைய தேவாங்கமுனிவன், வியாக்கிரமுகனால்விடப்பட்ட அக்கினியாஸ்திரம்வருகின்ற வேகத்தையறிந்து, மறுத்தற்கரிய கூர்மைபொருந்திய வருணாஸ்திரத்தை யனுப்ப, அவ்வக்கினியாஸ்திரம் சூரியனுக்குமுன் நெருங்கியபனியைப்போல அழிந்தது. எ - று. (௪௦)

மீட்டுமெழு கோபவனன் மீறிமத வெய்யோன்
வாட்டுதிறல் கூர்வருண வாளிதனை வார்விற்
பூட்டிவிட மற்றது பொருந்துலக னைத்தும்
பாட்டொடு முடிப்பதெனை வந்தது படர்ந்தே.

(இ-ள்.) மதத்தையுடைய கொடியோனாகிய வியாக்கிரமுகன் மறுபடியும் உண்டாகின்ற கோபாக்கினியானது அதிகரித்துப் பகைவருயிரை மெலிவிக்கின்ற வலிமையும், கூர்மையுமுள்ள வருணாஸ்திரத்தைப் பெரியவில்லிற்பூட்டிப் பிரயோகிக்க, அவ்வருணாஸ்திரமானது பொருந்திய உலகமெல்லாம் பெருமையுடனே யழிப்பதுபோலப் பரவிவந்தது. எ - று. (௪௧)

மிண்டுதிறல் கூர்வருண வெம்பகழி சார்தல்
கண்டுமலை யாதுசுரர் காவலன் வியப்பச்
சண்டகன மாருத சரந்தனை விடுத்து
மண்டவது வென்றனன் மயக்கறுத வத்தோன்.

(இ-ள்.) நெருங்கிய வலிமைமிகுந்த கொடியவருணாஸ்திரமானது வருதலைப்பார்த்துத் தேவேந்திரன் போர்செய்யாமல் அதிசயமடைய, மயக்கமில்லாததவத்தையுடையோனாகிய தேவாங்கமுனிவன், வேகத்தையுடையபெரிய வாயுவாஸ்திரத்தை நெருங்கும்படிவிட்டு அவ்வருணாஸ்திரத்தை யழித்தான்.

இருவரு மமர்த்தலையி னிவ்வகை யடர்ந்து
பொருபொழுது மன்னனொரு புங்கமதை யுய்ப்பத்
திருகுறு மரக்கனுயர் தேரினை யெடுத்து
வருதிகிரி யாமென மருக்கியது மாதோ.

(இ-ள்.) தேவாங்கமுனிவனும், வியாக்கிரமுகனும் ஆகிய இரண்டுபேர்களும் போர்க்களத்தி லிவ்வாறு போர்செய்கின்ற பொழுது தேவாங்கமுனிவன் ஒரு பாணத்தைவிட அந்தப்பாணமானது, மாறுபாட்டையுடைய வியாக்கிரமுகனது தேரைத்தூக்கிச்சுற்றிவருகின்ற திரிகையென்று கண்டோர்சொல்லும்படி சுழற்றியது. எ - று. (௪௩)

வேறொரு சயந்தன மிசைக்கொடியன் மேவிச்
சீறுகணை யொன்றனை லெனும்படி செலுத்த
மாறில்புக ழாளனெதிர் வாளிதனை யேவி
நூறின னரக்கர்தள நொந்துழல வன்றே.

(இ-ள்) தீயோனாகிய வியாக்கிரமுகன், வேறொரு தேர்மேலேறி வேகத்தையுடைய பாணமொன்றை நெருப்பென்னும்படி விட, அழிவில்லாத கீர்த்தியினையுடைய தேவாங்கமுனிவன் எதிரே பாணங்களைவிட்டு இராக்கதர் சேனை வருந்தும்படி அழித்தான். எ - று. (கச)

கற்பக மெனப்பொலி கரத்திறலி னோனும்
வெற்பினை நிகர்த்தபுய வெய்யனு மெதிர்ந்து
சொற்படு திசைத்தலை தொறுந்திரிவர் சுற்றிப்
பற்பல வனத்தொகை படர்ந்திடுவ ரன்றே.

(இ-ள்.) கற்பகம்போல (மாறாதுகொடுத்தலால்) விளங்குகின்ற கரங்களையுடைய வலிய தேவாங்கமுனிவனும், மலையையொத்த புயங்களையுடைய கொடியவனாகிய வியாக்கிரமுகனு மெதிர்த்து, புகழப்படுகின்ற திசைகளெவ்விடத்துஞ்சுற்றித் திரிவார்கள் ; பலபலவாகிய சோலைகளெவ்விடத்துஞ் செல்வார்கள். எ - று. (கரு)

அட்டகுல வெற்பினு மடுத்தமர் விளைப்பார்
மட்டறு தரங்கநெடு வாரிதொறு நேர்வார்
விட்டொளிரு மின்குலவு மேகமிசை பாய்வார்
நெட்டிலலை வார்வளையு நேமிவரை செல்வார்.

(இ-ள்.) அஷ்டகுல பருவதங்களினுஞ் சென்று யுத்தஞ்செய்வரர்கள் ; அளவில்லாத அலைகளையுடைய பெரிய சமுத்திரங்களெவ்விடத்திலும் போவார்கள்; (காந்தியை) விட்டு விளங்குகின்ற மின்னலோடுபொருந்திய மேகமண்டலத்தின்மேற் போவார்கள்; பெரிய மூங்கில்கள் அசைகின்ற வளைந்த சக்கரவாளகிரியினிடத்துஞ் செல்வார்கள். எ - று. (கசு)

வேலையத னிற்கொடிய வேங்கைவத னத்தோன்
காலவன னேர்பல கணைத்திர டொடுத்தே
சீலமக லாதகுண தேவல னிலங்கும்
பாலமதி னூடுவை படும்படி விடுத்தான்.

(இ-ள்.) கொடியவனாகிய வியாக்கிரமுகன் அவ்வாறு போர்செய்கின்ற காலத்தில், ஊழிக்காலத்துண்டாகிய அக்கினியையொப்பாகப் பல அம்புக் கூட்டங்களைத் தொடுத்து, நல்லொழுக்கமும் நற்குணமும் நீங்காத தேவாங்க முனிவனுடைய விளங்குகின்ற நெற்றியினிடத்து அப்பாணங்கள் தைக்கும்படி விட்டான். எ - று. (கஎ)

அச்சர மனைத்தையு மறுத்தொரு கொடிக்கு
ணச்சனைய வாளியொரு மூன்றினை நடாவி
வச்சிர மெனப்படு மனப்புலி முகத்தோ
னுச்சித நுதற்றலை யழுத்தின னுயர்த்தோன்.

(இ-ள்.) உயர்ந்தோனுகிய தேவாங்கமுனிவன் அப்பாணங்களெல்லாவற்றையும் ஒரு கணப்பொழுதுக்குள்ளே அறுத்துவிட்டு, விடத்தையொத்த மூன்று பாணங்களைவிட்டு வயிரமென்றுசொல்லப்பட்ட மனத்தையுடைய வியாக்கிரமுகனது மேன்மையுள்ள நெற்றியினிடத்துக் கணப்பொழுதினுள்ளே பழுத்தினன். எ-று. (கஅ)

பூபதி தொடுத்துவிடு புங்கமொரு மூன்றுங்
கோபநிரு த[illegible]நுதற்றலை துலாவ
தீபநிகர் பொற்சிகர மூன்றொரு செழுங்கார்
மாபரு வதத்திடை வயங்குமெழில் போலும்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் வில்லிற் றொடுத்துவிட்ட பாணங்கள் மூன்றும், கோபத்தையுடைய வியாக்கிரமுகனது கொடிய நெற்றியின்கண் தாக்குதலானது (எவ்வாறு விளங்கியதெனின்) நெருப்பையொத்த மூன்று பொன்சிகரங்கள் செறித்த மேகங்கள் தவழுகின்ற பெரிய மலையினிடத்து விளங்குகின்ற அழகை யொக்கும். எ-று. (க௯)

மங்கரிய சீசிறைவன் வாளிபட வெய்யோ
னங்கமுழு துங்குருதி யங்கொழுகு தோற்றங்
கங்கைபடர் வானளவு கார்வரைய தொன்றிற்
பொங்குபல செவ்வருவி யூடிழிதல் போலும்.

(இ-ள்.) கெடுதலில்லாத சிறப்பினையுடைய தேவாங்கமுனிவன் விட்டபாணமானது படுதலினாலே வியாக்கிரமுகனுடைய உடல்முழுதும் உதிரமொழுகுகின்ற தோற்றமானது, கங்காநதி பரவிய ஆகாயம்வரையினும் முயர்ந்த ஒரு கரியமலையினிடத்து மிகுந்த பலசெவ்வருவிகள் வருதலையொக்கும்.

கொந்துதிரு தன்பினு நுடங்குகொடி நீடு
ருந்துபுவி ரைந்துபல வொண்கணைகள் சிந்திச்
செந்திரு மடக்கைவளர் தேவல னுடம்பிற்
புந்திவெரு வுங்குருதி பொங்கவமர் செய்தான்.

(இ-ள்.) வியாக்கிரமுகன் பின்னும் வருந்தித் துவளுகின்ற கொடியையுடைய பெரிய தேரை நடத்திக்கொண்டு, விரைந்து, காந்தியுள்ள பலபாணங்களையெய்து, செவ்விய வி[illegible]பலக[illegible]தங்கி வளருகின்ற தேவாங்கமுனிவனுடைய உடம்பினிட[illegible] அறிவுமயங்கும்படி இரத்தம் பொங்கப் போர் செய்தான். எ-று. (உக)

பாவியெதிர் தூவிவிடு பாணநெடு மாரி
மேவிடலு நாதனுடன் மீதுகறை சேர்தல்
பூவினுயர் வாகவெழு பொற்கிரியில் வெய்யோன்
றீவிர ம[illegible]லை இகழ்ந்தசெயல் போலும்.

(இ-ள்) வியாக்கிரமுகன் எதிரேயெய்த பெரிய பாணமழையானது தேவாங்கமுனிவனுடைய வுடம்பின்மேலே வந்து பட்டவுடனே இரத்தஞ் சிந்துதலானது பூமியின்மீது படர்வாகவெழுந்த பொன்மலையினிடத்துச்சூரிய தேவனுடைய அளவில்லாத கிரணங்கள் விளக்கிய செயலையொக்கும். எ-று.

மாழ்கறவிர் நெஞ்சினன் மறுத்தளவில் வாளி
சூழ்கன லெனப்பெரிது தூவிதிரு தன்றேர்
தாழ்புரவி யின்றொழுதி தள்ளிவல [illegible]
பாழ்பட முருக்கியெழு பஞ்செனவ டித்தான்.

(இ-ள்.) மயக்கம்நீங்கிய மனத்தையுடைய தேவாங்கமுனிவன் (வியாக்கிரமுகனால் விடப்பட்ட) பாணங்களைத் தறித்து, கணக்கில்லாத பாணங்களைச் சுற்றிய நெருப்புப்போல மிகவும் எய்து, வியாக்கிரமுகனுடைய தேரிற்றங்கிய குதிரைக்கூட்டங்களைச்சிதைத்துச் சாரதியினுடைய உடம்பு நாசமாகும்படி யழித்து எழுகின்ற பஞ்சைப்போலச் செய்தான். எ-று. (உ௩)

தேர்குலைத லுங்கொடிய தீவினை யரக்கன்
முர்குலவு மோர்கதை தனைக்கையி லெடுத்துப்
போர்கெழு மிமேலவர்கள் புலம்புற கொடிக்குட்
கார்முகி லெனும்படி களத்திடை குதித்தான்.

(இ-ள்.) கொடிய தீத்தொழிலையுடைய வியாக்கிரமுகன் தேரழிந்தவுடனே, வெற்றிமாலை சூடிய ஒருகதாயுதத்தைக் கையி லெடுத்துக்கொண்டு போர்செய்கின்ற தேவர்கள் புலம்பும்படி கணப்பொழுதுக்குள்ளே கரியமேகமென்று கண்டோர் சொல்லும்படி யுத்தபூமியினிடத்துக் குதித்தான். எ-று.

கொடுவரி முகத்தனது கொள்கையை யுணர்ந்து
வடுவறு மனத்தினன் வயங்குமொரு தண்டங்
கடிதினி லெடுத்தடர் களத்திடை குதித்து
நெடுநெடென வோடியெதிர் நோக்கின னழன்றே.

(இ-ள்.) கொடிய வியாக்கிரமுகனுடைய செய்கையைக்குற்றமில்லாத மனத்தையுடைய தேவாங்கமுனிவன் தெரிந்து, விளங்குகின்ற ஒருதண்டாயுதத்தை விரைவாகவெடுத்துக் கொலைத்தொழிலைச் செய்கின்ற யுத்தகளத்தினிற் குதித்து, நெடு நெடு வென்னும் ஓசையுண்டாம்படி யோடிக் கோபித்து அவ்வரக்கனுடன் எதிர்த்தான். எ-று. (உ௫)

மற்றிருவ ருஞ்சின மனந்தனி லெழும்ப
வெற்றின ரெதிர்ந்துவல சாரியிட சாரி
சுற்றினர் குதித்தனர் சுழற்றினர் கரத்திற்
பற்றிய மணிக்கதைக ளிற்கனல் பறக்க.

(இ-ள்.) தேவாங்கமுனிவனும், வியாக்கிரமுகனும் ஆகிய இருவரும் மனத்திற் கோபமுண்டாக ஒருவரையொருவர் உதைத்தார்கள்; எதிர்த்து வலசாரி இடசாரியாகச் சுற்றினார்கள்; குதித்தார்கள்; கைகளிற் பிடித்துள்ள அழகிய கதாயுதங்களில் நெருப்புப்பொறி பறக்கும்படிச் சுழற்றினார்கள்.

தண்டமி ரண்டுமிழ் தருங்கனலி னன்னுன்
மண்டம ருடைச்சிலர் மடிந்தனர் வெதும்பி
யண்ட [illegible] கன்றன ரொளித்துக்
கொண்டன ரநேகர் பலர் குற்றுயிரி னுற்றார்.

(இ-ள்.) இரண்டு கதாயுதங்களும் கக்குகின்ற நெருப்பால் நெருங்கிய போர்க்களத்தினிடத்துச் சிலர் இறந்தார்கள்; சிலர் அந்நெருப்பால் வெதும்பினார்கள்; சிலர் நிற்பது அரிதென்று நீங்கினார்கள்; அநேகர் ஒளிந்துகொண்டார்கள்; பலர் குற்றுயிரோ டிருந்தார்கள். எ - று. (உஎ)

விண்ணினி லிருந்ததவ மெய்ம்முனிவர் யாருங்
கண்ணிலது கண்டுகய வன்றலை கலங்கி
மண்ணிலினி வீழ்கவுயர் மன்னவர்கள் கோமான்
றிண்ணிய பலங்கொடு செயித்தருள்க வென்றார்.

(இ-ள்.) ஆகாயவீதியில் நின்ற தவத்தையும், மெய்மையையுமுடைய முனிவர்கள் எல்லாரும் அப்போரைக் கண்ணாற் பார்த்துக் கீழ்மகனாகிய வியாக்கிரமுகனுடைய தலையானது நடுங்கி இனிப் பூமியில் விழக்கடவது; உயர்ந்த அரசர்களுக்கு அரசனாகிய தேவாங்கமுனிவன் உறுதியாகிய பலங்கொண்டு செயிக்கக்கடவன் என்றார்கள். எ - று. (உஅ)

வேறு.

பாழியம் புயவரைப் பரமன் மைந்தனும்
ஊழிவெங் கனற்சினத் துளத்த ரக்கனுங்
காழிருங் கதைகளாற் சாடி மோதிமால்
ஆழியை நிகர்சொல வமைந் தாரரோ.

(இ-ள்.) பெரிய அழகிய மலைபோன்ற தோள்களையுடைய தேவாங்கமுனிவனும், யுகாந்தகாலத்துக்கொடிய அக்கினிபோலும் கோபத்தையுடைய மனமுள்ள வியாக்கிரமுகனும், வயிரம்பற்றிய தண்டாயுதங்களால் விரைந்து தாக்கித் திருமாலுடைய சக்கராயுதத்தை யொப்புச்சொல்லும்படி சுழன்றார்கள். எ - று. (உகூ)

செருவிடை விலகுதல் சிறிது மின்மையாற்
பொருபெருங் கதைகளும் பொடிக ளாயின
திருதரு மமரு நெருங்கி யார்ப்பவவ்
விருவரு மயலுள விரத மேறினர்.

(இ-ள்.) போர்க்களத்தில் நீங்குதல் சற்றும் இல்லாமையால் தாக்குகின்ற பெரியதண்டாயுதங்கள் நண்ணிய பொடிகளாயின; இராக்கதர்களும் தேவர்களும் நெருங்கிச்சத்திக்க, அத்தேவாங்கமுனிவனும், வியாக்கிரமுகனும் சமீபத்திலுள்ள தேர்களில் ஏறினார்கள். எ - று. (௩௦)

சயந்தன மேறிய தாக்கு மாமுகன்
இயங்குறு சிலைகுனித் தெண்ணில் சாயகம்
வயங்கெழு வடவையு மழுங்கத் தூவினன்
றுயங்கவில் சுரார்நரா ருருக வாட்டினன்.

(இ-ள்.) தேரினிடத்து ஏறிய வியாக்கிரமுகன், பொருந்திய வில்லை வளைத்து அளவில்லாத அம்புகளை வெற்றியிருந்த வடவாமுகாக்கினியுங் கெடும்படி எய்துநின்று, வருந்துதலில்லாத தேவர்களும், மனிதர்களும் உருகும்படி வருத்தினான். எ - று. (௩௧)

உணர்வின னதைத்தெரிந் தோங்கு விற்குனித்
திணரெரி வாளிக ளிலக்கம் பூட்டியக்
கணமிகு நிருதர்கள் கலங்கி விம்முறப்
புணர்கரு முகிலெனப் பொழிந்திட் டானரோ.

(இ-ள்.) தேவாங்கமுனிவன், (தேவரும் நரரும் வியாக்கிரமுகனுடைய பாணங்களால் வருந்துகின்ற) அதனையறிந்து, உயர்ந்த வில்லைவளைத்து, கொத்துக்கொத்தாக நெருப்பைக் (கக்குகின்ற) நூறாயிரம் அம்புகளைத் தொடுத்து, அந்தக் கூட்டமிருந்த அரக்கர்கள் நடுங்கி ஏங்கும்படி பொருந்தியகரியமேகம் போலப் பாணவருஷம் வருஷித்தான். எ - று. (௩௨)

நீடின கணைமழை நிருபன் றூவலும்
வீடினர் சிலர்மனம் வெருவி னார்சிலர்
ஓடினர் சிலர்மனந் துயங்கி னார்சிலர்
வாடினர் சிலர்கன வலிய ரக்கரே.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் நீண்ட பாணவருஷத்தைப் பொழிந்தவுடனே, மிகுந்த வலியுள்ள இராக்கதர்களில் சிலர் இறந்தார்கள்; சிலர் பயந்தார்கள்; சிலர் ஓடினார்கள்; சிலர் மனம்வருந்தினார்கள்; சிலர்வாடினார்கள். எ - று.

பருந்தினம் வாயசம் பவனை ஞாளிகள்
வருந்தின வோரியிவ் வகைக்கு மாமெலாம்
விருந்தினி திட்டனன் வேந்தர் வேந்தனென்
றருந்தின கணந்தசை யறந்தே விட்டவே.

(இ-ள்.) பருந்துக்கூட்டங்கள்-காக்கைகள்-கழுகுகள்-நாய்கள்-(பசியால்) வருந்திய நரிகள் ஆகிய இவ்வகைப்பறவைக்கூட்டங்களும் மிருகக்கூட்

டங்களுமாகிய யாவும், அரசர்க்கரசனுகிய தேவாங்கமுனிவன் இனிதாக நமக்கெல்லாம் விருந்துசெய்தானென்று, கொழுப்புகளையும் தசைகளையும் மிகவும் தெவிட்டும்படித் தின்றன. எ - று. (கூ௪)

வீந்தவர் நிருதருண் மிசைந்து சோணிதஞ்
சாந்தெனத் திமிர்ந்துநீ டரணி தாங்கிய
பாந்தளு நெளித்திடப் பலவெங் கூளிகள்
காந்தழல் விழியொடு களிப்புற் றாடின.

(இ-ள்.) இறந்த அவ்விராக்கதர்களுடைய மாமிசங்களைப்புசித்து, இரத்தத்தைச் சந்தனம்போல உடம்பிற்பூசி, பெரிய பூமியைத்தாங்கும் ஆதிசேடனும் நெளிக்கப் பல கொடியபேய்கள் கொதிக்கின்ற நெருப்புக் கண்களோடு சந்தோஷமிகுந்து ஆடின. எ - று. (கூ௫)

நெறுநெறென் றெழுந்ததேர் நேமி யோதையுந்
தறுகணத் திகள்பல சாயு மோதையு
முறுபரித் திரள்படு மொலியுங் கண்டகர்
மறுகிய கலகமு மலிந்து விம்முமால்.

(இ-ள்.) நெறு நெறு என்னும் ஓசையுடனே எழுந்த தேருருளைகளாலுண்டாகிய சத்தமும், அஞ்சாமையையுடைய பல யானைகள் இறக்கின்ற சத்தமும், மிக்க குதிரைக்கூட்டங்கள் இறந்து விழுகின்ற சத்தமும், இராக்கதர்கள் சுற்றுவதால் உண்டாகிய சத்தமும் எவ்விடத்தும் மிகுந்து ஒலிக்கும்.

தோன்றல்கைச் சிலைக்குணத் தொனியும் வானவர்
சான்றவுட் களிப்பொடு தருக்கு மோதையும்
ஊன்றுபன் முரசதி ரொலியு மோங்கியோர்
மூன்றுல கச்சுற முழங்கி நின்றவே.

(இ-ள்.) தேவாங்கமுனிவனுடைய கையினிடத்துள்ள வில்லின் நாணோசையும், தேவர்கள் மிக்க மனக்களிப்புடனே அகங்கரிக்கின்ற ஓசையும், நிலையாயுள்ள பல வாத்தியங்களின் ஓசையும் மிகுந்து மூன்றுலகமும் அஞ்சும்படி முழங்கின. எ - று.

மூன்றுலகாவன:—சுவர்க்கம்-மத்தியம்-பாதலம் என்பன. (கூ௭)

வழுவறு நிருதர்கள் வாம்பி லார்பட
வெழுகுரு திகள்கட லெனாநி றைந்ததால்
ஒழுகுமக் கடலிடத் துலவு மம்பிபோற்
பழிதரு களேபரம் பலமி தந்தவே.

(இ-ள்.) குற்றம்பொருந்திய இராக்கதர்கள் அளவில்லாதவர் இறத்தலால் உண்டாகிய இரத்தங்கள் சமுத்திரம் போலப் பெருகியபடியினாலே, பொருந்திய அக்கடலினிடத்து உலாவுகின்ற கப்பல்போலப் பழிசையையுடைய பிணங்கள் பல மிதந்தன. எ - று. (௯அ)

தன்படை யிவ்வகை சாய்த நோக்கியவ்
வன்படை விசாசரன் மனங்கொ திந்தவிர்
மின்பக ழிகள்பல வில்விற் பூட்டியே
தென்பொலி யரசுபாற் செலவுய்த் தானரோ.

(இ-ள்.) அவ் வலிய சேனைகளையுடைய வியாக்கிரமுகன், தன்னுடைய சேனைகளானவை இவ்விதமாக முறிதலைப்பார்த்து மனம்புழுங்கி, விளங்குகின்ற மின்னல்போன்ற பல பாணங்களை வில்லிற் சந்தானஞ்செய்து, அழகால் விளங்குகின்ற தேவாங்கமுனிவனிடத்துச் செல்லும்படி எய்தான். எ - று.

பல்லமன் னவன்விடு பான்மை காண்டலுஞ்
சொல்லரும் புகழினுன் சுடர்க்க னற்கணை
யெல்லை[illegible]னதொடுத் தேவி யங்கவை
வல்லையிற் பொடிபட மாற்றிப் பின்னரும்.

(இ-ள்.) அந்த வியாக்கிரமுகன் பாணங்களை எய்யுந் தன்மையைச் சொல்லுதற்கு முடியாத கீர்த்தியினையுடைய தேவாங்கமுனிவன் பார்த்தவுடனே, காந்தியுள்ள நெருப்புப்போலுங் கங்கின்ற அம்புகள் அளவில்லாதவைகளை வில்லிற் பூட்டிப் பிரயோகித்து, விரைவில் அவ்வம்புகளையெல்லாந் துகளாகும்படி அழித்துப் பின்னும். எ - று. (௬௦)

கனற்கணை - அக்கினிபாஸ்திரம் என்னும் ஆம்.

ஒருகணை யாற்குய வுலைய வாட்டிமற்
றிருகணை யாற்சிலை யிறுத்து வெம்பொறி
தருகணை யுடைகிசா சரன்சி ரத்தையும்
அருகணை தரக்கணைத் தகற்றி னனரோ.

(இ-ள்.) ஒரு பாணத்தினால் தேரானது கெடும்படியழித்து, வேறு இரண்டு பாணங்களால் வில்லைமுறித்து, கொடிய நெருப்புப் பொறிகளையுமிழ்கின்ற கணைகளையுடைய வியாக்கிரமுகனது தலையையும் தன்பக்கத்தில் விழும்படி கணப்பொழுதினுள்ளே போக்கினன்; தேவாங்கமுனிவன். எ - று. ()

நீமால் வரையென விருதன் சாய்தலும்
ஓமார் திறல்வளை யும்ப ரூதினா
கோலவார் குலிசவேற் குரிசில் மூபனைச்
சாலமார் பிறுகுறத் தழுவிப் போற்றினன்.

(இ-ள்.) பெரிய நீலமலைபோல வியாக்கிரமுகன் (அறுபட்டு) விழுந்தவுடனே, ஓசைநிறைந்த வலிய வெற்றிச்சங்கத்தைத் தேவர்கள் ஊதினார்கள்; அழகிய நீண்ட வச்சிராயுதத்தையுடைய இந்திரன், தேவாங்கமுனிவனை மிகவும் மார்புடனே சேரும்படி (கட்டி) அணைத்து வணங்கினான். எ - று. (சஉ)

வென்றனன் றேவலன் விறனி சாசரன்
பொன்றினன் றேவர்தம் புலம்பு நீங்கினா
ரென்றதிர் மணிமுரச சதிர்ந்த தாம்சிலர்
சென்றனர் வச்சிரதந் தனுக்குச் செப்பவே.

(இ-ள்.) அழகிய பேரிகையானது, தேவாங்கமுனிவன் செயித்தான், வலிய வியாக்கிரமுகன் இறந்துபோயினான், தேவர்கள் தங்களுடைய அழுகையை நீக்கினார்கள் என்று சத்தித்தது; அவ்வோசையைக்கேட்ட சிலர் வச்சிரதந்தனுக்குச் சொல்லும்படிப் போனார்கள். எ - று. (சஙு)

வியாக்கிரமுகனை வீட்டிய சருக்கம்.

முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் கசு-க்கு பா. [illegible]

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை திருவடி துணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

இருபதாவது

விடைக்கொடிங்கரக்கர் வெந்நிடுசருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொய்யறு சூத னின்ன புகறலு முனிவர் போற்றி
யய்ய [illegible] புலிமு கத்தோ னமர்க்களத் தன்று வீந்த
செய்தியை வச்சிர தந்தன் றெரிந்துமற் றவனும் போருக்
கெய்திய திறனு மெங்கட் கியம்புகென் னலுமி யம்பும்.

(இ-ள்.) பொய்ம்மையொழிந்த சூதபுராணிகர் இவ்வாறு சொன்னவளவிலே, முனிவர்கள் நமஸ்கரித்து, ஐயனே! வெவ்விய வியாக்கிரமுகன் யுத்தபூமியில் அன்று இறந்துபோன செய்தியை வச்சிரதந்தன் தெரிந்து அவனும் போர்செய்யும்படி வ[illegible] திறமையையும் எங்களுக்குச் சொல்லியருள்வீராகவென்று கேட்டவுடனே, [illegible]ச்சூதபுராணிகர் சொல்லுவார். எ - று.

இயம்பும் என்பது [illegible]ய்யுமென்வாய்பாட்டு வினைமுற்று. (க)

ஏகிய தூதர் சில்லோ ரிமைப்பொழு தினிவ்வி ரைந்து
மாகநீண் மதில்சூழ் வீர மயேந்திர புரத்துள் வந்து
சேகுறு மனத்த ரக்கர் செறியவீற் றிருக்கு மந்த
மேயனேர் வச்சிர தந்த வேந்தனை விழியாற் கண்டார்.

(இ-ள்.) சென்ற தூதர்களில் சிலர் கணப்பொழுதுக்குள் விரைவாக ஆகாயம[illegible]யினுமுயர்ந்த மதிலாற்சூழப்பட்ட வீரமயேந்திரபுரத்தினிடத்து வந்து, வயிரம் [illegible]ற்றிய மனத்தையுடைய இராக்கதர்கள் (சபையில்) நெருங்கக் கொலுவீற்றிருந்த, (நிறத்தால்) மேகத்தை யொத்த வச்சிரதந்தன் என்னும் அரசனை [illegible]கண்களா[illegible]ற் பார்த்தார்கள். எ - று. (உ)

பூட்கையா தனத்த மர்ந்த பொருவது நிருதர் கோமான்
றூட்கம லங்கள் போற்றித் தலைவநின் றுணைவ னின்று
தோட்கிரி பதைப தைப்பச் சூழ்பெருந் தானை யோடும்
வாட்கரத் தேவ லன்றன் வாளியான் மடிந்தா னென்றார்.

(இ-ள்.) யாளியாதனத்தி லெழுந்தருளியிருந்த ஒப்பில்லாத இராக்கதருக்கு அரசனாகிய வச்சிரதந்தனது பாததாமரைகளை நமஸ்கரித்து, அரச

னே! உம்முடைய சகோதரனாகிய வியாக்கிரமுகன், இப்பொழுது மலைபோன்றதோள்கள் துடிக்க, சுற்றிய பெரியசேனைகளுடனே வாளேந்திய கையையுடைய தேவாங்கமுனிவனது பாணத்தால் இறந்துபோனானென்று சொன்னார்கள். எ - று. (௫)

கொடுவரி முகத்து வீரன் கொடுங்களத் திறந்தா னென்னுங்
கடுவுறழ் தூதர் வாய்ச்சொற் காதிடை யுருக்கிச் சாய்த்த
வடுவெனப் புகுத லோடும் வச்சிர தந்தன் செல்லுப்
படுதரு வெனவே நெஞ்சம் பதைபதைத் தலறி வீழ்ந்தான்

(இ-ள்.) வியாக்கிரமுகனாகிய வீரன் கொடிய போர்க்களத்தில் இறந்துபோனான் என்கின்ற விடத்தையொத்த தூதர்கள் சொல்லிய வார்த்தையானது செவிகளினிடத்து உருக்கிவிட்டசெம்பைப்போலப் புகுந்தவுடனே வச்சிரதந்தனானவன் இடிவீழ்ந்த மரம்போல மனந்துடிதுடித்துக் கதறி (நிலத்தில்) வீழ்ந்தான். எ - று. (௬)

பார்த்தலத் திடையே வீழ்ந்த பதகனங் கயர்ந்து மேனி
வேர்த்தனன் மனங்க லங்கி வெதும்பின னிளையோன் வெய்ய
போர்த்தலத் திறந்தா னென்னும் புன்பரு வரலால் வாய்விட்
டார்த்தன னுலகி னோடவ் வண்டமு நடுங்கிற் றம்மா.

(இ-ள்.) பூமியினிடத்துவீழ்ந்த வச்சிரதந்தன் அவ்விடத்துவாடி உடன்முழுதும் வெயர்த்தனன்; மனமயங்கி வெதும்பினன்; தம்பியாகிய வியாக்கிரமுகன் கொடிய யுத்தகளத்தில் இறந்தானென்கின்ற தீய துன்பத்தினால் வாயைத்திறந்து கதறினன்; (அதனால்) பூமியுடனே ஆகாயமும் நடுங்கியது.

அத்தகை யரக்கன் றற்சூ ழமைச்சர்தந் துணிவாற் றேறி
யொத்தவென் னிளையோ னாவி யுண்டவெஞ் சாத்தே வாங்கன்
கொத்தல ரலங்கல் வானோர் குலிசன்மற் றிவரை யெல்லாம்
இத்தலை முடித்து மீள்வ னெனவெழுந் தினைய செய்வான்.

(இ-ள்.) அவ்வாறுபுலம்பிய வச்சிரதந்தன் தன்னைச் சூழ்ந்திருக்கின்ற மந்திரிகள் தெளிவிக்கத் தெளிந்து, எனக்குச் சமானமாகிய என் தம்பியினுயிரைப்போக்கிய கொடிய பாணத்தையுடைத்தாகிய தேவாங்கனும், பூங்கொத்துக்கள் விரிந்த மாலையினைத்தரித்த தேவர்களும், வச்சிராயுதத்தை யேந்திய இந்திரனும் ஆகிய இவர்களையெல்லாம் இப்பொழுதே கொன்றுதிரும்புவேனென்று எழுந்து இக்காரியங்களைச் செய்வான். எ - று. (௭)

ஞாங்கரிற் றொழுது நின்ற நலங்கிளர் வேயர் தம்மை
யாங்கழைத் துடனே நீவி ரலகினம் படைய னைத்து

மீங்குறத் தருதி ரென்ன விணையடி யிறைஞ்சி யேத்திப்
பாங்கர்க டொறுஞ்சூழ் சேனை பதிகளுக் குணர்த்தி னால்.

(இ-ள்.) தன் பக்கத்தில் வணங்கி நின்ற நன்மை பொருந்திய ஏவலாளர்களை அவ்விடத்து அழைத்து, நீங்கள் இப்பொழுதே நம்முடைய அளவில்லாத சேனைகளையெல்லாம் இவ்விடத்து வரும்படி அழைத்துவருவீர்களென்று சொல்ல, அவர்கள் வச்சிரதந்தனுடைய இரண்டு பாதங்களையும் வணங்கித் துதித்துப் பக்கங்களிலெல்லாஞ் சூழ்ந்திருக்கின்ற சேனாதிபதிகளுக்கு அறிவித்தார்கள். எ-று. (எ)

தூமமக ளைழுத்தா னென்னக் குலவிய வேயர் கூறத்
தூமவத் திரர்திக் கண்ணர் துலங்குபல் சிரத்தார் சிந்தா
காமரு விசும்பு தோயுங் காத்திர் ரேக பாதர்
பாமெழு கடலு நீறு படும்படி கலக்கு நீரார்.

(இ-ள்.) வச்சிரதந்தன் அழைத்தானென்று தங்களிடத்து வந்த ஒற்றர்கள் சொல்ல, புகைபோன்ற முகத்தையுடையவரும், நெருப்புப்போன்ற கண்களையுடையவரும், விளங்குகின்ற பல தலைகளையுடையவரும், கெடாத அழகிய ஆகாயத்தைத் தொடும்படியாகிய பெருத்த தேகத்தையுடையவரும், ஒரு பாதத்தை யுடையவரும், பரவிய ஏழு சமுத்திரங்களும் புழுதியாகும்படி கலக்குகின்ற தன்மையுடையவர்களும். எ-று. (அ)

வல்லிய மடங்கல் கோல மதகயந் துரங்கம் பாண்டில்
சல்லியங் குரங்க மாகந் தகர்குடா வடிவா லேபம்
புல்லிய நெடுங்க முத்தல் புரோகதி விலாள மின்ன
பல்லியல் வதன முள்ளார் பருப்பத மனைய பண்பார்.

(இ-ள்.) புலியும்-சிங்கமும்-பன்றியும் - மதத்தையுடைய யானையும் - குதிரையும் எருதும்-முட்பன்றியும்-மானும்-குரங்கும்-ஆடும்-காடியும்-கழுதையும் - நீண்ட கழுத்தையுடைய ஒட்டகமும் - நாயும் - பூனையும் ஆகிய இவ்வகைப்பட்ட பலவாகிய மிருகங்களின் முகங்களை யுடையவரும், மலையையொத்த தேகத்தையுடையவர்களும். எ-று. (௯)

வடவனல் குடியி ருந்த வயிற்றினர் மழைசூற் கொண்ட
கடமுகி லினைப்பி ழிந்து கடியநீர் வேட்கை தீர்வா
ருடலசின வசனி யஞ்ச முரைாயினர் கரிய கூற்றும்
படபட வெனந டுங்கும் பண்பினர் பரந்த வாயார்.

(இ-ள்.) வடவாமுகாக்கினி தங்கியிருக்கின்ற வயிற்றையுடையவரும், மழைபெய்யும் பருவத்தைக்கொண்ட ஆகாயத்திலுள்ள மேகத்தைப் பிழிந்து கொடிய தாகத்தை நீக்கிக்கொள்பவரும்,பகையாகிய கோபத்தையுடைய இடி பயப்படும்படியான சொல்லையுடையவரும், கருமைநிறம்பொருந்திய யமனும்

டபபட் வென்று நடுங்கும்படியான தன்மையை யுடையவரும், பெருத்த வாயையுடையவரும். எ - று. (௧0)

இளம்பிறை யென வளைந்த வெயிற்றின ரினையர் யாருந்
துளங்குபல் படைக ளேந்தித் தொடரிருட் பிழம்புற் றென்ன
வளங்கெழு புவிபொ ருது மலிந்துவச் சிரதந் தன்பால்
உளங்களி சிறப்ப வெய்தி யுரும்[illegible]ழத்திச் சூழ்ந்தார்.

(இ-ள்.) பாலசந்திரனைப் போல வளைந்த வக்கிர தந்தங்களையுடைய இராக்கதர்கள் யாவரும் விளங்குகின்ற பல ஆயுதங்களைத் [illegible]கொண்டு, தொடர்ந்த இருளின் திரட்சிகள் (ஒன்றாகக்) கூடினாற்போல வளப்பம்பொருந்திய பூமி யடங்காமல் நிறைந்து, வச்சிரதந் தனிடத்தில் மனமகிழ்ச்சியோடு வந்து இடிபோலும் (பேரோசை யுண்டாம்படி) தோத்திரஞ்செய்து சூழ்ந்தார்கள். எ - று. (௧௧)

கறையடிச் சிறுக ணற்கட் கவுண்மத முறநேர் கன்னப்
பிறைமருப் பொருத்த லோங்கும் பிறங்கலனேர் கொடிஞ்சித் திண்டேர்
அறைதிரைக் கவரி நெற்றி யணிகடுங் கலினப் பாய்மா
நிறைகட லெழுந்த தென்னத் திசைதொறு நெருங்கிச் சூழ்ந்த.

(இ-ள்.) உரல்போன்ற கால்களையும், நெருப்புப்போன்ற சிறிய கண்களையும், மதத்தையுடைய கபோலங்களையும், முறத்தை யொத்த காதுகளையும், பிறையையொத்த கொம்புகளையுமுடைய யானைப்படைகளும், உயர்ந்த மலையையொத்த சிகரத்தையுடைய வலிய தேர்களும், ஒலிக்கின்ற அலைபோலும் சாமரைக்குரிய உரோமபந்திகள் பொருந்திய நெற்றியினையுடைய அழகிய வேகமுள்ள கடிவாளம்பூண்ட குதிரைகளும், நிறைந்த சமுத்திரம் எழுந்ததென்னும்படி திக்குகள்தோறும் நெருங்கிச் சூழ்ந்தன. எ - று. (௧௨)

செவ்வியங் கதனி னோங்கற் றிண்புய வரக்கர் கோமா
னவ்விகொள் பணிக டாங்கி நவமணிக் கவசம் வீக்கி
ஒவ்விய சிலைகை யேந்தி யொன்னல ருயிரை முற்றும்
வவ்விய கணைபெய் தூணி வளர்சிக லத்தின் மாட்டி.

(இ-ள்.) மலைபோலும் வலியதோள்களையுடைய வச்சிரதந்தன், அவர்கள் வணங்கியகாலத்து அழகுபொருந்திய ஆபரணங்களையணிந்து ஒன்பதுவகை மணிகளாலும் செய்யப்பட்ட கவசத்தை மார்பில்கட்டி, இசைந்த வில்லைக் கையிலேந்தி, பகைவருடைய உயிரையெல்லாம் கிரகித்த பாணங்கள் போடப்பட்ட அம்புக்கூட்டைப் புரிக்கின்ற தோண்மேற்றங்கிமாட்டி. எ - று. (௧௩)

வலக்கழ லதனிற் செம்பொன் மணிக்கழல் வயங்க வீக்கி
யலைக்கட [illegible]ந்த தென்ன வதிர்குரன் முரசம் விம்மப்

ப[illegible]த்தினிற் சிறந்த நான்கு படைகளுந் திரண்டு மொய்ப்பக்
கு[illegible]க்கிரி கவிஞென் றன்ன கொடிஞ்சியந் தேர்மேற் கொண்டான்.

(இ-ள்.) (வச்சிரதந்[illegible]ஞனவன்) வலதுகாலில் செம்பொன்னுற் செய்யப்பட்ட அழகிய வீரக்[illegible]விளங்கக்கட்டி, அலைகளையுடைய கடலுடைத் தாற்[illegible]பால ஒலிக்கின்ற பேரிகை[illegible]சப்தம் அதிகரிக்க, வலிமையிற் சிறந்த நானகுவகைச்சேனை[illegible]ளும் ஒன்[illegible]டித் தன்னைச்சூழ்ந்துவர, கூட்டமாகிய மலைகளினுள் ஒருமலையையொத்த மேன்மொட்டையுடைய அழகிய தேரின்மேல் ஏறினன். எ-று. (௧௪)

கஞ்சுயிழ் கொடிய சர்ப்ப நாவன்சூ ரியகோ பன்போர்
விஞ்சுமக் கினிகோ பன்றீ மினிர்புகைக் கண்ணன் கூற்று
மஞ்சிய கடக நாவ னுதிமற் றெவருந் தத்தஞ்
செஞ்சுடர் மணிக்கொ டிஞ்சித் தேர்மிசைப் பொலிந்து சூழ்ந்தார்.

(இ-ள்.) கொடிய விடத்தைக்கக்குகின்ற சர்ப்பநாவனும், சூரியகோபனும், போரை மிகுதியுஞ் செய்கின்ற அக்கினிகோபனும்,தீயைப்போலும் விளங்குகின்ற புகைக்கண்ணனும்,இயமனும் பயமடையத்தக்க கடகநாவனும் முதலாகிய (போர்வீரர்கள் யாவரும்) தங்கள் தங்களுடைய மேன்மொட்டையுடைய தேரின்மீது ஏறி வச்சிரதந்தனைச் சூழ்ந்தார்கள். எ-று. (௧௫)

பொதுளுமித் தளங்கள் சூழப் புணரிபோ[illegible]யார்ப்ப
[illegible]துகைகூர் வச்சிர தந்தன் மணிநெடுந் தேர்க டாவி
முச்சூவட் டேம கூட வெய்வரைச் சார்பில் வானோர்
பதியொடு முறைதே வாங்கன் பாங்கர்வந் தணுகி னனல்.

(இ-ள்.) வெற்றியிகுந்த வச்சிரதந்தன், நெருங்கிய இவ்வகைச்சேனைகள் சூழக் கடல்போலப்பேரிகை முழங்க, மணிகள் கட்டிய தேரைநடத்திப் பழமையாகிய சிகரங்களையுடைத்தாகிய ஏமகூடமென்னும் வலிய மலைச்சாரலில் தேவேந்திரனேடு வசிக்கின்ற தேவாங்கமுனிவனுடைய பக்கத்தில்வந்து சேர்ந்தான். எ-று. (௧௬)

பாதக னடை[illegible]லோடும் பண்ணவர் பலருஞ் சூழப்
பூதர முழு[illegible]ஞ் சாய்த்த பொருகதிர்க் குலிச வேந்துஞ்
சீதள கள[illegible]த் திண்டோட் டேவல னென்னு[illegible]கோ மானு
மோதப[illegible]க் கோலந் தாங்கி முடுக்கிவெங் கள[illegible]த்தி,லேற்ருர்.

(இ-[illegible]ர்.) பாதகனுகிய வச்சிரதந்தன் வந்தவுட[illegible]னே, தேவர்கள் பலருஞ் சூழ [illegible]லைகளின் சிறகுகள் முற்று மறுத்த போர்செ[illegible]கின்ற கிரணத்தை யுடையவச்சிராயுத மேந்திய இந்திரனும், குளிர்ச்சிபொருந்[illegible] கலவைச்சாந் தணிந்த[illegible]வலிய புயங்களையுடைய தேவாங்கன் என்னும் அர[illegible]னும்,பகைவரைத்

தாக்குகின்ற போருக்குரிய அலங்காரத்தைச் செய்துகொண்டு கொடியபோர்க் களத்தில் சென்றார்கள். எ-று. (கஎ)

உயர்நிலை யமர வீர ரொலித்தநுந் துபிமு ழக்குங்
கயவர்பல் லியமு ழக்குங் கடும்பரி கனைமு ழக்குங்
குயலவரு கொடிக்கொ டிஞ்சிச் சுடர்நெடுந் தேர்மு ழக்கும்
அயர்வரு கரிமு ழக்கு மண்டமு நடுங்க வார்த்த.

(இ-ள்.) மேன்மையாகிய நிலைமையையுடைய தேவவீரர்கள் முழக்கிய துந்துபியென்னும் வாத்தியவோசையும், கீழ்மக்களாகிய அரக்கர்களுடைய பல வாத்திய வோசையும், வேகமாகச்செல்கின்ற குதிரைகள் கனைக்கின்ற வோசையும், அசைகின்ற கொடிகளையும் மேல்மொட்டையுமுடைய காந்தியுள்ள பெரிய தேர்நடத்தலாலுண்டாகிய வோசையும், அயர்வில்லாத யானைகளின் ஓசையும் ஆகிய இவையெல்லாம் பூமிநடுங்குதலேயல்லாமல் ஆகாயமும் நடுங்கும்படி சத்தித்தன. எ-று.

அண்டமும், என்னும் உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. (கஅ)

கனைகழ லரக்கர் கோமான் கடிதுதே வலனை நோக்கித்
தினையொரு வலியோய் நீதான் சிறுவனைச் செயித்தோ மென்ன
நினைவினிற் களித்தாய் போலு நின்னுயி ரின்னே வவ்விப்
புனைமுடி விண்ணோர் தம்மைப் பொடிபட முடிப்பல் காண்டி.

(இ-ள்.) ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த வச்சிரதந்தன் சீக்கிரமாகத் தேவாங்கமுனிவனைப்பார்த்துத் தினையையொத்த (அற்பமாகிய) வல்லமையையுடையவனே! நீ என்னுடைய தம்பியாகிய வியாக்கிரமுகனை வென்றோமென்று உன்மனத்தில் சந்தோஷமடைந்தாய் போலும்! உன்னுடைய உயிரை இப்பொழுதே கவர்ந்து முடிசூடிய தேவர்களைப் பொடியாக நாசஞ்செய்வேன் காண்பாயாக வென்றான். எ-று. (கக)

என்றுகார் முகத்தை வாங்கி யெழிரு தலமு மஞ்சக்
குன்றுரு வுருமு நாணக் குணத்தொனி யெழுப்பிப் பின்ன
ரொன்றுநிக் கணைகள் கோடி யுரத்தொடு கடிது பூட்டித்
துன்றுமா முகிற்கு லங்கள் சொரிந்தெனத் தூவி யார்த்தான்.

(இ-ள்.) வச்சிரதந்தன் இவ்வாறு சொல்லி வில்லைவளைத்துப் பதினாலுலகமும் அஞ்சும்படி குறையாத இடியும் நாணும்படி வில்நாணைத்தெறித்து, அதன்பிறகு நெருப்புப் பொருந்திய அநேக பாணங்களை வேகத்துடனே விரைவிற்பூட்டி நெருங்கிய பெரியமேககூட்டங்கள் (மழையைப்) பொழிந்தாற்போல எய்து கொக்கரித்தான். எ-று. (உ0)

திக்கொரு பதினுள் ளோருஞ் செவிடுறத் தொடைக டட்டிக்
கொக்கரித் தரக்க ரெல்லாங் கொடும்படை பலவும் வீசி

மைக்கட லெழுந்து பொங்கி வயங்குபாற் கடலி னூடு
புக்கென விபுத ரோடு கலந்தனர் பொருக ளத்தே.

(இ-ள்.) பத்துத்திசையிலுள்ளவர்களும் செவிடுபடும்படித் தொடைகளைத் தட்டிக்கொண்டு ஆர்ப்பரித்து, இராக்கதர்களெல்லாம் கொடிய ஆயுதங்கள் பலவற்றையும் வீசிக் கரிய கடலானது மேலெழுந்து பொங்கி விளங்குகின்ற பாற்கடலிடத்துச் சென்றாற்போலத் தேவர்களுடனே போர்க்களத்திற் கலந்தார்கள். எ-று. (உக)

அரக்கர்தம் படைகட் காற்றா தமரர்க ளிரிய நோக்கித்
தரக்கள வின்றிச் சூழ்ந்த தகர்க்குழாத் திடைபுக் கென்னப்
பரப்புறு தேர்க டாவிப் பாகசா தனன்வி யப்ப
நரர்க்கதி பதிவிற் கோட்டி நண்ணலர் நடுங்கச் சென்றான்.

(இ-ள்.) மனிதர்களுக்குத் தலைவனாகிய தேவாங்கமுனிவன், தேவர்கள் அரக்கருடைய ஆயுதங்களுக்குச் சகிக்க முடியாமல் அஞ்சியோடுதலைப் பார்த்து, அளவில்லாமல் கூடிச்சூழ்ந்த ஆட்டுக்கூட்டங்களின் நடுவே ஒரு புலியானது புகுந்தாற்போலப் பரவிய தேரைநடத்திக்கொண்டு இந்திரன் ஆச்சரியப்படும்படி வில்லைவளைத்துப் பகைவர்கள் நடுங்கச் சென்றான். எ-று. ()

புலிங்கவெங் கணைகள் சிந்திப் புயலிறத் தரக்கர் சென்னி
நலங்கிளர் புயங்கை மார்பு நடுவிரு பதங்கி ரீபந்
துலங்குறு செவிக ளோட்டந் துண்டமுந் துணிபட் டாகி
நிலந்தனிற் சிந்த வீழ்த்தி நெடுஞ்சமர் தொடங்கி னானால்.

(இ-ள்.) (தேவாங்கமுனிவன்) தீப்பொறியைக் கக்குகின்ற பாணங்களைப்பொழிந்து, மேகம்போலுங் கரிய நிறத்தையுடைய அரக்கர்களது தலைகளையும், அழகிய தோள்களையும், கைகளையும், மார்பையும், இடையையும், இரண்டு கால்களையும், கண்டத்தையும், விளங்குகின்ற காதுகளையும், கண்களையும், மூக்கையும் துண்டுகளாகிப் பூமியிற் சிந்தும்படி விழச்செய்து பெரிய போரை ஆரம்பித்தான். எ-று. (உ௩)

குளித்தவெம் பகழி யாற்பல் கோடியர் வீழ்ந்தார் சில்லோர்
ஒளித்தன ரநேகர் வெந்நிட் டோடினர் சிலர்செஞ் சோரி
துளித்தனர் சிலர்ம யங்கிச் சுழன்றன ரவற்றை நோக்கிக்
களித்தனர் நரருந் தேவர் யாவருங் கடல்போ லார்த்தே.

(இ-ள்.) தேவாங்கமுனிவனால் எய்யப்பட்டுப் படிந்த வெவ்விய பாணங்களால் அநேகர் பூமியில் விழுந்தார்கள்; சிலர் ஓடி மறைந்தார்கள்; அநேகர் புறங்காட்டியோடினார்கள்; சிலர் சிவந்த இரத்தத்தை யொழுகவிட்டார்கள்; சிலர் மனமயங்கிச் சுற்றினார்கள்; இவைகளையெல்லாம் மனிதர்களும் தேவர்களும் பார்த்துச் சமுத்திரம்போலச் சத்தித்துக் களித்தார்கள்.

ஆழ்கடல் வந்த மெங்கு மலகைகள் கரங்கள் கொட்டிப்
பாடின கணங்கோ டோரி பருந்துவா யசஞ்ச குந்தம்

கூடின வெழுந்த செய்ய குருதியா றிடங்க டோறு
மோடின குலிச வேந்த னுயர்புயம் பணைத்த வன்றே.

(இ-ள்.) அப்போர்க்களத்தில் உடற்குறைப்பிணங்கள் எவ்விடங்களிலும் ஆடின; பேய்கள் ... வைகளைக்கொண்டு பாடின; நாய்களும் நரிகளும் பருந்துகளும் காக்கைகளும் கழுகுகளும் வந்து கூடின; வெளிப்பட்ட சிவந்த இரத்தவெள்ளமானது எவ்விடங்களிலும் ஓடின; வச்சிராயுதத்தையேந்திய தேவேந்திரனது உயர்வாகிய புசங்கள் பூரித்தன. எ-று. ()

உரியதன் படைக ளிவ்வா றலைவுறு மிழிபு நோக்கி
வரிசிலை தடநெ டுங்கை வச்சிர தந்தன் சீறி
யெரிபுரை சிலீமு கங்க ளெண்ணில மழைபோற் றாவித்
தெரியல்வேய் விபுதர் மாந்தர் திரள்சிதைத் திடப்போர் செய்தான்.

(இ-ள்.) கட்டமைந்த வில்லைப்பிடித்த விசாலமாகிய நீண்ட கையையுடைய வச்சிரதந்தன், உரிமையாகிய தனதுசேனைகள் இவ்விதமாக அழிகின்ற இழிவைப்பார்த்துக் கோபித்து நெருப்பையொத்த அளவில்லாத பாணங்களை மழைபோலச் சிந்திப் பூமாலையைச் சூடிய தேவர்கூட்டமும் மனிதர்கூட்டமும் அழியும்படி யுத்தஞ்செய்தான். எ-று. (உசு)

அலர்தலை நிலம்பு ரக்கு மதிபதி யெனுந்தே வாங்கன்
பொலிகனற் கணைக ணான்கு பூட்டிவிட் டரக்கன் றேரில்
வலிகெழு துரகஞ் சாய்த்து வலவனைத் தள்ளி மார்பின்
மெலிவறு சடாரி போக்கி வில்லையு மிறுத்தா னன்றே.

(இ-ள்.) பரவிய இடத்தையுடையபூமியைக்காக்கின்ற அரசன் என்று சொல்லுகின்ற தேவாங்கமுனிவன், விளங்குகின்ற நெருப்புப் போன்றநான்கு பாணங்களை வில்லிற் பூட்டி யெய்து, வச்சிரதந்தனது தேரிற்கட்டிய வலிமையுள்ள குதிரைகளைச் சாய்த்து, சாரதியையறுத்துத்தள்ளி, மார்பிற்பூட்டிய கடினமாகிய கவசத்தையழித்து, வில்லையுமறுத்தான். எ-று. (உஎ)

மற்றொரு தேரிற் றாவி வரிசிலை குனித்து வெய்யோன்
புற்றர வனைய வாளி யெண்ணில பொருந்தப் பூட்டி
முற்றழி யுகத்திற் றோன்று முகில்களோ ரேழு மென்னக்
கொற்றவ னிருந்த செம்பொற் கொடிஞ்சியங் குயவிற் றூர்த்தான்.

(இ-ள்.) கொடியவனாகிய வச்சிரதந்தன் வேறொரு தேரிலேறி, கட்டப்பட்ட வில்லை வளைத்துப் புற்றினிடத்துள்ள பாம்பை யொத்த அளவில்லாத அம்புகளைப்பூட்டி (உலக) முழுவதும் அழிகின்ற உகாந்த காலத்திலுண்டாகிய ஏழுமேகங்களும் (பொழிகின்ற மழைபோலத்) தேவாங்கமுனிவனிருந்த செம்பொன்னாற் செய்யப்பட்ட மேல்மொட்டையுடைய தேரில்செலுத்தினான்.

கறைகெழு பிறையெ யிற்றுக் கண்டகன் கரத்தாற் பூட்டி
முறைமுறை விடுத்த செந்தீ முதிர்கங்க பத்தி ரங்க

டறை நெறி விசும்பி னோடு சாற்றருந் திசையோ ரெட்டு
மறைபட விழுங்கி யெங்கு மலிந்தன செறிந்து மாதோ.

(இ-ள்.) குற்றம்பொருந்திய பிறைபோன்ற வக்கிரதந்தர்களையுடைய வச்சிரதந்தனானவன் வில்லினால் தொடுத்து வரிசைவரிசையாக விடப்பட்ட செந்தீயைப்போலும் வெப்பமிருந்த பாணங்களானவை, பூமியும், பெரிய ஆகாயமும், சொல்லுதற்கரிய எட்டுத்திக்குகளும் மறையும்படி மூடிநெருங்கி எங்கும் நிறைந்தன. எ-று. (௨௯)

மைந்தரங் கெவருந் தத்த மனம்பதை பதைத்தார் வானோர்
செந்தழன் முகத்திற் பட்ட செழுமெழு கெனவு டைந்தார்
நொந்தலர் தருமந் தாரக் கொழுநறு மடலே வேய்ந்த
சுந்தர மவுலி வேந்துந் துணுக்கெனத் துளங்கி னானால்.

(இ-ள்.) அப்போர்க்களத்தில் மனிதர்கள் யாவருந் தங்கள் தங்களுடைய மனம் துடித்தார்கள்; தேவர்கள் செவ்விய நெருப்பினிடத்துப் போடப்பட்ட செழுமையுள்ள மெழுகுபோல உள்ளமுருகினார்கள். கொத்துக்கள் விரிந்த மந்தாரவிருக்ஷத்தினுடைய கொழுமையாகிய மணமுள்ள மாலையை யணிந்த அழகியமுடியையுடைய தேவேந்திரனும் துணுக்கென்றுநடுங்கினான்.
துணுக்கு-அச்சக்குறிப்புணர்த்தும் இடைச்சொல். (௩௦)

குவடள விலபோ லெங்குங் குவிந்துள தூலத் தூடு
தவழ்கனற் கங்க மொன்று சாரத்தித் தகைமைத் தென்னப்
பவவினை யரக்க னுய்த்த பத்திர நடுத்தி னுப்ப
னுவமையில் புகழ்த்தே வாங்க னொருசாந் தூண்டி னானால்.

(இ-ள்.) அளவில்லாத மலைகள்போல எவ்விடத்திலும் குவிந்துகிடக்கின்ற தூலதேகத்தினிடத்துத் தவழ்கின்ற அக்கினியாகிய கழுகொன்றைச்சாரச்செய்த தன்மைபோலப் பாவத்தொழிலைச்செய்கின்ற வச்சிரதந்தனால் எய்யப்பட்ட அம்புக்கூட்டங்களினடுவே, ஒப்பற்ற கீர்த்தியையுடைய தேவாங்க முனிவன் ஒருபாணத்தைச் செலுத்தினான். எ-று. (௩௧)

எய்தவத் தொடைநெ டிக்கு விருட்கொரு பருதி யென்னக்
கைதவக் கொடிய னேவுங் கணையெலா மறுத்து வீட்டிப்
பொய்தவ வுடைய ரக்கர் புறமிடச் சாய்த்து மீண்டு
செய்தவ கிருபன் றூணி சேர்ந்தினி துறைந்த தம்மா.

(இ-ள்.) (தேவாங்கமுனிவன்) எய்த அப்பாணமானது கணப்பொழுதினுள் இருளைப் (போக்குகின்ற) ஒப்பற்ற சூரியனைப்போல், வஞ்சகத்தையுடைய கொடியவச்சிரதந்தன் ஏவிய பாணங்களையெல்லாம் அறுத்து, அசத்தியத்தை மிகவுமுடைய இராக்கதர்கள் புறங்காட்டியோடும்படித்தள்ளி, மீண்டு, செய்த தவத்தினையுடைய தேவாங்கமுனிவனது அம்புப் பெட்டியைச் சேர்ந்து நன்றாகத் தங்கியது. எ-று. (௩௨)

கண்டன னிருதன் பின்னுங் கடுஞ்சின மிகுந்த நேக
மண்டழற் கணைக டொண்டு தவ வலியி னோனுங்

கொண்டலிற் பகழி தூவிக் கொடியன்மே லியமு டித்து
விண்டுற வியந்தி ரத்தை யுடைத்தனன் விண்ணோ ரார்ப்ப.

(இ-ள்.) வச்சிரதந்தன் (அவ் வற்புதங்களையெல்லாம்) பார்த்து மறுபடியும் கொடிய கோபமிகுந்து அளவில்லாத நெருங்கிய கனல்போன்ற பாணங்களைச் செலுத்தப் பெரிய தவவலிமையையுடைய தேவாங்கமுனிவனும் மேகம்போல அம்புகளைப் பொழிந்து, வச்சிரதந்தன் ஏறிய சிகரத்தையுடைய மலையையொத்த தேரைத் தேவர்கள் ஆரவாரிக்கும்படி அழித்தான்.

வையமங் குடையச் சீறி வச்சிர தந்த னென்பான்
கையினி லெறுழொன் றேந்திக் களத்திடைக் குதித்தெ திர்த்தா
னெய்யுறை பரிதி வேலா னிகரறு கணையொன் றேவி
மெய்யிலி கதைநி லத்தில் விழப்பொடி படுத்திப் பின்னும்.

(இ-ள்.) வச்சிரதந்தனென்பவன், அப்பொழுது தேரானது உடையக் கோபித்துக் கையிலொருதண்டாயுதத்தை யேந்திப்போர்க்களத்திற்குதித்து, (தேவாங்கமுனிவனுடனே) எதிர்த்தான்; நெய்பூசப்பட்ட சூரியனைப்போலும் பிரகாசிக்கின்ற வேலையுடைய தேவாங்கமுனிவன் ஒப்பில்லாத ஒரு கணையைவிட்டுப் பொய்யனாகிய வச்சிரதந்தனுடைய தண்டாயுதமானது பூமியில் விழும்படி பொடியாக்கிப்பின்னும். எ-று. (௱௪)

ஓரிரு சரங்க டூண்டி யுணர்விலி யுடல மெங்குஞ்
சோரிகள் சிதற வாட்டித் துயருறப் புரித லோடும்
வாருறு கழற்கால் விண்ணோர் மானவர் திரண்டு மொய்த்துப்
பாருல கதிர வீரம் பகர்ந்தொலி காட்டி நின்றார்.

(இ-ள்.) (தேவாங்கமுனிவன்,) இரண்டு பாணங்களைச் செலுத்தி அறிவில்லாத வச்சிரதந்தனுடைய சரீரமுழுதும் இரத்தங்கள் சிந்தும்படி வருத்தித் துன்பமுண்டாகச் செய்தவுடனே, கட்டிபொருந்திய வீரக்கழலையணிந்த பாதங்களையுடைய தேவர்களும், மனிதர்களும் கூடி நெருங்கிப் பூமியதிரும்படி வெற்றிகூறிச் சத்தித்து நின்றார்கள். எ-று. (௱௫)

கூற்றினுங் கொடிய வெய்யோன் குலைகுலைந் தெழுந்து சீறி
யாற்றிடற் கரிய வெற்பொன் றங்கையா லெடுத்து நின்று
போற்றினஞ் சூழும் வைவேற் படையதி பதியை நோக்கித்
தோற்றுரு மேறு மஞ்ச வினையன சொல்லு கின்றான்.

(இ-ள்.) எமனைப்பார்க்கிலுங் கொடியவச்சிரதந்தன் பதைபதைத்துக் கோபித்தெழுந்து, தாங்குதற்கு முடியாத ஒருமலையைக்கையாலெடுத்து நின்றுகொண்டு, பருந்துக்கூட்டங்கள் வட்டமிடுகின்ற கூரிய வேலையேந்திய தேவாங்கமுனிவனைப்பார்த்து, உண்டாகிய இடியும் அஞ்சும்படி இவ்வகையாகிய வாசகங்களைச் சொல்லத்தொடங்கினான். எ-று. (௱௬)

புற்பொரு தேவ னாவப் புலிமுக வினையோ சொன்ன
வெற்படு வலியி லானெ னென்றெனை யுமதித் தாய்போலு

மற்பவின் ணவர்புன் மார்தர் யாரையு நினையு மின்றிவ்
வெற்பினி லடுவ லோடி விடார்துநில் லெனவி டுத்தான்.

(இ-ள்.) புல்லைப்போலும் வலிமையற்ற தேவாங்கமுனிவனே! அந்த வியாக்கிரமுகனைப்போல என்னையும் பிரகாசம் உண்டாகிய வலிமையில்லாதவனென்று நினைத்தனை; (ஆதலால்) அற்பத்தேவர்களையும் புல்லிய மனிதர்களையும் இந்தமலையினாலேகொல்லுவேன் ஓடிப்போகாமல் நில்லென்று எறிந்தான்.

வீறுறு மரக்க னோங்கி வெற்பினை விடுத லோடுங்
கூறுயர் புகழான் மிக்க கோமகன் முறுவல் செய்து
மாறுடை நெடிய வாயு வாளியோன் றதன்மேற் றூண்டித்
தேறுவ தரிதெ னப்பல் சிறுதுகள் படச்சி தைத்தான்.

(இ-ள்.) பெருமைமிகுந்த வச்சிரதந்தன், மலையை ஓங்கி யெறிந்தவுடனே, சொல்லத்தக்க உயர்ந்த கீர்த்தியினாலே மிகுந்த தேவாங்கமுனிவன். சிரித்து வேறுபாட்டையுடைய நீண்ட ஒரு வாயுவாஸ்திரத்தை அம் மலையின் மேற் செலுத்தித் துன்பம் நீங்குவது அருமையென்று நினைக்கும்படிப் பல சிறுபொடிகளாக அழித்தான். எ - று. (௩௮)

மூர்க்கனங் கதனைக் காணு முதிர்சினந் தழைப்ப மற்றோர்
தேர்த்தலை தனில்வி ரைந்து சென்றுகார் முகத்தை வாங்கி
யார்த்தனன் விபுத ரின்னே யனையரை முடிப்ப னென்னத்
தூர்த்தனன் பகழி மாரி சுராதிபன் றுளக்க மெய்த.

(இ-ள்.) அகங்காரியாகிய வச்சிரதந்தனனவன், (அந்தமலையழிதலைப்) பார்த்து, மிகுந்த கோபமதிகரிக்க, வேறு ஒரு தேரின்மேலேறி விரைந்து வந்து வில்லைவளைத்து ஆரவாரஞ்செய்து,இப்பொழுதே தேவர்களை யெல்லாம் கொல்லுவேனென்று பாணமழையைத் தேவேந்திரன் நடுக்கமடையும்படிப் பொழிந்தான். எ - று. (௩௯)

அமையமங் கதிற்றே வாங்க னமலனன் றருளி னீந்த
இமில்விடைக் கொடியைப் பூசை செய்தெடுத் தனுப்ப லோடு
நிமிர்தரு மதில னந்த நிகரினந் திகளெ ழுந்து
சமர்பொரு நிருதர் பல்லோர் சாய்த்திடத் தடிந்த வன்றே.

(இ-ள்.) அப்பொழுது தேவாங்கமுனிவன், சிவபெருமான் தமது கிருபையினாலே முற்காலத்திற்கொடுத்த திமிலையுடைய விடைக்கொடியைப் பூஜைசெய்து எடுத்து விட்டவுடனே, ஓங்கிய அவ் விடைக்கொடியிலிருந்து அளவில்லாத நந்திகள் தோன்றி யுத்தத்தைச்செய்கின்ற அநேக இராக்கதர்கள் அழியும்படிக் கொன்றன. எ - று. (௪௦)

அங்கதிற் பின்ன ரேக வரிமத களிறு வேங்கை
வெங்கடுங் காடி கேசரி மிளிர்கண்ட பேரண் டங்கள்
பங்கமில் சரபம் யாளி பாரிட மினைய தோன்றிச்
சங்கையி லரக்கர் சேனை சாய்த்தன கொடிக்குண மாதோ.

(இ-ள்.) அவ்விடைக்கொடியினிடத்து அநேக சிங்கங்களும், மதத்தையுடைய யானைகளும், புலிகளும், வெவ்விய வேகத்தையுடைய கரடிகளும், பன்றிகளும், விளங்குகின்ற கண்டபேரண்டங்களும், குற்றமில்லாத சரபங்களும், யாளிகளும், பூதகணங்களும் ஆகிய இவைகளெல்லாம் பிறந்து, அச்சமில்லாத இராக்கதர்சேனைகளைக் கணப்பொழுதில் அழித்தன. எ-று. (சக)

நந்தியந் துவச வாற்றல் காண்டலு நடுந டுங்கி
யந்தியி னிறத்த ரக்கர் யாருங்கவர்கோ மானும்
புந்தியி னிடர லைப்புப் பொருகளத் திரிந்து சிந்தி
மந்திர நிறைந்த வீர மயேந்திர நகர்ம புக்கார்.

(இ-ள்.) அந்திபோலும் கரிய நிறத்தையுடைய அரக்கர்களும், அவர்கள் தலைவனாகிய வச்சிரதந்தனும், அழகிய விடைக்கொடியினது வல்லமையைக் கண்டவுடனே மிகவும் நடுங்கி, அறிவினிடத்துத் துன்பமுண்டாகப் போர்க்களத்தில் அஞ்சியோடிக் கோட்டைகணிறைந்த வெற்றியையுடைய மயேந்திரபுரியினிடத்துச் சேர்ந்தார்கள். எ-று. (சஉ)

காளம தனைய சால கடங்கட ரிரிய நோக்கித்
தோளிணை புளகம் பூப்பச் சுடர்நெடுங் குலிசப் புத்தேள்
வாளணி மகுட வேந்தை மார்புறத் தழுவி வாழ்த்திக்
கோளிட ரின்று தீர்ந்தே னென்றுகொண் டாடிப் பின்னும்.

(இ-ள்.) காந்திபொருந்திய பெரிய வச்சிராயுதத்தையுடைய தேவேந்திரன் விஷத்தையொத்த அரக்கர்கள் அஞ்சியோடுதலைப் பார்த்து இரண்டு புயங்களும் புளகமுண்டாகும்படி, வாளாயுதத்தையணிந்த அழகிய முடியையுடைய தேவாங்கமுனிவனை மார்புடனே தழுவித் தோத்திரஞ்செய்து, நான் கொண்ட துன்பம் இன்று நீங்கினேன் என்று புகழ்ந்து பின்னும், (யாது செய்தான் என்றால்.) எ-று. (சந)

உண்ணிறை யுவகை பூப்ப வும்பரோ டுயர்வ லாரி
விண்ணிடை மிளிர்தன் ஞடு மேவின னப்பாற் சேனை
யெண்ணில மலியத் தேரூர்ந் தெண்டிசை தொழத்தே வாங்க
னண்ணிய புகழா மோத நன்னகர் புக்கான் மாதோ.

(இ-ள்.) உயர்வாகிய தேவேந்திரனானவன், மனதில்நிறைந்த களிப்புண்டாகத் தேவர்களுடனே ஆகாசத்தில் விளக்குகின்ற தனது அமராவதிப்பட்டணத்தை யடைந்தான்; இவ்விடத்து அளவில்லாத சேனைகள் சூழத் தேரை நடத்திக்கொண்டு தேவாங்கமுனிவன், பொருந்திய கீர்த்தியையுடைய நல்ல ஆமோத நகரத்தையடைந்தான். எ-று. (சச)

விடைக்கொடிக்காக்ஷ வெந்நிடுசருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் உO-க்கு பாடல் எ௬௪.

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை திருத்தாடுணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகை சகாயம்.

இருபத்தோராவது

மன்னவனிலிங்க வடிவுறுசருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

நீங்காத நெடியதவச் சூதனிவை யருளமன
நிறையபே ரன்பா
லாங்காசை தவிர்ந்தநைமி சாரணிய முனிவர்சென்னி
யசைத்துப் போற்றித்
தீங்காரு மரக்கர்புற மிட்டகன்ற பின்புசிகழ்
செய்தி முற்றும்
பாங்காகப் பகருகெனப் பணிந்திடவன் னவனுமவை
பகர்வ தானன்.

(இ-ள்.) விலகாத பெரிய தவத்தினையுடைய சூதமுனிவர் இச்சரிதையைச்சொல்ல,மனத்தில் நிறைந்த பெரிய விருப்பத்துடனே அவ்விடத்து உலகப்பற்றுநீங்கிய நைமிசாரணியவாசிகளாகிய முனிவர்கள் சிரசை யசைத்துத் துதிசெய்து, தீமைநிறைந்த இராக்கதர்கள் முதுகுகாட்டி யோடியபின்பு நடந்தவிஷயங்கள்முழுதும் தெளிவாகச்சொல்லியருளவேண்டு மென்று வணங்க அச்சூதமுனிவருஞ் சொல்லத்தொடங்கினர். எ - று. (க)

குரோதவனற் கோழுத்தவித்த குணமுனிவீர் கேண்மினன்று
குலவி ராச
சிரோமணியா யெழுந்தவந்தத் தேவாங்கன் விடைக்கொடியாற்
சிதைந்து போந்த
விரோதமனத் தவ்விபிதன் றுணைவர்மைந்தர் மருகர்கிளை
விளிவை யெண்ணி
யுரோதனமுற் றுடல்குழைய வுணுங்க மின்றி நெடி
தருகி னுஅல்.

(இ-ள்.) கோபாக்கினியின் சிகையை யடக்கிய நற்குணத்தையுடைய முனிவர்களே! கேளுங்கள்; முன்னமே உலகத்தாரால் கொண்டாடத்தக்க அரசசிரோரத்தினமாக அவதாரஞ்செய்த அத்தேவாங்கமுனிவனுடைய விடைக்கொடியினுலே கெட்டுப்புறங்காட்டிவந்த பகைமையுள்ள மனத்தை

யுடைய அறிவில்லாத வச்சிரதந்தன், தனது சகோதரர்கள் - பிள்ளைகள் - மருகர்கள் - சுற்றத்தார்கள் ஆகிய இவர்களின் இறந்தமை நினைத்துக் கண்ணீர் விட்டுச் சரீரம்வாடப் போசனமும் நித்திரையும் இல்லாமல் மிகவும் மனம் உருகினன். எ-று. (௨)

தருவனைய நெடியகர தலநிருப னமர்க்களத்திற்
சாய்த்த செல்வ
மருகரிளை யவர்புதல்வர் மற்றையர்தந் தேவியரா
மாதர் யாரும்
பெருந்மணி நாணிழந்து பெருந்துயரு டழுந்துமந்தப்
பெற்றி நோக்கி
யுருகுவன்வாய் விடுத்தொலிப்ப னுயிர்ப்பனலை கடற்றுரும்பொத்
துழல்வா னன்றே.

(இ-ள்.) கையில் கற்பகத்தருவை யொத்த நீண்ட கைகளையுடைய தேவாங்கமுனிவன் யுத்தபூமியிற்கொன்ற செல்வமருமக்கமார்களும், தம்பிமார்களும், பிள்ளைகளும் இன்னும் மற்றுமுள்ள வீரர்களும் ஆகிய இவர்களுடைய மனைவியரெல்லாம் வளர்கின்ற அழகிய திருமங்கிலிய சூத்திரத்தையிழந்து, மிக்க துன்பத்துள்ளே முழுகுகின்ற அத்தன்மையைப்பார்த்து (வச்சிரதந்தன்) மனம்உருகுவான்; வாயைத்திறந்து கதறுவான்; பெருமூச்சு விடுவான்; அலைகளையுடைய கடலிற்பட்ட துரும்புபோல மனஞ் சுழல்வான். எ-று. (௩)

முளரியிடைப் படுமெழுகி னுருகிவயி றலைத்துடைந்து
முகத்தின் மோதித்
தளர்வினொடு துயர்க்கடலுட் டாழ்ந்துளஞ்சற் றுறிவச்சிர
தந்த னென்பான்
இளமைமுதற் பிரியாநட் பிசைந்தவித்தை யுத்தேச
னெனுமோர் பாவி
யுளமகிழ்வி னினிதிருந்த வுயர்செழும்பொன் மாளிகைவந்
துற்றான் மன்னோ.

(இ-ள்.) வச்சிர[illegible]ன்னு மகன் நெருப்பினிடத்து இடப்பட்ட மெழுகுபோல வுருகி, வயிற்றிலடித்து உள்ளுடைந்து, முகத்தில் அறைந்து கொண்டு, வாட்டத்தொடே துன்பக்கடலில் முழுகிப் பின் மனஞ் சிறிது தெளிந்து, பாவியமுதல்கட் பிரியாமல் சிநேகங்கொண்ட வித்தையுத்தேசன் என்னும் பெயரினையுடைய ஒரு பாவியானவன், மனமகிழ்ச்சியுடனே சுகமாக வசித்திருந்த செம்பொன்னாலாகிய அரண்மனையின்கண் வந்து சேர்ந்தான்.

கோமகன்வந் தன்னெனக்கை குவித்தேத்தி முகமனுரை
  கூறிப் பின்னர்
மாமணிப்பீடிகையளித்தவ் வயினிறுத்தி வச்சிரதந்தன்
  வதன நோக்கித்
தாமமணி மார்பவித்தை யுத்தேசனையவின்று
  தமியேற் றேடி
நீமகிழ்வி னடைந்தவகை யருள்கெனவோர் முகுர்த்தமொன்று
  நிகழ்த்தா தற்றான்.

(இ-ள்.) பூமாலையையணிந்த மார்பையுடைய வித்தையுத்தேசன் அரசன்வந்தானென்று கைகளைக்குவித்து நமஸ்கரித்துத்துதித்து உபசாரவார்த்தைகள் சொல்லிப் பிறகு சிறந்த இரத்தினாசனமிட்டு அதிலிருத்தி, வச்சிரதந்தனுடைய முகத்தைப்பார்த்து, ஐயனே! தேவரீர் இப்பொழுது என்னைத்தேடி விருப்பத்துடனே இங்கு வந்த காரியத்தைச் சொல்லியருளவேண்டுமென்றுகேட்க, ஒரு முகுர்த்தகாலம் ஒன்றுஞ் சொல்லாமலிருந்தான் வச்சிரதந்தன். எ - று. (ரு)

கோனடத்துந் தேவாங்கக் குரிசில்விடுங் கணையலைப்பக்
  குலைந்த மெய்யு
மானமற்ற வுறவினர்பற்பலரையிழந் துருகுதுயர்
  [illegible] கோபற்றுங்
கானகக்கவன் டீரவமோ கயவனுமுற ஏனத்திறெடு
  [illegible] நேக
னனவித்தை யுத்தேசன் முகநோக்கி யினையனபின்
  னறைகு வானால்.

(இ-ள்.) காட்டில் வசிக்கின்ற சிங்கத்தையொத்த கீழ்மகனாகிய வச்சிரதந்தன், செங்கோலை இனிது செலுத்துகின்ற தேவாங்கமுனிவன் தொடுத்தபாணங்களானவை யழிக்க, அதனால் வாடிய சரீரமும், (தன்மீது) மானமுடைய அநேகபந்துக்களைப் போர்க்களத்தில் இழந்து உருகுகின்றதுக்கமுள்ள மனமும் வித்தையுத்தேசனுக்குத்தெரியும்படிக் கோபாக்கினியோடு மிகுந்த சிநேகனாகியவித்தையுத்தேசனுடைய முகத்தைப்பார்த்து இவ்வகைப்பட்ட சொற்களை அதன்பின்சொல்லத் தொடங்கினான். எ - று. (சு)

உயிரனைய வரவோர்க்கே ளுயர்மகவான் றனைவேற்
  [illegible]ன்னித் திடுபன்
பயில்கிளை பற்பலரை[illegible] படையொ[illegible]ன்றவனையென்றன்
  பலத் தால[illegible]

செயமதுகொண் டிவணடைக்த செய்தியுநீ யறிவையன்றோ
தேவர் தங்கட்
கயர்விலுப காரியன்னேன் றேவாங்கன் பின்னமரி
லடுத்தா னம்மா.

(இ-ள்.) என்னுயிரை யொத்த வலிமையையுடைய வித்தையுத்தேச னே! கேட்பாயாக: மேம்பட்ட தேவராசனைச் செயிப்பதற்கு நினைத்துத் திமையையுடைய நான் (என்னுடைய) பயிற்சியுள்ள சுற்றத்தார் பலரும் அளவில்லாத சேனைகளுடனும் போய் அவ்விக்கிரனை என்னுடைய வலிமை யால் வருத்தி வெற்றிபெற்று இவ்விடம் வந்த காரியத்தையும் நீ தெரிந்திருப் பாயல்லவா; தேவர்களுக்கு உபகாரியாகிய அயர்ச்சியில்லாத தேவாங்கனென் னும் ஒருவன் பின்போரில் வந்து சேர்ந்தான். எ - று.

அம்மா என்பது வியப்பிடைச்சொல். (எ)

தாலமுழு தளிக்குமந்தத் தேவலன்போர்த் திறத்தையின்ன
தகைமைத் தென்று
நூலறிவி னுயருரக பதியுமுரைப் பரிதெனிற்பின்
னுவ்வல்வ தென்னே
மாலவனு மலரயனு மகத்தரசு மறலியுமோர்
வடிவா யேற்ற
காலையினு மாங்கவனைக் கடக்கமுடி யாதுவெரு
கடின மம்மா.

(இ-ள்.) உலகமெல்லாங்காக்கின்ற அந்தத் தேவாங்கமுனிவனுடைய யுத்தவல்லமையை இத்தன்மை யுடையதென்று சாஸ்திரவுணர்ச்சியில் மேம் பட்ட ஆதிசேடனுஞ்சொல்லுவது அரிதென்றால், பின் சொல்லப்படுவது யா து? [முடியாதென்றபடி.] திருமாலும் பிரமதேவனும் தேவராசனும் இயமனும் ஒரு வடிவாகிவந்து எதிர்த்தார்களேனும் அப்போதும் அத் தேவாங்கமுனி வனைச் செயிக்கக்கூடாது; அவன் போர்வெருகடினமானது என்றுசொன்னான் வச்சிரதந்தன். எ - று. (அ)

தோன்றுமவற் கானவந்த விடைக்கொடியோ னளித்தசீர்
சொல்வார் யாரே
மூன்றுதிரி புவனமுமோ ரரைப்பொழுதின் முடிக்குமதை
யுய்த்தா னுங்கே
கான்றமொழிக் கட்குழற்பே யாளிசரட பேரண்டங்
க[illegible] றுண்
மான்றமத கயமடங்கல் புலியிட[illegible] முருசாவதின்
மலிந்[illegible] வன்றே.

(இ-ள்.) காணப்பட்ட அத் தேவாங்கமுனிவனுக்குப் பரம[illegible] கொடுத்த விடைக்கொடி ஒன்று உள்ளது, அதன்பெருமையைச் சொல்லுப வர்யாவர்? [ஒருவராலுஞ்சொல்லமுடியாது.] நிலையாயுள்ள மூன்றுலகத்தை யும் ஒரு கணப்பொழுதுக்குள் அழிக்கும்; அப்படிப்பட்ட விடைக்கொடியை என்மீது விட்டான்; அப்பொழுது, நெருப்புப்பொறிகளைக் காக்காநின்றகண் களையும் மயிர்முடியையுமுடைய பேய்களும், யாளிகளும், கண்டபேரண்டங் களும், பெரிய வன்காற்பறவைகளும், மதமயக்கத்தையுடைய யானைகளும், சிங் கங்களும் புலிகளும் ரிஷபங்களும் ஆகிய இவை முதலாகிய மிருகங்களும், பற வைகளும் [illegible]து தோன்றின. எ-று. (௯)

பிறந்தபல விலங்குகுழற் பேய்பொருத வெண்ணரிய
பெரும்போர்த் தானை
யிறந்தனபின் சுரவயிரி பணிகாவன் கனற்கோப
னிரவி கோபன்
மறங்கொள்கட காவனெழு தீக்கண்ணன் புகைக்கண்ணன்
மகரக் கண்ணன்
சிறந்தவிவர் முதலனந்த வீரருந்துஞ் சினர்முறுவல்
செய்தார் வானோர்.

(இ-ள்.) அவ்விடைக்கொடியினிடத்துண்டாகிய பல மிருகங்களும், மயிர்முடியையுடைய பேய்களும் போர்செய்தன; (அதனால்) அளவில்லாத பொ[illegible]போர்ச்சேனை[illegible] மடிந்தன; அதன்பிறகு தேவர்களுக்குப் பகைவர்க ளாகிய சர்ப்பகாவலனும் - [illegible]கோபனும் - சூரியகோபனும் - வீரத்தைக்கொ ண்டகடக காவலனும் - எழுகின்ற தீக்கண்ணனும் - புகைக்கண்ணனும் - மகரக் கண்ணனும் ஆகிய சிறப்பினையுடைய இவ்வீரர்கள் முதலாக அநேகவீரர்கள் மடிந்தார்கள்; தேவர்களெல்லாரும் நகைத்தார்கள். எ-று. (௧0)

எனைநிகரும் புலிமுகனுந் தேவலன்கை யான்மடிந்தா
னினியென் செய்வே
னனையவனை யெதிர்த்துவெல்வ தரிதுபயந் திருப்பிலனம
யமர னெவ்வா
ருனையல[illegible] துணை நிலையெற் குதவியுண்டு லாவதொன்றிங்
குளதா லந்த
நினைவிலொழ கிடல்வேண்டு நீயிதுநற் றருணமென்று
ன்றுதர் கோமான்.

(இ-ள்.) வச்சிரநந்தன் (வித்[illegible]ந்தே[illegible]னைப் பார்த்து) என்னை யொத்த வியா[illegible]ரனும் தேவாங்கமுனி[illegible]டைய கையாயுதங்களால் இறந்துபோயினன்; இனியென்ன செய்குவேன், அ[illegible]ைகய தேவாங்கமுனி

வனை யெதிர்த்து வெற்றிகொள்வது முடியாது; நாம் பயந்திருந்தால், நம்மைத் தேவர்கள் (அவமதித்து) நிந்திப்பார்கள்; உன்னையல்லாமல் (இப்பொழுது வேறு) துணையில்லை, ஆதலால் எனக்குன்னாலாவதாகிய ஒருதவிஇப்பொழுதுளது; அக்கருத்தின்படி நீ நடத்தல்வேண்டும்; அதற்கிதுவே நல்லசமையமென்று சொன்னான். எ - று. (கக)

சோனிலைய புகறலுமக் குணநண்ப னெழுந்துகரங்
குவித்துப் போற்றி
வாலிமிருங் தடங்குவட்டு வரைப்புயத்தோ யவ்வுதவி
மறும வின்னே
நானினிது புரிவலது நவின்றருள்க வெனலுமிக
நயந்து கார்போன்
மேனியுடை யரக்கனந்த வித்தையுத்தே சனுக்கிதனை
விளம்பி னனல்.

(இ-ள்.) வச்சிரதந்தன் இவ்வார்த்தைகளைச் சொன்னவுடனே, அந்தக்குணத்தையுடைய வித்தையுத்தேசனாகிய சிநேகன் எழுந்து கைகளைக்குவித்துத் துதித்து, ஆகாயம்வரையினு முயர்ந்த பெரிய சிகரங்களையுடைய மலைபோலுந் தோள்களையுடையவனே! நான் (நீசொல்லியபடி) அவ்வுபகாரத்தை மறுக்கமலிப்பொழுது நன்றாகச்செய்வேன் சொல்வாயாகவென்று கேட்டவுடனே, மிக்க நயப்போடுமேகம்போலும் தேகத்தையுடைய வச்சிரதந்தனானவன் அந்த வித்தையுத்தேசனுக்கு இந்த வார்த்தையைச் சொல்லத் தொடங்கினான். எ - று. (கஉ)

ஏடவொரு சுரருநமக் கெதிரலர்தே வலன்வலியா
லிகல்கூர் போகி
பீடுடைய னாகினனத் தேவலனை வெல்வதற்கோர்
பெற்றி யுண்டா
லாடல்விடைத் துவசமொன்றே யன்னவற்குச் செயந்தருவ
ததனை நீபோய்க்
கூடஙதா லெவ்விதத்துங் கொணர்ந்திடில்யாங் குறித்தவகை
கூடு மென்றான்.

(இ-ள்.) தோழனே! தேவர்கள் ஒருவரும் நமக்கெதிராகார்கள்; பகைமிகுந்த இந்திரனானவன், தேவாங்கனுடைய வல்லமையால் பெருமையுடையவனாயினான், அந்தத் தேவாங்கமுனிவனைச் செயிப்பதற்கு ஒரு தன்மையுண்டு, (அதாவது) வெற்றியையுடைய இடபக்கொடியொன்றுதான் அவனுக்குச் செயங்கொடுப்பது: நீ சென்று எவ்விதவஞ்சனையினாலேனும் அவ்விடைக் கொடி

யை கொண்டுவருவாயாயின் நாம் எண்ணிய காரியங்கள் சித்தியாகுமென்று வச்சிரதந்தன் சொன்னான். எ - று.

ஏட என்பது-தோழன்முன்னிலைப்பெயர். (௧௫)

தலைவனிவை புகலவது தமியனின்னே கொணர்வலெனத்
 தாழ்ந்து போற்றி
மலையனைய மார்பவித்தை யுத்தேசனொருகவட
 வடிவந் தாங்கி
யலைகெழுபே ரகழிசெறி யாமோத நகர்விரைவி
 னடைந்து வெங்கூ
ரிலைகுலவு வேற்படைத்தே வலன்சமுகம் புக்கவனை
 யிறைஞ்சிச் சொல்வான்.

(இ-ள்.) வச்சிரதந்தனனவன், இவ்வசனத்தைச்சொல்ல மலையையொத்த மார்பினையுடைய வித்தையுத்தேசனனவன், அவ்விடைக்கொடியை யானிப்பொழுதே கொண்டுவருவேனென்று தாழ்ந்துவணங்கி, ஒரு வஞ்சகமாகிய வுருவங்கொண்டு அலைகளையுடைய பெரிய அகழ்சூழ்ந்த ஆமோதநகரினிடத்துச் சீக்கிரமாகச் சேர்ந்து, வெம்மைமிகுந்த இலைபோலுங் கூர்மைபொருந்திய வேலாயுதத்தையுடைய தேவாங்கமுனிவன் முன்னிலையிற்சென்று அத்தேவாங்கமுனிவனை வணங்கிச் சொல்லுவான். எ - று. (௧௬)

மன்னவமே [illegible] வவாரி[illegible]ா னிவணடைந்த
 வகையா தென்னின்
முன்னமுன தமர்க்குடைந்த மூடவச்சிர தந்தனின்று
 முதிர்பல் சேனை
தன்னருகி லலைதாங்கத் தடங்கடல்போற் சூழவங்கட்
 சார்ந்து நந்தம்
பொன்னகரை வளைந்துமிகப் பொருதினன்யா வருமவற்குப்
 புறமிட் டாரால்.

(இ-ள்.) தேவாங்கமுனிவனே! கேட்பாயாக,நான் இந்திரனனுப்பிய தூதன்; இவ்விடத்து வந்தகாரணம்யாதென்றால், முன்னமே உன்னுடைய யுத்தத்தால்தோற்றோடிய வச்சிரதந்தனென்கிறமூடனனவன், இப்பொழுது முதிர்ந்தபல சேனைகள்,அலைகளையும் ஓசையையும் உடைய சமுத்திரம்போலத் தன்னருகில் சூழ்ந்துவர அவ்விடத்துவந்து,நம்முடைய அமராவதிப் பட்டணத்தை முற்றுகைபோட்டு மிகவும் போர்செய்தான், (இந்திரன் முதலிய) யாவரும் அவனுக்குத் தோற்றோடினார்கள் என்று வித்தையுத்தேசன் சொன்னான்.

வாய்மையிதா தலினந்த மகபதியெவ் விதத்தினுமுன்
வயினுற் றோங்குந்
தூயமிடல் விடைக்கொடிநீ வாங்கிவரு கென்னவென்னைத்
துரிதத் துய்த்தான்
வேய்மகுட விறலோயிப் பொழுதேமற் றதையருளல்
வேண்டு மென்றான்
காய்மனவஞ் சகவினைக்கோர் கடலனைய கொடியதொழிற்
கயவ னன்றே.

(இ-ள்.) சுடுகின்ற மனக்கபடத்திற்கும் தீத்தொழிலுக்கும் ஒரு சமுத்திரம்போன்ற கொடியதொழிலையுடைய கீழ்மகனாகிய வித்தையுத்தேசனானவன், சூடப்பட்ட கிரீடத்தையுடைய வலிமையுள்ள தேவாங்கமுனிவனே! உண்மையிது, ஆதலினாலே அந்த இந்திரனானவன், எவ்வகையிலாயினும் உன்னிடத்திலிருந்து உயர்ந்த பரிசுத்தமாகிய வலிமையுள்ள விடைக்கொடியை வாங்கிக்கொண்டு வரக்கடவாயென்று என்னைவிரைவாக அனுப்பினான். (ஆதலினால்) இப்பொழுதே அதனைக்கொடுக்கவேண்டு மென்று சொன்னான்.

குடிலவினைக் கயவனிது கூறவுண்மை யெனவுளத்துட்
குறித்துச் செம்பொன்
முடியரசர்க் கரசனந்த முரண்கொடியங் கருளியவன்
முகத்தை நோக்கிப்
படிபுகழு மிதனையெவர் பாவியர்ச்சிப் பினுமவர்சொற்
படியே நின்று
வடிகுலவு நெடியபடை மருவலர்க்கொன் றநிகத்திறல்
வளர்க்கு மென் றான்.

(இ-ள்.) வஞ்சகத்தொழிலை[illegible]ய கீழ்மகனாகிய வித்தையுத்தேசன் இதனைச்சொல்லவும், செம்பொன்னாற் செய்யப்[illegible]ட்ட முடியையணிந்த அரசர்க்கரசனாகிய தேவாங்கமுனிவன், உண்மையென்று மனத்திலெண்ணி, அந்த வலிமையுள்ள விடைக்கொடியை அப்பொழுது கொடுத்து, அவனுடைய முகத்தைப்பார்த்து, உலகத்தார் புகழ்கின்ற இவ்விடைக்கொடியையாவர் [illegible]த்திரஞ்செய்து அருச்சித்தாலும் அவர் சொல்லும் விதமே நின்று [illegible]ர்மைபொருந்திய பெரிய ஆயுதங்களையுடை[illegible] பகைவர்களைக்கொன்று மிக்கவல்லமையையுண்டாக்கும் என்று சொன்னான். எ-று. (கஎ)

வேந்தினைய விளம்பவவன் விரைமலர்ப்பொற் பதம்பணிந்[illegible]
விடைபெற் றந்தக்
காந்துமனத் தாக்கன்மிகக் களித்தி[illegible]டவ் கொடியினொடு
[illegible]டுது போந்து

பூந்துணர்மென் பொழில்வளஞ்சூழ் புகழ்வீர மயேந்திரமா
        புரத்தி னுற்ற
சாந்தமறு கொடியவச்சிர தந்தனிசா சரன்கரத்திற்
        றந்தான் மாதோ.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் இவ்வாசகங்களைச் சொல்ல, சுடுகின்ற மனத்தையுடைய அவ் வித்தையுத்தேசன்,தேவாங்கமுனிவனது மணமுள்ள மலர்போன்ற அழகிய பாதங்களைவணங்கி உத்தரவுபெற்று, மிகவும் சந்தோஷ மடைந்து, இடப்க்கொடியுடனே விரைந்துவந்து, மென்மையாகிய பூங்கொத் துக்களையுடைய வளமையுள்ள சோலைகள்சூழ்ந்த கீர்த்தியினையுடைய வீரம யேந்திரமாபுரத்திலிருக்கின்ற பொறுமையில்லாத கொடிய வரக்கனாகிய வச் சிரதந்தன்கையிற் கொடுத்தான். எ - று. (கஅ)

ஆங்கவனு மந்தவிடை யருங்கொடிபெற் றுளங்களிப்புற்
        றநேக பூசை
தீங்ககல வதற்கினிது செய்துபின்ன ளப்பரிய
        சேனை சூழ
வோங்குபணிக் கொடிஞ்சியந்தே ரொருகணத்துட் டூண்டியும்ப
        ருறைநா டெய்திப்
பாங்கர்தொறும் வீரர்தமை நிறுவியமர் முரசறையப்
        பணித்தா னன்றே.

(இ-ள்.) அவ்வச்சிரதந்தனும் அப்பொழுது அருமையாகிய அவ்வி டைக்கொடியைப்பெற்று மனக்களிப்படைந்து, அதற்குத் தீமைநீங்கும்படி நன்றாக அநேகபூசனைகளைச்செய்து,பின்பு அளவில்லாத சேனைகள் சூழ வுயர்ந்த இரத்தினங்களால் செய்யப்பட்ட சிகரத்தையுடைய அழகிய தேரை ஒரு கணப்பொழுதுக்குள்ளே நடத்தித் தேவர்கள்வசிக்கின்ற அமராவதிப்பட்ட ணத்திற்சென்று, ஒவ்வொருபக்க விடங்களிலும் படைவீரர்களை நிறுத்திப் போர்ப்பறையை முழக்கும்படி உத்தரவுசெய்தான். எ - று. (ககூ)

அண்டமுக டதிரவிற லரக்கர்முர சறைதலுமவ்
        கதைவி னவித்
தண்டபா மணிமுறுவற் சசிகொழுந னெழுந்துபல
        கணங்கள் சூழ
வண்டறைவு தெரியல்விண்ணோர் மலிதரப்பொற் குன்றழகவச
        மதுதொட்டின்ன
விண்டளைய தேர்கடவி விரைந்துசமர்க் களத்துவந்து
        மேவி னானே.

(இ-ள்.) வலிமையையுடைய இராக்கதர்கள் அ[illegible]வமராவதிப்பட்டணத்திலே ஆகாயத்தினுடைய வுச்சி யுடையும்படிப் போர்ப்பறையைமுழக்கினவுடனே, அவ்வோசையைக்கேட்டுக் குளிர்ந்த முத்துப்போலும் பல்வரிசையையுடைய இந்திராணி நாயகனாகிய தேவேந்திரன் எழுந்து, பலசேனைகள் சூழ வண்டுகள்மொய்க்கின்ற பூமாலையையணிந்த தேவர்கள் நிறையப் பொன்னாற்செய்யப்பட்ட குண்டலங்களும் கவசமும் கிரீடமும்விளங்க, மலையையொத்த தேரை நடத்திக்கொண்டு சீக்கிரமாக யுத்தபூமியில்வந்து சேர்ந்தான். எ-று. (உo)

வலாரியந்த வல்லரக்கர் வலிவுசெருக் குணர்ந்துசற்றே
மனத்துட் சோர்ந்து
கலாவமர்செய் திவர்தமையாங் கடப்பரிதென் றொருதூதற்
கருதி நோக்கிக்
குலாவுமதித் தேவலன்பாற் குறுகியிங்கு நிகழ்பவெலாங்
கூறிநீமற்
றலாபமற மவனையொரு கணத்தழைத்து வருதியென
வனுப்பிப் பின்னர்.

(இ-ள்.) தேவேந்திரன், அவ்வலிய அரக்கருடைய மிகுந்தகர்வத்தை யறிந்து, மனத்தில் சிறிது சோர்வடைந்து, நாம் கோபத்துடனே போர்செய்து, இவ்விராக்கதர்களை வெற்றிகொள்வது முடியாதென்றெண்ணி, ஒரு ஒற்றனை நினைத்துப்பார்த்து, நீ பொருந்திய அறிவினையுடைய தேவாங்கமுனிவனிடஞ் சென்று, இவ்விடத்திலே நடப்பவைகளை யெல்லாஞ்சொல்லித் தீமைநீங்கிய அத்தேவாங்கமுனிவனை ஒரு கணப்பொழுதில் அழைத்துவரக்கடவாயென் றனுப்பிவிட்டுப் பின்னே. எ-று. (உக)

கோதண்டம் பிறைபொருவக் குலவுசெவி வரைவாங்கிக்
குனித்து நீண்ட
[illegible]ண்ட வொலி முழக்கியநற் கணைகள்பல
முறையிற் பூட்டி
வேதண்ட மெனத்திரண்ட விறற்புயவல் லரக்கர்பிரான்
மீதுஞ் சூழ்ந்த
மாதண்ட வாரியை [illegible] நீங்காது
மலிபோர் செய்தான்.

(இ-ள்.) அத்தேவேந்திரனானவன், [illegible] காப்பாக வில்லை வளைத்து விளங்குகின்ற காதுவரையிலும் நாணையிழுத்துத் தெறித்து, பழமையாகிய பெரிய அண்டங்களெல்லாம் நடுங்கும்படிச் சத்தித்து, நெருப்புப்போன்ற [illegible] பாணங்களை வரிசையாகத் தொடுத்து, மலையென்னும்படித் திரண்ட

பெருமையுள்ள புங்கவனயுடைய வலிய வச்சிரதந்தன்மேலும் வளர்ந்து கொண்ட சேனைசமுத்திரங்கள் மேலும் பிரயோகஞ்செய்து, நீங்காமல் மிக்கபோரைச்செய்தான். எ - று. (உஉ)

புலோமிசைதன் கொழுநனிவ்வா றமர்தொடங்கிக் கணைகள்பல
பொழிதலோடும்
மேலோதமணி யிரதவச்சிர தந்தன்முத லரக்கரெலாம்
வெகுண்டு மாறுக்
கலோலமெழுந் தலைந்தகருங் கடலுடைந்த தெனநெருங்கிக்
கருவி வீசிக்
கோலோனை யுமரருளந் திடுக்கிடவெஞ் சமர்க்களத்திற்
குழுமிச் சூழ்ந்தார்.

(இ-ள்.) இந்திராணியினுடைய நாயகனாகிய தேவேந்திரன், இவ்வகையாகப் போரைத்தொடங்கிப் பல பாணங்களைப் பிரயோகஞ்செய்தவுடனே, துகிற்கொடிகட்டிய தேரையுடைய வச்சிரதந்தன்முதலாகிய இராக்கதர்களெல்லாங் கோபங்கொண்டு, அலைகள் நீங்காமலெழுந்தலைந்த கருமையாகிய சமுத்திரம் உடைந்தாற்போல வொன்றாகக்கூடிக் கொலைசெய்யும்படியாகிய ஆயுதங்களையெறிந்து, கெர்ச்சனைசெய்து, தேவர்கள் மனங் கலங்கும்படி கொடிய போர்க்களத்திலே கூடிச் சுற்றிக்கொண்டார்கள். எ - று. (உ௩)

கலோலம் - இடைக்குறை.

அங்கமரில் வாறியல வண்டர்பிரான் விடுத்ததூத
னவனி தன்னிற்
பொங்குமிகு மாமோத புரமதனை விரைந்துகணப்
பொழுதிற் சார்ந்து
கங்கமலி தாப்புலவு கமழ்வேற்றே வலனையுளங்
களிப்பக் கண்டு
செங்கமல மலரனைய கரங்குவித்துத் தொழுதினைய
செப்ப லுற்றான்.

(இ-ள்.) அவ்வமராவதிநகரில் இவ்வகையாக ... அமோதபுரத்தை, தேவேந்திரனலனுப்பிய தூதன், பூலோகத்தில் பொலிவுமிகுந்த ஆமோதநகரைக் கணப்பொழுதுக்குள்ளே சீக்கிரமாகச்சேர்ந்து, கழுகுகள் நிறையும்படி புலால்நாற்றம்வீசுகின்ற வேலாயுதத்தையேந்திய தேவாங்கமுனிவனை மனக்களிப்புடனே கண்டு, செந்தாமரைமலர்போன்ற கைகளைக்குவித்து நமஸ்கரித்து இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினான். எ - று.

ஆண்டலைக்கேன் யான டியடிதொழவிருந் திருந்தபிரா
னனுப்புந் தூத
னீண்டடைந்த காரணமற் றெவனெனினுன் றனக்காற்று
திரிந்து போ...

மாண்டவிகல் வச்சிரதந்த னின்றுமெண்ணில் படைகளொடு
வந்து சூழ்ந்து
மூண்டவமர் புரிந்தெவரு முதுகிடவெங் கணைகளினன்
முடுக்கி னனல்.

(இ-ள்.) மணிதருள்ளே சிறந்த வீரத்தன்மைவாய்ந்த தேவாங்கமுனிவனே! கேட்பாயாக : நானே, தேவர்கள் தனது பாதங்களை வணங்கும்படி அங்கு வீற்றிருக்கின்ற தேவேந்திரன் அனுப்பிய தூதனாகும் : இவ்விடத்து வந்த காரணம் யாதென்றால், போரில் உன்வல்லமைக்காற்றாமல் ஓடின மாட்சிமைப்பட்ட வலிமையுள்ள வச்சிரதந்தனனவன் இக்காலத்தில் அளவில்லாத சேனைகளுடனேவந்து சுற்றி, நெருங்கிக்கொண்டாற்போலும் போர்செய்து, யாவரும் புறங்காட்டியோடும்படிக் கொடிய கணைகளினாலே யோட்டினன். எ-று. (உரு)

ஆகலினுன் றனைவிரைவி னழைத்துவரு கெனச்சுரர்கட்
கதிப னென்னை
மாகருணை புரிந்தனுப்பி னனெனஃலுங் தேவாங்க
மகிப னேற்றே
யேகனருள் விடைக்கொடிதந் திருக்கவின்றுந் தூதுவிட்ட
தேவன்கொ லென்னு
யோகமுறு தனதிரு வுளஞ்சிறிதங் கயிர்த்திவையிவ்
னுனுற்றி னனல்.

(இ-ள்.) ஆகையால் உன்னைச் சீக்கிரமாக அழைத்துவரும்படி தேவேந்திரன் மிகவுங் கிருபைசெய்து என்னையனுப்பினன் என்று சொன்னவுடனே தேவாங்கமுனிவன் கேட்டு, நேற்றையத்தினமே சிவபெருமானது விடைக்கொடியைக் கொடுத்திருக்க, இப்பொழுதும் தூதுவிட்டது யாது [illegible] அட்டாங்கயோகமும் பொருந்திய தன்மனத்தில் கொஞ்சஞ் [illegible] க் காரியக்களைச்செய்தான். எ-று. (உசு)

எழுந்துபல கலனுமணிக் தெண்ணில்படை தாங்கியணி
யிரத மேற்கொண்
டொழுங்குறுநால் வகைப்படையு மொருங்குமொய்ப்ப மதிக்க
யும்ப ரோங்கச் [விகை
செழுங்கனக மணிசதிரச் சென்றுணை மொன்றில்விண்ணோர்
செங்கை கூப்பித்
தொழுங்குசி லுங்கொடிய நிதாக்க ரும்பொருமச்
சூழல் சார்ந்தான்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் எழுந்து பலவகையாகிய ஆபரணங்களையும் பூண்டு, அளவில்லாத ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு, மணிகளாற் செய்யப்பட்ட தேரின்மேலேறி வரிசையாகிய நால்வகைச்சேனைகளும் ஒருமித்து நெருங்கிச்சூழச் சந்திரவட்டக்குடை மேலேபிடிக்கச் செழுமையாகிய பொன்னாற்செய்யப்பட்ட பேரிகைகள் முழங்கச் சென்று ஒரு கணப்பொழுதினுள்ளே தேவர்கள் தங்கள் கைகளைக்குவித்து வணங்குகின்ற தேவேந்திரனும், கொடியவஞ்சகத்தையுடைய இராக்கதர்களும் போர்செய்கின்ற அந்த யுத்தபூமியை அடைந்தான். எ-று. (உஎ)

அப்பெருந்து விடைக்கொடியங் கரக்கர்வசத் திருப்பதுமற்
றதனுலஞ்சிச்
செப்பனைய களபமுலை யிந்திராணி துணைவன்முதற்
றேவர் யாரும்
வெப்பவன லணுகியபஞ் செனப்புறமிட் டோடுகின்ற
விதமுங் கண்டா
னொப்பரிய பரஞ்சுடரி னிதயபங்கே ருகமலரி
னுதித்த மேலோன்.

(இ-ள்.) ஒப்பில்லாத சயம்பிரகாசக்கடவுளாகிய சிவபெருமானது மனமாகிய தாமரைமலரிலே தோன்றிய மேன்மையுடையோனாகிய தேவாங்கமுனிவன் அச்சமயத்திலே அவ்விடத்து விடைக்கொடியானது இராக்கதர்கள் வசத்திலிருப்பதையும், சிமிழ்போன்ற கலவைச்சாந்தையணிந்த முலைகளையுடைய இந்திராணியின் கணவனாகிய தேவேந்திரன் முதலாகிய தேவர்களெல்லாம் அவ்விடைக்கொடியினாலே (பயந்து) வெப்பம்பொருந்திய நெருப்பினிடத்துச் சேர்ந்த பஞ்சுபோலத் தோற்றோடுகின்ற தன்மையையுங் கண்டான். எ-று. (உஅ)

காணலுமிவ் வரக்கரன்றோ கருதரிய முழுமாயக்
கபடந் தன்னால்
யாணர்பெறு நமதுவிடைக் கேதனத்தைக் கவர்ந்தனரென்
றகத்தே கொண்டு
காணமகல் வச்சிரத்தற் கெதிரிரதந் தனைநடத்தி
நகுவிற் கோட்டி
பாணமழை சொரிந்தனன் படையலவு கடுகடுங்கிப்
பாறச் செய்தான்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன் அவைகளைப்பார்த்தவுடனே இவ்விராக்கதர்களல்லவா எண்ணுதற்கரிய மாயந்த தந்திரத்தினாலும், வஞ்சகத்தினாலும் அழகுபெற்ற நம்முடைய விடைக்கொடியை அபகரித்துக்கொண்டார்க

ளென்று மனத்திற் கருதி, வெட்கமில்லாத வச்சிரதந்தனுக்குமுன்னே தேரை ச்செலுத்தி, விளங்குகின்ற வில்லைவளைத்து அம்புமழையைப் பொழிந்து, அவ்வச்சிரதந்தனுடைய சேனைகள் பலவற்றையும் மிகவும் நடுங்கியோடும் படிச் செய்தான். எ - று. (உகூ)

அதிர்ந்துசி[illegible]சிரதந்[illegible]னின்றிவன[illegible]மிடத்தினில்வந்
தகப்பட் டானென்
றெதிர்ந்துவிரைந் திரதமடுத்[illegible]க[illegible]த்தி வேனுவ[illegible]க்
திலங்கு செந்தீ
யுதிர்ந்தபல பகழிதொடுத் தாத்திறனு[illegible]தெடுத்திட்டு
மொன்று ரஞ்ச
விதிர்ந்தகதிர் வேலேந்து விறல்வேந்தன் சிறிதுகர
மெலிந்து சோர்ந்தான்.

(இ-ள்.) வச்சிரதந்தன் கோபத்துடனே கொச்சித்து, இப்பொழுது இத்தேவாங்கமுனிவன் நம்மிடத்துவந் தகப்பட்டுக் கொண்டானென்று அத் தேவாங்கமுனிவன் முன்னே சந்தித்து, தேரை அவனருகிற்செலுத்தி வில்லை வளைத்து, விளங்குகின்ற செம்மையாகிய நெருப்பைக்கக்குகின்ற பல பாணங்களைப்பூட்டி வலிமையுடன் பிரயோகஞ்செய்தவுடனே, பகைவர்கள் அஞ்சும்படிக் காந்தியைவீசுகின்ற வேலையேந்திய வலிமையுடைய தேவாங்கமுனிவன் கொஞ்சங் கைசலித்துச் சோர்வடைந்தான். எ - று. (ஙo)

அன்றரம்பை யளித்தகொடுஞ் சாபவினை யாலரச
னயர்ந்து நிற்ப
வென்றிதங்கு நிருதர்தள மிடைந்தமரர் நரரெவரும்
வெருவிட் டோடச்
சென்றமர்செய் தகற்றியந்தத் தேவலன்கைப் படைமுழுதுந்
திறத்தால் வவ்விக்
குன்றனைய வவனிரதத் துறுவலவன் றனைப்பிணித்துக்
கொண்டு பின்னர்.

(இ-ள்.) தேவாங்கமுனிவன், மு[illegible]ம அரம்பைகொடுத்த சாபச் செயலாலே வாடிநிற்க, வெற்றிபொருந்திய [illegible]ராக்கதர்களுடைய சேனைகள் நெருங்கித் தேவர்கள் மனிதர்கள் முதலிய யாவருந் தோற்றோடும்படிச் சென்று போர்செய்து நீக்கி, அந்தத்தேவாங்கமுனிவனுடைய கையிலுள்ள ஆயுதங்களையெல்லாந் தங்கள் வல்லமையாலே பிடுங்கிக்கொண்டு, அத் தேவாங்கனுடைய மலையையொத்த தேரைநடத்துகின்ற சாரதியைக்கட்டிக்கொண்டு அதன்பின்னே, எ - று. (ஙக)

மவுலிதிரு பணியுமந்த வகைசிமிழ்த்து மற்றுமொரு
வலவவன் றன்னு
லவனிரதந் தனைநடத்தி யலைகடல்போன் முழங்கிமுர
சதிரச் சூழ்ந்து
கவனமொடு கருது[illegible]ாக் கணப்பொழுதில் வச்சிரதந்தன்
களிப்புற் [illegible]ருங்கப்
புவனிதிசை புகழவ[illegible]ளர் வீரமயேந் திரபுரத்துட்
புக்கார் மன்[illegible]

(இ-ள்.) (இராக்ஷதசேனைகள்,) கிரீடத்தையணிந்த தேவாங்கமுனிவனையும் அச்சாரதியைச் கட்டினாற்போலக் கட்டி, வேறொருசாரதியினாலே அவன் தேரைநடத்திக்கொண்டு, [illegible]யுடைய சமுத்திரம்போலச் சத்தஞ் செய்து, பேரிகைமுழங்கும்படிச் சூழ்ந்து, வேகத்துடனே எண்ணுகின்ற அரைக்கணப்பொழுதில் வச்சிரதந்தன் மனமகிழ்ந்தோங்குமாறு பூமியுந்திசைகளும் புகழும்படிக் கீர்த்தியிருந்த வீரமயேந்திரபட்டணத்திலேபோய்ச் சேர்ந்தார்கள். எ - று. (கூல)

இரிந்தமக பதியமரர் செவருமதி தளர்ந்துபொன்னு
டெய்தி னார்மெய்
கரிந்துதுய ருழந்துபுவி காவலன்றன் படைமுழுதுங்
கருத்தின் மாழ்கிச்
சரிந்தகதி ரொளிர்துநிகழ் நடமதிலா மோதககர்
சார்ந்த விப்பால்
வரிந்திருந்த தேவாங்கன் வரினிகழ்ந்த திறமுமினி
வகுப்பா மன்றே.

(இ-ள்.) தோற்றோடின தேவராசனும், தேவர்கள்யாவரும் அறிவு தளர்ச்சியடைந்து, அமராவதிப்பட்டணத்தையடைந்தார்கள்; பூமியையாளுகின்ற தேவாங்கமுனிவனுடைய சேனைகளெல்லாம் உடல் கருகித் துன்பத்திறுல்வருந்தி, ம[illegible] மயக்கமடைந்து, சாய்ந்த கிரணங்களைவீசி விளங்குகின்ற விசாலமாக[illegible]ழ்ந்த ஆமோதககரை யடைந்தன; மயேந்திரபுரத்திலே கட்டப்பட்டிருந்த தேவாங்கமுனிவனி[illegible]ந்த தன்மையையும் இனிச் சொல்லுவோம். எ - று. (கூகூ)

வலிமைமிகு வச்சிரதந்தன் மந்திரம்புக் கிருந்ததிர்தே
[illegible]வலனை நோக்கிப்
பொலியுமகிழ் சிறந்துகொலை புரிதொழிலரந் தயனிலையிப்
புனிதன் றன்னு

லொலியல்பல பெறுகுவமென் றுன்னியுப சரித்தவனை
யுறவிற் போற்றி
யலியுமிழ்வா ளரக்கர்தொழ வங்கவருக் கரசனென
வமைத்தான் மாதோ.

(இ-ள்.) வலிமைபொருந்திய வச்சிரதந்தன் அரண்மனையிற் சென்றிருந்து தேவாங்கமுனிவனை யெதிராகப்பார்த்து, விளங்குகின்ற மகிழ்ச்சியாற் சிறப்படைந்து, (இத்தேவாங்கமுனிவனை) கொல்லசெய்வதனால் பிரயோசனமில்லை (ஆதலால்) இப்பரிசுத்தனாலே பல வஸ்திரங்களைப் பெறுவோமென்று நினைத்து, அத்தேவாங்கமுனிவனை உபசாரஞ்செய்து சினேகமாகவணங்கி, நெருப்பைக்கக்குகின்ற வாளாயுதத்தையேந்திய இராக்கதர்கள் வணங்கும்படி, அவ்வீரமயேந்திரபுரத்துக்கு இராசனென்று நியமித்தான். எ - று. ( )

சீரவச்சிர தந்தனருள் செழுங்கனக முடிபுனைந்து
திருத்தே வாங்கன்
றாரமைத்த சமுகமணி மண்டபத்துட் குலவுசிங்கா
தனமேற் கொண்டு
நேரமைச்சர் புடைசூழ நிகரில்பரம் பொருளைமன
நினைவிற் போற்றிப்
போரரக்கர் தொழுதேத்த வீரமயேந் திரபுரத்தைப்
புரந்தா னன்றே.

(இ-ள்.) அழகினையுடைய தேவாங்கமுனிவன், வலிமையுள்ள வச்சிரதந்தனாற் கொடுக்கப்பட்ட செழுமையாகிய சுவர்ணமுடியைச்சூடி, மாலைகளைத் தொங்கக்கட்டிய மணிகளின் மிகுதியாற் செய்யப்பட்ட மண்டபத்திலே பொருந்திய சிங்காசனத்தின்மீ திருந்துகொண்டு, தகுதியாகிய மந்திரிகள் பக்கத்திற் சூழ்ந்துகொண்டிருக்க,ஒப்பில்லாத சிவபெருமானை மனத்தில் தியானஞ்செய்து, போரைச்செய்யும்படியாகிய இராக்கதர்கள் நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்ய வீரமயேந்திரபுரத்தை அரசாட்சிசெய்தான். எ - று. (௩௫)

பின்னொருநாள் வச்சிரதந்தன் பிரியமிக்க தேவலனைப்
பெரிது போற்றிக்
கன்னனெடுஞ் சேமகனுங் கைதொழமற் றிருந்தவெழிற்
காவல் வேந்தே
யென்னருமைப் புதல்வியெனும் பதுமனியை யேற்றருளென்
றியம்ப வன்னோன்
றன்னகமே யொவ்வாத தன்மையினால் விதியை நொந்து
தளர்ந்து சோர்ந்தான்.

(இ-ள்.) வச்சிரதத்தன் பின்னொருதினத்திலே அன்புமிகுந்த தேவாங்கமுனிவனை மிகவும் வணங்கிப் பெரிய கரும்புவில்லை யுடைய மன்மதனும் வணங்கும்படி மகிழ்ந்திருந்த அழகினைப்பெற்ற காத்தற்றொழிலையு[illegible] அரசனே! என்னுடைய அருமையாகிய **பதுமினி** என்னும் பெயரையுடைய பெண்ணை விவாகஞ் செய்துகொள்வாயென்று சொல்ல, அத்தேவாங்கமுனிவன் தன்மனம் பொருந்தாத தன்மையினாலே ஊழ்வலியை நொந்து வாடிச்சோர்ந்தான். எ - று. (௧௬)

மயங்குறுமவ் வேலைதனிற் கனற்கடவு ளே[illegible]ல்
வந்து சார்ந்து
தயங்குகதிர் வேலே[illegible] யி[illegible]தையவிராக் கதமினைநத
ளரேல் சிந்தை
மியங்குமென்மா மகளாவ ளிவள்பெயரக் கினிதத்தை
யென்று தேற்றி
முயங்குமறை வழியேநன் முகூர்த்தந்திற் பலவரிசை
முறைநின் றோங்க.

(இ-ள்.) (இவ்வாறு தேவாங்கமுனிவன்) மனமயங்குகின்ற அச்சமையத்திலே, அக்கினிதேவன் தேவாங்கமுனிவனிடத்து வந்துசேர்ந்து, பிரகாசிக்கின்ற கிரணத்தையுடைய வேலைத்தாங்கிய தேவாங்கமுனிவனே! இப் பெண்ணானவள் இராக்கதமாதென்று மனந்தளராதே; பொருந்திய என் புத்திரி[illegible]வாள்; இவள்பெயர் அக்கினிதத்தை என்றுசொல்லித் தெளிவித்து, [illegible]களிலே தழுவிய விதிப்படியே நல்ல முகூர்த்தகாலத்திலே பலவரிசைகளும் முறையாக உயரவும். எ - று. (௧௭)

தானேயம் மடந்தைதனைத் தகுபுனலி னெடுமரசன்
றனக்கு நல்கி
வானேகி னனருணை வாகனன்பின் னவனுயர்ந்த
மகுட வேந்துஞ்
சேனேகும் விழியிரதி சிலைமார னயிராணி
தேவ[illegible]மான்
கானேறு நம்[illegible]லார்த் திருமுகுந்த னொ[illegible]வினிது
கலந்து வாழ்ந்தார்.

(இ-ள்.) [illegible]டுக்கிடாவை வாகனமாகவுடைய தீக்கடவுள் அவ் அக்கினிதத்தையை தகுதியாகிய நீருடன் தானே தேவாங்கமுனிவனுக்கு விவாகஞ்செய்துகொடுத்து விண்ணுலகத்தையடைந்தான்; அதன்பிறகு, அந்த அக்கினிதத்தையும் அம்முடியையணிந்த தேவாங்கமுனிவனும் சேல்மீனையொத்த கண்களையுடைய இரதியும் மன்மதனும் இந்திராணியும் தேவராசனும், மணம்

பொருந்திய தாமரைமலரிலெழுந்திருக்கின்ற திருமகளும் விஷ்ணுமூர்த்தியும் போல நன்றாகக்கூடி வாழ்ந்தார்கள். எ - று. (௯௮)

கலந்துபுணர் கயலவிழியக் கினிதத்தை யென்பவள்தன்
கருப்ப முற்றி
புலம்பொருந்திண புயவரச னுவப்பவிசா சார்புகழ
வராங்கூர் சால
னலன்பெலனென் றொருமூன்று புதல்வரைத்தந் தனள்வருந்தி
[illegible] நீங்கா
[illegible]லங்குல்வு[illegible]ஞ்சிறைதய வருமடங்கற் குருளைகள்போல்
வளர்ந்தா ரன்றே.

(இ-ள்.) இவ்வாறு தேவாங்கமுனிவனுடனே கலந்துகூடிய கெண்டை மீன்போலுங் கண்களையுடைய அக்கினிதத்தையென்பவள் (சின்னாள்சென்ற பிறகு) கருப்பமுதிர்ந்து; திரண்ட கல்[illegible]யொத்த வலிய தோள்களையுடைய தேவாங்கமுனிவன் மகிழ்ச்சியுடையவ[illegible] இராக்கதர்கள் புகழவும், வலிமை மிகுந்த சாலன் - அலன் - பெலன் எனனும் மூன்றுபுத்திரர்களையும் வருந்தப் பட்டுப் பெற்றாள்; நீங்கப்பெறாத வெற்றிபொருந்திய யானைகள்கெடும்படி வருகின்ற சிங்கக்குட்டிகள்போல அம்மூவரும் வளர்ந்தார்கள். எ - று. (௯௯)

அச்சிறுவர் தமக்குநெய்யு மருந்தொழிலை யினிதுகற்பித்
தரசர் கோமான்
வச்சிரதந்த னுக்குமற்றை வாளரக்கர் யாவருக்கு
மனம்பூ ரிப்பக்
கச்சமுறும் பலகலையு மன்னவரே தரும்படிக்குக்
கருணை செய்து
வித்தைசெறி யாமோத வளர்ந்தேர்செல் வாரமனத்துள்
விருப்ப மிக்கான்.

(இ-ள்.) அரசர்க்கரசனாகிய தேவாங்கமுனிவன் அந்தப்பி[illegible]கள் மூவருக்கும் அருமையாகிய நெய்யுந்தொழிலை நன்றாகக்கற்பித்து, வச்சிரதந்தனுக்கும், மற்றுமுற்ற வாளாயுதத்தைத் தாங்கிய இராக்கதரெவர்களுக்கும் மனம்பூரிக்கும்படி நன்றாக பொருந்திய பல ஆடைகளையும் அப்பிள்ளைகளே செய்துகொடுக்குமாறு அநுக்கிரகஞ் செய்து, வித்தை மிகுந்த வளப்பமுள்ள ஆமோத[illegible]ரினி[illegible]த்துச் செல்லும்படி மனத்தின்கண் மிகவும் விருப்பங் கொண்டான். எ - று.

[illegible] - [illegible]. (௱)

யா[illegible]றை மங்[illegible]வச்சிர தந்தனிடத் திருவிருந்த்
[illegible]வலிமை கூர்தன்
[illegible] [illegible]மைவன் பெ[illegible]ழிவிடையு மினிதுபெற்று
முனிவோர் வாழ்த்த

மீதுமணிக் குடைநிழற்ற மிளிரிரத மூர்ந்துபுகழ்
　　மிகுதே வாங்கன்
போதுசெறி புனலகழி புடைசூழ்ந்த வாமோத
　　புரத்துட் புக்கான்.

(இ-ள்.) கீர்த்திமிகுந்த தேவாங்கமுனிவன், தன்மாமனுகிய அவ்வச்சிர தந்தனிடத்திலிருந்த வலிமைமிகுந்த தன்னுடைய பகைவரை யழிக்[…]ன்ற விடைக்கொடியையும், அவன்சொல்லிய வுத்தரவையும் இனிதாகப் பெற்றுக் கொண்டு, முனிவர்கள் வாழ்த்தவும், மேலே முத்துக்குடை நிழலைச்செய்யவும் பிரகாசிக்கின்ற தேனரநடத்திக்கொண்டு, மலர்கள் நெருங்கிய நீரை[…]டைய அகழி பக்கங்களிற் சூழ்ந்த ஆமோதநகரை யடைந்தான். எ - று. (…க)

மன்னூர்பிரா னக்நகரின் மநுமுறைதப் பாதுசெங்கோல
　　வளநடாத்தி
யின்னமுத நிகர்தேவ தத்[…]யெனு மயிலொடுவீற்
　　றிருந்தா னிப்பாற்
கன்னவிலுங் கனகபுய விஞ்சையர்யா வருந்திரண்டு
　　கயிலை நண்ணிப்
பன்னகவா பரணமணி பரமனிரு சரணமலர்
　　பணிந்து சொல்வார்.

(இ-ள்.) அரசர்க்கரசனுகிய தேவாங்கமுனிவன் அவ்வாமோதநகரிலிருந்து இராசநீதியை மநுசாஸ்திரத்திற் கூறிய விதிதவறாமல் நன்ராக நடத்தி, இனிய தேவாமிர்தத்தையொத்த தேவதத்தை யென்கின்ற மயில்போலுஞ்சாயலையுடையவளுடனே யெழுந்தருளியிருந்தான்; அதன்பின்பு, மலையென்றுசொல்லப்பட்ட பொன்போன்ற புயங்களையுடைய வித்தியாதரர்களெல்லாம்ஒன்றாகச்சேர்ந்து கயிலாயமலையை யடைந்து, நாகாபரணத்தை யணிந்த சிவபெருமானது இரண்டு திருவடிகளையும் நமஸ்கரித்துச் சொல்லத்தொடங்கினார்கள். எ-று. (சஉ)

வஞ்சரிடத் தணுகாத மாமணியே யருட்கடலே
　　வயங்குங் கங்கைச்
செஞ்சடையெம் பெருமானே தேடரிய சிவக்கொழுந்தே
　　சிறியேம் யாரு
மஞ்சரிய வநுபத்து நான்குகலை களிற்சிலவின்
　　னருளின் சீரால்
விஞ்சவுணர தனமூழுது மெய்க்கதியி[…] றுளந்திருக்க
　　வேண்டு மென்றார்.

(இ-ள்.) வஞ்சகர்களிடத்திலே சேராத பெரியமாணிக்கமே! கிருபா சமுத்திரமே! பிரகாசிக்கின்ற கங்காநதியையணிந்த சிவந்த சடைமுடியையுடையஎங்கள் கடவுளே! யாவரும் தேடுதற்கருமையாகிய சிவக்கொழுந்தே! சிறியேங்களாகிய நாங்களெல்லாரும் அஞ்சுதலில்லாத அறுபத்துநான்குகலைகளிலேசிலவற்றைத் தேவரீருடைய கிருபையின் சிறப்பினாலே மிகுதியாகத் தெரிந்துகொண்டோம்; தெரியாத மற்றகலைகளையெல்லாம் எங்களுக்குக் கற்பித்[illegible] மனத்தை நேராகச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். எ-று.

கேசரிவ் வண்கபரவக் கிளர்நுதர்கட் பானுவகை
    கெழுமி நோக்க
[illegible]சுறுநுங் குலவேமவ நணனைமை யினைத்துவட
    வரைத்தண் சாரிற்
றேசுபெறு தவமுயன்[illegible] னவ்வொருநற் புதல்வனருள்
    செய்வோ மந்த
வீசுபுகழ் மகனுமக்கு [illegible]ண்டுகலை முழுதுநன்கு
    விரிக்கு மென்றான்.

(இ-ள்.) வித்தியாதரர்கள் இவ்வகையாகத் [illegible]த்திரஞ்செய்தவுடனே, பிரகாசிக்கின்ற நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் மகிழ்ச்சியடைந்து அவ்வித்தியாதரர்களைப் பார்த்து, குற்றமில்லாத [illegible]குலத்திலே, ஏமவருணன் என்பவன் நம்மைச் சிந்தித்து மகாமேருவின் குளிர்ந்தசாரலிலே அழகுபொருந்திய தவஞ்செய்துகொண்டிருக்கின்றான்; அந்த ஏமவருணனுக்கு நாம் ஒரு நல்லபுத்திரனைக் கொடுத்தருள்வோம்; பெருகிய கீர்த்தியையுடைய அப்புத்திரன் உங்களுக்கு வேண்டிய கலைகளெல்லாவற்றையும் நன்றாகவிரித்துச்சொல்லுவனென்று சொல்லியருளினார். எ-று. (சஉ)

ஆலமிடற் றமலனிவ்வா றருள்புரியக் களிப்பொடுகொண்
    டாடி யன்னோர்
கோலமலர்ப் பதம்பணிந்து நலவுமறை மொழியினன்பு
    கூர்ந்து போற்றி
நீலமுகிற் குலம்படியு நெடுமுடித்தண் கயிலைதனை
    நீங்கிச் சோதி
சாலவிமைத் துளசெணி தனில்லடைந்தா[illegible] புனிதவித்தியா
    தரர்கண் மாதோ.

([illegible]-ள்.) ஆ[illegible]கால விஷத்தையுண்ட கண்டத்தையுடைய [illegible]ராகிய [illegible]பெருமான் இவ்வாறு அநுக்கிரகஞ்செய்தவுடனே, பரிசுத்தராகிய வித்[illegible] களி[illegible] மகிழ்ந்து அச்சிவபெருமானது அழகினையுடைய [illegible]கின்ற பாதங்களை நமஸ்கரித்தும் பொருந்திய வேத மொழிகளாலே.

ஆசையிருந்து தோத்திரஞ்செய்து, கருமையுள்ள மேககூட்டங்கள் படிந்து ள்ள நீண்ட சிகரங்களையுடைய குளிர்ந்த கயிலாயமலையினின்றும் நீங்கிப் பிரகாசமானது மிகவும் விளங்குகின்ற வித்தியாதரவுலகத்தைச் சேர்ந்தார்கள்,

கின்னரராங் கினிதகன்ற பின்னர்வரி மதர்நெடுங்கட்
கிளர்பொற் றாவி
யன்னநடைக் கவுரிபங்க ளுமோத வளம்பதிகாத்
தளிக்குஞ் செங்கோன்
ம[illegible]னவனைக் கருத்திலுன்ன மற்[illegible]னு மதைத்தெரிந்து
மகிழ்வு கூர்ந்து
துன்னரிய கயிலைவெற்போர் கணத்தடைந்து தாழ்ந்தெழுந்து
தொழுது நின்றான்.

(இ-ள்.) வித்தியாதரர்கள் அக்கயிலையிலிருந்து இனிதாகச் சென்ற பின்பு, இரேகையுங் களிப்புமுள்ள நீண்ட கண்களையும், பொன்போலும் விளங்குகின்ற சிறகினையும், அன்னம்போலும் நடை[illegible]முடைய பார்வதிதேவியாரது நாயகராகிய [illegible]பெருமான், வளப்பமுள்ள ஆமோதநகரைக் காக்கின்ற செங்கோலையுடைய தேவாங்கமுனிவனை மனத்தில்நினைக்க அத்தேவாங்கமுனிவனும் அதையறிந்து களிப்புமிகுந்து அடைதற் கருமையாகிய கயிலாயமலையை [illegible]கணம்பொருந்திய சேர்ந்து சிவபெருமானை நமஸ்கரித்தெழுந்து வணங்கி நின்றான். எ - று.

காத்தளித்தல் - ஒருபொருட்பன்மொழி. (௬௪)

எதிர்தொழுது பரவிநின்ற தேவலன்றன் றிருமுகத்தை
யினிது நோக்கி
மதிபுனையும் பரமனன்ப வ[illegible]வரைச்சார் பினிலேம
வருண னென்பா
னதிகதவம் புரிந்தனன்மற் றவன்மூலனீ குழவியென
வடைந்து பின்னர்
விதிபெறுமென் னெனக்கலையும் விஞ்சையர்கட்குணர்த்துகென
வி[illegible]பத்தான்.

(இ-ள்.) சந்திரனை யணிந்த சிவபெருமான், எதிரே தம்மை வணங்கித் தோத்திரஞ்செய்து நின்ற தேவாங்கமுனிவனது அழகிய முகத்தை நன்றாகப் பார்த்து, அன்பனே! மகாமேருவின்பக்கத்திலே ஏமவருணனென்பவன் மிகுந்த தவஞ்செய்துகொண்டிருக்கின்றான்; அவன் மூலமே நீ பிள்ளையாகச் சேர்ந்து, அதன்பின்பு விதியுள்பொருந்திய அறுபத்துநான்குகலை[illegible]வித்தியாதரர்களுக்கு உபதேசிக்கக்கடவையென்று சொல்லி உத்தரவுகொடுத்தனுப்பினார். எ - று. (௬௫)

எமையாளு முமையாக விதுபகர் விசைக்குகன்று
செய்தி பொன்றாக்
குமைவேறனைக் கொற்றவன்பின் குமரர்கட்குக் கூறுவன
கூறி கற்பின்
கமைகூருந் தேவதத்தை காமர்சந்திர ரேகையிவர்
கருத்தாற் றேற்றி
யமைதூல தேகமதை யவ்வயினே லிலிங்கவடி
வாக்கி னானே.

(இ-ள்.) பகைகளையழிக்கின்றவேலேந்திய அரசனாகிய தேவ[illegible]வகைமுனி வன், எங்களை யாளுகின்ற பார்ப்பதிதேவியாருடைய காயகனாகிய சிவபெரு மான் இவ்வாசகத்தைச்சொல்ல அதற்குடன்பட்டுத் தன்னுடைய ஆமோத நகரையடைந்து, பின்பு [illegible]யாங்கன் - விமலாங்கன் - தவளாங்கன் என்னும் மூன்று புத்திரர்களுக்கும் சொல்லவேண்டிய இராசகாரியங்களைச் சொல்லி, கற்பினையுடைய [illegible] [illegible]தேவதத்தையும், அழகிய சந்திரரேகையு மாகிய இவர்[illegible]மனத்தை[illegible]தெளிவித்துப் பொருந்திய தன்னுடைய தூலதே கத்தை அவ்வாமோதநகரினிடத்து ஒரு இலிங்கவடிவா[illegible]மடைச்செய்தான்.

குருத்தெழுமவ் விலிங்கமொரு பத்தினுக்கங் க[illegible]மலரிக்
கோயி லாக்கித்
திருப்பணிகள் பலபுரிந்து திவ்யாங்க னெனும்புதல்வன்
தினங்க டோறும்
விருப்புறுபூ சனையியற்றி வேதமநு நீதிசெங்கோல்
விதிவ ழாமல்
வருத்துபகை வரைத்துணித்து வனைகடற்பார் புரந்ததிக
வளங்கொண் டேற்றான்.

(இ-ள்.) திவ்யாங்கனென்னுங் குமாரன், தோன்றி[illegible]யெழுகின்ற அவ்வி லிங்கவடிவினுக்குப் பொருந்த அவ்விடத்து மணிகளாலே ஆலயமுதலாகிய திருப்பணிகள் பலவற்றையுஞ் செய்து, ஒவ்வொரு நாளிலும் விருப்ப மிகுந்த பூசையைச்செய்து, வேதங்களிலும் மநுதருமத்திலுங் கூறிய முறைப்படி செங்கோலைத் தவறாமல் நடத்தி, வருத்துகின்ற [illegible]களையழித்து, அலைக ளையுடைய சமுத்திரஞ் சூழ்ந்த வுலகத்தைக் காத்து மிகவும் வளப்பத்தை யடைந்திருந்தான், எ-று. (சுக)

விடைக்கொடிக்காக்கர் வெற்றிசெருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ௧௧-க்கு பாடல் ௭௪௰

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை திருத்தாளே.

உ

சிவமயம்.

சவுடாம்பிகை சகாயம்.

இருபத்திரண்டாவது

அருங்கலையுணர்வித்தியாதரச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புரைதவிர் சூதனின்ன புகறலுந் தொழுது போற்றி
வரைவறு வளங்கூர் நேமி வனமுனி வரர்க ளைய
தரைபுகழ் வேந்தன் வித்தியா தரவவ தாரஞ் செய்த
வுரைபெறு கதையு மெங்கட் குணர்த்தென வுணர்த்தி னுல்.

(இ-ள்.) அளவில்லாத வன்பமிகுந்த நைமிசாரணியவாசிகளாகிய முனிவர்கள், குற்றமற்ற சூதமுனிவர் இப்படிச் [illegible] (தேவாங்கமுனிவனது) சரித்திரங்களைச் சொன்னவுடனே அவரை நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து, ஐயனே! பூமியிலுள்ளோர்கள் கொண்டாடத்தக்க தேவாங்கமுனிவனாகிய அரசன் [illegible]யாதர அவதாரஞ்செய்த பயனுள்ள [illegible]த்திரத்தையும் எங்களுக்குத்தெரியும்படித் திருவாய்மலர்ந்தருளல்வேண்டுமென்று கேட்க, அச்சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார். எ-று. (க)

உணர்த்தினான் என்றது காலவழுவமைதி.

வல்லிருள் கடிந்த சிந்தை மாதவ முனிவிர் கேண்மின்
றொல்லுடல் லிங்க சொருபமா வமைத்துப் பின்னர்
வில்லுமிழ் மகுடவேந்[illegible] மேருவின் சாரல் புக்கோர்
சொல்லுறு குழவி யாகித் தோன்றினன் சுரர்கள் போற்ற.

(இ-ள்.) வலிய அஞ்ஞானவிருளை நீக்கிய மனத்தராகிய பெரிய தவத்தையுடைய முனிவர்களே! கேளுங்கள்: காந்தியைக் கக்குகின்ற முடியையணிந்த அரசனாகிய தேவாங்கமுனிவன், பழைய உடம்பை இலிங்கவடிவமாகச் செய்து, அதன்பின்பு மகாமேருவின் சாரலிற்சென்று தேவர்கள் துதிக்குமாறு [illegible] கூறியபடி ஒரு பிள்ளையாகத் தோன்றினான். எ-று.

சார்புறிற் கயிலை வாழுந் தனிப்பரம் பொருளை யுன்னிச்
சீர்புனை மதத்தி [illegible] திருக்கற வெணணில ஞாலம் (உ)
பார்புகழ் தவப்பு [illegible] பணிசெ[illegible] டபார்ந்த பூந்தார்
மார்பமே சா[illegible] கருணையங் கத்தனைக் கண்டான்.

(இ-ள்.) மகாமேருவின் சாரலிலே [illegible]யுடைய புத்திரனைப் பெற்று விரும்பிக் கயிலைமலையில் வாழ்கின்ற ஒப்பில்லாத சிவபெருமானைச் சிந்

த்து,மாறுபாடில்லாமல் நெடுங்காலமாக உலகத்தார் புகழ்கின்ற தவத்தைச் செய்து, தகுதியுடனே யிருந்த பூமாலையையணிந்த மார்பினையுடைய வித்தியாதரனாகிய ஏமவருணன் அப்பிள்ளையைக் கண்டான். எ - று. (௬)

காண்டலு மகிழ்வுற் றிந்தக் காரணங் கயிலையாதி
யாண்டவ னருளே யென்று வளப்பருந் துதிபு ரிந்து
மாண்டகு கரத்தா லந்த மதலையை யினிதெ டுத்து
நீண்டபொன் மணியாற் காந்தி நிறைந்ததன் மனைக்குச் சென்றான்.

(இ-ள்.) ஏமவருணன் அப்புதல்வனைக் கண்டவுடனே களிப்படைந்து, இப்பிள்ளை இவ்விடத்து வருதற்குக் காரணம் கயிலைமலையிலெழுந்தருளிய முதல்வராகிய சிவபெருமானுடைய திருவருளேயென்று அளவில்லாத தோத்திரஞ்செய்து,பெருமையுள்ள தகுதியாகிய தன் கைகளினாலே அந்தப் பிள்ளையை இனிதாகவெடுத்து, மிகுந்த பொன்னாலும் மணியாலும் பிரகாசம் நிறைந்த தன்னுடைய வீட்டினிடத்துச் சென்றான். எ - று. (௭)

மந்திர மதனிற் புக்கு வயங்குதன் மனைவியாய
நந்திடை மதர்நெ டுங்கட் சந்திர முகிகை யுய்த்தி
லந்தகன் மதலை தன்னை யலையமு தெடுத்து மாலன்
றிந்திரன் முதலோர்க் கீந்த தெனத்தவ னினிது தந்தான்.

(இ-ள்.) தவத்தினையுடைய ஏமவருணன் தனது மனையிற்சென்று, விளங்குகின்ற தனது மனைவியாகிய நுல்போலும் சிறிய இடையையும், செழித்து நீண்ட கண்களையுமுடைய சந்திரமுகி என்பவளுடையகையில் திருப்பாற் கடலைக்கடைந்து அதிற்றோன்றிய அமுதைத் திருமாலானவர் தேவேந்திரன் முதலாகிய தேவர்களுக்குக் கொடுத்ததுபோல அப்பிள்ளையை இனிதாகக் கொடுத்தான். எ - று. (௮)

வாய்மைமா றுக வேம வருணன்றன் றரும ணாயனே
சேய்மைமே ருவின்பாற் பெற்ற சிறுவனை யளித்த வோடும்
வேய்மலை புயமட ந்தை விருப்புற வமைப்பக் கும்ப
தூய்முலை யிரண்டி னும்பால் சுரந்துமீ தொழுந்த தன்றே.

(இ-ள்.) உண்மை தவறாத ஏமவருணனாகிய அழகிய தனது நாயகன், நீண்ட மேருவினிடத்துப்பெற்ற புத்திரனைக் கொடுத்தவுடனே, மூங்கிலையொத்த தோள்களையுடைய சந்திரமுகியானவள் விருப்பமிக மார்போடணைக்க, கலசம்போன்ற பரிசுத்தமாகிய இரண்டு முலைகளினும் பால்பெருகி வெளிப்பட்டது. எ - று. (௯)

முதிர்பெருங் கற்பிற் சந்திர முகிதனை முலைத்த தும்பு
மதுரமெல் லமுதந் மந்த மகவினுக் கினித ளித்துப

புதுமணித் தொட்டி லேற்றிப் புந்தியி னுவகை பூப்பக்
கதிர்விழிக் கிமையே யென்னக் கருணையி னெடும்வ ளர்த்தாள்.

(இ-ள்.) முதிர்ந்த பெரிய கற்பினையுடைய சந்திரமுகியானவள், தன்னுடைய இரண்டு முலைகளிலும் வழிகின்ற மதுரமாகிய நல்ல பாலை அப்புதல்வனுக்கு நன்றாக வு[illegible]பித்து, புதுமையாகிய மணிகளாற் செய்[illegible]தொட்டிலிலே இ[illegible]த்தி, அறிவினிடத்துக் களிப்புண்டாகக் காந்தியுள்ள கண்களுக்கு இமை காப்பாக விருத்தல்போலக் கிருபையுடனே வளர்த்தாள். எ-று.

அத்திரு [illegible]சொ[illegible]ப லைவங்கணை மதன னென்னச்
சித்திர கலாப மஞ்ஞையூர் திறற்பெருங் குமர னென்னத்
தத்தொளி யுமிழ்வேல் வித்தியா தரர்சிரோ மகுட மென்ன
[illegible]த்தனி யுலகும் போற்ற வினிதுற வளர்ந்தான் மன்னோ.

(இ-ள்.) அந்தப் புத்திரனானவன், வடிவினையுடைய பஞ்சபாணங்களைத் தாங்கிய மன்மதனென்று கண்டோர் சொல்லவும், அழகிய தோகை பொருந்திய மயில்வாகனத்தையுடைய வலிமையும் பெருமையுமுள்ள முருகக்கடவுளென்று கண்டோர் சொல்லவும், பரவிய காந்தியை யுமிழ்கின்ற வேலையேந்திய வித்தியாதரர்களுடைய முடிமகுடமென்று கண்டோர்சொல்லவும் எவ்வகைப்பட்ட ஒப்பில்லாத உலகங்களிலுள்ளவர்க[illegible]ளெல்லாந் துதிக்கவும் நன்மைபொருந்த வளர்ந்தான். எ-று. (௫)

அன்னையும் பிதாவு மன்புற் றமரர்மற் றெவரும் வாழ்த்த
நன்னய சுபமுகூர்த்த நாவிலத் [illegible]திரும கற்கு
முன்னவர் தம்மாற் செல்வ மு[illegible]கம லாட்ச னென்னப்
பன்னருஞ் [illegible]னர் பரிந்து மாதோ.

(இ-ள்.) தாயுந்தந்தையுமாகிய [illegible]ந்திரமுகி - ஏமவருணன் என்னு மிருவ[illegible] ஆசைகொண்டு, தேவர்களும் மற்[illegible] [illegible]வித்தர்முதலாகிய யாவரும் வாழ்த்த, நல்ல நயமாகிய சுபமுகூர்த்த[illegible]லே [illegible] வழகினையுடைய பிள்ளைக்குப் பெரியோர்களைக் கொண்டு செல்[illegible] மிகுந்த கமலாட்சன் என்று சொல்லுதற்கருமையாகிய சிற[illegible]பினையுடை[illegible] பெயரை விரும்பிச் சூட்டினார்கள். எ-று. (௬)

கமலாட்[illegible]மலர்போலுங் கண்களையுடையவன்.

விளம்பொரு பதினே ர[illegible]டில் வேதமா றங்க மேமுற்
[illegible]ங்கணு காத வெல்[illegible] கலைக்குமோர் கடலே போன்று
வளங்கொளப் புல[illegible]த்து மற்றிவற் கிணையின் றென்னத்
துளங்கரும் புகழும் [illegible]முன் றுதிகம லாட்ச னென்பான்.

(இ-ள்.) யாவருந் துதிக்கின்ற கமலாட்சனென்னும் வித்தியாதரன், சொல்லுகின்ற பதினொன்றாகு வயதிலே, நான்கு வேதங்களும், ஆ[illegible] ங்களும் முதலாகக் குற்றமடையாத அறுபத்துநான்கு கலைகளுக்கும் ஒரு

சமுத்திரத்தையொத்த வளப்பத்தைக் கொண்ட எவ்வுலகங்களிலும் இந்தக் கமலாட்சனுக்குச் சமானமில்லையென்று சொல்லும்படி விளங்குகின்ற அருமையாகிய கீர்த்தியையும் பெற்றான். எ - று. (கo)

விட்புலத் துயர்ந்த சேடி மேவுகே சரர்கள் யாரு
முட்பொதி பசுந்தாட் கஞ்ச முககம லாட்சன் றன்[பா]
லட்புறு கலைகள் யாவு நவின்றுநம் மிருடீர் வாமென்
றுட்பொலி மகிழ்வாற் போற்றி யுற்றன ரவனோ [டன்]றே.

(இ-ள்.) விண்ணுலகத்திலுள்ள வித்தியாதரவுலகத்தி[ல் வசி]க்கின்ற வித்தியாதரர்கள்யாவரும், மூட்கள்நெருங்கிய பசுமையாகிய தண்டையுடைய தாமரைமலர்போலும் முகத்தையுடைய சுற்றமாகப்பொருந்திய கமலாட்சனாலே கலைகளெல்லாம் பயின்று நமது அஞ்ஞானவிருளை நீக்கிக்கொள்ளுவோமென்று மனத்தில்விளங்கிய களிப்பினாலேபுகழ்ந்து அக்கமலாட்சனையடைந்தார்கள். எ - று. (கக)

அடுத்ததங் குலத்து ளோர்தம் மகவிருட் செறிவு தீரத்
தொடுத்தபல் கலைய னைத்துந் துரிசற வுணர்த்தி னானல்
உடுத்தவெண் டரங்க வேலை யுலகெலா முவப்பத் தோன்றும்
வடுத்தவிர் பரி[தி]யேபோல் வளர்கம லாட்ச னென்பான்.

(இ-ள்.) வெள்ளிய அலைகளையுடையசமுத்திரத்தை ஆடையாகவுடுத்திய உலகத்திலுள்ளவர்கள் யாவருங் களிக்கும்படி தோன்றுகின்ற குற்றமில்லாத சூரியனைப்போல வளர்கின்ற கமலா[ட்]சனென்பவன், தன்னிடத்துவந்து சேர்ந்த தங்கள் குலத்தோராகிய வித்தி[யா]தரர்களுடைய மனவிருட் கூட்டமானது நீங்க, பொருந்திய பலகலைகளை[யு]மெல்லாம் சந்தேக விபரீதமில்லாமல் கற்பித்தான். எ - று.

சந்தேகமாவது - ஒருபொருளை இதுவோ அதுவோவென் றெண்ணல். விபரீதமாவது - ஒருபொருளை மற்[றொரு]பொருளாக வெண்ணல். (கஉ)

வாழ்கம லாட்ச னென்னு மதிவலா [னொ]ருநா டன்னிற்
சூழ்கதிர் மணித்[த]ண் கோட்டுத் தொல்[பெ]ருங் கயி[லை] நண்ணித்
தாழ்கருங் குழலாள் பாகன் சரணயங் க[ளை வணங்]கி
யாழ்கட லிடைப்பி றந்த வமுதென வி[சை]ப்ப தானான்.

(இ-ள்.) இவ்வாறு வாழ்கின்ற அறிவில் [வ]ல்லவனாகிய கமலாட்[சன்] என்பவன், ஒருநாள் கிரணங்கள் சூழ்ந்த மணிகள்[பொ]ருந்திய குளிர்ந்த சிகரங்களையுடைய பழமையாகிய பெருமையுள்ள ஸ்ரீ கயிலாயமலையை யடைந்து, நீண்ட கருமையாகிய கூந்தலையுடைய பார்ப்பதிதேவியாரது நாயகனாகிய சிவபெருமானுடைய பாததாமரைகளை வணங்கி, ஆழமுள்ள திருப்பாற்கடலிலே தோன்றிய அமுதம்போல இசையாகிய பாடலைப் பாடத்தொடங்கினான்.

முக்கனி கரும்பின் பாகு முதிர்ந்தகற் கண்டக் கார
மிக்கதேன் பிறவுங் கூட்டி வேட்டவர்க் களிப்ப தன்னச்
செக்காஞ் சடிலத் தண்ணல் செவிவழிப் புகுந்து ளத்திற்
சொக்கரு மகிழ்வெ மூப்பச் சுருதியாழ்த் துழனி செய்தான்.

(இ-ள்.) வாழை-மா-பலா ஆகிய இக்கனிகளும், கரும்பினது பாகும், சுவைமிகுந்த கற்கண்டும், சர்க்கரையும், மதுரமிகுந்த தேனும் இன்னும் மதுரமுள்ள பொருள்கள் யாவையும் ஒன்றாகச் சேர்த்து விரும்பினவர்களுக்குக் கொடுப்பதுபோல, சிவந்த அழகிய சடைமுடியையுடைய சிவபெருமானது காதின்வழியாகச் சென்று மனத்திற் சோர்வில்லாத களிப்பை யுண்டாக்கும்படிச் சுருதியையுடைய யாழை வாசித்தான். எ-று. (கசு)

விடமிகும் விகற்ப மின்றி விஞ்சையர் பிரான்வா சிக்குஞ்
சுடர்மணித் திவவி யாழிற் றுவன்றுமின் னிசைவி னுவிப்
படர்கதி ரவன்ற னும் பரிதியு மதிம யங்கி
யிடாறுங் களிப்பாற் றத்த மியல்பையு மறந்து மூன்றார்.

(இ-ள்.) வித்தியாதரர்கள் தலைவனாகிய கமலாட்சன், கண்டத்துடனே விகற்பமில்லாமல் வாசிக்கின்ற காந்தியுள்ள மணிகள்பதித்த வலிக்கட்டினையுடைய யாழினிடத்துண்டாகிய இனிய இசையைக்கேட்டு செல்லுகின்ற கிரணத்தையுடைய சந்திரனும் சூரியனும் அறிவுமயங்கி, துன்பம் நீங்கிய மகிழ்ச்சியாலே தங்கள் தங்களுடைய செல்லும் வழியையும் மறந்து அலைந்தார்கள்.

அணங்குமென் மகளிர் யாழு மலைவுகொளாந் தாரங் கேட்டு
வணங்குநுண் ணிடைவ ருந்த வளர்ந்தெழு கொங்கை முற்றுஞ்
சுணங்கணி படர மாரன் சொரிய கணைகட காற்று
இணங்குதங் கொழுநர்த் தேடி யிடைவிடா துருகி நின்றார்.

(இ-ள்.) மென்மையாகிய தேவமாதர்களெல்லாம் அந்தக் கமலாட்சன் வாசித்த குறிஞ்சி யாழிசையைக்கேட்டு, அசைகின்ற நுட்பமாகிய இடைவருந்த, வளர்ந்தெழுகின்ற முலைகள் முழுதும் அழகினையுடைய தேமல்படர, மன்மதன் ஏவிய பாணங்களுக்குச்சகியாமல் வருந்தி தங்களுடைய நாயகர்களைத் தேடிக்கொண்டு இடைவிடாமல் மனமுருகி நின்றார்கள். எ-று. (கஎ)

ஓங்குமக் கயிலை வெற்பி னுறுபல விலங்கும் புள்ளு
மாங்குள வொருங்கு யூற்கேட் டரும்பெரு மகிழ்வு பூப்பத்
தூங்குதன் மலர்த்தேன் பெய்யத் தாருகளு முருகச் சோலைத்
தேங்கனி சிதற மோகஞ் செய்ததத் திவவி யாழே.

(இ-ள்.) அந்த வலிக்கட்டையுடைய யாழிசையானது, உயர்ந்த அக் கயிலாய மலையினிடத்துப் பொருந்திய பலமிருகங்களும் பறவைகளும் (விரோ

தமென்பதுநீக்கி) உள்ள வொற்றுமையினாலே அவ் விசையைக்கேட்டு, அருமையாகிய மிக்க மகிழ்ச்சியடையவும், தங்கிய நல்ல மலர்களெல்லாந் தேனைச் சொரியவும், கற்களும் உருகவும், சோலைகள் இனிமையாகிய கனிகளைச் சிந்தவும் காமவிகாரத்தை யுண்டாக்கியது. எ - று. (கஎ)

காசிபன் மார்க்கண் டேயன் கவுதம னங்கி ராகன்
மாசிகு சனக னாதி மாமுனி வரர்கள் யாரும்
பேசருந் தவமு மோனப் பெற்றியு மறந்தா ரந்தக்
கேசரன் யாழின் பாணி கேட்டலு மால்கொண் டன்றே.

(இ-ள்.) காசிபரும் - மார்க்கண்டேயரும் - கவுதமரும் - அங்கிராதரும் - குற்றமில்லாத சனகரும் ஆகிய இவர்கள் முதலாகிய பெரிய முனிவர்கள் யாவரும் அக் கமலாட்சனுடைய யாழிசையைக் கேட்டவுடனே மனத்தில் மையல்கொண்டு, சொல்லுதற்கரிய தவங்களையும் மௌனயோகத் தன்மையையும் மறந்தார்கள். எ - று. (கஅ)

அவிர்கம லாட்ச னிவ்வா றனகயா ழிசைப்ப தன்றிக்
கவிபுக ழனேக வின்பக் கலைகளு மினிது காட்டச்
செவிநிறை யமுத மென்னத் தெக்கியுட் களிப்பால் வேணி
மவுலியெம் பெருமா னெண்ணில் வரமவற் கருள்பு ரிந்தான்.

(இ-ள்.) பிரகாசிக்கின்ற கமலாட்சன் இவ்வகையாகப் பாவமில்லாத யாழிசை செய்வதல்லாமல், யாவரும் புகழ்ப் பாடுகின்ற அளவில்லாத பாடல்களையும், நல்ல நூல்களையும் நன்றாக இயற்றி இனிதாக்காண்பிக்கச், சடாமகுடத்தையுடைய எங்கள் சிவபெருமான் திருச்செவிகளின் வழியாக நிறைந்த அமுதென்னும்படி உட்கொண்டு மனமகிழ்ச்சியாலே அளவில்லாத வரங்களை அக்கமலாட்சனுக்குக் கொடுத்தருளினார். எ - று. (கக)

தினந்தொறுங் கயிலை நாதன் திருமுன மிவ்வா றெய்தி முன்
யனங்கனு மினிது போற்ற வணிகொள்விஞ் சையர்தன் கோமா
கனம்பொரு திருமால் வேலை கடைந்ததெள் ளமுத சார
மெனும்படி யவிபஞ்சி யிசைத்துவாழ்ந் திருந்தா னிப்பால்.

(இ-ள்.) மன்மதனும் நன்றாகவணங்க அழகினைக்கொண்ட வித்தியாதரர்களுக்குத் தலைவனாகிய கமலாட்சன் ஒவ்வொருநாளும் கயிலாயபதியாகிய சிவபெருமானுடைய திருவோலக்கத்திற் சென்று, கிறந்தால் மேகத்தையொத்த திருமேனியையுடைய திருமாலானவர் பாற்கடலைக் கடைந்த தெளிவாகிய அமுதசாரமென்று கண்டோர்சொல்லும்படி இனிமையாகிய வீணையை வாசித்து இவ்விதமாக வாழ்ந்திருந்தான். எ - று. (உ0)

வனகெடுங் கடன்ஞா லத்துள் வயங்குகாந் தார நாட்டிற்
கனகமா புரமென் றோப்பில் கடிநக ரொன்றுண் டாங்கே

யினமலி சுருதி கீர்த்தி யென்னுமோர் மன்னர் மன்னன்
மனுமுறைப் படிகோ லோச்சி மகிழ்ந்துவீற் றிருந்தா னன்றே.

(இ - ள்.) நீரையுடைய பெரிய சமுத்திரஞ்சூழ்ந்த பூவுலகத்தில் விளங்குகின்ற காந்தாரநாட்டிலே, ஒப்பில்லாத காவலையுடைய கனகமாபுரமென்றொரு பட்டணமுள்ளது; அந்நகரிலே, மந்திரிகள் நிறைந்துள்ள சுருதிகீர்த்தியென்னும் அரசர்களுக் கரசனாகிய ஒருவன், மநுநீதியிற்கூறியுள்ள இராசதருமத்தின்படி அரசுசெலுத்திக் களிப்படைந்து வீற்றிருந்தான். எ - று. (௨௧)

அப்பதிக் கணித்தா யோங்கு மடவியின் சூழல் வைகுஞ்
செப்பருங் கோர னென்னுந் திறனிசா சரனங் கெய்தி
யொப்பமை யளவி லாத வுயிர்தினந் தொறுஞ்செ குத்துத்
துப்பலர் மலிந்த தெய்வச் சோலைபற் பலவு மழித்தான்.

(இ - ள்.) அந்தக் கனகமாபுரத்துக்குச் சமீபமாக உயர்ந்த சோலையினிடத்து வசிக்கின்ற சொல்லுதற்கரிய கோரன் என்கின்ற பெயரினையுடைய வலிய இராக்கதன் அப்பட்டணத்தில் வந்து, அழகு நிறைந்த எண்ணில்லாத வுயிர்களை நாடோறுங்கொன்று, பொலிவுள்ள மலர்கள்நிறைந்த தெய்வத்தன்மையுள்ள சோலைகள் பலவற்றையும் நாசமாக்கினான். எ - று. (௨௨)

கோரனுன் மாந்தர் யாருந் தலைகுலைந் தயர்த லோர்ந்தவ்
வீரமார் சுருதி கீர்த்தி வேழதுபல் படையோ டேகிக்
காரளா வியதுருக்கங் கஞன்றகா னகத்தைச் சூழ்ந்து
வாரமோர் சிறிது மில்லா வவ் வரக்கனையெ திர்ந்தான்.

(இ - ள்.) முன் சொல்லப்பட்ட அந்த வெற்றிபொருந்திய சுருதிகீர்த்தி என்னும் அரசன், கோரனென்னும் அரக்கனுலே மனிதர்கள் யாவரும் நடுநடுங்கி வாடுதலைத் தெரிந்து, நால்வகைச் சேனைகளுடனேசென்று, மேகங்கள் தவழுகின்ற குங்குமமரங்கள் நெருங்கிய அக்காட்டைச்சேர்ந்து சிறிது அன்பில்லாத அவ்விராக்கதனை யெதிர்த்தான். எ - று. (௨௩)

எதிர்தலுஞ் சுருதி கீர்த்தி யிரிதர முடுகிச் சிறி
யதிர்த்திமாக் கயந்து ரங்க மவிர்சயந் தனங்க டாதி
விதிர்த்திடக் கதையா னமோதி விழுத்தினன் விழியாற் செந்தீ
யுதிர்த்தெழு கோர னென்னு முணர்வில் வரக்க னம்மா

(இ - ள்.) கண்களாலே சிவந்த நெருப்பைச் சிந்தியெழுகின்ற கோரனென்னும் அறிவில்லாத இராக்கதன், சுருதிகீர்த்தியரசன் தன்னை யெதிர்த்தவுடனே அவ்வரசன் அஞ்சியோடும்படி தானு மெதிர்த்து, ஆரவாரித்த பெரிய யானைகளும், குதிரைகளும், விளங்குகின்ற தேர்களும், காலாள்களும் ஆகிய நால்வகைகள் நடுங்கும்படிக் கதாயுதத்தாலே தாக்கி அவற்றையெல்லாம் விழுங்கிவிட்டான். எ - று. (௨௪)

வாங்குவிற் சுருதி கீர்த்தி மனம்பதை பதைத்து வெங்கிட்
டீங்கிவற் செகுத்து வெல்வ தெளிதல வினிநாங் கங்கை
தாங்குதற் பரனை யுன்னித் தவம்புரிந் தருள்பெற் றப்பாற்
சோங்குடைக் கொடியன் றன்னைத் துணிப்பலென் றுளத்திற் கொண்டு.

(இ-ள்.) வளைந்த வில்லையுடைய சுருதிகீர்த்தியரசன் மனந் துடி துடித்துத் தோற்று, இங்கு இவ்விராக்கதனைக் கொன்று வெற்றிபெறுவது எளிமையல்ல இனி நாம் கங்காநதியையணிந்த சிவபெருமானைத்தியானித்துத் தவஞ்செய்து அப்பெருமானது கிருபையைப் பெற்று, பின்னே மறதியை யுடைய கொடியனாகிய கோரனைக் கொல்வேனென்று மனத்தில் நினைத்து. எ - று.

தெய்வமென் சோலை யொன்றிற் சென்றுளந் திருத்திச் சின்னாட்
சைவநன் னூலொ ழுங்கிற் றவம்புரிந் திருப்பத் தேர்ந்து
மைவரு கண்டத் தண்ணல் மலைத்திரு மடந்தை யோடு
மெய்விடை மிசைப்பொ லிந்து விண்ணவர் தொழுநேர் வந்தான்.

(இ-ள்.) தெய்வத்தன்மையுள்ள மென்மையாகிய ஒரு சோலையினிடத்துச்சென்று மனத்தைப் பரிசுத்தமாக்கிச் சிலநாள் நல்ல சைவசாஸ்திர விதிப்படித் தவஞ்செய்துகொண்டிருக்க, இதையறிந்த கருநிறம் பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமான் பர்வதராசனது புத்திரியாகிய பார்ப்பதி தேவியாருடனே உண்மையாகிய இடபவாகனத்தின்மீது விளங்கித் தேவர்கள் வணங்கும்படிச் சுருதிகீர்த்தியரசன்முன்னே வந்தருளினார். எ-று. (உசு)

சேமிசைப் பொலிந்து தேவ தேவன்வ தெதிர்த லோடும்
பூமிமுற் புவன மெங்கும் புகழ்பெறு சுருதி கீர்த்தி
மாமறைக் கரிய வன்றேன் வார்கழற் டிணங்க டாழ்ந்து
கோமலர்க் காஞ்சி ரத்திற் குவித்தனன் றுதித்து நின்றான்.

(இ-ள்.) பூவுலகமுதலாகிய எவ்வுலகமும் புகழைப்பெற்ற சுருதிகீர்த்தியரசன், இடபவாகனத்தின்மீது பிரகாசித்துத் தேவர்களுக்குத் தேவனாகிய சிவபெருமான் வந்து தோன்றினவுடனே, பெருமைபொருந்திய வேதங்களுக்கு மறிதற்கருமையாகிய சிவபெருமானுடைய நீண்ட வீரக்கழலையணிந்த திருவடிகளை வணங்கித் தாமரைமலர்போன்ற இரண்டு கரங்களையுஞ் சிரமேற் குவித்து நமஸ்கரித்து நின்றனன். எ - று. (உ௭)

தொழுதெதிர் துதித்து நின்ற தூயவன் வதன நோக்கி
யெழுதரு கருணை பொங்கி யெக்கைபூ விறைவ நீயிச்
செழுமலர்ச் சோலை தன்னிற் செய்தவ மகிழ்ந்தாம் வேண்டும
விழுமமில் வரங்கள் யாது விளம்பவை தருது மென்றான்.

(இ-ள்.) எங்கள் பிதாவாகிய சிவபெருமான் தமக்கு முன்னே வணங்கித் தோத்திரஞ்செய்து நின்ற பரிசுத்தனாகிய சுருதிகீர்த்தியரசனுடைய முக

த்தைப் பார்த்து, உண்டாகிய திருவையானது மிகுந்து, பூமியை யாளுகின்ற சுருதிகீர்த்தியரசனே! நீ செழுமையாகிய இச்சோலையினிடத்துச்செய்த தவத்தைக்கண்டு மகிழ்ச்சியடைந்தோம்; விரும்புகின்ற துன்பமில்லாத வரம்யாது சொல், அவற்றைக்கொடுக்கின்றோமென்று சொன்னார். எ - று. (உஅ)

முதல்வனீ தருள லோடு முறைவழாச் சுருதி கீர்த்தி
யிதயம துவந்து போற்றி யெந்தைகேள் கோர னென்றோர்
மதநிசா சரனிங் கெய்தி மன்னுயிர் பலசெ குத்துன்
டதமுற நினது பூசை யலர்வன மனைத்துஞ் சாய்த்தான்.

(இ-ள்.) செங்கோல்முறைதவறாத சுருதிகீர்த்தியரசன், சிவபெருமான் இதனைச்சொன்னவுடனே மனமழ்கித்து துதித்து, எங்கள் பிதாவே! கேட்பீராக: கோரன் என்று சொல்லப்பட்ட மதத்தையுடைய ஒரு இராக்கதன் இவ்விடத்திலே வந்து நிலைபெற்ற பலவுயிர்களைக் கொன்று இன்று தேவரீருடைய பூசைக்கேற்ற புட்பவனங்கள் பலவற்றையும் அதமாகும்படி முறித்துத் தள்ளினான். எ - று. (உகூ)

சொல்லுமங் கவனை மாற்றித் தொடர்தரு மிடர்க ளைந்து
பல்லுயிர்த் தொகையி னோடு பகலிர வுனது பாதம்
புல்லுறு மெளியேன் றன்னைப் புரந்தருள் புரிதி யென்னக்
கொல்புலி யுரித ரித்த குழகன்மற் றினைய கூறும்.

(இ-ள்.) நான்சொல்லிய அங்குள்ள கோரனென்னும் இராக்கதனைக் கொன்று, எங்களைத்தொடர்ந்த துன்பங்களைநீக்கிப் பலவுயிர்களுடனே பகலும்-இரவும் தேவரீருடைய திருவடிகளையடைகின்ற எளியனாகிய வென்னைக் காத்து அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, கொல்லுந் தொழிலையுடைய புலியினது தோலை யுடுத்திய சிவபெருமான் இவைகளைச் சொல்லுவார். எ - று. (ஙo)

வேந்தகே ளவனை யாரும் வெல்லரி தாத லாலுன்
காந்தைதன் வயிற்றின் மேலோர் காதல னுதிப்பா னன்னோன்
சாந்தமில் கொடிய கோரன் றனைச்செறுத் துலக னைத்து
மேந்துசெங் கோல்செ லுத்து மென்றருள் புரிந்து சென்றான்.

(இ-ள்.) சுருதிகீர்த்தியரசனே! கேட்பாயாக: அக்கோரனென்னுமிராக்கனை எவராலுஞ் செயிக்கமுடியாது ஆதலினால், உன்னுடைய மனைவியினுடைய வயிற்றிலே இனியொரு புத்திரன் பிறப்பான்; அப்பிள்ளையானவன் பொறுமையில்லாத கொடிய கோரனென்னும் அரக்கனைக் கொன்று, எவ்வுல[illegible]ங் காக்கின்ற செங்கோலை நடத்துவானென்று வரங்கொடுத்துச் சென்றார். எ - று. (ஙக)

ஆதியம் பகவ னிவ்வா றருள்புரிந் தகன்ற பின்னர்
நீதிகொள் சுருதி கீர்த்தி நிறைதரு முவகை பூப்பத்
தாதிவர் பொழில்கள் சூழ்ந்த தன்னக[illegible]து சார்ந்து
மேதினி முழுதும் போற்ற வீற்றிருந் தரசு செய்தான்.

(இ-ள்.) முதல்வனாகிய சிவபெருமான் இவ்வாறு வரத்தைக் கொடுத்துச்சென்றபின்னே, நீதியையுடைய சுருதிகீர்த்திபாசன் நிறைவாகிய மகிழ்ச்சியுண்டாக, மகரந்தப்பொடிகள் செறிந்த சோலைகள் சூழ்ந்த தன்னுடைய நகரமாகிய கனகமாபுரத்தில் இனிதாகச்சென்று, பூமியிலுள்ளோர் யாவரும் துதிக்கும்படி எழுந்தருளியிருந்து செங்கோல் செலுத்திவந்தான். எ-று. (௫௨)

கயிலையிற் பரமன் பின்பு கமலாட்சன் றனையு ளத்தி
லியல்புற நினைப்ப வன்னோ னினிதுணர்ந் தொருக ணத்தி
லயனொடு திருமுன் னெய்தி நளினமென் பதங்க டாழ்ந்து
மயிலியல் பங்க வென்னை மதித்ததென் னருள்க வென்றான்.

(இ-ள்.) கயிலாசமலையினிடத்து (இனிதுவாழும்) சிவபெருமான், அதன்பின்பு கமலாட்சனென்னும் வித்தியாதரனை மனத்தில் நருக்கியுடனே நினைக்க, அக்கமலாட்சன் அதனை நன்றுணர்ந்து ஒரு கணப்பொழுதுக்குள்ளே விருப்பத்துடனே சிவபெருமானுடைய சந்நிதியையடைந்து, தாமரைமலர்போலுந் திருவடிகளை நமஸ்கரித்து, மயில்போலுஞ் சாயலையுடைய பார்ப்பதி தேவியாரது நாயகனே! என்னை மதித்தெண்ணிய காரணம்யாது? அதனை அநுக்கிரகஞ்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தான். எ-று. (௫௩)

அனையவன் வதன நோக்கி யரதிகாந் தார நாட்டிற்
கனகமா புரம்பு ரக்குங் காவலன் சுருதி கீர்த்தி
தனதுளங் களிப்ப வன்னோன் றலைவிபாற் செனித்துத் தோன்றிச்
சினமிகு கோர னென்னுந் திறலரக் கனையும் வீட்டி.

(இ-ள்.) சிவபெருமான் அவ்வாறு வேண்டிநின்ற கமலாட்சனுடைய முகத்தைப்பார்த்து: காந்தாரதேசத்திலேயுள்ள கனகமாபுரத்தையாளுகின்ற அரசனாகிய சுருதிகீர்த்தி என்பவனுடைய மனங்களிக்கும்படி அவனது மனைவியினிடத்துண்டாகிப்பிறந்து கோபமிகுந்த கோரனென்கின்ற வலிமையுள்ள இராக்கதனைபுங்கொன்று. எ-று. (௫௪)

மன்னுயிர்த் தொகைகள் யாவு மகிழ்வுற வருத்தம் போக்கி
யக்கில முழுது நீயே யாள்கென வருள்வ ழங்கத்
துன்னுமவ் விஞ்சையர்பி ரானச் சொன்மறு கிலசர்ந்து போற்றிப்
பொன்னுறு தனது செம்பொற் புரிசைசூழ் நகரம் புக்கான்.

(இ-ள்.) நிலைபாகிய உயிர்களெல்லாங் களிக்குமாறு அவைகளுக்குண்டாகிய துன்பத்தைப்போக்கி அக் காந்தாரதேசமுழுமையும் நீயே காக்கக்கடவையென்று அநுக்கிரகஞ்செய்யாநிற்க, அங்கு நெருங்கிய வித்தியாதரர்கள் தலைவனாகிய அக்கமலாட்சன், சிவபெருமான் கூறிய அச்சொல்லை மறுக்காமல் மனம்பொருந்தித் துதித்து, அழகு பொருந்திய தன்னுடைய செம்பொன் மதில்சூழ்ந்த பட்டணத்தையடைந்தான். எ-று. (௫௫)

அருங்கலைப்[illegible] யாதரச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ-சருக்கம் உ[illegible]க்கு பாடல் [illegible].

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை சரண் துணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

இருபத்துமூன்றுவது

தருபுட்பதந்தாவ தாரச்சருக்கம்.

கோச்சகம்.

எத்திறமு முணர்சூத னிவையருள வெதிர்போற்றி
முத்தருயர் கமலாட்சன் முன்சுருதி கீர்த்தியெனுஞ்
சுத்தமலி பதியகவாய்த் தோன்றியாக் கனைமுருக்கி
யொத்தரசு புரிசிரு முனாயெனவ னவனுரைப்பான்.

(இ-ள்.) எவ்வகைப்பட்ட தத்துவநூல்களையு மறிந்த சூதமுனிவர் இச் சரிதையைச் சொல்ல, முனிவர்கள் அதனைக்கேட்டு முன்னேவணங்கி, மேன்மையுள்ள கமலாட்சனென்னும் வித்தியாதரன், முன்னமே சுருதிகீர்த்தி என்னும், பரிசுத்தனுகிய அரசனுக்குப் புத்திரனுகப்பிறந்து கோரனென்னும் இராக்கதனை யழித்து கடுவுநிலைமையுடனே அரசுசெய்த சிறப்பையுஞ் சொல்வீராக வென்றுவினவ, அச்சூதபுராணிகர் சொல்லியருளினார். எ - று. (க)

வாவறுமைம் புலன்களைந்த மாமுனிவிர் கேண்மினின்ப
மேவுகம லாட்சனுயர் விமலசிவ பாலருளாற்
பூவுலகெண் டிசைமுழு தும் புகழ்சுருதி சீர்த்திபுணர்
தேவியெனுஞ் சேமவதி திருவயிற்று டவதரித்தான்.

(இ-ள்.) உலகவிஷயங்களிற்செல்லுகின்ற ஐம்புலன்களையுநீக்கிய பெருமையையுடையமுனிவர்களே! கேளுங்கள்: இன்பத்தையுடைய கமலாட்சனென்னும் வித்தியாதரன், மேலாகிய சிவபெருமானுடைய அநுக்கிரகத்தினாலே, பூமியிலும் எட்டுத்திக்குகளிலும் உள்ளவர்கள் யாவரும் புகழ்கின்ற சுருதிகீர்த்தி யரசனுடைய, கலந்துள்ள சேமவதி யென்கின்ற மனைவியினுடைய திருவயிற்றிலே பிறந்தான். எ - று. (உ)

விதித்தமநு முறைதவறு விறற்சுருதி கீர்த்திநெஞ்சங்
களித்தமகிழ் பிறங்கவன்னோன் காதலனாந் திருமகனாங்
குறித்திட னும்புட்பதந்த னிவற்குரிய நாமமென
மதித்தவசு ரீரிமொழி வானிடத் தெழுந்ததன்றே.)

(இ-ள்.) மநுசாஸ்திரத்தில் நியமித்த நீதி தவறாத வலிமையையுடைய சுருதிகீர்த்தியரசனது மனத்தில் மிகுந்த களிப்புவிளங்க அவனுடையமனைவி

யினிடத்து அழகினையுடைய புத்திரன் பிறந்தவுடனே, இவனுக்குத் தகுதியா கிய பெயர் புட்பதந்தன் என்று யாவரும் மதிக்கப்பட்ட அசரீரிமொழி ஆகாசத்தினிடத்து உண்டாயிற்று. எ-று.

அசரீரியாவது - எங்கும் நிறைந்துள்ள முதற்றெய்வம். புட்பதந்தன் - மலர்போலும் பல்வரிசையுடையவன். (ங)

பயங்கமுடி தனிற்பொறுக்கும் பூவினிடைப் பொலிந்தவிடர்
மய[illegible]இருள்சீத் துயிரினைத்து மகிழ்வரு மிளங்கதிர்போ
னயங்குலவு கனகபுர காபதிதோட் டிணைகுமிழ்ப்ப
வியப்புகழ்கூர் புட்பதந்தன விண்ணவர்போற் றிடவளர்ந்தான்.

(இ-ள்.) ஆதிசேடன் முடியிலேதாங்கிய பூமியினிடத்துமிகுந்த துன்பத்தையும் மயக்கத்தைக் கொடுக்கின்ற இருளையும்நீக்கி உயிருள்ள யாவும் மகிழும்படித் தோன்றிவருகின்ற பாலசூரியனைப்போல, நீதியையுடைய கனகபுரத்தை அரசாளுகின்ற சுகீர்த்திராசனுடையஇரண்டுதோள்களும் புளகங்கொள்ளுமாறு பெருமையும் புகழுமிக்க புட்பதந்தன் தேவர்கள் துதிக்கும்படி வளர்ந்தான். எ-று. (ச)

வயல்செறியா மோதாவில் வளர்தேவ தத்தையும்பின்
முயலகனை மிதித்தவிறலான் மூர்த்திசெழுந் திருவருளால்
வியல்குலவு சிந்துபதி விருபாட்சன் மகளாகத்
தயவினவன் [illegible]த்தி [illegible]யிற் றிடைப்பிறந்தாள்.

(இ-ள்.) வயல்கள் மிகுந்த அமோதாநகரிலிருந்த உயர்ந்த தேவதத்தையும், அதன்பின்பு முயலகாசுரனை மிதித்த அழகிய திருவடியையுடைய சிவபெருமானது திருவருளினாலே பெருமைபொருந்திய சிந்துதேசாதிபதியாகிய விருபாட்சன்என்னு மரசனது புத்திரியாகத் தயாளகுணமுடைய அவ்வரசன் மனைவியாகிய கீர்த்திசாலி வயிற்றிற் பிறந்தாள். எ-று. (ரு)

வேறகாத்து விருபாட்சன் மிகவுமன மகிழ்கெடும்
பாற்கடலி னமுதமெனப் பத்தனைதேன் [illegible]பொழுதே
மாற்குழன்மந் திவட்குறுபேர் வளர்தேவ தத்தையென்றே
பேற்குமென வசரீரி [illegible]தெண் டிசைவிளங்க.

(இ-ள்.) வேலைத்தாங்கிய விருபாட்சவரசன் மனமானது மிகுவுங் களிக்கும்படி பெரிய பாற்கடலினிடத்திலே தோன்றிய அமுதம்போன்ற பெண் பிறந்தபொழுதே, அசரீரியானது மேகம்போலுங் கூந்தலையுடைய இப்பெண்ணுக்கு நாமமாவது, வளர்கின்ற தேவதத்தை யென்று சொல்லத்தகுமென்று எட்டுதிக்கும் விளக்கும்படிச் சொல்லியது. எ-று. (சு)

அடற்சுருதி கீர்த்தியின்று ளவித்தபுட்ப தந்தனுக்கு
மிடற்சவில மனைபபுப விருபாட்சன் றவத்தில் வந்த

மடற்செருந்தி மலராளக் மாதேவ தத்தைதனைக்
கடற்சகமெல் லனும்புகழக் களித்துமண முடித்தனனே.

(இ-ள்.) வலிமைபொருந்திய சுருதிகீர்த்தியராசனானவன், அதன்பின்பு தான் பெற்ற புட்பதந்தனுக்கு வலிமையுள்ள மலையையொத்த புயங்களை யுடைய விருபாட்சனது தவத்தினிலே பிறந்த இதழ்கள்பொருந்திய செருந்தி மலரையணிந்த கூந்தலையுடைய பெருமைபொருந்திய தேவதத்தையைச் சமுத்திரஞ்சூழ்ந்த உலகமெவ்விடத்தி லுள்ளவர்களும் புகழும்படிச் சந்தோஷமாக விவாகஞ்செய்தான். எ-று. (எ)

புட்பதந்த நிருபனந்தப் பொற்றேவ தத்தையொடு
தட்பமல ரணையினின்பந் தாத்திளைத்து வருநாளிற்
லட்படையோன் னலர்பரவு மடற்சுருதி கீர்த்தியவன்
கட்பதும முகநோக்கி யருளினிவை கழறினனால்.

(இ-ள்.) புட்பதந்தவரசன் அவ்வழகினையுடைய தேவதத்தையுடனே குளிர்ச்சியுள்ள மலர்மெத்தையின்மேலிருந்து தேவதத்தையானவள் காமவின்பத்தைக்கொடுக்க அனுபவித்துவருங்காலத்திலே, கூர்மை பொருந்திய ஆயுதங்களையுடைய சத்துருக்கள் வணங்குகின்ற வலிமையுள்ள சுருதிகீர்த்தியரசன் அந்தப் புட்பதந்தவரசனுடைய தேன்பொருந்திய தாமரைமலர்போன்ற முகத்தைப்பார்த்துக் கிருபையுடனே [illegible] சொல்லுவான். எ-று. (அ)

கலி[illegible]ம்.

மைந்த கேளி[illegible] [illegible]கரைச்சூ
ழந்த மாவன மதிற்கன [illegible]லபோற
கொந்து பாவியொரு கே[illegible]ர னெனுமம்பேர்
முந்து வாளிருதன் மெ[illegible]ம்புகொ டிற்றுன்.

(இ-ள்.) புத்திரனே! கேட்பாயாக. இந்தப் பெரியகரைச்சூழ்ந்த அழகினையுடைய சிறந்த வனத்திலே நெருப்பைப்போலத் திரண்ட பெருங்கோபத்தையுடையபாவியாகிய கேசரனென்னும் பெயரையுடைய யாவருக்கும் முற்பட்ட வாளேந்திய ஒரு இராக்கதன் வலிமைகொண்டு வசிக்கின்றான். எ-று.

ஆல[illegible]மோர் தரு[illegible] வன்ப[illegible] தனன்ற
பா[illegible] மீதினு[illegible]ர் பற்பல கொன்றுண்
[illegible]ல வாப[illegible]ண னுண்மகி[illegible] பூசைச்
சீல ம[illegible] வனங்கள் சிதை[illegible]ன்.

(இ-ள்.) விஷத்தைதயொத்த அவ்விராக்கதன் பசியினாலே பூமியிலுள்ளத் துள்ள உயிர்கள் பலவற்றையுங்கொன்[illegible], நாகாபரணத்தையுடைய சிவபெருமான் மனமகிழ்கின்ற சிலமாகிய பூசைக்குத்தக்க பெருமைபொருந்திய புட்பவனங்களையும் அழித்தான். எ-று. ([illegible])

அன்றி யுந்திற லவன்புரி துன்ப
மொன்றி ரண்டல வுரைப்ப மெனிற்போர்
துன்றி ... ராதிப ரும்பின்
... றனர் திகைத்திட வெல்லவான்.

(இ-ள்.) ... மலாமலும் அந்தக் கோர னென்னும் அரக்கன் செய்யுந் துன்பமானது சொல்லுவோமென்றால் ஒன்றிரண்டல்ல பலவாகும்; போர்வல்ல பெரிய தேவர்களும் தோற்றோடி வருந்தித் திகைக்கும்படிச் செயக்கொள்வான். எ - று. (கக)

பாவி யானகன பாதக னின்னே
ஆவி சோரவனை யானெதிர் நீசென்
றேவ ரேகவகை பெய்து முடித்தே
வாவெ னுவருள் வழங்கினன் மன்னன்.

(இ-ள்.) சுருதிகீர்த்தியரசன், பாவியும் பெரிய துரோகியாயுமாகிய இவ் விராக்க... னுடைய உயிர் சோரும்படி நீ அவனுக்கு முன்சென்று அநேகபாண ங்களை விதம் வி...கப் பிரயோகஞ்செய்து அவனைக் கொன்றுவரக் கடவை யென்று இருவ...யு...னே சொல்லுவான். எ - று. (கஉ)

தந்தை யி...கமொழி சாற்ற...
...ந்த வெம்பகை யரக்கனை யின்னே
சிந்த வென்றினி ... லெனப்பொற்
...ந்த கன்குறு பதங்கள் ...

(இ-ள்.) பிதாவாகிய சுருதிகீர்த்தியரசன் இவ்வார்த்தைகளைச்சொன்ன வுடனே, புத்திரனாகிய புட்பதந்தன் அக் கொடிய பகைவனாகிய இராக்கதனை இப்பொழுதே அழியும்படிக் ...ன்று சுகமாக வருவேனென்று பொன் போலும் ...ய்ந்த இரு...னை வணங்கி. எ - று. (கங)

பிதா வழங்குவிடை பெற்றுயர் செல்வன்
மதா ... லம்புரவி வாட்படை தின்டேர்
விதான மெங்கணு ... விண்ணி
னிதான வொண்கவி ... மற்று ... ரம்ப.

(இ-ள்.) தந்தையாகிய சுருதிகீர்த்தியரசனுடைய ...த்தரவுபெற்று, மேன்மை ... புட்பதந்தன், யானைப்படையும், குதிரைப்படை யும், வாளேந்திய ... யும், ...லிய தேர்ப்படையும், மேற்கட்டியும் எவ்விடங்களிலும் நெருங்கவும், ஆகாசத்திலே மணிகளாற் செய்யப்பட்ட அழ கிய குடைமுதலானவை நிறையவும். எ - று. (கச)

கொற்று வாளு ... கொடிஞ்சிக டாவி
நற்று ரும்கணாக ... கன்னகா நீங்கி

விக்கை மேவுபுய வீறுறு புட்ப
தந்த னீளடவி தன்னை யடைந்தான்.

(இ - ள்.) இரட்சியாகப் பிரகாசத்தைக் கக்குகின்ற தேரைச் செலுத்திக்கொண்டு, வீரலக்ஷ்மிபொருந்திய பெருமைமிக்க புயங்களையுடைய புட்பதந்தன், சங்குகள் சூழ்ந்த கனகமாபுரமாகிய நல்ல பட்டணத்திலிருந்து நீங்கிப் பெரிய காட்டைச்சேர்ந்தான். எ - று. (கரு)

சேனை யங்கடல் செறிந்திட மேவி
யூன யின்றவ னுறைந்திடு கோரன்
தான மூன்றெதிர் தலைப்பட வீர
ரான கந்திமிலை யாதிய திர்த்தார்.

(இ - ள்.) மாமிசத்தைப்புசித்து அக்காட்டினிடத்து வசிக்கின்ற கோரனென்னும் இராக்கதன் கோபங்கொண்டு எதிர்க்கும்படி வீரர் சேனையாகிய சமுத்திரம் நெருங்கிவரச்சென்று, துந்துபி - பம்மை மேளம் முதலாகிய வாத்தியங்களை முழக்கினார்கள். எ - று. (கசு)

தெவ்வி யத்தொனி செவிக்குள் வினவி
[illegible] உத்துறை யரக்க னழன்று
கவ்வி முற்[illegible] [illegible]ராவும்
வெவ்வி றற்புலியின் மேயின னம்மா.

(இ - ள்.) அக்காட்டினிடத்து வசிக்கின்ற கோரனென்னு மரக்கன் பகைவருடைய வாத்தியங்களின் [illegible]த்தைக் காதிற்கேட்டு கோபங்கொண்டு, [illegible] மிருகங்கள் நடுங்கும்படி . வற்றின்மேல் பாய்கின்ற கொடிய வலிமையுள்ள புலியைப்போலப் புட்பதந்தனுடைய, சேனைகளின் மேலே சென்றான். எ - று. (கஎ)

கழுமு தற்படை கரத்தி னிலங்க
வெழுக னத்தினுரு மென்ன வதிர்ந்து
கெழுதி றற்சுருதி கீர்த்தி மகன்றன்
வழுவி லக்கனை [illegible]மாழ்க வெதிர்த்தான்.

(இ - ள்.) கழு முதலாகிய ஆயுதங்கள் கைகளில் விளங்க, எழுகின்ற மேக [illegible] முழக்கம்போலச் சத்தித்து, வலிமை பொருந்திய சுருதிகீர்த்தினுடைய [illegible] புட்பதந்தனது குற்றமில்லாத அச்சேனை [illegible]த்திரியருடைய [illegible] மயங்கும்படி அவைக[illegible] வந்தெதிர்த்தான். எ - று. (கஅ)

அரக்க னி[illegible]வகை யங்கடர் கரிலை
யுரத்[illegible]ளங்கள்பல வோடிடி [illegible]
[illegible]ப்பெ ருங்கட லிடத்தெதிர் காளத்
திரட்கு டைந்தகல் செழுஞ்சுர [illegible]போல்.

(இ-ள்.) கோரனெனவன் இவ்விதமாக அவ்விடத்து எதிர்த்தபொழுது, முற்காலத்திலே ஒலிக்கின்ற பெரிய பாற்கடலிடத்துண்டாகிய திரண்ட விடத்தினுக்குப் பயந்து நீங்கிய செழிப்புள்ள தேவர்களைப்போல வலிமையுள்ள சேனைகள் பல பயந்தோடின. எ - று. (கக)

கவன நொந்திரிதல் கண்டு சினந்து
சிவன தன்பனுயர் தேரை நடத்தித்
தவரின் மின்பொரு சரம்பல பூட்டிக்
குவல யங்கழுமு கோரனை நேர்ந்தான்.

(இ-ள்.) சிவபெருமானுடைய அடியவணுகிய புட்பதந்தன் சேனைகளாணவை வருத்தியோடுதலைப்பார்த்துக் கோபங்கொண்டு பெரியதேரைநடத்தி வில்லினிடத்து மின்னலையொத்த பல பாணங்களைத் தொடுத்துப் பூமியிலுள்ளவர்களைக் கலக்குகின்ற கோரனென்னும் அரக்கனை யெதிர்த்தான். எ - று.

கழுமுதல் - கலக்குதல். (உ0)

எரியெ னக்குரிசி லேவிய கோலால்
வெருவி யக்கொடியன் மீட்டு மழன்று
முருகு டைத்தனது [illegible]யிலை வேலை
யுருமி னிற்குமு[illegible] யுய்த்தனன் மன்னோ.

(இ-ள்.) புட்பதந்தன் நெருப்புப்போலவிட்ட பாணங்களாலேபய[illegible] அந்தக்கொடியவனுகிய கோரன் மறுபடியும் கோபங்கொண்டு அழகுள்ள தன்னுடைய சூலாயுதத்தை இடிபோல[illegible] சத்தித்து [illegible]ட்பதந்தன்மீது செலுத்தினான். எ - று. (உக)

மூவி லைப்படையை மூதுணர் வேந்தோ
ரேவி னிற்கடிதி றுத்தலு மன்னோன்
றீவி ழித்துணை சிவந்தொரு பாரக்
கோவெ டுத்தெதிர் கொதித்து விடுத்தான்.

(இ-ள்.) மிகுந்த அறிவினையுடைய புட்பதந்தன் கோரன்விட்ட சூலாயுதத்தை ஒரு பாணத்தினாலே விரைவாகமுறித்தவுடனே அக்கோரன் நெருப்புபோல இரண்டு கண்களுஞ்சிவந்து ஒரு பெரியமலையையெடுத்துக் கோபங்கொண்டு புட்பதந்தனுக்கு நேராகவிட்டான். எ - று. (உஉ)

எறித டங்கிரி யெதிர்த்திட லோடு[illegible]
வறித லுங்கனக மாநகர் மன்செய்
பொறியு மிழ்ந்தவொரு புங்க மதிற்கா
ளெறிப டும்பரி செனும்படி நீத்தான்.

(இ-ள்.) வறுமையில்லாத கனகமாபுரத்தையாளுகின்றசுருதிகீர்த்தியரசனுடைய புத்திரனாகிய புட்பதந்தன், கோரனால் எறியப்பட்ட பெரிய மலையானது தனக்கெதிரேவந்தவுடனே,நெருப்புப்பொறியைக்கக்கிய பாணமொன்றினாலே காடுகளானவை யழிந்துண்டாந் தன்மைபோல அழித்தான். எ-று.

பொறைத கர்ந்தசெயல் கண்டு புழுங்கி
முறைத விர்ந்துள முரண்பெறு கோரன்
பிறைத வழ்ந்தவட மொன்று பிடுங்கி
யிறைய னும்படி யெதிர்ந்தன னம்மா.

(இ-ள்.) நல்லொழுக்கமில்லாதவனாகியவலிமைபெற்ற கோரனானவன், (புட்பதந்தனுடைய பாணத்தினாலே) மலையானது தூளாகிய தன்மையைப் பார்த்துக் கோபங்கொண்டு,பிறைதவழ்ந்த ஒரு ஆல்மரத்தைப்பிடுங்கி ஊழித்தீயென்று கண்டோர் சொல்லும்படி புட்பதந்தனை யெதிர்த்தான். எ-று.

தன்ம மற்றகிரு தன்செயல் கண்டு
பின்ம திக்கவிகை பெற்றருள் கோமான்
கொன்மு னைச்சுடுகொ டுஞ்சர மொன்றாற்
[illegible]ன்ம ரத்தையெழு [illegible] வெய்தான்.

(இ-ள்.) பூரண சந்திரன்போன்ற [illegible]டையினையுடைய புட்பதந்தன், தருமஞ் சிறிதுமில்லாத கோரனுடைய செய்கையைப்பார்த்து,சொல்லும்படி [illegible] கூர்மையும் வெப்பமுங் கொடுமையுமுள்ள ஒரு பாணத்தினாலே அக் [illegible] எறிந்த ஆலமரத்தை யெழுகின்ற புழுதியாகும்படியெய்தான். எ-று.

மற்றி ரண்டுகணை வாளிக டுண்டிக்
கற்றி [illegible]னை காங்க ளிரண்டு
மற்றி டும்படி யலைப்ப வவன்கோ
விற்றி டுந்தரு வெனத்தனி நின்றான்.

(இ-ள்.) புட்பதந்தன், பின்னும் இரண்டு பாணங்களைப் பிரயோகஞ்செய்து கோரனுடைய மலையின் தன்மையையொத்த இரண்டு கைகளையும்அறும்படி யழிக்க, அக்கோரனானவன் கிளைகள் முறிபட்ட மரமேபோலத் தனித்து நின்றான். எ-று. (உகூ)

கையி ரண்டுமறு தார்கிரு தன்சூன்
[illegible]மையு நொந்தகவல் வாயி னதிர்ந்தே
கொய்தி ளிங்கிவனை வென்மைகொ டானற்
பைய வென்றிடுவ லென்று படர்ந்தான்.

(இ-ள்.) இரண்டு கைகளும் அற்ற கரிய கோரனென்னும் இராக்கதன், கருப்பங்கொண்ட மேகமும் வருந்தியோடும்படி வாயினாலேயதட்டி, வலிமையுள்ள கால்களாலே விரைவாக இவ்விடத்திலே இப்புட்பதந்தனை மிதித்து மெல்ல வெற்றிகொள்வேனென்று புட்பதந்தனுக்குச் சமீபமாகச் சென்றான்.

அந்தி சாசர னடுந்திட லோடும்
வின்னி லாவுவடு மேவுறு தோளான்
வன்னி சூழ்கொடிய வாளிய தொன்றாற்
சென்னி பூமியில் விழும்படி செய்தான்.

(இ-ள்.) வில்லைத் தாங்குதலாலே விளங்குகின்ற தழும்பானது பொருந்திய தோள்களையுடைய புட்பதந்தன், அந்தக் கோரனென்னும் அரக்கன் தனக்குச் சமீபமாக வந்தவுடனே, நெருப்பானது சூழ்ந்த ஒரு கொடியபாணத்தினாலே அக்கோரனுடைய தலையானது பூமியில் விழும்படி அறுத்தான்.

அசனி யஞ்சுற வரக்க னதிர்த்தே
வசம ழிந்துபுவி வாய்விழ லோடு
மிசைபு கழ்ந்துசுர ரின்மலர் பெய்தார்
திசைக ளெங்குமிடர் தீர்ந்தன மாதோ.

(இ-ள்.) கோரனென்னும் இராக்கதன் இடிஅஞ்சும்படிச் சத்தித்துத் தன்வசங்கெட்டுப் பூமியிலே விழுந்தவுடனே, (புட்பதந்தனுடைய) கீர்த்தியைப் புகழ்ந்து தேவர்கள் இனிய மலர் மழையை வருஷித்தார்கள்; திக்குகளி லுள்ளவர்கள் யாவருந் துன்பம் நீங்கினார்கள். எ-று. (உகூ)

மந்த ரப்புய வலன்கெழு புட்ப
தந்த னக்களரி தன்னை யகன்று
நந்த லற்றொளிர்த னன்னக ரெய்திக்
கொந்த லர்த்தொடைகொள் கோயில் புகுந்தான்.

(இ-ள்.) மந்தரமலை போலுந் தோள்களையுடைய வெற்றிபொருந்திய புட்பதந்தன் அப்போர்க்களத்தை விட்டு நீங்கி, அழிதலில்லாமல் விளங்குகின்ற தன்னுடைய கனகமாபுரத்தையடைந்து, கொத்தாகிய மலரால் தொடுத்த மாலைகளைத் தொங்கக்கட்டிய அரண்மனையிற் சென்றான். எ-று. (௩0)

கோதை மாலைதூங்குகோயிலின் மகன்றன்
றாதை பாதமலர் தாழ்ந்து பணிந்து
வாவுசீர்கிருதன் மாய்ந்தன னென்ன
வோத வேயவ னுவந்திடர் தீர்ந்தான்.

(இ-ள்.) பூமாலை தொங்கக்கட்டிய இராசகிரகத்திலே பிரவேசித்த குற்றமில்லாத புட்பதந்தன், தன்னுடைய பிதாவாகிய சுருதிகீர்த்தியரசனுடைய மலர்போன்ற பாதங்களை வணங்கி, மிக்க துன்பஞ்செய்த கோரனென்னு மரக்கன் இறந்துவிட்டானென்று சொல்லவே அச் சுருதிகீர்த்தி யரசன் மனங்களித்துத் துன்பம் நீங்கினான். எ-று. (௩க)

கிருபை கூர்சுருதி கீர்த்திய தன்பின்
மருவு சீர்வொடன் மகன்கர சிந்தே

புரிய தேவியொ டிவக்கு தவக்தான்
புரிய வோரடவி புக்கன னன் மன்னே.

(இ-ள்.) கிருபையிகுந்த சருதிகீர்த்தியரசன், அதன் பின்னே பொருந்திய கீர்த்தியினைக்கொண்ட தன்னுமகனுகிய புட்பதந்தனுக்கு அரசநிலையைக் கொடுத்துத் தனக்கு உரிமையாகிய மனைவியுடனே மனமகிழ்ந்து தவஞ்செய்யும்படி ஒரு கானகத்திற் சென்ருன். எ - று. (ரு.உ.)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தாதையினுஞ் சுருதிமுறை தவற்ம லணையபுட்ப
தந்த மிவந்தன்
மேதைமதி யமைச்சர்புடை சூழவுல கனைத்துமின்ப
மிகக்கொண் டோங்க
வோதைநெடுங் கடற்படைக ளுடன்மலியத் திறைகொடுவந்
தொன்னர் தாழச்
சீதைபதி யெனக்கருணை திருந்துசெங்கோ லோச்சினிறை
சிறப்பி னுற்ருன்.

(இ-ள்.) இராசரீகத்தையேற்ற அப்புட்பதந்தவரசன் மநுமுறைவழுவாமல் தன் பிதாவாகிய சுருதிகீர்த்தியரசனைப் பார்க்கிலும் பேரறிவும் ஞாயமும் உள்ள மந்திரிகள் பக்கத்தில் சூழ்ந்திருக்கவும், உலகத்திலுள்ளவர்களெல்லாம் மிக்க சுகத்தைப்பெற்றுயரவும், பகைவர்கள் ஒலியுள்ள பெரிய கடல் போலுஞ் சேனைகளுடனே மிகவுங் கப்பங்கொண்டுவந்து கொடுத்து வணங்கவும், சீதையின் நாயகனுகிய இராமபிரானைப்போல கிருபையுடனே செம்மையாகிய இராசநீதியைச்செலுத்தி நிறைந்த சிறப்புடனே யெழுந்தருளியிருந்தான். எ - று. (ரு.௩.)

சந்தான கிர்த்தபுட்ப தந்தர ... ...
சனைக டாகத
மந்தாரை காவீர மாலதிநா கரிதா...
மகிழ்புன் னைகஞ்
சிந்தூர மயிலைவலம் புரியிதழி கடம்புவில்வஞ்
செருந்தி சாதி
பைந்தாது கமழ்மலர்ப ...லவினை...செறிந்தவெண்ணரில்
பட...மை செய்தே.

(இ-ள்.) சந்தானவிருக்ஷத்தை யொத்த புட்பதந்தவரசன் சிவபூசை செய்வதற்காக மந்தாரை - அலரி - சண்பகம் - குருக்கத்தி - முல்லை - மகிழ் - புன்னை - வெட்சி - இருவாட்சி - நந்தியாவர்த்தம் - கொன்றை - கடம்பு - வில்வம் - செருந்தி - சிறுசண்பகம் ... பசிய மகரந்தமணம் வீசுகின்ற

மலர்களும் பலவுமாகிய இவைகள் நெருங்கிய நந்தவனங்கள் எண்ணிலவற்றைச் செய்து. எ-று.

சந்தானம் - பஞ்சதருக்களிலொன்று. (கஅ)

அருளிலிங்கம் பதிஷ்டோரா யிரநிறுவித் தினங்கடொறு
மருச்சித் தேத்தித்
தெருளிலங்கு மெய்ஞ்ஞானச் சிவசரிதத் தெள்ளமுதஞ்
செவிவாய்த் தேக்கி
மருளகன்ற வெண்ணான்கு வகையறமும் புகழுமன்பு
மறுவில் சீரும்
பொருள்செறிந்த நயகுணமும் பொருந்தநெடு நிலவலயம்
புரக்கு நாளில்.

(இ-ள்.) திருவருளை இடமாகவுடைய சிவலிங்கம் பதினோராயிரஞ் ஸ்தாபித்து நாள்தோறும் அருச்சித்துத் தோத்திரஞ்செய்து, தெளிவுவிளங்குகின்ற வுண்மை ஞானமாகிய சிவசரித்திரமாகிய தெளிந்த அமுதத்தைக் காதினாலே யருந்தி, மயக்கமில்லாத முப்பத்திரண்டு பிரிவினைகளாகவுள்ள தருமங்களும் கீர்த்தியும் அன்பும் குற்றமில்லாத சிறப்பும் உண்மை மிகுந்த இனியகுணமும் பொருந்தப் பெரிய பூமியைக் காத்துவருகின்ற காலத்தில். எ-று. (க௯)

வந்தவொரு சிவனிசியின் மாமறையா கமநூலின்
வழியாற் புட்ப
தந்தரச பதியாதி சங்கரற்பூ சிப்பவன்னோன்
நயவு கூர்ந்து
பந்தநய களபவிளம் பயோதரமுக் கண்ணியிடப்
பாலுற் றோங்க
வெந்தவல கழும்புகழு மெழில்விடைமேற் கொண்டுமுன்ன
ரெதிர்ந்தா னன்றே.

(இ-ள்.) அக்காலத்தில் வந்த ஒரு சிவராத்திரியிலே பெருமையுள்ள வேதங்களிலும் ஆகமங்களிலும் சொல்லியவிதிப்படி, புட்பதந்தவரசன் பழமையாகிய சிவபெருமானைப்பூசனைசெய்ய. அப்பெருமான் கிருபை மிகுந்து அழகும் நன்மையும் பொருந்திய கலவைச்சாந்தையணிந்த இளமையாகிய முலைகளையுடைய பார்ப்பதிதேவியார் வாமபாகத்தி லெழுந்தருளியிருக்க, எவ்வுலகங்களும் புகழ்கின்ற அழகிய இடபவாகனத்தின்மேலே யெழுந்தருளி அப்புட்பதந்தவரசனுக் கெதிரே தோன்றினார். எ-று. (கசு)

அண்டசரா சரமுழுது மளித்தபரா னுமையொடுவந்
தருள லோடும்
கண்டபெரா வசனுகிக் கருத்துருக மெய்பொடிப்பக்
கடிது தாழ்ந்து

பண்டுதிரு மாலுமலர்ப் பங்கயனுந் தேடரிய
பாதா காளுந்
தொண்டுபுரி பவர்க்கதிக சுகந்தருகா ரணவெனமுற்
றெழுது நின்றான்.

(இ-ள்.) எவ்வுலகங்களையும், சரமும்-அசரமுமாகிய எவற்றையும் காத்தருளிய சிவபெருமான் பார்ப்பதிதேவியாருடன் யெழுந்தருளியவுடனே தரிசனஞ்செய்து பரவசனாகி மனமுருகவும், சரீரம் புளகிக்கவும் விரைவாக நமஸ்கரித்து, முற்காலத்திலே திருமாலும், தாமரைமலரில் வசிக்கின்ற பிரமனும் தேடுதற் கருமையாகிய திருவடிகளையுடையவனே! எக்காலமும் பணிவிடை செய்பவர்களுக்கு மிகுந்த இன்பத்தைக்கொடுக்கின்ற காரணனே! என்று முன்னே நமஸ்கரித்து நின்றான். எ-று. (௩௭)

போற்றுபுட்ப தந்தன்முகாம் புயநோக்கி வேண்டியவை
புனித வீண்டுச்
சாற்றுதியன் னவைதருது மெனப்பரம னுரைப்புவன்றேன்
றலைவ நீதான்
வீற்றிருக்குங் கயிலாய வெற்பினுக்கி யானுமென்றே
வியுகா டோறுந்
தேற்றுமன்பி னடைந்துனினைத் தெரிசிக்கும் படிக்கருணை
செய்தி யென்றான்.

(இ-ள்.) சிவபெருமான் தன்னை வணங்குகின்ற புட்பதந்தவரசனுடைய தாமரைமலர்போன்ற முகத்தைப்பார்த்து, பரிசுத்தமாகிய புட்பதந்தனே! நீ வேண்டியவரங்களை இப்பொழுது சொல்லக்கடவை; அவற்றைத் தருகின்றோமென்று சொல்லி, அப்புட்பதந்தன், முதல்வனே! தேவரீர் எழுந்தருளியிருக்கின்ற கயிலாயமலைக்கு நானும் என் மனைவியும் ஒவ்வொருநாளுந் தெளிவாகிய அன்புடனே சேர்ந்து தேவரீரைத் தரிசனஞ்செய்யும்படிக் கிருபைசெய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். எ-று. (௩௮)

பார்த்திபன்மற் றிதுவேண்டப் பரனுவகை கொடுவரமப்
படியே தந்து
சீர்த்திதிகழ் விடையொடுவிண் ணிடைமறைந்தான் பின்னரிவன்
றினங்க டோறு
மார்த்திதவிர் மனைவியுட னவர்பவுகொண் டியர்கயிலை
யணுகி யந்த
மூர்த்தியையு முலகளித்த முதல்வியையுந் தொழுதுவரு
முறைமை யுற்றான்.

(இ-ள்.) புட்பதந்தன் இவ்வரத்தை வேண்டாநிற்கச் சிவபெருமான் மகிழ்ச்சிகொண்டு அவ்வாறே வரங்கொடுத்து சிறப்பினையுடைய பிரகாசிக்கின்ற இடபவாகனத்தினுடனே ஆகாசத்திலே மறைந்தருளினார்; அதன் பின்பு இந்தப் புட்பதந்தன் நாள்தோறுந் துன்பமில்லாத மனைவியுடனே பலவகையாகிய மலர்களைக்கொண்டு உயர்ந்த கயிலாயமலையை யடைந்து அச்சிவபெருமானையும், உலகத்தையெல்லாம் பெற்றருளிய பார்ப்பதிதேவியையும் பணிந்துவருகின்ற முறையிலே இருந்தான். எ - று. (௬௯)

பற்பகலிப் படிவரவோ ரிரவினிற்பூ மலரலங்கல்
பலவுங் கொண்டு
கற்பழகு புயவேந்தன் கயிலையிற்சென் றெம்பெருமான்
கவுரி யோடு
மற்பமரு முவளகத்தா டிருப்பவது தெரிந்தொதுங்கி
யற்ற நோக்கி
நற்பசும்பொற் கிரணநவ மணிவாசற் செழும்படியி
னயந்து நின்றான்.

(இ-ள்.) கல்லுடனே பழகிய புயங்களையுடைய புட்பதந்தன் பல்நாள் இவ்விதமாகச் சென்றுகொண்டிருக்க, ஒருநா ளிராத்திரியிலே பூக்கள்விரிந்த மாலைகளைப் பலவாகக் கையிற்கொண்டு கயிலாயமலையையடைந்து, எமது சிவபெருமான் உமாதேவியாருடனே நேசம்பொருந்தும்படி அந்தப்புரத்தி லிருக்க அதனையறிந்து பக்கத்திலொதுங்கிச் சமையம்பார்த்து நல்ல பசுமையாகிய அழகிய காந்தியுள்ள ஒன்பது மணிகளாற்பதித்த செழுமையாகிய வாசற்படியிலே விரும்பிநின்றான். எ - று. (௭௰)

பாணியுதிப் கவுரிசிவன் பாதபங்கே ருகமலர்கள்
பணிந்து போற்றிக்
காணிருவர் காணரிய காரணயா வருமறியாக்
கதைதா னொன்று
பேணியெனக் கருளுதியென் னலுமவனங் கதுசெலவப்
பெற்றி தன்னை
வாணிலவு கடையுறைந்த மறைனர்பிரான் கேட்டுமிக
மகிழ்ந்துட் கொண்டான்.

(இ-ள்.) அக்காலத்திலே பார்ப்பதிதேவியார் சிவபெருமானுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைவணங்கித் தோத்திரஞ்செய்து, பிரமவிஷ்ணுக்களாகிய இருவரும் காணுதற்கருமையாகிய கடவுளே! தேவரீர் யாவருக்குந் தெரியாத கதையொன்று விரும்பி எனக்குச் சொல்லவேண்டுமென்று கேட்டவுடனே, சிவபெருமான் அப்பொழுது அக் கதையைச் சொல்லாநிற்க,

அப்பெருமையுள்ள கதையை பிரகாசம்பொருந்திய வாசற்படியிலேயிருந்த அரசர்க்கரசனாகிய புட்பதந்தன் கேட்டுக் களிப்புடனே மனத்தினுள்ளே யமைத்துக்கொண்டான்; எ - று.

காண் - இடைச்சொல். (சுக)

பின்னரந்த மன்னனிது சமையமல வெனக்கயிலைப்
பிறங்க னீங்கிக்
கன்னல்வயல் செறிகனக மாபுரத்திற் புகுந்துதன்பொற்
காமர் மாடந்
தன்னிலணை தரத்தேவ தத்தைநெடு நேரமெங்குச்
சார்ந்து போந்தா
யென்னமிகப் பிணங்கியொன்று மியம்பாது சந்தேகித்
திருந்தா ளன்றே.

(இ-ள்.) அதன்பின்பு அப்புட்பதந்தன், இக்காலம் சிவபெருமானை வணங்குங்கால மன்றென்று கயிலாயமலையிலிருந்து நீங்கி, கரும்புகள் விளைகின்ற வயல்கள் மிகுந்த கனகமாபுரத்தையடைந்து பொன்னாற் செய்யப்பட்ட தன்னுடைய அழகிய மனையினிடத்துச் செல்லாநிற்க, அதைக்கண்ட தேவதத்தை நெடுநேரமாக எவ்விடத்தைக் கருதிப்போனாயென்று மிகவும் கோபங்கொண்டு ஒன்றும் பேசாமல் ஐயங்கொண்டிருந்தாள். எ - று. (சுஉ)

ஏல்வையதிற் புட்பதந்த னேந்திழைநீ யையருமே
லீச னார்க்கு
மாலவமர்மென் மலர்கள்கொண்டு சென்றேனங் கன்கந்த
வாரந் தன்னிற்
சேவரியுண் சனநெடுங்கட் டேவிக்கோர் ரகசியமதை
செப்பி னன்யான்
மேல்வனைபொற் கடையிடைநின் றதைவினவி நெடுநேர
மேவி னேனால்.

(இ-ள்.) அப்பொழுது புட்பதந்தனென்பவன், தாங்கிய ஆபரணங்களையுடைய தேவதத்தையே! நீ சந்தேகப்படாதே; சிவபெருமானுக்குப் பிரியமிகுந்த மென்மையாகிய மலர்களைக்கொண்டு பூசிக்கும்பொருட்டுச்சென்றேன்; அக்கயிலையின்கண் (வாழும்) சிவபெருமான், அந்தப்புரத்தில் கெண்டைமீன் போலும் மையெழுதிய நீண்ட கண்களையுடைய பார்ப்பதிதேவியாருக்கு அருமையாகிய ஒரு கதையை உபதேசித்துக்கொண்டிருந்தனர்; அதன்பின்நான் அலங்காரமாகிய பொன்னாலாகிய கடைவாயிலினின்று அக்கதையைக்கேட்டு நெடுநேரந் தாமதித்தேன் என்றான். எ - று. (சுங)

சமையமிது வலவெனப்பின் னிவ்விடைத்தே னெனலுமந்தத்
தையல் கேளா
வுமையினொடு சிவபரம னுரைத்தவிரா சியத்தையெனக்
கோது கென்ன
வமைதிபெறு மதனையொழுங் காகவிரித் தெடுத்தவளுக்
கறிவித் தப்பா
லிமையளவு தனிலூட லினைத்தீர்த்தான் மதனினும்பொற்
பிலங்கு சீரான்.

(இ ள்.) மன்மதனைப் பார்க்கிலும் அழகு விளங்குகின்ற சிறப்பினை யுடைய புட்பதந்தன், அதன் பின்பு இது சமையமல்லவென்று இவ்விடம் வந்தேனென்று சொன்னவுடனே அந் தேவதத்தைகேட்டுப் பார்பதிதேவியாருடனே சிவபெருமான் சொல்லியருளிய இரகசியமாகிய கதையை யெனக்குச் சொல்லவேண்டுமென்று வினவ, மாட்சிமைபெற்ற அக்கதையை முறையாக விரித்தெடுத்துச்சொல்லி அதன் பின்பு இமைப்பொழுதுக்குள்ளே அத்தேவதத்தையினுடைய பிணக்கை நீக்கினான். எ-று. (சஉ)

மருட கலி னிருவருமென் மலரினணி பலகொண்டு
வளர்பே ரின்பம்
பெறுகயிலை வரையடைந்து பெருமானுக் கரசனவ
னெரிதுந் தந்தே
நறுமலரின பதம்பணிந்தா னவன்றேவி யுமையாட்கு
நல்கிப் போற்றி
யுறுமறைக ளால்வழுத்திப் பெண்மதியா லயிர்ப்பற்வான்
ருரைப்ப தானாள்.

(இ-ள்.) மருகாளிலே புட்பதந்தன் - தேவதத்தையாகிய இருவரும் மென்மையாகிய மலர்களும், இனிய ஆபரணங்களும் எடுத்துக்கொண்டு, மிகுந்த மோட்சபதவியைப்பெற்றுள்ள கயிலைமலையையடைந்து, புட்பதந்தனானவன் சிவபெருமானுக்கு அவைகளைக்கொடுத்து மணம்பொருந்திய தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கினான்; அப்புட்பதந்தனுடைய மனைவியானவள் பார்ப்பதிதேவியாருக்குக் கொடுத்து வணங்கிப் பொருந்தியவேதமந்திரங்களால் தோத்திரஞ்செய்து பெண்புத்தியினாலே சந்தேகப்படாமல் ஒன்று சொல்லத்தொடங்கினாள். எ-று. (சரு)

சுந்தரியோ ரரியகதை சொல்லுவல்யான் கேளெனத்தன்
றுணைவ னென்னாற்
பந்தவிர வினிலுணர்த்து மந்திரத்தை யுரைப்பவரா
பயந்த பாவை

கொந்தலொடு பரனைநண்ணித் தொழுதெவர்க்குந் தெரியாத
கொள்கைத் தென்றே
யந்தரணி தொறும்வழங்கு மதனையன்றெற் கோதினை நீ
யழகி தென்றாள்.

(இ-ள்.) பேரழகினையுடைய தேவியே! நான் அருமையாகிய ஒரு சரித்திரஞ்சொல்வேன் கேட்பாயாகவென்று தேவதத்தையானவள் தன்னுடைய அழகிய நாயகனாகிய புட்பதந்தன் நேற்றிரவிலே தனக்குச் சொல்லிய இரகசியமாகிய கதையைச் சொல்லாநிற்க, அதைக்கேட்ட இமயமலையரசன் பெற்ற பார்ப்பதிதேவியார் பெருங்கோபத்துடனே சிவபெருமானையடைந்து வணங்கி யாவர்க்குந்தெரியாத கொள்கையையுடையதென்று அழகிய பூமிதோறும் வழங்குகின்ற கதையை அன்றெனக்குச்சொன்னீர் இதுமிகவும் அழகாகவிருக்கின்றதென்று சொன்னார். எ - று. (...)

தேவிசிந்தைச் சினந்தெரிந்து சிவபரனிக் கதையினை யெவர்
செப்பக் கேட்டாய்
நவிளம்பு கெனலுமுமை தேவதத்தை சொன்னாளெனவவ
ளோத் தெந்தை
பூவியன்ற தருமவளை விளித்துனக்கியா ரிந்தவகை
புகன்றாரென்ன
மேவிவந்தித் தெழுந்துநின்று விதிவழியான் மறைந்தனே
விரித்தா ளன்றே.

(இ-ள்.) சிவபெருமான் பார்ப்பதிதேவியாருடைய மனத்திலுண்டாகிய கோபத்தைத்தெரிந்து, இந்தக்கதையை வேறுயார் சொல்லக்கேட்டனை நீ சொல்வாயாக வென்றவுடனே, தேவியாரானவர் தேவதத்தை சொன்னாளென்றுசொல்ல, அப்பொழுது சிவபெருமான், துதித்து மலர்களைக்கொடுக்கின்ற அத்தேவதத்தையை யழைத்து, உனக்கு யாவரிந்தவிதஞ் சொன்னாரென்று கேட்கச்சமீபமாகப்போய் (ஷாஷ்டாங்கமாக)நமஸ்கரித்தெழுந்துநின்று ஊழ்வழியினாலே இவ்வார்த்தையைச் சொல்லத்தொடங்கினாள். எ - று. ()

எத்தலமு மளித்தருள்வோ யெளியனண்ப னிடத்தறிந்தே
னெனவே தேவ
தத்தைசொலப் பரமனந்தப் புட்பதந்தன் றனைவிளித்துன்
றனுக்கா ரிந்த
வித்தகம துரைத்தனரென் னலுமனையா னடிபணிந்து
மென்கை கூப்பி
நித்தவரு மறைகளின்முன் னடியனுநிற் புரிந்துநின்று
நிகழ்த்து கின்றான்.

(இ-ள்.) எவ்வுலகங்களையுங்காக்கின்ற சிவபெருமானே! ஏழையாகிய யான் எனது நாயகனிடத்திற் கேட்டறிந்தேனென்று தேவதத்தை சொல்லாநிற்க, சிவபெருமான் அந்தப் புட்பதந்தனையழைத்து, உனக்கிந்த ஞானமாகிய கதையை யாவர் சொன்னாரென்று கேட்டவுடனே, அப்பரமசிவனுடைய பாதங்களைவணங்கி மெல்லிய கைகளைக்குவித்து நமஸ்கரித்து, அழிவில்லாத அருமையாகிய வேதங்களினாலே மிகவும் தோத்திரஞ்செய்து நின்று சொல்லுவான். எ-று. (௬௮)

எம்பெருமா னினதுபொற்றா ளிணைபரவ மலர்பலகொண்
டேளிய னேன்முற்
பம்பிரவிங் கடைந்தேனப் பொழுதிலந்தப் புரத்துமைக்குப்
பரிவு கூர்ந்து
வம்புறுமிக் கதைதனை நீ யெழுந் தவிரி வறக்கருணை
வழங்க மேலோர்
நம்பு மணிக் கடையினின்று யானதுகேட் டனனெனவே
நவிற்றி னானால்.

(இ-ள்.) எம்பெருமானே! தேவரீருடைய அழகிய ஸ்ரீ பாதங்களை வணங்கப் பல மலர்களைக்கொண்டு ஏழையாகிய நான் பரவிய கேற்றிரவிலே இங்குவந்தேன்; அப்பொழுது அந்தப்புரத்திலே தேவியாருக்கு விருப்பமிகுந்து புதுமையாகிய இக்கதையைத் தேவரீர் களிப்படைந்து விஸ்தாரக் கிருபையுடனே சொல்ல, பெரியோர்கள் விரும்புகின்ற அழகிய புறவாயிலினின்று விரும்பிக்கேட்டேனென்று புட்பதந்தன் சொன்னான். எ-று. (௬௯)

பத்தனிது சொலச்சினந்து பரனீயிக் கதையைவெளிப்
பகர்ந்த தீரான்
மத்தமன வேதாள வடிவதுபெற் றிடுகவுன்றன்
மனையாந் தேவ
தத்தையுங்கத் தபவுருவந் தாங்குகவென் றேசபித்து
சபித்த லோடும்
புத்திதடு மாறியன்னோற் போற்றியிந்த வினைதீரும்
பொழுதென் றென்றான்.

(இ-ள்.) சிவபெருமான், புட்பதந்தனாகிய அன்பன், இவ்வார்த்தையைச் சொன்னவுடனே கோபங்கொண்டு, நீ இக்கதையை வெளியே சொல்லிய தன்மையினாலே வெறியுள்ள மனத்தையுடைய வேதாளவுருவம் பெறக்கடவை; உன்னுடைய மனைவியாகிய தேவதத்தையுங் கழுதையுருவத்தையடையக்கடவள் என்று வினைவரச் சபித்தவுடனே, புட்பதந்தன் அறிவுநிலை தடுமாறி அச்சிவபெருமானைத் தோத்திரஞ்செய்து இச்சாபம் நீங்குங்காலமெப்பொழுதென்று கேட்டான். எ-று.

வேதாளம் - ஓர்வகைப் பைசாசம். (௭௦)

தொழும்பனங்கிவ் வாழுமனத் துயருழந்து வேண்டிநின்று
துதிப்ப வீச
னெழுங்கவிது நீயுமின்று யகியுமெதிர் பொழுதகறு
மதுவென் றெண்ணிற்
செழும்பொழிற்பா டலிபுரத்திற் றேவதத்தை போய்ப்பயனத்
திரியாய் மேவி
மழுங்கிரவெ லாமடக்கை வடிவுகொடு [illegible]
வதிகு வாளால்.

(இ-ள்.) [illegible] புட்பதந்தன் அக்கவிஞ்ஞரின் [illegible] மாக மனத்தில் துன்பமுற்றுச் சிவபெருமானை [illegible] த்திரஞ்செய்து நிற்க, சிவபெருமான் [illegible] இச்சாபமான து நீயும், உன்மனைவியும் [illegible] அப்படிச்சேர்வது எக்காலமென்று [illegible] சூழ்ந்த பாடலிபுரத்திலே [illegible] [illegible] பிரகாசமழுங்கிய இராப்பொழுதெல்லாம் [illegible] டிவங்கொண்டு நம்மைத் தோத்திரஞ்செய்து வசிப்பாள், எ-று. (௩௪)

அணைபசெழும் பாடலிமா புரத்திணுக்கோர் யோசனையா
மடவி தன்னிற்
சினைபரவு மொருவடமேற் [illegible] வகை யுருக்கொடுநீ
திகழ்வாய் பின்னர்க்
கனைமுரச விக்கிரமா தித்தனவ ணடைந்துனைநின்
காமர்த் தேவி
முனைமிசைவித் திடுவனன்று முடியுமிந்தச் சாபமென
மொழிந்தான் மாதோ.

(இ-ள்.) செழுமையாகிய அந்தப் பெரிய பாடலிபுரத் தக்கு [illegible] சனை தூரத்திலுள்ள சோலையி [illegible] கள்பரவிய ஓராலமரத்தின்மேல் [illegible] அலகை [illegible] கொண்டு நீ விளங்குவாய்; அதன்பின்பு [illegible] கையையு [illegible] விக்கிரமாதித்தனென்னும் அரசனானவன் அவ்விடம் [illegible] உன்னை நின்னுடைய அழகிய மனைவியாகிய தேவதத்தைமுன்னே [illegible] பான் அப்பொழுது இச்சாபம் நீங்குமென்று சிவபெருமான் சொல்லியருளி னார். எ-று. (௩௫)

தருபுட்பதந்தாவ தாரச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆ. சருக்கம் உ௫-க்கு பாடல் அ௯௨.

தேவாங்கதுலதேவி சௌடாம்பிகையம்மை சரணம்.

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

இருபத்துநான்காவது

உரங்கொள்வேதாள வுற்பவச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அந்தண ரினைய கூறு மனகரு தனைவ ணங்கி
யெந்தம துளத்தஞ் ஞான விருள்கெட வருவோய் புட்ப
தந்தன்வெம் மயலா யன்னோன் றலைவியத் திரியாய்ப் பாரில்
வந்தது மினியெங் கட்கு வழங்குகென் னலும்வ ழங்கும்.

(இ-ள்.) இப்படிப்பட்ட சரிதைகளைச்சொல்லிய பாவமில்லாத சூத புராணிகரை முனிவர்கள் வணங்கி எங்கள் மனத்தின்கண்ணுள்ள அஞ்ஞான விருள்கெடும்படி யெழுந்தருளியவரே! புட்பதந்தன் கொடிய பைசாசமாகி யும்,அவன் மனைவி கழுதையாகிப் பூமியில் வந்தவதரித்த கதையையும் இனி யெங்களுக்குச் சொல்லியருள்வீராக வென்று கேட்டவுடனே, அச் சூதபுரா ணிகர் சொல்லத்தொடங்கினர். எ-று.

மயல்—பசாசு. (க)

உட்பகை யாறு நீத்த வுணர்வினர் கேண்மி னந்தப்
புட்பதந் தனுக்கங் கீசன் புகன்றசொற் படிமுற் றன்னோன்
கொட்பனல் விழிவே தாள வுருக்கொடுக் கொடுங்கா னத்தில்
வட்பணை வடமே லெல்லா மயல்கட்கு மரசா யுற்றான்.

(இ-ள்.) காமமுதலாகிய உட்பகை ஆறையும் நீக்கிய அறிவையுடைய முனிவர்களே! கேட்பீர்களாக: அக்கயிலையினிடத்துச் சிவபெருமான் அப் புட்பதந்தனுக்குச் சொல்லியபடி அவன், சுழற்சியுடைய நெருப்புப்போன்ற கண்களையுடைய பைசாசவுருவங்கொண்டு, கொடிய காட்டிலே நெருங்கிய கிளைகளையுடைய ஆலமரத்தின்மேலே எல்லாப் பைசாசங்களுக்குந் தலைவனாகி வசித்தான். எ-று. (உ)

தத்தரி நெடுங்கட் பேதை தத்தையுங் கவுரி பங்க
னுத்தரப் படியே பின்பா டலிபுத்தி துற்றென் முற்று
மத்தரி வடிவாய்க் கங்கு லதனிற்சத் தருல மாதாய்
வித்தகமிகொள் விபஞ்சி வாசித் திபழ்ந்ற மேவு நாளில்.

(இ-ள்.) பாய்கின்ற இரேகைபொருந்திய நீண்டகண்களையுடைய தேவதத்தையென்பவளும்,பார்ப்பதிதேவியானா ஒருபாகத்தில் வைத்த சிவபெருமானுடைய உத்தரவின்படியே பின்னே பாடலிபுரத்தைச் சேர்ந்து பகல் முழுதும் கழுதைவடிவாகி, இரவினில் காந்தருவமகளாகிய ஞானத்தைக் கொண்ட வீணையைவாசித்து இவ்வகையாக விருக்கின்ற காலத்தில். எ - று. (ங)

உலகட்ங் கலுகின் றேத்த வுச்சினி புரத்தை யாளும்
விலகரு நீதிச் செங்கோல் விக்ரமா தித்த வேந்தன்
செலவுறு வனசஞ் சாரத் திறத்தினை விரும்பி யந்தப்
பலமணி மாட மோங்கும் பாடலி நகரிற் போந்தான்.

(இ-ள்.) உலகத்திலுள்ளவர்கள் யாவரும் தன்முன்னே நின்று துதிக்க உச்சினிபுரத்தை யாளுகின்ற நீங்குதலில்லாத நீதியாகிய செங்கோலையுடைய விக்கிரமாதித்தனென்னு மரசனானவன், வழக்கம்போலத் தான் போகின்ற வனசஞ்சாரத்தின் கூறுபாட்டைவிரும்பிப் பலமணிகளாற்செய்யப்பட்ட மாளிகைகள் மிகுந்த மேற்கூறிய அப்பாடலிநகரிற் சென்றான். எ - று. (ச)

விழைவினோ டடைந்த வந்த விக்ரமா தித்த னென்பான்
கழைசெறி வேலி பண்ணைக் காமர்பா டலிபு ரத்தை
மழைபொரு நிசியிற் சென்று வலம்முறை வரும்போ தங்கோர்
குழைதரு மலர்ப்பூஞ் சோலை யணித்தெனக் குறுகி னானல்.

(இ-ள்.) விருப்பத்துடனே பாடலிபுரத்தையடைந்த அவ் விக்கிரமாதித்தனென்பவன், வேலியாகக் கரும்புகள் நெருங்கிய வயல்கள் சூழ்ந்த அழகினையுடைய பாடலிபுரத்தை மேகம்போலு மிருண்ட இரவிலே வழியின்படிச் சுற்றிவரும்பொழுது, அவ்விடத்துத் தளிரையுடைய ஒருபூஞ்சோலையின் சமீபமாக நெருங்கினான். எ - று. (இ)

அராமமங் கதிலெல் லெல்லா மத்திரி யாகு மந்தத்
தராதலம் பரவு தேவ தத்தைகந் தருவ மாதா
யிராகவின் னிசையாழ் கல்லு மிரும்புநெக் குருக வாசித்
துராவுசீர் முடியி னன்சீ ரோதுமவ் வோசை கேட்டான்.

(இ-ள்.) பகற்காலமெல்லாங் கழுதையாகின்ற பூமியிலுள்ளோர் தோத்திரஞ்செய்கின்ற அத் தேவதத்தையானவள், விக்கிரமாதித்தன் வந்தடைந்த அச்சோலையிலே கந்தருவப்பெண்வடிவங்கொண்டு அன்புடனே இனிய இசையைச் செய்கின்ற வீணையைக் கல்லும் - இரும்பும் உள்ளுடைந்து உருகும்படி வாசித்து, பெருமானுடைய புகழைப் பாடுகின்ற அச்சந்தத்தை விக்கிரமாதித்த வரசன் செவிகளிற் கேட்டான். எ - று. (கூ)

வாருறு பொழில்வாய்க் கோட வதியிசை கேட்ட வேடு
மேருவி னுயர்தோ ளரனிம் மிடைதரு கங்குற் போதில்

யார்கொலின் கிவைவியற்று மவரீறி குதுகா மென்றே
ஏர்கெழு மனைய பாவை யிருக்குமவ் விடத்திற் சென்ருன்.

(இ-ள்.) மகாமேருபோலப் பருத்த தோள்களையுடைய விக்கிரமாதித்தன் கீர்த்திபொருந்திய அச்சோலையினிடத்து வீணைவாசிக்கின்ற ஓசையைக் கேட்டவுடனே, இருள் நிறைந்த இவ் விராக்காலத்தில் யாவர் இவ்வீணையை வாசிப்பவர் அதை நாம் தெரிந்துகொள்வோமென்று அழகுபொருந்திய அத் [illegible] விடத்திற் போய்ச் சேர்ந்தான். எ-று. (எ)

[illegible] திருான் றேவ தத்தைகே ரெய்தி நின்று
[illegible] மடந்தாய் நீயார் கருதுமின் னகர்யா துன்பே
[illegible] இல்வா ழிங்குவ திருப்ப தென்னை
[illegible] பனனு மந்த நன்னுத லினைய சொன்னள்.

(இ-ள்.) வீரத்தன்மையையுடைய விக்கிரமாதித்தவரசன் தேவதத்தையின்முன்னே சென்று நின்றுகொண்டு, முண்முருக்குமலர்போலும் இதழ்களையுடைய பெண்ணே! நீ யார்? உன்னைத்தக்க உன்னுடைய நகரம்யாது? உன்னை [illegible] இவ்விடமாக இவ்விட [illegible] யாது? நீ இவைகளைத் தெரியச் சொல்லக்கட [illegible] கேட்டவுடனே அத் [illegible] அதைச் சொல்லத்தொடங்கினாள்.

[illegible] (அ)

[illegible] சிந்து வேந்தாம் விருபாட்சன் புதல்வி யென்றன்
[illegible] தேவ தந்தை பிறங்குசீர்ப் புட்ப தந்த
[illegible] னாளசா பத்தா லனையன்மேவ தாள மாகி
[illegible] பலபேய்கள் வளரிருள் வனத்தி லுற்ருன்.

(இ-ள்.) வீரனே! நான் சிந்துதேசாதிபதியாகிய விருபாட்சனுடைய [illegible] தேவதத்தையாகும்; விளங்குகின்ற [illegible] நாயகன்; அப்புட்பதந்தன் பரமசிவனுடைய [illegible] கொண்டு மிகுந்த மிருகக்கூட்டங்களும், பலவாகிய பைசாசக்கூட்டங்களுமிருந்த இருண்ட காட்டில் வசிக்கின்ருன். எ-று. (கூ)

யானுநீள் பகற்போ தெல்லா மத்திரி வடிவாய் மேவி
[illegible] மிரவிற் கன்னி யுருக்கொடு வருந்தி யுற்றேன்
பானுநேர் கதிர்வை வேலெய் பண்டியார் பதியுந் திமேயன்
ருனுமோ ரிடஞ்சேர் வேலைத் தவிருமிச் சாப மாதோ.

(இ-ள்.) நானும் நீண்டபகற்காலமெல்லாம் கழுதையுருவாயிருந்து ஒப்புமைபொருந்திய இராக்காலத்திலே பெண்வடிவங்கொண்டு வருந்தியிருக்கி

ன்றேன்; சூரியனையொத்த காந்தியும், கூர்மையுமுள்ள வேலையுடைய குணத்தாலுயர்ந்த என்னுடைய கணவனும், கொடியவளாகிய நானும் ஓரிடஞ்சேருங்காலத்தில் இச்சாபம் நீங்கும். எ - று. (க0)

இருவரு மவ்வா றோர்பா லெதிர்ந்திட வியற்று தற்கு
விருதினி லுயர்ந்த வாய்மை விக்ரமா தித்த னிங்கு
வருபொழு தென்றோ விந்த வல்வினை தவிர்வ தென்றோ
தெரிகில மிவையெ லாமச் சிவனருள் செய்தி யன்றே.

(இ-ள்.) நாங்களிருவரும் அவ்வகையாக ஓரிடத்திலே சேரும்படிச் செய்வதற்கு வெற்றியினு லுயர்ந்த உண்மையையுடைய விக்கிரமாதித்தன் இவ்விடத்திலே வருங்காலமெப்பொழுதோ? இவ் வல்[illegible] தீவினை நீங்குவதென்றோ? நாம் தெரிந்தோமில்லை; இவைகளெல்லாம் அச் சிவபெருமானுடைய கிருபையின் செயலாகும். எ - று. (கக)

என்றுதன் வரலா றெல்லா மினிதெடுத் துரைத்[illegible]ப் பின்னர்
கன்றுரு கரத்தா ளக்கா வலன்[illegible]தனை நோக்கி
மன்றலந் தாரோய் யாரோ மன்னவர் [illegible]
முன்றல மெதுபேர் யாதிங் குற்றதென் னுரைத்தி யென்றாள்.

(இ-ள்.) வளையல்கள்பொருந்திய கைகளையுடைய தேவதத்தை தன்னுடைய சரித்திரமெல்லாம் இவ்வகையென்று [illegible]னருக்கெடுத்துச்சொல்லி, அதன்பின்பு அவ்வரசனுடைய முகத்தைப்பார்த்து, வாசனைபொருந்திய பூமாலையை யுடையவனே! நீ யாவன்? அரசர்களுக்கரசன்போலத்தோற்றுகின்றது; உன்னுடைய ஊர் யாது? பெயரென்ன? இவ்விடம் வந்த காரணம் யாது? இவைகளைச் சொல்வாயாகவென்றாள். எ - று.

'கன்றுறு கரத்தாள்' என்பதற்கு வீணை வாசித்தலால் கன்றிய கைகளையுடையவளெனினுமாம். (கஉ)

மாதர சிவைவி ளம்ப மன்னர்கோ னிரும்பூ தெய்திச்
சீதள வளகத் தாயுச் சினிபுர மதனில் வாழு
மேதகு சதுரு பாய விக்ரமா தித்தன் யானிங்
காதலன் றனைக்கண் டிங்கோர் கணத்தினிற் [illegible]ணர்வ லஞ்சேல்.

(இ-ள்.) பெண்களுக்கெல்லாம் நாயகியாகிய தேவதத்தை இவ்வகையாகச்சொல்ல, அரசர்க்கரசனாகிய விக்கிரமாதித்தன் ஆச்சரியமடைந்து, குளிர்ச்சிபொருந்திய கூந்தலையுடைய தேவதத்தையே! உச்சினிபுரத்தில் வாழ்கின்ற யாவரும் மதிக்கத்தக்க நான்குபாயங்களினும் வல்ல விக்கிரமாதித்தன்; நான் உனது நாயகனாகிய புட்பதந்தனைக்கண்டு ஒருகணப்பொழுதில் இவ்விடத்தில் கொண்டுவருவேன்; நீ பயப்படாதே யென்று சொல்லி. எ - று.

சதுருபாயமாவன:— சாமம்-தானம்-பேதம்-தண்டம் என்பனவாம்.

துயரினித் தவிரென் றந்தத் தோகைதன் மனத்தைத் தேற்றி
யயர்வறு திறல்கூர் வே[illegible]னணையளால் வழிக்கொண் டப்பாற்
பயனுறு பழனஞ் சூழ்ந்த பாடலி புரத்தை நீங்கி
யியல்பறு கொடுவே தாள மிருந்தவவ் விடத்தைச் சார்ந்தான்.

(இ-ள்.) தளர்ச்சியில்லாத வலிமைமிகுந்த வேலையுடைய விக்கிரமாதித்தன் இனித் துன்பம் நீங்கென்று அந்தத்தேவதத்தையுடைய மனத்தைத் தெளிவித்து, அவளால் வழிகாட்ட வறிந்து, பின்பு நீரையுடைய வயல்கள் சூழ்ந்த பாடலிபுரத்தைவிட்டு நீங்கி, நல்லொழுக்கமில்லாத கொடுமையுள்ள வேதாளமிருந்த அக்காட்டைச்சேர்ந்தான். எ - று. (கசு)

உ[illegible]கொள்வேதாள வுற்பவச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

[illegible]சருக்கம் உசு - க்கு பாடல் அஅசு.

தேவாங்கது[illegible] சவுடாம்பிகையம்மை செய்யதாள் துணை.

உ

[illegible]வமயம்.

சவுடாம்[illegible]கைசகாயம்.

இருபத்தைந்தாவது

வேதாளசாப விமோசனச்சருக்கம்.

என்னலு முனிவர் சூத வி[illegible]டியைத் தொழுது போற்றி
மின்னகு மகுடச் [illegible]செங்கோல் விக்ரமா தித்த னென்னு
மன்னவர் மன்ன னாலவ் வல்வினை புட்ப தந்தன்
முன்னகல் கதையு நன்கு மொழிகென மொழிவ தானன்.

(இ-ள்.) இப்படியென்று சொல்லக்கேட்ட முனிவர்கள், சூதமுனிவரை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து, பிரகாசத்தினாலே விளங்குகின்ற முடியையணிந்த செங்கோலையுடைய விக்கிரமாதித்தனென்கின்ற அரசர்க்கரசனாலே புட்பதந்தனுடைய அவ் வலிய சாபமானது முன்னே நீக்கிய சரித்திரமும் நன்றாகச் சொல்வீராகவென்று கேட்க அந்தச் சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார். எ - று. (க)

மிடைதரு வடவி சார்ந்த வேந்தனத் திறல்வே தாள
முடைகெழு பெரும்பேழ் வாயு முடிவெழு வளிநேர் மூச்சுங்
கடையனல் விழியு நீண்ட கதிர்ப்பிறை யெயிறுந் தோன்றச்
சடைபிணை தொறுஞ்சி மிழ்த்தோர் தனிவடத் திருப்பக் கண்டான்.

(இ-ள்.) விருட்சங்கள்நெருங்கிய காட்டையடைந்தவிக்கிரமாதித்தன் அவ் வலிமையுடைய வேதாளமானது புலால்மணம் பொருந்திய பெரிய பிள வுபட்ட வாயும், உகாந்தகாலத்தி லுண்டாகின்ற காற்றேபோன்ற சுவாசமும், வடவாமுகாக்கினி போன்ற க[illegible]களும், நீண்ட காந்தியையுடைய பிறை போன்ற வக்கிரதந்தங்களும் விளங்க, சடையா[illegible] து பின்னல்கள்தோறும் கட்டிக்கொண்டு ஒப்பில்லாத ஒரு ஆலமரத்திலிருக்கக் கண்[illegible]டான். எ-று. (௨)

காண்டலுங் கலங்கா வீரன் கடிதினத் தருவி னேறி
யாண்டம ரலகை வேந்தை யதன்மவு லிகளால் வீக்கி
மீண்டதி னிழிந்து சென்னி மீதுறத் தாங்கிச் செம்பொற்
பூண்டகு முலையாள் வைகும் பொழிலினை நோக்கிச் சென்றான்.

(இ-ள்.) ஒன்றுக்குமஞ்சாத வீரனாகிய விக்கிரமாதித்தன் அவ்வேதாள த்தைக் கண்டவுடனே விரைவாக அவ் வாலமரத்தின்மேலேறி, அதன்மே லிருந்த பைசாசங்களுக்கெல்லாந் தலைமையாகிய வேதாள வரசை அதனு டைய சடைகளாற் கட்டித் திரும்பி அம்மரத்[illegible]னின்று மிறங்கித் தலையிலே யதனைச் சுமந்துகொண்டு செம்பொன்னாபரண[illegible]ங்களையணிந்த மேன்மையாகிய முலைகளையுடைய தேவதத்தைவசிக்கின்[illegible] சோலையை நோக்கிச்சென்றான்.

சுமந்துசெல் வேந்தை நோக்கிச் சுழ[illegible]விழிப் பேழ்வாய் மண்ணை
கமந்தரு திறலோ யானோர் காதைக[illegible]லக் காதைக்
கமைந்துள பொருணீ சொல்லா யாகினுன் றலைசில் லாமென்
றிமம்படு திங்கட் டுண்ட வெயிற்றுவாய் திறந்தி சைக்கும்.

(இ-ள்.) சுழல்கின்ற கண்களும், பிளவுபட்ட வாயையு முடைய பசா சானது, தன்னைத்தலையிலே யெடுத்துக்கொண்டு போகின்ற விக்கிரமாதித்த வரசனைப்பார்த்து, நிறைவாகியவல்லமை[illegible]யுடையவனே! நானொருகதை சொல்லுவேன் அக்கதையிற் பொருந்தியுள்ள தாற்பரியத்தை நீ சொல்லாவி டில் உன்னுடைய தலை பொடியாகு மென்று குளிர்ச்சிபொருந்திய சந்திர[illegible] டைய் துண்டம்போன்ற பற்களையுடைய வாயைத் திறந்து அக்காதை[illegible]யைச் சொல்லும். எ-று. (௩)

மித்திர நிகர்வே லோய்முன் விசாலமா புரியை யாளுஞ்
சத்திய வாதி யென்னுந் தராபதி தவத்தின் சீராற்
பத்திரி நெடு[illegible] செவ்வாய்ப் பகர்பது மாவ திப்பேர்ப்
புத்திரி யொருத்தி தோன்றிப் புகழ்பெற வளர்ந்த ளன்றே.

(இ-ள்.) சூரியனையொத்த காந்தியையுடைய வேலையேந்தியவரசனே! முன்காலத்திலே விசாலமாபுரி என்னும் பட்டணத்தை யாளுகின்ற சத்திய வாதி என்னும் அரசன் தவஞ்செய்தபலத்தினலே அம்புபோன்ற நீண்ட கண்களையும், சிவந்த வாயையுமுடைய யாவராலும் புகழ்ந்துசொல்லப்பட்ட பதுமாவதி என்னும் பெயரையுடைய ஒருபெண்பிறந்து கீர்த்திபெற வளர்ந்தாள்.

புதல்விதன் பருவ நோக்கிப் புரவலன் முறைகள் யாவு
மிதமுறா யமச்ச னென்னு நீதிகோ விதனைக் கூவி
மதர்பெறு மதியோய் நீநம் மங்கைமணத்திற் கேற்கு
மிதமுறு தலைவற் றேடி [illegible] றருதி யென்றான்.

(இ-ள்.) சத்தியவாதியரசன் தன் புத்திரியினுடைய யவ்வனத்தை யறிந்து, செங்கோல்முறைகளை யெல்லாம் நாள்தோறும் ஆராய்ந்துரைக்கின்ற மந்திரியென்று சொல்லத்தக்க நீதிகோவிதனை அழைத்து, நிறைவு பெற்ற புத்தியையுடையவனே! நீ நம்முடைய பெண்ணாகிய பதுமாவதியினுடைய விவாகத்துக்குத்தக்க நன்மைபொருந்திய நாயகனைத்தேடி இவ்விடத்தில் கொண்டுவரக்கடவையென்று சொன்னான். எ - று. (௯)

அறிவுடை யமைச்சற் கிவ்வா றருளிய தன்றிப் பின்னர்
நெறிபெறு புரோகி தற்கு நெடுந்தவத் தினிற்று னீன்ற
சிறியவர் தமக்கு மக்கச் செய்தியே செப்பி யுறறான்
றறியடு [illegible] சத்திய வாதி யென்பான்.

(இ-ள்.) கட்டுத்தறியை முறிக்கின்ற மதத்தினைவாய்ந்த யானைப்படைகளையுடைய சத்தியவாதி என்னும் அரசன், கல்வியறிவையுடைய மந்திரிக்கு இவ்வாறு சொன்னதல்லாமல் மறுபடியும் சன்மார்க்கமுள்ள புரோகிதனுக்கும், பெரிய தவத்தினலே தான் பெற்ற பிள்ளைகளுக்கும் அவ்விதமே சொல்லியிருந்தான். ஏ-று.

புரோகிதன் - அரசர்க்குரிய ஐந்துகூட்டத்தாரி லொருவனும், வருங்காரியஞ்சொல்வானும், இருத்தியஞ்செய்வானு மாவான். (௭)

[illegible] தரு மதிவல் [illegible] நிசபுரோ கிதனுந் தூய
[illegible] யரும் வேறு வேறு தத்தம வுளத்திற் கேற்ப
[illegible] வுறு மகுட வேந்தர் மைந்தரோர் மூவர் தம்மை
[illegible] யபெண் மன்ற லோலை யனுப்பியர் கழைத்திட் டாரால்.

(இ-ள்.) வருங்காலத்தில் நடப்பவைகளை ஆராய்ந்து சொல்லவல்ல மந்திரியும், உண்மையையறிந்த புரோகிதனும், பரிசுத்தராகிய பிள்ளைகளும் ஒருவரையொருவரறியாதபடி தங்கள் தங்கள் மனத்திற்குத்தக்கவாறு, சூட்டப்பட்ட முடியையுடைய இராசபுத்திரர்கள் மூவரை அப்பதுமாவதியினுடைய விவாகவேலையையனுப்பி அவ்விசாலமாபுரிக்கண் அழைத்தார்கள்.

மகிழ்பது மாவ திப்பேர் மடந்தைதன் வதுவை வேட்டு
முகில்பொரு தடநெ டுங்கை மூவிளங் குமர ரும்பொன்
மிகுகதிர் பரப்பு மாட விசாலமா புரி லன்று
தருபொரு ளனைத்து மீட்டித் தாமினி தடைந்தார் மாதோ.

(இ-ள்.) ஈகையால் மேகத்தையொத்த விசாலமாகிய நீண்ட கைகளையுடைய மூன்றரசபுத்திரர்களும், யாவரும் மகிழ்கின்ற பதுமாவதியென்னும் பெயரையுடைய பெண்ணினது கலியாணத்தைவிரும்பி, பொன்னாற்செய்யப்பட்டு மிகுந்த காந்தியைப்பரப்புகின்ற மாளிகைகளையுடைய விசாலமாபுரியிலே அப்பொழுதே விவாகத்துக்குவேண்டிய பொருள்கள் யாவுஞ் சேகரித்துக்கொண்டு இனிதாகவந்து சேர்ந்தார்கள். எ - று. (கூ)

தாவளர் சமர வைவேற் சத்திய வாதி நந்தம்
பூவலர் குழற்க ருங்கட் பேதல்விதன் வதுவை வேட்டு
மூவரிங் கடைந்தார் யார்க்கு முறையின மளிப்ப தென்னு
மோவறு கலக்கத் தோடு முற்றன னுற்ற வேலை.

(இ-ள்.) வலிமைவளர்கின்ற போர்செய்தற்குரிய கூர்மைபொருந்திய வேலையுடைய சத்தியவாதியரசன், நம்முடைய மலர்போன்று விரிந்த கூந்தலையும், கருமைபொருந்திய கண்களையுமுடைய பெண்ணினது விவாகத்தை விரும்பி மூன்றுமன்னர்கள் இங்குவந்தார்கள்; இவர்களில் யாவர்க்குக் கிரமமாக நாம் பெண்ணைக் கொடுப்பதென்று நீக்கமில்லாத மனக்குழப்பத்துடனேயிருந்தான்; அப்படியிருக்கின்றகாலத்தில். எ - று. (௧௦)

ஆங்கவன் மனையா ளூர்ந்த னண்ணலைமைத் தனையோர் தூதாற்
றேங்கம ழோதி நந்தஞ் சிறுமியை யுனக்கே யீது
மீங்கதி விரைவி னீவர் தெய்துமென் றழைப்ப வன்னோ
னேங்கணி மணக்கோ லத்தி னேடுமந் நகர்சென் றுற்றான்.

(இ-ள்.) அந்தச் சத்தியவாதியரசனுடைய மனைவியும் ஒரு தூதுவனால்-வாசனைவீசுகின்ற கூந்தலையுடைய வெங்கள் பெண்ணை உனக்கே விவாகஞ்செய்து கொடுப்போம்; நீ இவ்விடத்து மிகவுஞ் சீக்கிரமாகவரக்கடவை யென்று தன்னுடைய தமையன் புத்திரனை யழைக்க அவன் மிகுந்த அழகிய கலியாணகோலத்துடனே அவ் விசாலமாபுரியையடைந்தான். எ - று.

செய்திமற் றிவைய னைத்துந் தெரிந்துசத் தியவா திப்பே
ரெய்திய கிருபர் கோன்றன் னில்லவ டன்னை நோக்கி
மைதவழ் குழலாய் நந்த மடந்தைதன் மணத்தை நாடி
மொய்தரு வேந்த ரிங்கு மூவர்சார்ந் திருந்தா ரன்றோ.

(இ-ள்.) சத்தியவாதி என்னும் பெயரையுடைய அரசர்க்கரசன் இச்செய்தியனைத்துந் தெரிந்து தன் மனைவியைப்பார்த்துக் கருமைபொருந்திய

கூந்தலையுடையவளே! நம்முடைய பெண்ணின் விவாகத்தைவிரும்பிப் போ வாச்செய்கின்ற அரசர்களாவோர் இவ்விடத்து வந்திருக்கின்றாரல்லவா. எ - று.

அணையுமம் மூவர் தம்முள் யார்க்குநம் மடந்தை தன்னை
மணமுற வருள்வ தென்ன வருந்துமென் கருத்து ணர்ந்துந்
துணைபெறு நினது தம்முன் சுதனையு மழைத்தா யீண்டு[தான்.
குணமிலா விதற்கிஃது செய்வ தெனக்கொதி கொதித்து நொந்

(இ-ள்.) வந்த அவ்வரசபுத்திரர்மூவருக்குள் யாருக்கு நம்முடைய பெண்ணை விவாகஞ்செய்துகொடுப்பதென்று வருந்துகின்ற என்னுடைய நினைவை யறிந்திருந்தும், உதவிபெற்ற உன்னுடைய தமையன் மைந்தனை யும் கலியாணத்தின்பொருட்டு இங்கே அழைத்தனை குணமில்லாத இக்காரியத் திற்கென்னசெய்கிறதென்று மிகவுங் கோபித்து விருந்தினன், எ - று. (கங)

கொண்கனிவ் வாறு சீற்றங் கோடலு மனைவி நந்தம்
பெண்கொடி தனையென் முன்னோன் பெற்றருள் மைந்த னுக்கே
கண்களி கூர வின்று கடிமணம் புரிவ தன்றி
பெண்கொழ பிறர்க்க ளிப்பி னென்னுயிர் விடுவ லென்றாள்.

(இ-ள்.) நாயகன் இவ்வகையாகக்கோபங்கொண்டு சொல்லியவுடனே மனைவியானவள் நாயகனைப்பார்த்து, நம்முடைய கொடிபோல்வாளாகிய பெ ண்ணை என்னுடைய தமையன்பெற்ற குமாரனுக்கு கண்கள்கண்டு களிப்புமிகு ம்படி இன்றே கலியாணஞ்செய்து கொடுப்பதல்லாமல், யாரோவருகி கருதுகி ன்ற அயலார்க்கு விவாகஞ்செய்து கொடுத்தால் என்னுடைய பிராணனை விடு வேனென்று சொன்னாள். எ - று. (கச)

காதல்கூர் மனைவி யிவ்வா கழறலுங் கலுழ்ந்து மன்னன்
மாதர்வா ணகையா யுன்றன் மனப்படி முடித்து நாமென்
றோதியாங் கவள்கு றிப்பி னுற்றன னவற்றை யெல்லா
மாதியே வதுவை வேட்டங் கடைந்தமூ வருமு ணர்ந்தார்.

(இ-ள்.) அவ்வேந்ததியரசன், ஆசைமிகுந்த தன்மனைவியானவள் இவ் வகையாகிய சொற்களைச் சொன்னவுடனே மனங்கலங்கி, அழகிய ஒளிபொ ருந்திய பல்வரிசையையுடைய பெண்ணே! உன்னுடைய மனத்தின்படியே நாம் விவாகஞ்செய்து முடிப்போமென்றுசொல்லி அம்மனைவியினுடைய எண் ணத்தின்படியே யிருந்தான்; அதற்குமுன்னமே அப் பெண்ணின் விவாகத் தைவிரும்பி அவ்விசாலமாபுரியில் வந்திருந்த மூன்றரசபுத்திரர்களும் அந்த விஷயங்களையெல்லாம் அறிந்துகொண்டார்கள். எ - று. (கரு)

மன்றலை விரும்பி முன்ட வந்தமூ வரும்போய்ச் சீறி
யன்றெனம லிதி னிற்பெண் ணளித்துமென் றழைத்தி ருத்திப்

பின்றைமற் றொருவற் கீயப் பேசலாற் போரி லெம்மை
வென்றதற் பின்மு டித்தி யெனவவ்வே [illegible]காமிவி ரித்தார்.

(இ-ள்.) பதுமாவதியினுடைய விவாக[illegible]தவிரும்பி முன்னமே வந்த மூன்றரசபுத்திரரும் சத்தியவாதி யரசனிடஞ்சென்று கோபங்கொண்டு, எங்களை முன்னே பெண்ணைவிவாகஞ்செய்து கொடுக்கின்றேமென்று வலுவிலே யழைத்திருக்கச்செய்து, பின்பு வேறொருவனுக்கு விவாகஞ்செய்து கொடுக்கப்பேசுதலினாலே போர்செய்தெங்களைச் செய்ததப்பிறகு குறித்தவனுக்கு மணமுடிக்கக் கடவையென்று அவ்வரசனுடனே யெடுத்துச்சொன்னார்கள். எ-று.

மூற்படு மூவர் தாமு [illegible]ரண்செய வுருதி யென்னுஞ்
சொற்பகர் தலுமவ் வேந்தன் றுணுக்கென நடுக்க மெய்திக்
கொற்பட ரகற்று நீதி கோவிதன் றனைய ழைத்துத்
தற்பது மச்செவ் வாய்பூத் திவையெலாஞ் சாற்றி னானல்.

(இ-ள்.) அந்தச் சத்தியவாதியரசன், தன்முன்வந்த மூன் றரசபுத்திரரும் போர்செய்ய வரக்கடவையென்கின்ற வார்த்தையைச் சொன்னவுடனே துணுக்[illegible]றுடல் நடுக்கமடைந்து, வருத்துகின்ற துன்பத்தை நீக்கும்படியாகிய நீதிகோவிதன் என்னு[illegible]மந்திரியை யழைத்துத் தன்னுடைய தாமரைமலர்போன்ற சிவந்தவாயைத் திறந்து நடந்த காரியங்களையெல்லாஞ் சொன்னான். எ-று. (கஎ)

துணுக்கெனவ்-அச்சக்குறிப்பு.

தண்ணளி தழைத்த செங்கோற் சத்திய வாதி யென்னு
மண்ணவு [illegible]கி யன்ன தறைந்து மமச்ச னைய
வெண்ணலை யிதற்கோர் தந்துண் [illegible]வனெனி லெல்வருங் காணக்
கண்ணகல் கொடுந்தக் குண்டடங் கழிதினென் றமைத்து மாதோ.

(இ-ள்.) குளிர்ந்த கிருபை மிகுந்த செங்கோலையுடைய சத்தியவாதி யென்னுமரசனானவன் மனமயக்கங் கொண்டு இவ்வார்த்தைகளைச்சொன்ன வுடனே நீதிகோவிதனென்னும் மந்திரியானவன், ஐயனே! நீயாதொன்று மெ[illegible] [illegible]ஞ்சதே இவர்களைத்தாமே போம்படிச்செய்வதற்கு [illegible]மண்டு; அஃதென்னவெனில், யாவருங்காணும்படி விசாலமாகிய கொடிய [illegible]ட்டத்தைவினாவாக் கொன்று வளர்த்து. எ-று. (கஅ)

கங்குல வமுத மன்ன நாண்மலர்க் குழலி தன்னைப்
பொங்குறு கனற்குண் டத்தின் புறத்தினி லிருத்தி
பிங்கிதி னிழிந்து வந்தோ [illegible]வெடனக் குரிய ரென்னி
லங்குறை நால்வர் தாமு ம[illegible] தகல்வ ரென்றான்.

(இ-ள்) நம்முடைய மேன்மையாகிய அமுதத்தை யொத்த புதிய மலர்மாலையை யணிந்த கூந்தலையுடைய பதுமாவதியைப் பொலிகின்ற அக்

கினிகுண்டத்தின் பக்கத்தில் இனிதாக விருக்கச்செய்து, இவ்விடத்தில் இவ்வக்கினிகுண்டத்தி[illegible] இறங்[illegible] வருபவர்கள் இந்தப்பெண்ணுக்குரிய நாயகராவார்களென்று சொன்னால் [illegible]விடத்து வசிக்கின்ற நால்வரும் மனந்தடுமாறி நீங்கிப்போவார்களென்று சொன்னான். எ - று. (கக)

ஆய்வுறு மமைச்ச னின்ன வறையவிஃ தமையு மென்றத்
தேய்வினற் புகழா னங்கட் சிலர்தமை விளித்து நீவி
ரேயெனு மளவை முன்ன ரிப்பெரும் [illegible]பி னூடு
தீயழற் குண்ட மொன்று திறம்பெற வளர்த்து மென்றான்.

(இ-ள்.) வருங்காரியங்களை ஆராய்கின்ற நீதிகோவிதனாகிய மந்திரியானவன் இவ்வார்த்தைகளைச் சொல்லக்கேட்டு, இது பொருந்துமென்று அந்தக்குறைதலில்லாத நல்ல கீர்த்தியையுடைய சத்தியவாதியரசன், அவ்விடத்துச் சில ஏவலாளரை யழைத்து நீங்கள் ஏ என்னும் காலத்துக்குள்ளே இந்தப்பெரியவிடத்திலே ஒரு தீக்குண்டத்தைத் திறமைபெறும்படி யுண்டாக்குவீர்களென்று சொன்னான், எ - று.

ஏ என்பது காலநுட்பத்தை யுணர்த்தும் இடைச்சொ[illegible]ல். பதி-ஊரொ ரொனினுமாம். (உ0)

பரிசன ரரச னின்ன பகரான் றெனவ ணங்கி
விரிதரு பொழில்சூ ழ்ந்த விசாலமா புரத்தி னூடு
வரியிடை யமர்ந்த சோதி வடவையோ வெனவ யிர்ப்ப
வெரிகனற் குண்ட மொன்று வளர்த்தன [illegible]மாதேர்.

(இ-ள்.) சத்தியவாதி[illegible]ரசனானவன் இவ்[illegible]ார்த்தைகளைச் சொல்லவே ஏவலாளர்கள் நல்லதெ[illegible]று [illegible]ணங்கி, விரிந்த சோலைகள்சூழ்ந்த விசாலமாபுரியினிடத்துச் சமுத்திரத்தி[illegible] மத்[illegible]லே தங்கிய வடவாமுகாக்கினியோவென்று கண்டோர் சந்தேகி[illegible]கும்படி யெரிகின்ற ஒரு அக்கினிகுண்டத்தை இமைப்பொழுதில் உண்டாக்கினார்கள். [illegible] - று. (உக)

வேறு.

வலிகெழுசத் தியவாதி மணங்குறித்தங் கடைந்துளநால் வரையு
மின்பம்,பெ[illegible]வி[illegible]ரி தழைத்ததன்பி[illegible]ன் புதல்விதனைச் சிகைவி[illegible]ம்பு
பொருந்த வோங்கு, மலிநெடுங்குண் [illegible]த்தினரு கிருத்தியிதி னிழிக்து
[illegible]தோர் [illegible]பாவ[illegible]னும்,குலிகமணிச் சி[illegible]மிழ்முலையிக் கோதைதனக் குரி
யனெனக் கூறி னானால்.

(இ-ள்.) வலிமைபொரு[illegible]ந்திய [illegible]த்தியவாதியரசனானவன், விவாகத்தை யுத்தேசித்து அவ்விசாலமாபுரி[illegible]யை ய[illegible]டைந்திருக்கின்ற நால்வரையும் இன்பமாக விளங்க [illegible]ன்றழைத்து; [illegible]பின்னே தன் புத்திரியாகிய பதுமாவதி

யைக் கொழுந்தானது ஆகாசத்தைப் பொருந்த வுயர்ந்த பெரிய அக்கினிக் குண்டத்தின் பக்கத்திலே யிருக்கச்செய்து இந்தக்குண்டத்திலே யிறங்கி வருபவர் யாவராயினும் குங்கிலியச் செப்புப்போலும் அழகிய முலைகளையுடைய இப்பெண்ணுக்குரிய நாயகராவார்கள் என்று சொன்னான். எ - று. (உஉ)

எத்திசையும் புகழரச னிதுபகரச் சிகைபரப்பு மெரிக்குண் டத்தா, டத்தகைய நால்வர்களு மகங்கலங்கா திழிந்துகனை யதுசென்றேறித், தத்தைநிகர் மொழிக்களப தனப்பதுமா வதிமலர்க்கைத் தலங்கள் பற்றி, முத்தமணி முறுவலிவ ளெனக்குனக்கென் றீர்த்துமிக முரண்கொண் டாரால்.

(இ-ள்.) எந்தத்திசைகளி லுள்ளவர்களும் புகழும்படியாகிய சத்தியவாதியரசன் இவ்வார்த்தையைச் சொல்லவே, அந்த மேன்மையுடைய நால்வரும் மனங்கலங்காதபடிச் சுவாலையைப் பரப்புகின்ற அக்கினிகுண்டத்திலே யிறங்கிக் கனாவந்தேறி, கிள்ளைபோலும் மொழியையும், கலவைச்சாந்தை யணிந்த முலைகளையுமுடைய பதுமாவதியினது மலர்போன்ற கைகளைப் பிடித்துக் கொண்டு, முத்துக்கள்போலும் அழகிய பல்வரிசைகளையுடைய இப்பெண்ணானவள் எனக்குமனைவி-உனக்குமனைவி யென்று சொல்லித் தங்கள்தங்களிட மிழுத்துப்போர்செய்துகொண்டார்கள். எ - று. (உங)

பற்றியந்த நால்வருமிப் படிவருத்தஞ் செயப்பதுமா வதியென்றேது, முற்றிழைமென் முலைவலிதை யாற்றாது மதிதளர்ந்து முடுகியோடி, யெற்றிகழு மனற்குண்டத் திடைவீழ்ந்தா ளவர்களிலோ ரேந்தலானு, மற்றிவடுஞ் சியபினிருக் கெவனென்னென் றுடன்குதித்து மாய்ந்தா னன்றே.

(இ-ள்.) தொழில் முடிந்த ஆபரணங்களை யணிந்த மென்மையாகிய முலைகளையுடைய பதுமாவதியென்று சொல்லுகின்ற பெண்ணானவள், அந்த நால்வரும் பிடித்து இவ்வாறு வருத்தஞ்செய்வதற்குச் சகியாமல் அறிவு கலங்கி விரைந்தோடி காந்திவிளங்குகின்ற அக்கினிக்குழியிலே விழுந்தாள். அந்த நால்வர்களில் ஒரு அரசன் இப் பெண் இறந்துபோனபிறகு யாமிருத்தலால் யாது பிரயோசனமென்று அவளுடனே அந்தக்கனற்குழியிலே வீழ்ந்து இறந்துபோனான். எ - று. (உச)

அத்துயர்கண் டழுங்கிமற்றை மூவர்களி லொருவனெழுந் தீனைத்து நீத்து, மெத்துபல தேசசஞ்சா ரத்தினடந் தனனொருவன் மேவியங் கெவ்வினன், றுத்தமன் ஞானசித் தலநோக்கிச் சென்றனன்பின் னொருவ னுங்கே, சித்திமட மொன்றமைத்துச் செழுமலர்த்தண் டலையனந்தஞ் செய்து சார்ந்தான்

(இ-ள்.) அந்தத் துன்பமாகிய செய்கையைப் பார்த்து வருந்தி, மற்றைய மூன்றுபேர்களுள்ளே யொருவனெழுந்து பொருள் யாவையுந்துறந்து, மேன்மையாகிய [illegible] தேசஞ்சாரஞ்செய்வதாகச் சென்றான்; பின்னொருவன் இனி நமக்கு இவ்விடத்தில் யாது காரியமென்று நன்மை பொருந்திய [illegible] க்ஷேத்திரத்தை உத்தேசித்து நடந்தான்; மற்றொருவன் அவ்விடத்திலே மோட்சத்துக் கேற்ற வொரு மடங்கட்டுவித்துச் செழுமையாகிய பல சோலைகளைச்செய்து அவ்விடத்திலேயே யிருந்தான். எ - று. (உ௫)

காசிதனிற் சென்றடைந்த காளையொரு பகற்பசித்தீ கனற்ற வாடிப், பூசுரன்மா ளிகையதொன்றிற் புகுந்தடிசி லிரப்பவங்கட் பொலிந்த கற்பின், வீசுபுகழ் படைத்தபதி விரதையருக் கியமுதல வியந்து நல்கித், தேசுபெறு தவிசிருத்தி முகமலர்ந்து முகமனுரை செய்துபின்னர்.

(இ-ள்.) காசித்தலத்தை நாடிப்போன இளையோனானவன் ஒருநாள் பசித்தீயானது வருத்த அதனால் வருந்தி, ஒரு பிராமணன்வீட்டிற்போய்ச் சாப்பாடுவேண்டுமென்று யாசிக்க, அவ்வீட்டில் விளங்கிய கற்பினையும், கொடுக்கின்ற புகழினையுமுடைய பதிவிரதையாகிய பெண்ணானவள் அருக்கிய முதலிய பூசைகளை விரும்பிச் செய்து, அழகிய ஆசனத்தில் இருத்தி முகமலர்ச்சிகாட்டி உபசாரவார்த்தைகளைச் சொல்லி அதன்பின்னே. எ - று. (உ௬)

இவர்துறவு பூண்டடைந்தோ யித்தலத்தென் மணவாள ரிரப்பச் சென்றா, ரவர்கணப்போ தினிலரிசி முதற்பலவுங் கொடுவருவ ரவற்றைப் பின்னர்ச், சுவைபெருக வட்டமுது மிடுவலிரு வெனமுகமன் சொலுமவ் வேலை, நவைதவிர் [illegible] வட்குரிய நான்மறைவே தியனுமங்கு நண்ணி னானால்.

(இ-ள்.) பொருந்திய துறவுநிலைக் கொண்டு இவ்விடம் வந்த பெரியோனே! இவ்வூரில் என்னுயகர் யாசகஞ்செய்யும்படிச் சென்றார்; அவர் ஒரு கணப்பொழுதினுள்ளே அரிசி முதலாகிய பல பதார்த்தங்களையுங் கொண்டு வருவார்; அவைகளைப் பின்பு மதுரமுண்டாம்படிச் சமையல்செய்து அன்னம் படைப்பேன் இருக்கக்கடவா[illegible] உபசாரவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருக்கின்ற சமயத்திலே, குற்றம் நீங்கிய அப்பெண்ணிற் [illegible]நாயகனாகிய நான்கு வே[தங்]களையுமுணர்ந்த பிராமணன் அவ்விடம்வந்துசேர்ந்தான்.

தண்டுலமுற் படுபொருள்கள் சாலத்தங்கொண் டினிதுவந்த தலைவன் ஈத, வண்டுசெறி மலரளக மனை [illegible] விசாத் தினிலவற்றை வழங்கிப், பின்னுங், கொண்டுவரு திறங்குறி[த்]துச் சென்றனன்மற் றவளெழுந்து குளிர்ந்த சொற்கள், விண்டுதுற வனன்பசி[நோ]ய் கண்டுகடி தமுதமடன் டெயி னளால்.

(இ - ள்.) இனிதாக அரிசிமுதலாகிய பல பதார்த்தங்களையுங் கொண்டுவந்த நாயகனானவன், இசையைப் பாடுகின்ற வண்டுகள் மொய்த்த பூக்களைச் சேர்ந்த கூந்தலையுடைய மனைவியின் கையில் அப் பொருள்களையெல்லாம் கொடுத்துவிட்டு மறுபடியும் அரிசிமுதலிய பொருள்கள் கொண்டுவருவதை யுத்தேசித்துப் போயினான். அப் பார்ப்பினி யெழுந்து,வந்த துறவினனுடைய பசிநோயையறிந்து குளிர்ந்த உபசாரவார்த்தைகள் சொல்லி விரைவாகச் சமையல்செய்யத் தொடங்கினாள். எ - று. (௨௮)

அடிசிலடு முனம்பசியா லழுங்கியவ டனைநோக்கி யரிவை வல்
லே, யிடிவிடுதி யலதிலையென் றியம்புகெனத் துறவினன்கேட் டிடும்
பை செய்ய, வடிசுடர்வே லனையவிழி வனிதைபெரி யோய்மனத்து
ன் மயங்கு றேலோர், கடிகையெனு மளவைபொறு பொறுவெனவம்
முயற்சிதனிற் கடுகி நின்றாள்.

(இ - ள்.) துறவினனாகிய அரசபுத்திரன் அன்னம் அமைப்பதற்கு முன்னே பசியினாலே வருந்தி அப்பிராமணமாதைப் பார்த்துப் பெண்ணே! சீக்கிரமாக அன்னம் படைப்பாயாகில் படை, கூடாதாயின் இல்லையென்று சொல்லுக என்று கேட்டுத் துன்பஞ்செய்ய, கூர்மையுங் காந்தியுமுள்ள வேலையொத்த கண்களையுடைய அப்பெண்ணானவள், பெரியோரே! மனத்திற் கலக்கங்கொள்ளாதீர் : ஒரு நாழிகைநேரம் தாமதித்திருமென்று சமையல்செய்யும் அம்முயற்சியிலே விரைவாக நின்றாள். எ - று. (௨௯)

அவ்வயினோர் சேயவளை யடுத்தழுவழி துரோதனங்கொண் டலை
ப்ப நொந்து, செவ்வனசக் கரதலத்தாற் சினந்தறைய விளிந்ததனைச்
சிறிது மெண்ணா, தெவ்வமுற வடுதொழிலின் முயன்றுமுடிந் ததற்பி
ன்மூன் றினிய சொல்லாற், கொவ்வையிதழ் திறந்துடைந்த கோமகனை
வருகவெனக் கூறி னாளால்.

(இ - ள்.) சமையல்செய்துகொண்டிருக்கின்ற அச் சமயத்தில் அம்மாதினுடைய ஒரு பிள்ளையானது அவளிடம் வந்து வீணாக அழுதுகொண்டு வருத்த (அதனால் அப்பார்ப்பினி) மனம் வருந்தி, சிவந்த தாமரைமலர்போன்ற கையினாலே கோபங்கொண்டு அறைய அதனால் அப்பிள்ளை இறந்துபோனதைக்கொஞ்சமும் நினையாமல், மனத்திற் சிறிதுந் துக்கமில்லாமல் சமையற்றொழிலைச் செய்து, முடிந்தபிறகு எழுந்துவந்து இனிமையாகிய வார்த்தைகளால் கொவ்வைக்கனிபோன்ற வாயைத் திறந்து துறவியாகிவந்த அரசபுத்திரனைப் போசனஞ்செய்வதற்காக வரக்கடவீரென்று சொன்னாள். எ - று. (௩௦)

அனமருந்த வருகவென வழைத்திடலுந் துறவினன்மற் [illegible]
ச்சிறி, யுனதுமனை தனிற்கொலையோன் றுற்றதனை லொருக்கா [illegible]
ன்னை லாகா, தெனமொழிய நடுங்கியந்த வேந்திழையாள் மறு [illegible]

தியல்பன் றென்று, மனமகிழ்வி னுபசரிக்கும் போதிலிரந் திடநடந்த மறையோன் வந்தான்.

(இ-ள்.) துறவினன், அப்பார்ப்பினியானவள் அன்ன முண்ணும்படி வரக்கடவீரென்று அழைத்தவுடனே அவ் வந்தணப்பெண்ணைக் கோபித்து, உன்வீட்டில் கொலை யொன்று நடந்திருக்கின்றமையால் ஒருபொழுதும் உண்ணக்கூடாதென்றுசொல்ல அப்பெண்ணானவள் பயந்து,நீர் உண்ணாமென்று நீக்குவது முறையல்லவென்று மனத்தில் விருப்பத்துடனே உபசாரவார்த்தைகள் சொல்லிக் கொண்டிருக்கிற காலத்திலே பிட்சை வாங்கும் பொருட்டுப் போன பிராமணன்வந்தான். எ - று. (௩௧)

வந்தமறை யவனுமன்னோன் முகநோக்கி யின்னுமுண்ணா வவ்வை யா தென்ன, நொந்தபசி யினனுனது மனைவியொரு குழவிதனை நொய்திற் கொன்று, ளந்தவகை யாலனம்வேண் டாதிருந்தே னெனலு மவ னறிவின் பண்பா, லெந்தமுனி வருந்துதிக்கு மந்திரத்தால் விளிசேயை யெழுப்பி னானல்.

(இ-ள்.) வந்த பிராமணனும் அவ் [illegible]குமாரனுடைய முகத்தைப் பார்த்து, இதுவரையினும் போசனஞ் செய்யாதகாரணம் யாதென்று கேட்க, பசியினாலே வருந்திய அரசபுத்திரன், உன்னுடைய மனைவியானவள் ஒரு புத்திரனை விரைவாகக் கொன்றுவிட்டாள்; அந்தக்காரணத்தினாலே அன்ன முண்ண விரும்பாதிருந்தேனென்று சொன்னவுடனே, அவ்வந்தணன் தன்னுடைய அறிவின் றகுதியினாலே எவ்வகைப்பட்ட தவத்தினருங் கொண்டாடப்பட்ட மந்திர சக்தியினாலே இறந்துபோன பிள்ளையை மறுபடியும் உயிர் பெறச் செய்தான். எ - று. (௩௨)

வீட்டியசேய் தனையெழுப்பி வேதி[illegible]ன்பின் புனிதவினி மேலரானு, நீடியவெம் பசிதணிய நீயருந்து [illegible]கென்த் துறவி னிலைமேற் கொண்டோ, னேடியவ னடிபணிந்தி னுயிர்தருமந் திரத்தையெனக் குணர்த்து வாயேற், றேடியா[illegible]ன் மனையமுதுண் டிடுவலல திலையெனுஞ் சொ[illegible] செப்பி னானல்.

(இ-ள்.) அந்தப்பிரா[illegible]மணனானவன் இறந்துபோன பிள்ளையை உயிர்ப்பித்து பின்பு, அவ்வரசகுமாரனைப் பார்த்துப் பரிசுத்தமானவனே! இனிமேலாயினும் மிகுந்த கொடிய பசிநோய் நீங்கும்படி நீ உண்ணக்கடவையென்று சொல்[illegible], துறவறவாச்சிரமத்தை மேற்கொண்டவனாகிய அவ்வரசகுமாரனானவன் சென்று அந்தப்பிராமணனுடைய பாதங்களை வணங்கி, இவ்விட[illegible]இறந்த உயிரைப் பின்னுங்கொடுக்கின்ற இம்மந்திரத்தை எனக்கு உபதேசி[illegible]யானால் அதிதிகளைத் தேடிய உன்னுடைய வீட்டில் அன்ன முண்[illegible]இல்லையானால்உண்ணமாட்டேனென்னும் வார்த்தையைச்சொன்னான்.

கருணைமறை யவன்றுறவோன் காதிலந்த மந்திரத்தைக் கழறிப் பின்ன, ரருமையினோ டமுதளிப்ப வயின்றவிடை பெற்றுமறு கவன் சார் போழ்தி, லொருவையமிசைதான் றிறந்திருக்கக் கண்டதன்மேற் பூசு ரணங் கிசைத்த மோனப், பொருளியல்பாற் புனறெளிப்ப வன்னது முன் போலவுயிர் பொருந்திற் றன்றே.

(இ-ள்) கிருபையையுடைய அந்தப் பிராமணன் துறவியாகிய அரச குமாரனுடைய செவியிலே அம் மந்திரத்தை உபதேசஞ்செய்து, பின்பு அருமையாக உபசாரஞ்செய்து அன்னம் படைக்கவுண்டு அப்பிராமணனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு - அவ்வரசகுமாரன் தெருவின்வழியே போகும் போது ஒரு கழுதையானது இறந்துகிடக்கப் பார்த்து, அதன் சரீரத்தின் மீது அப் பிராமணனுபதேசித்த ஞானப்பொருளையுடைய மந்திரத்தினாலே நீரைத் தெளிக்க அக்கழுதையானது முன்போல உயிர்பெற்றது. எ - று. (௩௪)

வாலேப மெழக்களித்து வாரணவாசியைக்கடந்து வயல்க டோறுஞ், சேலேறு விசாலபுரஞ் சேர்ந்துமுன்ன ரிருவர்விழு தீக்குண் டத்தின், மேலேயும் மனுவினொடு மிகுதுறவோன் புனறெளிப்ப மி ன்போல, பொலிசீர் புனைபதுமா வதியுமிளங் கோவுமுயிர் பொருந்தி வந்தார்.

(இ-ள்.) மிக்க துறவறத்தையுடைய அவ்வரசகுமாரன், கழுதையான து உயிர்பெற்றெழக்கண்டு சந்தோஷமடைந்து காசியினின்று நீங்கி, வயல் களிடத்தெல்லாஞ் சேல்மீன்கள் உலாவுகின்ற விசாலமாபுரத்தை யடைந்து, முன்னே ஓரரசகுமாரனும், பதுமாவதியுமாகிய இருவர்களும் விழுந்திறந்த தீக் குண்டத்தினிடத்திலே அம்மந்திரத்தினால் உடனே நீரைத்தெளிக்க, விளங்கு கின்ற பொன்கொம்புபோல அழகுபொருந்திய பதுமாவதியும், அரசகுமாரனும் உயிர்பெற்று வந்தார்கள். எ - று. (௩௫)

போழ்தகலிற் பலதேய சஞ்சாரத்தினினடந்த பொருவி லா னுந், தாழ்தருகொந் தளபதுமா வதியிருப்பிற் குறுகடன்க டானே யாற்றி, யாழ்குணின் னதிகடெற்று மாடிவந்தான் கனற்குண்டமதை நீங் காயப், சூழ்தடங் கனவனங்கள் வளர்த்தவனும் திருந்தனன் தோன்றி னுல்.

(இ-ள்.) அந்தச் சமையத்திலே பல தேசசஞ்சாரத்திலே சென்ற ஒப் பில்லாத அரசகுமாரனும் கீர்த்திபொருந்திய கூந்தலையுடைய பதுமாவதியின் மரணத்தைக்குறித்து உத்தரக்கிரியையெல்லாஞ் செய்து, கல்வி விழுமாகிய சிறப்புடைய நதிகளிலே மூழ்கி அவ்விடம் வந்தான். அக்கினிகுண்டத்தை விட்டு நீங்காமல் சூழ்ந்த தடாகங்களும் நந்தனவனங்களும் வளர்த்துக்கொ ண்டு அவ்விடத்திலிருந்த அரசகுமாரனும் அங்குவந்து சேர்ந்தான். எ - று.

புருடரொரு நால்வருமுன் போற்பதுமா வதிகரவம் புயங்கள் பற்றி, யிருடருசில் லோதியிவ ளெனக்குனக்கென் றீர்த்தடங்கா விகல்கொண் டிற்றூர், வருடு முகி லெனவழங்கு மன்னவவட் குரியரெவர் வகுப்பா யென்ன, வெருடருபுன் மனக்கொடிய வெங்கணற்கட் பூதபதி வினவிற் றன்றே.

(இ-ள்.) நான்கு அரசகுமாரர்களும்முன்போலப் பதுமாவதியினுடைய தாமரைமலர்போன்ற கைகளைப்பிடித்துக்கொண்டு இருள்போன்ற தகட்டணியையணிந்த கூந்தலையுடைய இப் பதுமாவதி-எனக்குனக்கென்று இழுத்துத் தணியாத பகைகொண்டு நின்றார்கள் ; ஆகையால், மழையைப் பொழிகின்ற மேகம்போல ஏற்பவர்களுக்குக் கொடுக்கின்ற அரசனே ! அந்தப் பதுமாவதிக் குரியவர் யாவர் ? வகைப்படுத்திச் சொல்லுவாயென்று கண்டோர் அஞ்சத் தகுதியையுடைய அற்ப மனமுள்ள கொடிய வெவ்விய கனல்போன்ற கண்களையுடைய வேதாளமானது வினவியது. எ - று. (௩௭)

வேதாள மிதுவினவ விக்கிரமா திந்தனெனும் வேந்தர் வேந்தன், தீதொரு மதைநோக்கித் தேயசஞ்சா ரத்தையெண்ணிச் சென்று மீண்டோன், மாதாம வார்குழலாள் குரியனென கழிந்[illegible] அமைந்தனுவான், ருதாவா மெழுப்பினவ னுடனெழுந்தோ னின்யசோ தரனு மன்றே.

(இ-ள்.) வேதாளமானது இவ்வாறு கேட்க, விக்கிரமாதித்தனென்னும் அரசர்களுக்கரசனானவன் தீமையுள்ள அவ்விஷயத்தை ஆலோசித்துப் பார்த்துத் தேசசஞ்சாரஞ்செய்வதைக் கருதிப்போய் வந்தவன் பூமாலையையணிந்த கூந்தலையுடைய பதுமாவதிக்குரிமையாகிய சரமகிரியைகளெல்லாஞ்செய்தபடியினாலே பிள்ளையாவான் ; எழுப்பினவன் பிதாவாவான் ; அப்பதுமாவதியுடன் உயிர்பெற்றெழுந்தவன் உரிமையாகிய சகோதரனுவான். எ - று.

ஆகையினிவ் வயினுவந்த வன்பினனே யவட்குரிய னுகு மென்ன, வாகைபுனை பிறையெயிற்று வஞ்சமனச் செஞ்சிகைப்புன் மதிவே தாள, மோகைபெறு மாசர்பிரா னுறுக்கியகட் டவிழ்த்துவிணைந் தோடி முன்போற், சகைபல வலித்தசெழுந் தண்ணிழறகான் மரத்தின்மிசைச் சார்ந்த தன்றே.

(இ-ள்.) ஆதலி[illegible]ல இவ்விடத்திலேயே தங்கியிருந்த அன்புடைய அரசகுமாரனே அந்தப்பதுமாவதிக்குரிய நாயகனுவான் என்றுசொல்ல, வெற்றியைப்பெற்ற பிறைபோலும் வக்கிரதந்தங்களையும் [illegible]மாகிய மனத்தையும் சிவந்த மயிரையுமுடைய புல்லறிவுள்ள வேதாளமானது, சந்தோஷமுள்ள அரசர்களுக்கரசனுகிய விக்கிரமாதித்தனுல் [illegible] கோபத்துடனே கட்டிய [illegible]டை அவிழ்த்துக்கொண்டு சீக்கிரமாகச்சென்று முன்போல இலைகள்

நிறைந்த செழுமையாகிய குளிர்ந்தநிழலையுடைய காட்டின்கணுள்ள ஆலமரத்தின் மீதுஏறிக்கொண்டது. எ - று. (௩௯)

விகடமத கரடகய வேந்தர்பிரான் மின்னுமிக விரைந்து வானின்,
முகடளவு வடமிசைச்சென் றேறியதி னுறைந்தகொடு முரண்கூர்
மேனித், துகடகுபுன் மனத்தலகை தனைப்பிடித்து முன்போலே சுருங்க வீக்கி, யகடறுபொன் மகுடமுடி தனிற்பொறுத்து மீண்டனனங்
கணைய வேலை.

(இ-ள்.) வேறுபாட்டையும் மதத்தையும் மதம்பாய்சுவட்டையும் வாய்ந்த யானைப்படைகளையுடைய அரசர்களுக்கரசனாகிய விக்கிரமாதித்தன், மறுபடியும் மிகச் சீக்கிரமாக ஆகாசத்தி னுச்சிவரையும் வளர்ந்த ஆலமரத்திற்சென்றேறி, அம்மரத்தில் வசித்துக்கொண்டிருந்த கொடுமையும் வலிமையுமிருந்தவுடலையும், குற்றம்பொருந்திய புல்லிய மனத்தையுமுடைய வேதாளத்தைப்பிடித்து முன்போல சுருங்கக்கட்டிப் பொல்லாங்கில்லாத பொன்னாற்செய்த கிரீடத்திலே சுமந்து திரும்பினான் ; அச்சமையத்தில். எ - று. (௪0)

கதத்தழற்கட் கடியுவளை நோக்கிமன்னா வின்னமொரு கதைநான்செ[illegible]ற்குரிய பொருளதனை யாய்ந்துமொழிக் திடல்வேண்டு
மஃதியா தென்னின், மதர்த்தவங்க தேயமதில் வளங்கெழுமீ ரேழு
லகு மதித்து நாளுந், து[illegible]த்திடுசக் கரபுரியென் றொருநகருண் டரங்
குமிடி தோன்றிற் றன்றே.

(இ-ள்.) கோபமும் நெருப்புப்போலும் கண்களுமுள்ள வேதாளமானது அவ்விக்கிரமாதித்[illegible]ப் பார்த்து, அ[illegible]சனே! நான் இன்னுமொருகதை சொல்கின்றேன்; அக்கதைக்குத் தகுதியா[illegible]கிய அருத்தத்தை ஆராய்ந்து சொல்லவேண்டும்; அது யாதென்றால்? செழி[illegible]த அங்கதேசத்திலே மிகுந்த வளப்பத்தையுடையபதினான்கு[illegible]கமும் எக்[illegible]ளும்மதித்துத் துதிக்கின்ற சக்கரபுரி என்று ஒருபட்டணமுண்டு; அப்பட்டணத்தில் வறுமைக்கால முண்டாயிற்று.

வேறு.

துஞ்சவெங் கலிபல் காலஞ் சூழ்ந்தலைத் திடலா லந்தச்
சக்கர புரிவி டுத்தோர் தாசிதன் புதல்வி [illegible]யோடுந்
திக்கெலாம் புகழும் வே[illegible] செழுநக ரொன்[illegible]க்கி
மிக்கல ரடிகள் சேப்ப [illegible]ந்தினி தேகி னாள்[illegible]

(இ-ள்.) துன்பமாகிய [illegible] வறுமையானது பலநாளும் நீங்காமல் சூழ்ந்து வருத்துதலினாலே அந்தச் சக்கரபுரியென்னும் பட்டணத்தைவிட்டு நீங்கி, ஒரு தாசியானவள் தன்புத்திரியுடனே எத்தத்திசையும் புகழ்கின்ற செழித்த வேறொருபட்டணத்தை உத்தேசித்து, தேன்பொருந்திய மலர் போன்ற பாதங்கள் சிவக்கும்படி யெழுந்து இனிதாகச்சென்றாள். எ - று.

வீரமா புரம்பு ரக்கும் வேந்தனும் விதியின் பண்பா
னேரலா ரலைப்ப வெல்லா நிதியமு மிழந்து பின்றன்
சீரரு மருமா னேடுஞ் செழுநகர் நோக்கி முன்னவ்
வாரரு முலையார் சென்ற வழிதனி லினிது வந்தான்.

(இ-ள்.) வீரமாபுரம் என்கின்ற பட்டணத்தைக்காக்கின்ற அரசனும், ஊழ்வலியின்றன்மையினலே பகைவர்கள் வருத்த அதனல் ஐசுவரியங்கள் யாவும் இழந்துவிட்டுப் பின்னே அழகுநீங்காத தன்புத்திரனுடனே செழித்த பட்டணத்தை நோக்கி முன்னே இரவுக்கை நீங்காத முலைகளையுடைய தாசியும் அவள்புத்திரியும்போன அம்மார்க்கத்தில் இனிதாகவந்தான். எ-று. ()

வந்தமன் னவன்முன் சென்ற மடந்தைய ரிருவர் பாதச்
சந்தமென் சுவடு மந்தத் தடத்திடை மிளிரக் கண்டு
சிந்தையில் வியப்புற் ரேரகை சிறந்துதன் றவத்து தித்த
நந்தனன் வதன நோக்கி யினையன நவிலவ தானுன்.

(இ-ள்.) அவ்வாறுவந்த அரசன், முன்னேசென்ற பெண்களிருவருடைய அழகிய மிருதுவாகிய பாதங்களினது அடையாளத்தையும் அந்த வழியிலே விளங்கப்பார்த்து, மனத்தில் ஆச்சரியங்கொண்டு [illegible] அதிகரித்துத் தன்னுடைய தவத்தினுற்பிறந்த புத்திரனுடைய முகத்தைப் பார்த்து இவ்வகைப்பட்ட வார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினுன். எ-று. (௬௪)

கோச்சகம்.

தனையவிரு மடந்தையரித் தடத்திடைச்சென் றுளர்காண்டி
யினையபெருஞ் சுவடுடையா ளெனக்குரிய ளெழில்வாய்ந்த
வனையநறுஞ் சிறியசுவட் டடியரிவை தானுனது
மனைவியெனச் சொலியுறுதி வாய்மைகொடு விரைந்துபின்னர்.

(இ-ள்.) புத்திரனே! இரண்டுபெண்கள் இவ்வழியினிடத்துப் போயிருக்கின்றார்கள் இதை யறிவாயாக; இந்தப் பெரிய காற்சுவடுடையவள் எனக்குரியவளாவாள்; அழகுபொருந்திய அந்த நல்ல சிறியகாற்சுவட்டையுடைய பெண்ணனவள் உன்னுடைய மனைவியாவாளென்று சொல்லி உறுதியாகிய வுண்மையைக்கொண்டு சீக்கிரமாகப் பின்பு. எ-று. (௬௫)

முன்[illegible]ற கணிகையர்சேர் முதிர்வளநன் னகரெய்திப்
பெ[illegible]வு பெருஞ்சுவட்டுப் பூவையைமன் னவன்வேட்டான்
பின்பனைய சிறுசுவட்டுப் பேதையைமற் றவன்மகனுந்
தன்புயங்கள் புளகமுறத் தழுவியினி திருந்தனனல்.

(இ-ள்.) முன்னமேபோன தாசிகள் சேர்ந்த மிக்கவளப்பமுள்ள பட்டணத்தை யடைந்து, அழகுபொருந்திய பெரிய அடிச்சுவட்டினை யுடைய

பெண்ணை அரசன்மணந்தான்; அதன்பின்பு அப்படிப்பட்ட சிறிய அடித்தழும்பினையுடைய பெண்ணை அவ்வரசபுத்திரனும் தன்னுடைய புயங்கள்பூரிக்கும்படிக் கலந்தணைந்து இனிதாக விருந்தான். எ-று. (௬௬)

காணுறுமப் பெருஞ்சுவட்டுக் கன்னிகைதை சீறடிகொள்
மாணிழையன் னவட்பயந்த மங்கையிரு வரும்விதியாற்
பேணுமரசனையுமனமேனன் பெற்றமகனையுமேவி
நீணிலமெங் கணுமுவப்ப நிறைகருப்ப மடைந்தனரால்.

(இ-ள்.) காணப்பட்ட அந்தப்பெரியசுவட்டினையுடைய பெண்ணும், அமிர்தம்போன்ற சிறிய பாதங்களையும், மாட்சிமைப்பட்ட ஆபரணங்களையுங் கொண்ட அத்தாசிபெற்றபெண்ணும் ஆகியஇருவர்களும், முறையாகவிரும்பிய அரசனையும் அவ்வரசன்பெற்ற புத்திரனையும் சேர்ந்து, பெரிய பூமியெங்கும் உள்ளவர்கள் சந்தோஷிக்க நிறைந்த கருப்பங்கொண்டார்கள். எ-று. (௬௭)

கருவிளைந்த விருவரும்பின் கருதுபல சிறுவர்களை
யருளினர்பந் தனைபுதல்வ ரனைசுதனை யழைப்பதற்கும்
வருமனைபுத் திரர்மகட்கன் மக்கடமை யழைப்பதற்கு
முரியமுறையெவன்புகறி யொன்னலர்ச்செற்றொளிர்வேலோய்.

(இ-ள்.) பகைவர்களைக்கொன்று விளங்குகின்ற வேலாயுதத்தையுடைய விக்கிரமாதித்த மகாராசனே! கருப்பங்கொண்ட அவ்விருவர்களும், அதன்பின்பு யாவரும் நினைக்கத்தக்க பல பிள்ளைகளைப் பெற்றார்கள். மகளுடைய பிள்ளைகள் தாயினுடைய பிள்ளைகளைக் கூப்பிடுவதற்கும், நாளுக்குநாள் வளர்ந்துவருகின்ற தாயினுடையபிள்ளைகள் பெண்ணினுடைய பிள்ளைகளைக் கூப்பிடுவதற்கும் பொருந்தியமுறையாது? சொல்லக்கடவாய் எ-று. (௬௮)

எனவலகை வினவுமுனே மெவரினுமிக் குயர்ந்தமன்னன்
றனதுசவு ரியமதனாற் றருக்குலங்கள் பலமிடைந்த
வனமுழுதுங் கடந்துதிரு வளங்கெழுபா டலிபுரஞ்சூழ்
சினைமலர்க்கா வினிலுறுமத் தேவதத்தைக் கெதிரடைந்தான்.

(இ-ள்.) என்று வேதாளமானது கேட்டவுடனே, எவ்வகைப்பட்டவரினும் மேலாகிய விக்கிரமாதித்தனானவன் தன்னுடைய வலிமையினாலே விருட்சகூட்டங்கள் பலவும் நெருங்கிய சோலைமுற்றும் நீங்கி, வளப்பமிகுந்த செல்வம்நிறைந்த பாடலிபுரத்தைச்சூழ்ந்த கொம்புகளில் மலர்கள் பொருந்திய சோலையில்வசிக்கின்ற தேவதத்தைக்கு முன்னேவந்து சேர்ந்தான். எ-று. (௬௯)

வேந்தர்பிரான் சிரம்பொறுத்த வேதாள பதியுநறுஞ்
சாந்தணிமென் முலைத்தேவ தத்தையுமங் கெதிர்ந்தவுடன்

மாந்தளிர்க ளுவப்பமலர் மதுத்துளிக்குங் குழற்கவுரி
காந்தனன்று பகர்ந்தவினைக் கடுஞ்சாப மகன்றதம்மா.

(இ-ள்.) அரசர்க்கரசனாகிய விக்கிரமாதித்தனானவன் தலையிற் சுமந்த வேதாளத்தலைவனும், மணம்பொருந்திய சந்தனத்தையணிந்தமென்மையாகிய முலைகளையுடைய தேவதத்தையும் அவ்விடத்திலேயிருப்பட்டவுடனே, மாவினது துளிர்கள் களிக்கும்படித் தேனைச்சிந்துகின்ற கூந்தலையுடைய உமாதேவியினது நாயகனாகிய சிவபெருமான் முன்னமேசொல்லிய தீவினையாகிய கொடிய சாபமானது நீங்கியது. எ - று. (௫௦)

அவ்விருவர் களுங்களுட மகன்றுதெய்வ வுருவமெய்திச்
செவ்விதினங் கரனருளாற் சேர்ந்தவிமா னத்திவர்ந்து
வெவ்விகட மருவலாதாழ் விக்கிரமா தித்தனென
வவ்வியல்பு முணர்வேந்தை யினிதுபுகழ்ந் தேத்தினரால்.

(இ-ள்.) மேற்சொல்லிய புட்பதந்தனும், தேவதத்தையும் பாவம் நீங்கிப் பழைய தெய்வத்தன்மையுள்ள உருவமடைந்து, நன்றாக அவ்விடத்துச் சிவபெருமானுடைய திருவருளினாலேவந்த விமானத்திலேறி, கொடிய வேறுபாட்டையுடைய பகைவர்கள் வணங்குகின்ற விக்கிரமாதித்தனென்று சொல்லப்பட்ட எவ்வகை யொழுக்கங்களையு மறிந்த வரசனை நன்றாகப்புகழ்ந்து துதித்தார்கள். எ - று. (௫௧)

மானமிசைப் பொலிந்தெதிர்ந்த மதிவலவன் பின்னுமந்தச்
சேனையுடைத் திறல்வேந்தன் றிருவதன மலர்நோக்கி
யீனமகற் றியவுனக்கியா னியற்றுதவி யெவனுளதே
னீசொலப் படிநடப்ப லெனஇருப னிதுபகர்வான்.

(இ-ள்.) விமானத்தின்மீது விளங்கி எதிரேவந்த அறிவில்வல்லவனாகிய புட்பதந்தன், மறுபடியும் அந்த நால்வகைச் சேனைகளையுடைய வல்லமைபொருந்திய விக்கிரமாதித்த வரசனுடைய மலர்போன்ற முகத்தைப் பார்த்து, இச்சாபமாகிய இழிவை நீக்கிய வுனக்கு நான் செய்கின்ற வுதவி யாதிருக்கிறது? நீர்சொல்லும் அவ்விதம் நடக்கிறேனென்று சொல்ல, விக்கிரமாதித்த வரசன் இவ்வார்த்தையைச் சொல்லத்தொடங்கினான். எ - று. (௫௨)

மின்னார்ந்தெய் வதவடிவம் பொலிந்தசெழும் புகழோய்கே
ளுன்னுல்யான் பெறுமினென் றுளதஃதியா தெனினீயெற்
கொன்னுளு மொருதுணைபோன் றிருக்குதினைத் திடும்பொழுதென்
முன்னாக வரல்வேண்டு மெனமுடிமன் னவன்மொழிந்தான்.

(இ-ள்.) மகுடத்தைதயணிந்த விக்கிரமாதித்த வரசன் புட்பதந்தனைப்பார்த்து: அழகுநிறைந்த தெய்வத்தன்மை பொருந்திய வடிவால் விளங்கிய செழித்த கீர்த்தியையுடையவனே! கேட்பாயாக; உன்னாலே நான் அடைய

கூடிய இலாபம் ஒன்றிருக்கிறது; அது யாதென்றால்? நீ யெனக்கு எக்கால மும் ஒருதவிபோலவிருந்து நான் நினைக்குங்காலத்து என்முன்னமே வர வேண்டுமென்று சொன்னான். எ - று. (௫௩)

விக்கிரமா தித்தனிது வேண்டலுமப் புட்பதந்த
னுக்கிரமார் திறலலகை யொன்றையழைத் திவனினைக்கும்
பக்குவநீ தெரிந்துரைத்த பரமனும் பேரருள்புரிந்து
மிக்குறுவான் கயிலைகண்ணி விமலனடி பணிந்திருந்தான்.

(இ-ள்.) விக்கிரமாதித்த வரசன், இவ்வரத்தைவேண்டிக் கேட்டவுட னே அப்புட்பதந்தன், வேகம்நிறைந்த வலிமைபொருந்திய ஒரு வேதாளத் தைக் கூப்பிட்டு, இவ் விக்கிரமாதித்தவரசன் நினைக்கின்ற பருவத்தையறிந்து நீ அவன்சொல்லிய விதம் நடக்கக்கடவையென்று உத்தரவுசெய்து, மேன் மைபொருந்திய பெரிய கயிலாயமலையை யடைந்து, மலரகிதராகிய சிவபெரு மானுடைய திருவடிகளைப் பணிந்துகொண்டிருந்தான். எ - று. (௫௪)

ஆயசாபி னெவ்விதத்தோ வருமறைக டலைமயங்கித்
தீயடுத்த பொறியுமழ்கட் டிறற்பணிதாங் குலகனைத்து
நேயபத்தி குலநடைநன் னெறிமுறைமா தவகியமந்
தூயபுத்தி மழுங்கியிரு டென்றியறச் சுழன்றனவே.

(இ-ள்.) அதன்பின்னே எவ்வகையினாலோ அருமையாகிய நான்கு வேதங்களும் தலைதடுமாறிப் பொருந்திய தீப்பொறிகளைக் கக்குகின்ற கண்களை யுடைய வலிமைபொருந்திய ஆதிசேடனாலே தாங்குகின்ற உலகமெல்லாம் அன்பு-பக்தி-சாதியொழுக்கம் - நன்னடை-குணம்-மாதவம்-தெய்வவழிபாடு- பரிசுத்தமாகிய புத்தி ஆகிய இவைகளெல்லாம் போலிவழிந்து அஞ்ஞான விருள் நிறைந்து மிகவுங் கலங்கின. எ - று. (௫௫)

நன்குமுழு வதுமயங்கி நாடொறுந்தீ துயர்ந்ததனால்
வன்குவவு மணிப்புயத்து வானவர்யா வருமயங்கி
முன்கயிலை வரையடைந்து முதல்வியொடங் கமர்ந்தபிரான்
றன்கமல மலரடிக டாழ்ந்துங்கா முதவைநேர்வார்.

(இ-ள்.) நன்மையென்று சொல்லப்படுவதெல்லாம் தலைதடுமாறி நாள் தோறுந் தீமைகள் மிகுந்தபடியினாலே, வலிமைபொருந்திய அழகியபுயங் களையுடைய தேவர்களெல்லாம் மயக்கமடைந்து யாவருஞ் சேர்ந்திக்கப்பட்ட கயிலாயமலையைச்சேர்ந்து, பார்ப்பதிதேவியாருடனே அங்கே எழுந்தரு ளிய சிவபெருமானுடைய தாமரைமலர்போலும் திருவடிகளைவணங்கித் தோத் திரஞ்செய்து இவ்வசனங்களைச் சொல்வார்கள். எ - று. (௫௬)

கண்ணுதலெம் பரமவுமை காதலவெக் காரணத்தும்
மண்ணுலகின் மறைகடலை மயங்கினபன் மார்தங்களும்

பண்ணுறுநன் னியமநெறி பத்திதவங் குலநடைக
ளெண்ணுளபற் பலவொழுங்கு மிழந்துகுழன் றலைந்தனரால்.

(இ-ள்.) நெற்றிக்கண்ணை யுடைய எங்கள் மேலாகிய கடவுளே! உமாதேவியினுடைய நாயகனே! யாதுகாரணத்தினாலோ பூவுலகத்திலே நான்குவேதங்களுந் தலைதடுமாறின; அன்றியும், பல மனிதர்களும் தாங்கள் செய்யப்பட்ட நல்ல தெய்வவழிபாடும் - நீதியும் - பத்தியும் - தவமும் - தங்கள் தங்கள் குலத்திற்குரிய வொழுக்கமும் - நினைக்கப்பட்ட பலவாகிய நன்னடைகளும் விட்டுக் கலங்கி யலைந்தார்கள். எ - று. (௫௭)

ஆதலினம் மறைதிருத்தி யவர்க்குணர்த்த வொருகருத்த
னீதருக வெனவுமந்த நிலைகெழுவா னவர்மகிழப்
போதகம துரித்துமிசைப் போர்த்தரவப் பணிபூண்ட
நாதனருள் வழங்கியுள நயந்துதிரு வாய்மலர்ந்தான்.

(இ-ள்.) ஆகையினாலே அவ்வேதங்களைத் திருந்தச்செய்து அம்மனிதர்களுக்குத் தெரிவிக்கும்படிச் செய்விப்போனொருவனைத் தேவரீர்கொடுக்க வேண்டுமென்று கேட்டவுடனே அந்நிலைமையாகிய தேவர்கள் மகிழும்படி, யானையையுரித்துத் தமது திருமேனியிற்போர்த்து நாகாபரணத்தையணிந்த சிவபெருமான் அநுக்கிரகஞ்செய்து மனமகிழ்ந்து திருவாய்மலர்ந்து சொல்லத் தொடங்கினர். எ - று. (௫௮)

பொன்னுலவு நாமோத புரத்துறைகங் காதரப்பேர்
மன்னுவகை பெறுமவற்கோர் மைந்தனினி யுதிப்பனன்னோன்
றன்னுணர்வின் முனஞ்சிதைந்த கலைசுரு தியுந்திருத்தி
யுன்னுமறை மாந்தர்கட்கு முளந்தெளியப் பயிற்றுமென்றான்.

(இ-ள்.) தேவர்களே! கேளுங்கள்; ஆமோதநகரில் வசிக்கின்ற கங்காதரன் என்னும் பெயரினையுடைய நிலைபெற்ற அரசன் மகிழ்ச்சியடையும்படி அவனுக்கு மைந்தனொருவன் இனிப் பிறப்பான்; அப்புத்திரனானவன், தன்னறிவினால் முன்னமே யழிந்த பல வேதங்களையுந் திருத்தஞ்செய்து, நினைக்கப்பட்ட பல மனிதர்களுக்கும் உள்ளந்தெளியும்படிப் பழக்குவான் என்றருளினர். எ - று. (௫௯)

புங்கவனிவ் வகையருளப் பொன்னகரத் தமரர்களித்
தங்கவன்றன் மெய்க்கமல மலரடிகட லையுறவணங்கிச்
செங்கைகுவித் துப்பதுதி செய்துவிடை கொடுநடந்து
தங்களிருப் பிடங்கடொறுஞ் சார்ந்தனர்மா தவத்தினரோ.

(இ-ள்.) பரிசுத்தனாகிய சிவபெருமான் இவ்வாறு அநுக்கிரகஞ்செய்யாநிற்கப் பொன்னுலகத்தில் வசிக்கின்ற தேவர்கள் மகிழ்ந்து, அவ்விடத்துச் சிவபெருமானுடைய மெய்ம்மையாகிய தாமரைமலர்போன்ற திருவடிகள் சி

சின்மேற்படும்படி நமஸ்கரித்து, சிவந்த இரண்டு கைகளையுங் கூப்பிக்கொண்டு இனிமையாகிய தோத்திரங்கள்செய்து விடைபெற்று நடந்து தங்கள் தங்கள் வாசஸ்தலங்களுக்குப் பெரியதவத்தினையுடைய தேவர்கள் சென்றார்கள்.

பொருந்துகறை மிடற்றினன்பின் புட்பதந்தன் றனைவிளித்துப்
பருந்துழலவேற் றேவலற்குப் பதினைந்தாந் தலைமுறையில்
வருந்திறற்கங் காதரப்பேர் மன்னவற்கு மகவாகி
யிருந்தரணி யிடைத்தோன்றி யெமமறையுந் திருத்துதிபால்.

(இ-ள்.) விஷம்பொருந்திய கண்டத்தையுடைய சிவபெருமான், அதன்பின்பு புட்பதந்தனையழைத்து, பருந்துகள் வட்டமிடுகின்ற வேலையேந்திய தேவாங்கமுனிவனுக்குப் பதினைந்தாவது தலைமுறையில் பிறந்த வலிமையையுடைய கங்காதரனென்னும் அரசனுக்கு நீ பிள்ளையாகிப் பெரிய பூமியினிடத்துப் பிறந்து வேதங்களெல்லாவற்றையுந் திருத்தஞ்செய்யக் கடவாய். எ - று.

தேவதத்தை காம்போச தேயமதிற் சிறந்திலங்கும்
பூவடைத்தண் பொழில்விரத புரத்தாசு புரிந்துவளர்
தூவகற்றுங் கதிர்வடிவேற் சுசீலன்மக ளாய்வருவ
ளாவலிற்பின் னருமவளை யணிவதுவை சூட்டிமன்னே.

(இ-ள்.) தேவதத்தையானவள், காம்போசதேசத்தில் சிறந்து விளங்குகின்ற பூக்கள்நிறைந்த அழகிய குளிர்ந்தசோலைகள்சூழ்ந்த விரதபுரம் என்கின்ற பட்டணத்தில் அரசுசெய்து வளர்கின்ற - பகைவருடைய மாமிசங்களைப் போக்குகின்ற காந்திபொருந்திய கூர்மையாகிய வேலைத்தாங்கிய சுசீலன் என்னும் அரசனுடைய புத்திரியாகப் பிறப்பாள்; விருப்பத்துடனே மறுபடியும் அத்தேவதத்தையை அழகிய விவாகஞ்செய்து. எ - று. (கூஉ)

மானவர்யா வருக்குமன மயக்கறகல் வழிபயிற்றிப்
பானல்வய லாமோத பதியிலர சிருந்துபின்னர்
மீனவரிக் கலகமதர் விழிமனைவி யொடுமிவணீ
தானடைதி யெனவுமன்னோன் சம்மதித்துத் தாள்பணிந்தான்.

(இ-ள்.) மனிதர்கள் யாவருக்கும் மனமாக நீங்கும்படி நல்ல வழிகளைக் கற்பித்து, நீலோத்பல மலர்களையுடைய வயல்கள் சூழ்ந்த ஆமோதநகரத்தில் அரசுசெலுத்தி, அதன்பின்பு மீன்போலும் இரேகைகளையுடைய போரைச்செய்கின்ற செழித்த கண்களையுடைய மனைவியுடனே நீ இவ்விடம்வருவாயென்று சிவபெருமான் அநுக்கிரகஞ்செய்தவுடனே புட்பதந்தன் சம்மதப்பட்டுச் சிவபெருமானுடைய திருவடிகளைப்பணிந்தான். எ - று. (கூங)

வேதாளசாப விமோசனச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் உ௧-க்கு பாடல் கூஉக.

தேவாங்கதலதேவி சவுடாம்பிகையம்மை சாதீண் டுணை.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

இருபத்தாறுவது

மாமறைதிருத்திய வரமுனிச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

எனத்தவத் துயர்ந்த சூத னியம்பலு முனிவர் போற்றிச்
சினக்கன லவித்த மேலோய் திகழ்புட்ப தந்தன் சிங்கா
தனத்தா சிருந்த கங்கா தரற்கொரு மகவாய்த் தோன்றி
மனத்திரு ளவர்க்கு நீத்த வகையுஞ்சொல் கெனப்பின் சொல்வான்.

(இ-ள்.) தவத்தில் மேம்பட்ட சூதமுனிவர் இவ்வாறென்று சொன்னவுடனே முனிவர்கள் நமஸ்காரஞ்செய்து, கோபாக்கினியைப்போக்கிய பெரியோனே! விளங்குகின்ற புட்பதந்தன் சிம்மாசனத்திலிருந்து அரசுசெலுத்திய கங்காதரன் என்னும் அரசனுக்கு ஒரு புத்திரனாகப்பிறந்து, யாவருக்கும் மனத்திலஞ்ஞானத்தையொழித்த சரித்தையையுஞ் சொல்வீராகவென்று கேட்க, பின்பு சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார். எ-று. (க)

நம்புதே வலன்றிவ் வியாங்க னந்திநன் னீல கண்டன்
சம்புயர் தருமே மாங்கன் சந்திராங்கன் பத்திர வாகு
வெம்படை வீர பத்திரன் மிளிர்சூல பாணி சீமான்
செம்புன றோய்ந்த கூர்வேற் செயசேனன் சித்திர சேனன்.

(இ-ள்.) யாவரும் நம்புகின்ற தேவலமுனிவனும், திவ்வியாங்கனும், நந்தியும், நல்ல நீலகண்டனும், சம்புவும், உயர்ச்சியுள்ள ஏமாங்கனும், சந்திராங்கனும், பத்திரவாகுவும், கொடிய சேனைகளையுடைய வீரபத்திரனும், விளங்குகின்ற சூலபாணியும், சீமானும், இரத்தந்தோய்ந்த கூர்மையாகிய வேலைத்தாங்கிய செயசேனனும், சித்திரசேனனும் ஆகிய இவர்களும். எ-று. (உ)

தொலைவறத் திகழ்சீர் வாய்ந்த சுவிக்கிரம னெனுமீ ரேழு
தலைமுறைப் பின்னர்த் தோன்றுந் தவக்கங்கா தரன்றன் றேவி
சிலைநுதற் கருணை வாணி திருவயிற் றினிற்பி றந்தான்
கலைமதிச் சடிலத் தெந்தை களிப்புறு புட்ப தந்தன்.

(இ-ள்.) அழிதலில்லாமல் விளங்குகின்ற சிறப்புப்பொருந்திய சுவிக்கிரமன் என்று சொல்லப்பட்ட பதினான்கு தலைமுறைக்குப் பின்னே பிறந்த தவத்தினையுடைய கங்காதரனது மனைவியாகிய விற்போன்ற நெற்றியைய

புடைய சுகுண வாணியினது திருவயிற்றில், கலையையுடைய சந்திரனையணிந்த சடையையுடைய சிவபெருமான் மகிழ்கின்ற புட்பதந்தனானவன் பிறந்தான்.

ஓதைவார் கடல்சூழ் ஞாலத் துறைபவ ருளத்துட் டோங்கும்
பேதைமா விருளும் பாவப் பெருங்குளிர்ப் பனியு நீங்கத்
தாதையா மனைய கங்கா தான்முக சலசம் பூப்ப
வாதைதீர் தருமெய்ஞ் ஞான மார்த்தாண்ட னுதித்தான் மன்னோ.

(இ-ள்.) சத்திக்கின்ற பெரியசமுத்திரஞ்சூழ்ந்த பூமியினிடத்து வசிக்கின்ற மக்களுடைய மனத்தில் நிறைந்த அறியாமையாகிய அஞ்ஞானவிருளும், பாவமாகிய குளிரும் பனியும் நீங்கவும், பிதாவாகிய அக் கங்காதரன் முகமாகியதாமரை மலரவும் துன்பம்நீங்கிய மெய்ஞ்ஞான சூரியனாகிய புட்பதந்தன் தோன்றினன். எ - று.

சூரியன் உதிக்குங் காலத்தில் இருள் - குளிர் - பனி நீங்குதல்போல, இப்புத்திரனுதித்ததால் மனிதர்களுடைய மனவிருளும் பாவமும் நீங்கலால் "ஓதைவார் * * * பனியுநீங்க" என்று கூறினர்.

சேயினி துதித்த லோடுஞ் சேகதல முறை...ம் ...
வாயுமெய்த் துறவோர் வா...ழ்த்த வசரீரி மொழி...யான் றங்காண்
மாயிரு விசும்பி னின்று வரமுனி யினைய மைந்தற்
கேயுமன் னாம தேய ...வினி தெழுந்த தன்றே.

(இ-ள்.) நல்லமுகூர்த்தகாலத்தில் ... பிறந்தவுடனே பூமியினுள்ளோரெல்லாந் துதிக்...வும், ...ந்து ...ஸ்தோ...ரிக்கப்பட்ட மெய்த்துறவிகள் வாழ்த்தவும் அக்காலத்தில் பெரிய ஆகாயத்தினின்றும் ஒரு அசரீரி மொழியானது - இத்தப்பிள்ளைக்குப் பொருந்திய நல்ல...யர் ...என்று நன்குகவெழுந்தது. எ - று. (௫)

நலங்கிள ரனைய மைந்த னவில்கங்கா தரன்க ளிப்ப
விலங்குறச் சுகுண வாணி யெனப்பெயர் படைத்த வன்னை
யலங்கணி செறிபொற் கொங்கை யமுதினி தருந்தி நாளுங்
கலங்கறு மின்பச் செல்வக் கண்மணி போல்வ ளர்ந்தான்.

(இ-ள்.) நன்மைநிறைந்த அப்புத்திரனானவன், சொல்லப்பட்ட கங்காதரன் மகிழ்ச்சியடைய விளங்குகின்ற நல்ல சுகுணவாணி...ன்று பெயர்பெற்ற தாயினுடை...யு அழகுமிகுந்த பொலிவுள்ள, முலைகளின்பா...ல இனிதாகவுண்டு, எக்காலமும் கலங்குதலில்லாத வின்பமும், செல்வமும் உடையவனாகி (யாவர்க்கும்) கண்மணிபோல வளர்ந்தான். எ - று. (௬)

மாசுதீர் புகழான் மிக்க வரமுனி யெனுமச் சேய்க்குப்
பேசுசா தகமோ டன்னப் பிராசனஞ் சவுள மோங்கும்

தேசுகூர் கன்ன வேதை திகழ்ப நயன மாதி
பூசுரா பெர்கொண் டாடீப் புரிந்தன னளித்த பூபன்.

(இ-ள்.) அப்புத்திரனைப்பெற்ற கங்காதரனானவன், குற்றமில்லாத புகழினையுடைய வரமுனி யென்னும் அப்புதல்வனுக்கு நூல்களிற்சொல்லப்பட்டுள்ள சாதககருமச் சடங்கினுடனே சோறூட்டுதல் - மயிர்கழித்தல்- உயர்ந்த அழகுமிகுந்த காதுகுத்துதல்-பிரகாசிக்கின்ற பூணூற்சடங்கு ஆகிய இவை முதலானவைகளைப் பிராமணத்தலைவர் புகழும்படிச் செய்வித்தான். எ-று.

பொழில்புடை செறியா மோத புரத்திலம் மருமா னிவ்வா
றெழில்பெற வளர்ந்தான் பின்ன ரிணையிலாத் தேவ தத்தை
வழிவுறு மதுர வேழ வசனவம் பிகையோர் பாகன்
செழியதண் ணருளின் சீராற் செகத்துதித் திடநி னைந்தாள்.

(இ-ள்.) பக்கங்களிற் சோலைகள்சூழ்ந்த ஆமோதபுரத்தில் அப்புத்திரனானவன் இவ்வகையாக அழகுபொருந்த வளர்ந்துவந்தான்; அதன்பின்பு தனக்கொருவருஞ் சமானமில்லாத தேவதத்தையானவள், தித்திப்பானது வழிகின்ற கரும்புபோலும் இனிய சொற்களையுடைய பார்வதிதேவியாரை ஒருபாகத்திலுடைய சிவபெருமானது செழித்த குளிர்ந்த கிருபையின் சிறப்பினால் பூமியிற்பிறப்பதற்கு எண்ணினாள். எ-று. (அ)

மேலகாம் போச நாட்டில் விரதமா புரியை யாளுஞ்
சுகிகள் புனைசு சீலன் றனதுளங் களிப்ப வன்னோன்
பக்கமே வுறுநற் றேவி ... வதிவ யிற்றிற்
புக்கவ தரித்தா ளந்தப் ...

(இ-ள்.) அக் கீர்த்தியினைப்பெற்ற தேவதத்தையென்பவள், மேலாகிய காம்போசநாட்டில் விரதமாபுரியை ஆளுகின்ற தகுதியாகிய சிறப்பினையுடைய சுசீலவரசனது மனத்தில் மகிழ்ச்சியுண்டாக அவனுடைய அருகிலிருக்கின்ற நல்ல தேவியாகிய நுணுவதியினுடைய திருவயிற்றிலே உற்பத்தியாகிப் பிறந்தாள். எ - று. (௯)

மன்னிய சுசீல ... மன்னர்கோன் களிப்ப வந்தக்
கன்னிவந் துதித்த லோடுங் கருதிவட் குரிய நாம
மென்னில நாசீத சீலி யென்றசு ரீரி வாக்கொன்
றன்னில் விசும்பி ...ருன்றிற் றனைவரும் வியப்ப வன்றே.

(இ-ள்.) நிலைபெற்ற சுசீலன் என்று சொல்லப்பட்ட அரசர்க்கரசனானவன் மகிழும்படி அந்தப்பெண் வந்து பிறந்தவுடனே, யாவரும் நினைக்கின்ற இப்பெண்ணிற்குரிய பெயர் யாதெனில்? விளங்குகின்ற அமிர்தசீலி என்று அசரீரிவாக்கொன்று அப்பொழுது யாவருங்களிக்கும்படி ஆகாசத்தி லுண்டாயிற்று. எ-று. (௧௦)

தருகுணவதி யென்றோதுந் தாய்தன திணைப்பொற் கொங்கை
பெருகமு தருந்தி நாளும் பிறங்குசீர் புனிசு சீலன்
திருமடி தனினுஞ் செம்பொற் செழுமணித் தொட்டில் மீது
மிருளறு மமிர்த சீலி யெனுமயில் வளர்ந்தா ளன்றே.

(இ-ள்.) மயக்கமில்லாத மயில்போன்ற சாயலையுடைய அமிர்தசீலி என்பவள், தன்னைப்பெற்ற குணவதியென்று சொல்லப்பட்ட தாயினுடைய அழகிய இரண்டுமுலைகளினும் பெருகியபாலையுண்டு, எந்நாளும் விளங்குகின்ற சிறப்பினையுடைய சுசீலனது அழகிய மடியினும், செம்பொன்னாலும் செழித்த மணிகளாலுஞ்செய்த தொட்டிலினும் வளர்ந்தாள். எ-று. (கக)

பரவுறு பொழிலா மோத பதிபுரந் தருளுஞ் செங்கோற்
றரளவெண் கவிகைக் கங்கா தரநரா திபன்றா னீன்ற
வரமுனிக் குயர்காம் போச மன்னனுஞ் சுசீலன் மாதத்
திரடன வமிர்த சீலி தனைத்திரு மணஞ்செய் வித்தான்.

(இ-ள்.) பரவிய சோலைகள்சூழ்ந்த ஆமோதபுரத்தையாளுகின்ற செம்மையாகிய நீதியையும், வெண்மையாகிய முத்துக்குடையையுமுடைய கங்காதரவரசனுனவன், தான்பெற்ற வரமுனிவனுக்கு, மேன்மையாகிய காம்போசதேசத்தையாளுகின்ற அரசனாகிய சுசீலனது மகளாகிய அந்தத் திரட்சியாகிய முலைகளையுடைய அமிர்தசீலியை அழகிய விவாகஞ்செய்வித்தான்.

இனியசற் பமிர்த சீலி யெனும்பெயர் ...த்தெய்வ
வனிதையு ... ஞான வரமுனி ...னும்பொற் கஞ்சக்
கனிலுறை திருவு மாலுக் தகவென வின்பந் துய்த்துப்
புனிதகங் காத ரப்பேர்ப் பூபதி ... வாழ்ந்தார்.

(இ-ள்.) நல்ல கற்பினையுடைய அமிர்தசீலியென்கின்ற பெயர்பெற்ற தெய்வத்தன்மையுள்ள மாதும், பூரணமாகிய மெய்ஞ்ஞானத்தையுடைய வரமுனிவனும், பொற்றாமரையில் வசிக்கின்ற திருமகளும் விஷ்ணுமூர்த்தியும் ஒப்பென்னும்படி இன்பத்தையனுபவித்து ... ஆகிய கங்காதரவரசன் மகிழும்படி வாழ்ந்தார்கள். எ-று. (கஉ)

சுதநெடும் புகழ்கூர் கங்கா தரநர பதிதன் செல்வச்
சுதனெனும் வராமு னிக்குச் சுடர்முடி சூட்டிப் பின்னர்
சிதகிறை சுகுண வாணி யேந்திழை யொடுமெ ழுந்து
நதமுறு தவவ னத்தி னெண்ணின னலனுற் றோங்க.

(இ-ள்.) எக்காலமும் பெரிய கீர்த்திமிகுந்த கங்காதரவரசன், தன்னுடைய செல்வப்புத்திரனாகிய வரமுனிவனுக்குக் காந்திபொருந்திய மகுடஞ்

கூட்டிப் பின்பு நன்மைநிறைந்த சுகுணவாணியென்னும் நன்மனைவியுடனே யெழுந்து ஆறுகலையுடைய திவ்வனத்தில் நன்மைமிகும்படி அடைந்தான்.

சுகவர முனிவன் பின்பு சுருதியா வைவுந்திருத்திப்
புகரற வனைவர் கட்கும் பொருந்தநன் குணர்ந்தி நீதி
வகைகுல முறையொ ழுக்க மகம்பல விரத வாய்மை
நகைதரு சுகிர்த மாதி நடைநிலை நாட்டி னானால்.

(இ-ள்.) இன்பத்தையுடைய வரமுனிவன், அதன்பின்பு நான்குவேதங்களையுஞ் செவ்வைசெய்து,குற்றம்நீங்க யாவர்களுக்கும் மனத்திற்பதியும்படி நன்றாகக்கற்பித்து, நீதிவகைகளும்- சாதியொழுங்கும் - நன்னடையும்-யாகங்களும் பலதவமும் - உண்மையும் - விளக்கத்தைத்தருகின்ற தருமமும், ஆகிய இவைமுதலாகிய வொழுக்கங்களெல்லாம் நிலைநிறுத்தினான். எ - று. (௧௫)

வாரிணைக் களபக் கொங்கை வனிதையோர் பாக நாதன்
சீரியற் கருணை தன்னாற் றிறல்வர முனிவன் பின்னு
மோரிலப் பொருளுந் தோன்ற நிலைகெழு தனது பேரா
லாரியத் தினிலே கவாகமம் புரிந்தா னன்றே.

(இ-ள்.) கச்சினையணிந்த கலவைச்சாந்துபூசிய தனபாரங்களையுடைய பார்வதிதேவியாரை ஒருபாகத்திற்கொண்ட சிவபெருமானது நன்மையின் பகுதியாகிய கிருபையினாலே வலிமையையுடைய வரமுனிவன், மறுபடியும் ஒப்பில்லாத எவ்வகைப்பொருளுந் தோன்றும்படி, நிலைமைபொருந்திய தன்னுடைய பெயரினாலே வடமொழியிலே அளவில்லாத ஆகமசாஸ்திரங்களைச் செய்தான். எ - று. (௧௬)

நதிவளந் தழுவா மோத நன்னகர் பரக்கு மந்த
நிதிவர முனியு வப்ப நிகரிலா வமிர்த சீலி
மதிகெழு கவிகைப் பூவின் மாரனு மயங்க நெஞ்சத்
திதிகெழு வீரருத்திர னென்னுமோர் சுதனை யீன்றாள்.

(இ-ள்.) நதிகளின் வளப்பங்களினாலே விளங்குகின்ற நல்ல ஆமோத நகரை யாளுகின்ற அந்தச்செல்வத்தையுடைய வரமுனிவன் களிக்கும்படி ஒப்பில்லாத அமிர்தசீலியென்பவள், பெரிய சந்திரக்குடையையும், பொலிவுள்ள வில்லையுமுடைய மன்மதனும் மயங்கும்படி, மனத்திற் காத்தற்றொழிலையுடைய வீரருத்திரன் என்னும் ஒருபுத்திரனைப் பெற்றாள். எ-று. (௧௭)

இணைதவிர் வீர ருத்திர னெனுந்திருப் புதல்வன் பின்னர்த்
திணைகெழு மறைக ளேமுற் செழுங்கலை யனைத்தந் தேர்ந்து
கணைபல படையுங் கற்றுக் கருதுமூ வுலகி டத்துந்
துணைசொல வரியனென்னத் துலங்கினன் சுரரும் போற்ற.

(இ-ள்.) ஒப்பில்லாத வீருத்திரன் என்னும் அழகிய பத்திரனானவன், பின்னே ஒழுக்கம்பொருந்திய வேதங்கள்முதலாகிய செழித்த நூல்கள் பலவற்றையுங் கற்றுணர்ந்து, அம்பும், பல ... த்தையுங் கற்று, என்னுகின்ற சுவர்க்க மத்திய பாதலமென்னும் மூன்றுலகத்திலும் ஒப்புச்சொல்ல முடியாதென்னும்படித் தேவர்களுந் துதிக்க விளங்கினான். எ - று. (௧௯)

சீர்வர முனிவன் பின்ரைத் திறல்வீர ருத்தி ரற்கு
நீர்வள ரவந்தி யாளு நித்திய விரத னீன்ற
போர்வரி மகர்நெ டுங்கட் புனிதகோ மளைத னைப்பூந்
தார்வனைந் தவனி போற்றத் தருமண முடித்தான் மன்னோ.

(இ-ள்.) செல்வமுள்ள வரமுனிவன், அதன்பின்பு வலிமைமிருந்த வீரருத்திரனுக்கு நீர்வளப்ப மிருந்த அவந்தியையாளுகின்ற நித்தியவிரதன் என்னும் அரசன்பெற்ற போராச்செய்கின்ற இரேகைபொருந்திய செழித்த நீண்டகண்களையுடைய பரிசுத்தமாகிய கோமளை என்னும்பெண்ணைப் பூமாலை சூட்டி உலகந்துதிக்கும்படி மேன்மையாகிய விவாகத்தைச் செய்வித்தான்.

சோபன முகூர்த்த மொன்றிற் சுதற்கொளிர் மகுடஞ் சூட்டிப்
பூபதி யெனுமெய்ஞ் ஞானப் புகழ்வர விருடி பின்பு
மாபதி விரதை யாந்தன் மனையொடுங் கயிலை நண்ணிச்
சிபதி பதந்தாழ்ந் தன்னோன் திருப்பணி விடையி னுற்றான்.

(இ-ள்.) உண்மை ஞானத்தையும், கீர்த்தியையு முடைய வரமுனி என்னும் அரசனானவன், சுபமுகூர்த்தநாளில் வீருத்திரனுக்குப் ... பிரகாசிக்கின்ற கிரீடத்தைச்சூட்டிப் பிறகு மகத்தாகிய கற்பிற்சிறந்தவளாகிய தன் மனைவியுடனே கயிலாயமலையைச் சேர்ந்து, பார்ப்பதிதேவியாருடைய ... யகராகிய சிவபெருமானுடைய ஸ்ரீபாதங்களைவணங்கி அவருடைய திருப்பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தான். எ - று. (௨௦)

வீரருத் திரன்பின் செல்வம் விளைவுறு சகர நாட்டை
யாரணத் தொழுங்கி னோம்பி யரிவையர் திலக மன்ன
பூரணக் களபக் கொங்கைப் புனிதகோ மளையென் றுரைக்கும்
பேருடைத் தைய லோடும் பெருநலந் துய்த்தி ருந்தான்.

(இ-ள்.) வீரருத்திரனானவன், அதன்பின்பு செல்வம் மிருந்த சகரநாட்டை வேதங்களிற்கூறிய முறைப்படியேகாத்து, பெண்கள் திலகம்போன்ற கலவைச்சாந்தையணிந்த முலைகளையுடைய பரிசுத்தமாகிய கோமளையென்று சொல்லப்பட்ட உயர்ந்த பெயரினையுடைய பெண்ணினுடனே பெரியவின்பங்களை அனுபவித்துக்கொண்டிருந்தான். எ - று. (௨௧)

சத்திய வீர ருத்திரன் றனதுளத் துவகை பூப்ப
நித்திய விரத னீன்ற நிகரிலா மடந்தை தன்பால்

சுத்திகொள் சுகுண னென்றோர் சுகப்புனை புதல்வன் றோன்றி
யெத்திசை யரசர் தாமு மினிதுபோற் றிடவ ளர்ந்தான்.

(இ-ள்.) மெய்ம்மையையுடைய வீருத்திரனது மனத்தில் களிப்புண்டாகும்படி நித்தியவிரதன்பெற்ற ஒப்பில்லாதகோமளையினுடைய திருவயிற்றிலே பரிசுத்தத்தைக்கொண்ட சுகுணனென்று ஒரு நன்மைபெற்ற மைந்தன் பிறந்து எந்தத்திசையிலுள்ள அரசர்களும் இனிதுடன் துதிக்க வளர்ந்தான். எ - று. (௨௨)

வளர்தரு சுகுண னென்னு மாமகன் றனக்கம் மன்னன்
விளவல தேயங் காக்கும் வீரகே சரிப யந்த
தளவணி முறுவற் செவ்வாய்ச் சத்திய வதியெ னும்பே
ருளதிரு மடந்தை தன்னை யுவப்புற மணஞ்செய் வித்தான்.

(இ-ள்.) வளருகின்ற சுகுணன் என்னும் பெருமையுள்ள புத்திரனுக்கு அந்த வீருத்திரவரசன், விளவலதேசத்தையாளுகின்ற வீரகேசரியரசன் பெற்ற முல்லையரும்புபோன்ற பல்வரிசைகளையும் சிவந்தவாயையுமுடைய சத்தியவதி என்னும் பெயரினைப்பெற்ற அழகினையுடைய பெண்ணையாவருங் களிக்கும்படி விவாகஞ்செய்து முடிப்பித்தான். எ - று. (௨௩)

தைத்திடு கணைநெடுங்கட் சத்திய வதிபே ரின்பந்
துய்த்திடு சுகுண னென்னுஞ் சுதற்கணி முடிபின் சூட்டிப்
பொய்த்திறுண மருங்குற் செவ்வாய்ப் புனிதகோ மளையோ டேகி
மெய்த்தவ வனம்புக் கானவ் வீருத் திரனும் வேந்தன்.

(இ-ள்.) அந்த வீருத்திரனாகிய அரசன், பகைவருடலிலே பதியும்படியாகிய கணைபோன்ற நீண்டகண்களையுடைய சத்தியவதியினது மிக்க இன்பத்தை யனுபவிக்கின்ற சுகுணனென்னும் புதல்வனுக்கு அழகினையுடைய மகுடத்தைப்பின்புசூட்டி இல்லையென்று சொல்லப்பட்ட நுட்பமாகிய இடையையும், சிவந்தவாயையுமுடைய கோமளையென்னும் மனைவியுடனே சென்று மெய்ம்மையாகிய தவவனத்தை யடைந்தான். எ - று. (௨௪)

சுகுணனுங் கவனி யெங்குந் தொழுவா சிருக்கு நாளின்
மிகுவர விருடி யன்று விரித்தநூ லனைத்துந் தேர்ந்து
தகுபொரு ளுணர்ந்த சில்லோர் தனிப்பர சிவயோ கத்தின்
பகுதியி னெழுபே ரின்பப் பலன்பெறக் கருத்தி லெண்ணி.

(இ-ள்.) சுகுணனென்னும் அரசன் அவ்விடத்திலிருந்து பூமிமுழுமையும் வணங்க அரசுசெய்யுங்காலத்தில், நன்மைமிகுந்த வருஷிவன் முன்னாளில் விரித்துச்செய்த ஆகமசாஸ்திரம்யாவும் கற்றுணர்ந்து மேன்மையாகிய பொருளையறிந்த சில முனிவர்கள் ஒப்பில்லாத மேலாகிய சிவயோகசாதனையினாலே தங்களுக்குண்டாகிய மோட்சலாபத்தை யடையும்படி மனத்தில் நினைத்து. எ - று. (௨௫)

திருத்துமே யின்பஞான தேசிக ரின்மை தன்னாற்
கருத்துற மயங்கி யாதிக் கயிலைவாழ் பரனை யுன்னி
யருத்தியி னுடனே கால யமினிது போற்றி
விருத்திமிக் கருளு மெண்ணில் விரதத்தின் முயன்று ரன்றே.

(இ-ள்.) சந்தேக விபரீதங்களைப்போக்கிச் செவ்வையாக உபதேசஞ் செய்யவல்ல ஆனந்தத்தையுடைய ஞானசிரியர்இல்லாமையினாலே மனத்தில் மிகவும் மயக்கமடைந்து, முதன்மையாகிய கயிலாயமலையில் வசிக்கின்ற சிவபெருமானைச் சிந்தித்து, ஆசையுடனே பல் சிவாலயங்களை நன்றாகப்பணிந்து, மிகவும் சித்தியைத்தருகின்ற அளவில்லாத தவஞ்செய்தலில் ஆரம்பித்தார்கள். எ - று. (௨௬)

முயன்றிடு மனையர் சிந்தை முதிருமன் பினையு ணர்ந்து
வியன்றிகழ் கயிலை வாழும் விமலவே தாந்த மூர்த்தி
நயன்றரு தனைப்பூ சிக்கு நல்வர முனியை நோக்கி
வியன்றெழு கருணை தன்னு லின்னன வியம்பி னானல்.

(இ-ள்.) அவ்வாறு தவஞ்செய்வதில் முயற்சிசெய்த அம்முனிவருடைய மனத்திலே நாளுக்குநாள் பெருகிய நேசத்தையறிந்து, விசாலமாக விளங்குகின்ற கயிலையில்வசிக்கின்ற மலரகிதரும், வேதத்துச்சியில் விளங்குபவருமாகிய சிவபெருமான்(யாவருக்கும்) இன்பத்தைத்தருகின்ற தம்மைப்பூசனை செய்கின்ற நல்ல வரமுனியைப் பார்த்து, பகுதிப்பட் டெழுகின்ற கிருபையினாலே இவ்வகைச்சொற்களைச் சொல்லுவார். எ - று. (௨௭)

பத்தகேண் ஞாலந் தன்னிற் பலபலர் சிவயோ கத்தின்
முத்தரா மியல்வி ரும்பி முதிர்ந்தெழு மன்பி னெம்மைத்
தத்துறு வுளத்தி னூடு தணிவற நினைத்துப் போற்றி
வித்தமா முனிவர் தேடும் விரதமெண் ணிலபு ரிந்தார்.

(இ-ள்.) அடியவனே! கேட்பாயாக: பூலோகத்திலே அநேகமனிதர்கள் சிவயோகஞ்செய்வதனால் முத்திக்குரியவராகுந் தன்மையைவிரும்பி முதிர்ந்தெழுகின்ற அன்பினாலே விஷயங்களிற்செலுத்தலில்லாத மனத்தில் நீக்கமில்லாமல் நம்மைத் தியானித்துத் தோத்திரஞ்செய்து, ஞானத்தையுடைய பெருமையுள்ள முனிவர்கள் தேடிச்செய்கின்ற தவங்கள் அளவில்லாதன செய்தார். எ - று. (௨௮)

அடியர்வேட் டவைய ளிப்ப தறநெறி யதனு லின்னும்
வடிவுகூர் கிரது மைந்தன் மைந்தற்கோர் மைந்த னுகக்
கடிதுநீ சென்று தோன்றிக் கருதுமூ தறிஞர் யார்க்கு
முடிவுறுச் சிவயோ கத்தின் முறைதனை யருடி யன்றே.

(இ-ள்.) அடியவர்கள் விரும்பிய பொருள்களைக்கொடுப்பது தருமமார்க்கமாதலினாலே இன்னமும் நீ அழகுமிகுந்த உன்னுடைய குமாரனாகிய வீரருத்திரனுடைய புத்திரனாகிய சுகுணன் என்பவனுக்கு ஒருபிள்ளையாகச் சீக்கிரத்திற்போய்ப்பிறந்து, யாவரும் எண்ணுகின்ற மிக்க அறிவினையுடைய பலருக்கும்அழிதலில்லாத சிவயோகத்தினது ஒழுக்கத்தை உபதேசிப்பாயாகவென்று பின்னுஞ் சொல்லுவார். எ-று. (௨௯)

அணிதிக ழுனது தேவி யமிர்தசீ லியும்பார் தன்னிற்
கணிகெழு நிடத நாட்டிற் கமலசா தனனென் றோது
மணிமுடி நிருப னுக்கோர் மகளென வருவள் பின்பு
தணிவறு கற்பி னன்னா டன்னையே வதுவை சூட்டி.

(இ-ள்.) அழகால் விளங்குகின்ற உன்னுடைய மனைவியாகிய அமிர்சிலியும் பூமியிலே மருதநிலஞ்சூழ்ந்த நிடததேசத்தில் கமலசாதனன் என்று சொல்லப்பட்ட மணிகளாலாகிய கிரீடத்தையணிந்த அரசனுக்கு அதன்பின்பு ஒருபெண்ணாகப் பிறப்பாள்; குறைவில்லாத கற்பினையுடைய அப்பெண்ணை விவாகஞ்செய்து. எ-று. (௩௰)

[illegible] டல்சூழ் ஞாலஞ் சிலபக லாண்டு பின்னிவ்
[illegible]லாயிடை யினிது நீயுன் மனையொடும் வருவை போகென்
றுரைசெய விசைந்து மேன்மை யுயர்வர முனியவ் வீசன்
விரைமல ரடிக டாழ்ந்து விடைகொடு நடக்க லுற்றான்.

(இ-ள்.) அலைகள்மிகுந்த சமுத்திரஞ்சூழ்ந்த பூமியைச் சிலநாள் அரசாண்டு மறுபடியும் இந்தக்கயிலாயத்தினிடத்து நீ உன்னுடைய மனையாளுடனே இனிதாகவருவாய் போகக்கடவையென்றுசொல்ல, மேன்மையாலுயர்ந்த வரமுனிவன் அதற்கு உடன்பட்டுச் சிவபெருமானுடைய மணம்பொருந்திய மலர்போன்ற திருவடிகளை நமஸ்கரித்து உத்தரவுபெற்றுப் போகத்தொடங்கினான். எ-று. (௩௧)

மாமறைதிருத்திய வரமுனிச்சருக்கம்
முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் ௨௯-க்கு பாடல் ௯௮௦.

தேவாங்கதல[illegible]டாம்பிகையம்மை சரண்டுணை.

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்:

இருபத்தேழாவது

உயர்தேவசாலியுற்பவச்சருக்கம்.

கலிவிருத்தம்.

பண்ணவ ரினையன பகர்ந்த சூதனை
யெண்ணரு முவகையி னேத்தி மாதவ
வண்ணருள் வரமுனி தரணி மேல்வரு
வண்ணமு முணர்த்தென வழங்கு வானரோ.

(இ-ள்.) முனிவர்கள், இப்படிப்பட்ட சரிதைகளைச்சொல்லியருளிய சூதரை அளவில்லாத மகிழ்ச்சியுடனே தோத்திரஞ்செய்து [illegible] தவத்தையுடையவரோ! குளிர்ந்த கிருபையையுடைய வரமுனி [illegible] பூமியில் வந்து பிறந்த சரிதத்தையுஞ் சொல்லுமென்று வினவச் சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர். எ-று. (க)

சுகம்புனை வரமுனி சிகுண பூபதி
மகிழ்ந்தருள் சத்திய வதிம டந்தைபா
லகங்கெழு மன்பினொ டவத ரித்தன
னொகிழ்ந்தமென் மலர்க்கணை யேச னென்னவே.

(இ-ள்.) இன்பத்தையுடைய வரமுனிவன், சுகுணவரசன் விரும்புகின்ற சத்தியவதி யென்னும் மனைவியிடத்து, இதழ்கள் கட்டுவிட்ட மென்மையாகிய புட்பபாணங்களையுடைய மாரனென்னும்படி உள்ளத்தில் சிறந்த அன்புடனே வந்து பிறந்தான். எ-று. (உ)

நயந்தவா மோதகன் னகர்பு ரந்திடு
வயங்கெழு சுகுணனம் மகன்ற னக்குயர்
செயங்குடி யிருந்தமெய்த் தேவ சாலியென்
றியம்புறு திருப்பெய ரினிது [illegible]

(இ-ள்.) சிறப்பினையுடைய நல்ல ஆமோதகநகரையாளுகின்ற வெற்றி பொருந்திய சுகுணவரசன் அப்புத்திரனுக்கு மேன்மையாகிய வெற்றிகுடிகொண்டிருந்த [illegible]மையாகிய தேவசாலி என்று விளங்குகின்ற அழகிய பெயரை நன்றாகச் சூட்டினான். எ-று. (௩)

துதிமணி முடிபுனை சுகுண பூபனு
மதிகிளர் சத்திய வதிம டந்தையு
மதிகநன் மகிழ்வுற வனைய மாமக
னிதியென வளர்ந்தன னிருபர் போற்றவே.

(இ-ள்.) இரத்தினகிரீடமணிந்த யாவருந்துதிக்கப்பட்ட சுகுணனெ
ன்னும் அரசனும், அறிவினால் விளங்குகிற சத்தியவதியென்னும் மனைவி
யும் மிகுந்த நல்ல சந்தோஷமடையும்படி அந்தப் பெருமையுள்ள புத்திரன்
தெய்வமணிபோல அரசர்கள் கொண்டாடும்படி வளர்ந்தான். எ-று. (சு)

அமலனா ரருளினு லமிர்த சிவிபின்
னிமிரரா மஞ்செறி கிடத நாட்டிடைக்
கமலசா தனனுளங் களிப்ப வாங்கவன்
சுமுகமா மனைவிபாற் றோன்றி னாளரோ.

(இ-ள்.) மலரகிதராகிய சிவபெருமானுடைய கிருபையினாலே அமிர்த
சிவியென்பவள், அதன்பின்னே உயர்ந்த சோலைகள் நெருங்கிய கிடததேசத்
தில் கமலசாதனனென்னும் அரசன் மனமகிழும்படி அவனுடைய பெரு
மைவாய்ந்த சுமுகையென்னும் மனைவியினது திருவயிற்றினின்று உதித்தா
ள். எ-று.

சுமுகிமாமனைவி - நல்ல முகத்தையுடைய மனைவியெனினும் ஆம்.

தனதனோர் கமலசா தனமினன் பான்மிக
மனமகிழ் வுவகைநீள் வாரி மூழ்குற
வனையமா மகடிரு வயிர்த மாமென
வினவுதி ரெழில்சிறந் தினிதி னோங்கினாள்.

(இ-ள்.) குபேரனைச் செல்வத்தாலொத்த கமலசாதனன் என்னும் அர
சன், மனத்தில் நீங்காத மிகுந்த சந்தோஷமாகிய பெரியகடலில் முழுகும்படி
அம்மேன்மைபொருந்திய புத்திரியானவள் அழகிய அமிர்தமென்று கண்
டோர் சொல்லுமாறு வருந்துதலில்லாத அழகினால் சிறப்படைந்து நன்றாகவள
ர்ந்தாள். எ-று. (சு)

காமனுந் தொழுவரு கமலசாதனு
பூமனெஞ் சுவந்துபின் புதல்விக் கின்புறத்
தாமமென் குழற்சுக தருணி யென்றொரு
நாமமன் னாட்டினை னாற்றி னத்தரோ.

(இ-ள்.) மன்மதனும் வணங்குமாறு தோன்றிய கமலசாதன வரசன்
மனமகிழ்ந்து, பின்னை தன்னுடைய மகளுக்கு யாவரும் இன்படையும்படி
பூமாலையணிந்த மெல்லிய கூந்தலையுடைய சுகதருணி என்று ஒரு பெய
ரை நல்லநாளில் இட்டான். எ-று. (எ)

நிடதநன் னாட்டிலன் னிறைமலர்க்குழன்
மடவரல் வளர்ந்தனள் வையகம்புகழ்
திடனுறு நயகுணத் தேவ சாலிபின்
னடமறப் புரிசெய லறைகு வாமரோ.

(இ-ள்.) நல்ல நிடததேசத்தில் இருள்நிறைந்த மலரையணிந்த கூந்தலையுடைய அச்சுகதருணி வளர்ந்தாள். உலகங்கொண்டாடுகின்ற வலிமைபொருந்திய இன்பமாகிய குணத்தையுடைய தேவசாலியானவன் அதன் பின்பு பொல்லாங்கு நீங்கச்செய்த காரியங்களைச் சொல்லுவோம். எ-று. (அ)

எழுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

கயல்வரி நெடுங்கட் கவுரியோர் பாகன் கருணையா லறிஞர்பற் பலர்க்குஞ், சயிலம தனைய தடம்புயத் தேவ சாலிசற் குருபா னாகி, இயமம் நியம மாதனம் பிராணா யாமமெண் பிரத்தியா கார, முயர்வுறுந் தியானந் தாரணை சமாதி யோகம்யா வையுமுணர்த் தினனே.

(இ-ள்.) சேல்மீன்போலும் இரேகைபரவிய நீண்ட கண்களையுடைய உமையை ஒருபாகத்திலுடைய சிவபெருமானது திருவருளால், அறிவுடையோர் பலர்க்கும் மலையையொத்த விசாலமாகிய புயங்களையுடைய தேவசாலி காரணப்பரமகுருவாகி, இயமம் - நவநியமம் - ஆதனம் - பிராணாயாமம் - கருதப்படும் பிரத்தியாகாரம் - உயர்வாகிய தியானம் - தாரணை - சமாதி முதலிய யோகமெல்லாங் கற்பித்தான். எ-று.

எண் என்பதனை யோகம் என்பதனுடனேகூட்டி எட்டுவகைக யோகம் எனினும் பொருந்தும். இயமமாவது:— கொல்லாமை - மெய்ம்மைகூறல் - கள்ளாமை - பிறர்பொருளிச்சியாமை - இந்திரியமடக்கல். நியமமாவது:— தவம் - தூய்மை - தத்துவநூலுணர்தல் - மனமுவந்திருத்தல் - தெய்வம்வழிபடல். ஆதனமாவது:— சுவத்திகம் - கோமுகம் - பதுமம் முதலாகிய யோகஞ் செய்வார் உட்கார்ந்திருக்கும்ஆசனம். பிராணாயாமமாவது:—பிராணவாயுவை இரேசக பூரககும்பகஞ்செய்தல்.பிரத்தியாகாரமாவது:—உபாதியினீங்கி யுண்ணோக்கல். தாரணையாவது:— கண்டம்-இதயம்-நெற்றி-கபாலம்- நாபி இவைகளில் ஒன்றில் சந்ததம் சிந்தைவைத்தல். தியானமாவது:—ஐம்புலனடக்கி யோகஞ்சேர்தல். சமாதியாவது:—இந்திரியமுதலிய தத்துவச்சேட்டைகளுக் கேதுவாய் ஆத்மயுள நின்று அவற்றோடு கூடினும் அவற்றிற் பற்றில்லாம லிருக்கும் ஆன்மாவாகிய தன்னைத்தான் காண்டல். (௯)

அயிர்ப்பற விவைபற் பலர்க்குநற் பயிற்று மறிவுடைத் தேவசாலிக்குச், செயிர்ப்பொரு கதிர்வேற் சுகுமாரனைத் தாதை செழும்பணை நிடதநா டளிக்கும், வியப்புயர் கமலசாதனன் பயந்த மிளிர்சுக தருணியென் பாவை, நயப்பினன் றவ னுரைத்தசொற் கிணங்க நலங்கிள ளர் திருமண முடித்தான்.

(இ-ள்.) பல மனிதர்களுக்கும் சந்தேகம் நீங்க இந்த யோகங்களெல்லாம் பொருந்துமாறு உபதேசித்த அறிவினையுடைய தேவசாலிக்கு, கோபத்துடனே போர்செய்கின்ற ஒளிபொருந்திய வேலையேந்திய சுகுணனென்கிய பிதாவானவன், செழுமையாகிய வயல்கள்சூழ்ந்த நிடததேசத்தையாளுகின்ற அதிசயமும்; உயர்ச்சியுமுடைய கமலசாதனன்பெற்ற விளங்குகின்ற சுகதருணியென்னும் மாதை விருப்பத்துடனே முன்னம் சிவபெருமான் அநுக்கிரகஞ்செய்தபடியே பொருந்தும்படி நன்மைவிளங்குகின்ற விவாகஞ்செய்து முடித்தான். எ - று. (கo)

தனுநுதற் கயற்கட் கருங்குழற் செவ்வாய்த் தனிச்சுக தருணியோ டின்ப, மனையவித் தருளுந் தேவசா லிக்கன் றணிகிளர் மகுடமுஞ் சூட்டிப், பனுவலின் றுவண்ட சிற்றிடை மென்சொற் பன்னியினுடனுவ னெழுந்து, மனுகுலச் சுகுண பூபதி மவுன மாதவ வனத்திடைப் புக்கான்.

(இ-ள்.) மனுஷகுலத்தோரிற்சிறந்தசுகுணபூபதி விற்போன்ற புருவமும், கெண்டைமீன் போலும் கண்களும், கருமையாகிய கூந்தலும், சிவந்த வாயும் உடைத்தாகிய சுகதருணியுடனே போகங்களையனுபவித்திருந்த தேவசாலிக்கு அப்பொழுது அழகுவிளங்குகின்ற முடிசூட்டிப் பஞ்சிநூல்போல் துவண்ட சிறிய இடையையும், மென்மையாகிய சொற்களையுமுடைய சத்தியவதி யென்னும் தன் மனைவியுடனெழுந்து, ஞானத்தையும்; பெரிய தவத்தையுஞ் செய்கின்ற வனத்திலே சென்றான். எ - று. (கக)

அனைத்தருட்டந்தை தனினுமெய்த் தேவ சாலியா மோதநகரி, லணைப்பனிர் கணைத்தார் மருவலர் வணங்க நயந்தா ரிருக்குமந் நாளிற், புனைப்பரு வரத்திண் புயத்தவன் களிப்பப் புணர்சுக தருணியென் றோதுங், கனைப்புயற் கூந்தற் காதலி சசிசே கரனெனு மகனையீன் றெடுத்தாள்.

(இ-ள்.) சத்தியத்தையுடைய தேவசாலி யானவன், தன்னைப்பெற்ற பிதாவாகிய சுகுணபூபதியைவிட, குளிர்ந்த அரும்புகளையுடைய மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையையணிந்தபகைவர்கள் வணங்குமாறு ஆமோதநகரில் விரும்பி அரசுசெய்திருக்குங் காலையில், அழகினைவாய்ந்த மலைபோலும் வலிய புயங்களையுடைய தேவசாலியரசன் சந்தோஷிக்கும்படி அவனைக் கூடிய சுகதருணி யென்று சொல்லப்பட்ட ஒலிக்கின்ற மேகம்போலுங் கூந்தலையுடைய நாயகியானவள் சசிசேகரன் என்று சொல்லப்பட்ட புதல்வனைப்பெறறாள்.

கவினுறு சசிசே கரனெனு மகற்குக் கலிங்கநா டினிதுறக் காக்கு
மரிசூட்டர் வழுதி வலவிகன காங்க னளித்தவுத் தமியெனு மணங்கை
நவமுற துவப்ப மணமுடித் தரச மல்கியில் லவளொடு மடந்து
கிளமுறு தேவ சாலியின் தயிலை சேர்சசி கரன் பதம்பணிந் திருந்தான்

(இ-ள்.) நன்மைபொருந்திய தேவசாலி, அதன்பின்பு அழகுமிக்க சசிசேகரனென்னும் புத்திரனுக்குக் கலிங்கதேசத்தை இனிதாக ஆள்கின்ற விளங்கிய காந்தியும் கூர்மையுமுள்ள வேலேந்திய அழகிய கனகாங்கவரசன் பெற்ற உத்தமி யென்னும் பெண்ணைப் பூமியிலுள்ளவர் யாவரும் மதிக்கும்படி விவாகஞ்செய்வித்துத் தன்னுடைய அரசாட்சியைக் கொடுத்துத் தன் மனைவியுடனே நடந்து கயிலைமலையையடைந்து சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கிக்கொண்டிருந்தான். எ - று. (௧௩)

வாசிபொன் னிரத மதகயம் பதாதி வளம்பல மிகுந்திட [illegible]
காசினி முழுதும் புரந்தருள் சசிசே காகர பதியுளங் களிப்ப
மூசிவண் டிசைக்கு முகிற்குழற் களப முலைத்தட [illegible] யுத்தமி யெனுமான்
றேசிக வாம தேவனென் றொருநற் சிறுவனைப் பயந்தனள் மாதோ.

(இ-ள்.) குதிரைகளும் - பொன்னினாலமைக்கப்பட்ட தேர்களும் - மதத்தையுடைய யானைகளும் - காலாட்களும் ஆகிய நால்வகைச் சேனைகளாலும் பல வளப்பங்களும மிகும்படி கடலாற்சூழப்பட்ட உலகமெல்லாங் காக்கின்ற சசிசேகரவரசன் மனங்களிக்கும்படி, வண்டுகள் மொய்த்து [illegible] செய்கின்ற மேகம்போன்ற கூந்தலையும், [illegible]மாகிய கலவைச்சாந்தை யணிந்த முலைகளை[illegible] யுடைய உத்தமி யென்னும் பெண்ணானவள் அழகினையுடைய வாமதேவனென்று ஒருபிள்ளையைப் பெற்றாள். எ-று. (௧௪)

தேசிகம் - அழகு.

தோன்றிய வாமதேவனென் றுரைக்குஞ் சுதற்குயர் விதர்ப்ப நாடளிக்கும், வான்மிக [illegible]மிர்த சாகர னெனும்வேன் மன்னர்கோன் [illegible] வரச்சிறைப் [illegible] றரு செஞ்சொற் கமலலோசனையைத் திருமண முடித்தர சீந்து, கான்றமழை குழற்கா தலியொடுஞ் சசிசேகரன்றவம் புரிவனத் தடைந்தான்.

(இ-ள்.) சசிசேகரவரசனானவன், தன்பாற்பிறந்த வாமதேவனென்று சொல்லப்பட்ட புத்திரனுக்கு மேன்மையையுடைய விதர்ப்பதேசத்தைக் காக்கின்ற தேவலோகத்திலும் புகழால் விளங்குகின்ற அமிர்தசாகரனென்கின்ற வேலேந்திய அரசர்க்கரசன் தவத்தினாற்பெற்ற தேன்போலும் இனிமையைக் கொடுக்கின்ற செவ்வையாகிய சொல்லையுடைய கமலலோசனியையென்கின்ற கன்னியை மணஞ்செய்வித்துத் தன்னுடைய அரசாட்சியைக்கொடுத்து, மணம்பொருந்திய கூந்தலையுடைய உத்தமி என்னும் [illegible] மனைவியுடனே தவஞ்செய்கின்ற வனத்தின்கட் சென்றான். எ - று. (௧௫)

கமலலோசனை - தாமரைமலர்போலுங் கண்களையுடையவள்.

திருக்கிளர் வாமதேவபூ பதிபின் றேவியி னெடுநலந் திளைத்து,
விருக்கமென் பொழில்சூழ் [illegible] திலங்குமா போத வள்ளைத் [illegible] புரக்கும்

நாளிற், செருக்கமுற் றிடுபற் பலமத பேதப் பெருங்கிளை செறிந்தகா ரணத்தாற், றருக்குறு சைவப் பயிர்தலை மயங்கித் தரணியின் மருள் படர்ந் தனவே.

(இ-ள்.) செல்வத்தினால் விளங்குகின்ற வாமதேவவரசன், பின்னர் மனைவியாகிய கமலலோசனையுடனே ... களை அனுபவித்துப் பலவிருக்ஷங்கள் மிகுந்த மென்மையாகிய சோலைகள் சூழ்ந்து விளங்குகின்ற ஆமோதநகரைக் காத்து ... கின்ற காலத்தில் ... செருக்கத்தையுடைய பலபலவகையாகிய சமயபேதமென்னும் பெருங்கிளைகள் நெருங்கிய ஏதுவினாலே களிப்பையுடைய சைவசமயம் என்னும் பயிர் தலைதடுமாறிப் பூவுலகத்திலே அஞ்ஞான விருளானவை பரவின. எ - று. (௧௬)

நாரத னதனை யுணர்ந்துவே தண்ட நணுகிகம் பரமனை வணங்கித், தாரக வடிவா யுயிர்தொறு நிறைந்த தலைவகேள் பூதலந் தன்னிற், சீரில்புன் மதம்பற் பலசெறிந் ததனாற் செயல்விட விவையெனத் தெரியா, தாருமங் குழன்று ராதலாற் சைவ மவர்பெற வருள்புரியென்றான்.

(இ-ள்.) நாரதமுனிவர், அச்சைவசமயம் தலைதடுமாறுதலை யறிந்து கயிலைமலையை யடைந்து நம்முடைய சிவபெருமானை நமஸ்கரித்து, பிரணவசொரூபியாகி எல்லா ஆன்மாக்களிடத்தும் நிறைந்திருக்கின்ற முதல்வரே! கேட்பீராக: பூமியில் சிறப்பில்லாத அற்பமதங்கள் பலவும் நிறைந்த தன்மையினாலே செய்யப்படவேணவும் நீக்கப்படவேணவும் ஆகிய விதிவிலக்குகள் தெரியாமல் எவர்களும் பூமியில் உழன்று திரிந்தார்கள், ஆகையால் சைவசமயத்தை அம்மனிதர்க ளடையும்படி அநுக்கிரகஞ்செய்வீராக வென்று சொன்னார். எ - று. (௧௭)

மாடக மகதி யாழ்முனி யினைய வழுத்திடின் றேத்தவவ் வரதன்
கோடவிர் தேவ சாலியை விளித்துக் கோதிலோ யுனதுசே யளித்த
சேடனி வாம தேவபூ பதிக்கோர் திருமக னாகநீ சனித்தி [ல்.
யேடவிர் குழனின் றேவியுங் குருநாட் டிறையவன் மகளென வருமா

(இ-ள்.) முறுக்காணிகளை யுடைய மகதியாழ் வாசிக்கும் நாரதமுனிவர் இவ்வகையான வார்த்தைகளைச் சொல்லித் துதிக்க, அச்சிவபெருமான், பொய்ம்மையில்லாத தேவசாலியை யழைத்துக் குற்றமில்லாதவனே! உன்னுடைய புத்திரனாகிய சசிசேகரன் பெற்ற பெருமைபொருந்திய வாமதேவவரசனுக்கு ஒரு அழகிய புத்திரனாக நீ பிறக்கக்கடவை; பூவிதழ்விரிந்த கூந்தலையுடைய உனது மனைவியாகிய சுகதருணியும் குருநாட்டை யாள்கின்ற அரசனுடைய மகளாகப்பிறப்பாள். எ - று. (௧௮)

நீபவ டனையே பின்னரு மணந்து நிலமுழு துந்தனிட பூரந்து
தீயபுன் மதத்தின் றிரிபெலாங் கடிந்து திடம்புனை வீரசைவத்தைத்
தூயவ ரெவருந் தொழுகிலை நிறுத்தித் துணைவியி னொடுமிவ ணெய்தி
மாயையில் பரமபதம்பெறு கென ஆ... ... நிருந்திசைத் தனனால்.

(இ ள்.) தேவசாலியரசனே! நீ அந்தச் சுகதருணியையே மறுபடியும் விவாகஞ் செய்துகொண்டு, பூமியெல்லாவற்றையும் ஏக சக்ராதிபதியாகிக் காத்து, தீயனவாகிய அற்பமதங்களின் மா... யெல்லாம் நீக்கி, வலிமையைப் பெற்ற வீரசைவத்தைப் பரிசுத்தராகிய யாவரும் வணங்கும்படி நிலை நிறுத்தி, மனைவியுடனே இவ்விடம்வந்து கெடுதலில்லாத மேலாகிய மோக்ஷபதவியை அடையக்கடவாயென்று சொன்னவுடனே அத்தேவசாலியானவன் நமஸ்கரித்துச் சம்மதித்தான். எ - று. (௧௧)

உயர்தேவசாலி யுற்பவச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆ சருக்கம் ௨௭-க்கு பாடல் ௬௬.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்... ... நமோ

௨

சிகாமணம்.

சவுடாம்பிகைசரிதம்.

இருபத்தெட்டாவது

அருட்டேவதாச மெய்யன்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தறுகட் பகைவர் தொழுதேவ சாலி சரித மிவை... மென்
றுறுதித் தவசற் சூதனெடுத் துரைப்ப முனிவ ருடன்போற்றித்
தெறுமுப் பிணியு மவித்தகுண ஞ் சிறவோ யத்தச் சி... வந்தன்
மறுமைத் திறனு முணர்த்துகென மகிழ்வுற் றவ்விவ் வகையருள்வான்.

(இ ள்.) உறுதியாகிய தவத்தினையுடைய நல்ல சூதமுனிவர், அஞ்சாநெஞ்சையுடைய பகைவர்கள் வணங்குகின்ற தேவசாலியினுடைய சரித்திரம் இவையென்று பலவாகவெடுத்துச்சொல்ல, உடனே முனிவர்கள் நமஸ்... அழிகின்ற மூவகையாகிய மலரோகமடக்கிய நற்குணத்தையுடைய

...வோ! அந்த வில்லியந்திய தேவசாலியரசனுடைய மறுபிறப்பின் தன்மையையும் சொல்லக்கடவராகுவென்று கேட்க, அச்சுதபுராணிகர் களிப்படைந்து சொல்லலுற்றார். எ - று. (க)

வன்னி நுதற்கட் பரமனடி வணங்கி விடைபெற் றிசைந்து சென்ற
தென்னி னளிசூழ் மலரலங்கற் றேவ சாலி செழுங்கனகக்
கன்னி மதிலா மோதநகர் காக்கும் வாம தேவன் மகிழ
பன்னி கமல லோசனைதன் பாலவுந் தினிதுற் பவித்தனனே.

(இ - ள்.) நெற்றியினிடத்து அக்கினிக்கண்ணை யுடைய சிவபெருமானது திருவடிகளை நமஸ்கரித்து விடைபெற்று மனம் பொருந்திச் சென்ற இனிய இசையைப் பாடுகின்ற வண்டுகள் மொய்த்த மலர்மாலையை யணிந்த தேவசாலியானவன், செழுமையாகிய பொன்னாற் செய்யப்பட்ட அழியாத மதிலையுடைய ஆமோதநகராயாளாநின்ற வாமதேவவரசன் மகிழ்கின்ற மனைவியாகிய கமலலோசனையிடத்து வந்து இனிதாகப் பிறந்தான். எ - று. (உ)

வாம தேவ னிருப்புள மகிழ மகன்வந் துதித்தவுட
னேமாறாத மலர்ப்படலைத் தேவ தாச மையனென
வாமம்பின் கிவற்கியாவரு நவில்க வெனவோ ரசரீரி
தோமறு திசை..... சமுழுதுந் துதிப்ப விசும்பிற் றொனித்ததன்றே.

(இ - ள்.) வாமதேவவரசன் மனமகிழும்படி புத்திரன்வந்து பிறந்தவுடனே, மணம் நீங்காத மலர்மாலையை யுடைய தேவதாசமையன் என்கின்ற பெயரை இவ்வுலகத்திலே இப்பிள்ளைக்கு யாவருஞ் சொல்வீராகவென்று ஒரு அசரீரிவாக்கானது குற்றமில்லாத எட்டுத் திக்கி லுள்ளவர்களுங் கொண்டாடும்படி ஆகாசத்தி லொலித்தது. எ - று. (௩)

தாயும் பிதாவுங் களிப்பவிளம் பக் குழைகுந் தேவ தாசமையன்
பாயுந் தரங்கத் தடங்கடல்சூழ் பாரி லெவரும் பணிந்துதொழத்
தோயுஞ் சுரும்ப ருவட்டமதுத் துளிக்குந் துளபத் தாமனென
வாயுஞ் சுருதி முதற்கலைக ளனைத்துந் தேர்ந்துற் றனனன்றே.

(இ - ள்.) தாயுந் தந்தையுமாகிய கமலலோசனையும்-வாமதேவவரசனும் சந்தோஷமடையும்படி இன்ப மிகுந்த தேவதாசமையன், பரவிய அலைகளையுடைய விசாலமாகிய சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ள யாவரும்பணிந்து தோத்திரஞ்செய்யும்படி, மொய்க்கின்ற வண்டுகள் வெறுக்குமாறு தேனைச் சிந்துகின்ற துளவமாலையையணிந்த திருமாலென்னும்படி (பெரியோரால்) ஆராயப்பட்ட வேதங்கள்முதலாகிய நூல்களெல்லாங் கற்றுத்தெளிந்தான். எ - று.

இறைவ னருளாற் சுகதருணி யெனுஞ்சுந் தரியு மினியதிரு
வுறையுங் குருநா டதுபுரக்கு முயர்வீ ராங்க னுளங்களிப்ப

மறையி னெறிநீங் காதவவள்ளேன் மனைவி சுமுக வல்லிதன்பாற்
குறைவி லன்பி னவதரித்தாள் குலவு மணிப்பொற் கொம்பெனவே.

(இ - ள்.) சிவபெருமானுடைய கிருபையால் சுகதருணியென்று சொல்லப்பட்ட அழகுள்ள பெண்ணும், இனிதாகிய பெருமா தவசிக்குங் குருநாட்டையாளுகின்ற மேலாகிய வீராங்கவரசன் மனஞ் சந்தோஷிக்கும்படி, வேதத்திற் சொல்லிய முறைமைநீங்காத அவ்வரசனுடைய மனைவியாகிய சமுகவல்லியினுடைய வயிற்றிலே குறைவில்லாத ஆசையுடனே பொருந்திய மணிகள்பதித்த பொன்கொம்புபோலப் பிறந்தாள். எ - று. (௫)

துகடீர் குணவீ ராங்கனுஞ் சுமுக வல்லி யெனுமணங்கு
மகமீ தூவகை பூப்பவரு மனைய புதல்வி யகில மெல்லாம்
புகழ்கூர் திலதா வதியெனப்பேர் புனைந்து திருவும் புலோமிசையு
மிகழ்வி லாத விரதியுமின் னிறைஞ்சக் குருநாட் டிடைவளர்ந்தாள்.

(இ - ள்.) குற்றமில்லாத குணங்களையுடைய வீராங்கவரசனும், நல்ல சமுகவல்லியென்கின்ற மனைவியும் மனத்தின் களிப்படையும்படி அவதரித்த அப்பெண்ணானவள், உலகமெல்லாம் புகழ்மிகுந்த திலதாவதியென்னும் நாமம்பெற்றுத் திருமகளும் - இந்திராணியும் - நிந்தனையில்லாத இரதிதேவியும் எதிரில் நின்று வணங்குமாறு குருநாட்டின்கண் வளர்ந்தாள். எ - று. (௬)

அணிகூர் வாமதேவ னெனு மரசர் பிரான்றன் னவனிமுற்றும்
பணிவீ ராங்க னளித்தவந்தப் பாவை தனைத்தந் தானருளாற்
றிணிபூ தரம்போற் றிரண்டபுயத் தேவ தாச மையனுக்கு
நணிமா முனிவோர் புகழவுள நயந்து மணநன் றுள்முடித்தான்.

(இ - ள்.) அழகு மிக்க வாமதேவன் என்னும் அரசர்களுக்கரசன், மறுபடியும் உலகம்யாவும் வணங்குகின்ற வீராங்கனென்பவன்பெற்ற அந்தப் பிரதிமைபோன்ற திலதாவதியென்னும் மாதை, சிவபெருமானுடைய திருவருளினாலே, வலிமையுள்ள மலைபோலக் குவிந்த புயங்களையுடைய தேவதாசமையனுக்கு மகத்தாகிய முனிவர்கள் நெருங்கிக்கொண்டாட மனம்விரும்பி நல்ல முகூர்த்தநாளில் விவாகஞ்செய்து முடித்தான். எ - று. (௭)

திலதா வதிநன் னலந்திளைக்குந் தேவ தாச மையன்னுங்
குலமா மகற்கு மகுடமுடி குலவச் சூட்டிச் சிலபகற்பின்
வலனே குடிகொண் டிருந்தபுய வாம தேவன் மனைவியொடுந்
தலமீ தேழும் புகழுமொரு தவமெய் வனத்தைச் சார்ந்தனனே.

(இ - ள்.) வெற்றி குடிகொண்டிருந்த புயங்களையுடைய வாமதேவராசன், திலதாவதியினது நல்ல இன்பத்தை யனுபவிக்கின்ற தேவதாசமையன் என்கின்ற மேன்மையுள்ள புத்திரனுக்குப் பொருந்துமாறு கிரீடத்தைச் சூட்டிச் சிலகாலத்திற்குப் பின்பு மனைவியுடனே பதினான்குலகமும் புகழுகின்ற உண்மையாகிய ஒரு தவவனத்தைச் சேர்ந்தான். எ - று. (௮)

வேறு.

மணங்கமழ் பொழிலா மோத வளநகர் தனின்மடங்கற்
கணம்பல சுமந்த செம்பொற் காமர்பீ டிகையி னேறி
யுணங்கலி லாச்செய்யு முயர்தேவ தாச மையன்
பணங்கெழு பணிய ரன்சொற் படிமுயன் றிடநி னைத்தான்.

(இ-ள்.) வாசனைவீசுகின்ற சோலைசூழ்ந்த வளம்பம்பொருந்திய ஆமோதநகரிலிடத்துப் பல சிங்கக்கூட்டங்கள் தாங்கிய செம்பொன்னாற்செய்யப்பட்ட அழகிய ஆசனத்திலேறியிருந்து, வாடுதலில்லாத இராச்சியபாரந்தாங்குகின்ற மேன்மையாகிய தேவதாசமையன் படம்பொருந்திய நாகாபரணத்தை யணிந்த சிவபெருமானுடைய கட்டளைப்படி (வீரசைவசித்தாந்தத்தை நிலைநிறுத்துமாறு) முயற்சிசெய்ய நினைத்தான். எ - று. (௯)

திக்குபன் மதத்தின் பேதச் செறியிருள் சீத்துச் செல்வ
மிக்குறு விமல வீர மயேச்சுர மெனவி ளம்பும்
டகுறு சமய வாய்மைப் படிபடித் தலநி றுத்தி
யெச்குலத் துதித்து ளோர்க்கு மிலிங்கதா ரணையுஞ் செய்தான்.

(இ-ள்.) எந்தத்திசைகளிலும் வியாபித்த பலமதங்களின் பேதமாகிய நெருங்கிய இருளைநீக்கிச் செல்வமிகுந்த பரிசுத்தமாகிய வீரமயேச்சுரம் என்று சொல்லப்பட்ட சத்தியமாகிய வீரசைவசித்தாந்தத்திற் கூறியபடி உலகத்திலே நிலைநிறுத்தி, எவ்வகைக்குலத்திற் பிறந்தோர்களுக்கும் இலிங்கதாரணமுஞ் செய்தான். எ - று. (௧௦)

திருந்துநன் னெறியில் [illegible] செலுத்துமச் செங்கோல் வேந்தன்
பொருந்தடம் புயங்கள் விம்ம [illegible] புகலரு முவகை பூப்ப
மருந்திமென் மலர்மா தென்ன வளர்தில தாவ தீப்பேர்ப்
பெருந்தகை மடந்தை தானோர் பிறங்குசீர்ப் புதல்வற் பெற்றாள்.

(இ-ள்.) செவ்விதாகிய நல்ல நீதிநெறிய இவ்விதமாகநடத்துகின்ற அந்தச் செங்கோலையுடைய அருட்டேவதாசமையனது போரில்வல்ல விசாலமாகிய புயங்கள் பூரிக்கவும், சொல்லுதற்கரிதாகிய களிப்புண்டாகவும், மென்மையாகிய தாமரைமலரில் வசிக்கின்ற இலக்குமியென்று கண்டோர்சொல்லும்படி அழகுமிகுந்த திலதாவதி என்னும் பெயர்வாய்ந்த பெருந்தன்மையுடையவள் விளங்குகின்ற சிறப்பினையுடைய ஒரு மகனைவருத்தமுற்றுப்பெற்றாள்.

மேவிய வனைய மைந்தன் விருபாட்ச னெனப்பேர் பெற்று
மூவிரு திருமு கத்து முரண்பெறு சமர வைவேற்
றாவியங் தோகை வாகைத் தாரகத முருக னேபோற்
றுவில்பல் கலையுந் தேர்ந்து நறுக்குற வளர்ந்தா னன்றே.

(இ-ள்.) பொருந்திய அப்புத்திரன் விருபாட்சன் என்னும்பெயரைப் பெற்று, ஆறுதிருமுகத்தானும் போரிற் பகைவரை அழிக்கின்ற வலிமையுள்ள கூரிய வேலேந்திய தோகையை யுடைய அழகிய மயிலாகிய வெற்றியினை யுடைய குதிரையை நடத்துகின்ற முருகக்கடவுளேபோலக் கேடில்லாத பல சாஸ்திரங்களையுங் கற்றுத் தெளிந்து களிப்புமிக வளர்ந்தான். எ - று. (கஉ)

வேந்தர்கோன் பின்ன ரந்த விருபாட்சற் கருண நாடாள்
காந்திசே கரன ளித்த காஞ்சன மாலை நாமப்
பூந்தடங் கூந்தற் செவ்வாய்ப் புளகிதக் களபக் கொங்கை
யேந்திழை மடந்தை தன்னை யியல்புற வதுவை சூட்டி.

(இ-ள்.) அரசர்க்கரசனாகிய அருட்டேவதாசமையன், பின்னே அந்த விருபாட்சனுக்கு அருணநாட்டை யாளுகின்ற காந்திசேகரவரசன் பெற்ற காஞ்சனமாலை என்னும் பெயரையுடைய மலரையணிந்த நீண்ட கூந்தலையும், சிவந்த வாயையும், பூரிக்கின்ற கலவைச்சார்த்தையணிந்த முலைகளையும், ஏந்திய ஆபரணங்களையு முடைய புத்திரியை அழகுடனே விவாகஞ்செய்வித்து.

ஆதிமா மறையோர் வாழ்த்த வமரர்பூ மாரி தூவ
நீதிகூ ரரசர் யாரு நின்றுகை குவித்துப் போற்றத்
தீதிலா முரச மார்ப்பத் திகழ்சுப தினம தொன்றிற்
சோதிசூழ் நவம ணிப்பொற் சுடிகையுஞ் சூட்டி னானால்.

(இ-ள்.) முதன்மையாகிய சிறந்த பிராமணர்கள் ஆசிர்வதிக்கவும், தேவர்கள் புட்பமாரிபொழியவும், நீதி மிகுந்த அரசர்கள்யாவரும் எதிரில் நின்று கைகளைக்குவித்துக்கொண்டு தோத்திரஞ்செய்யவும், குற்றமில்லாத வாத்தியங்கள் முழங்கவும் விளங்குகின்ற நல்ல முகூர்த்தங்களில் ஒளிமிகுந்த ஒன்பது வகை மணிகளாற் செய்யப்பட்ட பொன் மகுடத்தைச் சூட்டினான். எ - று.

வேறு.

மகுடமுடி விருபாட்சன் மகிதலங்காத் திருப்பமன்னர் மன்ன னானை
சிகரகிரி புயத்தேவ தாசமைய னமரர்வலஞ் செய்யுஞ் செம்பொற்
பகருகிரி சயிலமிசைப் பவானியொடு பரிந்து வைகுஞ்
சுகிர்தபிரணவமல்லிகார்ச்சுனநாதனைத்தினமுந் தொழுதுபோந்தான்.

(இ-ள்.) மகுடத்தையணிந்த விருபாட்சன் பூமியைக் காத்துக்கொண்டிருக்க, அரசர்க்கரசனாகிய மலையையொத்த புசங்களையுடைய தேவதாசமையன், தேவர்கள் வலஞ்செய்யாநின்ற செம்பொன்னுலாகிய யாவருஞ்சொல்லப்பட்ட திரிசயிலம் என்னும் பதியில், சொல்லப்பட்ட பவுராம்பிகையுடனே விரும்பியெழுந்தருளியிருக்கின்ற நன்மைபொருந்திய பிரணவசொரூபியாகிய மல்லிகார்ச்சுனநாதனை நாள்தோறும் வணங்கிக்கொண்டு வந்தான். எ - று.

அக்காளி லீராறு முழம்படர்வுற் றறுபதுவார்ந் தழகான் மிக்க,
மின்னுருங் கலிங்கமொன்று புரிந்துநய திரிசயில மீது வாழும்,பன்னக
பரணமல்லி கார்ச்சுனற்குச் சிவசிசியிற் பண்பி னேங்கும், பொன்னன
விரததுசா ரோகணத்திற் கணிந்திறைஞ்சிப் புகழ்ந்து நின்றான்.

(இ-ள்.) அக்காலையிலே பன்னிரண்டுமுழம் அகலமும், அறுபதுமுழம் நீட்சியுமுள்ள அழகினால்விளங்குகின்ற பிரகாசம்பொருந்தியவஸ்திரம் ஒன்று செய்து, இனிதாகிய திரிசயிலத்தி லெழுந்தருளியிருக்கின்ற நாகாபரணத்தை யணிந்த மல்லிகார்ச்சுனநாதருக்குச் சிவராத்திரியிலே தகுதியாலுயர்ந்த, பொன்னுலாகிய இரததுசாரோகணத்தினுக்கு அலங்கரித்து வணங்கித் தோத்திரஞ்செய்து நின்றான். எ - று. (௧௬)

[illegible]மணிக் கலையணிந்து தொழுந்திருவா மோதநகர்த் தோன்றன் முன்னே [illegible]யவனிபுகழ் திரிசயிலத் தமலசிவ பரனுயிர்க ளனைத்து
மீன்ற, குவவி[illegible]மென் முலைப்பவுராம் பிகையினொடு கயிலையெனக் கு[illegible]
[illegible]மேனிக்[illegible] கவனவிடை மிசைத்தோன்றிக் கருதினவென் றருது
மவை கழறு வென்றான்.

(இ-ள்.) துவ[illegible] அழகினையுடை[illegible] வஸ்திரத்தை யணிந்து தொழாநின்ற அழகிய ஆமோதநகரை யாளுகின்ற தேவதாசமையனாகிய அரசனுக்கெதிரே உல[illegible]த்துள்ளோர் புகழ்கின்ற திரிசயிலத் தெழுந்தரு[illegible]ளியிருக்கின்ற மலரகிதராகிய சிவபெருமான்,எவ்வுயிர்களையும் பெற்றருளிய திரட்சியும் இளமையும், மென்மையுமுள்ள முலைகளையுடைய பவுராம்பிகையுடனே கயிலை[illegible]யென்று[illegible]டப்பட்ட விளங்குகின்ற உடலையுடைய வேகமுள்ள ரிஷபவாகனத்தில் எழுந்தருளிவந்து நீ எண்ணியன யாவை? சொல்லுக; அவற்றைத் தருகின்றோமென்று சொன்னார். எ - று. (௧௭)

அப்பபரப் [illegible]ரிவையங் கு[illegible]முடி யாசர்பிரா னமல நீமுன்,
புரிசமர நிருதனை[illegible]வென் றருள[illegible]ட தேவியென[illegible]ப் புகழ்கொண் டோங்கு, முரியநின்னு யகியினொடு மின்றெ[illegible]ரியேன் செயுநிலையத் தாடு
தோன்றி, வரிசையினென் புரபினர்யா வ[illegible]ரிகப் புரத்தியென
வழுத்தி நின்றான்.

(இ-ள்.) [illegible]கள் அரிவதற் கருமையாகிய [illegible]பெருமான் வெற்றை அப்பொழுது சொல்ல, முடியை யணிந்த அரசர்க்கரசனாகிய [illegible] தா[illegible]மையன், [illegible]ிய சிவபெருமானே! தேவரீர், முற்காலத்திலே போர்செய்கின்ற இராக்கதரைச்செயித்த சவுடநாயகியென்று புகழ்கொண்டுயர்ந்த உரிமையாகிய உமது நாயகியாருடனே இப்பொழுது ஏழையாகிய நான் செய்கின்ற கோயிலினிடத் தெழுந்தருளியிருந்து முறைமையாக என்னுடைய வமிசத்தார் யாவரையும் நிகழ்ந்து காத்தருளவேண்டுமென்று துதித்து நின்றான்.

அன்பினொடு வணங்கியிது வேண்ட லுநன் றெனவருள்செய் தமலன் சென்றான், பின்புநா பதிதிருவா மோதநக ரெய்திமணி பிறங்கு சோதிப், பொன்பரவு சினகரமொன் றியற்றிமுனி வரரெவரும் புகழ்ந்து போற்ற, வின்மலர்பல் லியங்களெழு கடலுமெனத் திசைகடொறு மிசைப்ப மாதோ.

(இ-ள்.) மக்கட்குத் தலைவனாகிய தேவதாசமையன், அன்புடனே நமஸ்கரித்து இதனை வேண்டினவுடனே, சிவபெருமான் நல்லதென்று அநுக்கிரகஞ்செய்து போயினர். அதன்பின்பு அழகினையுடைய ஆமோதநகரைச்சேர்ந்து, பிரகாசிக்கின்ற மணிகளாலும், பொன்னாலும் விசாலமாக ஒரு கோயிலைச்செய்து முடித்து, முனிவர்கள் யாவரும் புகழ்ந்து துதிக்க இன்பம் நிறைந்த பல வாத்தியங்கள் எழுசமுத்திரம் என்னும்படித் திக்குகள்தோறும் சந்திக்க.

வி[illegible]ரளக் கனகமணிக் கரகமொன்று நிறுவிமறை விதிவ ழாமற்
பரிவினொடு பூசனைபற் பலவுமினி தியற்றிமிகப் பணிந்து தாழ்ந்து
திரிபுதவிர் தருமல்கு சேவைகொடு பரவலுமத் தேவ தேவன்
கரியமுகிற் குழறசவுட் தேவியொடு மவணெழுந்து கருணை செய்தான்.

(இ-ள்.) மிகுந்த கிரணத்தையுடைய பொன்னாலாகிய அழகிய கும்பம் ஒன்று நிறுத்தி, வேதத்திற்சொல்லிய விதிகள் தவறாமல் விருப்புடனே பூசைகள் பலவும் இனிதாகச்செய்து மிகவும் பணிந்து த[illegible]டில்லாத பெருகிய வழிபடுதலுடனே தோத்திரமுஞ்செய்யாநிற்க, அத் தேவர்களுக்குத் தேவனாகிய சிவபெருமான் கருமையாகிய கூந்தலையுடைய சவுடாயியுடனே அவ்வாலயத்தில் எழுந்தருளியிருந்து கிருபைசெய்தான். எ-று. (௨௦)

அழகுமிகக் கனகமணிச் சினகரத்தி னிடைப்பொலிந்த வந்த முக்கட், குழகனுக்கன் றிராமலிங்க நாதனெனத் திருநாமங் குலவச் சூட்டி, மழவிளமென் முலைச்[illegible] தேவியொடு [illegible]ம்பணிந்து வழுத்திநின்று, தொழு[illegible] [illegible]பெற்றான் றூயபுகழ் வளம்படைத்த தோன்றன் மன்னோ.

(இ-ள்.) பரிசுத்தமாகிய கீர்த்தியு[illegible] வளப்பமும்பெற்ற தேவதாசமையன், அழகு மிகுந்த பொன்னாலும் மணிகளாலும் அமைக்கப்பட்ட கோயிலினிடத்து விளங்கிய அத் திரிநேத்திரங்களை[illegible]பெருமானுக்கு அப்பொழுது இராமலிங்கநாதன் என்று திருநாமம் பொருந்தும்படிச சூட்டி, இளமையும் மென்மையுமுள்ள [illegible]ணங்களையுடைய [illegible]வுடாயியுடனே அக்கடவுளை வணங்கித்தோத்திரஞ்செய்துநின்று, பின்னும் நமஸ்கரித்துச்செழுந்த அவருடைய கிருபையைப்பெற்றான். எ-று. (௨௧)

மதனில தாவுதியா[illegible]வியொடும் பின்னெழுந்து மன்னர் மன்னன், சிதமுனிவர் விபுதர்சித்தர் செறிந்த[illegible] கயிலாயச் சிலம்பி

னெய்திச், சுதரிசன நாதனுமவ் வேதனுந்தே டரியபதச் சோதி செம்பொற், பதமலர்கள் பணிந்துகரங் குவித்துமறை மொழிகளினாற் பரவி நின்றான்.

(இ-ள்.) நற்குணங்களையுடைய இல்தாவதி என்கின்ற மனைவியுடனே அரசர்க்கரசனாகிய தேவதாசமையன், பிறகு பிரயாணப்பட்டு, ஞானத்தையுடைய முனிவர்களுந் தேவர்களுஞ் சித்திபெற்றயோகிகளும் நெருங்கிய செழித்த ஸ்ரீகயிலாயமலையையடைந்து, சக்கராயுதத்தையுடைய திருமாலும், அப்பிரமதேவனும் தேடு...ருமையாகிய திருவடிகளை யுடைய சிவபெருமானது செம்பொன்போலும் பாத தாமரைகளை நமஸ்கரித்துக் கைகளைக் குவித்துக்கொண்டு வேதவாக்கியங்களினால் தோத்திரஞ்செய்து நின்றான். எ-று. (௨௨)

போற்றலுந்தண் ணருள்சுரந்து புணரிநெடுங் கடல்புடைசூழ் புவிமுற் றாண்ட, சாற்றரிய குணத்தேவ தாசமையன் றனக்குமன் னோன் றலைவி யாய், வேற்றடங்கண் விழித்திலதா வதிக்குமுயர் பாமபத விருப்பிற் றந்தான், கூற்றனைமுன் குமைத்தசெழுங் கோகனக சரணமுக்கட் குழகன் மாதோ.

(இ-ள்.) இவ்வாறு துதிசெய்து நின்றவுடனே, மார்க்கண்டேயருக்காக முன்னாளில் இயமனையுதைத்த செழுமையாகிய தாமரைமலர்போலுந் திருவடி...களையுடைய பரமசிவன் தண்ணிய திருவருள்சுரந்து, அலைகளையுடைய பெரிய சமுத்திரஞ்சூழ்ந்த உலகமுழுதும் ஆண்ட சொல்லுதற்கரிய நற்குணங்களையுடைய தேவதாசமையனுக்கும், அவனுடைய மனைவியாகிய கூர்மைபொருந்திய வேல்போலுங் கண்களையுடைய இல்தாவதிக்கும் உயர்வாகிய மோட்சபதவியை விருப்புடனே யருளினார். எ-று. (௨௩)

அருட்டேவதாச மய்யன் சருக்கம் முற்றிற்று.

ஆ சருக்கம் ௨அ-க்கு பாடல் ௩௦௨௨.

தேவாங்கதுலதேவி சமுடாய்பிகையமான்மியம் முற்றிற்று.

உ

சிவமயம்.

சவுடாம்பிகைசகாயம்.

இருபத்தொன்பதாவது

வளர்தேவாங்கன் மரபுச்சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

அலகில்பல கலைபுணர்ந்த வதிகதவச் சூதனிவை யருள லோடு
மலவிருள்சீத் துயர்ந்தநைமி சாரணிய முனிவர்கள் மகிழ்ந்து போற்றி
யுலகுபுகழ் தேவாங்க னுற்பவகா ரணமுழுது முரைத்தா யன்னோன்
குலவிருபர் சரிதமுமீ சவுதியென னலுமவன்பின் கூறு வானால்.

(இ-ள்.) அளவில்லாத பல சாஸ்திரங்களையும் அறிந்த மிக்கதவத்தினை யுடைய சூதமுனிவர் இத்தகைய சரிதைகளைச் சொன்னவுடனே, மும்மலத்தை நீக்கியுயர்ந்த நைமிசாரணியமுனிவர்கள் மனமகிழ்ந்து நமஸ்கரித்து, பூமி முழுவதும் புகழ்கின்ற தேவாங்கமுனிவனுடைய பிறப்பின் காரணமுழுமை யுஞ் சொல்லியருளினீர்; அத் தேவாங்கமுனிவனுடைய குலத்திற் பிறந்த அரசர்களுடைய சரித்திரத்தையும் தேவரீர் திருவாய்மலர்ந்து சொல்லியருள வேண்டுமென்றவுடனே அச் சூதபுராணிகர் பின் சொல்லத்தொடங்கினர்.

விடைபுலமைந்து மவித்துயர்ந்த மெய்த்தவத்தீர் கேண்மினதிர் வேலை போலும், படைகள்பல புடைசெறியப் பகர்புகழா மோதவ் வளம் பதியி னூடு, கொடைமுகி லும் [illegible]வரு கோதில்விரு பாட்சனெ னுங் கொற்ற வேந்த, னடையலர்வந் தடிபணிய வலகுதல மினிது புரந் தருளு நாளில்.

(இ-ள்.) [illegible]வேட்கையையும் அடக்கி அதனால் உயர்ந்த உண்மை யாகிய தவத்தினையுடைய முனிவர்களே! கேளுங்கள்: சத்திக்கின்ற கடல்போ லும் பல சேனைகள் பக்கத்தில் நெருங்கச் சொல்லப்பட்ட கீர்த்தியையுடைய வளப்பமுள்ள ஆமோதநகரினிடத்து, மழையைப் பொழிகின்ற மேகமும் கொடையைப்பயிலவருகின்ற குற்றமில்லாத விருபாட்சன் என்கின்ற வெற்றி யுள்ள அரசன், பகைவர்கள் வந்து பாதங்களை வணங்கும்படி உலகத்தை இனிதாகக் காக்குநாளில். எ - று.

கற்பினுயர் தருமவன்கா தலியெனுங்காஞ் சனமாலை கருப்ப மெ
ய்திப், பொற்புமிகு முருத்திரனென் றொருபுதல்வற் பெற்றனளப் பு

தல்வன் கல்வி, பற்பலவு மினிதுணர்ந்து பாரரசர் புகழவிளம் பருவ மாதர், மற்படைமன் மதனெனமா மயல்பெருகி மடலெழுத வளர்ந் தான் மன்னோ.

(இ-ள்.) பதிவிரதாதருமத்தி லுயர்ந்தஅவ்விருபாட்சனுடைய மனைவி யென்னுங்காஞ்சனமாலை, கருப்பமடைந்து, அழகு மிகுந்த உருத்திரனென்று ஒரு புத்திரனைப்பெற்றாள்; அப் புத்திரன், கல்வி பலவற்றையும் நன்றாக வுணர்ந்து பூமியிலுள்ள அரசர்கள் புகழும்படி, இளம்பருவத்தை யுடைய பெண்கள், வலிமையுள்ள பஞ்சபாணங்களையுடைய மன்மதனென்று மிக்க காமவிச்சைபெருகி பனைமடலில் தாங்கள் கொண்டவிச்சையை யெழுதுமாறு வளர்ந்தான். எ - று. (௩)

உருத்திரனென் றுரைக்குமந்த மகற்குயர்கோ சலநாட்டை யுவந்து காவலன், மருத்திகழ்பூ மஞ்சரிசூழ் மார்பகவுக் கிரசாப மன்ன னீன்ற, செருத்தரங்கட் களபமுலைத் துற்களா வதியெனுநற் செல்வி தன்னைப், பொருத்தநய மிகுந்தசுப தினத்தரசர் துதிப்பமணம் பொருத்திப் பின்னர்.

(இ-ள்.) உருத்திரனென்று சொல்லப்பட்ட அப்புத்திரனுக்கு, உயர்வாகிய கோசல [illegible] விரும்பிக்காக்கின்ற மணம் வீசுகின்ற பூமாலைசூழ்ந்த மார்பினையுடைய உக்கிரசாபவர்சன் பெற்ற போரைச்செய்கின்ற விசாலமாகிய கண்களையும், கலவைச்சாந்தையணிந்த முலைகளையும் உடைய துற்களாவதி யென்னும் நல்ல செல்வத்தையுடைய பெண்ணை பொருத்தமாகிய நன்மைமிகுந்த சுபநாளிலே அரசர்கள் யாவருந் துதிக்கும்படி விவாகஞ்செய்து பின்னே.

மங்கலதுந் துபிமதங்க மணிமுரச மியம்பமுனி வரர்கொண் டாடத், துங்கமிகு முடிசூட்டி விருபாட்சனெனுஞ் சுடர்வை வேலான், [illegible] மெய்ப் புகழ்பெறுகாஞ் சனமாலை [illegible] விரைந்து சென்று, சங்கநிறை தடம்பலசூழ் தவவனமொன் றினிலினி தார்ந்தா னன்றே.

(இ-ள்.) விருபாட்சன் [illegible] காத்தியும் [illegible] உள்ள வேலை [illegible] அரசன், சோபனத்தைத் தருகின்ற துந்துபியும், மத்தளமும், அழகிய [illegible] முழங்கவும், முனிவர்கள் புகழவும், உயர்ச்சி மிக்க கிரீடத்தை அவ்வுருத்திரனுக்குச் சூட்டி, எவ்விடத்திலும் மெய்ம்மையாகிய புகழ் பெற்ற காஞ்சனமாலையென்னும் மனைவியுடனே சீக்கிரமாகவெழுந்து சென்று, சங்குகள் நிறைந்த பலவாவிகள் சூழ்ந்த ஒருதவவனத்திலே இனிதாகவடைந்தான். எ - று. (௪)

கலிவிருத்தம்.

இயலு ருத்திர னென்றுல கெங்கணும்
பெயர்ப டைத்தவப் பேரெழில் வேந்துபின்
னுயர்வில் வெற்றி யுயர்ந்தசெங் கோன்முறைச்
செயந டத்திச் சிறந்துளா காலையில்.

(இ-ள்.) நற்குணங்களமைந்த உருத்திரனென்று பூமிமுழுவதும்பெயர் பெற்ற அம்மிக்க அழகினையுடைய வரசன், அதன்பின்பு மேன்மையுடனே வெற்றியினு லுயர்ந்த செவ்விய நீதியைய முறைமையாகச் செயத்துடனே நடத்திச் சிறப்புடனே வசிக்கின்றகாலத்தில். எ-று. (௬)

நற்க ளாவதி [illegible]னைத் துலங்கிய
பொற்க லாநிதி [illegible] காதலி
மற்க ராவ[illegible] [illegible]ரிக ராக்கேவார்
நற்கு ணாகர னையந்தனை நல்கினள்.

(இ-ள்.) நற் [illegible]ரந்தி என்று விளங்[illegible] அழகுபொருந்திய சந்திரன் போலும் முகத்தினை[illegible]மனைவி [illegible]ந்திரன் என்னும் யானையைப்பற்றிய முதலையைக் கொ[illegible]ற குடக்கூத்தி[illegible]ச்செய்கின்ற திரு[illegible]யொப்பா[illegible] நல்ல குணங்களுக்கு [illegible]சத்[illegible]னமாகிய ஒரு மைந்தனைப்பெற்றாள். எ-று. (௭)

வாட்டி[illegible]ம்புயன் வன்மரு வார்செருக்
கோட்டு கின்ற வுருத்திர மன்னவன்
றோட்ட டப்புள கெய்தி[illegible]த் தோன்றுபய
சேட்ட ளஞ்சொற் சிறுவன் வளர்ந்தனன்.

(இ-ள்.) வாட்போரில் வல்லமையுடைய வலி[illegible] பகைவருடைய களிப்பைப்போக்குகின்ற உருத்திரமன்னனுடைய வசாலமாகிய புயங்கள் பூரிக்கப் பிறந்த அந்த அழகும் இ[illegible]மையும், புகழையுமுடைய பிள்ளையானவ[illegible] வளர்ந்[illegible]ன். எ-று. (௮)

ஆளி நேர்வரு பா[illegible] சு[illegible]ரபினவ்
வாளி னேங்கு மகற்குண ம[illegible]ழ்வுற்
றாள சேனனென் னுங்கவ[illegible] காம[illegible]
ளுளில் யூ[illegible] காப்புறச் சூட்டியே.

(இ-ள்.) சிங்கத்தையொத்த விருபாட்சனுடைய [illegible]ருகிய உருத்திரவரசன், பின்னர் பிரகாசத்தினு லுயர்ந்த மைந்தனுக்கு மனமகிழ்ச்சியுடனே நல்லநாளில் யாவரும் விரும்பும்படி காளசேனனென்று பெருமைபொருந்திய நாமகரணத்தைச் சூட்டி. எ-று. (௯)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சுடிகையுந் தரித்துப் பின்பு துற்களா வதியென் றோது
மடிதவிர் கற்பின் மிக்க மனைவியி னொடுமெ ழுந்து
வெடிமலர்த் தொடை சூழ் கூந்தன் மெல்லிய லுமையோர் பாக
னடியிணை விரும்பி யாங்கோ ரருந்தவ வனத்திற் புக்கான்.

(இ-ள்.) மகுடமுஞ்சூட்டி, அதன்பின்பு கேடில்லாத கற்பினால் மிகுந்த துற்களாவதி என்று சொல்லப்பட்ட மனைவியுடனே யெழுந்து நறுமணம் பொருந்திய மலர்மாலைசூழ்ந்த கூந்தலையும், மென்மையாகிய சாயலையுமுடைய பார்ப்பதிதேவியானை ஒரு பாகத்திலுடைய சிவபெருமானது இரண்டு பாதங்களை விரும்பி அவ்விடத்திலுள்ள ஒருஅரிய தவவனத்தை யடைந்தான்.

வானுலாம் பொழிலா மோத வளநகர் புரங்குங் காள
சேனனுங் கற்பி னெண்ணி றேயமன் னவர்க ளீன்ற
மீனநேர் நெடுங்கட் செவ்வாய் மின்னனா ரயுதர் தம்மைக்
கானறு வலங்கல் சூட்டிக் கடிமணம் புரிந்தான் மன்றே.

(இ-ள்.) ஆகாசம்வரையினும் சென்றுலாவுகின்ற சோலைகளையுடைய வளப்பமுள்ள ஆமோதநகரை யாளுகின்ற காளசேனவரசன், அதன்பின்பு அளவில்லாத தேசங்களை யாளுகின்ற அரசர்கள் பெற்ற செம்மீனையொத்த நீண்ட கண்களையும் சிவந்த வாயினையுமுடைய பதினாயிரம் பெண்களை மணம் நீங்காத மலர்மாலைசூட்டி விவாகஞ்செய்தான். எ-று. (௧௧)

ஒருபெருஞ் செங்கோல் போற்று முயர்திறற் காள சேன
னருமணம் புரியு மீரா யாயிர மனைவி கட்கும்
வருசெழு மழலைத் தீஞ்சொன் மைந்தர்க ளின்மை தன்னாற்
பருவா லுழந்து நெஞ்சுட் பரமனைத் துதித்தி ருந்தான்.

(இ-ள்.) ஒப்பில்லாத செவ்விய நீதியை வளர்க்கின்ற உயர்ந்த வல்லமையையுடைய காளசேனன், அருமையாகிய விவாகஞ்செய்த பதினாயிரம் மனைவியர்களுக்கும் செழுமைவளருகின்ற மதுரம்பொருந்தியமதலைச்சொல்லையுடைய புத்திரர்கள் இல்லாமையினால் துன்பத்தினால்வருந்தி, மனத்தில் சிவபெருமானைத் தோத்திரஞ்செய்துகொண் டிருந்தான். எ-று. (௧௨)

உறுகணுற் றுழன்று வேந்த னுறைதரு மனைய வேலை
மறுவறச் சுருதி முற்று மதித்தினி துணர்ந்து வாய்மை
விறல்படைத் துயர்ந்த மோன மிகுதவக் கவுத மன்சீர்
பெறவிருப் புடனா மோதப் பெருநகர் வந்து சார்ந்தான்.

(இ-ள்.) காளசேனவரசன் துன்பமடைந்து வருந்தியிருக்கின்ற காலத்திலே, குற்றமில்லாமல் வேதங்கள்யாவும் வரையறைசெய்து, நன்றாக வறிந்து

மெய்ம்மையும் வலிமையும்பெற்றுயர்ந்த மௌனமிருந்த கவுதமமுனிவர் விருப்பத்துடனே அழகுமிபெறப் பெரிய ஆமோதநகரினில் வந்துசேர்ந்தான். எ-று.

கவுதம முனிவ னுங்குக் கருணையி னடைந்த லோடும்
புவிபுகழ் காள சேன பூபதி விரைந்து னேர்போய்
மவுலிகொண் முடியாற் றாழ்ந்து வரன்முறை தொழுது போற்றிச்
சவிமணி யிழைத்த செம்பொற் றவிசினி லிருத்திப் பின்னர்.

(இ-ள்.) அந்த ஆமோதநகரில் கவுதமமுனிவர் கிருபையோடு வந்தவுடனே உலகத்தார்கள் கொண்டாடப்பட்ட காளசேனவரசன் விரைவாக எதிர்சென்றுபோய் கிரீடத்தையணிந்த தலையினாலே தாழ்ந்து, வணங்கும் முறைப்படி வணங்கி, ஒளியையுடைய இரத்தினங்களா லமைக்கப்பட்ட செம்பொன்னாசனத்தில் எழுந்தருள்ச்செய்து பின்பு. எ-று. (கச)

அருக்கிய முதல னைத்து மருமறை முறையி னல்கி
கருத்தினி [illegible] கனியுரை முகமன் [illegible]
மருக்கமழ் குமுத மன்ன வாய்மலர் திறந்து [illegible]
பெருக்கிய விருப்பி னோடு மிவ்வண பேச லுற்றான்.

(இ-ள்.) பூசைமுதலிய உபசாரங்களெல்லாம் வேதவிதிப்படிசெய்து, கவுதமமுனிவருடைய மனத்தில் சந்தோஷமுண்டாகும்படிக் கனியையொத்த வுபசாரமொழிகள் சொல்லி, வாசனைவீசுகின்ற செவ்வல்லியையொத்த வாய்மலரைத்திறந்து, அன்பு பெருக்கிய விருப்பத்துடனே இவ்வாசகங்களைப் பேசத்தொடங்கினான். எ-று. (கரு)

ஐயவிங் கடியே னீரா யாயிர மடவார் தம்மை
மையற வேட்டு மின்று வரையொரு மகவுங் காணேன்
செய்யமெய்த் தவங்கூர் நின்றன் றிருவருள் சிறிதுண் டாயின்
வெய்யபுன் கவலை தீர்வ னெனமிக வேண்டி நின்றான்.

(இ-ள்.) ஐயனே! இப்பூமியிலே தேவரீருடைய ஊழியனாகிய நானு பதினாயிரம்பெண்களைக் குற்றமில்லாமல் மணஞ்செய்தும் இதுவரையிலும் ஒரு புத்திரனையும் காணவில்லை ஆதலால், செய்யப்பட்ட உண்மையாகிய தவமிகுந்த தேவரீருடைய திருவருள்சிறிதுண்டானால், கொடியஅற்பமாகிய அத்துன்பத்திலிருந்து நீங்குவேனென்று மிகவும் பிரார்த்தித்து நின்றான். எ-று. (கசு)

உருத்திர னளித்தோ னிவ்வா றுரைத்தபின் றிலம்புஞ்ச லோடுங்
கருத்தினி லினிச்செல் லாத கவுதம னவனை நோக்கிப்
பருத்தொளிர் புயத்தோய் முக்கட் பரமனா ரருளா லிங்கோர்
வருத்தமில் வேள்வி யாற்றின் மக்கட்பே றுண்டா மன்னா.

(இ-ள்.) உருத்திரவரசன்பெற்ற காளசேனவரசன் இவ்வாறு விண்ணப்பித்து நின்று வணங்கினவுடனே, இனிப்பிறவித்துன்பத்தினையடையாத கவுதமமுனிவர் அக் காளசேனனைப் பார்த்து, விசாலித்து விளங்குகின்ற தோள்களையுடையவனே இவ்விடத்தில் துன்பமில்லாத ஒரு வேள்வி செய்தால் மூன்று கண்களையுடைய சிவபெருமானது கிருபையினாலே புத்திரப்பேறுண்டாகும் என்று பின்னுஞ்சொல்லுவார். எ - று. (கஎ)

வழுத்துபுத் திரகா மேட்டி மகத்தினுக் குரிய வாய [ச்
விழுத்தகு பொருள்கள் முற்றும் விரைந்திவட் டருதி யென்ன
செழித்துயர் புகழ்கூர் காள சேன னங் கவைவ ழாமற்
பழிப்பற வொருக ணத்துட் பண்பினே டட்டி னுனல்.

(இ-ள்.) வேதங்களிற் சொல்லப்பட்ட புத்திரகாமேஷ்டியாகஞ் செய்வதற்குத் தகுவனவாகிய சிறந்தபொருள்களெல்லாம் விரைவாக இவ்விடத்துக் கொடுக்கக்கடவையென்று சொல்லச் செழித்த மேலாகிய புகழ்மிகுந்த காளசேனன், அவ்வேள்வி செய்வதற்கு வேண்டும் உபகரணங்கள் யாவையுந் தவறாமல் நிந்தையில்லாதபடி ஒரு கணப்பொழுதினுள்ளே தகுதியுடனே சேகரஞ் செய்தான். எ - று.

புத்திரகாமேஷ்டி என்பது - புத்திரப்பேற்றைக்கருதிச் செய்யப்படும் யாகம். (கஅ)

அருள்வளர் கவுத மன்பின் னரசர்கோ னுவகை கூரப்
பொருள்செறி மறைமுறை முங்கிப் புவியெலா மினிது போற்று
மிருளில்புத் திரகா மேட்டி யெனும்பெரு மகத்தைச் சந்தப்
பருதிதோய் பொழிலா மோத பதிதனிற் புரிந்தான் மன்னே.

(இ-ள்.) கருணை மேலுமேலும் வளர்கின்ற கவுதமமுனிவர், பின் அரசர்க்கரசனாகிய காளசேனன் களிப்புமிகும்படி, சொற்பொருள் மிகுந்த வேதங்களிற்சொல்லிய முறைப்படி, உலகத்திலுள்ளவர்கள் யாவரும் நன்று துதிக்கின்ற மயக்கமில்லாத புத்திரகாமேஷ்டியென்கின்ற பெரியயாகத்தைச் சூரியன்படிகின்ற சோலைசூழ்ந்த அவ்வாமோதநகரிற் செய்தார். எ - று.

புரிதரு மகத்தி னின்று பூவலன் கவலை நீங்க
வெரிகனற் கடவுள் கையி னினிதமு துறகி றைந்த
சொரிசெழுங் கிரணப் பைம்பொற் றூயகற் கலமொன் றேந்தி
வரிசைகொள் கவுத மன்முன் வந்தனன் மகிழ்வின் மாதோ.

(இ-ள்.) செய்யப்பட்ட புத்திரகாமேஷ்டியாகத்திலிருந்து காளசேனவரசனுடைய துன்பம் நீங்கும்படி, பிரபையுடைய அக்கினிதேவன் இனிமையாகிய அமிர்தம் மிகநிறைந்த கொழுமையாகிய கிரணங்களைச்சிந்துகின்ற பசிய பொன்னாலாகிய தூய்மையுள்ள நல்லபாத்திரம் ஒன்றைக் கையினிடத்

தேக்கிக்கொண்டு, ஒழுங்குகொண்ட கவுதமமுனிவர்முன்னே களிப்புடனே வந்தான். எ - று. (௨௩)

வேறு.

பாவகன்கைத் தலத்தேந்தும் பைம்பொன்மணிச் செழுங்கலனை ப் பரிவின் வாங்கித், தேவர்புகழ் கவுதமா முனிவரனும் காளசேன னென்னுங், காவலனா பதிமணந்த தேவியரோ ராயுதவாயுங் கடிது கூவி, மேவமிர்த மதைப்பகிர்ந்தங் கவர்கட்கு முவகைமன மிகத்தந் தானால்.

(இ ள்.) தேவர்கள் புகழ்கின்ற கவுதமமுனிவர், அக்கினிதேவன் கையினிடத்தேந்திய பசிய பொன்னாலாகிய அழகிய செழித்தபாத்திரத்தை விருப்புடனே வாங்கி, கிருபையுடனே காளசேனனென்று சொல்லப்பட்ட காத்தற்றொழிலையுடைய அரசன் விவாகஞ்செய்த மனைவியர் பதினாயிரவரையும் விரைவாக வழைத்து, பொருந்திய அவ்வமிர்தத்தைப்பங்கிட்டு அவர்கட்கும் விருப்பம் மிகப்பெறும்படி மிகவுங் கொடுத்தார். எ - று. (௨௪)

காமவண் லவித்தவுருட் கவுதமா முனிவனன்று கனிவி னல்குந், தேமமிர்த நுகர்ந்தவுடன் சேல்விழியங் கையரொவருஞ் செழுஞ்சூன் முற்றித், தோமகலு மாமோத புரத்தரசன் கனகப்புயத் துணைகள் விம்மத், தாமதிக தவப்பயனு மொருபதினாயிரம்புதல்வர் தமையீன்றார்.

(இ ள்.) காமாக்கினியையவித்த திருமேனியையுடைய கவுதமமுனிவர், அப்பொழுது விருப்புடன்கொடுத்த இனிமையாகிய அமிர்தத்தையுண்டவுடனே கெண்டைமீன்போலுங் கண்களையுடைய பெண்கள் யாவருஞ் செழுமையாகிய கருப்பமுதிர்ந்து, குற்றமில்லாத ஆமோதநகரத்தை யாளுகின்ற காளசேனவரசனுடைய பொன்போன்ற விரண்டுபுயங்களும் பூரிக்கும்படி மிகுந்த தவப்பேற்றினாலே பதினாயிரம்புத்திரர்களைப் பெற்றார்கள். எ - று. (௨௫)

கலிவிருத்தம்.

மைந்தர்கள்வந் துதித்தவுடன் மன்னர்பிரான் மருள்செறிந்த
சிந்தைகெடுங் கவலையெல்லாந் தீர்ந்துசெழும் பரிமளங்கூர்
சந்தனமென் களபமணி தடம்புயங்கள் புளகமெய்த
முந்தவெழு முவகையெனு முதிர்கடலி னிடைப்படிந்தான்.

(இ ள்.) பதினாயிரம் புத்திரர்கள் வந்து பிறந்தவுடனே, அரசர்க்கரசனாகிய காளசேனன் மயக்கம்நிறைந்த மனதிலுண்டாகிய துன்பமெல்லாம் நீங்கி, செழித்த மணமிகுந்த சந்தனமும், மென்மையாகிய கலவைச்சாந்தும் பூசிய விசாலமாகிய தோள்கள் புளகாங்கிதமடைய, முற்படவுண்டாகிய களிப்பென்னும் பெரிய சமுத்திரத்தினுள்ளே முழுகினான். எ - று. (௨௬)

ஐந்தருவி னீழல்வைகு மமரரேனே வருந்திரண்டு
கொந்தவிழும் பரிமளமென் கொழுமலர்மா ரிகள்பொழிந்தார்

தொந்தவினைக் கடல்கடந்து சுருதிமுடிப் பொருளுணர்ந்த
நந்தலரு முனிவரொலா நயந்துதுதி பகர்ந்தனரால்.

(இ-ள்.) பஞ்சதருக்களின் நிழலிலே வசிக்கின்ற தேவர்கள்யாவரும் கூடி, கொத்துக்களாகிய விரிகின்ற வாசனையுள்ள மென்மையாகிய செழித்த மலர்மாரியைப் பொழிந்தார்கள்; பழமையாகிய தீவினைக்கடலைத்தாண்டி வேதாந்தங்களின் பொருள்களையுணர்ந்த கெடுதலில்லாத முனிவர்கள் யாவரும் விரும்பிக் கொண்டாடினார்கள். எ-று. (உச)

மெல்லியமா மலர்வேரி விரிபொழிலா மோதநகர்
வல்லியிடை மடந்தையரு மதனனிக ராடவரு
நல்லியல்பி னெடுமுவகை நண்ணினரெண் டிசைதொறும்
பல்லியங்க ளெழுதரங்கப் பரவையினு மதிர்ந்தனவே.

(இ-ள்.) மென்மையாகிய அழகினையுடைய மலரின்மணமானது பரவிய சோலைகள்சூழ்ந்த ஆமோதநகரில் வசிக்கின்ற கொடிபோலும் இடையினையுடைய பெண்களும், மன்மதனையொத்த புருடர்களும் நன்மையுடனே களிப்படைந்தார்கள்; எட்டுத்திக்குகளிலும் பலவாத்தியங்கள் எழுகின்ற அலைகளையுடைய கடலைப்பார்க்கினும் மிகுதியாக முழங்கின. எ-று. (உரு)

செப்புபெருந் திறற்காள சேனனுளங் களிக்கவரு
மப்புதல்வ ரயுதருங்கோ ளரியினிளங் குருளைகள்போற்
...புகரி தழனையர் சுடர்முலைத்தெள் ளமுதருந்தி
...யப்புவன மும்புகழ வினிதுவளர்ந் தெழில்சிறந்தார்.

(இ-ள்.) சொல்லப்பட்ட பெரிய வலிமையையுடைய காளசேனவரசன் களிக்கும்படி அவதரித்த அப்புத்திரர்கள் பதினாயிரவரும் வலிமையுள்ள சிங்கக்குட்டிகள்போல, பவளத்தையொத்த இதழையுடைய தாய்மார்களுடைய காந்தியுள்ள முலைப்பாலைப்பருகி எவ்வுலகத்தாரும் புகழும்படி நன்றாக அழகோடுவளர்ந்து சிறப்படைந்தார்கள். எ-று. (உசு)

ஆர்வமிகு மரசனரு ளைந்தரயுதர்கட்கு மறையொழுங்கிற்
பேர்வரிசை முதற்பலவும் பெட்பினொடு புரிந்துபின்ன
ரோர்வளரு மனுமுதலா மெழுநூறு முனிவர்களாற்
சீர்வளங்கூ ருபநயனஞ் செய்வித்தான் றிறல்வேந்தன்.

(இ-ள்.) வலிமையையுடைய காளசேனவரசன், விருப்பமிக்க அந்தப் புத்திரர்கள் பதினாயிரவருக்கும் வேதங்களிற்கூறிய முறைப்படி நாமகரணஞ் செய்தல் முதலாகிய சடங்குகள் பலவற்றையும் அழகுடனே செய்து, பின்னே அழகு மிகுந்த மந்திரங்களுக்கு முதலாகிய காயத்திரியால் எழுநூறு முனிவர்களாலே சிறப்போடு வளப்பமிகுந்த உபநயனஞ்செய்வித்தான். எ-று. ()

மனுமுதலாம் சிரேஷ்டருக்கு உபநயனஞ் செய்வித்தான் என மொழிமாற்றி, மந்திரங்களுக்கு முதன்மையாகிய காயத்திரியை உபதேசிப்பித்தான் எனக் கோடலுமாம்; அன்றி, மனு என்னும் இருடிமுதலாக எனினுமாம். (உஎ)

ஓரெழுநூ றிருடிகளா லுபநயன முலகுவப்பப்
பூ ரரச னியற்றுவித்த பான்மையினா லன்றுமுதற்
கூரிசைபெற் றுயர்ந்திலங்குங் கோத்திரமு மவ்வாறே
பேரினிது படைத்தனவாற் பெருந்தவத்து முனிவீரே.

(இ-ள்.) பெரிய தவத்தினையுடைய முனிவர்களே! எழுநூறுமுனிவர்களாலே உலகத்தார்கள் களிக்கும்படிப் பூமியையாளுகின்ற காளசேனவரசன் உபநயனச்சடங்கு செய்வித்த தன்மையினாலே அக்காலமுதலாக மிக்க கீர்த்தியைப்பெற்றுயர்ந்து விளங்குகின்ற கோத்திரமும் அவ்வகையே நன்று பெயர் பெற்றன. எ-று. (உஅ)

திக்கனைத்தும் புகழ்காள சேனகர பதியதன்பின்
மக்கள்பதி னாயிரவர் தமக்குமண முடித்தவர்ள்
தக்கநய குணசுமுக தனெருப சேனனெனு
மிக்கசுதன் றனக்குமணி மிளிர்மகுட முடிசூட்டி.

(இ-ள்.) எந்தத்திசையிலுள்ளோரும் புகழ்கின்ற காளசேனவரசன், அதன்பின்னே பதினாயிரம் புதல்வர்களுக்கும் விவாகஞ்செய்வித்து, நாளுக்குநாள் வளர்கின்ற தகுதியாகிய இனியகுணமும் - நல்லமுகமும் - சேனைகளும் உடைய நபசேனன் என்கின்ற மேலாகிய புத்திரனுக்கு மணிகளால் விளங்குகின்ற கிரீடஞ்சூட்டி. எ-று. (உகூ)

துடிமருங்குற் களபமுலைத் துற்களா வதியினொடுங்
கடிதெழுந்த மோகங் கடந்துபர கதிவிரும்பிக்
கொடியவைந்து புலன்களைந்த குணமுனிவ ரினிதுறைவுரு
நெடிசெறிந்து பிறங்குதவ நெடுவனமொன் றடைந்தனனால்.

(இ-ள்.) உடுக்கைபோலும் இடையினையும் கலவைச்சாந்தையணிந்த முலையையுமுடைய துற்களாவதியென்னும் மனைவியுடனே விரைந்தெழுந்து ஆமோகங்களைக்கடந்து மோட்சபதவியைவிரும்பி, ... புலன்கள் ஐந்தையும் வென்ற குணத்தையுடைய முனிவர்கள் நன்று வசிக்கின்ற சிவவன்டுகள் நெருங்கி விளங்குகின்ற பெரிய தவவனத்தைச் சேர்ந்தான். எ-று. (௩௦)

திராவித ரனைருப சேனனெனு நரபதியின்
வீரமிகு மடங்கலின மிசைமணியா தனமேற்கொண்
டாரணவந் தணர்புகழ வரசர்பல ரிறைகுவித்து
நேரடிவந் தனைபுரிய நெறியமைச்சர் முறைநிற்ப.

(இ-ள்.) வீரமும் ஈகையும் உடைய ரூபசேனன் என்னும் அரசன், அரசன்முன்னே வலிமைமிகுந்த சிங்கங்கள் நெருங்கிய இரத்தினசனத்தின் மேலெழுந்தருளியிருந்து வேதங்களையுணர்ந்த பிராமணர்கள் கொண்டாட, அரசர்கள் பலவாகத் திறைகளைக்கொண்டுவந்துகுவித்து எதிரேநின்று பாதங்களை வணங்கவும், அரசநீதியை முறையேயுணர்ந்த மந்திரிகள் இராசநீதிகளை ஒழுங்காக நடத்தவும். எ-று. (௧௧)

மகந்தவமெங் கணுமோங்க மடந்தையர்கற் பெனும்பயிர்கள்
சகந்தனிலோ ரிடருமின்றித் தழைத்தினிது வளர்ந்திலங்கச்
சுகம்பொறையுண் ணியமியமக் தூயதிரு வருணீதி
மிகுந்திலகத் திடக்கொடிய வெங்கலிவல் லிருள்கரப்ப.

(இ-ள்.) வேள்விகளும் தவங்களும் எவ்விடங்களிலும் மிகவும், பெண்கள் கற்பென்னும் பயிர்கள் உலகத்திலே ஒரு தீமையில்லாமல் விருத்தியாகி நன்றாகவளர்ந்து விளங்கவும், இன்பமும்-பொறுமையும்-புண்ணியமும்-முறைமையும் பரிசுத்தமாகிய திருவருளும் - நீதியும் மிகுந்து எங்கும் நிறையவும், கொடிய வெப்பமுள்ள வஞ்சகமாகிய வலிய இருள் ஒளிக்கவும். எ-று. ()

நிலவுமிழு மதிக்கவிகை நிழற்றமணிக் கவரிதுண்ணமட
பலவுமணிகள் கிரணமிளும் பரிதியெனக் கதிர்பரப்ப
உலகுமகிழ் சுருதிவழி யொருமுறைக் கோலோச்சிப்
புலவர்புக ழாமோத புரத்திலா யிருந்தனனே.

(இ-ள்.) பிரகாசிக்கின்ற உமிழ்கின்ற சந்திரவட்டக்குடை நிழலைச்செய்யவும், அழகிய சாமரைகள் நெருங்கவும், பலவாகிய ஆபரணங்கள் கிரணமுடைய பால சூரியனைப்போல வொளியைச்செய்யவும், உலகத்தார் மகிழ்கின்ற வேதங்களிற்கூறிய முறைப்படி ஒப்பில்லாத செழித்த செங்கோலைச் செலுத்தி, புலவர்கள் புகழ்கின்ற ஆமோதபுரத்தில் அரசுவீற்றிருந்தான். எ-று. ()

சகனைதனி லிவ்வாறு தனரூப சேனனென்பான்
புகழ்சு புரிகாலிற் முதனூர் பெனும்பெயரான் புடை
பகர்படைவே டென்னும் பதியாளும் பண்டிருபர்
மிகுதிறைதந் திடாதுமுறை விடுத்தகன்றே யிருந்தனரால்.

(இ-ள்.) ஆமோதநகரில் இவ்வகையாகச் சேனைகளையுடைய ரூபசேனன் என்னும் அரசன் புகழுடனே அரசுசெய்கின்றகாலத்தில், விளங்குகின்ற முதனூர்-பெனும்பெயருள்ள சொல்லப்பட்ட படைவேடு என்னும் இந்தப் பட்டணத்தை ஆளுகின்ற சேனைகளையுடைய அரசர்கள் மிக்க அரசிறைகொடுக்காமல் முறைதவறி கர்வங்கொண்டிருந்தார்கள். எ-று.

வரிசைதவிர்ந் துளத்தினமை மதியாதுற் றனரிவரென்
றரிபெருமவ் வரசர்தமை யமர்வலியா லறமுறுக்கித்
தெரிமுதனூர் பெனுகொண்டை திகழ்படைவே டௌப்பகருஞ்
சரிதவிர்முத் தலங்களுக்குந் தான்சிங்கா தனபதியாய்

(இ-ள்.) முறைமைதவறி மனத்தில் நம்மைமக்களுக்குச்செய்யாம லிருக்கின்றார் இவர்களென்று, சிங்கத்தையொத்த அவ்வரசர்களை யுத்தவலிமையாலே கெடும்படி யழித்து, ஆராயப்பட்ட முதனூர் பெனுகொண்டை- விளங்குகின்ற பூடைவேடென்று சொல்கின்ற ஒப்பில்லாத நகரங்களுக்குந் தானே அரசாகிச் செங்கோல்செலுத்தி. எ - று. (௩௫)

சிறந்தமணி முடிரூப சேனனெனுந் திறல்வேந்தன்
பிறங்குமக பதியெனவே பெருகுதிரு வளம்படைத்து
மறந்தவிர்நன் னீதிசந்தி வந்தனமே முதலாய
வறங்களெலா [illegible]வாதிவ் வவனிபுரக் தினிதிருந்தான்.

(இ-ள்.) அழகிய [illegible]த்தினகிரீடத்தை யணிந்த ரூபசேனன் என்னும் வலிமையையுடைய அரசன் விளங்குகின்ற தேவேந்திரனைப்போல மிகுந்த செல்வவளப்பத்தை யடைந்து, பாவம்நீங்கிய நல்ல நீதியும், சந்தியாவந்தன முதலாகிய தருமங்களெல்லாந் தவறாமல் இவ்வுலகத்தைக்காத்து இனிதாக வாழ்ந்துகொண்டிருந்தான். எ - று. (௩௬)

இலங்குமதி முடித்தபிரா னிதயங்கே ருகத்துதித்த
பலம்பெறுதே வாங்கமகி பதிபத்தா யிரங்குலமும்
வலன்புகழ்சீர் தனிலுயர்ந்து வற்றாத கடலெனவே
நிலங்களெலாந் துதித்தேத்த செடிதுதழைத் திருந்தவன்றே.

(இ-ள்.) விளங்குகின்ற சந்திரனையணிந்த சிவபெருமானுடைய இதயதாமரையில் திருவவதாரஞ்செய்த பலத்தைப்பெற்ற தேவாங்கமுனிவனாகிய அரசனுடைய பத்தாயிரங்குலமும் வெற்றியினாலுங் கீர்த்தியினாலும், செல்வத்தினாலும் மேம்பட்டு, வற்றாதசமுத்திரம்போல உலகங்களெல்லாந் துதிக்க அதிகமாகச் செழித்திருந்தன. எ - று. (௩௭)

வளர்தேவாங்க மரபுச்சருக்கம்

முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ௨௧க்கு பாடல் ௪௦௫.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை திருவடிதான் துணை.

வாழி.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பார்வாழி சுரர்வாழி பகர்சுருதி வாழிகலை பலவும் வாழி
கார்வாழி கடல்வாழி காவலர்செங் கோல்வாழி கற்றோர் வாழி
யேர்வாழி மதிமுடித்த விராமலிங்க நாதனெனு மெங்கோன் வாழி
சீர்வாழி வளர்சவுட தேவியுமை வாழியருள் செல்வம் வாழி.

பரந்தபொழிற் சகனாநல்லோர் பகருமூர் பெறுகொண்டை படைவேடென்
தரங்குலவு மிக்கான்கு தலமுதலா கியசகல தலமும் வாழி [னணைத்
புரந்தரனன் னிலையம் வாழிசைவம் வாழிசிவ நேயம் வாழி
வரம்பெறுதே வாங்கமகி பதிபத்தா யிரங்குலமும் வாழி வாழி.

தழுவுமுமை பாகனரு டனில்வருமித் தேவாங்க சரிதந் தன்னை
யெழுதுமதி யினர்வாசிப் பவர்கேட்போர் துதிப்பவர்மற் றெவரும் வாழி
செழுமையுள காசைவங்கார் திருமலைப்போ டயசுமுகன் வாழி [வாழி.
தொழுமுநல் வயர்ந்தவன்னோன் குலமுழுதும் [illegible] பல்லாக் குலமும்

தேவாங்க புராணம் - முற்றுப்பெற்றது.

தேவாங்ககுலதேவி சவுடாம்பிகையம்மை சரண் டுணை.

உ

சிவமயம்.

இந்நூல் செய்த காலத்து இய[illegible]ய சாற்றுக்கவி.

ஸ்ரீமத்

ம-ா-ா-ஸ்ரீ,

சாமுண்டியாசாரியரவர்க ளியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மலர்மகளு மதாமுதிர் கலைமகளுங் குடியிருந்து மகிழ்வு கூரு
நலவள்[illegible]லவுநிறை தருமினிய தென்காசை நகரந் தன்னி[illegible]
புலவர்[illegible] [illegible] பூசுரர்கள் பொருந்தி வா[illegible]
நிலவரசர் திறைகுவித்து பணிந்துதொழ வமைச்[illegible] மன்[illegible]

மருவுபுகழ் வளர்பூமக[illegible] முல்லைச் செழுந்தாமன் வத[illegible]மன்
திருவலவு முபகாரன் சீலவர் குலதீரன் செபகு[illegible]
தருமாய குணதன [illegible]ருவலர்கள் பணிபாதன் றமிழ்வி நோதன்
அருள்பெறுரா சயவாக னருவியச் சிரதேக னறிவி வேகன். (௧)

சகநிதிசுர் தரபாண்டிய துரைகுலசே கரபாண்டிய சுகுண [illegible]
மகபதிநேர் சொக்கலிங்க மாலிவர்க்கு முன்னுதித்த வரிசைத் தோன்றல்
சகலசவு பாக்கியவந்தார் திருமலைப்பெரி டயராச தயாள சீலன்
புகழ்குலவு திம்மயழுந் திரியோடே[illegible] திருத்தநிலம் புரக்கு நாளில். (௨)

சிங்கார மதிவதன[illegible] [illegible]பா வலர்க்குதவு[illegible] சிலாக்கிய லோ[illegible]
மங்கா[illegible] குணசீலன் மா[illegible] [illegible]மிக வளரும் யோக[illegible]
அங்காசை வளம்பதித்தே வா[illegible] செட்டிமைய[illegible] [illegible]ரோங்குஞ்
சங்காறு மகிபனரு டவப்புதல்வன் [illegible]யசுந் தரவி வேகன். (௩)

வரியதனம் படைத்த[illegible] மனாம[illegible]மான்வளர்களப மார்பன் மே[illegible]
கிரியதனங் கிடுதிப நிகரான [illegible] செழுஞ்சற் கீர்த்தி [illegible]மல்
அரியதனந் தனிலுயர் மால் காசைநகர்த் தேவாங்கர்க் கன்பு மிக்க
பெரியதனங் கொண்[illegible]ணவே யருள்சுதன்மல் [illegible]குணம் பிரபு[illegible]கன். (௪)

திருவன்னம் வளர்மார்பன் செயசுமுகன் புவிமுழுதுஞ் செழிக்குங் கீர்[illegible]
[illegible]ரான கிரிபுலவோர் மனைப்ப[illegible] கருணாமிர்த வசன[illegible]ன்
கருவண்ண முகிற்குழலா ர்[illegible]யர்தே வா[illegible]கருலன் [illegible]ங்
குருவண்ண மகராசன் றரு[illegible]ல் [illegible] [illegible])

[illegible]கமணி மருவவலை வென்கண்டன் னவர்வணங்கி [illegible]கந்தன் பாகக்
கா[illegible]கமணி [illegible] தருவமால் கனம்பெறுதே வாங்கசூலன் காசை வாழு
மூக்கமணி யம்பெ[illegible] மல்லயபூ பதிபுதல்வன் முகிநேர் [illegible]
ஆக்கமணி [illegible] னீலகண்ட சுமுகனெனு மதிவி வேகன். (எ)

வண்டார[illegible] யருள்பெருகு வாணர்மிசை மகிழ்வு கூர்ந்து
கண்டார்க் குவலியொடு தனதனவா கனங்கனல்குங் கனவான் வாசத்
தண்டாரம் புய[illegible]லன் றேவாங்க வமிசபூரோ கிதசன் மார்க்கன்
பண்டாரஞ் செட்டிகுரு வணசுகிர்த சகலசவு பாக்கிய சீலன். (அ)

[illegible] மதன்வாணர் செழுந்தமிழுக் கன்பாய் நல்குஞ்
செங்கய[illegible]னன் டிசைமுழுதுந் துலங்கியசற் கீர்த்தியந்தன் சீர்பெற் றோங்கும்
பங்கயமான் வளர்புயன்றே வாங்ககுலன் காசைவளம் பதியின் மேவும்
லிங்கயவே ளருள்சுபுத்தி நேயதரு வணனெனுநல் னீதி யோகன். (கூ)

திருவளரு மிவர்முதலாய்த் தென்காசை யம்பதியிற் சீர்பெற் றோங்கி
மருவுபுகழ் வளம்படைத்து வளர்பத்தர் யிரங்குலத்து வந்தோர் யாரும்
தருமநெறி [illegible] தேவலன்றன் சரிதவட [illegible] நா றன்னைப்
பெருகுதயி [illegible]ம்பாடித் தருகவெனப் பிரியமொடு [illegible] மன்னோ (க0)

[illegible] கோயமுத்தூர் வளர்கிதிதே வாங்கர்குல குருவாய் வந்த
[illegible] சுமுகசத [illegible]வானந்த தேசிகனு நாளு மின்ப
[illegible] செல்வன்மனோன் மணிபொற் பாத
[illegible]லசமலர் துதி[illegible] சிகனுமுன் னூற் றன்மை காட்ட. (கக)

அதிகசெம்ம புகழ்படைத்த வணிய பெருங் கதையதனை யமிர்த மேபோன்
[illegible] செழுந்தமிழாற் பொருள்செறிந்த புராணசிரோ மணியா மென்னத்
துதிபெருகப் பாடியதைக் காசைவளம் பதியில[illegible] கூர்ந்து வாழு
[illegible]மறைவாழ்த்தியசவுடநாய[illegible] வின்முன்மண்டபத்தின்மன்னோ.

[illegible] சகர் புரக்கும்வ[illegible]கார் திருமலைப்போ[illegible] காரியவல் லோர்கள்
பேசுதமிழ்ப்பாவலர்[illegible]த வாங்கர்பத்தர் யிரங்குலத்தோர் பெரியோர் யாரு
நேசமிகச் [illegible] ரலங்கேற்றி[illegible] தர கிறைந்த கல்வி
வாசமுயர் [illegible] ளம்பதிவள[illegible]க்கவிஞன் மதிவல் லோனே. (கஉ)

விளம்பரம்.

இப்புஸ்தகம் வேண்டுவோர் கோயமுத்தூர் - பெரியகடை[illegible]
[illegible] புஸ்[illegible]பாரஞ் செய்யும் இ. ஏ. சின்னையகவுண்டரிடம்
[illegible]ளலாம்.